

# காதிபத்திய மலாதிக்கத்தின் கீழ் இலங்கை

பி. இரயாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின்கீழ் இலங்கை

பி. இரயாகரன்

சமர் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை: © பி. இரயாகரன்

விமர்சனங்களுக்கு:

P. RAYAKARAN
32, RUE TROUILLET DEREL
92600 ASNIERES SUR - SEINE
FRANCE.
Website: www.tamilcircle.net
email: rayakaran@aol.com.

விலை: ரூ. 70.00

❑ ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை, | பி. இரயாகரன். ❑ *முதல் பதிப்பு:* டிசம்பர் 2004. ❑ *வெளியீடு:* சமர், 32, RUE TROUILLET DEREL, 92600 ASNIERES SUR - SEINE, FRANCE. Website: www.tamilcircle.net. ❑ *அச்சாக்கம்:* எழில் பிரிண்ட்ஸ், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை - 24. ❑ *நூலாக்க விபரம்:* 1/8 டெம்மி N.S. மேப்லித்தோ, 208 பக்கங்கள், 10 புள்ளி எழுத்து.

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|

1. முன்னுரை 1

பகுதி - 1

2. சமாதானமா? யுத்தமா? இது யாருக்காக? மக்களுக்கா? மூலதனத்துக்கா? நாடகம் சோகமான முடிவை நோக்கி நகர்கின்றது 5

பகுதி - 2

சமாதானம் என்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் 42

அமைதி சமாதானம் என்ற பின்னனி இசையில் தேசிய நலன்கள் சூறையாடப்படுகின்றன. 43

சிங்கள இனவாத அரசு திட்டமிட்ட வகையில் தேசியத்தின் அனைத்து பண்பியல் கூறுகளையும் அழிக்கின்றது 44

மேட்டுக்குடி வெள்ளைப் பன்றிகளின் சொகுசு சுற்றுலாக்கள் 46

மேட்டுக்குடிகளின் வீடுகளுக்கே சென்று சேவை செய்யக் கோரும் தேசியம் 47

மக்களை குடிகாரர்களாக்கும் அரசு, மக்களுக்கு கல்வியை மறுப்பது தேசியமயமாகின்றது 51

அனைவருக்குமான அடிப்படை கல்வியை மறுப்பது தேசிய கொள்கையாகின்றது. 53

சமூகச் சீரழிவினால் உருவாகும் பண்பாட்டின் விளைவு ஆழமானது 59

வாழ வழியற்ற சமூக அவலம் 64

நுகர்வு வெறியும் இன்ப நுகர்ச்சியும் நேர்விகிதத்தில் ஏகாதிபத்திய கொழுப்பை உருவாக்குகின்றது 67

இலங்கையில் ஊடுருவிப் பாயும் பெரும் நிதிகள் 69

இலங்கையில் அத்துமீறுகின்றன அமெரிக்கத் தலையீடுகள் 81

இந்தியா மற்றும் மற்றைய ஏகாதிபத்தியங்களின் தலையீடுகள் 90

மூலதனத்துக்கு கிடைக்கும் வரம்பற்ற சலுகைகள் 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம் — பக்கம்


வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் யுத்த அவலங்களும் சமூகச் சிதைவும் 101

தமிழர் தாயகத்தின் பொருளாதாரம் என்ன? 111

இனவாத சிங்கள இராணுவம் 113

குளிர்காயும் சிங்கள இனவாதம் 114

தமிழ் துரோகக் குழுக்கள் அரங்கேற்றும் அரசியல் வக்கிரம் 115

புலிகளும் தமிழ் மக்களும் 117

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையும் அதற்கு அடிப்படையான புலிகளின் வரி விதிப்பும்! 125

புரிந்துணர்வில் நேர்மை என்பது வக்கிரமாகவே அரங்கேறுகின்றது 131

வக்கற்ற அரசியல் புதைகுழியில் புலிகள் 139

வக்கரித்த அரசியலும், ஏகப்பிரதிநிதிக் கோட்பாடும் 144

ஏகாதிபத்தியங்களும் புலிகளும் 147

பகுதி - 3

**இனம் கடந்த அரசியல் விபச்சாரம், மக்களின் முதுகில் சவாரி செய்கின்றது** 160

சந்திரிகா - ரணில் அரசுக்கிடையிலான அதிகாரப் போட்டி 165

கூட்டணிக்குள் புலிகள் நடத்தும் அதிகாரப் போட்டி 166

முஸ்லிம் காங்கிரசுக்குள் நடந்த அதிகாரப் போட்டி 168

ஏகாதிபத்திய நலன்களுக்கு செங்கம்பளம் விரிக்கும் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை"க்கான புலிகளின் தீர்வுத் திட்டம் 170

சந்தர்ப்பவாதத்துடன் கூடிய பிழைப்புவாதம் பித்தலாட்டத்தை பிரகடனம் செய்கின்றது 179

பண்பாட்டுச் சிதைவுகள் ஒரு இனத்தையே அழிக்கின்றது 186

வடக்கு-கிழக்கு என்ற பிரதேசவாத பிளவு, ஏன் புலிகளுக்குள் நடந்தது? 190

பின் இணைப்பு 197


# 1. முன்னுரை

இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து யுத்த நிறுத்தம் கடந்த இரண்டு வருடங்களாக அமுலில் உள்ளது. இந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் என்ன நடந்தது? உண்மையில் யாருக்கும் எதுவும் தெரியாது, சூனியம் நிலவுகின்றது. புலிகளும் அரசும் பேச்சுவார்த்தை ஊடாக நடத்திய இழுபறிகளையே, மக்களுக்குப் பொதுவாகக் காட்டப்படுகின்றது. ஆனால் உண்மை அதுவல்ல.

இதற்கு நேர்மாறாக யாரும் கற்பனை செய்ய முடியாத, ஒரு பாரிய மாற்றம் ஒன்று நடந்து முடிந்து விட்டது. உண்மையில் ஏகாதிபத்தியத்தின் தலையீட்டையும், அதன் விளைவுகளையும் யாரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை. உண்மையில் என்றைக்கும் இல்லாத ஒரு மாற்றம் நடந்து முடிந்துவிட்டது. இலங்கை அரசியல் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் எந்த சக்தியாலும், மீண்டு வரமுடியாத ஒரு மாற்றம் நடந்துவிட்டது. உதாரணமாக நாட்டில் பொது கக்கூஸ் கட்டக் கூட ஏகாதிபத்தியங்களின் உதவி அவசியமாகிவிட்டது. யுத்த சிதைவில் இருந்தது மீள உலகவங்கியின் அனுமதி ஒவ்வொருத் துறைக்கும் கெஞ்சிக் கேட்க வேண்டிய நிலையுள்ளது. வடக்கு - கிழக்கில் யுத்தம் சிதைத்த வீடுகளைப் புனரமைக்க நஷ்டஈடு கொடுப்பதற்காக, ஒரு வீட்டுக்கு 75 ஆயிரம் ரூபாவை உலகவங்கி வழங்க அனுமதித்தது. இது போதாது என்று கூறி உலக வங்கியிடம் கெஞ்சிய நிலையில், அதை 1,10,000 ரூபாவாக உயர்த்த உலக வங்கி இணக்கம் தெரிவித்ததை பெருமையாக அறிவிக்கின்றனர். இந்த வகையில் வடக்கு - கிழக்கில் மூன்று லட்சம் வீடுகளைப் புனரமைக்கும் திட்டம் ஒன்று, உலக வங்கியின் நிதியுடன் அனுமதி பெறப்பட்டுள்ளது. மார்ச் 2004-ல் வெளியான மற்றொரு அறிக்கையில் 2500 ரூபாவுக்கு குறைவான வருமானம் உடைய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983-க்கு பின் யுத்தம் காரணமாக வீடுகளை இழந்தோருக்கு வீடுகளை அமைத்து கொடுக்க உள்ளதாக அறிவித்துள்ளனர். இவை ஒன்றும் கற்பனை அல்ல.

இதில் உலக வங்கிக்கு என்ன சமூக அக்கறை? கடந்த இரண்டு வருடமாக சாதாரண பத்திரிக்கைச் செய்தியில் இருந்து, மிகக் குறைந்தபட்ச தரவுகளை அடிப்படையாக கொண்டு, என்ன நடந்தது என்பதைத் துல்லியமாக ஆதாரமாக இந்த நூலின் முதல் பாகம் விவாதிக்க முற்படுகின்றது. ஒரு நாடு எப்படி மறுகாலனியாக்கத்தின் உள் சென்று விட்டது என்பதை, மறுக்க முடியாத ஆதாரத்துடன் உங்களுக்கு முன்வைக்கின்றது. அமைதி, சமாதானம் என்ற விரிந்த தளத்தில், இந்நூல் உங்களை சுயமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

இந்த நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களில் என்ன நடந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டது. முதல் பகுதி ஒரு வருடத்துக்கு முன்பு எழுதப்பட்டது. சமாதான ஒப்பந்தத்தின் பின்னான முதல் வருடத்திய நிலையை ஆராய்கின்றது. இரண்டாம் பகுதி பிந்தைய வருடத்தை அடிப்படையாக கொண்டு முழுமையை ஆராய்ந்து அம்பலப்படுத்துகின்றது. மூன்றாம் பகுதி சம காலத்தில் நடந்த முக்கிய விடயங்கள் மற்றும் முக்கியமான பல கட்டுரைகளை உள்ளடக்கியது.

2004 தேர்தல் யூ.என்.பி வேட்பாளர் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வுக்கு முதல் கண்டனத்தையும், மிரட்டலையும் அமெரிக்காவே புலிக்கு எதிராகவிடுத்தது. இந்தக் கொலையைச் சொந்தக் கட்சி (யூ.என்.பி) முதல் இலங்கையின் ஜனநாயகக் கட்சிகள் என்று சொல்லும் எந்தக் கட்சிகளும் கூட இதைக் கண்டிக்கவில்லை. ஏகாதிபத்தியமே இலங்கையை ஆட்சி செய்கின்றனர் என்பதையே இவை காட்டுகின்றன. இந்தக் கண்டனம் அமெரிக்கா வெளியுறவு அமைச்சில் வைத்து விடப்பட்டது. இது ஒவ்வொரு சிறிய சம்பவமும் அமெரிக்காவால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதையும், கண்காணிக்கப்படுகின்றது என்பதையும் உணர்த்தியது. புலிகளுக்கு எதிரான குறிப்பான மிரட்டல் என்பது, எதையும் அமெரிக்கா செய்யும் தயார் நிலையில் உள்ளது என்பதையும் கோடிட்டுக் காட்டியது.

பொதுவாக அமைதி, சமாதானம் நோக்கிய பயணங்கள், உலகெங்கும் அங்கும் இங்குமாக தொடர்கின்றது. இலங்கையை நோக்கி ஏகாதிபத்திய பிரதிநிதிகள் இடைவிடாத தொடர் பயணங்களை நடத்துகின்றனர். ஏகாதிபத்தியம் கடன், உதவி, முதலீடு என்ற பெயரில் நிதியை வெள்ளமாக இலங்கையை நோக்கி நகர்த்துகின்றனர். இலங்கையின் ஏற்றுமதி பெருக்கெடுத்துள்ளது. இறக்குமதி கட்டுக்கடங்காத வகையில் பெருகியுள்ளது. அன்னிய முதலீடுகள் பல மடங்காகியுள்ளது. தன்னார்வக் குழுக்களின் தங்குமிடமாக இலங்கை மாறிவிட்டது.



புலிகள் அன்னியப் பொருட்களை வாங்கி விற்கும் தரகு வர்த்தகத்தில் கால் பதித்துவிட்டனர். எதிர்கால முதலீட்டை நோக்கி அசையா சொத்துகள் வாங்கி குவிக்கப்படுகின்றது. உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைத்துறையை புலிகள் படிப்படியாக தமது தனிப்பட்ட சொத்தாக்கி வருகின்றனர். புலிகள் புதிய முதலீட்டாளராக மாறிவிட்டனர். பல புதிய புலி முதலாளிகள் உருவாகி வருகின்றனர். அதற்கான நிதியை வரைமுறையற்ற வரி மூலம் திரட்டுகின்றனர். எங்கும் பணத்தை மையமாக வைத்த நடவடிக்கைகள், பெருகுகின்றது. பெரும் சொத்துக் குவிப்பின் ஊடாக, புதிய பணக்கார புலிகள் படிப்படியாக மிதக்கின்றனர். யாழ்குடா மேட்டுக்குடி சார்ந்த பிரான்ஸ் நகராகிவிட்டது. யாழ்நகரக் கடைகள் ஆடம்பரப் பொருட்களை விற்கும் தரகுச் சந்தையாகிவிட்டது. புலிகள் பல பத்து முதலீட்டை பல்வேறு வழிகளில் முதலீடு செய்துள்ளனர். பலவற்றை கட்டுப்படுத்தி பலாத்காரமாக அடிபணிய வைக்கின்றனர்.

மறு தளத்தில் வடக்கு கிழக்கு உள்ளிட்ட இலங்கை மக்கள் என்றுமில்லாத ஏழைகளாகியுள்ளனர். வாழ வழியற்ற நிலையில் மக்கள் வெளிநாடு செல்வது கடந்த இரண்டு வருடத்தில் பெருகி வருகின்றது. உள்ளூர் சிறு உற்பத்திகள் அழிக்கப்பட்டு நலிந்து போய்விட்டது. வேலை இழப்பும், வருமானம் இன்மையும் பெருகிவருகின்றது. மக்களின் நுகர்வுகள் ஏற்றுமதியாகின்றன. இறக்குமதிகள் பெரும் பணக்காரர்களின் நலன்கள் சார்ந்து மாறிவிட்டது. வறுமை ஊடாக கல்வி மறுப்பு தேசிய கொள்கையாகிவிட்டது. மக்களின் சொத்தான அரசுத்துறைகளை அன்னியருக்கு தாரைவார்ப்பதன் மூலம் தனியார் மயமாகிவிட்டது. தேசிய உற்பத்திகள் முடக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. சமுதாயப் பிளவு விரிந்து அகலமாகிவிட்டது.

இந்த நூல் எழுதி அச்சுக்கு அனுப்ப இருந்த நேரத்தில் கருணா-பிரபாகரனின் பிளவு அரங்குக்கு வந்தது. இந்த நிலையில் இந்த நூல் இரண்டு பக்கத்திற்கும் விதிவிலக்கின்றி பொருந்துகின்றது. அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் வேறுபாடற்ற இவர்கள், பிரதேசவாதிகளாகவே இரண்டு பகுதியிலும் அரங்கில் புகுந்துள்ளார்கள். மக்களைப் பற்றி இருவருக்கும் சிறிதும் அக்கறை கிடையாது. ஏகாதிபத்தியத்தின் தொட்டில் தாலாட்டு பெறும் உரிமையையே, தத்தம் தரப்பில் உரிமையாகக் கோருகின்றனர். இங்கு இரட்டைப்பிள்ளை தாலாட்டை கருணா கோர, பிரபாகரன் ஒரு குழந்தைதான் ஏகாதிபத்திய தாலாட்டில் வாழ முடியும் என்கின்றார். இதையொட்டி ஒரு கட்டுரை இந்த நூலில் இணைத்துள்ளேன். இக்கட்டுரை ஒரு சஞ்சிகையில் வெளிவருவதற்காக எழுதப்பட்டது. இக் கட்டுரையுடன் பின்னிணைப்பு அவசியம் கருதி இணைக்கப்பட்டுள்ளது. எதார்த்தத்தில் மக்களை மந்தை நிலைக்கு தாழ்த்தி, அறியாமையைத் தமது மூலதனமாக்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டு மொத்தமாக இவை அனைத்தையும் மக்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை. மக்கள் மந்தை நிலைக்குள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தமிழ், சிங்களத் தலைவர்கள் விதிவிலக்கின்றி ஏகாதிபத்தியத்திடம் எப்படி நாட்டை விற்றுள்ளனர் என்பதை, இந்த நூல் ஆதாரத்துடன் நாட்டுப் பற்று உள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்துகின்றது. புலிகளும், துரோகக் கட்சிகளும்கூட தமது குறைந்தபட்ச அடையாளத்தை எப்படி தொலைத்து வருகின்றனர் என்பதை ஆராய்ந்தளிக்கின்றது. மேலும் சிங்களக் கட்சிக்கு இடையில் வேறுபாடுகள் மறைந்து விட்டதையும் ஆராய்ந்தளிக்கின்றது. நாட்டை ஏகாதிபத்தியத்திடம் விற்பதில், தமிழ் மற்றும் சிங்கள (முஸ்லீம், மலையக கட்சிகளும் கூட) கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்பதை இக்கட்டுரை துல்லியமாக அம்பலப்படுத்துகின்றது. துரோகக் குழுக்களுக்கும் புலிகளுக்கும் எதிராக தம்மை அடையாளம் காட்டியவர்களும் எப்படி தம்மை அரசியல் ரீதியாக இனம் காட்ட முடியாது போயுள்ளனரோ, அது போல் புலிகளுக்கும் துரோகக் குழுக்களுக்கும் இடையில் அரசியல் வேறுபாடுகள் அற்றுப் போனதை இந்த நூல் தெளிவாக அம்பலப்படுத்துகின்றது. மக்களுக்கு எதிரான இவர்களின் துரோகத்தை இந்த நூல் அம்பலப்படுத்துகின்றது.

இலங்கையில் நடக்கும் ஒட்டு மொத்த காட்டிக் கொடுப்பை, இலங்கையில் யாரும் அம்பலப்படுத்தி போராட முன்வரவில்லை. அந்தப் பணியின் அங்கமாகவே இந்த நூல் உங்களுக்கு பல்வேறு தடைகளைக் கடந்து கிடைக்கின்றது. இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை தெரிந்த கொள்ள விரும்பும், சமூகத்தின் பால் அக்கறை உள்ள ஒவ்வொருவரையும் இந்த நூல் ஒன்றிணைய அறைகூவுகின்றது.



## பாகம் - 1

# 2. சமாதானமா? யுத்தமா? இது யாருக்காக? மக்களுக்கா? மூலதனத்துக்கா? நாடகம் சோகமான முடிவை நோக்கி நகர்கின்றது

"சமாதானமா? யுத்தமா?" என்பதை மையமான பொருளாக்கிய ஏகாதிபத்தியங்கள், விரிவாகவே களமிறங்கியுள்ளது. புலிகளுக்கும் அரசுக்கும் பின்பக்கமாக கைகளை இறுகக் கட்டபட்ட நிலையில், சமாதானம் பற்றி மூலதனம் உத்தரவுகளை இடுகின்றது. இங்கு அமைதிப் படைக்கு பதில், மூலதனமே சமாதானத்தை கடைப்பிடிக்க உத்தரவுகளை இடுகின்றது. என்றுமில்லாத வகையில், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஏகாதிபத்தியத் தலையீடுகள் பெருக்கெடுத்துள்ளது. உண்மையில் யுத்தமற்ற அமைதியை மக்கள் பெற்றார்களோ இல்லையோ, மூலதனம் இதைச் சரியாகவும் சாதகமாகவும் பயன்படுத்தியுள்ளது.

உதாரணமாக 2002 இல் பட்டடியலிடப்பட்ட 208 கம்பெனிகள் முதல் காற் பகுதியில் பெற்ற நிகர லாபம், 3.9 பில்லியன் ரூபாவாகும் (390 கோடி ரூபாவாகும்). இது சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 85 சதவீதம் அதிகமாகும். இதில் ஓரிரு விதிவிலக்குத் தவிர, அனைத்தும் வெளிநாட்டுக் கம்பனிகளாகும். உண்மையில் சமாதானம் அமைதி என்பதை வெளிநாட்டு மூலதனமே தனக்கு இசைவாகப் பயன்படுத்தியுள்ளது. மக்களின் உடல் உழைப்பையும், தேசிய வளங்களையும் வெறும் 208 கம்பெனிகள் மட்டும், முந்திய வருடத்தை விட 85 சதவீதம் அதிகமாக, சுரண்டிக் கடத்தியுள்ளதைச் சமாதானம் ஏற்படுத்திய எதார்த்தமான புள்ளிவிபரம் நிறுவுகின்றது. மொத்தமாக ஆராய்ந்தால் சமாதானத்தின் ஒட்டு மொத்த சுரண்டல் லாபங்களை யார் அனுபவிக்கின்றார்கள் எனின், வெளிநாட்டு மூலதனம் தான் என்பது சொல்லித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய வேண்டிய அவசியமில்லாது போகின்றது. 2002 அக்டோபர் மாதம் ஏற்றுமதி 16 சதவீதம் அதிகரித்து அந்த மாதம் 40.8 கோடி டொலர் (4080 கோடி இலங்கை ரூபா) பெறுமதியான தேசிய செல்வங்கள் மக்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. 2001 ஆண்டு மொத்த ஏற்றுமதி 408 கோடி டொலராக (40,800 கோடி ரூபா) இருந்தது. 2002 ம் ஆண்டு முதல் 10 மாதத்தில் மொத்த ஏற்றுமதி 383 கோடி டொலரை (38300 கோடி ரூபா) எட்டியிருந்தது. 2002 அக்டோபர் மாதம் இறக்குமதி 19 சதவீதம் அதிகரித்ததுடன் 57.8 கோடி டொலர் (5780 கோடி ரூபா) பெறுமதியான பொருட்கள் இறக்குமதியானது. இதன் மூலம் தேசிய உற்பத்திகளை முடக்கி அழிக்க அமைதி, சமாதானம் என்ற வாய்வீச்சுகள் துணைபோனது, போகின்றது. முதல் 10 மாதத்தில் இறக்குமதி 494 கோடி டொலராக (49400 கோடி ரூபா) அதிகரித்து இருந்தது. 2002ம் ஆண்டு வெளிநாட்டு வர்த்தக நெருக்கடி 12.6 கோடி டொலரில் இருந்து 126 கோடி டொலர் வரை ஏற்படும் என்று, அமைதிப் பூங்காவில் வெட்டித்தனத்தின் மீது மத்திய வங்கி பகட்டாக அறிவித்துள்ளது. தேச மக்களின் அடிப்படை தேவை சார்ந்த நுகர்வுகளை ஏகாதிபத்திய வெள்ளையர்களின் வாயின் ருசிக்கு ஏற்ப ஏற்றமதி செய்யவும், மக்களின் அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையற்ற கழிவுகள் சார்ந்த ஆடம்பர பொருட்களை இறக்குமதி செய்யும் தேசிய கொள்கை, அமைதிப் பூங்காவை நிறுவி மக்கள் மேல் திணிக்கப்படுகின்றது. தேசப் பண்பாடுகள், கலாச்சாரங்கள், வாழ்வியல் தன்மை என அனைத்தும் என்றுமில்லாத வகையில் கற்பழிக்கப்படுகின்றது.

இது தொடர்ச்சியாகத் தேசத்தையே அழிக்கும் சூறாவளியாக, நாட்டின் தடையற்ற, மந்தை குணம் கொண்ட அடிமை மக்கள் மேல் தன்னை ஜனநாயகப்படுத்துகின்றது. 2003 (ஜன-பிப்) தை மாதம் இலங்கை துறைமுகத்துக்குள் 22,258 கப்பல்கள் வந்தன. இது வழமையை விட 12 சதவீதம் அதிகமாகும். ஏற்றி இறக்கிய கொள்கலன்கள் 1,46,737 ஆகும். இது சென்ற வருடத்தை விட 17.2 சதவீதம் அதிகமாகும். 2003 மாசி (பிப்-மார்ச்) மாதம் தென் ஆசியாவில் மிகப் பெரிய சரக்குகளை ஏற்றி இறக்கும் இடமாக இலங்கை மாறியது. 1,03,321 கொள்கலன்களை ஏற்றி இறக்கியது. இது சென்ற வருடத்தை விட 22.1 சதவீதம் அதிகமாகும். கொழும்பு துறைமுகம் உலகின் மிகப் பெரிய கப்பல் கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தத்தை அண்மையில் செய்துள்ளது. சரக்குள் ஏற்றி இறக்கும் ஒரு மையமாக கொழும்பு அடுத்த இரண்டு வருடத்தில் மாறவுள்ளது. அக்கம்பெனியின் 312 கப்பலை உள் எடுக்கவும் 8 லட்சம் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை ஏற்றி இறக்கவும் ஒப்பந்தம் கோருகின்றது. இலங்கை ஏகாதிபத்தியங்களின் சந்தைக்கு ஏற்ற மையமாகவும், சூறையாடுவதற்கு ஏற்ற அடிமை பண்பாடு விரிவாக தேசியமயமாகின்றது. நாட்டின் உள் வரும் ஒவ்வொரு கப்பல்களில் இருந்து கழிவுகளை இறக்கும் பணியும் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் களவாடி ஏற்றிச் செல்லும் பணியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் தடங்களுக்குள்ளாகவில்லை. இன்றைய அமைதியும் அதன் வெற்றியும் இங்கு தான் ஜனநாயகமாகியது.



மூலதனத்தின் ஆக்கிரமிப்புக்கு இசைவாக "அமைதியா? யுத்தமா?" என்று பிரகடனம் செய்தபடி, 2002ம் ஆண்டு இலங்கையில் அதி கூடிய எண்ணிக்கையில் புதிய கம்பெனிகள் பதிவு செய்யபட்டுள்ளது. 3284 புதிய கம்பெனிகள் பதிவான அதே நேரம், முந்திய வருடத்தை விட இது 46 சதவீதம் அதிகமாகும். 3050 தனியார் கம்பெனியாகவும், 90 அரசுதுறை சார்ந்தும் பதிவானது. மொத்தத்தில் 43000 கம்பெனிகள் பதிவாகியுள்ள அதே நேரம் 32000 கம்பெனிகள் ஒன்றுக்கு மேற்பட்ட கம்பெனிக்குள் தன்னை பதிவாகியுள்ளது. புதிய முதலீடுகளும், முதலீட்டுக்குள் முதலீடுகளும் இன்று இலங்கையின் தேசிய வளங்கள் மேலான ஆக்கிரமிப்பு நடத்துகின்றது. புதிய கம்பெனிகள் மக்களுக்கு வேலை வாய்ப்பை அள்ளித் தருகின்றது என்ற ஒரு தலைப்பட்சமான பிரச்சாரம் மூலம், அன்னிய முதலீடுகள் தேசிய அடிப்படைகளைச் சூறையாடிச் செல்வதை உறுதி செய்கின்றது. தேசத்தில் வாழும் தேச மக்களையும், தேச வளங்களையும் விற்கும் விபச்சாரத் தரகரர்களாகவே, தமிழ் சிங்கள தேசியத் தலைவர்கள் தத்தம் சமாதானம் மற்றும் யுத்தக் கோஷங்களை பிரகடனம் செய்கின்றனர்.

இலங்கையில் வாழும் ஒவ்வொரு இனத்தின் தலைவர்களும் தேசத்தை இனம் சார்ந்து, ஏகாதிபத்தியத்துக்கு விபச்சாரம் செய்யவும் கூட்டிக் கொடுக்கவும் கம்பளம் விரிக்க ஒரு கணம் கூட தயங்கவில்லை. இதுவே இன்றைய தேசத்தின் "தேசியத் தலைவர்களின்" இறுதி மூச்சுடன் கூடிய நக்கிப் பிழைப்பாக உள்ளது. 2002-ம் ஆண்டு சமர்ப்பித்த வரவுசெலவு, தேசத்தை சூறையாடும் மூலதனத்துக்கு அடிமையாகக் கூனிக்குறுகிய படி சலுகை வழுங்கத் தவறவில்லை. நாட்டைச் சூறையாடிக் கொழுக்கும் தேசத் துரோகிகளான தேசத்தின் எதிரிகள் கட்ட வேண்டிய வரிக்கு, மன்னிப்பு திட்டம் மூலம் விலக்களித்த போது ஜனநாயகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்றிகளைப் போல் தமது சாக்கடை நாற்றத்தால் தேசத்தையே மூழ்கடித்தனர். இங்கு தமிழ் சிங்கள மொழி வேறுபாடு சார்ந்து எந்தத் தேசிய உணர்வும் பிரதிபலிக்கவில்லை. மூலதனத்துக்குப் பாதுகாப்பும் சலுகையும் ஜனநாயகத்தின் எடுப்பான தேசியமாகியது. மூலதனத்துக்குச் சலுகை இது மட்டுமா? இல்லை. மக்களைச் சுரண்டி வருடம் 50 இலட்சம் வரி செலுத்தும் மூலதனத்துக்கு, 30 சதவீதமான வரி குறைக்கப்பட்டதன் மூலம், வெளி நாட்டு மூலதனம் தாராளமாக சுதந்திரமாக சுரண்டும் சலுகை ஊக்குவிக்கப்பட்டது. அதே நேரம் 50 லட்சத்துக்குக் குறைவான வரி கட்டுபவர்கள் 20 சதவீத வரி கட்டவேண்டும். இதன் மூலம் தேசிய உற்பத்திக்கு அதிக வரிமுறை சுற்று வழி மூலம் நடைமுறைக்கு வந்துள்ளது. 50 லட்சத்துக்கும் கூடுதலாக 20 சதவீத வரிகட்டியவர்கள் 30 சதவீத வரிச் சலுகை பெறுவதால், 50 லட்சத்துக்கு குறைய வரி கட்டுபவர்கள் கூடுதலான வரியை அதி கூடிய வருவாய் உடையவர்களை விட அதிகம் கட்டக் கோருகின்றது. இதை விட மேலதிக சலுகையாக 50 லட்சத்துக்கு அதிகம் வரிகட்டுபவர்கள் மக்கள் நலன் செயல் திட்டத்துக்கு உதவினால், 15 சதவீத வரி கட்டினால் போதுமானது. இதற்குப் பின்னால் 30 சதவீத வரிச் சலுகையும் உண்டு. மறைமுகமாக வெளிநாட்டு மூலதனத்துக்கு அதிக வரியற்ற சலுகைகளும், தேசிய உற்பத்திக்கு அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி மூலம் நெருக்கடியையும் தேசிய ஜனநாயக பாராளுமன்றங்கள் திணித்து, தேசிய அடிப்படைகளைத் தகர்ப்பதே இன்றைய தேசியமாக, அமைதியாக, யுத்த பிரகடனங்களாக உள்ளது.

இதன் அடிப்படையில் புதிய முதலீட்டுக்கு 5 வருட வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. முதலீடுகளைப் பெரியளவில் குவிக்கும் வெளிநாட்டு கம்பெனிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் தேசிய அரசாங்கங்கள் ஒரு விபச்சாரத் தரகனாகச் செயல்படுகின்றது. இந்த விபச்சாரத் தரகர்கள் தனிப்பட்ட உயர் வர்க்கப் பிரிவினர் கட்டிய 35 சதவீத வரியை, 30 சதவீதமாகக் குறைத்து ஏகாதிபத்தியத்துக்கு விசுவாசமாக "நாய் போல் வாலாட்டி குலைக்க கோரும்" சலுகை வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் செல்வத்தை தாராளமாகக் கடத்திச் செல்ல ஏற்றுமதி வரியை 0.5 முதல் 0.75 சதவீதம் குறைத்து ஏகாதிபத்திய மூலதனம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களின் அடிப்படை தேவையைப் பறித்து, அதை ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றது. மக்களின் அடிப்படை வாழ்வைக் கூலிகள் மூலம் சிதைக்கவும், வெளிநாட்டவன் அதிகம் சம்பாதிக்கவும் பணத்தின் பெறுமதி குறைக்கப்பட்டது. 2002-இல் பணவீக்கம் 14.2 சதவீதமாக இருக்கும் வண்ணம் உலகமயமாதல் திணித்தது. வட்டி வீதம் ஒரு சதவீதத்தால் குறைத்ததன் மூலம், மக்களின் தேசிய சேமிப்புக்குக் கிடைத்த வட்டியின் அளவு குறைந்தது. தேசியச் சேமிப்பை எடுத்து முதலீடாக பயன்படுத்தும் பெரும் மூலதனத்துக்கு ஒரு சதவீத வட்டி குறைக்கப்பட்டதால், மறைமுகமான விசேட மானியமாகியது. உதாரணமாக அமெரிக்காவில் இந்த நடைமுறை மூலம் மூலதனத்துக்குக் கிடைத்த மேலதிகப் பணத்தின் பெறுமானம் 13,500 கோடி டொலராகும். பெரும் மூலதனத்துக்குச் சேவை செய்வதே தேசிய கொள்கையாக மாறிவிட்டது. இதற்குத் தமிழ், சிங்கள, முஸ்லிம் தலைவர்கள் என யாரும் விதிவிலக்கல்ல. இதற்கு ஆயுதம் ஏந்திய, ஏந்தா, எந்தத் தேசிய நாயகர்களும் விதிவிலக்கற்ற கைக்கூலிச் சேவையைச் செய்கின்றனர்.

நாட்டைப் பெரும் மூலதனத்துக்கு ஏலம் விட்டபடி, நிதி மூலதனத்துக்கு நாட்டை அடகு வைப்பதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டே, நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் போராட்ட இயக்கங்களும் நாலுகால் பாய்ச்சலில் முண்டியடிக்கின்றனர். அடகு வைத்து பெற்ற பணத்துக்கு வட்டி கட்டவும் மீள கொடுப்பனவுக்கும், தேசிய வருமானத்தில் 50 சதவீதத்தக்கு அதிகமானதை தாரை வார்க்கின்றனர். இலங்கையின் கடன் 2002 இல் 1,45,060 கோடி (1450.6 பில்லியன்) ரூபாவாக அதிகரித்துச் செல்லுகின்றது. இலங்கையில் ஒவ்வொருவரும் 77,500 ரூபா கடனுக்கு தேசிய சொந்தக்காரராக உள்ளனர். வெளி நாட்டுக் கடன் மொத்தத் தேசிய வருவாயில் 112 சதவீதமாக உள்ளது. உண்மையில் இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றால், ஒரு வருடம் முழுக்க பட்டினி இருந்து அனைத்தையும் வெளிநாட்டுக்குக் கொடுத்தாலும் கடனைக் கொடுக்க முடியாது என்பதை புள்ளிவிபரங்கள் உணர்த்தி நிற்கின்றன. நாடு திவாலாகி வரும் நிலையில் மத்திய வங்கி 2003 தைமாதம் (ஜனவரி) 200 கோடி ரூபாவுக்கு பிணைப்பத்திரங்களை வழங்கியது. வழமையாக இந்த பிணைப் பத்திர முதிர்வு



6 வருடமாக இருந்தது. தற்போது 10, 15 வருடமாக மாறியுள்ளது. இதற்கு 15 சதவீத வட்டி வழங்க உறுதி அளித்தது. உண்மையில் மக்களின் சேமிப்புகள் திவாலாகி விட்டதையும், இதை மூடிமறைக்க பிணைப்பத்திரங்கள் பயன்படுத்தப்படுவதையும் இன்று எதார்த்த நிலையில் காணலாம். இதன் மூலம் மேலும் மக்களின் தேசியப் பணத்தில் இருந்து 24,000 கோடி ரூபாவை உறிஞ்சியெடுக்க முனைகின்றது. இதன் முதற்படியாக 2003 தை மாதம் 5500 கோடி ரூபாவை மத்திய வங்கி மக்களின் பணத்தைத் தனதாக்கியது. 2003 (பிப்ரவரி) மாசி மாதம் மீண்டும் 100 கோடி ரூபா பெறுமதியான பிணைப்பத்திரத்தை வெளியிட்டது. இதற்கு 8.5 சதவீத வட்டி உறுதி அளிக்கப்பட்டு, அதை வருடம் இரண்டு தடவைகளில் வழங்க உறுதி அளிக்கப்பட்டது. பெரும் மூலதனங்கள் மக்களின் பணத்தைக் கைப்பற்றி அவர்களையே சூறையாட, மக்களின் சேமிப்புகளைக் கவரும் சலுகையாக இந்த முயற்சிகளின் ஒரு அங்கமாகவே வேகம் பெற்றுள்ளது. உண்மையில் பணத்தின் பெறுமானம் இதன் மூலம் வீழ்ச்சி காணவும், பணத்தை தேசங் கடந்த நிதி நிறுவனங்கள் சுருட்டிச் செல்வதும், அதையே மீள் கடனாக வழங்கி, நாட்டை மறுகாலனியாக்குவதுமே இதன் அடிப்படைக் கொள்கையாகும். மக்களின் சேமிப்பு பணத்தின் பெறுமானமானது, பணவீக்கம் மூலமும், வட்டிக் குறைப்பின் மூலமும் மற்றும் பல மறைமுக வழிகளில் குறைந்து செல்ல, மறுதளத்தில் மக்களின் பணத்தை தரமுடியாது என்ற அறிவிப்பை வழங்கும் ஒரு நிலைக்கு நாடு செல்லுகின்றது. கடன் பத்திரங்கள் அதன் முதற்படியாக, வங்கிகள் திவாலாகும் ஒரு நிலைக்கு இலங்கையின் உலகமயமாக்கல் நாலுகால் பாய்ச்சலில் எகிறி குதித்துச் செல்லுகின்றது.

மற்றொரு வேடிக்கையாக 1996-க்கு பின் வெளிநாட்டுக் கடனாக வந்த 25000 கோடி ரூபா பணம் பயன்படுத்தப்படவேயில்லை. ஆனால் அதற்கு வட்டி கட்டுவதும், மீள கொடுப்பதும் தொடர்ச்சியாக செய்யப்பட்டுள்ளது. உண்மையில் வெளிநாட்டுக் கடன்கள் நேரடியாக இலங்கை வங்கியில் இடப்படுவதில்லை. மாறாகக் கடன் கொடுத்தவர்களிடம் பாதுகாப்பாக அப்பணம் இருப்பதுடன், அவை பொருட்களாக ஏற்றுமதியாகின்றன. பணத்தைக் கடன் வாங்கியவன் என்ற அடிப்படையில் கடன் கொடுத்தவனிடம் பொருட்களை அவன் நிர்ணயித்த அதிக விலைக்கு உரிமையுடன் வாங்கும் சிறப்புத் தகுதியை கடன் பெற்றவனுக்கு கொடுக்கின்றது. பின் வாங்கிய பொருளுக்கு வட்டி கட்டும் ஒரு சுழற்சி முறையான கொள்ளையே, கடனின் சிறப்பான உலகமயமாக்கமாகும். காகிதப் பணம் என்பது மனித உழைப்புச் சார்ந்த ஒரு பொருளின் அடக்க விலையைச் சுரண்டலுடன் உள்ளடக்கிக் குறிக்கின்றது. பணத்தின் பெறுமதியைக் குறித்து அச்சு அடிக்கும் பேப்பரின், எந்தப் பெறுமானமும் அது குறிக்கும் பெறுமானத்தை உள்ளடக்கியிருப்பதில்லை. கடனின் செயல்பாடு உழைப்பின் செயற்பாடாக இருப்பதால், வெளிநாட்டு உழைப்பு நேரடியாக நாட்டுக்குள் வருவதில்லை. மாறாக உழைப்பின் உற்பத்தி ஏற்றுமதியாகி, மறைமுகமாக வெளிநாட்டவனின் நேரடி உழைப்பு ஆக்கிரமிப்பாக மாறுகின்றது. முன்பு நேரடியாக ஆக்கிரமித்த வடிவத்தில் இருந்து, இன்று மறைமுகமாக நாட்டை ஆக்கிரமிக்கும் ஒரு அரக்கனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. எந்தளவுக்கு வெளி நாட்டுப் பணம் உள் நாட்டில் வருகின்றதோ, அந்தளவுக்கு வெளி நாட்டு உழைப்பின் சுரண்டல் சார்ந்த உழைப்பு, மற்றைய நாட்டுக்குள் ஊடுருவிப் பாய்கின்றது. இதனால் தேசிய உற்பத்தி முடக்கும் அதே நேரம், உள்நாட்டு உற்பத்தி "உழைப்பு வழியாக" மிக மலிவாக மீள உறிஞ்சப்படுகின்றது. உழைப்பு சார்ந்த சுரண்டல் பணத்தையும், உழைப்பின் சேமிப்பையும் மறைமுகமாக மக்களிடம் கவரும் ஏகாதிபத்தியங்கள் மறு முதலீடாக, இலங்கை முதல் பல நாடுகளுக்கு வட்டிக்கும், வட்டிக்கும் வட்டி கோரி நிபந்தனைகளை உள்ளடக்கி வழங்குகின்றது. இதை அவர்கள் மெதுவாகவே சுட்டிக்காட்ட முற்படுகின்றனர். "வடக்கு - கிழக்கு மாகாண உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகள் குறித்து சில நிபந்தனைகளை விதித்துள்ளன. அவை தொடர்பான விவரங்களை இப்போது வெளியிடமுடியாது." என்று அரசின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக வன்னியில் வைத்து அறிவித்தார். அத்துடன் அதை "உதவி வழங்கும் நாடுகள் நிதியைச் சும்மா வழங்கப் போவதில்லை. அந்த நாடுகள் சில நிபந்தனைகளை விதிக்கும் என்பது தெரிந்ததே. அந்த நிபந்தனைகள் குறித்து இப்போது எதுவும் கூறமுடியாது" - என்று கூறினார். இதன் அடிப்படையில் புலிகள் உள்ளடங்கிய சிரானின் கூட்டத்தில் திட்ட வரைவாகத் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு மேலாக அரசும் 300 முதல் 400 திட்டங்களையும் சமர்ப்பிக்கவிருக்கின்றது என்று அறிவித்தார். யாழ்ப்பாணத்தில் 10 கோடி ரூபா கடனை மின்சார வழங்கலுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி கொடுத்துள்ளது. உண்மையில் இவை எல்லாம் மக்களை வெறும் கொத்தடிமைகளாக மற்றும் மறுகாலனியாக்கம் இதன் மூலம் வேகம் பெறுகின்றது.

நாடு சமாதானத்தின் இறக்கைகள் மூலம் ஏலம் விடப்படுகின்றது. நிரந்தரத் தீர்வு ஏற்பட்டால் வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு கூடுதல் கடன்களை உதவி என்ற பெயரில் வழங்குவோம் என்று ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோசினோ தெரிவிக்கின்றார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின் பின் அவர் வெளியிட்ட கருத்தில் "வடக்கு - கிழக்குப் புனரமைப்புக்கும் மக்களின் மீள் குடியமர்வுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது கூடுதல் பங்களிப்பை வழங்கவேண்டும் என்று தமிழ்ச்செல்வன் கோரிக்கை விடுத்தாகவும்,. ஏ-9 வீதியை புனரமைக்க நிதி உதவி வழங்கியது போன்று, வடக்கு - கிழக்கில் சேதமடைந்துள்ள ஏனைய வீதிகளைப் புனரமைக்க நிதி வழங்க வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் கோரியதாகவும் தெரிவித்தார். வடக்கு - கிழக்கில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த 40 கோடி (அண்ணளவாக 4000 கோடி ரூபா) அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளோம். நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னர் கூடுதல் நிதியை வழங்குவோம் என்று சினோ பதிலளித்தாக" செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் அன்றே கிளிநொச்சியில் 60 கோடி ரூபா செலவில் உருவாக உள்ள புதிய நவீன வைத்தியசாலைக்கான காலனித்துவ அடிக் கல்லை நாட்டத் தவறவில்லை. இப்படி நாட்டின் வடக்கு



கிழக்கு மட்டுமல்ல. நாட்டின் எல்லா பாகத்திலும் வெளிநாட்டு மூலதனமும் ஊடுருவிப் பாய்கின்றது.

நாட்டின் சட்டத்திட்டத்தில் விதிவிலக்குடன் கூடிய சுரண்டல் சுதந்திரம் சில நாடுகளுக்கு, அவர்களின் இறைமையாக தாரை வார்க்கப்படுகின்றது. 01.3.2003 தொடக்கம் இலங்கை இந்தியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. தேசிய உற்பத்திகள் இதன் மூலம் மிகப் பெரிய அழிவைத் துரிதப்படுத்தக் கோருகின்றது. மலிவான இந்தியக் கூலியில் உற்பத்தியாகும் பொருட்கள், இலங்கையின் உயர்வான கூலியில் உருவாகும் உற்பத்தியை அழித்து ஒழிப்பதை நிபந்தனையாக இது கொள்கின்றது. தேசிய உற்பத்திகள் தப்பிப் பிழைக்க கூலி குறைப்பை தேசிய முதலாளித்துவ சக்திகள் முன் திணித்து கட்டாயப்படுத்துகின்றது. இதன் மூலம் வர்க்கப் போராட்டத்தின் நட்பு சக்திகளை எதார்த்த நடைமுறையில் எதிரணிக்கு இட்டுச் செல்வதன் மூலம், பெரு மூலதனம் வர்க்கப் போராட்டத்தில் இருந்து தற்காப்பு பெறமுயல்கின்றது. மறுதளத்தில் பிராந்திய ஆதிக்கச் சக்தியான இந்தியாவின் ஒரு மாநிலமாக, இலங்கை மாற்றப்படுகின்றது. கொள்ளையை இலகுவாக நடத்த இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்குமிடையே தரைப்பாதை அமைப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்காவும் வாஜ்பாயும் புதுடில்லியில் கூடி ஆராய்ந்தனர். சுதந்திர வர்த்தகம் போன்று சுதந்திர வர்த்தக வலையங்கள் பல இலங்கை சட்டத்திட்டத்துக்கு வெளியில் தாராளமாக மக்களைச் சுரண்டிக் கொழுக்க உருவாக்கப்படுகின்றது. மாசி (பிப்ரவரி) 2003-இல் இலங்கை மற்றும் பிரான்சுக்கு இடையில் கையெழுத்தான ஒப்பந்தம் ஒன்று, பிரஞ்சு மூலதனத்துக்குத் தனியான கைத்தொழில் பேட்டை ஒன்று அமைத்து கொள்ளையிட அனுமதித்துள்ளது. இதில் தற்போதைக்கு 76 முதலீடுகளை உள்ளடக்கிய இந்த சுதந்திரமான கைத்தொழில் பேட்டை, மக்கள் மேலும் அதிகமாகச் சூறையாட அனுமதிக்கும் அதே நேரம் மக்களை மேலும் தியாகம் செய்ய கோருகின்றது.

நாடு தொடர்ச்சியாகத் திவாலாகி வருகின்றது. மக்களின் உழைப்பும், உழைப்பு சார்ந்த வாழ்வும் பெறுமதி இழந்து வருகின்றது. உலகமயமாதல் நாட்டின் எல்லை எந்தளவுக்கு ஊடுருவிப் பாய்கின்றதோ, அந்தளவுக்கு நாட்டின் தேசிய பற்றக்குறை இயல்பானதாக மாறுகின்றது. வரிச்சலுகை, வரிவிலக்குகள் அளிப்பது, வட்டி கட்டுவது, மூலதனம் விரிந்த களத்தில் வசதியாகச் சுரண்டும் சாதனங்களை அமைத்துக் கொடுப்பது (உதாரணமாக கட்டுநாயவுக்கு விமானம் எற இலகுவாகச் செல்ல அமைக்கும் பாதை. இது வெளிநாட்டு நபர்கள் மற்றும் சரக்கு உள்ளிட) என விரிந்தளவில் வழங்கும் சலுகைகள், மானியங்கள் மூலம் பற்றாக்குறை நியாயப்படுத்தப்படுகின்றது. இதைத் துல்லியமாகக் கூறினால், தேசிய பற்றாக்குறைத் திட்டமிட்டே உலகமயமாதல் அமைப்பு உருவாக்குகின்றது. கடன் மூலம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உலக வங்கி நிர்ப்பந்திக்கின்றது. இலங்கையின் மொத்த தேசிய வருமானம் 2002 இல் 33900 கோடி ரூபாவாகும். ஆனால் செலவோ 64900 கோடியாகும். துண்டு விழும் தொகையை கடன் வாங்குவதன் மூலம் நாட்டை ஏலம் விட்டே திரட்ட உள்ளனர். அதாவது வட்டியையும், மீள கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவை மறு கடனாக வாங்கவும், புதிதாக கடன் வாங்குவதன் மூலம் பற்றாக் குறையை நிவர்த்தி செய்து மூலதனத்துக்கு மறுமுதலீடு செய்யா கோருகின்றது. அத்துடன் கொள்ளையடிப்போரும் கடன் கொடுத்து வட்டி வாங்குவோரும் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம், மருத்துவம், கல்வி என அனைத்தையும் படிப்படியாகக் குறைத்து அதற்குச் செலவிடுவதை நிறுத்தக் கோருவதுடன், அதைத் தமக்குத் தரும்படி கோருகின்றனர். அதை ஒவ்வொரு வரவு செலவிலும் சரி, ஒவ்வொரு தேசிய நடவடிக்கையிலும் சரி தலைகீழாக நின்று செய்வதில், மொழி கடந்த தேசிய தலைவர்கள் நேர்மையானவர்களாக இருக்கின்றனர்.

தேச வளத்தைக் கொள்ளையடிப்பதையே தேசியக் கொள்கையாகக் கொள்கின்றனர். ஏகாதிபத்தியமான ஆஸ்திரேலியாவின் கொள்ளை நிறுவனம் ஒன்று மன்னார் பிரதேசத்தில் பெட்ரோலிய வளம் சம்பந்தமாக விரிவான ஆய்வொன்றினை நடத்தியுள்ளது. பெட்ரோலின் இருப்பை ஒட்டிய நம்பிக்கையினை அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. வடகிழக்கிலும் எண்ணெய் வள ஆய்வினை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3லட்சத்து 25ஆயிரம் அமெரிக்க டொலரை மேலும் வழங்க முன்வந்துள்ளது. இதை கொள்ளை அடிக்க பன்னாட்டு நிறுவனங்களிடம் மன்னார் கடலைத் தாரை வார்க்க அரசு பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரவுள்ளது. இது போன்று பல தேசிய உற்பத்திகளை அழிக்க புதிதாக 175 வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் வர உள்ளதாக, அரசு பெருமையாக அறிவித்துள்ளது. சீனா சுதந்திர வர்த்தக வலையத்தில் புடவைத் தொழிலில் முதலிடும் ஒரு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. ஜெர்மனி அரசு யாழ்குடாவில் 1997 முதல் தொழில்நுட்ப புனரமைப்பு என்ற பெயரில் 47 கோடி ரூபாவை 2003 வரை செலவு செய்துள்ளது. 74 பாடசாலைகளில் 300 மலசல கூடங்களை அமைத்ததுடன், 17 கிராமிய நீர் திட்டங்களைப் புனரமைத்ததுடன், 2000 வீடுகளை அமைக்கவும் இந்த நிதியைப் பயன்படுத்தியது. இலங்கை அரசு திருகோணமலையில் உணவு பாதுகாப்பு மையம் ஒன்றை உருவாக்க ஜெர்மனிய மூலதனத்துடன் ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளது. இதன் முதல் கட்டமாக 18 கோடி ரூபாவையும், இரண்டாம் கட்டமாக 22 கோடி ரூபாவையும் முதலீடு செய்ய உள்ளது. திருகோணமலையில் எண்ணைக் குதங்களை சிலவற்றை 35 வருட குத்தகைக்கு எடுத்த இந்தியா, சென்னையில் இருந்து கொழும்புக்குக் குழாய் வழி மூலம் எண்ணை அனுப்பும் திட்டம் ஒன்றையும் நடைமுறைப்படுத்த உள்ளது. உள்ளூர் பெட்ரோல் விநியோகத்தையும், அதை கடை வைத்து விற்கும் உரிமையை இந்திய மூலதனத்துக்கு கொடுக்கும் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் பொருட்களின் விலையைத் தீர்மானிக்கும் "உலக வர்த்தக நிறுவன விலைமதிப்பீட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இறக்குமதி பொருளுக்கு விலைமதிப்பீட்டை ஆறு வழிமுறைகள் ஊடாக சர்வதேச சந்தை விலைக்கு இசைவாக மதிப்பீடு செய்ய ஒப்பந்தம் வழிவகுக்கின்றது. முதல் முறை சாத்தியமாக விட்டால் ஒழுங்கு முறைப்படி கையாள இந்த ஆறு வழிமுறைகள் கோருகின்றது. அத்துடன் உலகமயமாக்கல் விதியின் அடிப்படையில், சர்வதேச விலைக்கு இசைவாக



விலையைத் தீர்மானிக்க, இறக்குமதியாக்கும் தனியாருக்கு இந்த ஒப்பந்தம் அதிகாரத்தை அளித்துள்ளது. அதாவது அரசுக்கு வெளியில் இது சுயமாக விலை நிர்ணயத்தைச் செய்யும் அதிகாரத்தைக் கொண்டது.

சமாதானம் அமைதி என்ற பெயரில் எந்தச் சத்துமில்லாத நஞ்சுப் பானமான கொக்கோகோலாவைத் தமிழ் தேசியத்துக்கும், யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் சத்துள்ள பழங்கள் பதனிடப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய புதிய தொழிற்சாலைகள் போடப்படுகின்றன. தமிழ்த் தேசிய வீரர்களின் தேசியத் தியாகத்தின் கல்லறைகள் மேல் செய்த துரோகம் மூலம், நடைமுறைக்கு வருகின்றது. ஏன், யாழ் கொக்கோகோலா தரகர்களாகத் தாம் மட்டும் இருக்கும் முயற்சியில், தேசிய வீரர்கள்(!) தமது அதிகாரத்தை பாவிக்க முயல்கின்றனர். தேசியக் கல்லறைகள் மேல் உலகக் கொள்ளைக்காரர்கள் அமர்ந்து உல்லாசம் செய்ய, யாழ்குடாவில் 50 அறைகள் உள்ளடங்கிய நட்சத்திர விடுதி ஒன்றை அமைக்க 35 கோடி ரூபா முதலீடு செய்ய உள்ளனர் என்ற அறிவுப்புகள் வெளியாகியுள்ளது. ஏகாதிபத்தியங்கள் தத்தம் முதலீடுகளுடன் இலங்கையைச் சூறையாட இந்த "அமைதி சமாதானம்" என்ற முகமூடியைப் பயன்படுத்தி வருகின்றது. யுத்தமா? அமைதியா? என ஏகாதிபத்தியத் "தேசியம்" பேசும் தேசிய வாதிகள் வம்பளந்து கொண்டு எலும்புக்காகப் போடும் சண்டையில் குளிர் காய்ந்தபடி, தேசத்தின் உயிர் உள்ள சதைகளையும் அதன் ஆற்றல்களையும் உயிருடன் கொன்றே கொள்ளையிட்டுச் செல்வது அதிகரித்து வருகின்றது. இது விரிவான வகையில் வடக்கு கிழக்கு உட்பட எங்கும் புற்றீசல் போல் பரவிப் படருகின்றது. மக்களின் தேச வளங்கள், அவர்களின் உயிருள்ள உழைப்பு ஆகியவை மூலதனத்தின் நெம்புக்குள் சிக்கி நொருங்கிச் சிதைவதை நியாயப்படுத்துவதே தேசிய வாதமாகிப் போனது. இதுவே நாட்டை முன்னேற்றுகின்றோம் என்ற பொதுக் கோஷத்தின் கீழ் நடக்கும் கூத்து ஆகும். இதுவே இன்று அமைதி - சமாதானம் என்ற பெயரில், உலகமயமாதலாக உள்ளது.

இந்த "அமைதி சமாதான"த்தைக் கொண்டாடவும், சொகுசாக மக்களின் உழைப்பை மலிவாக அனுபவிக்கவும், பிஞ்சுக் குழந்தைகளைப் பாலியல் பண்டமாகக் குதறிச் சூறையாடவும் 2002ம் ஆண்டு, இலங்கைக்கு 4 லட்சம் வெளிநாட்டவர் - உல்லாச பயணிகள் வந்தனர். செப்டம்பர் மாதம் மட்டும் 33000 பேர் இலங்கை வந்தனர். இது முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போது 180 சதவீதம் அதிகமாகும். இந்த "அமைதி சமாதான"த்தைக் கொண்டாடவும் அனுபவிக்கவும் 2003 இல் 5 லட்சம் உல்லாச பயணிகள் இலங்கை வருவார்கள் என அரசு மதிப்பிட்டு அதற்கான தயாரிப்புகளை ஊக்குவிக்கின்றது. உல்லாசம் கொடி கட்டி பறக்கும் நிலையில், மக்கள் அவர்களுக்குக் கைகட்டி சேவை செய்து வாழக் கோருவதே இன்றைய "அமைதியும் சமாதானமுமாகும்." மக்கள் சுயமாகச் சுய ஆற்றலுடன் உழைத்து வாழ வழியற்று, மற்றவர்களின் தயவில் அவர்களுக்குச் சேவை செய்து, கை கட்டி வாழ உல்லாசத்துறை மட்டும் கோரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் நாட்டை மட்டும் விற்கவில்லை, மக்களும் ஏலம் போட்டு விற்கப்படுகின்றனர். உலகப் பணக்காரர்களுக்குச் சேவை செய்ய, இலங்கையில் இருந்து வேலைக்காரர்களாக எமது மக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். நவீன அடிமை முறையுடன் கூடிய நவீன கொத்தடிமைகள் உருவாக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். சொந்த இன்ப துன்பங்களை விடுத்து, ஒரு இயந்திரப் பொம்மை பணிப் பெண்களாக, நவீன பாலியல் சேவை சார்ந்தும் இந்த ஏற்றுமதி இலங்கையின் புதிய தேசியக் கொள்கையாகியுள்ளது.. 2003 இல் 2.25 லட்சம் இலங்கையரை அரபு நாடுகளில் அந்தப்புரங்களில் சேவை செய்ய அனுப்பப்படுவார்கள் என, அரசு பெருமையாக அறிவித்துள்ளது. இதில் 80 சதவீதம் பெண்களுக்கு உரிய சேவை என அறிவித்துள்ளனர். மொத்தமாக அரபு அந்தப்புரங்கள் முதல் மூலதனத்தின் தூசுகளைத் துடைக்கும் அடிமையாக 12 லட்சம் பேரை நாடு கடத்தியதை பெருமையுடன் அரசு அறிவிக்கின்றது. இப்படி நாடு கடத்தியவர்களில் 30 சதவீதம் பேர் சிங்கப்பூர், கொங்கொங், மாலத்தீவு, கிரேக், மற்றும் இத்தாலியிலும் சேவைத் தொழிலில் உள்ளதாக பீற்றுகின்றனர். இந்த நவீன அடிமை சேவைத் துறையில் 80 சதவீதம் பேர் பெண்களாவர். அத்துடன் 60 சதவீதமான அடிமைத் தொழில் - வீட்டுப் பணி பெண்களுக்குரியதாக உள்ளது. சவுதியில் 2.9 லட்சம் பேரும், குவைத்தில் 1.4 லட்சம் பேரும், ஐக்கிய அரபியாவில் 1.15 லட்சம் பேரும் இந்த அடிமைத் தொழில் சார்ந்த இலங்கையர், எந்த அடிப்படை உரிமைகளுமற்ற நடைப்பிணங்களாக உழைக்கின்றனர். உண்மையில் இவை அனைத்தும் இலங்கையில் கூர்மையாக உள்ள வர்க்கப் போராட்டத்தைப் பின் தள்ளும் ஒரு உத்தியாக அரசு ஊக்குவிக்கின்றது.

ஒரு புறம் மக்களை நாட்டை விட்டு வெளியேற்றி நக்கிப் பிழைக்க வைக்கும் அரசு, இதை மேலும் துரிதமாக்க வெளிநாட்டு மூலதனத்துக்குக் கம்பளம் விரித்து வரவேற்கின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2001 இல் 8 கோடி டொலராக (800 கோடி ரூபா) இருந்தது. இது 2002 இல் 30 கோடி டொலராக (அண்ணளவாக 3000 கோடி ரூபா) இருக்கும் என மதிப்பிடப்பட்டது. நேரடியாக கொள்ளையிடும் முறை ஒருபுறம் நிகழ, கூட்டுச் செயல் திட்டங்கள், கடன் திட்டங்கள் என பல உருவாக்கப்படுகின்றன. கொள்ளையடிப்போர் வசதியாக, இலகுவாக வந்து இறங்கவும், உல்லாசப் பயணங்களை இலகுவாக நடத்தி நாட்டைக் கற்பழிக்க வருவோருக்காகவும், புதிதாக முத்துகம பிரதேசத்தில் 25,000 ஏக்கர் நிலத்தில் புதிய சர்வதேச விமானத் தளம் ஒன்றை அமைக்க இந்த சமாதானம் கோருகின்றது. நவீன வசதிகளுடன் விமானம் மூலம் கொள்ளை அடிக்க வருவோரையும், கொள்ளை அடித்ததை வேகமாக நாட்டை விட்டு கடத்தவும் அதிவேகப் பாதை அமைக்கவும், உள்ளூர் வீதி போக்குவரத்துகளை நவீனப்படுத்தவும் உலக வங்கி கோருகின்றது. இதன் அடிப்படையில் கட்டுநாயக்க கொழும்பு அதி வேகப் பாதை அமைக்கப்படுகின்றது. இதற்காக வீதிக்கு அருகில் வாழ்ந்த 12 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்த மண்ணில் இருந்து புடுங்கியதுடன், அவர்களின் வாழ்வின் அடிப்படை ஆதாரங்களைப் பறித்துத் துரத்தப்படுகின்றனர். கொள்ளையடிப்பைத்



துரிதப்படுத்த வீதிகளை நவீனப்படுத்த ஆசியாவங்கி 5.65 கோடி டொலரை (அண்ணளவாக 565 கோடி ரூபாவை) ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் 980 கி.மீற்றர் வீதியை நவீனப்படுத்தவும், 12 சதவீதமான உள்ளூர் வீதிகளை நவீனப்படுத்தவும் உலகமயமாதல் கோருகின்றது. இந்தப் பணத்தை அரசு மீளக் கொடுக்கவும், வட்டி கட்டவும் மக்களைச் சுரண்டக் கோருகின்றது. மேலும் வீதி அபிவிருத்தி என்ற பெயரில் ஜப்பான், விசேட நிதியை வேறு வழங்கியுள்ளது.

நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில், குறித்த துறை சார்ந்த கடன்கள் மூலம் அத் துறைகளை ஆக்கிரமிக்க ஏகாதிபத்தியங்கள் தாராளமாகத் தன்னை ஒன்று இணைக்கின்றது. பிரஞ்சு ஏகாதிபத்தியம் அநுராதரபுரம் நீர் தேக்கம் ஒன்றை அமைக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. 330 கோடி ரூபா செலவில் 21,000 கன மீற்றர் அளவுடைய நீர் தேக்கமாக இது அமையவுள்ளது. இலங்கையில் உள்ள 20,000 சிறு உற்பத்திகளுக்கு 6 கோடி அமெரிக்க டொலர் (அண்ணளவாக 600 கோடி ரூபா) கடன் வழங்க உள்ளதாக ஆசியா அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது. இதன் மூலம் சிறிய உற்பத்திகளைக் கைப்பற்றவும், அழிக்கவும் இந்தக் கடன் அவசியமானதாக உள்ளது. ஜப்பான் அம்பந்தோட்டை நீர் விநியோகத் திட்டம் ஒன்றுக்கு 111.25 கோடி ரூபாவை வழங்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. ஜப்பானிடம் இருந்து 6 வேலைத் திட்டத்துக்கு 260 கோடி ரூபா கடன் வாங்கும் ஒப்பந்தம் ஒன்றை அண்மையில் செய்துள்ளனர். 1.26 கோடி டொலரை (126 கோடி ரூபாவை) ஜப்பான் கண்ணிவெடி அகற்றல் உட்பட அவசரத் தேவைக்கு வழங்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. நோர்வே 2003 ஆண்டில் சென்ற வருடத்தை (2002) விட மூன்று மடங்கு நிதியைச் சமாதானத்தின் பெயரில் லஞ்சமாக வழங்கவுள்ளது. அதாவது 3 கோடி டொலர் (300 கோடி ரூபா) பணத்தை வழங்கவுள்ளது. இது 2002 இல் 1.1 கோடி டொலரை (110 கோடி ரூபா) மட்டுமே வழங்கியது. இப்படி எண்ணிலடங்காத லஞ்சங்கள், கடன்கள் இலங்கைக்குத் தாராளமாக கொடுக்கப்படுகின்றது. இவை அனைத்தும் எமது மக்களைக் கொள்ளையடிக்கவும், சூறையாடும் நிபந்தனைக்கும் உட்பட்டே செயல்படுத்தப்படுகின்றது.

இதனால் மக்கள் தமது அடிப்படை வாழ்வை இழந்து வருகின்றனர். தமது இயற்கை வளத்தைச் சூறையாடலுக்குப் பறி கொடுக்கின்றனர். 1970ம் ஆண்டு இலங்கையில் இருந்த 40 சதவீதமான காட்டுப்பகுதி இன்று 22 சதவீதமாகக் குறைந்து காணாமல் போய்விட்டது. இனச் சூறையாடல் சார்ந்தும், நிலப்பிரபுத்துவத்தையும் அது சார்ந்த அரசையும் நிலத்துக்கான வர்க்கப் போராட்டத்தில் இருந்து பாதுகாக்க நடத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் காட்டை அழித்தது. உலகமயமாதல் உலகச் சந்தை மீதான ஆதிக்கத்தைக் கைப்பற்றியவுடன், ஏகாதிபத்தியங்கள் நாட்டை விபச்சார நிலைக்குக் கொண்டு வந்தது. இதனால் இயற்கையான காட்டின் வளங்கள் முதல் இயற்கையைப் பேணல் என்பதுவரை தொடர்ந்து அழிந்து சிதைந்து போகின்றது. இது போன்று 2002 இல் புதிதாக ஒரு லட்சத்து 13ஆயிரத்து 351 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் 18 லட்சத்து 92 ஆயிரத்து 367 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் 9,23,467 ஆகும். இயற்கையை வேகமாக நஞ்சாக்கும் லும்பன் வாழ்க்கையின் உதிரிச் சின்னமாக, நவீன நகர்ப்புற வாழ்வின் சின்னமாக மோட்டார் சைக்கிள் மாறி உள்ளது. அமைதி சமாதானம் என்ற பெயரில் 2002-இல் 50,000 மோட்டார் சைக்கிள்கள் புதிதாகப் பதிவாகியுள்ளது. மூலதனம் சந்தையில் நல்ல வர்த்தகமாக மாறியுள்ளதை இது காட்டுகிறது. இதை நாம் மூன்றாம் உலகின் அனைத்து நாடுகளிலும் இந்த வக்கிரத்தை காணமுடியும். இது மிக அபாயகரமானதாகவும் சுற்றுச்சூழலை வேகமாக அழக்கும் தன்மைக் கொண்டது. உண்மையில் அதிரவைக்கும் இந்த சந்தை வேகம், இலங்கையின் சுற்றுபுறத்தையே புகை மண்டலமாக்கி நஞ்சாக்குகின்றது.

எங்கும் எல்லாத்துறையிலும் மக்களின் வாழ்வு என்றுமில்லாத அழிவைச் சந்திக்கின்றது. நவீன உல்லாச கனவு தேசத்தின் அடிப்படை வாழ்வுக்குப் புறம்பாகத் தோன்றி வளர, வெம்பிய ஒரு சமூகப் பிரிவை உருவாக்கின்றது. இந்த உல்லாச வாழ்வை எண்ணி அதில் வெம்பிச் சிதைந்தோர் நாட்டின் தேசிய சின்னமாக மாறுகின்றனர். இலங்கையில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் போதைவஸ்தைப் பயன்படுத்தும் அடிமையாகியுள்ளனர். உலகில் மிகக் கூடிய தற்கொலை செய்யும் பிரதேசமாக இலங்கை மாறிவிட்டது. யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களை விட, தம்மைத் தாம் கொன்றோர் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. 1995-இல் 8,519 தற்கொலைகள் நடந்துள்ளன. இதில் ஆண்கள் 6,256 பேரும் பெண்கள் 2,263 பேருமாவர். 1996-இல் 7,344 தற்கொலைகளும், 1997, 1998, 1999-ஆம் ஆண்டுகளில் முறையே 6,418, 4,492, 8,897 தற்கொலைகளும், 2000, 2001-இல் முறையே 5,414-யும், 5,555 தற்கொலைகளும் நடந்தன. ஹாவாட் மருத்துவ அறிக்கை ஒன்று இலங்கையின் தற்கொலை வீகிதத்தின் உயர் தன்மையை இட்டு எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையில் ஒரு வருடத்தில் 1 லட்சம் தற்கொலை முயற்சி நடைபெறுகின்றது என்று அந்த அறிக்கை எச்சரிக்கின்றது. இலங்கையில் சராசரி தற்கொலை விகிதம் ஒரு லட்சத்துக்கு 55 ஆக அதிகரித்துள்ளது. மேற்கத்திய ஆய்வுப்படி 10 தற்கொலை முயற்சிக்கு ஒரு தற்கொலை நடப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 1950-க்கும் 1990-க்கும் இடையில் தேசிய தற்கொலை வீதம் 11 மடங்காக அதிகாரித்துள்ளது. இலங்கை சுமித்ரயோ சங்கம் செய்த ஆய்வில் நாள் ஒன்றுக்கு 23 பேர் தற்கொலை செய்ய முயல்கின்றனர். இதில் 20-30 வயதுக்கிடையில் இருப்போர் அதிகமாகும். 1995-இல் இந்த வயதுடையோர் 2,030 பேர் தம் உயிரை தற்கொலை செய்து இறந்தனர். வருடாந்தரம் 10,000 பேர் தற்கொலை செய்து விடுகின்றனர். பிரதேச ரீதியாக குருநாகல், பொலநறுவை, முல்லைத்தீவு, அநுராதபுரம், அம்பந்தோட்டை, மன்னார், மட்டக்களப்பு பகுதிகளில் அதிக தற்கொலை விகிதம் காணப்படுகின்றது.

2002 ம் ஆண்டு மட்டும் இலங்கையில் 2146 பேர் காணாமல் போயுள்ளனர். இதில் ஆண்கள் 1155 பேரும், பெண்கள் 991 பேருமாவர். அத்துடன் 456 சடலங்கள் அடையாளம் காணப்படாமல் அனாதையாக அழிக்கப்பட்டது. இதில் ஆண்கள் 370 பேரும் பெண்கள் 84 பேருமாகும்.



தேசத்தின் தேசிய சின்னங்களாக போகும் இந்த மனித அவலங்கள் இனயுத்தத்தின் வக்கிரத்தில் கருத்தரித்து உலகமயமாதலின் பிறப்பில் அலங்கரிக்கின்றது. இதை இன்றைய தேசியப் போரும் அதன் மேல் தன்னை நிலை நாட்டியுள்ள உலகமயமாதலும் தீர்க்கப் போவதில்லை. மக்கள் தம்மைத் தாம் மீட்க போராடாத வரை, இது போன்ற நூற்றுக்கணக்கான மனித அவலங்கள் தேசத்தின் விதைகளாகி, அதுவே சமுதாயத்தின் போக்காவது தவிர்க்க முடியாது.

மனித அவலங்கள் பெருக்கெடுத்து ஓட அந்த இரத்தத்தில் கால்களை நனைத்தபடி இனயுத்தம் ஒன்று நடக்கின்றது. இதற்கு இருவராலும் இடப்பட்ட கௌரவப் பெயர் “தேசிய” யுத்தம். தேச நலன்களை அடகு வைக்கும், அதையே திட்மிட்டு அழிக்கும் யுத்தம் கடந்த 12 வருட “தேசியத்தின்” தேச யுத்தத்தில் மொத்தமாக 17,423 பேர் இராணுவம் சார்ந்து இறந்துள்ளனர். 3736 பேர் காணாமல் போயுள்ளனர். புலிகள் தரப்பில் 17,648 பேர் இறந்துள்ளனர். மொத்தமாக கடந்த 12 வருடத்தில் 11,000 பேர் காணாமல் போயுள்ளதாக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. மக்களின் எந்த அவலத்தையும் தீர்க்க வக்கற்ற இந்த இனவாத யுத்தம், காணாமல் போனோர் பற்றிய ஒரு தலைபட்சமான புள்ளிவிபரத்தையே முன்வைக்கின்றது. காணாமல் போனோர் பட்டியலை யுத்தத்தின் ஒட்டு மொத்த வரலாற்றில் இரு தரப்புக்கும் எதிராகச் செஞ்சிலுவைச் சங்கம் தயாரிக்கவில்லை. இனம் தெரியாத படுகொலைகளைச் சார்ந்த விசாரணைகள் செய்யப்படவில்லை. புதைகுழிகள் இரண்டு தரப்பாலும் உருவானது என்ற அடிப்படையில், புதைகுழிகள் மேல் விசாரணை தொடர்வதில்லை. உண்மையில் இவை எல்லாம் மோசடி நிறைந்த மக்களை ஏமாற்றுகின்ற சமாதானத்தின் பெயரில் நடக்கும் கண்துடைப்பு நாடகங்களே ஆகும்.

சமாதானம் அமைதி தீர்வு என்ற நாடகத்தின் பின், இனவாதத்தின் உண்மை முகம் என்ன? 1989-ஆம் ஆண்டு முதன் முறையாக பொலீஸ் சேவையில் 350 மலையக இளைஞர்களைச் சேர்த்துக் கொண்ட இனவாதிகள், இன்றுவரை அவர்களைத் தமிழர் என்பதால் நிரந்தரமாக்கவில்லை. சமாதான சிம்மாசனமான உலகமயமாக்கத்தினை தொடர்ந்து இனவாதம் யுத்த வழிகளில் மட்டுமல்ல, எல்லா பண்பியல் நடைமுறை வழிகளிலும் திட்டமிட்டே கையாளப்படுகின்றது. ஏகாதிபத்தியப் பணத்தின் துணை கொண்டு இயங்கும் சர்வதேச அரசுசாரா நிறுவனங்கள் முதல், அரசின் திட்டங்கள் கூட இனவாதத்தை ஒழுங்கமைக்கின்றது. இந்த வகையில் இலங்கையில் நிரந்தர கருத்தடை செய்தோரில் 45 சதவீதம் பேர் மலையகத்தை சேர்ந்த பெண்களாவர். மற்றைய சமூகத்துடன் ஒப்பிடும் போது, இது இரண்டு மடங்கை விட அதிகமாகும். அத்துடன் ஆண்களும் திருமணமாகாத ஆண் பெண் என விரிந்த தளத்தில் இனக் கருத்தடை திணிக்கப்பட்டுள்ளது. இனவாதத்தை ஒழிக்கப் போவதாக கூறி சமாதனப் பந்தலின் பூசாரியாக அமர்ந்து மந்திரம் சொல்லும் அரசு, அண்மையில் பிரஜாவுரிமை தொடர்பாகக் கொண்டு வந்த இனவாதச் சட்டம் மலையக மக்களால் எதிர்க்கப்பட்டதால் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. ஆண்வழி ஆணாதிக்க அமைப்பு ஆண் வழி பிரஜாவுரிமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் அண்மைக்காலம் வரை அமுலில் கொண்டு இருந்தது. இது மலையக மக்களை நாடற்றவராக நிலை நிறுத்தும் மறைமுகமான ஒரு இனவாதச் சட்டமாகவும் இருந்தது. பிழைப்புத் தேடி நாட்டை விட்டு வெளியேறும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க, வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளின் பிரஜாவுரிமை பிரச்சனைக்குரியதாகியது. இதனால் தாய்வழி பிரஜாவுரிமைச் சட்டம் ஒன்றை அண்மையில் கொண்டு வந்த போது, அதில் இலங்கையில் பிறந்த நாடற்ற மலையக மக்களின் பிரஜாவுரிமையை வழங்க அரசு மறுத்து இருந்தது. இனவாதத்தை ஒழிக்க போட்ட பூசாரி வேடம் மீண்டும் ஒருமுறை நிர்வாணமாகியது. ஆட்சி அமைப்பில் பெரும்பான்மை அற்ற இனவாத சிங்கள அரசு, மலையக பிழைப்புவாதப் பொறுக்கிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சியில் நீடிக்க, இறுதியாக பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தை திருத்திக் கொண்டது.

சமாதானம் என்பது இனவாதப் பூசாரியின் கபடமான வாசனை திரவியமாகவும், சமாதனத்தின் குறிக்கோளை அரசு பூர்த்தி செய்வதில் பம்பரமாகவும் உள்ளது. உலக வங்கி நிபந்தனைக்கு இணங்க அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புவது ஒரு நிகழ்ச்சியாக அமுலுக்கு வந்துள்ளது. இதில் லஞ்சம் முதல் நிகழ்ச்சி நிரலாகியுள்ளது. இதன் முதல் படியாக அரசு ஊழியர் ஒருவர் எட்டு லட்சம் ரூபாவை நஷ்டஈடாகப் பெற்றுக் கொண்டு ஓய்வுபெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு கிடைக்காது. இல்லாவிட்டால் 3 லட்சம் ரூபா நஷ்டஈட்டுடன் ஒரு ஊழியர் ஓய்வு பெறலாம். அவர் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த லஞ்ச முறை மூலம் திட்டமிட்ட வகையில் அரசுதுறைகள் அழிக்கப்படுகின்றது. அரசுச் சேவையில் இருந்து ஆள்களைக் குறைக்கும் பணியைத் தற்காலிகமாக வடக்கு - கிழக்கில் நடைமுறைப் படுத்துவதில்லை என்று, அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருக்கிறது. வடக்கு கிழக்கில் அரசுத்துறை செயல்பட முடியாத அளவுக்கு பற்றாக்குறை நிலவுவதாலும், புலிகளின் மாற்று அதிகாரத்தைத் தகர்க்க இது அவசியமாக இருப்பதாலும் மட்டுமே இது விதிவிலக்காகியுள்ளது. அத்துடன் பேச்சு வார்த்தை மூலம் கிடைக்கும் ஆதாயத்தை, புலிகளுக்குச் சில சலுகை வழங்க இட வெற்றிடத்தை பேணுவது அவசியமாகின்றது. ஒன்று சேர்ந்த நிர்வாகம் மூலம், மக்களின் தோலை உரிக்க வடக்கு கிழக்கில் விதிவிலக்கு தற்காலிகமாகப் பேணப்படுகின்றது. நாட்டை விற்கும் ஜனநாயக பாராளுமன்ற நாய்கள், எஜமான் வீட்டில் சொகுசாக வாழ்வதற்கு உலகமயமாதல் தடைவிதிப்பதில்லை. ஏழை வீட்டின் கோவணத்தையே உருவக் கோரும் உலகவங்கி, உருவித் தரும் நாய்கள் ஆடம்பரமாக வாழ்வதை ஊக்குவிக்கின்றது. நவீன 225 ஆடம்பரக் கார்களை வாங்க 55 கோடி ரூபா பணத்தை ஒதுக்கிய போது, உலக வங்கி ஆட்சேபிக்கவில்லை. கொள்ளையடித்துத் தரும் பணத்தில் எச்சில் பணத்தை, கொள்ளையடித்துத் தரும் பொறுக்கிகள், நக்கி பிழைக்க விட்டு வைக்கின்றது. மக்களின் வாக்கைப் பெற்று அன்னியனுக்குச் சேவை செய்ய மக்களை கொள்ளையடித்து கொடுக்கும் எச்சில் பொறுக்கிகள், அதில் ஆடம்பரமாக வாழ்வதுமே ஜனநாயகமாகி விட்ட நிலையில், இந்த ஜனநாயகமும் அதன் அடிப்படையில் உருவான பாராளுமன்றமும் எமக்கு அவசியமற்றவைதான். உழைக்கும் மக்கள் சர்வாதிகார மன்றங்களை உருவாக்கவும், மக்களின் எதிரிகளை ஒழித்துக் கட்டவும் போராடுவதே இன்றையத் தேவையாக எம்முன்னுள்ளது.



இந்த நிலையில் சமாதானமா? யுத்தமா? என்பது ஒருவருட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு, பரவலாகப் பேசப்படும் விடயமாகியுள்ளது. தேன்நிலவாக நாட்டுக்கு வெளியில் நடந்த, நடக்கின்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஆரம்பத்தில் சமாதானம் என ஓங்கி ஒலித்த குரல்கள் மெதுவாக யுத்தத்தை நோக்கிய குரலாகப் பரிணமித்தது. ஆனால் தர்க்க ரீதியாக யுத்தத்தை நியாயப்படுத்தக் கூடிய அடிப்படையான வாதங்களை வைக்க முடியாத நிலையில், சிறிய சம்பவங்களைக் கூட யுத்தமாக மாற்றிவிட துடிக்கின்ற நிலைமை பரவலாக ஊதிப் பெருக்கப்பட்டது. இதைச் சமாதானத்தின் உறுதியான ஆதரவாளர்கள் என மார்பு தட்டும் நக்கிப் பிழைக்கும் கூட்டம், யுத்தத்தை நோக்கி வெம்பி வீங்க வைப்பதில் வக்கரித்து நிற்கின்றது. மக்களின் அடிப்படை வாழ்வியல் நலனுடன் தொடர்பற்ற சமாதானமும் சரி, யுத்தமும் சரி மக்களுக்கு எதையும் பெற்றுத் தரப் போவதில்லை. வாழ்வின் அவலத்தைத் தேசியமாக்கி, அதைப் பரிசாகத் தர நாலுகால் பாய்ச்சலில் எகிறித் திரிகின்றனர்.

இதை யுத்தத்தின் கடந்தகால வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது. 1983 முதல் யுத்தத்தினால் 40,300 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் வடக்கு-கிழக்கில் அழிந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் 23,000 பேர் இறந்ததுடன், 1,05,000 குடும்பங்கள் தமது இடத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அறிவித்துள்ளது. மொத்தமாக 60 முதல் 80 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. இன்றைய இனயுத்தம் மக்களின் சொத்து இழப்பைக் கூட எந்த விதத்திலும் மீட்கும் தகுதியைக் கூட இழந்துள்ளது. இதை எப்படி எந்த வழியில் மீட்பார்கள்? தேசத்தை, தேசிய பொருளாதாரத்தை அன்னியனுக்கு எதிரான போராட்டத்தில் கட்டி எழுப்ப தயாரற்ற தியாகங்களே தொடர்கின்றது. உலக வங்கியிடமும், ஏகாதிபத்திய நாடுகளிடமும் தேசியவாதிகள் கையேந்தி பிச்சையெடுத்து இதை மீட்க முடியுமா? 40,300 கோடி இழப்பு என்பது சொத்து இழப்பில் மட்டுமானதே. மனித உழைப்பு சார்ந்த இழப்பு முதல் உயிரை இழந்த இழப்பு வரை பல நூறு வடிவங்களில் பல ஆயிரம் கோடி இழப்புகளை இந்தப் புள்ளிவிபரம் உள்ளடக்கவில்லை. தமிழ் மக்களின் இழப்பு எல்லையற்றது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் இழப்பின் தொடரில், வெற்றியில் பாரிய வளர்ச்சியை அடைவதைக் குறித்தே நடத்தப்பட வேண்டும். ஆனால் ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யவும், அவன் கொள்ளையடிக்கவும் தமிழ் ஆட்சியைக் கோரும் தேசிய வீரர்கள், ஏகாதிபத்தியத்துக்கு வட்டி கட்டியே நாட்டை அழிக்க சபதம் ஏற்றுள்ளனர். அதன் பெயரில் தியாகங்கள், துரோகங்கள் தொடர்கின்றன. இழப்புகள் நிரந்தரமானவை மட்டுமின்றி, தொடர்ந்து அன்னியனுக்குச் சேவை செய்யும் பொருளாதாரக் கட்டமான அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை மேலும் துல்லியமாக நவீனப்படுத்துவதை அடிப்படையாக கொண்டே, சமாதானம் பற்றியும் யுத்தம் பற்றியும் பீற்றிக் கொள்கின்றனர்.

உண்மையில் ஆராய்கின்ற போது இலங்கையின் யுத்தமும் சரி, சமாதானமும் சரி பிரச்சனையைத் தீர்க்க தகுதியற்றவையாக இருப்பது எதார்த்தம். புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதன் உள்ளடக்கமும் மக்களின் நலனை முதன்மைப்படுத்த தவறி, புலிகளின் குறித்த நலன்கள் சார்ந்து உருவானவையே. இந்தச் சமாதான முயற்சி மக்களின் நலனைப் பின் தள்ளி, மக்கள் மேல் சுமையை பல மடங்காக்கியது என்பதே உண்மை. இருந்த போதும் இந்த ஒப்பந்தம் மக்களின் அடிப்படை நலனில் இருந்தே உருவாக்கப்பட்டதாக அரசு மற்றும் புலிகள் கூறினர். ஒரு ஒப்பந்தம் தத்தம் நலன் சார்ந்து உருவாக்கிய போதும், சில அனுகூலங்களை ஒரு பகுதி மக்கள் பெறுவது தவிர்க்க முடியாத விடயமாகின்றது. இதனால் மக்கள் நலன் சார்ந்த விடயத்தை உயர்த்தவும், மக்கள் விரோதப் போக்கை விமர்சிப்பதும் என்ற உள்ளடகத்தை அடிப்படையாகக் கொண்டே இதை அணுக வேண்டியிருந்தது, இருக்கின்றது.

மறுதளத்தில் இந்த ஒப்பந்தத்தை செய்தவர்கள் இந்த ஒப்பந்தத்தை மதித்து நடப்பது அடிப்படையான ஒரு விடயமாகும். இந்த வகையில் யுத்த நிறுத்த மீறல்களை கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டியதானது, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்துக்கு அடிப்படையானதாக யார் கருதினார்களோ, அவர்களின் அடிப்படைக் கடமையாகும். யுத்த நிறுத்த மீறல்கள் தான், இருக்கின்ற அமைதியைக் கடந்து யுத்தத்தைத் தொடங்க அடிப்படையாக உள்ளது. இந்த யுத்த நிறுத்த மீறலை யார் செய்தாலும் இரண்டையும் விமர்சிக்கத் தவறுகின்ற போது, சமாதானத்துக்கு எதிரான நிலைப்பாட்டைச் சாராம்சமாக கொள்வது வெள்ளிடைமலை. ஒரு தலைப்பட்சமாகக் கண்டிக்கும் போது, ஒரு பக்கம் சார்ந்து யுத்தத்தினைத் தொடங்க முனையும் போக்கு உண்மையான சமாதானத்துக்கு எதிரானதாக எதார்த்தத்தில் நிலவுகின்றது.

ஒரு யுத்த நிறுத்தம், சமாதானம் என்பவற்றில் அடிப்படையான நேர்மை அவசியமானது. அடிப்படையான நேர்மை இல்லாத வரை, அவை மக்களுக்கு எதிரான குறுகிய வக்கிரம் கொண்டவையாக இருப்பது எதார்த்தம். புரிந்துணர்வு ஒப்பந்தம் அது சார்ந்து யுத்த நிறுத்தம் ஊடாகச் சமாதானத்தை அடைய முடியும் எனக் கருதி மக்கள் தொடர்பு ஊடகங்களில் கருத்து உரைப்பவர்கள், நேர்மையாகச் செயல்படுவது எல்லாவற்றையும் விட மிக அவசியமாகும். அது இல்லாத வரை இதுவே யுத்தத்தின் ஊற்று மூலமாகிவிடும். நேர்மையற்ற யுத்தப் பிரச்சாரம் இன்றைய தேசிய அரசியலாகி, அதுவே சமாதான கோஷமாக உள்ளது. சமாதானத்தின் கோஷம் மக்களுக்கு எதிரான யுத்தமாக இருப்பது எதார்த்தமாக உள்ளது. ஒரு நாய் ஊளையிடத் தொடங்க, ஊரில் உள்ள நாய்கள் எல்லாம் ஊளையிடுவது போன்றே தமிழ்த் தேசிய அரசியல் மலடாகிக் கிடக்கின்றது. கட்சிகள், பத்திரிக்கைகள், எழுத்தாளர்கள் என எல்லா மட்டத்திலும் இந்த ஊளையிடல் ஒரு பகட்டுத்தனத்துடன் கூடிய, மக்கள் விரோதப் போக்காகப் பரவி வருகின்றது. ஊளையிடலுடன் தமது அரசியல் தனித்துவ நிலைப்பாடுகளைக் கூட மாற்றி மாற்றி, குட்டிக் காரணம் அடிப்பதில் சாதனை புரிகின்றனர்.



தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உள்ள நியாயமான சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகள் எதையும், புலிகளும் சரி அரசும் சரி, இந்த ஊளையிடும் போர்வழிகளும் சரி தீர்க்கப் போவதில்லை என்பதே எதார்த்தம். இந்த நிலையில் அமைதி அல்லது யுத்தம் எதுவாக இருந்தாலும், மக்களின் நலனை இது பூர்த்தி செய்யாத வரை, பாட்டாளி வர்க்கம் இரண்டிலும் எதையும் ஆதரிக்கப் போவதில்லை. யுத்தம் தொடங்கின் தமிழ் மக்களின் நலன்கள் ஒரு விதத்தில் சூறையாடப்படுமாயின், அமைதி வேறு ஒரு வடிவத்தில் தமிழ் மக்களின் நலன்களைச் சூறையாடுகின்றது. ஆனால் இந்த இரண்டு போக்கிலும் அரசும் சரி, புலிகளும் சரி மக்களுக்கு எதிராக இருப்பதாலும், யுத்தம் இதில் மிகக் கொடூரமாக இருப்பதாலும் சமாதானம் அதாவது அமைதி என்பது மக்களின் சொந்த போராட்டத்துக்குச் சாதகமானதாக இருக்கும். யுத்தம் தொடங்கின் மிகக் குறுகிய காலத்தில் 1000 பேருக்கும் மேற்பட்டோர் யுத்தம் அல்லாத வழிகளில், இரண்டு தரப்பினராலும் கொல்லப்படுவர். அரசு புலிகள் என்றும், புலிகள் துரோகிகள் என்றும் தம்முடன் முரண்பட்டவர்கள் என்ற ஒரு நீண்ட பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மக்கள் கொல்லப்படுவர். இதற்கான பட்டியலைச் சமாதானம் தயாரித்துள்ளது என்பதே எதார்த்தம். உண்மையில் அப்பாவி மக்கள் தனிப்பட்ட துப்பாக்கிகளின் வக்கிரத்துக்குக் காரணம் அறியாது பலியிடப்படுவர். சமாதானத்தில் இருந்து யுத்தம் தொடங்கும் போது வீதிகள் தோறும் பிணங்களை காண்பது தவிர்க்க முடியாது. இதை இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் ஒரு அரங்கேற்றமாக அரங்கேற்ற தயாராகவே உள்ளனர். மக்களின் துன்பங்களையும், துயரத்தையும் உற்பத்தி செய்யும் தேசமாக, தேசியமாக பரிணமிப்பதை விட அமைதி மேலானது.

சிங்கள பௌத்த இனவாதப் பாசிச அரசு ஏகாதிபத்தியப் பொம்மையாக இருந்த படி, தேச மக்களின் அடிப்படையான தேசிய உரிமைகளை அழிப்பதில் இனம் பார்ப்பதில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்று அனைத்து மக்களின் தேசிய உரிமைகளைச் சூறையாடுவதில் தன்னை முரண்பட்டுக் கொள்ளவில்லை. ஏகாதிபத்தியக் கொள்ளைக்குத் தேசத்தைத் திறந்து விபச்சாரம் செய்ய வைப்பதே அரசின் மையமான ஒரு குறிக்கோளாகும். இதைச் செய்யும் போது, உள்நாட்டில் மோதலை உருவாக்குவதன் மூலம் பொம்மைப் பாத்திரத்தைத் தொடர்ச்சியாகத் தக்கவைக்க முடியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காலனிகளை பிரித்தாளும் தந்திரமான கோட்பாட்டுக்கு இணங்க, இனங்களுக்கு இடையில் வேறுபட்ட சலுகைகளை வழங்குவதன் மூலம் மோதலைத் திட்டமிட்டு நடத்தியது. இந்தக் குறிப்பான சலுகையை யார் பெறுவது, யார் இழப்பது என்பதை இனவாத பௌத்த சிங்கள அரசு தீர்மானித்த போது, தமிழ் மக்கள் இதை இழந்தனர் அல்லது பறி கொடுத்தனர். இது ஒரு யுத்த நிலைக்கு நகர்ந்த போது, தேசத்தின் நலன்களை ஏகாதிபத்தியங்கள் கொள்ளை அடிப்பதை யாரும் கண்டு கொள்ளவோ அல்லது அதற்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடவோ இல்லை. சலுகைகளை யார் பெறுவது என்பதில் தொடங்கிய போராட்டம், அதன் எல்லையைத் தாண்டவில்லை. இரண்டு பகுதியும் ஏகாதிபத்தியச் சூறையாடலை அடிப்படையாகக் கொண்ட ஒரே கொள்கையை கொண்டிருப்பதுடன், இந்தக் கொள்ளை தொடர்வதை அரசும் சரி புலிகளும் சரி எதிர்க்கவில்லை. அதை வாழ்த்தி வரவேற்கின்றனர். இந்த ஒரே ஒரு அடிப்படையில் தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒருவருட பூர்த்தியைத் தாண்டியும் ஊசலாடிக் கொண்டு போகின்றது.

கடந்த எமது போராட்டத்தின் மக்கள் விரோதப் பண்பையும், பாசிசக் கூறுகளையும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்படி இணங்கி அனுசரித்து போகின்றது என்பதைப் புரிந்து கொள்ளும் போதுதான், அமைதியையும் அதன் நீடிப்பையும் புரிந்து கொள்ள முடியும். நிதி மூலதனம் ஆதிக்கத்துக்கு வரும் போது, அதன் பிரதிநிதியாகப் பாசிசம் உருவாகின்றது. இந்த வரலாற்று போக்கில் தான் நாம் புலிகளையும் புலித் தேசியத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். முதலாளித்துவப் புரட்சி நடைபெறாத நாடுகளில், நிதி மூலதனத்தைத் திரட்டும் தேசிய வளத்தைப் பெற முடியாது. இதனால் இந்த நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளின் பொம்மை அரசுகளாக, நிலப்பிரபுத்துவத் தரகு நலன் சார்ந்த பாசிசத்தைக் கட்டமைக்கின்றது. இதற்கு ஏகாதிபத்திய நிதி மூலதனம் அடிப்படையாக இருப்பதுடன், வழிகாட்டுகின்றது. மக்களின் தேசிய வளங்கள் அழிக்கப்படும் வரலாற்றில், இதற்கு எதிரான வர்க்கம் போராட்டம் கூர்மையாகின்ற போது பாசிசம் அதன் ஆணையாகின்றது.

புலிகள் தரகு முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ வர்க்கம் சார்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து அதன் நீட்சியில் உருவான ஒரு இயக்கமே. தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற அரசியல் சதிராட்டத்தில் சரணடைவையும் துரோகத்தையும் தமிழ் மக்களுக்குத் தீர்வாக்கிய போது, புலிகள் (மற்றைய இயக்கங்களும் தான்) கூட்டணியின் பாராளுமன்ற வழிகளில் இருந்து மட்டும் வேறுபட்டு ஆயுதப் போராட்டத்தை முன்வைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணியை இந்த எல்லைக்கு அப்பால் விமர்சிக்கவுமில்லை, முரண்படவுமில்லை. மக்கள் வாழ்வியல் பற்றிய கூட்டணியின் அதே கொள்கையை அப்படியே புலிகள் கொண்டிருந்தனர். கூட்டணியின் தொடர்ச்சியாக புலிகள் ஆயுதத்தைக் கூடுதலாக வைத்திருந்தனர். இதைப் புலிகளின் தத்துவ ஆசிரியர் பாலசிங்கமே கூறத் தயங்கவில்லை. "... சில பேர் என்னிடம் கேட்டார்கள், செல்வநாயகம் ஐயாவும் இதைத்தான் கேட்டார். சமஷ்டியை அவங்கள் கொடுக்கவில்லை. பிறகு நீங்கள் ஏன் இதைக் கேட்கிறியள் என்று. அவர்கள் ஏமாற்றி விட்டால், என்ன செய்வீர்கள் என்று. நான் சொன்னன் ஏமாற்றட்டும். அதைத் தான் நாங்களும் எதிர்பார்க்கிறோம். செல்வநாயகத்தார் என்ன வைத்திருந்தார். அவர் அகிம்சையை ஆயுதமாக வைத்திருந்தார். நாங்கள் பீரங்கிகளை அல்லவா வைத்திருக்கின்றோம்"

உண்மையைப் பளிச்சென வெகுளித்தனமாகப் பாலசிங்கம் போட்டு உடைக்கின்றார். அகிம்சை அல்லது ஆயுதம் இது தான் கூட்டணியையும் புலிகளையும் வேறுபடுத்துகின்றது. அரசியல் ரீதியாக அல்ல. மக்களின்



நலன்களில் இருந்து அல்ல. ஆயுதமும் அது சார்ந்த அதிகாரமும் வரும் போது, தரகு மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கக் கண்ணோட்டம், குணாம்சம் ரீதியான மக்கள் விரோத போக்கை பண்பியல் ரீதியாக வளர்ச்சி பெறவைக்கின்றது. புலிகளின் ஆரம்ப காலச் செயற்பாடுகளில் ஆயுதம் முதன்மை அம்சமாக மாறியது. ஆயுதமே அனைத்தும் என்ற கொள்கைக்கு இணங்க ஆயுதத்தை முதன்மைப்படுத்தி, அதன் மொழியில் ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தை அதன் சமூக பொருளாதார எல்லைக்குள் சரணடைய வைக்கப்பட்டது. இந்த ஆயுதமும் அதன் அதிகாரத்திலும் அடிப்படையாக உருவான அரசியல் அதிகாரம், தரகு நிலப்பிரபுத்துவ வர்க்கம் சார்ந்து தேசிய பொருளாதார வாழ்வியலைச் சிதைப்பதில் தொடங்கியது.

ஆரம்பத்தில் நிதி சேகரிப்புகள், ஆயுதம் திரட்டுவது முதன்மைக் கூறாகச் செயல்பட்ட போக்கு, படிப்படியாக நிதி மூலதனம் சார்ந்த மூலதனங்களைத் திரட்டுவதில் கூர்மைப்பட்டுள்ளது. போராட்டமும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் தமது தேவைக்கு எப்போதும் சொந்த உழைப்பு சார்ந்து இருக்கவில்லை. போராட்டத்தில் உழைப்பு நிராகரிக்கப்பட்ட நிலையில், தமது தேவைக்கு மக்கள் தமது சொந்த உழைப்பை அர்ப்பணிக்கக் கோரப்பட்டது. தமது தேவை எதுவாக இருந்தாலும், அதை அபகரிக்கும் உரிமையைத் தேசவிடுதலை இயக்கங்கள் தாமாகவே துப்பாக்கி முனையில் பெற்றுக் கொண்டன. சொந்த உழைப்பைத் தர முடியாது என சொன்னவர்கள், அதை எதிர்த்து போராடியவர்கள் எல்லோரையும் அன்று முதல் இன்று வரை பல ஆயிரம் பேரை பலிகொண்டது. போராட்டத்தின் ஊடாக வளர்ச்சி பெற வேண்டிய பல்வேறு தேவைகள் கூட, காலப்போக்கில் அபகரிப்பதை அடிப்படை சித்தாந்தமாகக் கொண்டே பறிக்கபட்டது. வெகுசன அமைப்புகள், வெகுசனப் பண்பாட்டு கலாச்சார உற்பத்தி கூறுகளைக் கூட பலாத்காரமாகத் தமதாக்கினர். தமக்குச் சார்பான அறிக்கைகளைக் கூட இன்று அபகரிப்பு மிரட்டல் என்ற வழிகள் ஊடாக பெறப்படுகின்றது. ஆரம்பம் முதலே நிதி திரட்டல் முறை சார்ந்து தனித்துவமான அதிகாரத்தை நிறுவுவதற்கு உந்தித் தள்ளியது. மக்களின் தேசிய உற்பத்திகளை யார் சூறையாடுவது என்ற அடிப்படையான காரணத்தைக் கொண்டு, மற்றய இயக்கங்கள் அழிக்கப்பட்டன.

நிதி பெறுவது, பங்கீடு என்பது புலிகளின் மையமான ஒரே குறிக்கோளாக அதுவே அரசியலாக மாறிவிட்ட நிலையில், மக்களுடனான தொடர்பு இந்த ஒரு வழிக்குள் மட்டுமே என்ற நிலைக்கு இன்று சீரழிந்து விட்டது. நிதி திரட்டிடவே "யுத்தத்தை தொடரவும் இராணுவத்தை வெற்றி பெறவும்" என்ற வாக்குறுதி சார்ந்து, மக்களிடமிருந்தும் பணம் பெறப்படுகின்றன. நிதி முதன்மைக் கூறாக இருப்பதாலும், உழைப்பைச் சூறையாடவும் பாசிசக் கட்டமைப்பு அவசியமானதாக மாறிவிடுகின்றது. மக்களின் சுயமான சிந்தனை, செயல்பாடுகள், நிதியை அடிப்படையாகக் கொண்ட இயக்கத்துக்கு எதிரானதாக இருப்பதால், அதை மறுப்பதே தேசியமாகச் சித்தரிக்கப்படுகின்றது. இந்த நிதி மூலதனம் மீதான புலிகளின் காதல், ஏகாதிபத்தியத்துக்கு உவப்பான விடையமாக இருக்கின்றது. ஏகாதிபத்தியம் இதன் அடிப்படையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்கியது. அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வை பின் தள்ளிய படி, நிதி மூலதனம் சார்ந்து சமாதானம் என்ற கோசம் முன்னிலைப்படுத்தப்பட்டது. நிதி மூலதனத்தை தாராளமாக விரிவாக்கவும் ஏகாதிபத்தியங்கள் தாரை வார்க்க தயாரான நிலையில், புலிகள் அதை நோக்கி கையேந்திய நிலையில் பேச்சு வார்த்தைகள் தொடருகின்றது. இதற்கிடையே அடிமட்டங்களில் இருந்து எழும் முறுகள் சார்ந்து தலைமை வாலை முறுக்கினாலும், நிதி மூலதனத்தின் முன் வாலைச் சுருட்டிக் கொண்டு பணிய வைக்கப்படுகின்றது. பிரபாகரன் அண்மையில் உலக வங்கி உலக மக்களுக்கு கடன் கொடுத்து, அவர்களின் வளர்ச்சிக்குச் சேவை செய்வதாக பாராட்டிய போது, புலிகளின் துரோகம் துல்லியமாக நிர்வாணமாகியது. உலக வங்கி உலக மக்களுக்கு எதிராக இருப்பதுடன், மக்களைக் கொள்ளையடித்து பணத்தை குவிப்பதுடன், அதைக் கொண்டு மக்கள் அடிமைப்படுத்தப்படுகின்றனர். இதையே உலகளவில் மக்கள் இயக்கங்களும் அவர்களின் போராட்டங்களும் பிரகடனம் செய்கின்றன. ஆனால் புலிகள் வாலைச் சுருட்டிக் கொண்டு உலக வங்கியின் கால்களை நக்கத் தயாராக இருப்பதை பிரகடனம் செய்கின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆயுள் நீடிப்பதன் மர்மம், நிதி மூலதனத்தில் தங்கி கிடக்கின்றது.

தமிழீழப் பகுதிகளை நோக்கி குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி நிதி மூலதனம் பாரிய அளவில் முதலிடவும், வழங்கவும் ஏகாதிபத்தியங்கள் தயாராக இருக்கின்றன. இதை அடிக்கடி புலித் தலைமைக்கு நேரடியாகச் சந்தித்து உலக நாடுகளின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டி வருகின்றனர். இந்த நிதி மூலதனத்தை இடுவதற்கு ஆயுதத்தைக் கைவிடுவதுடன் கூடிய அமைதியான சூழலையும் நிபந்தனையாக வைக்கின்றது. நிதி மூலதனத்தை ஏகாதிபத்தியங்கள் இப்பகுதிகளில் முதலீடும் போது அதை மீளப் பெறுவதை புலிகள் உத்தரவாதம் செய்ய வேண்டியுள்ளது. லாபத்தைப் பெறவும், சுரண்டவும், வட்டியை அறவிடவும், முதலீட்டை மீள பெறுவதையும் புலிகள் எந்த வழியில் அதைப் பெற முடியும் என்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு யுத்தம் ஒரு தடையாக இருக்கக் கூடாது. இது மட்டும் தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆயுளை தீர்மானிக்கின்றது. அத்துடன் ஏகாதிபத்தியத்திடம் கையேந்தி எடுக்கும் தேசியப் பிச்சை சார்ந்த அரசியல், யுத்தத்தை நோக்கி நகர்வதைத் தடுக்கின்றது. உள்நாட்டுப் பொருளாதார அமைப்பை ஏகாதிபத்திய பணத்தில் கட்டமைப்பது என்று தீர்மானமாகிய பின்பு, ஏகாதிபத்தியங்கள் நடத்தும் சமாதானம் என்ற நாடகத்தை மீறி புலிகளால் ஒரு அடி தன்னும் நகர முடியாது. ஏனெனின் மீண்டும் யுத்தம் எனச் சென்றால் ஏகாதிபத்தியத்திடம் மீளக் கையேந்தும் அரசியலைச் செய்வது என்பது சாத்தியமில்லை. ஏகாதிபத்தியத் தயவுடன் மீற முடியுமே ஒழிய, எதிர்த்து அல்ல. இதை புலியின் அரசியல் தெளிவாகவே வரைந்து காட்டுகின்றது.

ஏகாதிபத்திய நிதி மூலதனத்தைப் பெறவும் அதை மீள வட்டியுடன் கட்டவும் அதற்குப் புலிகள் "தமிழீழத் தாயகத்தைத்" தியாகம் செய்யத் தயாராக உள்ளதை உணர்த்தி வருகின்றனர். இதற்கு எந்தத் தடை வரினும் அதைப் பூர்த்தி செய்யத் துடிக்கும் புலிகளின் நிலைப்பாடு தான், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீண்ட ஆயுளாக்கியுள்ளது. இந்த விடையில் இருந்து அரசு தனது



பொறுப்பை மெதுவாக கைவிட்டுவிடுகின்றது. நிதியைப் புலிகள் பெறவும், அதை மீளக் கட்டவும் உள்ள நிபந்தனைகள் உள்ளடங்கிய சர்வதேச நிபந்தனைகளைப் பற்றி அரசு பேசுவதை விட, சர்வதேச கொள்ளைக்காரர்களும் புலிகளும் பேசி முடிவு காணும் போது, இன்றைய அமைதி நிலையானதாக மாறிவிடும். இந்த முடிவு என்பது பேச்சு வார்த்தைக்காக கூடும் இடங்களில் நடப்பதில்லை. ஏகாதிபத்தியங்கள் நேரடியாகவே புலிகளுடன் இவை தொடர்பாகப் பேசி வருகின்றன.

இங்கு ஒரு பிரமையைத் திட்டமிட்டே புலிகளும் சேர்ந்து விதைக்கின்றனர். சர்வதேச நிதி இனாமாக அதாவது அன்பளிப்பாகக் கிடைப்பதாகவும், அதைத் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை என்ற மயக்கமான ஒரு பிரச்சாரத்தை திட்டமிட்டே பரப்புகின்றனர். தேசத்தை தேசியத்தை விற்று கையேந்தும் பிழைப்பவாத துரோகத்தை இதன் மூலம் திட்டமிட்டே மூடிமறைக்கின்றனர். கையேந்தி நிற்பதன் மூலம் ஏகாதிபத்தியமயமாதல் நியாயப்படுத்தப்படுகின்றது. ஏகாதிபத்தியங்களைக் கொடை வள்ளலாகக் காட்டும் இந்தப் பிரமைகள் எல்லாம், ஏகாதிபத்தியத்திடம் சோரம் போவதைப் பண்பாட்டு கலாச்சார ரீதியாகவே துரிதப்படுத்துகின்றது. உலகமயமாதல் உலகத்தைத் தனது கைப்பொம்மையாக்கி தனது நலன்களை திட்டமிட்டே செயல்படுத்தும் ஆதாரம், இந்த நிதி மூலதனத்தில் இருந்தே என்பதை மூடிமறைக்கின்றனர். வழங்கப்படும் கடன், கடனுக்கான வட்டி, வட்டியே மூலதனமாகவும் மறு வட்டியுமாகப் பெருகிச் செல்லும் இன்றைய நிலையில், நாடுகள் அடிமைப்படுத்தப்படுகின்றன. தேசங்கள் சொந்த தேசிய வளம் சார்ந்து நிலைத்த காலம் போய், கடன் வாங்கியே நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் காலகட்டம் 1980 களின் பின்னால் தீவிரமானது. தேசிய உற்பத்தி சார்ந்து மக்களின் நலன் என்ற கொள்கை கைவிடப்பட்ட நிலையில், கடன் வாங்கி நாட்டை விற்கும் உலகமயமாதலைப் புலிகள் அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். புலிகள் வாங்கும் நிதி, மீள மறுபடியும் தமிழ் மக்கள் தமது சொந்த உழைப்பில் இருந்தே கட்ட வேண்டும். கடன் வாங்குவதை ஊக்குவிக்க ஒரு தொகைப் பணம் இனாமாக வழங்கப்படும் என்பது உண்மையே. போதைவஸ்த்தை விற்பவன் அதை விற்க முன் இனாமாக கொடுப்பது போன்றே இதுவும். ஆனால் வாங்கும் கடனுக்கு வட்டி கட்டவும் மீளத் திருப்பி அளிக்கவும் வேண்டும். இந்த வட்டியையும், மீள திருப்பி கொடுக்கும் பணத்தையும் மக்களிடம் கறந்து தர புலிகள் உத்தரவாதத்தை வழங்கின், நிதி மூலதனம் எல்லையற்ற வகையில் ஊடுருவிப் பாயும். இதுவே சமாதானத்தின் அச்சாக உள்ளது. தமிழ் மக்களின் அபிவிருத்தி என்ற பெயரில் கடனை வாங்கவும், அதைத் திருப்பிக் கட்டவும், அதற்கான வட்டியைக் கொடுக்கவும் தயாராக புலிகள் இருக்கும் பட்சத்தில், தொடர்ச்சியாக கடனை வழங்க ஏகாதிபத்தியம் தயாராக உள்ளது. இதனடிப்படையில் உருவாகும் "சமாதானம்" பூத்துக்குலுங்கும்(!)

இந்த நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கை ஒன்றில் உலக வங்கி மனித வளர்ச்சிக்கு உதவும் வகையில், உலகளவில் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுவதாகப் பாராட்டி அறிக்கை விடுகின்றார். மேலும் உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவும் மக்களிடம் கறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியத்துக்குத் தாரை வார்க்கவும் தயாராக இருப்பதைப் பிரகடனம் செய்தார். உலக வங்கிக்கு எப்படி எங்கிருந்து பணம் வருகின்றது என்பது புலிகளின் தேசியத் தலைவருக்குத் தெரியாது இருந்தால், இராணுவ பாணியிலான புலனாய்வு நடத்துவதை விடுத்து மக்களை ஏலம் போட்டு விற்க அழைப்பது துரோகத்தனமானது. உலக வங்கி வைக்கும் உலகமயமாதல் என்பது, தேசியம் முன் வைக்கும் தேசத்துக்கு எதிரான ஒரு உருவாக்கம் என்பதைப் பிரபாகரன் இனியாவது புரிந்து கொள்ள மறுத்தால், இதுவரை செய்யப்பட்ட தியாகங்கள் எல்லாம் உலகமயமாதலின் சிம்மாசனத்தை நோக்கி ஏறும் செங்கம்பள படிக்கற்கள் தான். உலக நாடுகளுக்குக் கடன் கொடுத்து வசூலிக்கும் வட்டி முதல் வட்டிக்கு வட்டி வரை மக்களைச் சுரண்டி பெறப்படும் பணத்தையே மறு வட்டிக்குத் தருகின்றது. உலகளவில் மக்களின் அற்ப சேமிப்புகளை எடுத்தும், மக்களின் ஓய்வூதியங்களைக் களவாடியும், மக்களை ஏமாற்றி பெறும் காப்புறுதி பணத்தைச் சேகரித்து அறவட்டிக்கு விடுவதே உலக வங்கியின் பாத்திரம். மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை மீளப் பெரு மூலதனத்துக்குச் செல்லும் வண்ணம் வழங்குகின்றனர். வழங்கும் கடனை என்ன வகையில் எப்படி செலவளிப்பது, எந்த நாட்டில் இருந்து என்ன பொருளை என்ன விலைக்கு வாங்க வேண்டும் என்று நிபந்தனைகளை எல்லாம் உள்ளடக்கியது. உள்நாட்டு உற்பத்தியாக எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், யாருக்கு யார் செய்ய வேண்டும் என்ற எண்ணற்ற நிபந்தனைகளை உள்ளடக்கியதே உலக வங்கியினதும் சரி மற்றைய கடன்களினதும் வரலாறு. இருக்கின்ற தேசிய உள்ளடக்கங்களை அழித்து உலகமயமாதலை நிறுவுவதே உலகவங்கியின் சர்வதேச நிலைப்பாடாகும். வாங்கும் பணத்தை மீளக் கட்டுவதுடன், அதற்கு வட்டி கட்ட வேண்டும் என்பதையும் மூடிமறைத்தபடி தான், நிதி உதவிபற்றி அறிக்கைகள் மேல் அறிக்கை விடுகின்றனர். பணத்தை மீளக் கட்டுவதும், வட்டி கட்டுவதும் மக்களின் உழைப்பில் இருந்தே என்பதை தெரிந்து கொள்ளாத வரை, இந்தத் தேசியம் என்பது விபச்சாரமே. சொந்த வீட்டுப் பெண்களையே, பணத்துக்காக அற்ப சலுகைக்காக கூட்டிக் கொடுக்கும் அயோக்கியத்தனமே.

இந்த விபச்சாரம் சார்ந்த தேசியம் என்ன என்பதைப் பாலசிங்கம் தெளிவாகக் குறிப்பிடத் தவறவில்லை. "சுயநிர்ணய உரிமை என்றால் என்ன என்று ஐ.நா.சாசனத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து புதிய அர்த்த பரிமாணத்துடன் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து வரும் கோட்பாடு. முன்பு ஒரு சர்வதேச சட்டரீதியாக இருந்தது. இப்போது அனைத்துலக மக்களுக்கும் பொருத்தமான ஒரு மனித உரிமையாக இந்தக் கோட்பாடு விளங்குகின்றது" என்பதே அவர் குறிப்பிட்டது. ஐ.நா வரையறை என்பதும் காலத்துக்குக் காலம் மாறி இன்று அனைத்துலக மக்களுக்குப் பொருத்தமான மனிதவுரிமையாக மாறிவிட்டது என்பதும் மிகவும் தேர்ந்தெடுத்த மக்கள் விரோத தேசிய விரோதக் கூற்றாகும். சொந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்தையே, சொந்தத் தியாகத்தையே இப்படி யாரும் இவ்வளவு நேர்த்தியாகக் கேவலப்படுத்தி விற்கமுடியாது. இது அனைத்துலக மனிதவுரிமை என்பதன் மூலம், அனைத்துலகமும் சுரண்டப்படும் உரிமையை புலிகள் அங்கீகரிக்கின்றனர். மனிதவுரிமை என்பது ஐ.நாவின் உலக அகராதியிலும், புலிகளின் தேசிய அகராதியிலும் ஒன்றுபட்டுள்ளது. உண்மையில் இது மக்களை சூறையாடுவதுதான். இதை மூடிமறைத்து விட்டு இது தான் சுயநிர்ணயம் என்று புலிகள் வக்காளத்து வாங்குகின்றனர். இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து சோவியத்யூனியனை ஒடுக்கவும், உலகளாவிய மக்களின் தேசிய எழுச்சிகளைச் சீரழித்து அரைக் காலனி, நவ காலனி மற்றும் மறுகாலனியாக்கலை மறுநிர்மாணம் செய்யவே ஐ.நா. உருவானது. ஐ.நா. உலக மக்களுக்கு எதிராக மூலதனத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் சேவை செய்வதையே தனது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருந்தது. ஐ.நா. பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் எல்லாம் யார்? ஏகாதிபத்தியங்களும், அவர்கள் உருவாக்கிய பொம்மை அரசுகளின் பிரதிநிதிகளுமே. ஐ.நா. மக்கள் விரோதப் பாத்திரத்தை அரங்கேற்றும் ஒரு சர்வதேச சபையாகியது. "வீட்டோ"வானது மூலதனத்தின் நெம்பாக தொழில்பட்டது. இந்த ஐ.நா. ஊழியர்களுக்கு ஏகாதிபத்தியமே சம்பளம் கொடுத்ததுடன், தமது தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான பணத்தைக் கொடுத்து உருவான ஒரு விபச்சாரத் தரகு மையம் தான் இது. இதைத் தாண்டி ஐ.நா. எதையும் மக்களுக்குச் செய்யவில்லை. இந்த மையத்தின் சட்டத்திட்டங்களை உருவாக்கியதில், சர்வதேசக் கோட்பாடுகளை விளக்கியதில் சிங்கள இனவெறி பௌத்த அரசின் பங்கு உள்ளடக்காமல் எதுவும் விளக்கப்படவேயில்லை. இந்த விபச்சாரத் தரகர்களின் சொந்த நலன் சார்ந்த சுயநிர்ணயம் பற்றிய கோட்பாட்டை, பாலசிங்கம் தமிழ் மக்களுக்கு விளக்க முற்படுகின்றார்.

முன்பு அனைத்துலக மக்களுக்குப் பொருத்தமில்லாததாக இருந்தாகவும், இன்று பொருத்தமாக மாறி உள்ளதாகவும் கூறுவது, உள்ளடக்கத்தில் சுயநிர்ணயம் உலகமயமாகி விட்டது என்பதைக் கூறி துரோகத்துக்கு விளக்கம் கொடுக்கின்றார். முன்பு நாடுகளுக்குள் ஒரு சட்ட ரீதியான தேசிய வரையறையாக இருந்தது மாறி, உலகமயமாதல் என்ற அனைத்து மக்களையும் உள்ளடக்கியதே தேசியம் என்ற விளக்கத்தை வைக்கின்றார். நாட்டை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்கும் உரிமைக்குத் தத்துவ விளக்கம் தருகின்றார்.

தமிழ்த் தேசியம் என்பது உலகமயமாதலுக்கு உட்பட்ட, ஒரு அடிமைத் தேசமே என்பதைச் சொல்லாமல் சொல்ல முனைகின்றனர். தேசிய பொருளாதாரம், பண்பாடு, கலாச்சாரம், மொழி என அனைத்தையும் இதற்கு உட்பட்டு அழிக்க தயாராக இருப்பதை உறுதிபடுத்தியதுடன், அதையே இன்று செய்கின்றனர். அதையே பிரபாகரன் வார்த்தையில் கூறுவதானால் "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்நகர்த்திச் செல்வதே விவேகமானது" என்றதன் மூலம், தேசத்தின் அடிப்படை நலன்களை குழி தோண்டிப் புதைக்கவும், உலகமயமாதலின் கைக் கூலிகளாகச் செயல்படத் தயாராக இருப்பதைத் தமிழ் தேசியமாக பிரகடனம் செய்கின்றனர். உலகப் போக்குடன் முரண்படாது அதற்கு இசைவாகச் செல்ல வேண்டும் என்று கூறுவதாயின், ஏன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு அர்த்தமற்ற தியாகங்கள்? எதற்காக இவ்வளவு இரத்த கறைபடிந்த வரலாறுகள் எல்லாம் எமக்கு தேவைப்பட்டன? இன்று இதைச் சொல்வதற்குப் பதில் அன்றே இதைச் சொல்லி இருக்க முடியும். ஏன் உலக வரலாற்று ஓட்டத்தை மாற்றியமைக்க நாம் போராடக் கூடாது? அது அல்லவா மக்கள் போராட்டம். அது அல்லவா மக்கள் புரட்சி. ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா எடுக்கும் உலக ஓட்டத்தைச் சார்ந்த முயற்சியை அடுத்து, உலகளவில் 600-க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஒரே நாளில் வீதியில் இறங்கி இதை எதிர்த்து போராடிய வரலாற்றுப் போக்கில் புலிகள் எந்தப் பக்கம் நிற்கின்றனர்? அந்த மக்கள் உலக வரலாற்று ஓட்டத்தை மறுத்து, உலகை தமக்கு இசைவாக மாற்றி அமைக்க விரும்புகின்றனர். ஆனால் ஆயுதம் ஏந்தியப் படைகள் மூலம் அதிகாரத்தை ஏந்தியுள்ள புலிகள், அமெரிக்கா பின்னால் வாலாட்டி அதை ஒழுகுவதே தமிழ்த் தேசியம் என்கின்றனர். அதற்கு ஐ.நா. என்ற விபச்சாரத் தரகனைச் சாட்சிக்கு அழைக்கின்றனர்.

இப்படி பாய் விரித்து அழைத்தபடி "இன்று உலகம் மாறிவருகின்றது. உலக ஒழுங்கும் மாறிவருகின்றது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது" என்று பிரபாகரன் கனவில் இருந்து எழும்பி கதை சொல்கின்றார். பிரபாகரனின் கனவுக்கு ஏற்ப உலக ஒழுங்கு இன்று மாறவில்லை. உலக ஒழுங்கு எப்போதோ மாறி விட்டது. அதன் பண்புகள் தான் காலத்துக்குக் காலம் எகிறிக் குதிக்கின்றது. மனித சமுதாயத்தின் விடுதலை என்ற லட்சியம், இதனால் பொய்த்து விடவில்லை. சோரம் போனவர்கள் இது பொய்த்து விட்டது என்று கூறி, "இன்று உலகம் மாறிவருகின்றது. உலக ஒழுங்கும் மாறிவருகின்றது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது" என்று கூறி மக்களின் விடுதலை உணர்வை உயிருடன் புதைக்க நினைக்கலாம். ஆனால் மக்களின் விடுதலை போராட்டம் முன்பைவிட கூர்மையாகியுள்ளது. மக்கள் புரட்சி செய்யவும், தமது விடுதலைக்காகவும் போராடத் துடிக்கின்றனர். புலிகளில் தம் உயிரை மனித விடுதலை என்ற ஒரேயொரு லட்சியத்துக்காகக் கொடுத்து மரணமடைந்த ஒவ்வொரு அடிமட்ட புலி உறுப்பினரும், உலகம் மாறிவிட்டது என்று கூறி மரணிக்கவில்லை. இன்று தலைமை கூறுவதற்கு எதிரான உணர்வுகளுடன் தான், விடுதலை என்ற உன்னதமான மனித நோக்குடன் தான் தன்னை அர்ப்பணித்தனர். இங்கு அவர்களின் அரசியல் நோக்கத்தில் அரசியல் ரீதியாகத் தவறு இருந்தது என்பது உண்மைதான். ஆனால் இங்கு விடுதலை என்ற தியாக மனப்பாங்குடன் கூடிய மனித உணர்வை, தியாகத்தை புலிகள் முதல் யாரும் கொச்சைப்படுத்தும் உரிமை யாருக்கும் கிடையாது. இந்த உலகத்தின் போக்குக்கு எதிராக, முன்னென்றும் மனித இனம் காணாத சவால்களை எதிர் கொண்டு மக்கள் போராடுவது மட்டும் ஒரேயொரு எதிர்தரப்பாகி விட்ட நிலையில், புலிகள் இதற்கு நேர் எதிர் திசையில் செல்லுகின்றனர். இதைக் காட்டி பின்வாங்கவும், துரோகத்தை நியாயப்படுத்தவும் விளக்கம்



கொடுக்கின்றனர். மக்களின் விடுதலை என்பது உலகமயமாதல் நோக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தான் என்பதைப் புலிகள் திட்டவட்டமாக மறுத்து நிற்கின்றனர். உலகமயமாதலைக் கட்டமைத்து பாதுகாக்கும் உலக வங்கியின் செயல்களைப் புலிகள் பாராட்டும் போது தமிழ் மக்கள் இரத்தம் சிந்திய தியாகம் அனைத்தும் உலக மூலதனத்தின் விடுதலைக்காக என்பதையே புலிகள் தேசியமாகப் பிரகடனம் செய்கின்றனர்.

பிரபாகரன் ஏகாதிபத்திய மூலதனத்தின் நலன்கள் சார்ந்த "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக...", "தமிழ் மக்கள் தமது தியாகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக்கூடாது." என்பதே தமிழீழத் தாகம் என்கின்றார். தம்மைத் தாம் ஆள்வது என்பது, உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியம் தமிழ் மக்களை சுரண்டும் உரிமையைப் பாதுக்காக்கும் உரிமையைத் தமக்குத் தரக் கோருவதே. ஏகாதிபத்திய உலகமயமாதல் "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக" தாம் தமிழ் மக்களை ஆளும் உரிமையைக் கோருகின்றார். உலக வங்கியிடம் கடன் வாங்கவும், அதற்கு வட்டி கட்டவும், மக்களை பிழிந்து கறந்து தரும் உரிமையைக் கோருகின்றனர். புலிகள் தமிழ் மக்களின் நலன்கள் எதையும் வழங்க மறுக்கும் அதே நேரம், மக்களின் நலன்களுக்காகப் போராட மறுத்து, அவர்களை சூறையாடிய படி ஏகாதிபத்திய நலன்களுக்காக அதற்கு இசைவாக செங்கம்பளம் விரித்து வரவேற்கின்றனர்.

சர்வதேச நிதி மூலதனம் சார்ந்து தேசத்தை மீட்கப் போவதாகப் பிரகடனம் செய்கின்றனர். சர்வதேச சுரண்டல் விதிக்கமைய கடன் வாங்கி, வட்டி கட்டும் தேசத்தில், அன்னிய மூலதனம் புகுந்து மக்களைச் சுரண்டும் உரிமையுடன் கூடிய உலக ஒழுங்கைப் புலிகள் காப்பாற்ற முனைகின்றனர். அதையே அவர்கள் அழகாக "எங்கள் போராட்டத்தின் நியாயத்தை தர்மத்தை உலக நாடுகள் உணர்ந்து ஏற்கப் போவதில்லை. ஆகவே நாமும் எமது போராட்டப் பாதையை உலக வரலாற்று ஓட்டத்தை அனுசரித்து போக வேண்டுமென்பதே தலைவர் கூறுவதாகும்." என்று பாலசிங்கம் கூறுகின்றார். போராட்டத்தின் நியாயத்தை, தர்மத்தை உணராத ஏகாதிபத்தியத்தின் பின்னால் மக்களை எல்லாம் தம்மைப் போல் துரோகமிழைத்து வால் பிடிக்க கோருகின்றனர். ஆனால் எல்லா நாட்டிலும் உலக போக்கை எதிர்த்து, மக்கள் நியாயத்தையும் தர்மத்தையும் அங்கீகரிக்கக் கோரியும் நாள் தோறும் போராடுகின்றனர். உலகம் அங்கீகரிக்கும் என்று கருதியா, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தம் உயிரைத் தியாகம் செய்தனர். உலகம் அங்கீகரிக்கா விட்டால் துரோகத்துக்கு இணங்கும் சம்மதத்தையே, தியாகங்கள் இடித்துரைப்பதாக புலிகள் விளக்கம் கொடுக்கின்றனர். அனைத்துத் துரோகங்களையும் மூடி மறைத்த படி, மக்களுக்கு எதிராக அணிவகுக்க அறை கூவுகின்றனர். மக்களே வரலாற்றை படைபவர்கள் என்பதை மறுக்கும் புலிகள், மூலதனமே மக்களின் வரலாற்றை படைப்பதாகக் கூறி துரோகத்தை பச்சையாகப் பிரகடனம் செய்கின்றனர். இந்தத் துரோகத்தை முழுமையாக அப்பட்டமாக பூர்த்தி செய்வது சார்ந்தே, ஏகாதிபத்திய நிதிகள் தாராளமாக ஊடுருவி மக்களைச் சூறையாடக் காத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்றது. சர்வதேச ஏகாதிபத்திய ஆளும் வர்க்க பிரதிநிதிகள், புலிகளை அடிக்கடி சந்தித்து கதைப்பதன் உள்ளார்ந்த அர்த்தம் இது தான். சுரண்டலை விரைவாக விரிவுபடுத்த, புலிகள் அதற்கு இசைவான செயல்பாடுகளை துரிதப்படுத்த சந்திப்புகள் தொடர்ச்சியாக நாள் தோறும் தொடருகின்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்களை அல்ல, போராட்டத்தின் நியாயத்தை தர்மத்தை மறுக்கும் ஏகாதிபத்தியப் பிரதிநிதிகள் நடத்தும் நிதிப் பேரங்கள் எண்ணில் அடங்காதவை.

இந்த இடத்தில் தான் பிரபாகரன் "நாம் நேர்மையுடனும், உறுதியுடனும் சமாதான வழிமுறையை தழுவி நிற்கின்றோம்" என்று பிரகடனம் செய்கின்றார். பணத்தை அள்ளித் தரும்படி வேண்டு கோளுக்கு மேல் வேண்டு கோள்களை ஏகாதிபத்தியம் நோக்கி விடுகின்றனர். பணம் தருவதாக வழங்கிய வாக்குறுதிகள் நடைமுறை ரீதியாக எல்லை தாண்டி வரமறுக்கின்றது. தமிழ் பகுதிக்கு வழங்கும் பணத்தை ஏகாதிபத்தியத்திடமே பாதுகாக்க புலிகள் கோரிய போது, அரசு மிக இலகுவாகத் தனது சொந்த பொறுப்பில் இருந்து நழுவிக் கொண்டது. அரசை நோக்கி குற்றச்சாட்டுகளை முன் வைக்க முடியாத அவலம் எதார்த்தமாகியது. இந்த நிலையில் புலிகள் "பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுவதாக கூறினாலும் வடக்கு - கிழக்கில் களநிலை மாற்றமேதுமில்லை"[1] என்ற அதிருப்தியை பாலசிங்கம் தெரிவிக்கின்றார். மாற்றம் நிகழவில்லை என்று கூறுவதன் மூலம், நிதி தாராளமாக தரப்படவில்லை என்ற அதிருப்தியை வெளியிடுகின்றனர். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை யாரை நோக்கியும் வைக்காது, பொத்தாம் பொதுவில் வைக்கப்படுகின்றது. அரசு மௌனமாக இதை விட்டுவிடுவதன் மூலம், புலிகளின் கையாலாத்தனம் வெற்று வேட்டாகி விடுகின்றது. நிதி மூலதனத்தை ஏகாதிபத்தியம் கொடுப்பதாயின் யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்தி, கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கான உத்தரவாதத்தைப் புலிகள் உறுதி செய்வது அவசியமாகும். இதை உறுதி செய்வது என்பது ஆயுதத்தைக் கைவிடவும், சுரண்டும் முரண்பட்ட ஜனநாயகத்தை அமுல்படுத்தவும் கோருகின்றது. இன்று இலங்கையில் சர்வாதிகார பாசிச வழிமுறை சார்ந்த சுரண்டலின் அவசியமற்ற நிலை காணப்படுகின்றது. வர்க்கப் போராட்டங்கள் தமிழ் சிங்களப் பகுதியில் பாசிச வடிவங்கள் மூலம் இரத்த ஆற்றில் முழ்கடிக்கப்பட்ட நிலையில், அதை அறுவடை செய்யும் அமைதியை உலகமயமாதல் கோருகின்றது. பாசிச வடிவிலான சர்வாதிகார அமைப்பு முறையைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதும் கூட சுரண்டலுக்குப் பாதகமானதே என்பது, உலகளாவிய அடிப்படை உள்ளடக்கமாகும். சுரண்டலைத் துரிதப்படுத்தவும், யுத்தம் சார்ந்து காணப்படும் பாசிச சர்வாதிகார அமைப்பு வடிவத்தைக் களைந்து, சுரண்டுவதை இலகுவாக்க உலகமயமாதல் கோருகின்றது. இது பூர்த்தியாகும் போது உறுதி அளித்த நிதி மூலதனங்கள், தாராளமாக மக்களைச் சூறையாட உட்புகும் என்பது வெள்ளிடைமலை.

தமிழ் மக்களின் தேசியத்தைக் கைவிட்டு துரோகம் செய்வதில் உள்ள இழுபறியை நிவர்த்தி செய்ய, ஏகாதிபத்தியக் கொள்கை வகுப்பாளர்கள் புலிகளை நாள் தோறும் சந்தித்து சரணடைய வைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இதன் தொடர்ச்சியில் தான் "நாம் நேர்மையுடனும், உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கின்றோம்" என்று கூறி அறிக்கை விடுகின்றனர். இதன் மூலம் ஏகாதிபத்திய நிலைகளுக்கு விசுவாசமாகவும், மக்களுக்கு எதிராகவும் கூர்மையான ஒடுக்குமுறையைக் கையாளுகின்றனர். அதாவது இதைப் புலிகள் ஒற்றைப் பரிமாணத்தில் விளக்க முனைகின்றனர். சொந்த நடைமுறை செயல்பாடுகள் முரண்நிலை காண்கின்றது. ஏகாதிபத்தியத்துடன் ஒரு நெருக்கமான கைக்கூலியாகச் செயல்படவும், அதன் அங்கமாக மக்களை அடக்கியாள அனுமதிக்கும் அமைதியை சமாதானத்தையே வேண்டி நிற்கின்றனர். இதனால் அவர்கள் தாம் செய்த, சொந்த நலன் சார்ந்த ஒப்பந்தத்தையே மீறி நிற்கின்றனர். சொந்த ஒப்பந்த மீறல்கள் தற்செயலாக நிகழும் போது அது தவறு அல்ல. ஆனால் அதுவே திட்டமிட்ட வகையில் கையாளப்படும் போது அதன் விளைவு மிகவும் எதிரிடையாக மக்களுக்கு எதிராக மாறுகின்றது.

அதாவது புலிகள் தமது சொந்த நலன் சார்ந்து செய்த ஒப்பந்தத்தை மீறுவது, உண்மையில் மக்களின் அடிப்படையான வாழ்வை மேலும் நாசமாக்குவதை துரிதமாக்குகின்றது. ஏகாதிபத்தியத் தலையீடுகள் இவற்றை மேலும் துரிதமாக்குகின்றன. யுத்த நிறுத்த மீறல்கள் அனைத்தும் சொந்த மக்களுக்கு எதிராக புலிகள் கையாள்வது என்பதை எக்காரணம் கொண்டும் நாம் நியாயப்படுத்த அனுமதிக்க முடியாது. இதை சற்று விரிவாகப் பாாப்போம். மார்கழி மாதம் கண்காணிப்பு குழுவுக்குக் கிடைத்த மொத்த புகார் 142 ஆகும். இதில் 118 விடுதலைப் புலிக்கு எதிராகவும், 24 சிங்கள இராணுவத்துக்கு எதிராகவும் கிடைத்துள்ளது. ஒப்பந்தத்தின் பின்னான 31.12.2002 வரையான மொத்த யுத்த நிறுத்த மீறல்கள் 556 ஆகும். இதில் புலிகளுக்கு எதிராக 502யும், இராணுவத்துக்கு எதிராக 54 புகார்களும் யுத்த நிறுத்த மீறலாக அடையாளம் காணப்பட்டது. புலிகளின் யுத்த நிறுத்த மீறலில் கட்டாயத்தின் பெயரில் 313 சிறுவர்களைப் படைக்குத் திரட்டியது முதல் 89 ஆள் கடத்தல மற்றும் 49 தொல்லை கொடுத்த சம்பவங்கள் ஆகும். இராணுவத்துக்கு எதிரான புகாரில் 20 தொல்லை கொடுத்தது முதல் 13 பணம் பறித்த சம்பவம் அல்லது சுதந்திர நடமாட்டத்துக்கு தடை விதித்த சம்பவமாகும். இந்த யுத்த நிறுத்த மீறல்கள் அவர்கள் தத்தம் நலன்கள் சார்ந்து, அவர்கள் உடன்பட்டுச் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதில் இருந்து கண்டறியப்பட்டது. 2003 இல் மட்டும் 670 ஆள் கடத்தல் முறைப்பாட்டைக் கண்காணிப்பு குழு பெற்றுள்ளது. இதில் 417யை கண்கணிப்பு குழு உறுதி செய்துள்ளது. இரண்டு வருட யுத்த நிறுத்தம் பூர்த்தியான நிலையில், யுத்த நிறுத்த மீறல் பற்றிய அறிக்கை வெளியாகியுள்ளது. புலிகள் 1046 தடவைகள் மீறியுள்ள நிலையில், படையினர் 88 தடவைகள் மீறியுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதில் 99 சதவீதமானவை நேரடியாக மக்களுக்கு எதிரானது. அரசின் யுத்த நிறுத்த மீறலை விடவும் புலிகளின் யுத்த நிறுத்த மீறல்கள் பாரியதாக உள்ளது. மிகவும் கட்டுப்பாடு கொண்ட இயக்கம் என புகழ் உரைக்கும் புலிகள், தலைவரின் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தையே விசுவாசமின்றி உதாசீனம் செய்யும் போது, இந்த மீறல் தலைமையின் ஆதரவுடனா அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைக்கு எதிராகவா என்பதை எதார்த்தத்தின் சராசரி தீர்ப்புக்கு விட்டுவிடுவோம்.

உண்மையில் இந்த யுத்த நிறுத்த மீறல்கள் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மட்டும் பதிவானவைதான். அதுவும் புலிகளின் கொலை அச்சுறுத்தலை மீறி இது பதிவானதாகும். அச்சுறுத்தலின்றி சுதந்திரமாக பதிவாகியிருப்பின் உண்மையில் இதன் அளவு பல மடங்காக இருப்பது எதார்த்தம். இதை யாரும் மறுக்க முடியாது. இது யுத்த நிறுத்த மீறலாக அடையாளம் காணப்பட்டவை மட்டுமே. மக்கள் தமக்கு எதிராக ஜனநாயக விரோதமாக இருப்பதாக கருதி, யுத்த நிறுத்த மீறலாக கூறிய புகார்கள் இதை விட சில மடங்கு அதிகமாகும். கண்காணிப்புக் குழுவிடம் ஒரு புகாரை செய்வது கூட கடினமானது. கண்காணிப்புடன் கூடிய உளவாளிகளை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்பு குழு, சுதந்திரமானது அல்ல. அத்துடன் அது மக்களுடன் தொடர்பற்றவை. உயிரை பணயம் வைத்தே புகார்கள் செய்யப்படுகின்றன. செய்யப்பட்ட புகார்கள் பல உறுதி செய்யமுடியாதது. காரணம் பாசிச நிலைமை, சுதந்திரமற்ற ஜனநாயகமற்ற சூழலால் வெறுமனே பதிவாகும் பல சம்பவங்கள், யுத்த நிறுத்த மீறலாக யாரையும் குற்றம் சாட்டுவதை திட்டமிட்டே கைவிடுகின்றது. சுதந்திரமான ஜனநாயகமான மக்களுடன் தொடர்புடைய ஒரு யுத்த நிறுத்த மீறல் அமைப்பு மட்டும் தான், மேலும் துல்லியமான தகவல்களை திரட்டித் தரும். உதாரணமாக யுத்த நிறுத்தத்தின் பின்பு வடக்கு கிழக்கில் நடந்த அரசியல் கொலைகள், இனம் தெரியாத அரசியல் வன்முறைகள் யுத்த நிறுத்த மீறலாக அடையாளம் காணப்படவில்லை. மட்டக்களப்பு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டுப் பத்திரிகை நிறுத்தப்பட்ட நிலையில், இதை யுத்த நிறுத்த மீறலாக அடையாளம் காணப்படவில்லை. தமிழ் பத்திரிகை உலகம் இதை மட்டும் கண்டிகாது, பத்திரிகை சுதந்திரம் பற்றி பினாமிகள் மூலம் பக்கம் பக்கமாக எழுதுகின்றனர். இப்படி பற் பல. யுத்த நிறுத்த மீறல் பற்றிய அறிக்கை 10 சதவீதத்தைக் கூட வெளிக் கொண்டு வரும் தகுதியை இழந்து போனது.

யுத்த நிறுத்த மீறல் என்று அவர்கள் தாம் தமக்கு இடையில் செய்த கொண்ட ஒப்பந்தத்துக்கு இணைய கட்டுப்படுத்தும் விதிகள், மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை மீறலை யுத்த நிறுத்த மீறலாக கருத மறுக்கின்றது. கட்டாய ஆள் சேர்ப்புடன் கூடிய மனித கடத்தல்கள், பயிற்சியில் இருந்து தப்பித்து வந்த 200 மேற்பட்டவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமை மீறலை யுத்த நிறுத்த மீறலாகக் கருதப்படவில்லை. அடிப்படை ஜனநாயக உரிமை மீறலை யுத்த நிறுத்த மீறலாக கருதாத ஒப்பந்தம், குறிப்பிட்டதை மட்டும் யுத்த நிறுத்த மீறலாக கருதுகின்றது. இதை இருவரும் தத்தம் நலன் சார்ந்து செய்த போது, அதை அவர்கள் கண்டிப்பாக கடைப்பிடிப்பது அவசியமானதாகும். குறிப்பாக இது மக்களுக்கு எதிரான யுத்த நிறுத்த மீறலாக இருக்குமாயின் இதை எதிர்த்துப் போராடுவது அவசியமாகும். இந்த ஒப்பந்தம் சமாதானத்தை எற்படுத்தும் எனக் கருதும் அனைவரும், இதை ஆதரிக்கும் அனைவரும் இந்த மீறலை கண்டிக்க தவறும் போது, சமாதானத்தை மறுக்கும் அப்பட்டமான அயோக்கியர்களாக இருக்கின்றனர். இன்றைய அன்றாட தமிழ் செய்திப் பத்திரிகைகளும், அதை ஆக்கிரமித்து எழுதும் புலிகளின் பினாமி எழுத்தாளர்களும், புலிகள் ஊளையிட அதன் உடன் சோந்து ஊளையிடும் அறிவுத்துறையினரும், மக்களுக்கு எதிரான யுத்த நிறுத்த மீறலை, ஒரு தலைப்பட்சமாக ஆதரித்துக் கருத்துரைப்பதன் மூலம், மக்களின் எதிரிகள் ஏகாதிபத்தியக் குடையின் கீழ் ஒன்று கூடுகின்றனர். இதுவே இன்றைய பிழைப்புவாதமாக உள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தமக்காக தாமே முன்வந்து செய்த புலிகள், குறைந்த பட்சம் அதில் நேர்மையாக இருப்பது மிக முக்கியமானது. இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கும் யாவரும், மக்களுக்கு எதிரான யுத்த நிறுத்த மீறலை கண்டிப்பதில் அடிப்படை நேர்மை அவசியம். நேர்மையற்ற பிழைப்புவாதமும், குறுகிய வக்கிரமும் கொப்பளிக்க, மக்கள் மேலான யுத்த நிறுத்த மீறலை ஆதரிப்பது அல்லது கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் பூனையாட்டம் கருத்துரைப்பது, எல்லாம் தமிழ் மக்களின் மேலான சுமையை உயர்த்தவும் வாழ்வை மேலும் அழிக்கவும் நெம்பாக நின்று உதவி செய்வதாகும்.

யுத்த நிறுத்த மீறல் மோதலாக மாறும் சந்தர்ப்பங்களில் இதுவே புலிகள் மேலான நெருக்கடியாகப் பரிணமிக்கின்றது. யுத்த நிறுத்த மீறலைப் புலிகளுக்கு எதிரான ஒரு தெளிவான குற்றச் சாட்டாக ஏகாதிபத்தியங்கள் முன்வைக்க தவறவில்லை. இந்த நிலையில் தமிழ்ச்செல்வன், கண்காணிப்பு குழுவுக்கு எழுதிய கடிதத்தில், யுத்த நிறுத்த மீறலைச் செய்வோரை கண்கணிப்பு குழு கைது செய்யும் அதிகாரத்தை, புலிகள் சார்பாக அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. தாமாக முன் வந்து இதைக் கூறியதன் மூலம், சொந்த அமைப்பில் ஏற்படும் எதிர்ப்புகளையும் ஒடுக்க ஏகாதிபத்தியத்துக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார். கண்காணிப்புக் குழு யுத்த நிறுத்த மீறல் செய்வோரை கைது செய்யக் கோரும் தமிழ்ச்செல்வன், ஏகாதிபத்திய படைகளின் வருகையையும், நீதி விசாரணைக்கும் உரிய சர்வதேச ஆக்கிரமிப்புக்கும் தனது ஆதரவை உறுதி செய்துள்ளார். இதன் படி இன்றைய யுத்த நிறுத்த மீறலுக்காக புலிகள் தரப்பில் மட்டும் 1000-க்கும் மேற்பட்ட உறுப்பினரை கைது செய்யும் கண்காணிப்புக் குழுவின் உரிமை சார்ந்த அதிகாரம் பற்றிப் பேசத் தவறவில்லை. ஏகாதிபத்தியத்துக்கு எப்படி கைக்கூலியாக இருப்பது என புலிகள் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை எதிர்ப்பதை யுத்த நிறுத்த மீறலாக கூறுவதன் மூலம், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை ஒடுக்கும் உரிமையை சர்வதேச ஆயுதம் ஏந்திய கண்காணிப்பு குழுவுக்கு வழங்க புலிகள் முனைகின்றனர். இந்த எதிர்ப்பு புலிகளில் இருக்கும் நேர்மையான தேசிய வாதிகளிடம் இருந்தும் எழும் என்பதை முன்கூட்டியே, கண்காணிப்பு குழுவுக்கு எச்சரிப்பதன் மூலம், ஆயுதம் ஏந்திய அதிகாரம் பெற்ற ஒரு சர்வதேச ஆக்கிரமிப்பை துரிதப்படுத்தவேக் கோருகின்றனர் புலிகள்.

புலிகள் ஏதாவது ஒரு வகையில் முரண்டு பிடிக்கும் போது, யுத்த நிறுத்த மீறல்கள் அனைத்தும் ஏகாதிபத்தியத்துக்கு சார்பானதாகிவிடும். இதை காட்டி இலங்கையில் நேரடி ஆக்கிரமிப்பைச் செய்ய போதுமான வலுவை பெற்றுவிட்டவர்கள், அதை நோக்கிய முன்னெடுப்புகள் தயாரிப்புகள் ஒருபுறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுகின்றது. ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல்-ஹைடா என்ற இஸ்லாமிய அடிப்படைவாத மதவாத குழுவுக்கு, கடலில் தற்கொலை தாக்குதலை எப்படி நடத்துவது எனப் புலிகள் பயிற்சி அளித்ததாக அமெரிக்காவின் "கடல் புலனாய்வுப் பிரிவு" தெரிவித்துள்ளது. "கடல் புலனாய்வுப் பிரிவைச்" சேர்ந்த கிவ்வென் கிம்மில்மன் புலிகளிடம் இருந்து "ஜமா இஸ்லாமியா" பெரும் பலன்களை பெறுவதாகக் கூறினார். உலகமயமாக்கல் சார்ந்த அமெரிக்க உலக ஆக்கிரமிப்புகளை விடாப்பிடியாக தொடர்ச்சியாக நடத்த, காரணங்களையும் நியாயங்களையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொய்யாக புனைந்தும் அடுக்கிவைக்கின்றன. அமெரிக்க கடல் உளவுத்துறையின் இந்தக் கூற்றைப் புலிகள் இதுவரை மறுத்தாகத் தெரியவில்லை. இது உண்மையில் நடந்ததோ அல்லது ஆக்கிரமிப்புக்கான ஒரு முன் கூட்டியோ சோடிக்கப்பட்ட காரணமாக இருந்தாலும், புலிகளின் அடிப்படை அரசியலால் இந்த எடுகோளை பொய்யாக்கிவிட முடியாது. புலிகளின் தேசிய அரசியல் என்பது ஏகாதிபத்திய அரசியலாக உள்ளவரை, அதாவது "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக" உள்ளதால், இந்த அடிப்படைக் கோட்பாடு, அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுக்கும் சர்வதேச மக்களின் தார்மிகத்தை அழித்து விடுகின்றது. இது உண்மையா என்ற ஊகத்தை இது சர்வதேச அளவில் உருவாக்கிவிடுகின்றது. பணத்துக்கும், ஆயுதத்துக்கும் பிசாசுடன் கூட கூட்டுச் சேர தயாரான புலிகளின் அரசியல், இதை மறுத்து நிற்கும் தார்மீகத்தை இழந்து நிற்கின்றது.

ஒருபுறம் ஆக்கிரமிப்பை நடத்தத் தயாராகும் ஏகாதிபத்தியங்கள், மறுபுறம் நிதி மூலதனம் மூலம் நாட்டை மறு காலனியாக்க முனைகின்றது. நிதி தாராளமாக வழங்கும் உறுதி மொழிகளை வாரி விடுகின்றது. உதாரணமாக ஐரோப்பா யூனியன் தனியார் துறையை, முதலீட்டை ஊக்குவிக்க முதன் முறையாக 4 கோடி ஈரோ நாணயத்தை (அண்ணளவாக 400 கோடி ரூபா) ஐரோப்பிய முதலீட்டு வங்கி, கடனாக வழங்கியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி வருடாந்தம் 20 கோடி டொலர் கடன் (2000 கோடி ரூபாவை) வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது. வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தவும், அரசாங்க நிறுவனங்களைப் புனரமைக்கவும் உலக வங்கி 310 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக பிரதமரின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் தெரிவிக்கின்றார். இக் கடனுதவி 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். ஆனால் விதிவிலக்காக இக் கடனுக்கு வட்டி செலுத்தத் தேவையில்லை. பரஸ்பரம் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும் ஆஸ்திரேலியாவும் கைச்சாத்திட்டுள்ளன. சமாதான முன்னெடுப்புகளுக்காக இதுவரை 90 லட்சம் டொலர்களை (90 கோடி ரூபாவை) ஆஸ்திரேலியா வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் மேலும் உதவிகளை வழங்கவும் முதலீடுகளைச் செய்யவும் அந்நாடு தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது. உலக வங்கி இலங்கைக்கு 4.3 கோடி டொலர் (430 கோடி ரூபா) 40 வருட கடனாக வழங்கியுள்ளது. இது இடம் பெயர்ந்தவர்களை மறு குடியேற்றுவதற்காக வழங்கப்பட்டது.



நெதர்லாந்து வழமையாக இலங்கைக்கு கடனாக வழங்கும் 1.06 கோடி யூரோவுக்கு (115 கோடி ரூபா) பதிலாக, இம்முறை 2.06 கோடி (225 கோடி ரூபாவை) யூரோவை வழங்க உள்ளது. இதில் 1 கோடி யூரோ நிவாரணக் கடனாக வழங்கியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி 50 கோடி ரூபா செலவில் வன்னியில் நவீன வைத்தியசாலை அமைக்கும் முயற்சியாக அடிக்கல்லை நாட்டியுள்ளது.

இப்படி பல பத்து உதவி என்ற பெயரில் கடன்கள் சர்வதேச நிதிக் கொள்கைக்கு ஏற்ப பணம் தாராளமாக வழங்கவும், வழங்குவதற்கான உறுதியையும் அளிக்கின்றன ஏகாதிபத்தியங்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான போது அதை நேரில் காணச் சென்ற பி.பி.சி தமிழ்ச் சேவையின் செய்தி தயாரிப்பாளர்கள் அது பற்றி கூறும் போது, ஒளிவு மறைவு இன்றி தமது ஏகாதிபத்திய நோக்கத்துடன் புலிகளும் இணங்கி நிற்பதை வெளிப்படுத்தினர். அந்த செய்தியில் செய்தியாளர்கள் கொண்டு சென்ற நவீன கைத்தொலை பேசிகளை கண் கொட்டாது புலிகள் பார்த்துக் கொண்டு இருந்தாகவும், சமாதானம் நிலைநாட்டப்பட்டால் வடக்கு கிழக்கில் கைத் தொலைப்பேசியால் நிரப்பிவிடும் ஆளுமை புலிகளுக்கு நிச்சயம் உண்டு என்று பெருமைபடக் கூறினர். இந்தக் கூற்று தற்செயலானவையல்ல. இதுவே உண்மையும் கூட. வெளிநாட்டுப் பொருள் மேலான மோகம், புலிகளின் அரசியல் மோகமாகி, அதுவே தமிழ்த் தேசியப் பண்பாடு சார்ந்ததாக இருப்பதால், இதுவே தமிழீழத் தாகமாகிவிடுகின்றது. சிங்கப்பூர் கனவு பற்றியும், இஸ்ரேலின் கைக்கூலி வாழ்வு பற்றியும், நினைக்காத புலிகள் உண்டோ! சொந்த நாட்டை சொந்த மக்கள் வளப்படுத்தவும் மீட்கவும் தயாரற்ற நிலையில், ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கொள்ளையர்கள் தான் எமது நாட்டின் திட்டங்களைப் போடுகின்றனர். அதை எப்படி செய்வது, எங்கே செய்வது, யாரைக் கொண்டு செய்வது என்பது முதல் அதை நேரடியாக கண்காணிக்கவும் செய்கின்றனர். இதன் பலனை யார் நுகர்வது என்பதையும் தீர்மானிக்கின்றனர். எப்படி உற்பத்தியை செய்வது, யாரைக் கொண்டு செய்வது, என்ன கூலி என்பது முதல் நாட்டின் பண்பாடுகள் என அனைத்தையும் ஏகாதிபத்தியங்கள் தீர்மானிக்கும் படிக்கல்லில், புலிகள் செங்கம்பளம் விரித்து (இந்த செங்கம்பளங்கள் புலிகளின் தியாகங்களின் இரத்தத்தினால் ஊறியவை) வரவேற்பு அளித்து ஆரத்தழுவியபடி படியேற்றுகின்றனர். நாட்டில் வாழும் மக்களின் அறிவு, அனுபவம் புறக்கணிக்கப்பட்டு, வெளிநாட்டவனின் தேவைக்கும் நோக்கத்துக்கும் இசைவாக திட்டங்கள் போடப்படுகின்றன. வெளிநாட்டுப் பொருட்கள் மீதான மோகம் வெம்பி வெதும்புகின்றது. மக்களின் அடிப்படை தேவை புறக்கணிக்கப்பட்டு, ஆடம்பரமான அடிப்படையற்ற கவர்ச்சிகரமான நவீனங்களால் தேசம் கற்பழிக்கப்படுகின்றது. புலிகளின் வெளிநாட்டு மோகம் அதிகரிக்க, வெளிநாட்டவனின் கால்களை நக்குவதும் துரோகம் செய்வதும் தேசியமாக நவீன விளக்கம் பெறுகின்றது.

அண்மையில் பிரபாகரனின் மகன் வெளிநாடு சென்று கல்வி கற்க இலங்கை அரசின் ஊடாக கடவுச்சீட்டு (பாஸ்போட்) எடுத்த செய்தி மெதுவாகக் கசிந்துள்ளது. இதுவரை புலிகள் இதை மறுக்கவில்லை. யுத்தத்தை மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு அறவிலையில் மண்ணெண்ணையை விற்று, மக்களையே கொள்ளையடித்து கோடீஸ்வரனான ஆளும் கட்சியின் மக்கள் பிரதிநிதியான மகேஸ்வரன், இந்திய பார்ப்பனியக் கைக்கூலியாக அனுமான் வேடம் போட்டு இந்து அமைச்சரான இந்த பன்றி தான், பிரபாகரனின் மகனின் கடவுச்சீட்டை நேரடியாக பெற்றுக் கொடுத்ததாக தகவல் கசிகின்றது. இந்தக் கொள்ளையன் இந்துக் கோயில்களின் தர்மகர்த்தாவாகவும் சாராயக் கடைகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் ரவுடியாக இருக்கின்றான். இதனால் எல்லா தரப்பு அரசியலிலும் தொடர்பு கொண்டு, நக்கிப் பிழைக்கும் ஒரு சாக்கடைப் பன்றி தான் இவன். இதன் போதே இந்தக் கடவுச்சீட்டு விடையமும் அரங்கேறியது. செல்வநாயகம், ஜி.ஜீ.பொன்னம்பலம் முதல் அமர்தலிங்கம் வரை சொந்த குடும்பத்தில் தமது குழந்தைகளின் படிப்பு சார்ந்த எதை எல்லாம் தேசியத்தின் நலனின் பெயரில் செய்தார்களோ, அதையே புலிகளின் தலைவர் இன்று செய்து உள்ளதாகத் தகவல் கசிகின்றன. பிரபாகரனின் மகனின் வயதை ஒத்த போராளிகள் நாட்டுக்காக, தமிழ் மக்களுக்காக கல்வியைத் துறந்து, தாய் தந்தை முதல் சகோதரப் பாசத்தை இழந்து ஆயுதங்களைச் சுமந்து போராடுகின்றனர். ஆனால் தலைவரின் மகன் வெளி நாட்டில் படிக்க செல்லப் போவதாகத் தகவல் கசிகின்றன. தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தமிழ்த் தேசிய உணர்வு சார்ந்து, புலிகளின் மறுப்பு வெளிவந்ததாக அறியமுடியவில்லை. பிரபாகரனின் சொந்த மகனை ஒத்த தமிழ் மக்களின் எல்லாக் குழந்தைகளையும் சொந்த மகனாக கருதுவது தான், தமிழ் மக்களின் தலைவனுக்கு இருக்கும் தகுதி என்பதையே மக்கள் அங்கீகரிக்கின்றனர். வெளிநாட்டில் பிரபாகரனின் சொந்த மகன் படிக்கச் செல்வது உண்மையானால், இதற்கான விசா எப்படி பெறப்பட்டது. தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திடம் தாரை வார்ப்பதற்காக, கைக் கூலியாக செயல்படும் போது எறியப்படும் எச்சில் கைமாற்றில் இதுவும் ஒன்றோ? ஏகாதிபத்தியங்கள் நாள் தோறும் தமிழ் மக்களைக் கைது செய்து நாடு கடத்தி வரும் இன்றைய நிலையில், அதைப் பற்றி பேசாத புலிகள் தமது சொந்த குழந்தைகளுக்கு விசா பெற்று ஏகாதிபத்திய நாட்டுக்குச் செல்ல முனைவது என்பது நகைப்புக்குரியதோ, சின்னவிடையமோ அல்ல. இதை நியாயப்படுத்துவது சொந்தத் தாயையே, படுக்கைக்கு அழைப்பதற்கு நிகரானது. கல்வி கற்கச் செல்வது உண்மையானால், கல்விக்கான செலவையும் வாழ்வுக்கான செலவையும் யார் வழங்கவுள்ளனர். ஏகாதிபத்தியமா? இலங்கை அரசா? தமிழ் மக்களா? அல்லது பிரபாகரன் குடும்பத்தின் சொந்த உழைப்பா? இவை எல்லாம் கேள்வி கேட்க முடியாத, மரண தண்டனைக்குரிய துரோகமாக, தேசிய விரோதமாக முத்திரை குத்தி படுகொலையை நியாயப்படுத்த முனையலாம். இதற்காகவே நாம் கொல்லப்படலாம். இதைக் கேட்காமல் இருப்பது தமிழ் மக்களின் நலன்களைக் கால் தூசாக எத்துவதற்கும், தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தியாகம் செய்த அனைத்து போராளிகளையும் குழி தோண்டி மறுபடியும் ஆழப் புதைப்பதற்கும் நிகரானது.

சொந்த நலன்கள் ஒருபுறம் கிடைக்கும் போது, நாட்டை ஒட்டு மொத்தமாகவே கூவி விற்கின்றனர். கடன் வாங்குவதன் மூலம் நாட்டை அடகு



வைத்து, அறவட்டியையே மூலதனமாக்கி நாட்டை விற்கும் உலகமயமாதல் அனுபவத்தை புலிகள் மூடிமறைத்தபடி நியாயப்படுத்துகின்றனர். வாங்கும் கடனை புலிகள் தாம் பெற துடிக்கும் நிலையில், இந்தக் கடன் பற்றிய போலியான பிரமையை மாயையை தமிழ் மக்கள் மத்தியில் விதைக்கின்றனர். புலிகள் எப்போதும் பணத்தை அறவிட்டவர்களே ஒழிய, அதை திருப்பிக் கொடுப்பதோ கணக்கு காட்டுவதோ இல்லை. அதே போல் தான் இந்தப் பணமும் என்ற உணர்வை தன்னியல்பாகவும், புலிகளின் பினாமிகள் மூலமும் உருவாக்குகின்றனர். அனைத்தையும் வெறும் உதவியாகக் கட்டமைக்கின்றனர். இலங்கையின் ஒவ்வொரு நபருக்கும் 77.5 ஆயிரம் ரூபா கடன் எப்படி ஏற்பட்டது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளாமல் செம்மறி மந்தையாக இருக்கும் வரை, கடன் வாங்குவதும் நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு விற்பதும் தேசியத்தின் கொள்கையாக மாறிவிடும். இந்தக் கடன் பணத்தையும், அதற்கான வட்டியையும் மக்களாகிய எமது உழைப்பில் இருந்து கட்டப்படுவதை இந்த சமூகம் தெரிந்து கொள்ளாத அறிவிலியாக உள்ளவரை, தேசம் தேசியம் சார்ந்து விபச்சாரம் செய்யப்படுவதை அறிய முடியாது. இந்தக் கடனையும் வட்டியையும், உள்நாட்டுப் பொருளாதார உற்பத்தியை நுகர்வை உலகமயமாதலுக்கு இசைவாக இலங்கை அரசில் இணைந்து புலிகள் செய்வதா (வட்டியை கட்டுவதா), அல்லது பிரிந்து தமது பங்கைத் தாமாக ஏகாதிபத்தியத்துக்கு செய்வதா (கட்டுவதா) என்ற கேள்விகளுக்கு புலிகள் வேண்டும். இதை நிறைவேற்றாத வரை "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக" சமாதானத்தை முன்னெடுக்க முடியாது. மறு தளத்தில் இதற்கு இசையாத வரை, ஏகாதிபத்தியம் புலிக்கு எதிரான அழித்தொழிப்பை ஆக்கிரமிப்பை ஊக்கப்படுத்தவே செய்யும். உண்மையில் இதை எதிர் கொள்ளும் தகுதியை "உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக" உள்ள அரசியலால், இதற்கு மாறாக எதிர் கொள்ள முடியாது.

மறுதளத்தில் மக்களின் வாழ்வு புதிய சுமைகளால் மேலும் ஆழமாக சிறைபிடிக்கப்படுகின்றது. ஒருபுறம் சொந்தத் தேசியப் பொருளாதார அடிப்படைகள் அழிக்கப்பட, மறுபுறம் அன்னியப் பொருட்கள் நாட்டில் குவிகின்றன. அடிப்படைத் தேவையைப் புறக்கணித்து வரும் சந்தைப் பொருளாதாரமே தேசிய, பண்பாட்டு, கலாச்சார சூழல்களாகவும் ஒட்டு மொத்த சமுதாயமும் ஏகாதிபத்தியக் கலாச்சார எல்லைக்குள் நடுங்கவைக்கும் வக்கிரத்தால் வெம்புகின்றது. இதன் ஒரு பகுதியாக வீங்கி வெம்பும் இந்தப் பண்பாடு, கற்பிக்கும் கல்வியிலேயே ஒரு கொள்ளையாக மாறிவிடுகின்றது. இலவசமான அரசு பாடசாலைகளில் மாணவர்களிடம் பணம் அறவிட்டு கல்வி கற்பிக்கும், புதிய புல்லுருவி வர்க்கம் ஒன்று புதிதாக முளைத்தெழுந்துள்ளது. தமிழ்த் தேசியத்தின் செங்கோல் நிலைநாட்டப்பட்ட நிலையில் தான், இந்தக் கொள்ளை அடிப்பு அரங்கேறுகின்றது. இலவசமான அரசு பாடசாலையில் தமிழனிடம் தமிழனே நடத்தும் இந்தக் கொள்ளை, யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களையும் பெற்றோரையும் உறைய வைக்கின்றது. மாணவர்களை அனுமதிப்பதற்காக பெற்றோர்களிடம் இருந்து பெருங் கொள்ளையை அடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு யுக்திகளை பாடசாலை நிர்வாகங்களும், அபிவிருத்திச் சங்கங்களும் கையாள்கின்றன. ஒரு புல்லுருவி வர்க்கம் பாடசாலையின் அபிவிருத்தி என்ற பெயரில், பாடசாலையைச் சுற்றி ஆட்டம் போடுகின்றது. சில அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதற்கு ஆகக் கூடுதலாக 15 ஆயிரம் ரூபாவரை கோரப்படுகின்றது. சில பாடசாலைகளில் குறைந்தது 3 ஆயிரம் ரூபா கட்ட நிர்பந்திக்கப்படுகின்றது. பாடசாலையின் தரமே கொள்ளையின் அளவை நிர்ணயம் செய்கின்றது. தமிழ் மாணவர்கள் கல்வி கற்க பணம் இல்லை என்றால், கல்வி கற்க முடியாது. இதைச் சிங்கள இனவாதிகள் செய்யவில்லை. இதைத் தமிழ்ப் புல்லுருவி வர்க்கம் தேசியவாதிகளின் ஆதரவுடன், தமிழ் ஆசிரியர் சங்கத்தின் துணையுடன் செய்கின்றது. ஏழை மாணவர்களின் கல்வி என்பது எட்டக் கனியாகின்றது. இதில் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்விக்கு இது மேலும் ஆழமான வேட்டு வைப்பதுடன், புதிய சாதிய வேலியாகின்றது. இதனால் பெண்களின் கல்வி வீழ்ச்சியுறுவதை ஆணாதிக்கப் புல்லுருவி வர்க்கம் மறைமுகமாக ஏற்படுத்துகின்றது. யாழ் சமூகத்தைப் பற்றி பெருமையாகக் கூறும் போது பிள்ளைகளின் கல்விக்காக குடும்பங்கள் உழைத்து வாழ்ந்த காலத்தில், கல்விக்குப் பணம் என்பது ஒரு கேவலமான சமூக விடையமாக கருதப்பட்டது. பாடசாலைக்கு வெளியில் தனியார் கல்வி கொழுப்புள்ள பணம் திரட்டும் ஊடகமாக மாறிய போது, கல்வியை வர்த்தகமாகக் கொண்ட புல்லுருவி வர்க்கம் உருவானது. இதுவே பின்னால் பாடசாலைக்குள் புகுந்ததுடன், கல்வி கற்பதற்கே பணம் என்ற நிலைக்கு மாறிவிட்டது. தாய் மொழி கல்விக்குப் பதில் ஆங்கிலம் மூலம் நடத்தும் புதிய முறைகளும், தமிழ்த் தேசிய விபச்சாரத் தரகர்களின் துணையுடன் புகுத்தப்படுகின்றது. தமிழ் தேசிய சமூகம் எந்தளவுக்கு மேற்கத்தைய நுகர்வு பண்பாடு சார்ந்து சீரழிந்து செல்கின்றதோ, அந்தளவுக்குப் புல்லுருவி கூட்டமும் மக்களிடையேயான பிளவை அகலமாக்குகின்றது. தமிழ் மக்களின் கல்வி என்றும் சந்திக்காத அளவுக்குக் கடும் வீழ்ச்சி கண்டு வருகின்றது. இந்த வீழ்ச்சி தமிழ் மக்களுக்கு எதிரான புலிகளின் சொந்த வக்கிரத்துக்கு ஏற்ப, மேலும் துல்லியமாகத் துரிதப்படுகின்றது.

சிலர் மட்டும் கற்கும் கல்வி தேசியமாகி வரும் நிலையில், 2001-2002ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி புள்ளிவிபர ரீதியாக கல்வியின் வீழ்ச்சியை உறுதி செய்கின்றது. பல்கலைக்கழக அனுமதிக்கு திறமை அடிப்படையில் 625 தமிழர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில், 5210 சிங்களவர் தெரிவு செய்யப்பட்டனர். அதாவது மொத்தமாகத் திறமையடிப்படையில் தெரிவானோரில் தமிழர் 10.71 சதவீதத்தினர் மட்டுமே. 2000-2001 இல் திறமை அடிப்படையில் தெரிவான 1011 தமிழர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடின், வீழ்ச்சியின் அகலத்தை நாம் நிர்வாணமாக - பூச்சியமாகவே காணமுடியும். சென்ற வருட புள்ளி விபரங்களுடன் ஒப்பிடும் போது 38 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. 2001-2002 ஆண்டில் திறமையடிப்படையில் மருத்துவத்துறையில் 14 தமிழ் மாணவர்களும், 23 முஸ்லிம் மாணவர்களும் தெரிவானார்கள். அதே நேரம் சிங்கள மாணவர்கள் எண்ணிக்கை 306 ஆக தெளிவாக இருந்தது. உயிரியல் துறையில் 2 தமிழர்கள் தெரிவாக சிங்களவர் 175 பேர்



தெரிவானார்கள். சட்டத்துறையில் 67 சிங்கள மாணவர்கள் தெரிவான போது, தமிழர் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் தலா ஒருவர் மட்டுமே தெரிவானார்கள். கல்வியின் வீழ்ச்சி போன்றே, இது அனைத்து துறையிலும் பிரதி பலிக்கின்றது. மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியுடன் கூடிய கொள்ளையடிப்புகள் நிகழ்காலச் சமுதாயத்தை விழுங்கும் போது, எதிர்கால சமூகம் நிர்வாணமாகின்றது. மிகவும் வசதியான செழிப்பான சமூகம் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த நிலையில், மிகவும் பின் தங்கிய வசதியற்ற சமூகம் நாட்டில் எஞ்சி வாழ்கின்றது. இந்தப் போக்குக்கு தமிழ்த் தேசிய வீரர்களின் தேசிய விரோதக் கொள்கை தான் அடிப்படையான காரணம். தேசிய விரோதப் போக்கு ஒரு புல்லுருவி கூட்டமாகி அராஜகத்தை விதைத்த போது, பின் தங்கிய சமூகம் மேலும் ஆழமாக ஊசலாடியது. இந்த நிலையைப் பயன்படுத்தி ஒரு புதிய புல்லுருவி வர்க்கம் ஒன்று சமுதாயத்தை இயக்கும் சக்தியாகியது. மக்கள் நிலை தடுமாற மக்களின் சொத்துகள் சிங்கள இராணுவ இன அழிப்புக்குள்ளும் தரைமட்டமாகியது. மறு தளத்தில் புல்லுருவி வர்க்கத்தின் சூறையாடலுக்கும், தேசிய வீரர்களின் அபகரிப்புக்குள்ளும் சிக்கிய போது, சமுதாயம் அனைத்து படைப்பாற்றலையும் அதன் அடிப்படையையும் இழந்து நிற்கின்றது. இந்த நிலையில் தமிழ்ச் சமூகம் ஒரு பின்தங்கிய சமுதாயமாக மாறிவிட்டது. புல்லுருவிச் வர்க்கம் ஏகாதிபத்திய நுகர்வு மற்றும் பண்பாட்டை அடித்தளமாக்க, ஏகாதிபத்தியம் தேசியவாதிகளின் துணையுடன் சமுதாயத்தை காலுக்குக் கீழே கொண்டு வந்துள்ளது. சமுதாயத்தின் வீழ்ச்சி என்பது, ஆளும் அனைத்து பிரிவின் நெம்புக்குள் சிக்கி ஒட்ட மொத்தமாக அழிக்கின்றதாகும்.

எந்தச் சட்டமும் கட்டுப்படுத்த முடியாத புதிய வரி அறவிடும் முறை, மேலும் தமிழ்ச் சமூகத்தை மோசமாக்கி வருகின்றது. தமிழ் மக்கள் தமது சொந்த உழைப்பை வாழ்வை, வரிகள் மூலம் நாள் தோறும் வாங்கும் பொருளில் இருந்து விற்கும் பொருளின் எல்லா எல்லைகள் வரை இழக்கின்றனர். அண்மையில் வெளியான புள்ளி விபரம் ஒன்று 2002 இல் புலிகள் ஏ-9 பாதையில் பயணிகள் போக்குவரத்து வரி மற்றும் உணவு பொருட்கள் மீதான வரிகள் மூலம் 234 கோடி ரூபாயை திரட்டியதாக கூறுகின்றது. இதை விட பல்வேறு வரிமுறை மூலமும் மற்றைய பொருட்கள் சார்ந்தும் 300 கோடி ரூபா திரட்டியுள்ளதாக சர்வதேச ஆய்வு மதிப்பிட்டு மையம் ஒன்று தகவல் வெளிப்படுத்தியுள்ளது. இதுவும் ஒரு பகுதி மட்டும் தான். கட்டுப்பாடற்ற கட்டாய பண அறவீடுகள், மறைமுகவரி, சொத்துகளை வாங்கி விற்பது, சொத்துகளை அபகரிப்பது, உற்பத்திகளை மிகக் குறைவானதை தாம் தம் நலன் சார்ந்து நிர்ணயித்த விலைக்கு பலாத்காரமாக கட்டாயப்படுத்தி வாங்கி அதை சில மடங்காக விற்பது (இதை அடிப்படையாக கொண்ட பல போராட்டங்கள் புலிக்கு எதிராக நடந்துள்ளது) என்று எண்ணற்ற வரிகள் மூலம் திரட்டப்படும் பணத்தின் அளவு யாருக்கும் தெரியாது. ஆனால் பணம் திரட்டப்படுகின்றது. யாருடைய பணம். மக்களின் பணம். தேச மக்களின் பணம். தேச மக்கள் தமது வியர்வை சிந்தி சொந்த உழைப்பில் இருந்து உருவாக்கிய பணம். பண இழப்புகள், மக்களின் வாழ்வை தேசத்தின் வாழ்வை அழிக்கின்றது. மக்கள் பணத்தை இழக்க, தேசியம் கந்தலாகிவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் தலைவிதியை இந்தளவுக்கு கந்தலாக்கி கொள்ளையடிப்போர் யார்? யுத்தம் மக்களின் வாழ்வை அழிக்க, தவறான யுத்த நிலைமை வாழ்வை நரகமாக்கின்றது. போராட்டங்கள் பல கடந்த நிலையில் அரசின் வரி, புலிகளின் வரி என்ற இரட்டைச் சுமைகளை தமிழ் மக்கள் சுமந்து சிக்கித் திணறுகின்றனர். பணம் பணம் என சூறையாடப்படும் நிலையில், அது மக்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ மீளப் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக இது ஏகாதிபத்திய ஆயுதச் சந்தையிலும், நவீன பொருட்களிலும் (உதாரணமாகப் பைரோ ஜீப் ஒன்று ஒரு கோடி ரூபா) செலவிடுவதன் மூலம், பணம் எகாதிபத்தியத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்லுகின்றது. பணத்துக்கு என்ன நடக்கின்றது என்பது யாருக்கும் தெரியாது. நடக்கும் பேச்சு வார்த்தை சார்ந்து உருவாகும் ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு இணங்க, இந்த நிதி சில பெரும் மூலதனத்தைக் கொண்ட சில புலித் தரகு முதலாளிகளை உருவாக்கலாம். நாம் இதை எதிர் காலத்தில் நிர்வாணமாகவே தெரிந்து கொள்வது தவிர்க்க முடியாது.

ஆடம்பரமாகவும் அட்டகாசமாகவும் நுகர்வு வெறியுடன் செயலாற்றும் புலிகள், தன்னார்வக் குழுக்களின் பணத்தைத் தமதாக்க முடியாத வெற்றுப்பேரத்தை அடைகின்ற போது, அதைத் திட்டவும் செய்கின்றனர். பாலசிங்கம் "இங்கு இயங்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தமது நிர்வாகச் செலவுக்கும், வாகன வசதிக்கும் பெரும் நிதியை விரயமாக்குகின்றன. ஐ.நா. ஒதுக்கும் நிதியில் முக்கால் பங்கை தமது செலவுக்கு எடுத்துவிட்டு, மீதியில் பாயும், பீங்கானும் வழங்கி வருகின்றன. அத்துடன் புலிகளுக்கு எதிராக அறிக்கை விடுகின்றன. அவர்களை இங்கிருந்து அடித்துக் கலைக்க எங்களுக்குத் தெரியாதா? ஆனால் நாம் பொறுமையோடு இருக்கின்றோம்" என்று கூறுகின்றார். தன்னார்வக் குழுக்களை அரசியல் ரீதியாக எதிர்க்கவில்லை புலிகள். மாறாக விமர்சனங்களை தாங்கி கொள்ள முடியாத நிலையிலும், பணத்தை சொந்தமாக்க முடியாத நிலையிலும் இருந்தே இந்தக் கூற்று எழுகின்றது. வாகனத்தைப் பற்றி பேசும் போது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஓடும் பைரோ ஜீப்புகளின் விலை என்ன. கோடிக்கணக்கான பெறுமதி உடைய எத்தனை வாகனங்கள் ஓடுகின்றது. எல்லையைக் கடக்கும் போது இராணுவத்திடம் எத்தனை பைரோ ஜீப்புகளை புலிகள் இழந்துள்ளனர். இங்கு இந்த பணமானது போராட்ட அவசியம் கருதிய நிதியா? என்பதைப் புலிகளில் இருந்து பிரிந்த கருணா, வடக்கு புலித் தலைவர்களின் ஆடம்பரம் என்று தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார். மக்களின் ஏழ்மையைப் பற்றி கருணாவும் சரி, வடக்கு புலித் தலைமையும் சரி அக்கறைப்பட்டது கிடையாது. மக்களை ஏமாற்றவும், அவர்களைச் சூறையாடவும் வைக்கும் வாதங்கள் என்ற எல்லையைத் தாண்டி இதற்கு விளக்கம் இருப்பதில்லை. (இது பின்னால் கட்டுரையில் இணைக்கப்பட்டது.)

இப்படி வறண்டு போன மண்ணில் திரட்டப்படும் பணம் உழைக்கும் மக்களையே கையேந்தும் பரதேசியாக்குகின்றது. நிலத்தில் பாடுபட்டு வியர்வை சிந்தி உழைத்த மக்கள், தாம் உற்பத்தி செய்த பொருட்களை விற்க



முடிவதில்லை. நாட்டில் உணவு இன்றி கையேந்தும் முரண்பாடும் இங்கு சம காலத்தில் நிகழ்கின்றது. இந்த வருட (2003) ஆரம்பத்தில் வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பகுதிகளில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. காலபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியதை அடுத்து, விலை வீழ்ச்சி ஏற்பட்டது. 69 கிலோகிராம் நிறையுள்ள ஒரு மூடை நெல் 800 ரூபாவிலிருந்து 850 ரூபாவரை விற்கப்படுகின்றது. இதன் விலையைத் தனிப்பட்ட வியாபாரியே தீர்மானிக்கின்றான். காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் எரு, உரம், கிருமிநாசினி, களைக்கொல்லி, கூலி என்று பலவற்றிற்கும் செலவு செய்த நிலையில், விலை வீழ்ச்சி விவசாயிகளைப் பிச்சைக்காரர் ஆக்கின்றது. ஒரு மூடை நெல்லை (69கிலோ) ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு விற்பனை செய்தால் தான் உழைப்புக்குக் கூலியின்றி நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். பல வருடங்களுக்கு முன்னர் நெற் சந்தைப்படுத்தும் சபை விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்கு என்ற பெயரில் நெல்லை கொள்வனவு செய்தது. தற்போது இச்சபை உலகமயமாதல் நிபந்தனைக்கு ஏற்ப அதை நிறுத்தியுள்ளது. இந்த நிலையில் புலிகள் 800 முதல் 850 ரூபாவுக்கு நெல்லை கட்டாயப்படுத்தி வாங்கி, விவசாயிகளை ஓட்டாண்டியாக்குகின்றனர்.

வியர்வை ஆறாக சிந்தி தன்மானத்துடன் உழைத்து வாழும் விவசாயிகளின் துன்பம் இது. விதைக்கு வரி, உரத்துக்கு வரி, கிருமிநாசினிக்கு வரி, கூலிக்கு வரி, தண்ணீருக்கு வரி, உற்பத்திக்கு வரி, நெல்லை கொள்வனவு செய்யும் தனியார் முதலாளிக்கு மேலதிக வரி என புலிகளின் வரிமுறையே தேசியமாக உள்ளது. அரசின் வரிமுறையுடன் இது மேலதிக வரிமுறை. இரண்டு ஆளும் வர்க்கத்தால் தமிழன் இரட்டை வரிமுறைக்கு உள்ளாகின்றான். ஆழமாகப் பார்த்தால் மூன்று வரிமுறை உண்டு. ஏகாதிபத்தியத்தின் மறைமுக வரியும் உண்டு. சிங்கள மக்களில் இருந்து அதிகமாக மேலதிகமாக மிக கொடுமையான ஒரு வரிமுறைக்கு தமிழ் விவசாயிகள் உள்ளாக்கப்பட்டு வாழ்க்கையை இழக்கின்றான். தமிழ் விவசாயிகளுக்கும் சிங்கள விவசாயிகளுக்கும் ஒரே பொருளில் கிடைக்கும் லாபம் நட்டம் வேறுபடுகின்றது. இதில் தமிழ் விவசாயிகளின் கதை சொல்ல வேண்டியதில்லை. இது எல்லா உற்பத்திக்கும் பொருந்துகின்றது. இதற்கு வெளிச்சம் பிடித்து தமிழ்க் குறுந் தேசியவாதிகள் தமது குருட்டுக் கண்ணால் பார்க்க வேண்டியதில்லை. உண்மையில் தமிழ்த் தேசியம் மட்டுமல்ல தேசியப் பொருளாதாரமும் அழிகின்றது. உற்பத்தியை செய்வதை விட நிலத்தை சும்மாவிடுவதே மேல் என்பதை விவசாயிகளின் நட்டம் உணர்த்துகின்றது. தமிழ்த் தேசமும் தேசியப் பொருளாதாரமும் ஆழமாகச் சிதைகின்றது. இதனால் யார் லாபம் அடைகின்றனர்? மக்களா!? அல்லது ஏகாதிபத்தியமும், அதன் எலும்பை நக்கும் புல்லுருவிக் கூட்டமுமா!?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் - 2

# சமாதானம் என்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில்

கடந்த இரண்டு வருடத்துக்கு மேலாக யுத்தமற்ற ஒரு அமைதி புகைந்து கொண்டிருக்கின்றது. மக்கள் விரோத நடத்தைகள் ஜனநாயகப் பூர்வமான சமூக ஒழுக்கமாகி, புதிய பரிணாமம் பெற்று வருகின்றது. இந்தச் சூழல் பலதரப்பட்ட பிரிவுகளுக்குச் சாதகமானதும், பாதகமானதுமான பல மக்கள் விரோத அம்சங்களை உருவாக்கியுள்ளது. மறுதளத்தில் நாடு அடகு வைக்கப்படுவதும், ஏலம் விடப்படுவதும் என்றும் இல்லாத வேகத்தில் நடந்து வருகின்றது. மக்கள் தமது சொந்தத் தேசிய வாழ்வியல் இருப்புகள் அனைத்தையும் வேகமாக இழந்து வருகின்றனர். உலகமயமாதல் நடைமுறைகள், இலங்கையில் கரைபுரண்டோடுகின்றது. இதுவே அமைதி மற்றும் சமாதானத்தின் தலைவிதியாகியுள்ளது.

யுத்தம் மக்களை நேரடியாகவே ஒரு பதற்ற நிலையில் வைத்து இழிவாடி சூறையாடியது என்றால், அமைதியானது, நாகரீகமாகவும் பண்பாகவும் சூறையாடுகின்றது. யுத்தம் மக்களை ஆயுத முனையில் நிறுத்தி, யுத்த வெறியூட்டி அறியாமையைச் சமூகமயமாக்கி மந்தையாக்கியது. அமைதியுடன் கூடிய சமாதானமோ, அதையே நாகரிகமாக வழ்வியலை ஆடம்பரமாக்கி நுகர்வை வக்கிரமாக்கி சிந்தனைச் சுதந்திரத்தை அழித்து, பண்பாட்டு கலாச்சார வழிகளில் சாதிக்கின்றது. சமுதாயத்தை இழிவாக்கி அடிமைப்படுத்தும் நோக்கத்தை, யுத்தத்தைத் தொடர்ந்து அமைதியும் வெற்றிகரமாக செய்கின்றது. எங்கும் பதற்றம், அறியாமை, சூனியம், மிரட்டல், பீதி, ஆடம்பரம், சீரழிவு, மூடத்தனம், வக்கிரம், வறுமை, இயலாமை, இன்மை, வரி, சூறையாடல், நீதியின்மை, கொலை பயமுறுத்தல், ஊழல், நுகர்வு வெறி,



கவர்ச்சி, சோம்பேறி, அதிருப்தி, மன உளைச்சல், பண்பாட்டுச் சிதைவு, கலாச்சார சீரழிவு எனத் தொடரும் சமுதாயத்தின் அழிவு, சமூகத் தலைவிதியாகியுள்ளது. இது இனம் கடந்து, இலங்கை எங்கும் ஒரு சமூகப் பண்பாடாக ஊடுருவி சமூகமயமாகின்றது. சமூக நலன், மக்கள் நலன் என்ற உயாந்த மனிதப் பண்புகள் இழிவாடப்படுகின்றது. தனிமனித வாதமும், குறுகிய வக்கிரத்துடன் கூடிய சமூக விரோதப் பண்பும் போற்றப்படுகின்றது. சமூக அறியாமையை அத்திவாரமாக கொண்டு, உலகமயமாதல் என்ற தேசிய விரோத மக்கள் விரோத அமைப்பு இலங்கையில் வான் உயர கட்டப்படுகின்றது. இந்த மனித விரோத செயல்களை பல்வேறு சமூகத் தளங்களில் விரிவாக ஆராய்வோம்.

## அமைதி சமாதானம் என்ற பின்னணி இசையில் தேசிய நலன்கள் சூறையாடப்படுகின்றன

இலங்கையை ஆளும் ஆட்சிகள், பெருந் தேசிய சிங்கள இனவாதத்தால் நிறுவனப்படுத்தப் பட்டுள்ளது. இந்த இனவாத அமைப்பில் எந்தக் கட்சி பாராளுமன்ற ஜனநாயக சூதாட்டத்தில் தெரிவானாலும், அதன் அடிப்படை கட்டமைப்பு இதற்குள் தான் நிறுவப்பட்டுள்ளது என்பதை, தொடர்ச்சியாக கடந்த இரண்டு வருட அமைதி மீண்டும் மீண்டும் நிறுவுகின்றது. இந்த இனவாத அமைப்பு தமிழ் மக்களின் தேசியத்தை மட்டுமல்ல, சிங்கள மக்களின் தேசியத்தைக் கூட அழித்தொழிப்பதில், இனவாதக் கட்டமைப்பை சிறப்பாக நிலைநிறுத்துகின்றது. இந்த இனவாத அமைப்பு உலகமயமாதலை நீடித்து பாதுகாக்கும் வகையில், இலங்கையில் ஏகாதிபத்திய நலன்களுக்குச் சேவை செய்கின்றது.

நாட்டையும், மக்களின் அன்றாட உணவையும் கொள்ளையிட முயலும் ஏகாதிபத்தியங்கள் பாரிய முதலீடுகளை செய்கின்றன. ஜப்பான் விவசாயம் மற்றும் கடற்தொழில் சார்ந்து, வடக்கு-கிழக்கில் பத்துத் தொழிற் சாலைகளை அமைக்கவுள்ளதாக 2004 மார்ச் மாதம் அறிவித்துள்ளது. இவை விவசாயத்துறையில் பழங்களைப் பதனிட்டு பொதி செய்தும், கடல் வளம் சார்ந்து மீன், இறால், நண்டு போன்றவற்றை பதனிட்டுப் பொதிசெய்தும் ஏற்றுமதி செய்யவே இத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஏற்றுமதிகளை விரைவாக மேற்கொள்ள வசதியாக காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும் ஜப்பான் முடிவு செய்துள்ளது. மக்கள் உண்டு பிழைக்கும் உணவைச் சூறையாடவும், அந்த வளத்தை உறுஞ்சவும் பின் நிற்காத ஏகாதிபத்தியங்கள், அதை மூடிமறைக்க சில உதவித் திட்டங்களைப் போர்வையாகப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக இந்த திட்டம் அறிவிக்கப்பட்ட அதே காலத்தில், ஜப்பான் 38 லட்சம் ரூபாவை 2500 ரூபா வருமானத்துக்கு குறைந்தவர்களுக்கு என கொடுத்துள்ளது. அதே நேரம் கொழும்பில் உள்ள ஏழைகளுக்கு என 50 லட்சம் ரூபாவை வழங்கியது. பொருளாதார முன்னேற்றத்துக்கு என 135 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் எல்லைக்குள் ஊடுருவிச் செல்வதும், மறுகாலனியாதிக்கத்தை நிறுவவும் என்றுமில்லாத அளவில் ஏகாதிபத்திய நடவடிக்கைகள் அன்றாடம் தொடருகின்றன. ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனைக்கென 67,50,000 ரூபா பெறுமதியுடைய பால் பதனிடும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. தாய்வான் யுத்தக் கப்பல் இலங்கை வந்ததுடன், 1.6 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களை வழங்கியது. 2004 மார்ச் மாதம் சார்ஸ் நோயைக் கண்டறியும் அறிவியலுக்கு என, ஆசியா அபிவிருத்தி வங்கி 1.8 கோடி ரூபாவை வழங்கியது. தேர்தலுக்கு என அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் முதல் பல நாடுகள் நிதி வழங்கின. இலங்கையின் தேவை அனைத்தும், நேரடியாக ஏகாதிபத்தியங்களின் தலையீட்டுடன் வழங்கப்படுவதை அன்றாடச் செய்திப் பத்திரிக்கையில் நாம் காணமுடியும். ஏகாதிபத்திய நாடுகளில் ஏழைகளின் நிலை கவனிப்பாரற்று கிடக்கின்றது. எலும்பும் தோலுமாக உள்ள ஆப்பிரிக்கா மக்களின் அவலத்தை இந்த ஏகாதிபத்தியங்கள் கண்டு கொள்வதில்லை. அங்கு வளங்கள் முழுக்க சூறையாடி முடிந்த நிலையில், மூலதனத்துக்கு என்னதான் அக்கறை கிடக்கின்றது? இலங்கையின் வளங்கள் ஏகாதிபத்தியத்துக்கு பொன் கொழிக்கும் பூமியாகின்றது. இதனால்தான் அதிகமான கரிசனையுடன் களமிறங்கி நிற்கின்றனர்.

## சிங்கள இனவாத அரசு திட்டமிட்ட வகையில் தேசியத்தின் அனைத்து பண்பியல் கூறுகளையும் அழிக்கின்றது

ஏகாதிபத்திய நலன் என்பது, நாட்டை எப்படி ஒட்டுமொத்தமாக விற்பதன் மூலம், மறு காலனியாதிக்கத்தை விரைவாக ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. இலங்கையில் சமாதானம் என்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் பின்பாக, இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் மூன்று மடங்காகியது. 2003 இன் முதல் ஆறு மாதங்களில் வெளிநாட்டு மூலதனம் 1,700 கோடி ரூபாவாக இருந்தது. இது 2003-இன் இறுதியில் வெளிநாட்டு முதலீடுகள் 3,000 கோடி ரூபாவாக இருக்கும் என்று, முதலாளிகளின் முதலீட்டுச் சபை அறிவித்து இருந்தது. ஆனால் அது 5000 கோடி ரூபாவைத் தாண்டியது. அனுமதித்த திட்டங்களில் 60 சதவீதமானவைகளில், வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்கனவே சூறையாடத் தொடங்கியிருந்தன. இவை பெரும்பாலும் கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில், அதாவது அதியுயர் பாதுகாப்புப் பிரதேசங்களில் முதலீடப்பட்டது. பொல்காவலையில் பெரும் மூலதனத்துடன் கார் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. சர்வதேச வர்த்தகத்தின் ஒரு பகுதியாக தொலைபேசி பரிவர்த்தனை விரிவாகின்றது. இதனடிப்படையில் 2003 முடிவுக்குள்ளாக 900 கோடி ரூபா (9 கோடி டொலர்) மூதலதனத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்யும் ஒப்பந்தங்களைச் செய்திருந்தது. இதன் மூலம் 2003 இல் தொலைபேசி எண்ணிக்கை பயன்பாடு 3 லட்சத்தால் அதிகரித்துள்ளது. மூன்று மலேசிய காஸ் நிறுவனங்கள் 2004-இல் இலங்கையில் முதலீடு செய்ய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.



முதலாவது சுப்பர் மக்கற்றுடன் கூடிய வீட்டு அமைப்பு திட்டதிற்கு பசுவிக் சர்வதேச அமைப்பு பம்பலப்பிட்டியில் 85 கோடி ரூபாவை முதலீட்டுள்ளது. இதில் நவீன 58 வீடுகளையும், 93 கடைத் தொகுதி கொண்டதாக கட்டப்படுகின்றது. மத்தியத் தரத்துக்கு மேற்பட்ட பிரிவினரின் நலன்களையும், அவர்களின் சொகுசு வாழ்வையும் உறுதி செய்யும், சுப்பர் மக்கற்றுகளுடன் கூடிய நவீன வீட்டுத் தொகுதிகளை உருவாக்குவதில், வெளிநாட்டு மூலதனங்கள் களமிறங்கியுள்ளது. மக்களின் அன்றாட பொழுது போக்கு இடமான காலி முகத்திடலைத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 9.90 கோடி ரூபாவிற்கு தேசிய அரசுகள் விற்றுவிட்டன. மக்களின் தேசிய சொத்தான பஸ் போக்குவரத்தை ஆறுகட்டமாகப் பிரித்து நயவஞ்சகமாக அரசு தனியார்மயமாக்கவுள்ளது. இதன் முதல் கட்டமாக 39 சதவீதப் பங்கை 150 கோடி ரூபாவுக்கு பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றுக்கு தாரைவார்த்துள்ளது. இதை அரசு மக்களின் ஆணை, ஜனநாயகத்தின் உயர்பண்பு என்று பீற்றுகின்றனர். மறுபுறத்தில் தனியார்துறையை ஊக்குவிப்பதை எந்தத் தேசியவாதியும் கண்டுகொள்வதில்லை. யாழ்ப்பாணத்தில் யுத்தத்தின் ஊடாகத் தனியார் பஸ்சேவை ஆதிக்கம் பெறுவதை அரசு ஊக்குவித்தது. தமிழ்த் தேசியவாதிகள் இதற்கு தாராளமாகவே எண்ணைவார்த்து கொழுத்தினர். தற்போது 350 பஸ்களுடன் இயங்கும் தனியார்துறை, அமைதி சமாதானம் என்ற கோஷத்தின் கீழ் மேலும் 150 பஸ்களால் தனது பலத்தை அதிகரிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. தேசிய போக்குவரத்தை திட்டமிட்டு அரசு ஒழித்துக் கட்ட, தமிழ்த் தேசியவாதிகள் சாமரம் வீசுகின்றனர்.

இலங்கையில் உழைக்கும் மக்களின் ஓய்வூதியப் பணத்தைக் கொள்ளையிட முயலும் ஏகாதிபத்தியங்கள், அதற்கு இசைவான முதற்கட்ட முயற்சியில் இறங்கியுள்ளது. உலக வங்கியின் உத்தரவுக்கு இணங்க ஓய்வூதிய நிறுவனமான இ.பி.எவ், இ.ரி.எவ் (EPF, ETF) இரண்டும் 2004-இல் இணைக்கப்படவுள்ளது. இதில் உள்ள மொத்தத் தொகை 32000 கோடி ரூபாவாகும். உழைக்கும் மக்களின் ஓய்வூதியப் பணமான 32000 கோடி ரூபாவையும் சுருட்டிக் கொள்ளவும், இதை முறை கேடாக தமது சொந்த முதலீட்டுக்கே பயன்படுத்தவும் தொடங்கியுள்ளதுடன், இதைக் கொண்டே இலங்கை உட்பட மற்றைய நாடுகளுக்கு கடன் கொடுத்து வட்டி வசூலிக்கவும், உலகவங்கி முனைப்புக் கொண்டு திட்டங்களை முன் தள்ளுகின்றது.

அத்துடன் கொள்ளையிடுபவன் விரைவாக நாட்டுக்குள் வரவும், கொள்ளையிட்டவன் விரைவாக நாட்டை விட்டு வெளியேறவும் நவீன பாதைகள், நவீன விமான நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இதைப் பூர்த்தி செய்ய 80 சதுர மைல் பரப்பில் அமைய உள்ள இரண்டாவது சர்வதேச விமான நிலையம், மொனகலவில் அடுத்த மூன்று வருடத்தில் கட்டிமுடிக்கப்படவுள்ளது. இதன் செலவு (20 முதல் 50 கோடி டொலர்) 2000 முதல் 5000 கோடி ரூபாவாகும். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 70 கோடி ரூபா செலவில் புதிய இறங்கு பாதை ஒன்று கட்டப்படுகின்றது. உலகமயமாதல் விரைவு பெறுவதால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து, நாட்டை விட்டு வெளியேறுவோர், உள் வருவோரின் எண்ணிக்கை 30 லட்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. இந்த வகையில் நவீன வீதிகள், நவீன விமான நிலையங்கள் பல கட்டமைக்கப்படுகின்றது. இவை நாட்டின் மையமான கட்டுமானமாகிவிட்டது. இது கொள்ளை அடிப்பவனின் நேரடி நலனை மட்டுமல்ல, அவனுக்குச் சேவை செய்வதையும் கோருகின்றது. இதன் மூலம் மற்றவனின் குண்டி கழுவி பொறுக்கி வாழ்வது தேசியமயமாகின்றது.

## மேட்டுக்குடி வெள்ளைப் பன்றிகளின் சொகுசு சுற்றுலாக்கள்

நாட்டின் தேசியப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் சிதைக்கவும், பாலியல் ரீதியாக எம்நாட்டு பெண்களை, குழந்தைகளை ருசிக்கவும் வரும் வெளிநாட்டவனின் நலன்களை உறுதி செய்வதுடன், சொகுசுப் பண்பாட்டை ஏகாதிபத்தியம் கோருகின்றது. 2003 முதல் 8 மாதத்தில் மூன்று லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்தனர். இது 2002யுடன் ஒப்பிடும் போது 23 சதவீதம் அதிகமாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகை 2002 இல் முதல் ஆறு மாதத்தில் 1.73 லட்சமாக இருந்தது. இது 2003 இல் முதல் ஆறு மாதத்தில் 2.16 லட்சமாக அதிகரித்துள்ளது. எதை நோக்கி எந்தப் பண்பாட்டை நோக்கி எம் நாடு செல்லுகின்றது? வெள்ளைத் தோல் பன்றிகளின் வக்கிரத்தில் பொறுக்கி வாழ்வதைக் கோருகின்றது. இது அதிகரித்துச் செல்வதையே, அண்மைய சமாதானம் என்ற உலகமயமாதல் நிகழ்ச்சிநிரல் எடுத்துக் காட்டுகின்றது. 2003-இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 5 லட்சமாக அதிகரித்தது. இது 2002 உடன் ஒப்பிடும் போது ஒரு இலட்சத்தால் அதிகரித்தது. இதில் பிரிட்டனில் இருந்து 80,000 ஆயிரம் பேரும், இந்தியாவில் இருந்து 90,000 பேரும் வருகை தந்தனர். அமைதி சமாதானத்தின் பின் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு 2001 இல் 55,485 யாக இருந்தது. இது 2002-இல் 79,823 யாக அதிகரித்தது. இது ஒப்பீட்டளவில் 36 சதவீத அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதன் மூலம் சுற்றுலாத்துறை முன்னைய ஆண்டைவிட 81 சதவீதம் அதிகம் கொழுத்ததுடன், பன்றிகளுக்கு குண்டி கழுவிவிட 90 ஆயிரம் பேரை புதிதாக வேலைக்கு அமர்த்தியதன் மூலம், பண்பாட்டுச் சீரழிவைத் தேசியமயமாக்குவதில் தன்னைத் தானே மிதப்பாக்கியது. பன்றிகளுக்கு சேவை செய்ததன் மூலம், 2002 இல் இலங்கை சுற்றுலாத் துறை 2,200 கோடி ரூபாவைத் (22 கோடி அமெரிக்கா டொலரை) பெற்றது. இதற்காக நாட்டில் 217 ஹோட்டல்கள், 13,550 அறைகள் மக்களின் அன்றாட எதார்த்தமான வாழ்க்கைக்கு வெளியில் வக்கிரமாக இயங்குகின்றது. ஆனால் கொழும்பையும் கொழும்பைச் சுற்றியுள்ள சேரிகளிலும் வாழும் மக்களில், 40 சதவீதமானவர்கள் வாழவழியற்று கையேந்திப் பிழைக்கும் ஏழைகளாவர்.

சுற்றுலாத்துறைகள் குவிந்து கிடக்கும் ஒரு இடத்தைச் சுற்றி சேரிகள் விரிந்து வருகின்றன. இங்கு வாழும் தேச மக்கள் வான் உயர் ஹோட்டல்களை அண்ணாந்து பார்த்தபடி, வாழவழியற்ற நிலையில் கையேந்தி நிற்பதையே தேசிய ஜனநாயகம் என்கின்றனர். இது தமிழ் தேசியம் என்ற பெயரில் சில பத்தாயிரம் பேர் தியாகம் செய்த மண்ணில் கூட அரங்கேறுகின்றது. யாழ்குடா நாட்டில் 18 கோடி ரூபா செலவில் மூன்று ஸ்டார் ஹோட்டல்கள் அமைக்க தனியார்துறை முதலீட்டுள்ளது. வேலனையில் அமையும் இந்த நவீன உல்லாச விடுதி 50 அறைகளைக் கொண்டது. இதைவிட வேலணையில் 15 கோடி ரூபா செலவில் 35 அறைகள் கொண்ட மூன்று நட்சத்திர நவீன ஹோட்டல் ஒன்றை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையை நோக்கி தமிழ்த் தேசியவாதிகளும் சிங்கள அரசுக்கு நிகராகவே களம் இறங்குகின்றனர். வெளிநாட்டு சுற்றுலா மையங்களை உருவாக்கப் புலிகள் பெரும் மூலதனங்களை முதலீடுகின்றனர். சுற்றுலாத்துறை கவரக் கூடிய யாழ்குடா கரையோரங்களை யுத்தப் பயமுறுத்தல், மக்களின் இயலாமை மற்றும் மிரட்டல் மூலம் மக்களை பணியவைத்து மலிவு விலைகளில் பினாமிகளின் பெயரில் புலிகள் வாங்கிக் குவிக்கின்றனர். வன்னிக் காடுகளில் கூட நவீன ஹோட்டல்கள், நவீன உணவு விடுதிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. தேசிய மக்கள் இதை வேடிக்கை பார்க்க முடியுமே ஒழிய, நெருங்கிச் செல்ல முடியாது. இந்த பூமியில் தான் மக்கள் எலும்புந் தோலுமாக வாழவழியற்ற நிலையில் உள்ளோரை படமாக்கி, அதை பத்திரிக்கையில் போட்டு பணம் திரட்டிக் கொழுக்கும் தேசிய அவலம் அரங்கேறுகின்றது. வெளி நாட்டவனுக்கு சேவை செய்வதும், எச்சில் இலை பொறுக்குவதும் தேசிய கட்டுமானமாகின்றது. இதை பின்னால் விரிவாகப் பார்ப்போம். அண்மையில் வெளிவந்த புள்ளிவிபரம் ஒன்றில், வடக்கு கிழக்கில் ஆறு ஆயிரம் ஆண் சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகத் தெரிய வந்துள்ளது. உல்லாசத்துறை சிறக்க சூழல் பண்படுத்தப்பட்டுள்ளதையே இது காட்டுகின்றது. உல்லாசத்துறையை வளர்ப்பது புலிகளின் தேசிய இலட்சியமாகி உள்ள நிலையில், எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு சிறுவர் சிறுமிகளைக் கொண்டும், விபச்சாரத்தைக் கொண்ட வெள்ளைப் பன்றிகளின் பாலியலை பூர்த்தி செய்து பணம் சம்பாதிப்பது தேசிய வழியாகிவிடும். பல ஆசிய நாடுகளில் காணக் கூடிய இந்த நிலை, எதிர்காலத்தில் இலங்கை முழுக்க சர்வசாதாரணமாகிவிடும்.

## மேட்டுக்குடிகளின் வீடுகளுக்கே சென்று சேவை செய்யக் கோரும் தேசியம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற பெயரில், சமூகப் பண்பாட்டுச் சிதைவை அரசு திட்டமிட்டு செய்கின்றது. அரசுசாரா நிறுவனம் ஒன்றின் அறிக்கை இலங்கையில் 10000 பாலியல் வன்முறைகள் குடும்பத்தில் நடப்பதாக அறிவித்துள்ளது. இதில் அரைவாசி தந்தைமாரால் நடத்தப்படுகின்றது. இதில் 100 மட்டுமே சட்டத்தின் முன் வருகின்றது. இதில் 54.5 தந்தைமாருக்கு எதிரான புகாராகும். இந்த நிலையில் கரு அழிப்பு இலங்கையில் வருடம் 9 லட்சமாகியுள்ளது. இதில் 15 சதவீதம் திருமணமாகாத கரு அழிப்பாக உள்ளது. பல லட்சம் குடும்பங்கள் பிரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையில் வரைமுறையின்றி சிதைகின்றது. கணவன் மனைவி பிரிந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்வது, நிரந்தரமான சமூக போக்காகியுள்ளது. ஒழுக்கம் மீதான பரஸ்பர சந்தேகங்கள் மன உளைச்சலையும், உளவியல் சிதைவையும் ஏற்படுத்தியுள்ளது. விவாகரத்துகள் பெருக்கெடுக்கின்றது. உழைப்பைப் பகிர்வதில் ஏற்படும் முரண்பாடுகள் சமூக உறவாக்கத்தையே பிளக்கின்றது. குழந்தைகள் தாய் இன்றி வாழ்வதன் மூலம், வக்கிரமடைந்து வருகின்றனர். குழந்தைகள் மேலான பாலியல் ரீதியான வக்கிரங்கள் தலைவிரித்தாடுகின்றது. பாலியல் குற்றங்கள் அதிகரிக்கின்றது. குழந்தைகள் மேலான பாலியல் வன்முறை தேசிய பண்பாகின்றது. குற்றங்களின் தன்மை வக்கிரமடைகின்றது. தற்கொலைகள் என்றுமில்லாத அளவில் அதிகரித்து, ஆசியாவிலேயே முதன்மை நாடாகியுள்ளது. இவற்றை தனித்தனியாக விரிவாகக் கீழே பார்ப்போம்

வெளிநாட்டை நோக்கி செல்லும் ஒவ்வொரு பெண்ணும், பாலியல் ரீதியான பாதுகாப்பற்ற ஒரு நிலையில் தள்ளப்படுகின்றனர். இது அவர்களுக்கு மட்டுமல்ல, ஐரோப்பா நோக்கி தமிழ் ஏஜென்சி மூலம் வரும் ஒவ்வொரு பெண்ணின் தலைவிதியும் கூட. தனிப்பட்ட ஆண்கள் திட்டமிட்டு உருவாக்கும் நான்கு சுவர்களைக் கொண்ட சமூகச் சிறைக்குள், பாலியல் மிருகங்களின் வன்முறைக்கு உட்படுகின்றனர். சிலர் தவிர்க்க முடியாத வகையில் இணங்கிப் போகின்றனர். எதிர்த்தால் மரணம் அவர்களின் தலைவிதியாகின்றது. இறந்த பெண்களின் பிரேதசங்களை விமானம் மூலம் ஏற்றி இறக்கப்படுவது அதிகரிக்கின்றது. வீட்டு வேலைக்குச் செல்லும் பெரும்பாலான பெண்களின் கதி இது. இந்த வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்ற பெண்களில், 91 சதவீதம் பேர் வீட்டு வேலைக்கே இலங்கை அரசால் ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். 2000 முதல் 2003 ஐப்பசி வரை வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்றவர்களின் 400 இறந்த உடல்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது. பெரும்பாலாவை பெண்களின் சடலங்களாக இருந்தது.

மத்திய கிழக்கில் 37 இலங்கையரின் பிரேதங்கள் 2003 ஜூலை மாதத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்தது. இந்த 37 பேரில் 22 பேர் பெண்களாவர். இந்தப் பெண்கள் அனைவரும் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களாவர். இறந்த இந்த 37 பேரில் 16 பேர் சவூதி அரேபியாவில் இருந்து சடலமாக மீள அனுப்பப்பட்டவர்கள். 9 பேர் உடல் லெபனான் நாட்டில் இருந்து அனுப்பப்பட்டது. இவற்றைவிட ஹெங்ஹொங்கில் கொலை செய்யப்பட்ட ஒரு பணிப்பெண்ணின் சடலமும், தற்கொலை செய்துகொண்ட மூன்று பணிப்பெண்களின் சடலமும், திடீர் விபத்துக்களில் இறந்த 8 பேரின் சடலமும் தேசிய சொத்தாக மீண்டன. சடலங்களை பெறுவது, அதை எற்றி இறக்குவதும், சடலங்கள் அனாதையாகாது உறுதி செய்வதும் தமது தேசியக் கடமையாக பீற்றி, அவர்கள் மேல் அக்கறை உள்ளதாக அரசு



தம்பட்டம் அடிக்கின்றது. ஆனால் சொந்த நாட்டில் சொந்த மக்கள் உழைக்கவும் வாழவும் வழிகாட்டவும் வக்கற்றவர்கள், அன்னிய நாட்டில் தொழில் புரிவோரின் தொழில் பாதுகாப்பு உட்பட மனித உரிமையை பாதுகாக்க வக்கற்றவர்களின் அரசை தெரிவு செய்வதையே, நாம் ஜனநாயகம் என்று பீற்றுவது இன்றைய சமூக அறிவாகிப் போன உலகத்தில் நாம் மந்தைகளாக வாழ்கின்றோம் என்பதை நாம் உணரத் தவறுகின்றோம்.

12 லட்சம் பேர் அரபு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் தொழில் புரிகின்றனர். இதில் 65 சதவீதம் பேர் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை செய்கின்றனர். 2002 இல் வீட்டுப் பணிப் பெண்கள் இலங்கை அரசாங்கத்திடம் தமது நிலை தொடர்பாக 7103 முறைபாடுகள் செய்துள்ளனர். இலங்கை அரசிடம் செய்த முறைப்பாடுகளே இவ்வளவு என்றால், குற்றத்தின் அளவு பல மடங்காகும். இதை மேலும் ஆழமாகப் புரிந்து கொள்வது அவசியம். 2000 ஆண்டு முதல் ஆறு மாதத்தில் நாடு திரும்பிய பெண்களில் 240 பேர் பாலியல் வன்முறை தொடர்பாக, கொழும்பு விமான நிலையத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் முறையிட்டுள்ளனர். இந்த முறையீடுகள் 2002 இல் முதல் ஆறு மாதத்தில் 70 சதவீதத்தில் அதிகரித்தது. இவை சமூக ஆணாதிக்க ஒழுக்கப் பண்பாட்டுக் கோவைகளை மீறி முறையிடப்பட்டவை. உண்மையில் குற்றம் பல மடங்காக இருப்பதை நாம் காணவேண்டும். இதற்கு வெளியில் மனித அவலங்கள் பன்மைத் தன்மை வாய்ந்தவை. 2002-இல் 1704 முறைப்பாடுகள் சம்பளம் தரப்படாமை பற்றி முறையிட்டுள்ளனர். இது 45 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அலைக்கழிய வைத்து தொல்லை கொடுத்த முறைபாடு 2002-இல் 1041 கிடைத்துள்ளது. இவை அனைத்தும் நாடு திரும்பும் போது, பல தடைகளைத் தாண்டி கொழும்பு விமான நிலையத்தில் முறையிடப்பட்டவை மட்டுமே இவை. 2002-இல் 44 கற்பழிப்பு பற்றி முறைப்பாடு செய்துள்ளனர். 2002-இல் 20 பேர் தந்தைகளற்ற குழந்தைகளுடன் நாடு திரும்பியுள்ளனர். இது 2002-இல் முதல் ஆறு மாதத்தில் 157 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2002 இல் கிடைக்கப் பெற்ற 7103 முறைபாட்டில் 3191 முறைபாடுகள் சவுதியில் சென்று திரும்பியோர் செய்துள்ளனர். இதைவிட குவைத்தில் தொழில் புரிந்தோர் 1041யும், லெபனானில் தொழில் புரிந்தோர் 800யும், அரபு ஐக்கிய இராச்சியத்தில் தொழில் புரிந்தோர் 497யும், ஜோர்டனில் தொழில் புரிந்தோர் 467 முறைபாடுகளையும் செய்திருந்தனர். இதைவிட பலவித இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட அண்ணளவாக 1300 பெண்கள் 2003 முதல் 6 மாத கால எல்லைக்குள் திரும்பி வந்தாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இந்த வகையில் குவைத் நாட்டிலிருந்து 503 பேரும், சவூதி அரேபியாவிலி ருந்து 406 பேரும் திரும்பி வந்தனர்.

குற்றங்கள், மனித அவலங்கள், பிரேதங்களையும் இறக்குமதியாக்கும் அரசு, தொடர்ந்து மனித உழைப்பை ஏற்றுமதியாக்குவதில் பின் நிற்கவில்லை. இதை மூடிமறைக்க முறைப்பாட்டு மையங்கள், உதவித் திட்டங்கள், தீர்வற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகள், காப்புறுதித் திட்டங்கள், பயிற்சிகள் என்று தன்னை அலங்கரிக்கின்றது. இதன் மூலம் மனித உழைப்பின் ஏற்றுமதியை அதிகரிக்கின்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 2002-இல் பணிப் பெண்களுக்கான பயிற்சி என்ற பெயரில், 29761 பேருக்கு உழைப்பை எப்படி முகம் சுளிக்காது குண்டி கழுவி சம்பாதிப்பது என்ற பயிற்சியை அளித்துள்ளது. 2002 முதல் ஆறு மாதத்தில் இது 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த மனித ஏற்றுமதியில் 571 வெளிநாட்டு வேலைவாய்ப்பு தரகர்கள் செயல்படுகின்றனர். இந்த மனித விரோதத் தொழிலைச் செய்ய, 2002-இல் புதிதாக 50 நிறுவனங்கள் இதற்கான அனுமதியைக் கோரியது.

மறு தளத்தில் அரசு மனித ஏற்றுமதியைச் செய்யப் புதிதாகக் கையெழுத்திட்ட ஒப்பந்தம் ஒன்று, 191581 பேருக்கான ஏற்றுமதியை உறுதி செய்துள்ளது. இதைவிட மலேசிய அரசாங்கத்துடன் செய்த ஒப்பந்தம் ஒன்று, வருடம் 20000 கூலித் தொழிலார்களை ஏற்றுமதி செய்யக் கோருகின்றது. இதில் சிறந்த பயிற்சி பெற்ற தோட்ட தொழிலாளர்கள் முதன்மையாக அனுப்பப்பட உள்ளனர். அத்துடன் தற்பொழுது மலேஸியாவில் தொழில் புரியும் பத்தாயிரம் பேரின் சட்டவிரோதத் தன்மை அகற்ற ஒப்பந்தம் வழிவகுக்கின்றது.

மனிதனை ஏற்றுமதி செய்வதே தேசியக் கடமை என்று கொக்கரிக்கும் அரசின் சட்டபூர்வமான ஜனநாயக பூர்வமான சமூக அமைப்பில், இதை நாம் அங்கீகரிப்பது எமது சுதந்திரம் என்றால், எமது உணர்வு மனித விரோத வக்கிரமானதே. இந்த மனித ஏற்றுமதியை ஊக்குவிக்கும் போது, அதன் மனித விரோத சமூகக் கட்டமைப்பு நிறுவனமயமாகும் போது, கொழுத்த பணத் திரட்சியே இதன் அடிப்படையாக உள்ளது.

1998 முதல் 2002 வரையான காலத்தில் வீட்டுப் பணிப் பெண்கள் மற்றும் அரபு நாட்டில் தொழில் செய்யும் பெண்கள் 47800 கோடி ரூபாவை இலங்கைக்காக உழைத்துத் திரட்டினர். இதில் 1998 இல் 7900 கோடி ரூபா திரட்டிய மனித உழைப்பு, 2002 இல் 12000 கோடியாக அதிகரித்தது. 10 லட்சம் உடல் உழைப்பாளிகளின் அவலமான உழைப்பைச் சூறையாடிய போது இது கிடைத்துள்ளது. இதில் 4000 கோடி ரூபாவை இலங்கை வங்கிகளில் போட்டனர். மிகுதியில் பெரும் பகுதியை உலகெங்கும் கடைவிரித்துள்ள பன்னாட்டு ஆடம்பர நுகர்வுச் சந்தையில் தொலைத்தனர். மறுபுறத்தில் சேமிப்பை உலக வங்கியும், பெரும் முதலீட்டாளர்கள் மிகக் குறைந்த வட்டி விகிதங்களில் அவற்றை அபகரிப்பதுடன், பணவீக்கம் மூலம் அவற்றைப் பெறுமதி அற்றதாக்கி செல்லாக் காசாக்கின்றனர். மனித ஏற்றுமதி மூலம் கிடைக்கும் பணத்தைக் கூட தேசிய உற்பத்தியில் முதலிடவில்லை. அவை பன்னாட்டு நிறுவனங்களுக்கு சென்று அடைவதை அரசு உறுதி செய்கின்றது. தேசிய சமூகங்களின் மனித அவலங்கள் மூலதனமாகத் திரட்டப்படுகின்றது. தேசிய பாடசாலைகள் மூடப்படுகின்றன. மக்களை குடிகாரர்களாக்கி, பிரச்சனைகளை அதற்குள் முடிவுகட்ட மதுவிற்பனை நிலையங்களைத் திட்டமிட்டு அரசுத் திறக்கின்றது.



## மக்களை குடிகாரர்களாக்கும் அரசு, மக்களுக்கு கல்வியை மறுப்பது தேசியமயமாகின்றது

1997-ஆம் ஆண்டுக்கும் 2002-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 1,096 பாடசாலைகளை உலகவங்கியின் உத்தரவுக்கு இணங்க மூடிய அரசு, 2000-க்கும் 2003-க்கும் இடைப்பட்ட காலத்தில் புதிதாக 9882 மதுபான விற்பனையகங்களைத் திறந்துள்ளது.

| வருடம் | புதிதாக மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கல் |
|---|---|
| 2000 | 2684 |
| 2001 | 3200 |
| 2003 | 3998 |

மக்களை மந்தைகளாக்கி, அவர்களைக் குடிகாரர்களாக்குவது தேசியக் கொள்கையின் ஒரு அங்கமாகிவிட்டது. மக்களின் அடிப்படைத் தேவையை நிராகரிப்பதும், அவர்களை மந்தைகளாக்குவது, குடிகாரர்களாக்குவது, வக்கிரம் பிடித்தவர்களாக உருவாக்குவது இலங்கையின் தேசிய அரசியலாகியுள்ளது. நவீன டிஸ்கோக்கள், நிர்வாண நடனச் சாலைகள், மசாஜ் மையங்கள், சூதாட்ட விடுதிகள், மதுபான மையங்கள், ஆபாச சினிமா மையங்கள் என்று இலங்கை பூராவும் பல்கிப் பெருகுகின்றது. இதை மறுத்து நிற்பவர்களைத் தற்கொலை செய்யக் கோருகின்றது. மறுதளத்தில் வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும், போக்குவரத்து வசதிகளையும் மறுக்கின்றது. அதாவது மக்களின் அடிப்படையான சேவைத்துறைகள் இழுத்து மூடப்படுகின்றது. இவை லாபம் தராத ஒன்றாக இருப்பதால் இவைகள் இழுத்து மூடப்படும் அதே நேரம், இத்துறைகள் தனியார்மயமாக்கப்படுகின்றன.

இலங்கையில் மது பயன்பாட்டை ஆராய்ந்தால் அதிர்ச்சிதான் ஏற்படும். 2002-ஆம் ஆண்டு மதுபானத் திணைக்களம் அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்தியது 900 கோடி ரூபா. இது மக்களின் வாழ்வை போதையில் மயக்கி, அவர்கள் அறியாமல் பிடுங்கும் தேசிய வருமானமாகிவிட்டது. இந்த வரி அறவிட்டைக் கடந்து, மதுபானத் திணைக்களம் திரட்டிய நிகரலாபம் 51.7 கோடி ரூபாவாகும். 2002-ஆம் ஆண்டு இலங்கை மக்களையே தேசிய குடிகாரர்களாக்கும் கொள்கையின் அடிப்படையில் செயல்பட்ட அரசு, 6.24 லட்சம் லீற்றரால் உற்பத்தியை அதிகரிக்க் வைத்து குடிகாரர்களின் எண்ணிக்கையை உயர்த்தினர். இதன் விளைவு என்ன? மதுபாவனை தொடர்பான வைத்திய அறிக்கை ஒன்று இதை தெளிவுபடுத்தியுள்ளது. 25 முதல் 44 வயதுடையவர்களின் இறப்பில், பிரதானமானது மதுவை அடைப்படையாக கொண்டே நிகழ்கின்றது என்ற அறிக்கையும் வெளியாகியுள்ளது. மதுவினால் ஏற்படும் சிரோசிஸ் நோய், இலங்கையில் வருடாந்தம் 10,069 பேரை பாதிக்கும் அதே நேரம், 10,000-க்கு 55 பேர் இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்கு உள்ளாகின்றனர். உலகமயமாக்கும் சமூக வக்கிரம் இலங்கையில் சில பகுதிகளில் பெண்களையும் குடிக்கு அடிமையாக்கியுள்ளது. சிறுவர் சிறுமிகளையும் கூட பண்பாட்டு சமூச் சீரழிவின் ஒரு அங்கமாக, குடி நவீன கலாச்சார நுகர்வாக மாறி நிற்கின்றது.

குடியை எடுத்தால் இலங்கையில் தனிமனித பாவனை 4 லீற்றராக இருக்க, அதுவே ஆணுக்கு 15.2 லீற்றராக உள்ளது. சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்க, குடி ஒரு தீர்வாகக் கையாளப்படுகின்றது. அதிர்ஷ்ட லாபச் சீட்டு வாங்கி சொந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியும் என்ற கண்ணோட்டத்தை ஒத்தவகையில், குடி சமூகப் பிரச்சனைக்கு வடிகாலாகின்றது. இதன் விளைவாக நகர்புற குடிசைப் பகுதிகளில் 43 சதவீதமானவர்கள் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். பெருந் தோட்டப் பகுதியில் இது 55 சதவீதமாக உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாக உள்ளனர். இதன் சமூக விளைவு அதிர்ச்சிகரமானதே. சராசரியாக இலங்கையில் ஒரு ஆண் மதுவுக்கு தனது வருமானத்தில் 30 சதவீதத்தை செலவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குடும்பத்தின் நுகர்வு குறைவதுடன், பெண்களும் குழந்தைகளும் மேலும் ஆழமாக ஆரோக்கியமான வாழ்வை இழக்கின்றனர். குடும்ப தகராருகளும், உளவியல் நெருக்கடியும் நிரந்தரமான சமூக விதியாகிவிட்டது. பிளவுகளும், மனநோயாளிகளும், தற்கொலைகளும், குற்றங்களும் தலைவிரித் தாடும் ஒரு சமூகப் போக்கை அங்கீகரிக்கும் பண்பு உருவாகிவிட்டது.

இதன் சில விளைவுகள் அதிர்ச்சிகரமானவையாக இருப்பதில்லை. இலங்கையின் மொத்தக் குற்றச் செயல்களில் 38 சதவீதமானவை, மது பாவனையால் ஏற்படுகின்றது. அதாவது போதையினால் ஏற்படுகின்றது. 2001 இல் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2800 ஆகும். இதில் 90 சதவீதமானவை மதுவினால் நடந்துள்ளது. ஒட்டு மொத்தத்தில் கொலை, பாலியல் வன்முறை, விபச்சாரம் போன்றவை தேசிய பண்பாகி கொடிகட்டிப் பறக்கின்றது. போதையில் மகன் தாயைப் புணர்ந்த நிகழ்வுகள், தந்தை மகளைப் புணர்ந்த சம்பவங்கள் பல நடந்துள்ளது. மதுப் பாவனையுடன் கூடிய பண்பாடு மனைவி மற்றும் மகள் மேலான பாலியல் சந்தேகத்தை விரிவாக்கியுள்ளது. குடி ஒருபுறம் தலைவிரித்தாட புகைத்தல் அதன் அண்ணனாக தலைவிரித்தாடுகின்றது. உலகமயமாதலின் நவீனம் புகைக்கும் அழகில், குழந்தைகளையும், சமூக உளவியலையும் சுண்டி இழுக்கின்றது. இதன் மூலம் புகைக்கும் போதையை மெதுவாக உடலில் ஏற்றி விடுகின்றது. இதன் விளைவு என்ன?.

இலங்கையில் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதம் பேர் புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளனர். வயது வந்தோரில் 33 சதவீதம் பேர் புகைத்தலுக்கு அடிமையாக உள்ளனர். இதில் 80 சதவீதம் பீடி போன்றவற்றையே புகைக்கின்றனர். தோட்டப் பகுதிகளில் 64.4 சதவீதம் பேர் புகைக்கின்றனர். நகர்ப்புற குடிசைகளில் இது 85 சதவீதமாக உள்ளது. வறிய சேரிப்புறங்கள், மற்றும் உடல் உழைப்பில் உள்ள தோட்ட தொழிலாளர்கள் அனைவரும் புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளனர். வாழ்வின் துயரங்களை எல்லாம் சுமையாக்கி வாழும் இம் மக்கள், கடும் உழைப்பில் சிக்கி மூச்சு விடா முடியாத ஒரு நிலையில் புகைத்தல் இவர்களுக்கு சில கணங்கள் அற்ப இன்பத்தை ஏற்படுத்தி விடுவதை இது காட்டுகின்றது. அதனால் அதற்கு அடிமையாகி விடுகின்றனர். இவர்கள் பெருமளவில் மலிவான புகைக்கும் பொருட்களைச் சார்ந்து உள்ளனர். மறுபுறத்தில் சிறுவர் சிறுமிகளின் முன்னான பண்பாடு, புகைத்தல் என்பது நவீன கவர்ச்சிகரமான ஊடகமாக அவர்கள் முன் உள்ளது. தன்னைத் தான் அங்கீகரிக்கும் ஒரு சமூகப் பண்பாடாக இது மேலெழுந்து வருகின்றது. இதன் விளைவு இலங்கையில் புகைக்கும் எண்ணிக்கையை 55 சதவீதமாக உயர்த்தியுள்ளது. வயது வந்தோர் புகைத்தல் 33 சதவீதமாக இருக்க, சிறுவர்களை உள்ளடக்கிய புகைத்தல் 55 சதவீதமாக இருக்கின்றது. இது 12 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட பெரும் பகுதியை புகைத்தலுக்கு அடிமையாக்கியுள்ளது. புகைத்தல், மது, மங்கை (மறு தளத்தில் ஆணுடன் விபச்சாரம் என்ற சிறுமிகளின் பண்பாடும்) இன்று, இலங்கைப் பாடசாலைகளில் உத்தியோக பூர்வமற்ற மாற்று கல்வியாகிவிட்டது..

இலங்கையில் 13 லட்சம் பேர் ஒவ்வொரு நாளும் புகைக்கின்றனர். இதன் மூலம் 2500 கோடி ரூபா வரியாக அரசுக்குப் புகையிலைக் கம்பனி வழங்குகின்றது. மறு தளத்தில் சட்டவிரோதமான சிகரெட்டுக்கள் நாட்டின் உள்ளே கடத்தப்படுவதால், அரசாங்கம் வருடம் 90 கோடி ரூபாவை இழப்பதாக அறிவிக்கின்றது. இந்த நவீன மூலதனச் சந்தையின் பலம், மக்களின் சுகாதாரக் கேட்டின் படிகற்களாக இருப்பதைக் காட்டுகின்றது. இலங்கை மருத்துவச் செலவான 2600 கோடி ரூபாவில் 10 முதல் 15 சதவீதம் புகைத்தலால் ஏற்படும் நோய்களை குணப்படுத்த செலவு செய்யப்படுகின்றது. அதாவது 260 முதல் 390 கோடி ரூபா புகைத்தல் சார்ந்த நோய்க்காக தாரைவார்க்கப்படுகின்றது. மது அருந்தல், புகைத்தல் தேசிய கொள்கையாகிவிட, அதை ஊக்குவிப்பதை அரசு திட்டமிட்டே செய்கின்றது. உலகமயமாதலின் பண்பாடு, கலாச்சார அடித்தளத்தில் இதுவே தேசிய இலட்சியமாகின்றது. மதுபான விற்பனையகங்களை அரசு பெருக்குகின்றது. சட்டவிரோதமாகவும், சட்டப்பூர்வமாகவும் சிகரட் நாட்டின் உள் கட்டமைப்பையே அரிக்கின்றது. இவை ஊக்குவிக்கப்பட, மறுதளத்தில் குழந்தைகளின் கல்வி மறுப்பது அரசின் அடிப்படை கொள்கையாகி வருகின்றது.

## அனைவருக்குமான அடிப்படை கல்வியை மறுப்பது தேசிய கொள்கையாகின்றது.

உலகவங்கியின் உத்தரவுக்கு இணங்க இலங்கையில் பாடசாலைகள் மூடப்படுகின்றன. லாப நட்ட கணக்கை அடிப்படையாக கொண்டு, மூடப்படும் ஒவ்வொரு பாடசாலைக்கும் வக்கிரமான விளக்கங்கள் வழங்கப்படுகின்றது. கல்வி மறுப்பதும், கல்வியைத் தனியார் மயமாக்குவதன் மூலம் கல்வியை விலை பேசி விற்கும் அடிப்படை தளத்தில் அரசு வேகமாக முன்னேறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம், தேசியப் பண்பாடு என்ற உரக்க கூக்குரல் இட்டு யுத்தம் செய்யும் இலங்கையில், தமிழ் சிங்கள வேறுபாடு இன்றி தாய் மொழிக் கல்வியை மறுப்பது அன்றாட நிகழ்வாகி வருகின்றது. மாறாக உலகமயமாதல் மொழியில் ஒன்றான ஆங்கிலத்தில் கற்பிப்பதும் அதிகரிக்கின்றது. தற்போது இலங்கையில் 168 பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. உலகவங்கி 1500 ஆங்கில ஆசிரிய ருக்கான விசேட நிதியை வழங்கியுள்ளது. கல்வி முற்றாக மறுப்பது, அல்லது தாய்மொழிக் கல்வியை மறுத்த அன்னிய மொழிக் கல்வியை வழங்குவது, கல்வியை விலை பேசி விற்பது, இலங்கையின் கல்வி கொள்கையாகிவிட்டது.

1996 இல் இலங்கையில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 42 லட்சமாகும். இதை விட அண்ணளவாக 7 லட்சம் மாணவர்கள் பாடசாலையை எட்டிப் பார்ப்பதில்லை. அதாவது இது அண்ணளவாக மூன்று லட்சமாக இருந்தது. இது 2003-இல் 4.5 லட்சமாக மாறியுள்ளது. கல்வி மறுப்பு இலங்கைத் தேசியமாகி வருகின்றது. பிறக்கும் ஒவ்வொரு 100 குழந்தையில் 14 பேர் கல்வி என்பது மறுக்கப்பட்ட சமூக வாழ்வியல் அமைப்பில் பிறக்கின்றனர். மறு தளத்தில் பாடசாலைகள் பல மூடப்படுகின்றது.

இலங்கையில் பாடசாலைகள் எப்படி மூடப்படுகின்றது. என ஆராய்வோம்.

| ஆண்டு | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1946 | 5946 | 5,93,000 |
| 1976 | 9683 | 25,72,000 |
| 1992 | 10590 | 42,89,000 |
| 1997 | 10983 | 42,60,000 |
| 2000 | 9992 | 41,90,000 |
| 2001 | 9987 | 41,84,957 |

1994-2001 இடையில் மூடப்பட்ட பாடசாலைகள் மாகாண ரீதியாக

| | |
|---|---|
| மேற்கு | 80 |
| மத்திய | 44 |
| தெற்கு | 72 |
| வடகிழக்கு | 149 |
| வடமேற்கு | 101 |
| வடமத்திய | 18 |
| ஊவா | 08 |
| சப்பிரகமுவ | 54 |
| மொத்தம் | 526 |



இதில் 2002-இல் மட்டும் 500 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. 1990-க்கு பின் மெதுவாக பாடசாலைகளை மூடத் தொடங்கிய அரசு, அதை மிக வேகமாக மூடுவதை துரிதப்படுத்தியதை புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றது. பாடசாலைகளை மூடுவது என்ற கொள்கை 1990-களில் இருந்து வேகம் பெற்றது என்பதையும், இது வேகம் பெற்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுடன் நேரடியாகத் தொடர்புடையதையும் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றது. கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை குறைந்து செல்வதை எடுத்துக் காட்டுகின்றது. அடிப்படைக் கல்வி என்ற விடையத்தை ஆராயின், முதலாம் ஆண்டு வகுப்புக்கான மாணவர் அனுமதி குறைந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது.

| | |
|---|---|
| 1980 | 3,64,500 |
| 1985 | 3,72,000 |
| 1990 | 3,87,000 |
| 1995 | 3,42,000 |
| 1999 | 3,43,000 |
| 2001 | 3,30,000 |
| 2002 | 3,30,000 |

1997-2002 இடையில் 1096 பாடசாலைகள் மூடப்பட்டன. 1990 இல் 3.87 லட்சமாக இருந்த முதலாம் ஆண்டு மாணவர் அனுமதி, 2002 இல் 3.3 லட்சமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. குறைந்து வரும் முதலாம் ஆண்டுக்கான குழந்தைகளின் இணைவு ஒருபுறம் சமுதாயத்தின் கல்வி மறுப்பை உறுதி செய்ய, கல்வி வெறும் சடங்காக மாறுகின்றது. குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் கிடைக்கும் அற்ப மதிய உணவைப் பெறவும், அன்றாட பிழைப்புக்குச் சென்று திரும்பும் வசதி கருதியே பாடசாலை அனுமதி தொடருகின்றது. ஆனால் கல்வி தரம் மேலும் ஆழமாக வீழ்ச்சி அடைவதை அரசு தனது கொள்கையாக கொண்டு திட்டமிட்டே கையாளுகின்றது. அரசு கம்பனிகளை நட்டமடைய வைத்து தனியாருக்கு தாரை வார்ப்பது போல், கல்வியினை வீழ்ச்சி அடையவைத்து கல்வியை தனியார்மயமாக்கும் முயற்சிக்கு முன்கையெடுப்பது தேசிய கொள்கையாகி உள்ளது.

இதன் விளைவு திடீரென நிர்வாணமாகத் தொடங்கியுள்ளது. புதிதாகப் பல பாடசாலைகளை மூடுவதற்கான அடிப்படை விளக்கங்களைக் கொடுக்கும் புள்ளிவிபரங்களைத் தயாரித்து வெளியிடுகின்றனர். இதனடிப்படையில் 5 பாடசாலைகளில் ஒரு ஆசிரியருக்கு ஒரு மாணவனும், 18 பாடசாலைகளில் 2 மாணவருக்கு ஒரு ஆசிரியரும் என பல பாடசாலைகள் இயங்குவதாக புள்ளிவிபரங்களைத் தயாரிக்கின்றனர். ஆனால் ஒரு ஆசிரியருக்கு ஒரு மாணவன் என்ற நிலையில் சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து குழந்தைகளும் பாடசாலை செல்லுகின்றதா என்ற அடிப்படை விடையத்தை மட்டும் திட்டமிட்டு மூடிமறைக்கின்றனர். அப்படி அனைத்துக் குழந்தைகளும் சென்றால், அவர்கள் எங்கே செல்லுகின்றனர் என்ற காரணத்தையும், ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடசாலைக்கு செல்வதில்லை என்ற காரணத்தையும் கூடத் திட்டமிட்டு மூடிமறைக்கின்றனர். கொள்கை ரீதியாக காரணங்களை மூடிமறைத்தபடி பாடசாலைகளை மூடவும், பாடசாலைகளின் அவலங்களுக்குக் காரணமான அரசின் மறுகாலனியாதிக்க கொள்கைகளைப் பூச்சடிப்பது மூலம் உலகமயமாதல் நிபந்தனை நிறைவு செய்யப்படுவது துரிதமாகின்றது.

மறு தளத்தில் கல்வி மறுப்பைத் துரிதமாக்கவும், மாணவர்களே கல்வியை வலுக்கட்டாயமாக கைவிடும் கொள்கையை திட்டமிட்டு அரசு செய்கின்றது. கல்வியில் நம்பிக்கை இழக்க வைக்கவும், பாடசாலைகளை கைவிட்டுச் செல்லும் கொள்கை இங்கு திட்டமிட்டே புகுத்தப்படுகின்றது. இதனடிப்படையில் 41 முதல் 100 மாணவர்களைக் கொண்ட 194 பாடசாலைகள் ஒரு ஆசிரியரை மட்டும் கொண்டு இயங்குகின்றது. 14 பாடசாலைகளில் 75 முதல் 100 மாணவர் கொண்ட அதே நேரம், ஒரு ஆசிரியரே உள்ளனர். மாணவர்களின் கல்விக்குப் போதுமான ஆசிரியர்கள் இன்றி கல்வி முடமாக்கப்படும் கொள்கை இங்கு அமுல் செய்யப்படுகின்றது. 2001-இல் 1 முதல் 15 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 162 இருந்தன. 16 முதல் 30 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 457 இருந்தன. 31 முதல் 51 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் 668 இருந்தன. 51 முதல் 75 மாணவர்களைக் கொண்ட 744 பாடசாலைகள் இருந்தன. 100 மாணவர்க்கு குறைந்த 2657 பாடசாலைகள் காணப்படுகின்றது. இந்தப் பாடசாலைகளின் அழிவு துரித கதியில் நடக்கின்றது. 100 மாணவர்களுக்கு குறைந்த பாடசாலைகளை மூடும் கொள்கை அமுலுக்கு வரவுள்ளது. இந்த வகையில் 2657 பாடசாலைகளின் கதி கேள்விக்குள்ளாகியுள்ளது. இதன் மூலம் 1 முதல் 2 லட்சம் மாணவர்களின் கல்வி நிரந்தரமாகவே முடமாக்கி விடுவது உலகமயமாதலின் உடனடிக் கொள்கையாகி உள்ளது. மிகப் பெரிய பாடசாலைகள் நோக்கி கல்வி குவிவதுடன், அங்கு பல்வேறு நிதி அறவீடுகள் மூலம் ஏழைகள் வடிகட்டி அகற்றப்படுகின்றனர். பண அறவீடுகள் படிப்படியாக அதிகரிப்பதுடன், தனியார் மயமாக்கும் கல்வியின் முதல்படியாக இவை உள்ளது.

திட்டமிட்ட அரசின் உலகமயமாதல் கொள்கைக்கு இணங்க, கல்வியின் தரத்தைக் குறைப்பது முதல் படியாக உள்ளது. இதன் மூலம் கல்வி மீதான நம்பிக்கையைச் சிதைத்து தனியார்மயமாக்கலைத் துரிதமாக்குவது தேசிய கொள்கையாக உள்ளது. இதன் முதல்படியாக வசதியான பிரிவு தாமாகவே தனியார் கல்வியை நோக்கி செல்வது அதிகரிக்கின்றது. இதைப் பின்பற்றி மற்றைய பாடசாலைகள இட்டுச் செல்வது இலகுவானதாகிவிடுகின்றது. கல்வியின் தரத்தைக் குறைக்கும் முயற்சியாக, பாடசாலை ஆசிரியர்களின் தகமையைக் குறைப்பது முதல்படியாக உள்ளது. இது இலகுவானதும் கூட. இதனடிப்படையில் நாட்டிலுள்ள 9 ஆயிரத்து 876 பாடசாலைகளில் (அண்ணளவாக மூவாயிரம் பாடசாலைகளில்) அதாவது மூன்றில் ஒரு பாடசாலைகள் உரிய தகைமைகள் அற்ற அதிபர்களால் நிர்வகிக்கப் படுகின்றது. பொதுவாகப் பிழைப்புவாத அரசியல் கட்சிகளுடன் இருந்த



பொறுக்கிகளும், சமூதாய நலனற்ற பிரிவினருமே இப்பதவிகளில் தொற்றிக் கொள்கின்றனர். சமுதாயத்தின் அனைத்து சமூகச் சீரழிவுகளின் பிரதிநிதிகளாக இவர்கள் உள்ளனர். இவர்கள் கற்பித்தல், கற்றுக் கொள்ளல், சமுதாய நலன்களை முன்னிறுத்தல் என்ற பேச்சுக்கே இங்கு இடமிருப்பதில்லை. அரசியல் கட்சிகளின் கைக்கூலிகளாகவும், பினாமிகளாகவும் நக்கிப் பிழைக்கும் இவர்கள், மாணவர்களின் ஒட்டு மொத்த வாழ்வையே அழிப்பதில் முதல்தரமான சமூக விரோதிகளாக உள்ளனர். அண்மையில் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்கள் பள்ளியில் பெண் குழந்தைகளை பாலியல் ரீதியாக வதைப்பதும், மாணவர்கள் மீதான ரவுடித்தனமான வன்முறைகளை ஏவுவது மட்டுமின்றி, அரசியல் செல்வாக்கு மூலம் அதில் இருந்து தப்பிவிடுவதும் அம்பலமாகி வருகின்றது. இது ஒட்டு மொத்தக் கல்விச் சமூகத்தில் இது போன்ற சமூக விரோதச் செயல்கள் வெறுமனே ஒரு அங்கம் மட்டுமேயாகும்.

பாடசாலைகளின் அதிபர் நியமனத்தில் இனவாத அரசியல் புகும் போது, தரம் மேலும் ஆழமான வீழ்ச்சியை துரிதமாக்கின்றது. அமைதி சமாதானம் என்று இன ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டு வழங்கிய இனவாத நியமனத்தில், அதிபர் சேவை வகுப்பு 1 க்கு வழங்கப்பட்ட 200 நியமனங்களில் 198 சிங்கள ஆசிரியர்களும் ஒரு தமிழ் மற்றும் ஒரு முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இப்படி அதிபர் சேவை வகுப்பு 2 க்கு வழங்கப்பட்ட 500 நியமனங்களில் 470 சிங்கள ஆசிரியர்களும் 19 தமிழ் மற்றும் 11 முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். அதிபர் சேவை வகுப்பு 3 க்கு வழங்கப்பட்ட 500 நியமனங்களில் 487 சிங்கள ஆசிரியர்களும் 13 தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஒருபுறம் சிங்கள இனவாத அமைப்பில் ஏற்படும் நியமனம் அரசியல் செல்வாக்குக்குள்ள நக்கி பிழைக்கும் தகுதியற்றவர்களைக் கொண்டு நிரப்ப, மறுபுறத்தில் இனவாதம், திட்டமிட்டு தமிழ் முஸ்லீம் நியமனங்களை மறுத்த பாடசாலைகளையே ஒட்டு மொத்தமாக இலங்கையில் தகுதியற்றதாக்கின்றது. கடந்த 2000-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதமளவில் பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றிய வடக்கு - கிழக்குக்கு அப்பால் உள்ள அனைத்து சிங்கள ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஆயினும், வடக்கு - கிழக்கில் சேவையாற்றிய சுமார் 375 தமிழ் மற்றும் முஸ்லிம் உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. திட்டமிட்ட இனவாதம் தமிழ் முஸ்லிம் கல்வியை ஒழித்துக் கட்டுகின்றது என்ற மற்றொரு உண்மையும் இங்கு பொதிந்து கிடக்கின்றது.

ஒருபுறம் தகமையற்ற பொறுக்கிகள் சமுதாயத்தை வழிநடத்தி நாட்டைப் படுகுழியில் தள்ளுகின்றனர். மறு தளத்தில் உயர் தகமையுள்ள உயர் கல்வி பெற்ற 26,000 பட்டதாரிகள் வேலை இன்றி அலைகின்றனர். எதிரிடையான இந்தப் போக்கு விரிவாகி, சமுதாயத்தின் அனைத்துப் பகுதியையும் சீரழிக்கின்றது. ஆசியாவில் உயர்ந்த கல்வித் தரமுள்ள நாடு இலங்கை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கடந்தகால கனவுகளாகிப் போனது. கல்வியின் அடிப்படைத் தரத்தை நிர்ணயம் செய்வது கணிதப்பாடமாகும். இன்று இலங்கை முழுக்க கணித அறிவியல் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சியடைந்து செல்லுகின்றது. இதில் ஜீரணிக்க முடியாத உண்மை என்னவென்றால், யாழ்ப்பாணத்தின் கணித அறிவியல் வீழ்ச்சிதான். முதல் தரமான அறிவியல் கொண்ட பிரதேசமாக இருந்த யாழ்மாவட்டத்தை 30 மாவட்டங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தபோது, 21ஆவது இடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. ஒருபுறம் இனவாத யுத்தமும் புலிகளின் கொள்கையும் இதை உருவாக்கினாலும், ஒட்டு மொத்தமாகவே அரசு உலகமயமாதல் நிபந்தனைக்கு இணங்க திட்டமிட்ட கல்வி மீதான புறக்கணிப்புதான் இதைச் சாதித்துள்ளது. அத்துடன் கொழும்புக்கு அடுத்த மிகபெரிய நகர் வாழ்வியல் பண்பாடுகளை உள்வாங்கும் யாழ்குடா, உலகமயமாதல் வக்கிரத்தில் புதையுண்டு விட்டதால் கல்வியின் தர வீழ்ச்சி துரிதமாகியுள்ளது.

26,000 பட்டதாரிகள் வேலை இன்றி உள்ள அதே நேரம், 2003 இல் உயர்தரப் பரீட்சையில் 2,51,000 மாணவாகள் தேறிய போதும் 16,000 பேருக்கே பல்கலைக்கழக அனுமதி. என்ற முடிவற்ற துயரமும் மாணவர்கள் முன் திணிக்கப்படுகின்றது. 2.35 லட்சம் மாணவர்கள் உயர்தரப் பரிட்சை எழுதிய பின்னும் வேலை தேடி அலையும் துயரம் திணிக்கப்படுகின்றது. எந்த நம்பிக்கையான பாதையுமற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கட்சிகளின் பொறுக்கி அரசியலுக்கு லும்பனாகவும், அவர்களுக்குக் கையூட்டும் கொடுத்து வாழ்வைப் பெறும் அற்ப ஒரு வழிப் பாதை தான் இங்கு ஒரு சமூக நடத்தையாகிவிட்டது. மற்றொரு பகுதி பொறுக்கிகளாகவும், உலக நகர்புற லும்பன் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வாழவும் கூட இந்த அமைப்பு வழிகாட்டுகின்றது. இதைவிட்டால் நாட்டை விட்டு ஓடவும், நாயைப் போல் அடிமையாக, அடிமைப்பட்டு வாலாட்டும் அற்பத் தொழில்களைத் தேடி அலையவே இளைய சமுதாயத்துக்கு இந்த அமைப்பு வழிகாட்டுகின்றது. நேர்மையாக இளமைத் துடிப்புடன் இந்த நாட்டில் வாழ, இந்த சமூக அமைப்பில் எந்த இடமும் இளைஞர்களுக்கு இல்லாததாக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் மேற்கண்ட சமூகச் சீரழிவு அப்பட்டமாகவே காட்சி அளிக்கின்றது. மொத்த தேசிய உற்பத்தியில் ஆறில் ஒன்று ஊழலுக்குள் சிக்கித் தான் வெளிவருகின்றது என்ற உண்மையை இலங்கை அரசின் புள்ளிவிபரங்களே தெளிவுபடுத்துகின்றது. ஜனாதிபதி சந்திரிக்க, அவரது மகன் விமுக்திக்கு கொழும்பு கறுவாக் காட்டில் அரசு காணியை (நிலத்தை) பேர்ச் 45 சதத்துக்கு அமைச்சு மூலம் வாங்கியுள்ளார். இதே போன்று 25 ரூபாவுக்கு பல மந்திரிமார் காணிகளை வாங்கிக் குவித்துள்ளனர். இன்றைய (2003) காணி அமைச்சர் தன் மீதான காணி மோசடிக்கு பதிலளிக்கும் போது, இவற்றை ஆதாரப்பூர்வமாக குற்றம் சாட்டியுள்ளார். இதன் மூலம் தனது காணி மோசடியை சமப்படுத்திக் கொண்டார். உண்மையான ஊழல் இதை விட அதிகமானது என்பதும், சமூகச் சிதைவு விதிவிலக்கற்றதாக இருப்பதையும் மறுக்க முடியாது.



## சமூகச் சீரழிவினால் உருவாகும் பண்பாட்டின் விளைவு ஆழமானது

சமூகம் மீதான நம்பிக்கை இழப்பு சோர்வையும், அராஜகத்தையும் உருவாக்கின்றது. சுயநலத்தைச் சார்ந்து விரக்தியும், தன்னகங்காரம் சார்ந்த தனிமனிதப் போக்குகள், விளைவுகள் ஒட்டு மொத்த சமுதாயத்தையும் பீதிக்குள் சிதைக்கின்றது. சுய ஆளுமையுள்ள, சமுதாயக் கண்ணோட்டம் சார்ந்த அறிவியல் சிதைந்து சமுதாயத்துக்கே நஞ்சிடுகின்றது. சமூக அறிவியல் தளம் சுயபுராணங்களை வீம்பு பண்ணும் அளவுக்கு, தனிமனித வக்கிரம் வெம்பி வெளிப்படுகின்றது.

சமூகம் மீதான நம்பிக்கை இழந்து, சுயநம்பிக்கையும் இழந்து கேள்விக் குள்ளாகும் நிச்சயமற்ற தன்மை, இலங்கை சமூகத்தின் பண்பாகிவிட்டது. சோர்வும், விரக்தியும், நம்பிக்கை இழப்பும் தற்கொலைக்கான தூண்டு விசையாகிவிட்டது. ஒருமணி நேரத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தற்கொலைப் படி நாள் ஒன்றுக்கு 27 பேர் தற்கொலை செய்கின்றனர். இலங்கையின் தற்கொலை வீதம் ஒரு லட்சத்துக்கு 55 ஆக மாறியுள்ளது. இது உலகில் ருசியாவுக்கு அடுத்த நிலையில் அதாவது இரண்டாவது இடத்தைப் பிடித்து சாதனை படைக்கின்றது. அத்துடன் இலங்கையில் வருடம் ஒரு லட்சம் தற்கொலை முயற்சிகள் நடைபெறுகின்றது. இதில் தோல்வி அடைவோரில் 30 முதல் 40 ஆயிரம் பேர் தொடர்ச்சியான உழைப்பில் ஈடுபட முடியாத உளவியல் சிக்கலைச் சந்திக்கின்றனர். நவீன சமுதாயத்தை நோக்கி முன்னேறுவதாக மார்பு தட்டும் அமைப்பில், 1950-க்கும் 1990-க்கு இடையில் தற்கொலை வீதம் 11 மடங்காக அதிகரித்துள்ளது என்ற உண்மை சமுதாயத்தின் தோல்வியைப் பறைசாற்றி நிற்கின்றது. 1950-களில் பெற்ற சுயநம்பிக்கையுடன் கூடிய ஒரு உயர்ந்த வாழ்க்கை தரம் இன்று எம்மிடம் இல்லை என்பதையே, எமக்கு சந்தேகத்துக்கு இடமின்றி இது நிறுவி நிற்கின்றது. தற்கொலையை நாடிச் செல்வது ஒரு பண்பாக வளர்ச்சியுற, அதற்கு எதிராக அராஜகவாதம் எதிர் பண்பாக வளர்ச்சியுறுகின்றது. இதனால் சமுதாயத்துக்கு எதிரான குற்றங்கள் பெருகிச் செல்லுகின்றது. அவற்றை கீழ் உள்ள அட்டவனை தெளிவுபடுத்துகின்றது.

**பாலியல் வல்லுறவு 1998-2002**

| ஆண்டு | கற்பழிப்பு வழக்கு | நடைபெற்ற | சதவீதம் பெற்றவை | தண்டனை சதவீத்தில் | தண்டனை |
|---|---|---|---|---|---|
| 1998 | 1076 | 488 | 45 | 02 | 0.1 |
| 1999 | 1309 | 505 | 39 | 08 | 0.6 |
| 2000 | 1202 | 458 | 38 | - | - |
| 2001 | 1283 | 487 | 38 | 20 | 0.2 |
| 2002 | 1247 | 401 | 32 | 06 | 0.4 |
| மொத்தம் | 6117 | 2339 | 38 | 36 | 0.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை சார்ந்த குற்றங்களாகப் பதிவு செய்யப்பட்டவை மட்டுமே இவை. சமூக அமைப்பின் ஆணாதிக்கப் பண்பாடு சார்ந்து, பெரும்பாலும் பாலியல் வன்முறை குற்றங்களாக பதிவு செய்யப்பட்டவை அல்ல. அப்படி பதிவு செய்யப்பட்டாலும், அவை விசாரணைக்கு வருவதில்லை. வந்தாலும் தண்டனை வழங்கப்படுவதில்லை. விசாரணை என்ற பெயரில் குற்றங்கள் மீளவும் நடித்துக் காட்டுவதன் மூலம் ஆணாதிக்க வக்கிரம் புதிதாக மீளமைக்கப்படுகின்றது. பாலியல் குற்றங்கள் சட்டப்படியான அங்கீகாரத்துடன் நடத்தப்படுவதையே மேல் உள்ள தரவு மீண்டும் உறுதி செய்கின்றது. பாலியல் குற்றங்கள் முன்பை விட மூர்க்கமாகவும், வக்கிரமாகவும் நடத்தப்படுகின்றது. அமைதி, சமாதானம் நிலவிய 2002-இல் 1282 கொலைகளும், 2003 இல் 1387 கொலைகளும் நாட்டில் நடைபெற்றுள்ளது. 1998-க்கும் 2002-க்கு இடைப்பட்ட காலத்தில் பாலியல் குற்றமாக 6117 பதிவாகிய போதும் 36 குற்றத்துக்கே தண்டனை வழங்கப்பட்டது. 2303 பேர் தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டனர் அல்லது அவர்களின் வழக்கை காலவரையின்றி தள்ளி போட்டனர்.

மற்றொரு மதிப்பீடு படி இலங்கையில் வருடாந்தம் 1300 கற்பழிப்பு முறைப்பாடுகள் அரசுக்கு கிடைப்பதாகக் கூறுகின்றது. இலங்கையில் நடக்கும் துப்பாக்கி சூட்டில் 90 சதவீதமானவை இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களால் நடத்தப்படுகின்றது. 2002 வருடம் 500 பேர் இனம் தெரியாத நபர்களால் கொல்லப்பட்டனர். 2002 இல் பெரிய குற்றச் செயல்களாக பதிவானவை 34506 ஆகும். இதில்

| | |
|---|---|
| கொலை மற்றும் தற்கொலை | 3181 |
| பாலியல் வல்லுறவு (கற்பழிப்பு) | 2247 |
| கடத்தல் | 1266 |
| தீவைப்பு | 1744 |
| கொள்ளை | 26068 |

குற்றங்கள் பெருகி வருவதையும், அவை நவீனமாகி வருவதையும் மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. ஒட்டு மொத்தத்தில் சமூக அராஜகம் சட்டப்படியான அங்கீகாரமாக மாறிவிட்டது. அரசு, நீதிமன்றங்கள், பொலிஸ் மற்றும் அதிகார பீடங்கள் அனைத்தும் சமூக அவலத்தைத் தனது இருப்புக்கான அடிப்படையாகக் கொள்கின்றது. இதனால் சமூக அராஜகங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவை பாதுகாக்கப்படுகின்றது. சமூக அராஜகங்கள் பதிவு செய்வதால் எந்த அர்த்தமும் இருப்பதில்லை. அவை பொவதுவாக முறைப்பாட்டுக்கே வருவதில்லை. தற்கொலை அல்லது அடங்கிப் போதல்



அல்லது உளவியல் நெருக்கடிகளுடன் வாழ்வதே இலங்கையின் உன்னதமான வாழ்வாகி அதுவே ஜனநாயகமாகி விட்டது.

பாலியல் குற்றம் உள்ளடங்கிய மற்றைய குற்றங்களை ஆராய்ந்தாலும், இதே கதி பொதுவாக உள்ளது.

குற்றவாளிகள் சுதந்திரமாக நாடமாடும் நாடு இலங்கை என்றால் மிகையாகாது. கண்டறியப்பட்ட குற்றவாளிகள் கூட தண்டனையில் இருந்து தப்பி சுதந்திரமாக நடமாடுகின்றனர். 1990-க்கும் 2002-க்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கு கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் தவிர்த்த பிரதேசத்தில் 21,185 கொலைகள் நடந்த போதும் 97 குற்றங்களுக்கே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் 10,302 கற்பழிப்புகள் நடந்த போதும், தண்டனை வழங்கப் பெற்றவை 71 மட்டுமே. 57,586 கொள்ளைகள் நடந்த போதும் 1689 குற்றங்களுக்கே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 1.47 லட்சம் வீடுகளை உடைத்து கொள்ளை அடிக்கப்பட்ட போதும் 10 ஆயிரம் குற்றங்களுக்கே தண்டனை கிடைத்துள்ளது. மிகப் பயங்கரமான திட்டமிட்ட குற்றங்களில் தண்டனை 100-க்கு ஒன்று கூட வழங்கப்படுவதில்லை. சிறிய மற்றும் பொதுவான குற்றங்களில் 100-க்கு 7 குற்றங்களுக்கே தண்டனை கிடைக்கின்றது. குற்றவாளிகள் அண்ணளவாக 100 சதவீதம் சுதந்திரமாக வெளியில் வாழும் சமூக அராஜகமாகவே உருவாகிவிட்டது. இன்னும் தெளிவாக புரிந்து கொள்வதாக இருந்தால், சமூக அராஜகத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகமாக மாறிச் செல்கின்றது.

இதனால் நடைபெறும் குற்றங்களில் 24.4 சதவீதம் கண்டுபிடிக்கப் படுவதில்லை. குற்றங்கள் கண்டறியப்பட்டாலும் வழக்கு தொடரப்படுபவை 36.6 சதவீதம் மட்டுமே. மற்றவர்கள் அரசு மற்றும் அதிகார வர்க்கத் தொடர்புகள் மூலம் சுதந்திரமாக அராஜகத்தை அடிப்படையாக கொண்ட சமூக விரோதச் செயலைத் தொடருகின்றனர். பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலும் தப்பித்துச் செல்லும் சமூக அராஜகத்துக்கு அரசும் அதிகார வர்க்கமும் துணைசெய்கின்றது. லஞ்சம் இலங்கையில் எல்லாத் துறையிலும் தலைவிரித்தாடுகின்றது. எதையும், யாரையும் விலைக்கு பேரம் பேசி வாங்க முடியும். 1990 முதல் 2002 வரையிலான காலத்தில் 6.72 லட்சம் பாரிய குற்றங்கள் இனம் காணப்பட்டது. இதில் 1.63 லட்சம் குற்றவாளிகள் இனம் காணப்படவில்லை. குற்றவாளிகளை இனம் கண்ட போதும் அதில் 2.5 லட்சம் குற்றங்களுக்கே வழக்கு தொடரப்பட்டது. இதில் தண்டனை பெற்றோர் 41 ஆயிரம் மட்டுமே. 2.59 லட்சம் குற்றவாளிகள் மேல் வழக்கு தொடரப்படவே இல்லை. மொத்த குற்றத்தில் தண்டனை பெற்றோர் அண்ணளவாக 6 சதவீதம் மட்டுமேயாகும். இதை விளக்கும் அட்டவணை கீழ் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | கொலை | | | கற்பழிப்பு | | | கொள்ளை | | | வீடு உடைப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த கொலை | தண்டனை கிடைத்-தவை | சத வீதம் | மொத்த கற்ப-ழிப்பு | தண்டனை கிடைத்-தவை | சத வீதம் | மொத்த கொள்ளை | தண்டனை கிடைத்-தவை | சத வீதம் | மொத்த வீடு உடைப்பு | தண்டனை கிடைத்-தவை | சத வீதம் |
| 1990 | 1985 | 12 | 0.6 | 369 | 03 | 0.81 | 5702 | 200 | 3.5 | 9895 | 818 | 8.2 |
| 1991 | 1561 | 04 | 0.3 | 374 | 02 | 0.5 | 3934 | 164 | 4.2 | 9508 | 863 | 9 |
| 1992 | 1423 | 04 | 0.3 | 371 | 04 | 1.07 | 3638 | 120 | 3.3 | 9577 | 858 | 9 |
| 1993 | 1286 | 10 | 0.7 | 386 | 11 | 3 | 3189 | 154 | 5 | 9097 | 930 | 10.2 |
| 1994 | 1336 | 02 | 0.14 | 518 | 01 | 0.1 | 3618 | 115 | 3.2 | 10211 | 902 | 9 |
| 1995 | 1614 | 17 | 1.05 | 542 | 04 | 0.8 | 3698 | 156 | 4.2 | 10675 | 964 | 9 |
| 1996 | 1775 | 02 | 0.11 | 716 | 04 | 0.5 | 4064 | 121 | 3 | 10613 | 739 | 7 |
| 1997 | 1851 | 16 | 0.8 | 909 | 06 | 0.7 | 4393 | 116 | 3 | 12314 | 772 | 6.2 |
| 1998 | 1919 | 06 | 0.3 | 1076 | 02 | 0.1 | 4778 | 115 | 2.4 | 12506 | 742 | 6 |
| 1999 | 1801 | 04 | 0.2 | 1309 | 08 | 0.6 | 4952 | 109 | 2.2 | 12870 | 736 | 6 |
| 2000 | 1711 | - | 0.1 | 1202 | - | 0.1 | 4647 | 97 | 2 | 12666 | 621 | 5 |
| 2001 | 1576 | 16 | 1.1 | 1283 | 20 | 1.61 | 5310 | 106 | 2 | 13146 | 727 | 6 |
| 2002 | 1347 | 04 | 0.3 | 1247 | 06 | 0.5 | 5663 | 116 | 2.04 | 14476 | 633 | 4.4 |
| மொத்தம் | 21185 | 97 | 0.4 | 10302 | 71 | 0.7 | 57586 | 1689 | 3 | 147554 | 10305 | 7 |



| ஆண்டு | பதிவான குற்றங்-கள் | இடம் பெற்ற வழக்கு | சத வீதம் | தண்டனை பெற்றது | சத வீதம் | இனம் காணப் படாதது | சத வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1990 | 48264 | 18699 | 39 | 3562 | 7.4 | 14950 | 31 |
| 1991 | 48356 | 21119 | 44 | 3951 | 8.1 | 12836 | 27 |
| 1992 | 46963 | 21334 | 45 | 3639 | 8.1 | 11246 | 24 |
| 1993 | 43990 | 20541 | 47 | 4129 | 9.3 | 10139 | 23 |
| 1994 | 52344 | 21353 | 41 | 3557 | 8 | 11034 | 21 |
| 1995 | 53062 | 22580 | 43 | 3963 | 7 | 10720 | 20 |
| 1996 | 51809 | 19150 | 37 | 3053 | 6 | 12484 | 24 |
| 1997 | 57366 | 20957 | 37 | 3470 | 6 | 13760 | 24 |
| 1998 | 56767 | 19545 | 34.4 | 3109 | 5.4 | 13777 | 24 |
| 1999 | 57376 | 18689 | 35.3 | 2827 | 5 | 13828 | 26 |
| 2000 | 52871 | 17205 | 33 | 2339 | 4.4 | 14256 | 27 |
| 2001 | 48978 | 15179 | 31 | 2138 | 4.3 | 11389 | 23.2 |
| 2002 | 49095 | 14330 | 29.1 | 1877 | 4 | 12630 | 26 |
| மொத்தம் | 667241 | 250681 | 37.6 | 41614 | 6.23 | 163049 | 24.4 |

சமூக நெருக்கடிகள் குற்றங்களை பெருக்கி வருகின்றது. பண்பாட்டுச் சீரழிவே உலகமயமாகும் போது, சமூக அராஜகத்துக்கு வித்திடுகின்றது. குற்றவாளிகளும் அதிகார வர்க்கமும் ஒன்றாகி கலந்து விடுகின்றனர். இதனால் குற்றவாளிகளுக்குத் தண்டனை என்பது, ஜனநாயகத்துக்கு எதிரானதாகப் பண்பு மாற்றம் பெற்றுவிடுகின்றது. சமூகக் குற்றவாளிகள் மக்களைச் சூறையாடி பிழைக்க கூடிய ஒரு நாடாக மாறிவிடுகின்றது. குற்றங்கள் என்பவையே வாழ்வதற்கான ஒரு சமூக வழியாகிவிடுகின்றது. ஒருபுறம் தற்கொலை சமூகத் தீர்வாக, மறுபக்கம் குற்றம் செய்தே வாழ முடியும் என்ற நிலை உருவாகிவிடுகின்றது. நேர்மையாக உழைத்து வாழமுடியும் என்ற நிலைமை உணர்வியல் ரீதியாகவே அற்றுப் போகின்றது. கடுமையாக உழைத்து வாழ்வதைக் கேவலமாகக் கருதும் போக்கு உருவாகிவிடுன்றது. இன்ப நுகர்ச்சியும், நுகர்வு வெறியும் கொண்ட ஒரு வக்கிரமான சமூகமாகிவிட்டது. இதை அடைய எதையும் செய்யும் இழிபண்பாடு, ஒட்டுமொத்த சமூக அங்கிகாரம் பெற்ற நடத்தையாகி விடுகின்றது. இது சமூக அராஜகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்துபட்ட மக்கள் மேல் கையாளுகின்றது. இதனுடன் அரசு இயந்திரமே ஒன்றாகிவிடுகின்றது.

இதன் மற்றொரு உதாரணமாக சட்டவிரோதமான பொருட் கடத்தல் குற்றத்தை எடுக்கலாம். இந்தக் குற்றத்துக்கு எதிராக அரசுக்கு 133.5 கோடி ரூபா குற்றப்பணமாக கிடைத்தது என்கின்றது. அதே சமயம் அந்த குற்றங்களைக் கண்டுபிடித்த சுங்க அதிகாரிகளுக்கு 181.8 கோடி ரூபாவை ஊக்குவிப்பு என்ற பெயரில் லஞ்சமாக அரசு கொடுத்தது. இந்த ஊக்குவிப்பு இல்லை என்றால், சுங்க அதிகாரிகள் குற்றவாளிகளாக மாறிவிடுவர் என்ற நிலை. அரசே குற்றவாளிகளுக்கு சம்பளத்துக்கு வெளியில் லஞ்சம் கொடுக்கின்றது. இப்படி வக்கிரமாகிப் போன இலங்கை சமூக அமைப்பில், பாதாள கோஷ்டி என்று அழைக்கப்படும் நவீன மாபிய குழுக்கள் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட இரகசிய உறுப்பினர்களை அங்கத்தவராக கொண்டு இயங்குகின்றது. தமிழ்ப் பகுதிகளில் கூட இது, புலிகளின் இயக்கத்துக்குள்ளானதாகி விடுகின்றது. புலிகள் ஒரு அராஜக இயக்கமாக இருப்பதால், சமூகவிரோத அராஜாக நடத்தைகள் இயக்க நடத்தை சார்ந்த அங்கமாகிவிடுகின்றது. தமிழ் சிங்கள வேறுபாடு அற்ற அராஜகம், இலங்கையில் சமூகப் போக்காகிவிட்டது. சமூகக் குற்றங்கள் பெருகவும், அவை அராஜகப் பண்பை பெற்று வரும் போக்கின் பின்னால், ஆழமான சமூக அவலமே அடிப்படையாக உள்ளது.

## வாழ வழியற்ற சமூக அவலம்

இனங்களுக்கு இடையிலான மோதல் சமூக அவலத்தில் இருந்து திட்டமிடப்பட்டது. அதைப் பூசி மொழுக குறுந்தேசிய உணர்வு இனம் கடந்து உருவாக்கியதன் மூலம் இனயுத்தம் வித்திடப்பட்டது. அன்று இந்தச் சமூக அவலத்தின் அடிப்படை என்ன? 1971-இல் வேலை செய்யக் கூடியவர்களில் வேலை இன்மை 19 சதவீதமாக இருந்தது. இது 1974-இல் 24 சதவீதமாக உயர்ந்தது. இதில் இருந்து மீள யுத்தம், யுத்தப் பொருளாதார, பாசிசச் சட்டங்கள் ஒன்று இணைந்து அவை ஜனநாயமாகி இந்த அமைப்பின் நீடிப்புக்கு கைகொடுத்தது. இந்த யுத்தப் பொருளாதாரம் ஊடாக ஏகாதிபத்திய ஊடுருவல் என்றும் இல்லாத அளவுக்கு இலங்கையில் கால் உன்றியதுடன் அது மேலும் ஆழமாகவே வேகம் பெறுகின்றது. தேசிய அடிப்படைகள், தேசிய பொருளாதாரங்கள் அனைத்தும் ஈவிரக்கமின்றி கற்பழிக்கப்படுகின்றது.

இந்தக் கற்பழிப்பு புதிய சமூகப் பண்பாட்டை அராஜக வழிகளில் கவர்ச்சி காட்டி திணிக்கின்றது. கற்பழிப்பை ஏற்க மறுப்பது, அதை எதிர்த்து நிற்பது ஜனநாயக விரோமானதாக விளக்கம் பெற்று உள்ளது. ஒட்டுமொத்த சமூகத்துக்கு எதிராக நடக்கும் இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியாத ஒரு சமூக நெருக்கடி உருவாகிவிட்டது. உயர்வாழ்க்கைத் தரம் கொண்ட ஒரு திடீர் பணக்காரக் கும்பலும், அடிபாதாளத்தில் எதற்கும் வழியற்ற பரந்துபட்ட மக்கள் என்ற ஒரு கட்டமைப்பு ஆழமான ஏற்றத் தாழ்வான சமூகப் பிளவை உருவாக்கிவிட்டது. இது ஒரு சமூக அரசியல் வழியால் தீர்க்கப்பட முடியாத



சூழல் உள்ள நிலையில், அராஜகமும், தற்கொலையும் பல்வேறு சமூக வக்கிரங்களும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் இயல்பான அன்றாட நடத்தையாகி விட்டது.

வறுமை தேசிய கொள்கையாகின்றது. நாட்டில் அடிப்படை உணவான நெல் உற்பத்தி பெருகிய போதும், மக்கள் அதை நுகரமுடியவில்லை. 2002 இல் பெரும் போக நெல் உற்பத்தி 17 லட்சம் மெற்றிக் தொனனாக (மெட்ரிக் டன்) இருந்தது. இது 2003 இல் 19.3 லட்சம் மெற்றிக் தொன்னாக மாறியது. அமைதிக்குப் பின்பான நெற் செய்கை நிலம் 20 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. 6.6 லட்சம் வயல்கள் புதிதாக உற்பத்தி செய்தன. ஆனால் வறுமை அதிகரித்துச் செல்லுகின்றது. எங்கும் மக்களின் வாழ்வியல் சுமை, உற்பத்தி அதிகரிப்பால் தீர்க்க முடியாததாகியுள்ளது. அவை அன்னியனுக்கு மிகக் குறைந்த விலையில் ஏற்றுமதியாகின்றது.

இதை மூடிமறைக்க, அந்த உணவில் ஒரு பகுதியை உதவி என்ற பெயரில் சர்வதேச நிறுவனங்கள் திட்டமிட்ட அரசியல் நோக்குடன் களமிறக்குகின்றன. ஐ.நாவுக்கான சர்வதேச உணவு நிறுவனம் தனது அறிக்கை ஒன்றில், வடக்கு கிழக்கில் 20 சதவீதமான குழந்தைகள் பாடசாலையில் பசியுடன் கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளனர் என அறிவித்துள்ளது. இதனடிப்படையில் யுத்தப் பிரதேசத்தில் 33,000 குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகின்றது. மேலும் அவ் அறிக்கையில் 100000 குழந்தைகள் வறுமை காரணமாகக் கல்வியைக் கைவிட்டுள்ளதை அறிவிக்கின்றது. வறுமை நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகின்றது. வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ், நடைமுறையில் உள்ள உணவு கொடுத்தல் செயல்திட்டம் விரிவாக்கப்பட்டு வருகின்றது. 2004-ஆம் ஆண்டு இரண்டாம் தவணையாக 1,07,363 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் புதிய திட்டம் அமுலுக்கு வரவுள்ளது. மலையகத்தை எடுத்தால் 18 வயதுக்கு குறைந்த 3.4 லட்சம் குழந்தைகளில் 15 ஆயிரம் பேர் அங்கவீனர். 64 ஆயிரம் குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்கள். 80 ஆயிரம் பேர் 5 வயதுக்குக் குறைந்தவர்களாக உள்ள அந்தச் சமூகத்தின் எதிர்காலம் என்பது சூனியமாகவே உள்ளது. சமூகத்தின் பல படித்தான வடிவங்களில் வெட்டு முகத் தோற்றங்கள் இவை. அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இலங்கையில் 80 சதவீதமான பெண்கள் மிக மோசமான கூலியைப் பெறுவதை கண்டறிந்து அதை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. ஆணாதிக்க அமைப்பை ஏகாதிபத்திய நலனுக்கு இசைவாகப் பயன்படுத்துவதையும், வறுமையை இதனூடாக நிறுவனமயப்படுத்துவதையும் இது காட்டுகின்றது. இன்று இலங்கையில் 45 சதவீதமான உழைப்பாளிகளின் நாள் வருமானம் 200 ரூபாவுக்கு குறைவாக உள்ளது. இந்த உழைப்பாளியின் வருமானத்தைக் கொண்டு ஒரு குடும்பத்தையே வாழக் கோரும் நிலையில், இதன் சமூக வெடிப்பு அகலமானது. ஓய்வூதியமோ மாதம் 4500 ரூபாவாக உள்ளது. எங்கும் வறுமை விரிவாகியுள்ளது. வடக்கு கிழக்கில் 80 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வதாக அரசு அறிக்கையே உறுதி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பையும் கொழும்பைச் சுற்றி வாழும் மக்களில், 40 சதவீதமானவர்கள் சேரிகளில் வாழ்வதுடன் பரம ஏழைகளாக இருப்பதை அரசு புள்ளிவிபரங்களே உறுதி செய்கின்றது. திருகோணமலையில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர். இந்த திருகோணமலையில் வறுமையில் வாழப் போராடும் மீனவர்களிடம், மாதம் புலிகள் 1000 ரூபா வரியை அறவிடுகின்றனர். இதுதான், மக்கள் பற்றி அக்கறை கொண்ட தமிழ்த் தேசியம். இலங்கை முழுக்க வாழ்க்கையின் அவலம் நிரந்தரமான விதியாகிவிட்டது. ஒருபுறம் இந்தச் சமூக அவலம் அடிபாதாளத்தில் சிக்கிவிட, மறுதளத்தில் நுகர்வு வெறி உச்சத்தில் தலைவிரித்தாடுகின்றது.

வக்கிரமான சமூக நுகர்வை பூர்த்தி செய்ய, ஏழைகளின் உணவை ஏற்றுமதி செய்வது அவசியமாகின்றது. அதாவது வறுமையும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையும் பெருகிவரும் நிலையில், 2003 இல் இலங்கை ஒரு லட்சம் தொன் அரிசியை ஏற்றுமதி செய்தது. கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்களின் அடிப்படையாக கிடைத்த இறுதி உணவாக எஞ்சியிருந்த 26,000 மெற்றிக் தொன் பழங்கள், மரக்கறிகளையும் கூட ஏற்றுமதி செய்தனர். இதன் மூலம் கிடைத்த 318 கோடி ரூபாவை பணக்காரர்களின் அற்ப நுகர்வுக்கும், வட்டி கொடுக்கவும் பயன்படுத்தினர்.

இதை விரிவாகப் பார்த்தால் 2003 ஆண்டு இலங்கை ஏற்றுமதி 10 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கையை இந்தியாவின் மாநிலமாக்கும் ஒரு அங்கமாக இலங்கை இந்தியாவிற்கு இடையில் நடக்கும் பேரங்கள், பொருளாதாரத் தளத்தில் பாரிய விளைவுகளை உருவாக்கின்றது. இலங்கை இந்திய சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தின் பின் இலங்கையின் ஏற்றுமதி 142 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2800 பொருட்களுக்கு வரிச் சலுகையை வழங்குகின்றது. 2002 இல் 16 கோடி டொலர் (அண்ணளவாக 1600 கோடி ரூபா) ஏற்றுமதியை இலங்கை செய்தது. சீனாவுக்கும் ஹாங்காங்கிற்குமான இலங்கை ஏற்றுமதி 2002 இல் 2001 உடன் ஒப்பிடும் போது 27.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது 130 கோடி ரூபா அதிகரித்துள்ளது. இலங்கை இறக்குமதி 2002-இல் 730 கோடி ரூபாவாக இருந்தது.

இலங்கை வைர மற்றும் தங்க ஏற்றுமதி 2002-இல் 202 கோடி டொலராக (அண்ணளவாக 20200 கோடி ரூபாவாகும்.) இருந்தது. 2002-இல் இலங்கையின் மொத்த தொழில்துறை ஏற்றுமதித் தொகை 242 கோடி டொலராகும் (அண்ணளவாக 24200 கோடி ரூபாவாகும்.) இது வெளிநாட்டு ஏற்றுமதி வரவில் 53 சதவீதமாகும். இதில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கான ஏற்றுமதி மட்டும் 195.2 கோடி டொலராக (அண்ணளவாக 19520 கோடி ரூபா) இருந்தது. இதில் கடைசி ஆறு மாதத்தில் 109.5 கோடி டொலராக (அண்ணளவாக 10950 கோடி ரூபா) இருந்தது. 2003 முதல் மூன்று மாதத்தில் தொழில்துறை ஏற்றுமதி 141 கோடி டொலராக (அண்ணளவாக 14100 கோடி ரூபா) அதிகரித்துள்ளது.

ஏற்றுமதி என்பது தேசிய இலட்சியமாகிவிட்டது. அனைத்தையும் ஏற்றுமதி செய்வது என்ற கொள்கை தேசியப் பொருளாதாரக் கொள்கையாகிவிட்டது.



மக்களின் சமூகத் தேவையை மறுப்பது அரசியலாகிவிட்டது. ஏற்றுமதியின் அடிப்படையான நோக்கம் என்ன? ஏகாதிபத்திய பொருளாதார நலனுக்கு நேரடியாக சேவை செய்வதே. ஏற்றுமதி பொருளாதாரத்தால் தேசத்தில் வாழும் மக்களுக்கு எந்த நலனும் கிடைப்பதில்லை. ஏற்றுமதி மூலம் கிடைக்கும் செல்வம் கடனின் ஒரு பகுதியை மீளக் கொடுக்கவும், வட்டியைக் கட்டவும் பயன்படுகின்றது. அதாவது அது இன்னுமொரு விதத்தில், அப்பணமே புதிய கடனாக மீள வழங்கப்படுகின்றது. இதற்கு வெளியில் ஏற்றுமதி பொருளாதாரம் ஏகாதிபத்தியம் உற்பத்தி செய்யும் கவர்ச்சிகரமான ஆடம்பர இன்ப நுகர்ச்சிப் பொருட்களை அதிக விலையில் இறக்குமதி செய்யப் பயன்படுகின்றது. இதில் முக்கியமான மற்றொரு உண்மை ஒன்று உண்டு. அதாவது கடனாக வருபவை கூட ஏகாதிபத்திய உற்பத்தித் துறைக்கும் அதன் நலனுக்கும் இசைவாக முதலிடக் கோரும் நிபந்தனையின் அடிப்படையில் தரப்படுகின்றது. கடன்கள் ஏகாதிபத்திய தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தித் துறைக்குள் திருப்பி விடப்படுகின்றது. இவற்றை எல்லாம் மூடிமறைக்க மக்கள் நலத் திட்டங்களை அரசும், தன்னார்வக் குழுக்கள் ஊடாகவும் செய்கின்றனர். அதாவது அதையும் ஏகாதிபத்தியம் தனக்குச் சார்பான சிந்தனையை உருவாக்கும் தளத்தில் மட்டுமே செலவு செய்ய நிர்ப்பந்திக்கின்றது. ஏற்றுமதிப் பொருளாதாரம் கடனைத் தலைகால் தெரியாத எல்லைக்குள் பெருக்கிச் செல்லுகின்றது.

மொத்த தேசிய . வருவாயை விட கடன் 2001 இல் 103 சதவீதமாகியுள்ளது. இன்று அதிகரித்து செல்லும் கடனைத் தேசிய வருவாயில் 100 சதவீதமாக உள்ளதாக பொய்யான புள்ளி விபரம் ஒன்றின் மூலம் அரசு அண்மையில் மக்களின் காதுக்குப் பூ வைக்க முனைந்தது. 2002 இல் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் 77 ஆயிரம் ரூபா கடனே இருந்தது. இது 2003 இல் 99 ஆயிரம் ரூபாவாகியுள்ளது. கடனின் தொகை பெருகிச் செல்லுகின்றது. நாட்டை விற்றாலும் கடனைக் கட்டமுடியாது. 'சுதந்திர' கொத்தடிமைகளாகவே வாழ முடியும்.

## நுகர்வு வெறியும் இன்ப நுகர்ச்சியும் நேர்விகிதத்தில் ஏகாதிபத்திய கொழுப்பை உருவாக்குகின்றது.

ஏற்றுமதிப் பொருளாதாரம், அன்னிய மூலதனக் கொழுப்பை அடிப்படையாக கொண்டது. இலங்கையின் தேசிய உற்பத்திகள், வெள்ளையர்களும், பணக்காரர்களும் நுகர வேகமாக நாடு கடந்து செல்லுகின்றது. வெள்ளையர்கள் சுற்றுச்சூழல் மற்றும் பல்வேறு காரணங்களால் கழிப்பவைதான், இறக்குமதியாக நாட்டினுள் வருகின்றது. இதைவிட மிகை உற்பத்திகள், சர்வதேச சந்தையில் தேங்கிப் போனவையே நாட்டினுள் கொட்டப்படுகின்றது. அதையும் கடனாகத் தலையில் கட்டிவிட்டு, பின் வட்டி வசூலிப்பதும் கூட ஒரு இறக்குமதியின் அடிப்படைக் கூறாகி உள்ளது. அடிப்படை தேவையற்றவைகளையும், கழிவுகளையும் விளம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வாங்க வைக்கும் உளவியல் சிதைவை ஏற்படுத்தி, தேவை அற்றவைகளை தேவையானதாக்கி இறக்குமதி ஊக்குவிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் கொழும்புத் துறைமுகம் பொருட்களை ஏற்றி இறக்குவது 2002 மற்றும் 2003-க்கிடையிலான முதல் 6 மாதங்களில் 13.5 சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது. இதன் மூலம் 843 கோடி ரூபாவை ஈட்டியது. உண்மையில் ஏகாதிபத்தியத்தின் பிரதான உற்பத்தியும், பெரும் மூலதனம் கொண்டதும், சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் வாகன உற்பத்தியின் அடிப்படைக் கழிவுகளை கொண்டு, மீள் அமைக்கப்பட்ட நிலையில் இலங்கையரின் தலையில் எப்படிக் கட்டிவிடுகின்றனர் எனப் பார்ப்போம்.

2003 முதல் 8 மாதங்களில் வாகன இறக்குமதி முந்தைய வருடத்தை விட 63 சதவீதம் அதிகரித்துள்ளது. 25000 வாகனங்களை ஜப்பான், பிரிட்டன், தென்கொரியா, இந்தியா, பிரான்ஸ், ஜெர்மனி ஏற்றுமதி செய்துள்ளது. வாகனங்களை இறக்கி ஏற்றும் தொழில் 2003 முதல் எட்டு மாதங்களில் 200 சதவிகிதத்தால் அதிகரித்திருந்தது. 2002ம் ஆண்டு எடுத்தால் 113351 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டது. 2002 இல் நாட்டில் 18,92,367 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் 9,23,467 ஆகும். பத்து பேருக்கு ஒரு வாகனம் நாட்டில் ஓடுகின்றது. இதில் அரைவாசி மோட்டார் சைக்கிள்கள். சுற்றுச்சூழலை நாசமாக்கி, வீதிகளை நச்சுப் புகையாக்கி உள்ளது. இதனடிப்படையில் பல புதிய நோய்களும், நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. இந்த வாகனங்களின் எரிபொருளைப் பூர்த்தி செய்ய எரிபொருள் இறக்குமதி பெருகிச் செல்லுகின்றது. வாகனங்கள் ஓட வீதிகள் அகலப்படுத்துவதுடன், புதிய வீதிகள் கட்டப்படுகின்றன. ஏகாதிபத்திய கடன்கள் பெருமளவில் இதற்குள் திருப்பிவிடப்படுகின்றன. ஏகாதிபத்தியப் பொருளாதாரம் சார்ந்து தேசிய பொருளாதாரம் விபச்சார நிலைக்கு தரம் தாழ்ந்துவிட்டது. ஏற்றுமதி பொருளாதாரத்தின் அடிப்படை இதற்குள் இருக்கும் போது, நாட்டில் ஏழைகள் ஒரு பக்கம் அதிகரித்துச் செல்லுகின்றனர். இளைஞர் சமூகத்தின் பண்பாடுகள் இந்த வாகனப் பண்பாட்டைச் சுற்றிய கனவில் மிதக்க வைக்கின்றது.

இந்த வாகனக் கனவுடன் கூடிய ஆடம்பரத்தின் விளைவுகளில் விபத்தும் ஒன்றாகும் ஆசிய நாடுகளில் வீதி விபத்துக்கள் காரணமாக அதிக உயிரிழப்பு மற்றும் காயங்கள் ஏற்படுவோரில் இலங்கை மூன்றாம் இடத்தில் உள்ளது. 2001ஆம் ஆண்டில் இலங்கையில் 52 ஆயிரத்து 57 வீதி விபத்துகள் ஏற்பட்டன. இதனால் 2159 உயிரிழப்புகள் நடந்தன. 2002-ஆம் ஆண்டில் 55031 வீதி விபத்துகள் நடந்தன. இதனால் 2160 உயிரிழந்தனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாள்தோறும் 300 முதல் 350 வீதி விபத்து சார்ந்து மருத்துவ உதவி கோரிவருகின்றனர். 2002-இல் 1,50,000 பேர் வந்ததுடன் 434 இறந்தனர். இலங்கையில் அதிக மரணத்தை ஏற்படுத்துவதில் வாகன விபத்தும் ஒன்றாகியுள்ளது. நாள் ஒன்றுக்கு 7 பேர்களை வீதி விபத்துகள் பலிகொள்கின்றது. ஏகாதிபத்திய சந்தைக் கட்டமைப்பு இலங்கையில் குவிக்கும் கழிவுகள், ஆடம்பரப் பொருட்கள் மக்களை பல தளங்களில் மூலதனத்துக்காக பலியிடுவதையே உறுதி செய்கின்றது.



## இலங்கையில் ஊடுருவிப் பாயும் பெரும் நிதிகள்

பிரமிப்பூட்டும் வகையில் உதவிகள், கடன்கள் ஏகாதிபத்தியத்தால் வாரி வழங்கப் படுகின்றது. இதற்கு அக்கம்பக்கமாகவே அன்னிய முதலீடுகள் பெருமளவில் போடப்படுகின்றது. நேரடிச் சுரண்டல் மற்றும் கடனுக்கான வட்டி என்ற இரு தளங்களில், இலங்கையின் தேசிய வளங்கள் அனைத்தும் ஈவிரக்கமின்றி சூறையாடப்படுகின்றது. கடன் கொடுக்கும் நாடுகளின் கூட்டமைப்பு 450 கோடி டொலரை (45000 கோடி ரூபாவை) அடுத்த மூன்று ஆண்டுக்கு வழங்கியுள்ளது. இது ஒருபுறம் நடக்க இதற்கு வெளியில் நாடுகள், வங்கிகள் தனித்தனியாக கடன் உதவி என்ற பெயரில் பெரும் தொகை நிதிகளை அன்றாடம் வழங்குகின்றன. இந்த நிதி ஆதாரங்கள் பலவற்றை நேரடியாக தனது சொந்த மேற்பார்வையில் செலவு செய்கின்றன. நிதி வழங்கல் பற்றியத் தரவுகளை அன்றாடம் செய்தி பத்திரிக்கையில் இருந்து தொகுத்த போது, பிரமிப்பூட்டும் எதார்த்த உண்மை தெள்ளத் தெளிவாக தெரிய ஆரம்பித்தது. இலங்கையை தமது சொந்த நாடுகள் போல் ஏகாதிபத்தியங்கள் கருதி ஊடுருவுவது, என்றுமில்லாத வேகத்தில் நடக்கின்றது. இந்தளவு கடன் மற்றும் உதவியை சொந்த நாட்டில் கூட இந்தளவு பரந்த தளத்தில் போட்டதில்லை. சுரண்டலின் பாதுகாப்பான உயர் தன்மையும், அடிமைத்தனத்தை நிபந்தனை இன்றி எற்றுக் கொள்ளத் தயாரான அரசியல் சூழல், இலங்கையை மறுகாலனியாதிக்கம் செய்யத் துடிக்கும் ஏகாதிபத்திய முரண்பாடுகளைத் தாண்டி, ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவுக்கு நிதியைப் பாய்ச்சுகின்றன. இதை நிறைவு செய்ய பல கோட்பாடுகளையும், மதிப்பீடுகளையும் அது சார்ந்த நடைமுறைகளையும் கூட வெளியிடுகின்றனர்.

உண்மையில் இந்தக் கடன் பிரமிப்பை ஊட்டக்கூடியது. இலங்கை செலுத்த வேண்டிய

| ஆண்டு | மொத்த வெளிநாட்டுக் கடன் |
|---|---|
| 1999 | 65,451.4 கோடி ரூபா |
| 2000 | 72,207.9 கோடி ரூபா |
| 2001 | 79,591.8 கோடி ரூபா |
| 2002 | 84,061.9 கோடி ரூபா |

1988-இல் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 11430 கோடியாகவே இருந்தது. வட்டி கடன் மீளமைப்பு ஏற்றுமதி வருமானத்தில் 28 சதவீதமாக மாறியது. 2001 இல் வட்டிக்காக மட்டும் இலங்கையில் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 25 சதத்தையும் கட்டத் தொடங்கினர். இதுவே 2002 இல் 35 சதத்தையும் கட்டும் நிலைக்கு இலங்கை தேசியம் மறுகாலனியாகி வருகின்றது. உள்நாட்டுக் கடன் மற்றும் மீள் அளிக்கப்பட வேண்டிய வட்டியுமாக 27,500 கோடியாக அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கொள்ளையைத் தொடரவும் நாட்டை அடிமைப்படுத்தவும், விரும்பும் உலகம் அறிந்த உலகக் கொள்ளைக்காரர்கள், இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை விரும்புகின்றனர். இதன் மூலம் சுதந்திரமாக தடைகளற்ற வகையில் கொள்ளையடிக்கும் உயர் நிலையைத் தக்கவைக்க விரும்புகின்றனர். இதனடிப்படையில் அமைதியை நோக்கிய ஒரு பாதையைச் செப்பனிடுவதில் ஏற்பட்ட மிகுந்த அக்கறைதான், இன்றைய அமைதி மற்றும் பேச்சு வார்த்தையாகும். இதைப் புலிகளோ அல்லது அரசோ உருவாக்கிவிடவில்லை. இதனால் தான் இரு புக்கமும் நீண்ட இழுபறி அக்கம் பக்கமாக தொடருகின்றது.

இந்த அமைதி மற்றும் சமாதானம் பேசும் கதாநாயகர்களின் பிரதிநிதியும் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதியுமான பீட்டர் ஹால்ட் வழங்கிய பேட்டி ஒன்றில் “இலங்கையில் வென்றவர் தோற்றவர் என்ற நிலை இல்லை. அது அபிவிருத்திப் பணிகளுக்கு சாதகமான அம்சமாகும்” என்று அவர் கூறுவதன் மூலம், புலிகளும் சிங்கள அரசும் கைகோர்த்து வரக்கோரும் அடிப்படையான ஏகாதிபத்திய நலன்களை பேணும் கருதுகோளை முன்வைக்கின்றார். இங்கு வென்றவர், தோற்றவர் யாரும் இல்லை என்ற கூற்றின் ஆழமான அரசியல் உள்ளடக்கம் என்ன? வென்றவர்கள் ஏகாதிபத்தியம் தான் என்பதையும், தோற்றவர்கள் புலிகளும் அரசும் தான் என்ற உண்மையையும் இந்தளவுக்கு நேர்த்தியாகச் சொல்லக் கூடியவர்கள் வென்றவர்கள் மட்டும்தான். இது உலகமயமாதல் பொருளாதார அபிவிருத்திக்குச் சாதகமானது என்பதையும் ஒளிவுமறைவு இன்றி சொல்லிவிடுகின்றார். உண்மையில் இலங்கையில் வென்றவர்கள் தோற்றவர்கள் என்று யாரும் மார்புதட்ட இவர்களுக்குள் முடியாது. உண்மையில் வென்றவர்கள் ஏகாதிபத்தியம் தான் என்ற உண்மையை நாம் நிராகரிக்க முடியாது.

இலங்கையில் ஏகாதிபத்தியப் பொருளாதாரத்துக்குக் கிடைத்துள்ள வரைமுறையற்ற வெற்றி, இலங்கையும் சரி அதற்குள் தனிநாடு கேட்கும் வடக்கு கிழக்கும் சரி தோற்றவர்கள் யார் என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகின்றது. அதாவது நடக்கும் அபிவிருத்தி யாருடைய நலனுக்கானது என்ற உண்மையை, இதை நெளிவு சுளிவின்றி பறை சாற்றிவிடுகின்றது. இதையே உலக வங்கி பிரதிநிதி “அபிவிருத்திப் பணிகளுக்குச் சாதகமான அம்சமாகும்” என்று பிரகடனம் செய்கின்றார். புலிகளும் சரி, அரசும் சரி கையேந்தி ஏகாதிபத்தியங்களின் கால்களை நக்கத் தயாராக இருப்பதை, அவர்களின் சமாதானம் என்ற கோசத்தின் கீழ் கையேந்தும் அடிமை அரசியல் மூலம் பல தரம் உறுதி செய்துள்ளனர். இதனடிப்படையில் ஏகாதிபத்தியத் தலையீடு இலங்கையில் என்று இல்லாத வேகத்தில் அதிகரித்துள்ளது. பொருளாதாரத் துறையில் தொடங்கி இராணுவக் கட்டமைப்பு வரை இதன் வீச்சு உள்ளது. உலகமயமாகும் ஏகாதிபத்திய நலன்களை எதிர்த்து, புலிகளும் சரி அரசும் சரி அவர்களின் வால்களும் சரி தேசியம் பேச யாராலும் முடியாது. அனைத்தும் உலகமயமாதல் என்ற எல்லைக்குள் நின்று வாலாட்டி குலைக்கக் கோருகின்றது. இதற்கு அடிபணிந்து அடிமைப் புத்தியுடன் விசுவாசமாக ஒன்றை ஒன்று பார்த்துக் குலைப்பதே இன்று நடக்கின்றது.

இதை மீறுபவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை உலக வங்கியின் இலங்கைகான பிரதிநிதியான பீட்டர் ஹால்ட தெளிவாகவே கூறிவிடுகின்றார். “.. சில அடிப்படையான விடயங்களை நாங்கள் உதவி வழங்கும் அரசுகளால் பின்பற்றப்படாது விட்டால், நாம் அந்த அரசாங்கங்களுக்கு உதவி வழங்குவதை மறுபரிசிலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்” என்று கூறுவதன் மூலம், நாடுகளின் அடிமைத்தனத்தையும், மறுகாலனியாதிக்கத்தையும் நிறைவு செய்யும் அடிப்படைக் கோட்பாட்டை நிபந்தனையாக, தெளிவாக பிரகடனம் செய்கின்றார். யாரும் இதை இட்டு மூச்சுக் கூட விடவில்லை. புலிகள் கூட இந்த உலக வங்கியின் கொள்கைக்கும் கோட்பாட்டுக்கு இசைவானவர்கள் தான். அதைத் தனியாக விரிவாக ஆராய்வோம். கடன் கொடுத்தவன் கடனை மீளப் பெறும் வலைப்பின்னலில் இருந்து மீற முடியாத உலகமயமாதல் அமைப்பில், நாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. உலக வங்கியின் பிரதிநிதி இதைத் தெளிவாகவே தோற்ற அடிமை நாடுகளுக்குத் தெளிவுபடுத்தி விடுகின்றார். அனைத்து நிகழ்ச்சி நிரலும் இதற்குள் தான் அன்றாடம் வரையப்படுகின்றன. இப்படி இருக்கும் போது தம்மைத் தாம் சுதந்திரமானவர்கள் என்று கூறுவதும், தேசியம் பற்றி பீற்றுவதும் நிகழத்தான் செய்கின்றன. உண்மையில் உலகமயமாகும் தமது சொந்த காட்டிக் கொடுப்பை மூடிமறைக்கவே, இவை அனைத்தும் மேல் பூச்சாக உதவுகின்றன அவ்வளவே.

உலக வங்கியும் சரி, அதை உருவாக்கிய ஏகாதிபத்தியமும் சரி, உலகமயமாக்கும் நிகழ்ச்சி நிரலில் செல்வங்கள் தம்மை நோக்கி வெள்ளமாகப் பாய்ந்து வருவதை உறுதி செய்வதை அடிப்படையாக கொண்டே அனைத்துக் கொள்கைகளையும், நடைமுறைகளையும் கோருகின்றன. இதனடிப்படையில் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்த கொள்கை ஒன்று, முக்கியமான மூன்று பிரச்சனைகளை முதன்மையானதாக தள்ளுகின்றது.

1. உலகமயமாதல் கொள்கையை நிர்வாகிக்கும் ஒரு பலமான உள்ளூர் கைக்கூலிகளின் தேவையை உறுதி செய்யக் கோருகின்றார்.

2. இந்தக் கைக்கூலிகள் அம்பலப்படாத வகையில் ஒரு பலமான அதிகார மையமாகத் திகழ, அதிகாரப் பரவலாக்கல் மூலம் உள்ளூர் முரண்பாட்டை உருவாக்கும் வகையில் அரசியல் அதிகாரத்தை வழங்க கோருகின்றார்.

3. செல்வங்கள் ஏகாதிபத்தியங்களை நோக்கி செல்வதை உறுதி செய்யவும், தேசிய பொருளாதார அடிப்படைக் கட்டுமானங்களை முடக்கவும், முறையாக வரி அறிவிடும் உள்ளூர் அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்யக் கோருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அடிப்படையாகக் கொண்டு இலங்கை இன மோதலைத் தீர்க்கக் கோருகின்றார். தமிழ்ப் பிரதேச வரிகளை அரசுக்குப் பதிலாக புலிகள் அறவிடுவது சிறப்பானது என்பது உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதியான பீட்டர் ஹால்டின் தெளிவான உலகமயமாதல் சித்தாந்தம் கோருகின்றது. இந்த வகையில் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதியான பீட்டர் ஹால்ட தனது கோட்பாட்டைத் தெளிவாக்கி விடுகின்றார். அவர் அதை "உள்ளூர்த் தலைமைகள் வரி எடுக்கும் செலவிடும் அதிகாரம் இருக்கும் போது மிக ஆர்வமாகச் செயல்படுவர். உதாரணமாக வதிவிடங்கள், வியாபாரங்கள், தொழில் இடங்கள் என்பவற்றை கறாராக மதிப்பீடு செய்து அவற்றிக்கு வரியைத் தீர்மானித்து அறவிடுவதில் அவர்கள் அக்கறையாக இருப்பார்." இப்படித் தான் அதிகார பரவலாக்களை பின்நவீனத்துவவாதிகளும் கூறியுள்ளனர். அதையே தான் உலக வங்கியும் கூறுகின்றது. கோட்பாட்டு அடித்தளம் இரண்டுக்கும் ஒன்று அல்லவா!

அதிகாரப் பரவலாக்கல் மூலம் உள்ளூர் அளவில் கண்காணிப்பையும், வரி அறவிடுதலையும் ஒழுங்கு செய்யக் கோருவதே இதன் சாராம்சமாகும். இதன் மூலம் அரசு நேரடியாக மக்களின் கோபத்தில் இருந்து தப்பிவிட முடிகின்றது. குற்றத்தை உள்ளுர் அதிகாரப் பிரிவுகளின் மீது சுமத்திவிட முடியும். இந்தப் பணியில் தன்னார்வக் குழுக்கள் ஊக்கமாகச் செயல்பட வேண்டும் என்று அரசியல் ரீதியாக வழிகாட்டுகின்றார். ஏகாதிபத்திய நலனுக்கு மிகச் சிறப்பாகச் சேவை செய்யும் தன்னார்வக் கைக்கூலிகளைப் பாராட்டுகின்றார். அந்த வகையில் "... அரசுசார்பற்ற நிறுவமான 'சேவா லங்கா' வடக்கு கிழக்கில் பலருக்கு அபிவிருத்தி வேலைக்கான நல்ல பயிற்சியை வழங்க திட்டங்களைச் செயற்படுத்துகின்றது" என்று புகழாரம் சூடுகின்றார்.

கோட்பாட்டு ரீதியாக உலக வங்கியின் சமாதானம், அபிவிருத்தி, அதிகாரம் போன்றவற்றைத் தெளிவுபடுத்திவிடுகின்றார். உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் இருந்து ஒரு புள்ளி கூட விலகி விட முடியாது. இதை மிகத் தெளிவாக அவர் வெளிப்படுத்தி விடுகின்றார். இதனடிப்படையில் உதவி, கடன், மூதலீடு என்ற பல முனைகளில் நிதியும், மூலதனமும் இலங்கைக்குள் வெள்ளமாகப் பாய்கின்றது. இந்த மூலதனப் பாய்ச்சலில் அனைத்து ஏகாதிபத்தியங்களும் தத்தம் பங்குகளுக்காக போட்டியிடுகின்றன. அத்துடன் மூலதனத்தை முதலிடக் கூடிய வெவ்வேறு நாடுகளும் கூட களமிறங்கியுள்ளது. இந்த உதவி மற்றும் கடன் அனைத்துத் துறையிலும் புகுகின்றது. இலங்கையின் சமூக நலத் திட்டங்கள் முதல் எதுவாக இருந்தாலும், அது வெளிநாட்டுத் தலையீட்டுடன் அவர்களின் நிதி ஆதாரத்துடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டதாக மாறிவிட்டது.

இதைவிட அரசு சாராத நிறுவனங்களான ஏகாதிபத்திய நிதி ஆதாரத்தில் இயங்கும் தன்னார்வக் குழுக்களின் தலையீடு பிரமாண்டமானது. அரசுசார நிறுவமான தன்னார்வக் குழுக்கள் 2003 இல் 10000 திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்தியுள்ளது. 23 திட்டக் கூட்டங்களை நடத்தியுள்ளது. இது போன்று அதிக எண்ணிக்கையில் திட்டங்களை



இலங்கையில் நடைமுறையில் நடத்தியது இதுவே முதல் தடவையாகும். ஏகாதிபத்திய நிதி ஆதாரத்தில், அவர்களால் உருவாக்கப்பட்ட தன்னார்வக் குழுக்கள் 2003 இல் மட்டும் 10 ஆயிரம் திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளது என்றால், அதன் பலம் மிகப் பெரியது. ஒரு அரசியல் இயக்கத்தை விட பலமான அடித்தளத்தைக் கொண்டது என்பது தெளிவானது. அரசுக்கு நிகரான ஒரு பலமான அடிப்படையைக் கொண்டது. பல பத்தாயிரம் உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டுள்ள, பெரும் நிதி மூலதனங்களை ஆதாரமாகக் கொண்ட இதன் வலைப் பின்னல் உலகளாவியது. அரசுக்கு மேலாக ஏகாதிபத்திய வழிகாட்டலுடன் இயங்கும் இந்த தன்னார்வக் குழுக்கள் நிழல் அரசாங்கமாகவே இயங்குகின்றது. இவர்கள் அரசு மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எங்கும் தம்மை நிலைநாட்டி உள்ளனர். அரசியல் பொருளாதாரத் துறையில் ஒரு சமூக இயக்கமாக, தேசிய அடிப்படைகளுக்கு எதிராகத் திட்டமிட்டு இயங்குபவர்களாக உள்ளனர். இது ஒருபுறம் இருக்க 2003 முதல் பல்வேறு நிதிகளை உதவி, கடன், முதலீடு என்ற பெயரில் பல நூறு திட்டங்களில் ஏகாதிபத்தியங்கள் திட்டமிட்டு வழங்குவது அதிகரித்துள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றைப் பாாப்போம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 கோடி ரூபாவைக் கையளித்து, சுழற்சிமுறைக் கடனை வழங்க கோரியுள்ளார். 2003-இல் ஜப்பானின் அம்டா அமைப்பு மட்டுவில் வடக்கில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்திற்கு 10 லட்சம் ரூபாவை வழங்கியது. இதைவிட தளவாடங்கள், தொலைக்காட்சி போன்ற பொருள்களை வழங்கியது. இப்பகுதி தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரத்தை வழங்கினர். இதேபோல் கைத்தடி, நாவற்குழி தெற்கில் 10 லட்சம் ரூபா செலவில் புதிய சனசமூக நிலையம் ஒன்றைக் கட்டினர். இப்பிரதேசத்தைச் சேர்ந்த 20 மீனவக் குடும்பங்களுக்கு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான வலை உட்பட மீன்பிடி உபகரணங்களையும் வழங்கினர். அத்துடன் இப்பகுதிகளில் உள்ள மக்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுப வேண்டும் என்ற பெயரில் தலை முடி அலங்காரம், கேக் ஐசிங் போன்ற வகுப்புக்களை நடத்தினர். அத்துடன் தென்னைப் பயிர்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு என்ற பெயரில் கருத்தரங்குகளை நடத்தினர். ஏகாதிபத்தியத் தலையீடும், அரசு சாராத நிறுவனங்களும் மக்கள் மத்தியில் ஆழமாகவே தலையிடுகின்றது. அரசியல் கட்சிகளும், தேசிய இயக்கங்களும் இங்கு இவர்களின் கூலிபட்டாளமாகவே இயங்குகின்றனர்.

டென்மார்க் அரசு யாழ் குடாநாட்டில் 1.2 கோடி அமெரிக்க டொலர் (அண்ணளவாக 120 கோடி ரூபாவை) செலவில் மூன்று செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் மனித உரிமை மீறல்கள் குறித்த அறிவியல், கண்ணி வெடி அகற்றுதல், 'சிரானின்' மீள் குடியமர்வுத் திட்டங்களுக்கு உதவுதல் ஆகிய மூன்று திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நிதி கையாளப்படுகின்றது. மனித உரிமை மீறல் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய விளக்கங்கள் சார்ந்த கல்வி எதைத்தான் உற்பத்தி செய்யும்? ஏகாதிபத்திய அடிமைகளையும், ஏகாதிபத்திய மனித உரிமை அறிவுஜீவிகளையும் உற்பத்தி செய்யவே இந்த நிதி பயன்படுகின்றது. கைக்கூலிகளைக் கொண்ட ஒரு இலங்கைச் சமூகத்தைக் கட்டமைப்பதே, இதன் அடிப்படையான உள்ளடக்கமாகும். உலகில் அதிகளவில் மனித உரிமை மீறல்களைச் செய்யும் ஏகாதிபத்தியங்கள் தான், மனித உரிமை மீறல் குறித்தும் போதிக்கின்றது. உலகமயமாதல் போக்கில் மனித உரிமை மீறல் என்பது இதற்கு எதிரானது என்பதைச் சொல்லிக் கொடுப்பதும், உலகமயமாதலை எதிர்ப்பது மனித உரிமை மீறல் என்பதை போதிப்பதுமே இதன் மைய அடிப்படையாகும்.

கண்ணிவெடி அகற்றுதல் என்று கூறுவதன் மூலம், சர்வதேசத் தலையீட்டை ஏற்படுத்தல் இதன் அடிப்படையாகும். கண்ணிவெடியை உலகளவில் உற்பத்தி செய்வதையும், அதை விற்பதையும் பேசாத, அதை ஜனநாயக உரிமையாக அங்கீகரிக்கும் இவ் அரசுகள், கண்ணிவெடி அகற்றுதல் என்ற பெயரில் பிறநாடுகளில் தலையிடுகின்றன. அமெரிக்க அரசின் மனித முன்னேற்றம் பிரிவு, கண்ணி அகற்றல் என்ற போர்வையில் 1993 முதல் 7000 கோடி ரூபாவை ஒதுக்கி அதைச் செலவு செய்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக 2004 இல் 1.2 கோடி பெறுமதியான ஆறு கண்ணி அகற்றும் நாய்களை வழங்கியுள்ளது. அமெரிக்கா, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயத்துக்கு 12 கோடியே 10 லட்சம் ரூபாவை வழங்கியது. இலங்கை அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தனது திட்டங்களுக்குச் செலவிடுவதற்காக ஜப்பான் 7கோடி 28லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறது. மீள் குடியேற்றம் என்ற பணியைச் சொந்தத் தேசமே கையாள முடியாதவர்களாக, வக்கற்றவர்களாக மாற்றுவதன் மூலம் எதை செய்ய முனைகின்றனர். ஏகாதிபத்தியம் நிதி அளிப்பதன் மூலம், ஏகாதிபத்திய சந்தையை மையமாக வைத்து மீள் குடியேற்ற பகுதிகள் கட்டமைக்கப்படுவதைக் கண்காணிக்கவே இந்த நிதி வழிகாட்டுகின்றது.

ஏகாதிபத்தியச் சார்புத் தகவல் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்க ஏகாதிபத்தியங்கள் நிதியை முதலீட்டுள்ளன. சர்வதேசத் தகவல் அபிவிருத்திக்கான சுவீடிஸ் நிறுவனமும், தகவல் அபிவிருத்திக்கான நோர்வைய நிறுவனமும் இணைந்து தகவல் மற்றும் செய்தி அமைப்பை ஏகாதிபத்திய மயமாக்கம் பணிக்காகவும், கைக் கூலிகளை உருவாக்கவும் 24 லட்சம் டொலரை (24 கோடி ரூபாவை) முதலிட்டுள்ளது.

இது போன்று அடுத்த மூன்று வருடத்துக்கு வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு என்ற பெயரில் ஜெர்மானிய ஏகாதிபத்தியம் 24 லட்சம் ஈரோவை (அண்ணளவாக 30 கோடி ரூபாவை) வழங்கியுள்ளது. உண்மையில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி என்பது ஐரோப்பியச் சந்தையை நோக்கி திருப்பும் வகையில் இது வழங்கப்பட்டுள்ளது. உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக, யுத்தத்தை நிறுத்தி முழுமையாக நாட்டைச் சூறையாட இது நிர்ப்பந்திக்கின்றது.



பரஸ்பர வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும் ஆஸ்திரேலியாவும் கைச்சாத்திட்ட போது, சமாதான முன்னெடுப்புக்காக 90 லட்சம் டொலர்களை (அண்ணளவாக 90 கோடி ரூபாவை) அவுஸ்திரேலியா வழங்கியது. இதைவிட 2 கோடி ரூபாவை இடிந்த பாடசாலையின் அபிவிருத்திக்கு என 2004 தை மாதம் வழங்கியுள்ளது. நெதர்லாந்து அரசாங்கம் 40 லட்சம் ஈரோவை (அண்ணளவாக 48 கோடி ரூபாவை) அமைதி மற்றும் அதை ஒட்டிய தேவைகளுக்கு வழங்கியுள்ளது. இது போன்று ஐரோப்பிய யூனியன் 60 லட்சம் ஈரோவை (அண்ணளவாக 75 கோடி ரூபாவை) வடக்கு கிழக்கில் புலம் பெயர்ந்தவர்களின் நலனுக்காக வழங்கியுள்ளது. ஜெர்மனி 2003-2004 ஆண்டுக்கு என 50 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. அட என்ன அக்கறை! ஐரோப்பியயூனியன் 32.7 லட்சம் ஈரோவை (அண்ணளவாக 40 கோடி ரூபாவை) அமைதியைப் பேண வழங்கியுள்ளது. உலகவங்கி 2003-இல் அடுத்த மூன்று வருடத்துக்கு அமைதியைப் பேண 80 கோடி டொலரை (800 கோடி ரூபாவை) வழங்கி உள்ளது. உண்மையில் இலங்கையில் தொடரும் அமைதியை எது பேணுகின்றது? பணம்! அனைத்தும் பணமே. அதுவும் குறிப்பாக ஏகாதிபத்தியப் பணம் அமைதியை பேணுகின்றது. பணம் தேசியத்தின் அனைத்துக் கூறுகளையும் ஏப்பமிடுகின்றது என்ற உண்மையை நாம் பூசிமொழுக முடியாது. இந்த நிதிகள் எமக்கு சில்லிடும் உண்மைகளை முன்வைக்கின்றது. தேச மக்களின் நலன்கள் அல்ல, பணம் கொடுப்பவனின் நலன்கள் உறுதி செய்யப்படுவதை யாரும் இனியும் நிராகரிக்க முடியாது.

இந்த அமைதிக்கான உல்லாசப் பயணங்களை ஏகாதிபத்தியங்கள் பெரியளவில் திட்டமிடுகின்றன. இதற்கான பெரியளவிலான செலவுகளைக் கூட ஏகாதிபத்தியமே செலவு செய்கின்றன. அமைதிப் பேச்சு வார்த்தை என்ற பெயரில் நடத்திய ஒரு நாடகத்திற்கான செலவை இலங்கை அரசோ, புலிகளோ செலவு செய்யவில்லை. அந்தந்த நாடுகளே செலவு செய்தன. தாய்லாந்தில் 2002 செப்ரெம்பர் 16முதல் 18வரை நடந்த பேச்சுக்களுக்காக 10.38 லட்சம் ரூபாவை செலவு செய்தது. தாய்லாந்தில் 2002 ஒக்ரோபர் 31 முதல் நவம்பர் 3வரை வரையிலான கூத்துக்கு 18.82 லட்சம் ரூபாவையும், தாய்லாந்தில் 2003 ஜனவரி 6 முதல் 9வரையிலான கூத்துக்கு 17.40 லட்சம் ரூபாவையும் தாய்லாந்தே செலவு செய்தது. நோர்வேயில் 2002 டிசெம்பர் 2முதல் 5வரையிலான கூத்துக்கு 33.65 லட்சம் ரூபாவை நோர்வை செலவு செய்தது. அமைதி மீது என்ன அக்கறை! இதைவிட விமானப் பயணங்கள் தொடங்கி பல்வேறு தொடர் செலவுகளை அமைதி என்ற நாடகம் உள்ளடக்கியது. இந்த அமைதி என்ற நாடகத்திற்கு பெரும் தொகை நிதியை ஏகாதிபத்தியங்களும், அவர்களின் கைக்கூலி அரசாங்கங்களும் செலவு செய்கின்றது ஏன் என்றால், அமைதிப் பேச்சு வார்த்தையின் முடிவு ஏகாதிபத்திய நலனுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்பதால் தான்.

ஏகாதிபத்தியங்கள் அமைதிக்காக மட்டுமல்ல, பல்வேறு துறைகளுக்கும் நிதி வழங்குகின்றனர். உலகவங்கி கல்விக்காக 4.03 கோடி டொலரை (அண்ணளவாக 400 கோடி ரூபாவை) வழங்கியுள்ளது. இதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகவங்கியும், ஆசியா அபிவிருத்தி வங்கியும் இணைந்து கல்விக்கு என 172 கோடி ரூபா வழங்கியுள்ளது. இதில் 100 கோடி ரூபா தெரிவுசெய்யப்பட்ட 80 பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றது. இதில் 72 கோடியை வழங்கும் ஆசிய வங்கி, வடக்கு கிழக்கில் உள்ள இரண்டாம் தரப் பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளது. யாழ் குடாநாட்டிலுள்ள 34 பாடசாலைகளுக்குத் தேவையான தளவாடங்களுக்கு நெதர்லாந்து அரசு ஒரு கோடி ரூபாவை யாழ்மாவட்ட 'நிக்கொட்' அமைப்புக்கு ஊடாக வழங்கியுள்ளது. ஏகாதிபத்தியத்தின் அக்கறை மூக்கில் வியற்க வைக்கின்றது. தமது சொந்த மக்களின் கல்வியை மேம்படுத்துவதற்கு அக்கறை அற்ற தேசிய அரசியல் ஒருபுறம் இருக்க, அதற்குப் பதிலாக அன்னியன் அக்கறைப்படுகின்றான். வேடிக்கையான விசித்தரமான உலகம் தான். உலகளவில் கல்வியைத் தனியார்மயமாக்க கோரும் நிபந்தனைகளை முன்வைக்கும் ஏகாதிபத்தியம், இலங்கையில் வழங்கும் நிதிக்கு திட்டவட்டமான பின்னணி நோக்கம் உண்டு. கல்வியை உலகில் மறுப்பது ஒரு நிபந்தனையாக இருக்க, அதற்கு மாறாக கல்விக்கு என்ற பெயரில் நிதியளிப்பது ஆச்சரியமானது அல்ல. இவை பல தளத்தில் இயங்குகின்றது. போராட்டத்தைக் கைவிடக் கோரவும், எதிர்காலத்தில் கல்வியைத் தனியார்மயமாக்கவும், அறிவியல் தளத்தை தனக்கு சார்பாக மாற்றவும், அன்னியத் தலையீட்டுக்கு ஆதரவான ஒரு அறிவியல் குழுவை உருவாக்கவும், கல்வி மூலமான ஏகாதிபத்திய ஆதரவு மாணவர் குழுக்களை கட்டமைப்பதை அடிப்படையாக கொண்டது. இதன் மூலம் உலகமயமாதல் கட்டமைப்பை பலப்படுத்துவது இதன் அடிப்படையாக உள்ளது.

ஏழைகள் மேலான ஏகாதிபத்திய கரிசனை சொல்லிமாளாது. 2.3 கோடி ரூபாவை உணவு பற்றக்குறையான குடும்பத்துக்கு என ஜப்பான் மற்றும் நெதர்லாந்து வழங்கியது. இதைவிட நெதர்லாந்து அரசாங்கம் 27 லட்சம் ரூபாவை வறிய குடும்பங்களின் குழந்தைகளுக்கு என வழங்கியுள்ளது. இதே போல் அவுஸ்ரேலிய அரசாங்கம் 20 லட்சம் ரூபாவை குழந்தைகள் நலனுக்காகக் கொடுத்துள்ளது. குழந்தைகள் மேல் என்ன அக்கறை? குழந்தை உழைப்பு உட்பட, அவர்களின் உலகளாவிய வறுமையை கட்டிப் பாதுகாக்கும் ஏகாதிபத்தியங்களின் அக்கறை மோசடித்தனமானது. குழந்தைகளின் நலனைப் பெற்றோரிடம் இருந்து புடுங்கும் அதியுயர் சுரண்டல் கொள்கையைப் பின்பற்றும் ஏகாதிபத்தியங்கள், குழந்தை நலனில் அக்கறைப்பட்டு நிதி கொடுக்கும் பின்னணி வேடிக்கையானது தான். ஒவ்வொரு குழந்தையின் நலனிலும் பெற்றோரின் பொறுப்பான பங்களிப்பை கைவிடச் செய்தபடி, உதவுவது என்பது சொந்த வக்கிரத்தை மூடிமறைக்கத்தான். மிருகங்களுக்கு நலமலடித்த பின் ஏற்படும் வலிக்கு மருந்து கொடுப்பவன் எதைச் செய்கின்றானோ, அதையே ஏகாதிபத்தியமும் செய்கின்றது. நலமடித்தவன் நோக்கம் சார்ந்த நலன்கள், இதன் மூலம் உறுதி செய்யப்படுகின்றது அல்லவா!.

2004-இன் ஆரம்பத்தில் ஜப்பான் கொழும்பு நகரசபைக்கு, 50 லட்சம் ரூபாவை ஏழைகளின் நலனுக்கு என்ற பெயரில் வழங்கியுள்ளது. சுவீடன், இலங்கைக்கு 300 கோடி ரூபாவை அபிவிருத்திக்கு என்ற பெயரில் வழங்கி உள்ளது. வவுனியா மாவட்டத்தின் முன்னேற்றம் என்ற பெயரில் ஆசிய



அபிவிருத்தி வங்கி 24.4 கோடி ரூபாவை முதலிட்டுள்ளது. 2004-இன் ஆரம்பத்தில் இதில் நூற்றுக்கணக்கான திட்டங்களைக் கொண்டது. இதே போன்று கிராமப்புற அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 100 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. புத்தளம் மாவட்டத்தில் மனித முன்னேற்றம் என்ற பெயரில் ஜப்பான் 59 லட்சம் ரூபாவை கொடுத்துள்ளது. மனிதனின் முன்னேற்றம், அபிவிருத்தி என்பது, ஏகாதிபத்தியக் கண்ணோட்டத்துக்கு வெளியில் விளக்கம் நிச்சயமாக இருப்பதில்லை என்ற உண்மையை நாம் மறுத்துவிட முடியாது அல்லவா!. இப்படி மனித முன்னேற்றம், கல்வியை முன்னேற்றுவது, மனித உரிமை பாதுகாத்தல், வறிய மக்களுக்கு உதவி, அமைதியைப் பேண பணம் என்று தடபுடலாக வாரிவழங்கும் இந்த ஏகாதிபத்தியக் கும்பல் வேறு எவற்றுக்குப் பணம் வழங்குகின்றது தெரியுமா!

மக்களின் தேசியச் சொத்துகளை, வளங்களைத் தனியார்மயமாக்கவும் நிதி கொடுக்கின்றது. உலகவங்கி அரசுதுறையைத் தனியார்மயமாக்க 60 லட்சம் டொலரை (60 கோடி ரூபாவை) ஊக்குவிப்பாக வழங்கியுள்ளது. இதற்கு என மேலதிகமாக 19.6 கோடி டொலரை (அண்ணளவாக 1960 கோடி ரூபாவை) வழங்கவுள்ளது. 2003 முதல் வாரத்தில் ஐரோப்பிய யூனியன் தனியார்துறையை ஊக்குவிக்க 392 கோடி ரூபாவை வழங்கியது. இவை எல்லாம் எதைக் காட்டுகின்றது? தேசத்தின் தேசியச் சொத்துகளை தனியார் மயமாக்கும் திட்டத்தை அமுல்படுத்த கோருகின்றன. அதை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிடும் உரிமையை அமுல்படுத்தக் கோருகின்றனர். இதனால் ஏற்படும் மனித துயரத்துக்கு தாங்கள் பொறுப்பு அல்ல என்பதை மூடிமறைக்க, சில உதவிகள் மூலம் வண்ணப் பூச்சடிக்கின்றனர்.

தனியார்மயமாக்கலை எதிர்க்கும் ஊழியர்களைப் பணம் கொண்டு சரிக்கட்டவும், தேசிய வாதிகளை விலை பேசி வாங்கவும், லஞ்சத்தையும் ஊழலையும் கொண்டு சரிகட்டவும், மக்களின் சில அடிப்படையான பணிகளைப் பணத்தைக் கொண்டு மாற்று வழிகளை உருவாக்குவதன் மூலம், மக்களின் சொத்தை எதிர்ப்பற்ற வகையில் தனியார்மயமாக்க சிறப்பு நிதியைத் தாரைவார்க்கின்றனர். ஏகாதிபத்தியம் தங்குதடையற்ற சூறையாடலை நடத்த பணம் கைக்கூலிகளுக்குத் தாரைவார்க்கப்படுகின்றது அவ்வளவே.

வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களுக்கு இலங்கை மீது என்ன அக்கறை? உலகவங்கி யாழ்குடா நாட்டுக்குக் குளங்களைப் புனரமைக்க எட்டுகோடி ரூபாவை வழங்கியுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி கரையோரச் சமூக அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் 28.4 கோடி அமெரிக்க டொலரை (2840 கோடி ரூபா) வழங்கியுள்ளது. சீன அரசு 50 கோடி ரூபா செலவில் இலங்கையில் மிகப் பெரிய கண்காட்சிக் கூடம் ஒன்றைக் கட்டியுள்ளது. இலங்கைக்கு உடனடி உதவி என்ற பெயரில் 76 கோடி ரூபாவை சீன அரசு வழங்கியுள்ளது. இதைவிட 768 கோடி ரூபா செலவில் எண்ணை சேமிப்பு குதங்களை சீனா அரசு கட்டுகின்றது. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கலன்களைக் கொண்ட 250 ஆயிரம் மெற்றிக் தொன் எண்ணையை இதில் சேகரிக்க உள்ளனர். இதைவிட வேறு இரு ஒப்பந்தத்தையும் சீனா அரசு செய்துள்ளது. கிராமப்புற மின்சாரத் திட்டம் ஒன்றை 288 கோடி ரூபா செலவில் அமைக்கவுள்ளது. இதற்கான இரண்டு 10,000 மெற்றிக் தொன் டீசல் குதங்களை அமைக்க 57.6 கோடி ரூபா வழங்கியுள்ளது. இதைவிட சீனா அரசு 12.5 கோடி டொலரை (அண்ணளவாக 1,250 கோடி ரூபாவை) கடனாக கொடுத்துள்ளது. இதில் 7 கோடி டொலர் (அண்ணளவாக 700 கோடி ரூபா) சீனா பொருட்களை வாங்கவேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டது.

சவுதி அரசு 1.07 கோடி டொலரை (அண்ணளவாக 107 கோடி ரூபாவை) இலங்கைக்குக் கடனாக வழங்கியுள்ளது. 19 கிலோ மீற்றர் வாய்க்கால் ஒன்றை வெல்லவாவில் அமைக்க ஜப்பான் 85.9 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. ஆசியா அபிவிருத்தி வங்கி இரண்டு வேலைத் திட்டங்களுக்குக் கடனாக 10.5 கோடி டொலரை (அண்ணளவாக 1050 கோடி ரூபாவை) முதலிட்டுள்ளது. இந்த வேலைத் திட்டங்கள் ஆராய்ச்சி கல்விக்கும், சுத்தமான தண்ணீரை வழங்குவதற்கு என்ற பெயரில் கடன் வழங்கியுள்ளது. குடிக்கும் தண்ணீரை காசுக்கு விற்கும் திட்டம் உட்பட, நாட்டில் எதை எல்லாம் கொள்ளையிட முடியும் என்பதைக் கண்டறியும் ஆராய்ச்சித் திட்டங்களை வரையவும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பெற்றோலிய நிறுவனம் ஒன்று இலங்கையின் பெற்றோலிய வளம் குறித்து அக்கறை கொண்டதை அடுத்து, இலங்கையின் வடமேற்கிலும், வடகிழக்கிலும் எண்ணெய் வள ஆய்வினை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3.25 லட்சம் அமெரிக்க டொலரை (அண்ணளவாக 32 கோடி ரூபாவை) கொடுத்துள்ளது. இயற்கை வாயுவை எடுக்கவும், எண்ணை ஆழ் கிணறுகளைத் தோண்டவும் பன்னாட்டு நிறுவனத்துக்கு மன்னார் கடற்கரை வளங்களை இலங்கை அரசு தாரைவார்த்துள்ளது. அவுஸ்ரேலியா அரசாங்கம் 58 கோடி ரூபாவை வறண்ட பிரதேச அபிவிருத்திக்கு என வழங்கி உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி சிறிய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க 6 கோடி டொலரை (அண்ணளவாக 600 கோடி ரூபாவை) வழங்கி உள்ளது. ஐரோப்பிய முதலீட்டு வங்கி 390 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. சிறிய நடுத்தர உற்பத்திகளைக் கட்டுபடுத்தவும், விவசாயத்தை அழிக்கவுமே இவைகளை வழங்கி உள்ளனர்.

12 கோடி ரூபாவை ஜப்பானின் சர்வதேச வங்கியும், ஆசிய வங்கியும் பண்ணை அபிவிருத்திக்கு என வழங்கியுள்ளது. ஐந்து வருடத்துக்கான இப்பணம் நிலத்தைப் பண்படுத்தக் கோருகின்றது. அதாவது ஏகாதிபத்தியத் தேவையை நிறைவு செய்யும் உற்பத்தியை நோக்கி, மண்ணையும் மக்களையும் பண்படுத்தக் கோருகின்றனர். தேசத்தின் தலைவிதி இது என்றால், தாய்லாந்து அரசோ தனது நாட்டில் இருந்த பொருட்களை இறக்குமதி செய்ய 2 கோடி டொலரை (அண்ணளவாக 200 கோடி ரூபாவை) கடன் வழங்கியுள்ளது. சந்தையில் சீண்டுவார் அற்று தேங்கிப் போகும் பொருட்களைத் தலையில் கட்டிவிடுவதற்கும் கடன் வழங்கப்படுகின்றது.



மலேசியா அரசாங்கம் தொலைபேசி தொடர்பானத் துறையில் 9 கோடி டொலர் (அண்ணளவாக 900 கோடி ரூபாவை) முதலீட்டை செய்யும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ள அதேநேரம், 20 கோடி டொலர் வரை (அண்ணளவாக 2000 கோடி ரூபா) விரிவுபடுத்தவும் ஒப்பந்தம் வழி செய்கின்றது. அத்தியாவசியமான சமூகத் தேவைகளை நிராகரிப்பதும், ஆடம்பரமான பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் உலகமயமாதல் சந்தைக் கட்டமைப்பு விரிவாக்கப்படுகின்றது. இலங்கையில் ஆறு வேலை திட்டங்களில் ஜப்பான் 2600 கோடி ரூபாவை முதலீட்டுள்ளது. இதே போன்று அமெரிக்கா 12 கோடி டொலரை (அண்ணளவாக 1200 கோடி ரூபாவை) முதலீட்டுள்ளது. வெளிநாட்டு ஏற்றுமதியை ஊக்குவிக்க ஜப்பான் 1.81 கோடி ரூபாவை வழங்கியது. அதேநேரம் இதன் அடிப்படையில் ஏற்கனவே 537.3 கோடி ரூபா கடனைக் கொடுத்து இருந்தது. ஐ.எம்.எ.்.ப் கடனாக 8.1 கோடி டொலரைக் (அண்ணளவாக 810 கோடி ரூபாவைக்) கொடுத்த அதேநேரம் 2006க்கு இடையில் 56.7 கோடி டொலரை (அண்ணளவாக 5670 கோடி ரூபாவை) வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது. உதவி, கடன், முதலீடு என்று இலங்கையில் பெருகிவரும் ஏகாதிபத்தியப் பணவரவு, இலங்கையின் மறுகாலனியாதிக்கத்தை விரைவுபடுத்தி வருகின்றது. கொள்ளை அடிப்பதை விரைவாக நகர்த்திச் செல்ல விசேட முதலீடுகளை ஏகாதிபத்தியம் செய்கின்றது.

ஆசிய வங்கி 100 கோடி டொலர் (அண்ணளவாக 10000 கோடி ரூபாவை) கொழும்பு துறைமுகத்தை விரிவாக்க வழங்கியுள்ளது. இதை பிரிட்டிஷ் கம்பெனிகள் கட்டமைக்கின்றன. 160 கோடி ரூபா செலவில் 6 நகரங்களை அபிவிருத்தி செய்ய ஆசியா அபிவிருத்தி வங்கி நிதி வழங்கியுள்ளது. ஆசியா அபிவிருத்தி வங்கிக் கடனாக கண்டி யாழ் வீதியை நவீனப்படுத்த 50 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. நோர்வை 20 கோடி ரூபாவை வீதி அபிவிருத்தி என்ற பெயரில் வழங்கியுள்ளது. புத்தளத்துக்கும் திருகோணமலைக்குமான நவீன வீதி அமைப்பை உருவாக்க கொரியா 12 லட்சம் அமெரிக்க டொலரை (அண்ணளவாக 12 கோடி ரூபாவை) முதலீட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தை நவீனப்படுத்த சர்வதேச ஜப்பானிய நிறுவனம் ஒன்று 310 கோடி ரூபாவை முதலீடுகின்றது.

ஏகாதிபத்திய நலன் சார்ந்த உலகமயமாதல் நலன்களை விரிவாக்கவும், அதன் குறிப்பான நலன்கள் சார்ந்த திட்டங்கள் உருவாக்கப்படுகின்றது. இதற்கு உதவி, கடன், முதலீடு என பல பெயர்களில் நிதி வெள்ளமாக நாட்டினுள் பாய்ந்து வருகின்றது. இந்த நிலையில் எமக்கு அருகில் உள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவின் பங்கு தனிச் சிறப்பானதாக உள்ளது.

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய விஸ்தரிப்பு ஊடாக, இந்தியாவின் ஒரு மாநிலமாக இலங்கையை உருவாக்குவதே தனது இலட்சியம் என்பதை அண்மையில் அறிவித்தார் கொழும்பிலிருந்து தென்னிந்தியாவின் பெங்களூர் சென்னை வரையிலும் - மும்பை வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியபாதை ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அறிவித்தார். இலங்கையின் தென்முனையில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்க உள்ளதாக அறிவித்தார்.

இதை அடுத்து இந்தியா இலங்கைக்கான பாலம் அமைப்புக்கு அமெரிக்கா நெக்ஸன்ற் இங் நிறுவனம் தனது திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. 50 முதல் 90 கோடி டொலர் செலவில் (5000 கோடி முதல் 90000 கோடி ரூபா) நான்கு பிரதான பாதையைக் கொண்ட திட்டத்தை அமைக்க முன்வந்துள்ளது. வீதிக்குப் பணம் செலுத்தியே செல்ல வேண்டும் என்ற நிபந்தனையுடன், மிக வேகப் புகையிரதப் பாதை அமைத்தல். 500 மெகாவாட்ஸ் மின்சக்திக் குழாய் அமைத்தல். பைபர் பொருட்களை ஏற்றிப் பயணிக்கும் விசேட உபகரணங்கள் பொருத்தல், இரு பக்கத்திலும் மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், நிலவாயு குழாய் அமைத்தல். சுதந்திர வர்த்தக வலையங்கள் அமைத்தல். திருகோணமலை எண்ணை குதத்துக்கு நேரடி பயண வழி அமைத்தல் மற்றும் பல உதிரித் திட்டங்கள் அமைக்க முன்வைந்துள்ளது. இதை 36 மாதத்தில் பூர்த்தி செய்ய ஒத்துக் கொண்டது.

இப்படி இந்தியாவின் சந்தைக் கட்டமைப்பு இலங்கைக்குள் விரிவாகி வருகின்றது. அண்மையில் இந்தியா இலங்கை உள்ளிட்ட ஆறு நாடுகள் கையெழுத்திட்ட ஒப்பந்தம், வரிகள் அற்ற சுதந்திரமான வர்த்தக இணைப்பைக் கொண்டு ஆறு நாடுகளை இணைக்க உள்ளதை அறிவித்துள்ளனர். இலங்கை மீதான இந்தியாவின் தலையீடு இராணுவ, அரசியல், பொருளாதாரத் துறையில் விரிவாகி வருகின்றது. இந்தியப் பொருட்களின் இறக்குமதியை இலகுபடுத்தும் ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவும் இலங்கையும் 2003 இன் ஆரம்ப மாதங்களில் கையெழுத்திட்டது. இதன் படி பால் உணவு, மரக்கறி எண்ணெய், இனிப்பு வகைகள், மரக்கறி வகைகள் உட்பட 84 பொருட்களுக்கு மட்டும் வரைமுறைக்கு உட்பட்ட கட்டுப்பாடு விதிக்கப்படும். மிகுதி அனைத்தும் திறந்து விடப்பட்டுள்ளது. மிகமலிவான கூலியைக் கொண்ட இந்தியப் பொருட்கள், இலங்கை உற்பத்திகளை அழித் தொழிக்க இந்த ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. சென்னையில் இருந்து கொழும்புக்கு குழாய்வழியாக எண்ணையை அனுப்பும் ஒப்பந்தம் ஒன்றை இந்தியா செய்துள்ளது. மக்கள் விரோத ஒப்பந்தங்களை மூடிமறைக்க, 50 கோடி ரூபாவை இந்திய அரசு, இளைஞர்கள் முன்னேற்றத்துக்கு என்ற பெயரில் கொடுத்துள்ளது.

“இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை விரும்புகிறது” என்று இலங்கை வர்த்தக மற்றும் நுகர்வோர் நலத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். இந்தியாவில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட பல தனியார் நிறுவனங்கள் இலங்கையில் ரூ.600 கோடிக்கு முதலீடு செய்துள்ளதாகக் கூறினார். மத்திய வர்த்தகத்துறை அமைச்சராக முரசொலிமாறன் இருந்தபோது, வர்த்தகத்தில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதால் 6000-க்கும் மேற்பட்ட பொருள்கள் வரியின்றி இறக்குமதியாகின்றன. இப்படி இந்தியாவுடன் கட்டுப்பாடற்ற வர்த்தகம் மேற்கொள்ளவே இலங்கை விரும்புகிறது என்றார். வரியில்லா வர்த்தகம் மூலம் இந்தியாவுக்கும் நல்ல பலன் கிடைக்கும். இலங்கை ஏற்கனவே அமெரிக்கா,



ஐரோப்பா, தாய்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ளது என்று கூறினார். இந்தியா 10 கோடி அமெரிக்கா டொலரை (அண்ணளவாக 1000 கோடி ரூபாவை) இலங்கை பொருளாதார கூட்டு ஸ்தாபனத்துக்கு ஊடாக முதலீடாக வழங்கியுள்ளது.

2003-க்கான ஐ.நா சர்வதேச முதலீட்டு அறிக்கை ஒன்று இந்த துரோகத்தை பட்டியல் இட்டுள்ளது. இந்தியா இலங்கை ஒப்பந்தம் 14.5 கோடி டொலர் (அண்ணளவாக 1450 கோடி ரூபா) முதலீட்டில் 37 உற்பத்திக்கான அடிப்படையை உருவாக்கியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளது. அதே அறிக்கையில் இலங்கையினது 2001-இல் இந்தியாவுக்கான ஏற்றுமதி 7.1 கோடி டொலர் (அண்ணளவாக 710 கோடி ரூபா). இது 2002 இல் 16.8 கோடி டொலராகும் (அண்ணளவாக1680 கோடி ரூபா) என்பதையும் குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் இந்தியாவின் இலங்கைக்கான ஏற்றுமதி 60.4 கோடி டொலராக (அண்ணளவாக 6040 கோடி ரூபா) இருந்தது. இது 2002-இல் 88.1 கோடி டொலராக (அண்ணளவாக 8810 கோடி ரூபாவாகி) உள்ளது.

உதவி, கடன், முதலீடு என்ற போர்வையில் தேசம் விற்கப்படுகின்றது. வட்டி, ஏற்றுமதி என்ற பெயரில் தேசம் கற்பழிக்கப்படுகின்றது. இறக்குமதி என்ற பெயரில் உலக கழிவுகளும், ஆடம்பரப் பொருட்களும் கொட்டும் இடமாக இலங்கை மாற்றப்பட்டுவிட்டது. தேச மக்களின் அடிப்படையான வாழ்வை வரைமுறையின்றி சூறையாடி கற்பழிக்கின்றனர். மக்களை அடக்கி ஒடுக்கும் ஒரு அடக்குமுறைக் கருவியாக தேசியக் கைக்கூலி அரசுகள் செயல்படுகின்றன. இலங்கையை மறுகாலனியாக்கும் நிகழ்ச்சித் திட்டம், இனயுத்தத்தின் மேலான தலையீட்டின் ஊடாக விரைவுபெற்று வருவதை நாம் பார்ப்போம்.

## இலங்கையில் அத்துமீறுகின்றன அமெரிக்கத் தலையீடுகள்

இனப்பிரச்சனையில் அமெரிக்காவின் தலையீடுகள் அத்துமீறி அதிகரித்துச் செல்லுகின்றது. நேரடியான ஆக்கிரமிப்புக்கான புறச்சூழலைத் திட்டமிட்டே அமெரிக்கா உருவாக்கி வருகின்றது. இந்த வகையில் ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல்-ஹைடா என்ற இஸ்லாமிய அடிப்படைவாத மதவாதக் குழுவுக்கு, கடலில் தற்கொலைத் தாக்குதலை எப்படி நடத்துவது எனப் புலிகள் பயிற்சி அளித்ததாக அமெரிக்கவின் “கடல் புலனாய்வுப் பிரிவு” குற்றம்சாட்டியது. “கடல் புலனாய்வுப் பிரிவைச்” சேர்ந்த கிவ்வென் கிம்மில்மன் புலிகளிடம் இருந்து “ஜமா இஸ்லாமியா” பெரும் பலன்களை பெறுவதாக கூறியதன் மூலம், புலிகள் மேல் கத்தியைத் தொங்கவிட்டுள்ளது அமெரிக்கா. ஒட்டு மொத்தத்தில் இலங்கை இனமுரண்பாட்டின் ஒரு இனப் பிரிவைச் சார்ந்து வெற்றிகரமாக தலையிடுவதற்கான அடிப்படையை அமெரிக்கா உருவாக்கிவருன்றது. அதே நேரம் புலிகளினால் பாதிக்கப் பெற்ற தரப்பின் நிபந்தனை அற்ற ஆதரவையும் கூட அமெரிக்கா பெற்று நிற்கின்றது. இலங்கை இனமுரண்பாட்டின் பின்னணி சூத்திரதாரிகளே, இன்று இலங்கையில் தலையிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையும் இந்த ஏகாதிபத்தியங்கள் தான் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

1983 இனக் கலவரவரத்தை சிங்கள இனவாதிகள் திட்டமிட்டு நடத்திய போது, தமிழ் மக்கள் ஒடுக்கப்படுவதை அமெரிக்கா நேரடியாக ஆதரித்தது. இனவாதிகளுக்கு சாமரம் வீசிவிட்டது. இலங்கையை விபச்சாரம் செய்ய திறந்து விட்ட அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், இன ஒடுக்கமுறையின் அவசியத்தை அங்கீகரித்தது. இன ஒடுக்குமுறை தான், இலங்கையை விபச்சாரம் செய்யும் வக்கிரத்தை மூடிமறைக்கும் என்பதைக் கொள்கை ரீதியாக அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. இதை அவர்கள் தமது கொள்கையாகவே பிரகடனப்படுத்தினர். 1983 இனக்கலவரத்தை ஒட்டி உத்தியோக பூர்வமான 1984-ஆம் ஆண்டுக்கான அமெரிக்காவின் அறிக்கையில் "சிங்கள மக்களை ஆத்திரமூட்டும் வகையில், பயங்கரவாதிகள் நடந்துகொண்டதன் விளைவாகவே ஏற்பட்ட சம்பவம் இனக்கலவரமாகும்" என்று பச்சையாகவே விளக்கம் அளித்தனர். இப்படி உலகம் எங்கும் பல நாடுகளில் இது போன்று விளக்கமளித்து, தலையிட்ட வரலாறு நீண்டு கிடக்கின்றது. இப்படித்தான் அன்று இனவாதத்துக்கு ஆதரவு அளித்து யுத்தத்தை வீங்க வைத்தனர். இதன் மூலம் இலகுவான பொருளாதார சரணடைவுகளையும், இலங்கையில் நேரடித் தலையீடுகளையும் நடத்தக் கூடிய ஒரு சர்வதேசச் சூழலை உருவாக்கினர்.

1983-ல் சிங்கள இனவாதிகள் ஏகாதிபத்திய ஆதரவுடன் நடத்திய இனக் கலவரத்தை அடுத்து, அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த கஸ்பர் வெயின் போகர் 1983 அக்டோபர் முதலாம் திகதி இலங்கை வந்ததுடன், இனவாதிகளுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார். 1984-இல் அமெரிக்கப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ஜெசப் அடாப்போ தலைமையில் ஆறு பேர் கொண்ட குழு ஒன்று இலங்கை வந்தது. இராணுவ உதவியாக 3.5 லட்சம் (இன்றை பெறுமானப்படி அண்ணளவாக 3.5 கோடி ரூபா) டொலர் அமெரிக்கா வழங்கியதுடன், இராணுவப் பயிற்சி மற்றும் கடற்படையைப் பலப்படுத்தவும் உறுதி அளித்ததுடன் யுத்தத்தைத் தொடர ஊக்கம் அளித்தனர். 1983-இல் இலங்கையின் இராணுவச் செலவு வெறுமனே 151.2 கோடி ரூபா மட்டுமே. அமெரிக்கா வழங்கிய நிதி மற்றும் இராணுவ ஒத்துழைப்புக்குப் பிரதி உபகாரமாக திருகோணமலை எண்ணைக் குதத்தில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் எண்ணை பெறவும், அமெரிக்கா ஒளிபரப்பு நிலையத்தை இலங்கையில் அமைக்க 1000 ஏக்கர் நிலத்தையும் தானமாக வழங்கியது. இப்படித் தான் திட்டமிட்டு யுத்தம் விரிவாக்கப்பட்டது. ஒரே கல்லில் இரு மாங்காய் அடித்துக் கொண்ட அமெரிக்காவின் தலையீடு இலங்கையில் அதிகரித்தது. தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதமாக சித்தரித்தது. சிங்கள இன ஒடுக்குமுறையை ஜனநாயகத்துக்கான தற்காப்பு போராட்டம் என்றது. உலகளாவிய தலையீட்டுக் கொள்கையை அமெரிக்கா இப்படித் தான் உருவாக்கி வருகின்றது. புலிகளின் அரசியல் வங்குரோத்துடன் கூடிய தனிநபர் அழித்தொழிப்பை, அமெரிக்கா தனது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டது.



இப்படி இனவாத யுத்தத்துக்கு ஆதரவான அமெரிக்கத் தலையீடு, பல்வேறு கட்டங்களைத் தாண்டி இலங்கை அண்மை யுத்த நிறுத்தத்தை அடைந்துள்ள நிலையில், நேரடியாகவே களத்தில் இறங்கியுள்ளது அமெரிக்கா. 11.11.2002 அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் மட்டக்களப்புக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டதுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்து அமெரிக்க நலன்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துகளை முன்வைத்தார். பின்னர் மட்டக்களப்பு கெயர் அலுவலகத்தில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு, கிழக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மா.செ.மூக்கையா போன்றோரையும் சந்தித்தார். அரசியல் பிரமுகர்கள், இராணுவத் தளபதிகள், சமூகப் பிரமுகர்கள், வர்த்தகர்கள் என்று சமூகத்தை ஏமாற்றும் பலவிதமானவர்களை அமெரிக்கத் தூதுவர் அடிக்கடி வடக்கு கிழக்கு முதல் கொழும்பு வரை சந்தித்து வருகின்றார். அமெரிக்க நலன் சார்ந்த கைக்கூலிகளை பலப்படுத்துவதன் மூலம் இலங்கையில் அமெரிக்க நலன்களை உறுதி செய்வதே சந்திப்புகளின் அடிப்படைக் குறிக்கோளாக உள்ளது.

அமெரிக்க நலன்களின் அடிப்படையில் 24.11.02 கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் அறிக்கை ஒன்றை விடுத்தார். இனப் பிரச்சனைத் தீர்வு முயற்சியில் நோர்வே அரசு வெளிப்படையானதும், உயர்ந்த நோக்கத்துடனும் செயற்படுகிறது என்றார். அவர் தனது அறிக்கையில் இலங்கை அமெரிக்கப் படையினர் மத்தியில் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார். அமைதி சமாதானம் என்பது சரக்கு உலகமயமாதல் போக்கில் ஒரு அங்கமே என்பதை அமெரிக்கா மீண்டும் தெளிவுபடுத்தியது. இவை ஒன்று உள்நாட்டுச் சரக்கு அல்ல என்பதையும், இது வெறுமனே நோர்வையினது அல்ல என்பதையும் தெளிவுபடுத்தி, இது எம்முடையது தான் என்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டி நோர்வையை பாராட்டுகின்றார்.

இதனடிப்படையில் 26.11.02 ஒஸ்லோ மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர், புலிகளுக்கு மூன்று நிபந்தனைகளை விதித்தார். வன்முறையைக் கைவிட வேண்டும், தனிநாட்டுக்கான போராட்டத்தைத் கைவிட வேண்டும், இலங்கை முழுவதும் கொழும்பு அரசின் சுயாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியதன் மூலம், மறைமுகமாக மிரட்டினார். அத்துடன், புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வுக்கான உரிமையைப் போற்றிப் பேணவேண்டும் என்று எச்சரித்தார். அவர் மேலும் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து புலிகள் விலக்கப்படுவது குறித்து, ஊகிக்க இது பொருத்தமான நேரமல்ல என்றார். புலிகள் மேலான கடுமையான இராணுவ அரசியல் நெருக்கடியை அமெரிக்கா தொடர்ச்சியாகப் பிரயோகிக்கும் வழியில் அவரின் எச்சரிக்கை அமைந்து இருந்தது. தங்கள் மீதான தடையை நீக்கக் கோரும் புலிகளின் கோரிக்கையை, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒட்டு மொத்தமாக காட்டிக் கொடுத்த பின் பரிசீலிக்கப்படும் என்பதை மிகத் தெளிவாகவே புலிகளுக்கு கூறிவிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று புலிகளில் 14 ஆயிரம் பேர் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின்றன. அதில் 60 சதவீதம் பேர் 18 வயதுக்குக் குறைவாக இருப்பதாகவும் இத் தகவல் தெரிவிக்கின்றது. இறந்த புலிகளில் 40 சதவீதம் பேர் 9 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்களாகும். வயது ரீதியாக, அறிவியல் ரீதியாக பின்தங்கிய ஒரு விடுதலை இராணுவம், கூலிமனப்பான்மை கொண்டது. எதையும் சொந்தமாக சிந்திக்கத் தகுதியற்றது. இராணுவ வாதம் மக்களுடனான நேர்மையான உறவை எப்போதும் மறுத்து வந்தது. ஒப்பந்தத்தை நேர்மையாகக் கடைப்பிடிப்பதை சாத்தியமற்றதாக்கியது. கட்டாய ஆள்சேர்ப்பு, சிறுவர்களைப் படையில் இணைத்தல் போன்ற ஜனநாயக விரோதச் செயலையே புலிகள் கையாண்டனர். மக்களின் எதிர்ப்புடன் கூடிய அதிருப்தி மற்றும் இதற்கு எதிரான முறைபாடுகள் அதிகரித்தது. இதை அமெரிக்கா புலிகளுக்கு எதிராக மீண்டும் பயன்படுத்தியது. மாசி 2003 முதல் வாரத்தில் யாழ் சென்ற அமெரிக்கத் தூதுவர், சிறுவர்களைப் புலிகள் படையில் சேர்ப்பதற்கு எதிராகக் கடும் எச்சரிக்கையுடன் கூடிய மிரட்டலை விடுத்தார். இந்த எச்சரிக்கையை யாழ் மண்ணில் வைத்து அறிவித்தது, அவர்களின் சொந்தமான அமெரிக்க மண்ணில் வைத்து சாவல் விடும் அதிகாரத் திமிருக்கு சமமாகும். புலிகளின் ஒவ்வொரு நடவடிக்கையையும் அமெரிக்கா கண்காணித்துக் கொள்வதுடன், மக்கள் விரோத ஒவ்வொரு நடவடிக்கையையும் அமெரிக்கா புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்திக் கொள்கின்றது.

புலிகள் முரண்டு பிடித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமெரிக்காவின் எச்சரிக்கை பலமாக வந்து கொண்டிருந்தது. மாசி 2003 இரண்டாம் வாரம் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆர்மிரெஜ், புலிகள் பயங்கரவாதப் போக்கைக் கைவிட்டு அமைதிக்கு திரும்ப வேண்டும் என்ற எச்சரிக்கையை விடுத்தார். அமெரிக்கா தனது பொருளாதார நலனுக்கு எதிரான அனைத்தையும் பயங்கரவாதமாகக் காட்டும் பயங்கரவாத அடிப்படையில் நின்றே, புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக வருணிக்கின்றது. இந்த பயங்கரவாத வரையறை மக்களின் நலனில் இருந்து அமெரிக்கா உச்சரிப்பதில்லை. இதனால் தான் புலிகளும் தங்கள் மேலான தடையை நீக்கக் கோரி, நாங்களும் நீங்களும் ஒன்று என்கின்றனர். ஆனால் அமெரிக்காவோ அதை நாங்கள் சொல்லலாமே ஒழிய, நீங்கள் அதைச் சொல்ல முடியாது என்ற நிலைப்பாட்டில் நின்று புலிகளை அடிபணிந்து வரக் கோருகின்றனர்.

புலிகளை அடிபணிந்து வரக்கோரும் அமெரிக்க நிலைப்பாடு இலங்கை மீதான அமெரிக்காவின் கொள்கையாகவே உள்ளது. தொடர் மிரட்டல், எச்சரிக்கையின் அடிப்படையில் 20.11.2003-ல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஒரு செய்தியாளர் மாநாட்டை அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் நடாத்தினார். இலங்கையின் இனப் பிரச்சனைக்கான எந்த இறுதித் தீர்வும் நாட்டின் சகல பகுதிகளிலும் ஜனநாயக ஆட்சி நிலவுவதையும், பன்முகத்தன்மை காணப்படுவதையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்றார். அவர் மேலும் இலங்கையர்களாகிய நீங்களும், உங்கள் தலைவர்களும் தான் நிரந்தர சமாதானம் என்றால் என்ன? இறுதித் தீர்வுகள் எவை? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா கலந்துகொள்வதன் மூலம் புலிகள் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாடு மாறிவிட்டது எனக் கொள்ளக் கூடாது என்றார். சந்தேகங்கள் அற்ற வகையில் புலிகளுக்குத் தமது கொள்கையைப் பிரகடனம் செய்த அமெரிக்கா, சிங்கள இனவாதிகளுக்கு கைகொடுத்து தூக்கிவிட்டது. புலிகளுக்குத் தொடர் எச்சரிக்கை, மிரட்டல், அடிபணியக் கோரும் நிர்பந்தங்களை இரகசியமாக செய்வது ஒருபுறம் இருக்க, பகிரங்கமாக சிங்கள இனவாதிகளுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது.

இது ஒருபுறம் நிகழ மறுதளத்தில் அமெரிக்கா நேரடியாகவே பகிரங்கமாகக் களத்தில் இறங்கிச் செயல்படுகின்றது. 1.11.2003-ல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கை ஒன்றில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து வட-கிழக்கில் சர்வதேசக் கண்ணிவெடிகள் அகற்றும் குழுவின் அமெரிக்க நிபுணர்கள் இதுவரையிலும் 980 நிலக்கண்ணி வெடிகளையும், வெடிக்காத நிலையில் இருந்த 42 வெடி பொருட்களையும் சுமார் 123,000 சதுர மீற்றர் பகுதியிலிருந்து அகற்றியுள்ளதாகக் கூறியதன் மூலம், தமது நாட்டின் நேரடித் தலையீட்டை உலகறியப் பிரகடனம் செய்தது. இப் பணியில் 26 அமெரிக்க நிபுணர்கள் ஈடுபட்டிருந்ததாகக் கூறியதன் மூலம் இலங்கையிலிருந்து அமெரிக்கா வெளியேற்றம் என்பது சாத்தியமற்ற ஒன்றாக்கியுள்ளது. புலிகளின் தாக்குதல் நடப்பின், 26 பேரின் பாதுகாப்புக் கருதி அமெரிக்கப் படை நேரடியாக இலங்கைக்குள் இறங்கும்.

அமெரிக்கா இலங்கைப் பிரதேசத்தில் தனது தலையீட்டுக்கான பல முக்கிய சந்திப்புகளை நடத்துகின்றன. பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகின்றது. இதன் பின்னணியில் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவுடன் தொடர்புபடுத்தி நிலவும் கருத்துக்கு அமெரிக்கத் தூதர் ஜெப்ரி லண்ட்ரெட் பதிலளிக்கத் தவறவில்லை. "திருகோணமலையில் அமெரிக்காவுக்கு கடற்படைத் தளம் தேவையில்லை. எமது யு.எஸ்.எய்ட் அலுவலகம் திருகோணமலையில் திறக்கப்படுவது யுத்தத்தினால் சோர்வுற்ற மக்களுக்கு சமாதான முயற்சியில் நன்மைகள் தெளிவாகத் தெரியக் கூடியதான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கேயாகும். இதுதான் எமது இலட்சியம்." என்றார். கடற்படை தளமும் சரி, யு.எஸ்.எய்ட் அலுவலகம் திறந்தாலும் சரி இரண்டும் ஒன்று தான். அமெரிக்காவின் ஒவ்வொரு பிரஜையையும் காப்பாற்றும் உரிமையின் பெயரில்தான், அமெரிக்கா சர்வதேச ரீதியாகவே மற்றைய நாடுகள் மேலான ஆக்கிரமிப்பிற்கு விளக்கம் கொடுக்கின்றது. அமெரிக்காவின் சிவில் சமூகம் மீதான பாதுகாப்பைக் கூறியே, தலையீட்டை அமெரிக்காவால் நடத்த முடியும். அப்படித் தான் சர்வதேச அளவில் அமெரிக்கா அடாவடித்தனமாகச் செயல்படுகின்றது. ஒருபுறம் தனது (அமெரிக்க) அரசியல் நலன் சார்ந்த ஊழியர்களை வடக்கு கிழக்கில் அமெரிக்கா அன்றாடம் விதைக்கின்றது, மறுதளத்தில் பல பத்து ஒப்பந்தங்கள் தனது தலையீட்டுக்கு இசைவான சரத்துகளை கொண்டுள்ளதால் அதை வரவேற்கின்றது.

இந்த யு.எஸ்.எய்ட் திருகோணமலை அலுவலகம் 2 லட்சம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்களின் துணையுடன் 9 அரசு சாராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் மற்றும் சமூகங்களை மையமாகக் கொண்டு இயங்குகின்றது. அதேநேரம் யு..எஸ்.எயட் அலுவலகம் அம்பாறையில் வேறு திறக்கப்பட்டுள்ளது. 2003 மார்ச் முதல் 88 திட்டத்துக்கு 2.2 லட்சம் டொலர் (அண்ணளவாக 2.2 கோடி ரூபாவை) உதவிகளை வழங்கியதாக தூதுவர் அறிவித்தார். இதைவிட திருகோணமலையில் 14 திட்டத்துக்கு 2.3 லட்சம் டொலரையும் (2.3 கோடி ரூபாவையும்), அம்பாறையில் 23 திட்டத்துக்கு 3.7 லட்சம் டொலரையும் (அண்ணளவாக 3.7 கோடி ரூபாவையும்) அமெரிக்கா நேரடியாக வழங்கியுள்ளது. நேரடியான நிதிகளை வழங்குவது, தன்னார்வக் குழுக்களை உருவாக்குவது, நேரடி அலுவலகங்களைத் திறப்பது என்று அமெரிக்கா வடக்கு கிழக்கில் அதிகளவில் ஊடுருவி வருகின்றது. யாழ்ப்பணத்துக்கு 2004 மாசி மாதம் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் தென்னாசியப் பிரிவின் பிரதி அதிகாரி மார்க் எஸ்.வாட் தலைமையிலான உயர்மட்டக்குழு யாழ் சென்றது. 5 கோடி ரூபா திட்டமொன்றையும் தொடங்கினர். செயற்கைக் கால் உற்பத்தி செய்யும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மீள் புனரமைப்புக்காக யு.எஸ்.எயிட் 50 லட்சம் ரூபாவை ஏற்கனவே வழங்கியிருந்த நிலையில் அதைப் பார்வையிட்டனர். யாழ் கல்வி வலயத்துக்கு யு.எஸ்.எயிட் வழங்கிய 80 ஆயிரம் ரூபா நிதி உதவியுடனான, ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கலையும் பார்வையிட்டனர். மருதபுரம் கிராமத்துக்கு சென்றதுடன், ஒரு படகையும் ஐந்து கட்டுமரங்களையும் மீனவர்களுக்கு வழங்கினர். மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்ளையும் கூட வழங்கினர். புலிகள் தனிநாடு கோரும் பிரதேசங்களில் தமது அலுவலகங்களைச் சவால் விட்டே திறக்கிறது. யாழ் குடாவில் மற்றொரு தூதரகலாயத்தை அமைக்க முயன்ற அமெரிக்கா, அதைத் தற்காலிகமாகப் பின் போட்டுள்ளது. வவுனியாவில் அமெரிக்கா அலுவலகம் ஒன்றை திறக்க வாடகைக்கு எடுத்த கட்டிடத்தை, புலிகள் கொடுத்த நிர்பந்தம் காரணமாக கட்டிடச் சொந்தக்காரர் அதை மீள பெற்றுள்ளர். அமெரிக்காவுக்கும் புலிகளுக்கும் இடையில் இரகசியமான போர் ஒன்று வடக்கு கிழக்கில் நளாந்தம் நடந்து வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் உயர் மட்ட அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று புலிகளுக்கு சவால் விடும் வண்ணம், தரைப்பாதை வழியாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஊடாக இந்தப் பயணம் நடத்தப்பட்ட நிகழ்வு தற்செயலானவையல்ல. ஒரு மிரட்டல் உடன் கூடிய அச்சுறுதலாகவே நடத்தப்பட்டது. மிக நீண்ட பல கெடுபிடியான பயணங்களைக் கொண்ட பாதை வழியாக அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் முன் கூட்டியே சீண்டும் ஒரு ரோந்தை நடத்திப் பார்த்தனர்.

அமெரிக்கத் தலையீட்டின் ஒரு அங்கமாக அமெரிக்கப் பாராளுமன்ற சர்வதேச தொடர்புகள் கமிட்டியின் உயர்குழு ஒன்று இலங்கை வந்தது. அக்குழு யாழ்ப்பாணத்துக்கு வேறு சென்றது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் அமைதி முயற்சிகள் மற்றும் அமெரிக்க - இலங்கை உறவுகள் ஆகியவைக் குறித்து இக்குழு அதிகக் கவனம் செலுத்தி ஆராய்ந்தது. அரசு உயரதிகாரிகள், அரசியல் தலைவர்கள், சமூகப்



பிரமுகர்கள், அரசுச் சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரையும் விரிவாகச் சந்தித்து இரகசிய ஆலோசனைகளை நடத்தினர். இலங்கையின் பொருளாதார, அரசியல், இராணுவத் துறைகள் பலவற்றில் தலையீட்டை அமெரிக்க நலன் சார்ந்து நடத்தினர்.

இராணுவ ரீதியாக அமெரிக்காவும் மற்றும் இந்தியாவும் இலங்கை இராணுவத்தை வழிநடத்தத் தொடங்கியுள்ளது. அடிக்கடி இராணுவச் சந்திப்புகள், பேச்சு வார்த்தைகள், கூட்டுப் பயிற்சிகளை நடத்துகின்றன. இந்த வகையில் அமெரிக்க தேசிய இராணுவக் கல்லூரியைச் சேர்ந்த 20 இராணுவ அதிகாரிகள் கொழும்பு வந்ததுடன், இலங்கை இராணுவ அதிகாரிகளை சந்தித்தனர். பயிற்சிகள் பலவற்றை பார்வையிட்டதுடன் இரகசியச் ஆலோசனைகளிலும் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவின் ஏவுகணை நாசகாரி கப்பல்களில் ஒன்றான ஓகானே (டி.டி.ஜி.77) கொழும்பு துறைமுகத்துக்கு வந்தது. இந்தக் கடற்படைக் கப்பல் சுமார் 350 வீரர்களைக் கொண்டது. கடலில் விரைவான, தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராவதே, இப்போர்க் கப்பலின் வருகையின் அடிப்படை நோக்கமாக இருந்தது. புலிகளை இராணுவ ரீதியாக எச்சரிக்கும் அடிப்படையில் இந்த வருகை மறைமுகமான எச்சரிக்கையை விடுத்தது.

புலிகளை எச்சரிக்கவும், இலங்கை அரசை பலப்படுத்தும் அடிப்படையிலும் அமெரிக்கா நவீன தாக்குதல் கப்பல்களை இலங்கைக்கு வழங்கியது. அமைதி, சமாதான கோசத்தின் கீழ் இராணுவ முஸ்தீப்புகளை அமெரிக்கா ஊக்குவித்தது. இதன் அடிப்படையில் அமெரிக்காவின் கரையோரக் காவல்படை மற்றும் பாதுகாப்புப் பந்தோபஸ்து ஒத்துழைப்புச் செயலணி ஆகியவற்றை உள்ளடக்கிய குழு இலங்கைக்கு வந்தது. அமெரிக்கா தனது மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் திட்டத்தின் கீழ் 210 அடி நீளம் கொண்ட, இடைத்தரத் தாக்குதல் ஆற்றல் கொண்ட கரையோரக் காவலுக்கான மனத்துணிவு (Courageous) என்ற இராணுவக் கப்பலை இலங்கைக்கு வழங்குவது தொடர்பாக பேசினர். இதனடிப்படையில் இதற்கான ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக இலங்கையில் கப்பல் தளங்கள், கப்பல் சீர்செய்வதற்கான மேடை வசதிகள், துறைமுகங்கள் போன்றவற்றை இந்தக் குழு பார்வையிட்டது. 2004ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் இலங்கைக்கு வந்து சேரும் வகையில் இக்குழு ஆலோசனைகளை நடத்தியது. இதைவிட ஹெலிகொப்டர் தாங்கிச் செல்லும் நவீனரக கரையோர ரோந்து யுத்தக்கப்பல் ஒன்றை இலங்கைக்கு அமெரிக்கா மானிய விலையில் வழங்கியுள்ளது. இந்தக் கப்பலின் விலை 15 கோடி அமெரிக்க டொலர்களீ (அண்ணளவாக 1500 கோடி ரூபாவாகும்) ஆகும். அமைதி சமாதனம் என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, மறுபக்கத்தில் இராணுவ ரீதியாக இனவாத இலங்கை அரசை பலப்படுத்தும் முயற்சியில் அமெரிக்காவும் இந்தியாவும் பாரிய இராணுவ உதவிகளைச் தொடர்ச்சியாக வழங்குகின்றது. அதேநேரம் புலிகளை மிரட்டி பணியவைக்கும் எச்சரிக்கைகளைத் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் வகையில் கையாளுகின்றது. புலிகளின் மக்கள் விரோத ஒவ்வொரு நடவடிக்கையையும், உலக மயமாதலுக்கு சார்பாக அமெரிக்கா இலகுவாகவே எடுத்துக் கையாளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காத் தலையீட்டை இலகுவாக நடத்தக் கூடிய வகையில் கடல் ஒப்பந்தங்களை இலங்கை செய்துள்ளது. அமெரிக்கத் துறைமுகங்கள் ஊடாகக் கொண்டு செல்லப்படக்கூடிய சரக்குப் பெட்டகங்களின் (கொண்டெயினர்கள்) பாதுகாப்பைப் பலப்படுத்துதல் என்ற பெயரில், கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பை உயர்த்தும் ஓர் ஒப்பந்தத்தில் அமெரிக்காவும், இலங்கையும் கையெழுத்திட்டன. இதன் மூலம் கப்பல் போக்குவரத்துக்கு இடைஞ்சலான புலிகளின் கடற்படை அமெரிக்காவின் தாக்குதலுக்குரிய இலக்காகியுள்ளது. புலிகள் தாக்காமல் இருக்கும் ஒரு நிலையில் கூட, சரக்கு கப்பலை மூழ்கடித்து அமெரிக்கா புலிகள் மேல் தாக்குதலை நடத்தும் சுதந்திரத்தை இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுக்கு இலவசமாகவே வழங்கியுள்ளது. இதைவிட இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள விமானப் போக்குவரத்து உடன்படிக்கையும் அமுலுக்கு வந்துள்ளது. 2003 ஜுன் மாதம் 11ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டு நாடுகளினதும் விமானக் கம்பெனிகள் கட்டுப்பாடற்ற விமானப் போக்குவரத்துக் களை மேற்கொள்ள இந்த ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. அதாவது அமெரிக்கா வானது இலங்கை வான்பரப்பை தனக்கு சொந்தமாக்கும் ஒப்பந்தமே இது. இலங்கை வான் பரப்பை அமெரிக்கா கட்டுப்படுத்தவும், கண்காணிக்கும் உரிமையையும் இவ்வொப்பந்தம் வழங்கியுள்ளது. புலிகளின் விமானத் தாக்குதல் என்பது, அமெரிக்கா மீதான தாக்குதலாக கருதப்பட்டு புலிகள் மேலான அமெரிக்காத் தாக்குதலை நியாயப்படுத்த இந்த ஒப்பந்தம் வழியமைத்துள்ளது.

இந்த வகையில் புலிகள் மேலான அதியுயர் நிர்ப்பந்தத்தை அமெரிக்கா பிரயோகிக்கின்றது. அமெரிக்காவின் நேரடி தலையீடு அதிகரித்துள்ள நிலையில், புலிகள் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அதில் அவர்கள் "இந்தப் பிராந்தியத்தைச் சாராத சக்திகளை (Extra Territorial - Forces) தேவை யற்ற விதத்தில் முறையற்ற செல்வாக்குடன் இனப் பிரச்சினைக்குள் தலையிட இடமளித்து, சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி வருகிறது இலங்கை அரசு"- என்று தனது கையாலாகாத்தனமான விமர்சனத்தை புலிகளின் தலைமைப்பீடம் அறிக்கை மூலம் வெளிப்படுத்தினர். உண்மையில் இந்த நிலையை உருவாக்கியவர்கள் வெறும் அரசு மட்டுமல்ல. துரிதமான அமெரிக்காத் தலையீட்டை ஏற்படுத்தும் உந்து விசையைக் கொடுப்பவர்கள் புலிகள் என்ற உண்மையையும் நாம் நிராகரிக்க முடியாது. புலிகளின் அரசியல், தனிநபர் அழித்தொழிப்பை அடிப்படையாகக் கொண்டது. இதில் இருந்தே அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்தக் கூடிய தொடர் நடத்தைகள் தூண்டுகோலாக உள்ளது. இதை பின்னால் விரிவாக ஆராய்வோம்.

புலிகளின் விமர்சனம் அரசியலற்ற இராணுவ வாதக் கண்ணோட்டம் சார்ந்து பிரதிபலித்தது. அரசியல் ரீதியாக அமெரிக்காவின் அரசியல் நிலைப்பாட்டை ஆதரிக்கும் புலிகள், அமெரிக்கா தம்மை ஆதரிக்கும் கடைக்கண் பார்வைக்காக ஏங்கி நிற்பவர்களே. ஆனால் அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசை ஆதரிப்பதையும், தமக்கு எதிரான மிரட்டல்களையும் சகித்துக் கொள்ள முடியாத ஒரு நிலையில் தான் புலிகள் இக்கருத்தை முன்வைத்தனர். அதையும் குறிப்பிட்டுச் சொல்ல வக்கற்றுப் போன நிலையில் புலம்பத்தான் முடிகின்றது.



புலிகளுக்குப் பதிலளிக்கும் வகையிலும், மிரட்டும் வகையிலும் அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தனது எச்சரிக்கையில் "இலங்கையர்கள் தங்கள் பிரச்சினையைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. அவர்கள் அப்படிச் செய்வார்களேயானால், அது உலகுக்கே முக்கியத்துவமான சாதனையாக இருக்கும்." என்றார். இதன் மூலம் இதை நீங்கள் தீர்க்கத் தவறும் பட்சத்தில் என்ன நடக்கும் என்பதை சொல்லாமல் சொல்லிவிடுகின்றார். இலங்கையர்கள் தமக்குள் இப்பிரச்சனையை தீர்க்கத் தவறும் பட்சத்தில், அதை நாங்கள் தீர்த்து வைப்போம். அதாவது புலிகளை அழித்து, தீர்க்கும் வழிமுறையை நாங்கள் கையாள்வதா? அல்லது புலிகள் தமிழ் மக்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்து துரோகம் இழைத்து பிரச்சினையைத் தீர்க்கின்றீர்களா என்பதை புலிகளே தெரிவு செய்யக் கூறுகின்றார். இதில் மட்டும் தெரிவு செய்யும் சுதந்திரத்தை புலிக்கு விட்டுவிடுகின்றார்.

மேலும் அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தனது எச்சரிக்கையில் "புலிகள் தமது அரசியல் ஆயுதமாக வன்செயலைப் பயன்படுத்துவதைக் கைவிடச் செய்யும் அழுத்தமாக, புலிகளை அமெரிக்கா தொடர்ந்து வேட்டையாடும். நாங்கள் புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாக அறிவித்துள்ளோம். நாம் அவர்களை வேட்டையாடுவோம். அவர்களுக்கு நிதி கிடைப்பதைத் தடுக்க முயற்சிப்போம். இனிமேலும் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாகச் செயற்படமுடியாத சூழலில் அவர்கள் பணிபுரிவதனையே நாம் விரும்புகின்றோம். இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கான வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தத் தவறுவோர் சரித்திரத்தின் மிக மோசமானவர்களாகக் கணிக்கப்படுவார்கள்" என்று கூறியதன் மூலம், தமது இலக்கைத் தெளிவுபடுத்திவிடுகின்றார். புலிகளை வேட்டையாடும் சகல வழிகளையும் அமெரிக்கா கையாளும் என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்தினார். புலிகள் அமெரிக்காவின் கடைக் கண் பார்வை கிடைக்கும் என்ற தவிப்பில் விண்ணப்பங்கள் செய்து கொண்டிருக்கும் ஒரு நிலையில், அச்சுறுத்தலை தெளிவாக அமெரிக்கா விடுத்து வருகின்றது. கடைக் கண் பார்வை என்பது ஒட்டு மொத்தத் துரோகத்துடன் தொடர்புடையது என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகின்றார். இந்தத் துரோகத்தை சரிவரப் பயன்படுத்தத் தவறுவோர், சரித்திரத்தில் மிக மோசமானவர்களாக கருதப்பட்டு அழிக்கப்படுவர் என்பது அமெரிக்காவின் தெளிவான செய்தி.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் மேலும் தனது எச்சரிக்கையில் "சிங்களவர்கள், தமிழர்கள் என்பதற்கு அப்பால் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், இந்துக்கள் என்றும் உள்ளனர். அதனால் தான் இலங்கையர்கள் தமக்குள் உள்ள வேறுபாடுகளைத் தாங்களே தீர்த்துக் கொண்டால் அது உலகின் மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்று நான் கூறுகின்றேன்" என்றார். 1983 கலவரத்தை பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான மக்களின் கோபமே இனவாதக் கலவரம் என்றது அமெரிக்கா. இன்று இப்படிக் கூறுவது அமெரிக்காவின் இன்றைய நலன். இனமுரண்பாட்டைக் கைவிட்டு மதவாதத்தைக் கையிலெடுக்கக் கோருகின்றது. இது மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் பதற்றத்தை தக்கவைப்பதுடன், உலகமயமாதல் நிகழ்ச்சியை நேரடியாக அச்சுறுத்தாது, உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு சாதகமான சூழலையே இது உருவாக்கி தரும். இதை அவர் மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றார். இதனடிப்படையில் இலங்கையில் மதவாதச் சக்திகளின் தீவிர நடவடிக்கைகள் தொடங்கி உள்ளது. சிங்களப் பகுதிகளில் பல பத்து கிறிஸ்துவத் தேவாலயங்கள் தாக்கப்பட்டன. வடக்கு கிழக்கிலும் மதப் பதற்றங்கள் ஆங்காங்கே உருவாகி வருகின்றன. மதமாற்றச் சட்டம் பற்றிய இந்து பௌத்த கூக்குரல்கள் அடிக்கடி மதப் பதற்றத்துக்கு வித்திடுகின்றது.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் மேலும் தனது கருத்தில் “இலங்கை விவகாரம் வெற்றியாக முடியும் என்று கூறிக்கொண்டுதான் உதவும் நாடுகள் இந்தப் பங்களிப்பை தர முன்வந்துள்ளன. அத்தோடு சமாதானத்துக்கான வாய்ப்பை இம்முறை சாதகமாகப் பயன்படுத்தத் தவறுவோரைச் சரித்திரம் மிக மோசமாக மதிப்பிடும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்” என்று கூறியதன் மூலம், புலிகளுக்கு எதிராக நேரடியான மிரட்டலை விடுத்தார். ஒரு இராணுவத் தலையீட்டுக்கான அனைத்து உள்ளடக்கத்தையும் இது வெளிப்படுத்தி நிற்கின்றது. இலங்கை, ஆக்கிரமிப்பின் எல்லைக்குள், மறுகாலனியாக்கத்தின் விளிம்பில் நிற்கின்றது. பயங்கரவாதத்தை ஒழிக்க, யுத்தத்தை நிறுத்த, மக்களின் ஜனநாயக வாழ்வை உருவாக்க என்ற கோசத்தின் கீழ், இந்த ஆக்கிரமிப்பு நிகழும் வாய்ப்பு அமெரிக்கா உள்ளிட்ட இந்தியாவின் நிகழ்ச்சி நிரலாக உள்ளது.

உலகில் அமெரிக்கக் கனவுடன் உள்ள பண்பாடுகள், கலாச்சாரங்கள், பொருளாதார மேட்டுக்குடி பரம்பரை உள்ளவரை, மக்களை அடக்கியொடுக்க கைக்கூலிக் கும்பல்கள் வரிசையில் நிற்கின்றனர். இதன் ஒரு அங்கமாக அமெரிக்கா வருடாந்தம் வழங்கும் லொத்தர் விஸாவுக்கு, உலகளவில் சுமார் 73 லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்களில் ஒரு லட்சத்து 11ஆயிரம் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டனர். ஆகக்கூடுதலானவர்கள் 5126 பேர் வங்காளத்திலிருந்தும், 4259 பேர் நேபாளத்திலிருந்தும், 1833 பேர் தாய்வானில் இருந்தும், 1431 பேர் ஈரானிலிருந்தும், தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இலங்கைக்கு ஐந்தாவது இடத்தில் 1418 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அமெரிக்கர் மீதான விசுவாசத்தை பிரதிபலிக்கும் இந்தப் போக்கில், இவ்விண்ணப்பம் லட்சக்கணக்கில் இருந்துள்ளது. அமெரிக்காவுக்குத் தேவைப்படும் கைக்கூலி இராணுவத்தை உருவாக்க போதுமான அளவில் இலங்கையில் பண்பாட்டு, கலாச்சார மட்டங்கள் உயர்ந்த தளத்தில் அமெரிக்க உணர்வுக்கு சாதகமாகவே இன்று உள்ளது.

## இந்தியா மற்றும் மற்றைய ஏகாதிபத்தியங்களின் தலையீடுகள்

அமெரிக்கா மட்டுமல்ல மற்றைய ஏகாதிபத்தியங்களும், இந்தியாவும் கூட பல எச்சரிக்கைகளை விடுகின்றது. 15.11.02 இலங்கை வந்திருந்த பிரித்தானியப் பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபை உறுப்பினர் நெஸ்பீ புலிகள்



பயங்கரவாதப் போக்கைக் கைவிடவேண்டும் என்றார். புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றார். அவர் மேலும் கூறுகையில், புலிகள் தனியான இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் பிரிவு போன்றவற்றை வைத்திருக்க முடியாது என்றார். இவை இலங்கை அரசுடன் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது என்றார். தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதை வலியுறுத்தி அவர், உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் இலங்கை அரசுடன் கைகோர்த்துக் கொள்ளவும் அழைப்புவிடுத்தார். ரூசியா இலங்கையுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது. அமெரிக்காவுடன் சர்வதேச நிலைப்பாடுகளில் ஒன்று சேர்ந்து நிற்கும் பிரிட்டன் 30.12.2002 இல் தனது இராணுவக் கப்பலான கெபபாக்-ஐ இலங்கை துறைமுகத்துக்கு அனுப்பி மறைமுகமாகப் புலிகளை மிரட்டியது.

சர்வதேசத் தலையீட்டின் ஒரு அங்கமாக “நொன் வயலன்ஸ் பீஸ் போய்” என்ற அமைப்பு வன்முறைகளற்ற நிலையை உருவாக்க அமைதிப்படை ஒன்றை குடாநாட்டில் அமைத்தது. பல சர்வதேச நாடுகளைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய இவ் அமைப்பின் திட்டப்பணிப்பாளர் வில்லியம் நொக்ஸ் (பிரிட்டனைச் சேர்ந்தவர்) இது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்ய யாழ்ப்பாணம் வந்தார். இவர் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி துணையுடன் இந்தத் தலையீட்டைத் தொடங்கினார். சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 11 உறுப்பினர்களுடன் கொழும்பில் இயங்கிய இந்த அமைப்பு, தனது அலுவலகங்களை யாழ்ப்பாணம், வாழைச்சேனை, களுத்துறை, மூதூர் ஆகிய இடங்களில் அமைக்கவிருந்தது. பிரஞ்சு ஏகாதிபத்தியம் யாழ்ப்பாணத்தில் ‘அலயன்ஸ் பிரான்ஸ்செய்ஸ்’ என்ற மொழியல் அலுவலகத்தைத் திறந்துள்ளது. இதன் மூலம் தனக்குத் தேவையான இலங்கைக் கைக்கூலிகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது.

இலங்கைக்கான ஜெர்மனியின் பிரதித் தூதுவர் ஹெய்ன்ஸ் பொப் யாழ் அரசாங்க அதிபர் செ. பத்மநாதனை சந்தித்த போது, ஜெர்மனி உட்பட மேற்கு நாடுகளில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படும் அகதிகளுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு, அப்பணம் இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே மேற்குலக நாடுகளின் கொள்கை என்றார். இதனடிப்படையில் யாழ்குடாவில் ஒரு தன்னார்வ நிறுவனத்தை ஐரோப்பா அமைத்துள்ளது. திருப்பி அனுப்பப்படும் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம் ரூபா, சுய தொழிலின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. புலம்பெயர் அகதிப் பிரச்சனையின் அடிப்படையில் இலங்கையில் தலையிடும் உரிமையை, ஐரோப்பா இதனூடாக வலியுறுத்தி வருகின்றது. புலம்பெயர்ந்த மேற்கு நாட்டு அகதிகளை திருப்பி அனுப்புவது, சமாதானத்தின் ஒரு அங்கமாக இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர். அமெரிக்கா பிரிட்டன் அல்லாத மற்றைய ஏகாதிபத்தியங்களின் கூட்டு அணி, தமது நாடுகளுக்கு வரும் இலங்கை அகதிகளை கட்டுப்படுத்துவதில் சமாதானமும் அமைதியும் முக்கியமானது எனக் கருதுகின்றன. இது அவர்களின் உள்நாட்டு அரசியல் வெற்றிகளைத் தீர்மானிக்கின்றது. யுத்தத்தைப் புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தால், அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்த தர்க்க ரீதியாகக் கூட முடியாது என்பதால் புலிகள் மேலான அதிக நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றனர். இதைவிட இலங்கையில் அதிகரித்து வரும் ஐரோப்பிய முதலீடுகளை, யுத்தம் நேரடியாகப் பாதிக்கும் என்பதாலும் புலிகளை எதிர்க்கின்றனர். புலிகளின் இராணுவ ரீதியான நடவடிக்கைகள் அமெரிக்காவின் அதிகத் தலையீட்டையும், ஆக்கிரமிப்பையும் ஏற்படுத்தும் என்பதால் இது ஐரோப்பிய இராணுவப் பொருளாதார நலனுக்கு பாதகமானது. இதனால் புலிகளின் இராணுவ முயற்சிகளை கடுமையாக எதிர்க்கும் நிர்ப்பந்தங்களை, அமெரிக்காவுக்கு நிகராக பிற ஏகாதிபத்தியங்கள் புலிகள் மேல் செலுத்துகின்றனர்.

இதற்கு வெளியில் பிராந்திய வல்லரசான இந்தியா ஒரு நிர்ப்பந்தத்தை புலிகள் மேல் கையாளுகின்றனர். இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் எம்.என்.ராஜ்கோத்ரா "இலங்கைக் கடற்பகுதியில் சட்டவிரோதமான கடற்படையின் தொல்லைகளை ஒழித்துக்கட்டவேண்டும். இரு நாடுகளும் இணைந்து கூட்டாகக் கடற்படை பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர். இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு இந்தியாவை ஆத்திரமூட்ட வேண்டாம் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நான் எச்சரிக்கின்றேன்'' என்றார். இந்திய மீனவர்களின் பாதுகாப்பு என்ற பெயரில் ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்யத் தயாராகவே இந்தியா உள்ளது.

இந்தியப் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரின் உரை மீண்டும் இதை உறுதிசெய்தது. "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கடற்புலிகள் என்கின்ற பெயரில் கடற்படை அமைத்துவருவது இந்திய அரசுக்குத் தெரியும். ஒரே நாடான இலங்கைக்கு இரண்டு கடற்படைகள் கூடாது.'' இப்படிக் கூறியுள்ளார் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ். மன்னார் கடற்பகுதியைக் கண்காணிக்க விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார். இந்தியா தலையீட்டுக்கான நேரடி முகாந்திரமாக இது மாறியுள்ளது. இந்திய மீனவர்களின் பாதுகாப்பு என்ற பெயரில் இலங்கைக் கடல்பகுதியில் இந்தியக் கப்பற்படையும் விமானப்படையும் அத்துமீறி அடிக்கடி ரோந்து சுற்றுகின்றது. மீனவர் பிரச்சினையைப் புலிகள் தவறாக கையாண்டதன் விளைவு இது. புலிகள் இராணுவ ரீதியான ஒரு நடவடிக்கையாக இந்திய மீனவர்களின் பிரச்சனையை கையாண்டு, இந்திய மீனவர்களை பணயம் வைத்து இந்திய அரசை சரணடைய வைக்க முயன்றனர். இது இலங்கை இந்திய மீனவர்கள் பேசி முடிவெடுக்க வேண்டிய ஒரு பிரச்சனை. அதை விடுத்து பிரச்சனையின் முழுமையைப் புரிந்து கொள்ள முடியாது துப்பாக்கிகள் மூலம், புலிகள் தீர்வு காண முற்பட்டனர். புலிகளின் இந்தத் தொடக்கத்தை இலங்கை அரசு சாதகமாக பயன்படுத்தத் தொடங்கியது. அத்து மீறி மீன் பிடித்த இந்திய மீனவர்களை கடற்படை விசேடமான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக கைது செய்யத் தொடங்கியது. இதன் மூலம் இந்தியக் கடற்படையை இலங்கை கடலுக்குள் வலுக்கட்டாயமாக இழுத்து வந்தனர். இந்தச் செயல் திட்டம் மூலம் இந்தியாவின் எந்த வகையான



இராணுவ நடவடிக்கையையும் நியாயப்படுத்தி, இந்திய ஆக்கிரமிப்புக்குரிய ஒரு நிலையை உருவாக்கி புகைக்க வைத்துள்ளனர். மீனவர்களின் பிரச்சனையை புலிகள் தமது வன்முறை சார்ந்த இராணுவ நடவடிக்கை மூலம் மீனவர்களின் பெயரில் நடத்தி சொந்த லாபத்துக்குப் பயன்படுத்த முற்பட்டன. சீன மீனவர் கப்பல் மேலான இராணுவத் தாக்குதல் ஒன்றை இனம் தெரியாத மூன்றாம் தரப்பின் மீது சுமத்தி பலரைக் கொன்றனர். இவை அனைத்தும் சர்வதேசத் தலையீட்டுக்கு உரிய சூழலைக் கனிய வைத்துள்ளது. சர்வதேசக் கப்பல் போக்குவரத்து, சர்வதேச மீன்பிடி என்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை கேள்விக்குள்ளாக்கியது இந்த நிகழ்வு, புலிகளின் கடல் நடமாட்டத்தின் மீது அதிகக் கண்காணிப்பை ஏற்படுத்தியுள்ளது. தவறான நடவடிக்கை மூலம் புலிகள் தம்மைத் தாம் தனிமைப்படுத்தி செல்லும் சில உதாரணங்களாகும் இவை. ஆக்கிரமிப்புகளை வலியச் சீண்டி இழுக்கும் ஒரு நெம்பு கோலாகவே இது உள்ளது.

இந்தியா இலங்கையில் தலையீட்டுக்கான தயாரிபின் ஒரு அங்கமாக ஆந்திரப்பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் புலிகளை சம்பந்தப்படுத்தினர். இந்தத் தாக்குதலில் புலிகளின் தொழில் நுட்ப உதவியும், ஒத்துழைப்பும், பயிற்சியும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது என்ற அறிக்கையை இந்தியா வெளியிட்டது. ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மீதான கண்ணிவெடித் தாக்குதலுக்கு மக்கள் யுத்தக் குழு (P.W.G) உரிமை கோரியது. ஆனால் இந்தக் குழுவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த சிலரே சென்னையில் திலீபன் மன்றம் என்ற பெயரில் புலிகளுக்கான முன்னணி அமைப்பாக செயற்பட்டு வந்தாக இந்தியா கூறியது. இக் கண்ணி வெடித் தாக்குதலுடன் புலிகளின் தொடர்பு ஊர்ஜிதமாகியிருப்பதாக இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியும் தெரிவித்தார். இப்படி ஆந்திர முதல்வரின் கொலை முயற்சியில் புலிகளை சம்பந்தப்படுத்திய நிகழ்வு தற்செயலானவை அல்ல. இவை எல்லாம் புலிகள் மேலான நேரடியான தாக்குதலுக்குச் சில ஆரம்பத் தயாரிப்புகளே. இந்தியாவில் நடக்கக் கூடிய சம்பவங்களைக் கூட புலிகளுடன் தொடர்பு படுத்தி புலிகள் மேலான தாக்குதல் ஊடாக இலங்கையில் ஆக்கிரமிக்க இந்தியா தயாராகவே உள்ளது.

இதனடிப்படையில் பலாலி விமானநிலைய ஓடுபாதையை முற்றாகத் இராணுவத் தேவைக்கு ஏற்றபடி நவீனமாகத் திருத்தி அமைக்கும் பணிகளை இந்திய விமானப் படையினர் தொடங்கியுள்ளனர். எந்த நிலைமையையும் சமாளிக்க பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையே படையினரது போக்குவரத்து பணிகளுக்கு இந்திய விமானப் படையினரின் உதவி வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் புலிகளின் நேரடியான எந்த அச்சுறுத்தலையும் இந்தியா இராணுவ வலிமையைக் கொண்டு ஒடுக்கத் தயாராகி வருகின்றது. இதைவிட இந்தியாவும், இலங்கையும் விரிவான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கை எழுத்திடுவதற்கு முன்னேற்பாடாக இவ்விடயங்கள் அமுலுக்கு வந்துள்ளது. இவ் ஒப்பந்தம் இந்தியா இலங்கை தேர்தல் நடப்பதன் காரணமாக தற்காலிகமாக ஒத்திப் போடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுக்கு எதிரான அரசுகளின் கைக் கூலிகளாகச் செயல்படுபவர்களைப் பாதுகாப்பதில் இந்திய அரசு அதிக அக்கறை காட்டுகின்றது. 26.11.02-இல் இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று எச்சரித்தார். அவரது பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேரடியாகவே உத்தரவு இட்டார். இதனடிப்படையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. துரோகிகளின் நலனில் இந்தியாவின் அக்கறை வானளவாக உள்ளது. புலிகள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யும் ஒரு நிலை தவிர, எந்த நிலையிலும் சர்வதேச அழுத்தம் புலிகளுக்கு எதிராகவே உள்ளது. இலங்கை இனவாதிகளின் நீடித்த முரண்பாட்டைக் கடந்த ஒரு நிலையிலும் கூட, புலிக்கு எதிரான நிர்ப்பந்தமே முதன்மையானதாக உள்ளது. ஆக்கிரமிப்புக்கு உரிய அனைத்துத் தயாரிப்பும் எதார்த்தத்தில் அன்றாடம் உருவாக்கப்படுகின்றது.

## மூலதனத்துக்குக் கிடைக்கும் வரம்பற்ற சலுகைகள்

ஒருபுறம் இலங்கை ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலைமை கனிந்து செல்லுகின்றது. இந்த நிலைமையை உருவாக்கும் மூலதனம் உயர்ந்தபட்ச சலுகைகளை அன்றாடம் பெறுகின்றது. சர்வதேச மூலதனம் தேச மூலதனத்தை விழுங்கி ஏப்பமிடும் வகையில் இச் சலுகைகள் வாரி வழங்கப்படுகின்றது. உலகமயமாதலின் செல்லக் குழந்தையாக இலங்கையைச் சீராட்டி வளர்க்கும் ஏகாதிபத்தியங்கள், இதனடிப்படையில் உள்நாட்டில் ஏற்படும் எந்த நெருக்கடியிலும் உதவத் தயாராகவே உள்ளது.

2003 மார்ச் முதல் 50 லட்சத்துக்கும் மேல் வரி கட்டக் கூடிய வருமான உடையோருக்கு 30 சதவீத வரிச் சலுகை வழங்கப்பட்டது. பெரும் மூலதனத்துக்கு வரிச் சலுகை இதன் மூலம் வழங்கப் பெற்றது. சிறிய மூலதனம் பெரிய மூலதனத்தை விட அதிக வரி கட்ட நிர்ப்பந்திக்கப்பட்டது. அடிப்படையில் தேசிய மூலதனம் முடமாக்கப்பட்டது. பெரிய மூலதனத்தின் உற்பத்திச் செலவு வரிச்சலுகை மூலம் குறைக்கப்பட்டது. இதன் மூலம் தேசிய மூலதனங்கள் பெரிய மூலதனத்துடன் போட்டியிட முடியாத நிலையில் முடக்கப்படுகின்றது. இதை விட 2002-ம் ஆண்டுக்கான வரவு செலவில் துறைமுகம் மற்றும் விமான நிலையம் வரி அறவீடுகள் 0.75 சதவீத்தில் இருந்து 0.5 சதவீதமாக வரி குறைக்கப்பட்டது. வெளிநாட்டுப் பொருட்களின் விலையை உள்ளூர் சந்தையில் குறைக்க இது உதவியுள்ளது. விமான நிலைய மற்றும் துறைமுக வரிகளைக் குறைத்ததன் மூலம், அன்னிய உற்பத்தியாளர்களுக்கு அதிக சலுகை வழங்கப் பெற்றது. அதே நேரம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் பொருளிலும் அன்னியன் அதிகம் லாபம் பெறும் வகையில் வரி குறைப்பு வழங்கப்பெற்றது. பெரும் வரிச் சலுகை பெறும் நிறுவனங்கள் லாபங்களுடன் திடீரெனத் தலைமறைவாவது இலங்கையில் அன்றாட நிகழ்வாகின்றது. இப்படி 2003-இல் 67 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. 50000 தொழிலாளர்கள் இதனால் வேலை



இழந்தனர். இவை எதுவும் நட்டத்தினால் மூடப்படவில்லை. மூலதனத்தைக் கடத்திச் சென்ற போதே இவை மூடப்பட்டன. பல வெளிநாட்டு மூலதனங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நாட்டைவிட்டே சென்றன. தொழிலாளர் சம்பளங்களையும் கூட சுருட்டிச் கொண்டே தலைமறைவாகிவிடுகின்றன. சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத பாதுகாப்பை உலகமயமாதல் மூலம் மூலதனம் பெற்றுள்ளதால், இது ஒரு சாதாரண அன்றாட விடையமாகிவிட்டது. தொழிலாளர்கள் வீதியில் வீசப்படுவது அன்றாட நிகழ்வாகி உள்ளது.

மறுபுறத்தில் உழைக்கும் மக்கள் மேல் சுமைகள் பெருகிச் செல்லுகின்றது. 2004 மாசி மாதம் உலகவங்கி ஆலோசனைக்கு இணங்க மின்சாரக் கட்டணத்தை 3.50 சதத்தில் இருந்து 5.75 சதமாக உயர்த்த மின்சாரசபை சிபாரிசு செய்தது. 2.25 சதத்தால் ஏற்படும் உயர்வு தேர்தலில் முடிவை மாற்றி அமைக்கும் என்பதால், அதை பின் போட்டுள்ளனர். 2003 வரவு - செலவு திட்டத்தில் அத்தியாவசியப் பொருளான மா, சீனி, வெங்காயம், பருப்பு, கிழங்கு, வீட்டு எரிவாயு, மருந்து என்பவற்றுகான 10 சதவீத வரி 15 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதே நேரம் ஆடம்பர பொருளுக்கான வரி 20 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை என்பது அன்னிய மூலதனத்துக்கு சேவை செய்வதுதான் என்பது தெட்டத் தெளிவானதாக உள்ளது. வறுமையுடன் வாழ்வை நடத்த முடியாத சமூக அவலம் பெருகும் போது, அவர்களின் வாழ்வுக்கு ஆதாரமான அடிப்படையான பொருட்களின் மேல் வரி அதிகரிக்கின்றது. அந்த மக்கள் வாங்க வக்கற்ற பொருட்களுக்கு வரி குறைக்கப்படுகின்றது. மேட்டுக் குடிகளின் வரவு செலவில் பாதிக்காத வகையில் ஒன்றை ஒன்று சரிகட்டும் வரவுசெலவு, அவர்களின் நலன்களை பேணுவதில் அக்கறையாக இருக்கின்றது. அன்னியனுக்கு அதிக விற்பனையையும், அதிக லாபத்தை பெறும் வகையில் ஏழைகளின் வயிற்றில் அடித்துக் கொடுக்கும் கொள்கை கையாளப்படுகின்றது.

அன்னிய உரக் கம்பெனிகள் விரும்பியவாறு விலைநிர்ணயம் செய்து கொள்ளையடிக்கும் ஏகபோக உலகளாவிய கொள்கையை இலங்கை அரசும் அடிபிசகாது பின்பற்றுகின்றது. இலங்கையின் பாரம்பரியமான விவசாயத்தை அழித்து விட்டு, அதனிடத்தில் எந்தப் பிரயோசனமும் அற்ற இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்தி வெடிபொருளான நஞ்சை உரமாக விவசாயிகளின் தலையில் சுமத்தும் கொள்கை தொடருகின்றது. விவசாயக் கொள்கையை மாற்றுவதை உலகமயமாதல் அனுமதிக்காது. இதில் கிடைக்கும் ஏகபோகக் கொள்ளையை காலத்துக்குக் காலம் அதிகரித்த வகையில் சூறையாடுகின்றது. இதற்குத் தாளம் போடும் தேசிய அரசுகள், அதை விவசாயிகளின் தலையில் கட்டுகின்றது. சிறிய மானியம் ஒன்றை வழங்குவதன் மூலம் அதை நேரடியாகவே அன்னிய உரக்கம்பெனிக்கு முன் கூட்டியே தானமாகக் கொடுத்து விடுகின்றனர். இதனடிப்படையில் 2002-இல் உரத்தின் விலையை 525 ரூபாவாக அதிகரித்த அதேநேரம், மானியமாக உரக் கம்பனிக்கு 150 ரூபாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினர். இப்படி வழங்கிய அரசு விவசாயிகளின் முதுகில் 375 ரூபாவை சுமக்கக் கோரி விவசாயத்தை முடமாக்கும் கொள்கையை அமுல் செய்கின்றது. இதன் மூலம் தேசிய உற்பத்திகளை முடக்கி, உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் கொள்கை படிப்படியாக அமுலுக்கு வருகின்றது.

1990-இல் இலங்கையின் மொத்த வருமானத்தில் விவசாய உற்பத்தி 23.2 சதவீதமாக இருந்தது. இது மொத்த வேலை வாய்ப்பில் 44.7 சதவீதத்தைப் பூர்த்திசெய்தது. இது 2000-ஆம் ஆண்டில் தேசிய வருமானத்தில் 19.4 சதவீதமாக இருக்க, இந்த துறை சார்ந்த உழைப்போ 36 சதவீதமாகியது. இது 2001-இல் தேசிய வருமானத்தில் 19.4 சதவீதமாக இருக்க, இந்த துறைசார்ந்த உழைப்பு 32.4 சதவீதமாக குறைந்தது. வறுமையும், தொழில் இழப்பும் அதிகரித்துச் செல்வதைப் புள்ளிவிபரம் காட்டுகின்றது. 1997ம் ஆண்டு உலகவங்கி நிபந்தனைக்கு இணங்க, தேசிய அரசு அரிசி இறக்குமதிக்கு இருந்த தீர்வை வரியான 35 சதவீதத்தை நீக்கி 10.5 சதவீதமாக்கியது. இது போல் பல்வேறு பொருட்களின் தீர்வை வரியைக் குறைத்ததன் மூலம், விவசாயமே ஒட்டுமொத்தமாக நாசமாகியுள்ளது. பல்வேறு நாடுகளில் விவசாயத் தீர்வை 31 சதவீதமாக இருந்த போதும் இலங்கையில் அது 10.5 சதவீதமாகியுள்ளது.

அடிப்படை விவசாயத்தை அழிக்கவும், அன்னியனை நம்பி விவசாயிகள் கையேந்தி நிற்கும் தேசியக் கொள்கை திட்டமிட்ட வகையில் விரிவாக்கி வருகின்றது. அன்னிய உரம், கிருமிநாசினி, விதைகள் அற்ற விவசாயம் என்பது, அறவே அற்றுப் போய்விட்டது. ஏகபோக அன்னியக் கம்பனிகளின் நிபந்தனைகள் தான் தேசிய கொள்கையாகின்றது. உலகளாவிய உணவுப் பொருட்களின் விலையை அவர்கள் தான், தமது சொந்த விலையின் மூலம் நிர்ணயம் செய்வதாக மாறிவிட்டது. இதன் மூலம் நாட்டை முடக்கவும், அடிபணிய வைக்கவும் முடியும். உதாரணமாக இலங்கையில் கிருமிநாசினியின் பயன்பாடு 1950 இல் 20000 தொன்னாக இருந்தது. இது 2000 ஆண்டில் 212 000 தொன்னாக அதாவது 10 மடங்குக்கு மேலாக மாறியுள்ளது. அதாவது ஆசிய நாடுகள் அனைத்தையும் விட இலங்கையில் வருடம் 28 மடங்கு அதிக அளவில் கிருமிநாசினி பயன்படுத்தப்படுகின்றது. உலகில் பல நாடுகளில் தடை செய்யப்பட்டவை இலங்கையில் சாதாரணமாகவே விற்கப்படுகின்றது. உலகமயமாதலின் செல்லக் குழந்தையாக இலங்கை நாடு இருப்பதால், வழங்கும் கடன் உரமாகவும், கிருமிநாசினியாகவும் அதாவது நஞ்சாகவே வாரி வழங்கப்படுகின்றது. உலகச் சந்தையில் எது தேங்குகின்றதோ, எது தடை செய்யப்படுகின்றதோ அவை எல்லாம் இலங்கைக்குக் கடன் என்ற பெயரில் கொட்டிக் குவிக்கப்படுகின்றது. உலக மூலதனம் நொந்து போகக் கூடாது என்பது இலங்கைத் தேசியவாதிகளின் இரக்க மனப்பான்மையாக உள்ளது. சொந்த மக்களும், சொந்த நாடும் எப்படிப் போனாலும் கவலைப்படாத குறுந் தேசிய வாதங்களும், கைக் கூலித்தனமும் தான் ஜனநாயகமாகிப் போயுள்ளது.



அன்னியனுக்கு மக்களின் பெயரில் மானியத்தையும், வரிச் சலுகைகளையும் சட்டப் பூர்வமாக்கும் இலங்கை அரசு, வரியைக் கட்டாத முதலாளிகளுக்கும் வரிச் சலுகையை வழங்கும் கொள்கையை கையாளுகின்றது. 1996-97-க்கு முற்பட்ட காலத்தில் வரிகட்டாதோருக்கு வரி விலக்கு வழங்கியதன் மூலம் 5600 கோடியை முதலாளிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தனர். இது ஒரு முடிவற்ற தொடர் கதை தான். 2002-இல் மக்களிடம் அறவிட்ட வற் வரியான 2000 கோடி ரூபாவை, வர்த்தக நிறுவனங்கள் அரசுக்குத் தரவில்லை என்று வரி அறவிடும் நிறுவனம் அறிவித்துள்ளது. வரியை ஏழையிடம் புடுங்க முடியும், முதலாளியிடம் தரவில்லை என்று சொல்ல மட்டுமே முடியும். அதுவும் மக்களிடம் அவர்களை ஏமாற்றி அறவிட்ட மறைமுக வரியைக் கூட முதலாளிகளிடம் இருந்து பெற முடியாத மூலதன அதிகார மையங்கள், வரிச் சலுகை கொடுக்கக் கோரி அறிக்கை சமர்ப்பிக்கவே முடியும். நம்பினாலும் நம்பா விட்டாலும் இது தான் ஜனநாயகம்.

இது மட்டுமா எனின் இல்லை. இலங்கையில் 32000 கம்பெனிகள் இருப்பதாகவும், அதில் 9000 கம்பெனிகளே 2000-2001-க்கான கணக்கை சமர்பித்ததாகவும், 2850 கம்பெனிகளே வரி கட்டியதாகவும் அரசே அறிவித்துள்ளது. வேடிக்கையான பெயரளவிலான ஜனநாயகமான அரசாங்கம். ஆட்சி என்பது மூலதனத்தின் ஆட்சி தான் என்பதும், அரசு என்பது மூலதனத்துக்கு தாளம் போட மட்டுமே உள்ளது என்பதை இது மீண்டும் எமக்கு நிறுவுகின்றது. 2003-ம் ஆண்டு அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் 19,186 உள்நாட்டுக் கம்பெனிகள் வரி செலுத்துவதாகவும், 246 வெளிநாட்டுக் கம்பெனிகள் மட்டுமே வரி செலுத்துவதாகவும் அறிவித்தனர். இதைவிட 175,346 பேர் வரி செலுத்துவதாகக் கூறினர். பல ஆயிரம் கம்பெனிகள், தனிநபர்கள் வரி கட்டுவதில்லை என்பதை பாராளுமன்றத்தில் ஒத்துக் கொண்டனர். இதில் வெளிநாட்டு நிறுவனங்களும் அடங்கும். இலங்கையில் சில ஆயிரம் வெளிநாட்டு நிறுவனங்கள் கொள்ளையிடுகின்றன. ஆனால் 246 நிறுவனங்கள் மட்டுமே சலுகை அடிப்படையில் சிறிய தொகையை வரியாகக் கட்டுகின்றன. முதலாளிகளுக்கு வரியை முற்றாக நீக்குவது என்பதே மூலதனத்தின் உலகமயமாதல் கொள்கை. இதனடிப்படையில் வரிக் குறைப்பு, வரிச் சலுகை, வரி நீக்கம் மானியங்கள் என்று பலவற்றைத் தேசிய அரசுகள் வாரி வழங்குகின்றன. மக்களிடம் மறைமுகமாக வர்த்தக நிறுவனங்கள் திரட்டும் வரியைக் கூட, மூலதனம் திமிருடன் கொடுக்க மறுக்கின்றது. அரசும், அரசு இயந்திரமும் மூலதனத்தின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் இயங்குவதால், மூலதனத்திடம் வரிகளை அறவிடுவது என்பது முடியாது. விரும்பின் வரி நீக்கத்தை அடிப்படையாக கொண்ட மானியமாக அதை விட்டுவிட வேண்டும். இதை ஒரு பெரும்பானமை வாக்குகள் மூலம் ஜனநாயகப்படுத்தி விடுவதே காலத்துக்குக் காலம் நடக்கின்றது. மக்கள் முதுகு முறிய மூலதனத்துக்காக அனைத்தையும் சுமந்து நிற்க வேண்டியது அவர்களின் ஜனநாயகக் கடமை என்பது உலகளாவிய உலகமயமாதல் கொள்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மானியங்கள், சலுகைகள், வரிச் சலுகைகள் என ஒருபுறம் வழங்கிய படி, மறுபுறம் அதை ஈடுசெய்ய அரசுத்துறையை அவர்களுக்கே மானியமாக விற்றுவிடுவது என்று அறிவித்து விடுகின்றனர். அரசுத் துறையை விற்பதன் மூலம் 1000 கோடி ரூபாவைத் திரட்ட உள்ளதாக அறிவித்தனர். வெளிநாட்டவனுக்கு இலங்கையை விற்பதன் மூலம் அவர்களிடம் வெளிநாட்டு மானியமாக 1000 கோடி ரூபாவைத் திரட்ட திட்டமிட்டனர். இதைவிட வெளிநாட்டுக் கடனாக 5,000 கோடி ரூபா திரட்ட உள்ளதாக அறிவித்தனர். வரவு செலவில் பெரும்பகுதி கடன் கொடுப்பனவுக்கும், வட்டிக்கும் மீண்டும் சென்று விடுகின்றது. வரவு செலவைச் சமர்ப்பிப்பதே வெளிநாட்டவனுக்கு வட்டி மற்றும் கடன் கொடுப்பனவுகள் கொடுப்பதற்காகவே ஒழிய மக்களுக்குச் சேவை செய்ய அல்ல. அரசானது மூலதனத்துக்குச் சேவை செய்வதைக் கொள்கையாகவே ஜனநாயகமாகவே ஆக்கி விட்ட பின், அரசு நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது அடிப்படை கொள்கையாகின்றது. முதலில் அதை நட்டமடைந்ததாக காட்டுவது தொடங்குகின்றது. கடந்த 10, 15 வருடங்களில் அரசுத் துறைகள் நட்டமடைந்ததாகக் கூறியே அரசுத் துறைகள் உலகம் முழுக்க விற்கப்படுகின்றன. இந்த வகையில் அரசு - பொதுத்துறைகள் அனைத்தையும் தனியார்மயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக அது வருடம் 150 முதல் 200 கோடி நட்டமடைவதாக கூக்குரலிடுகின்றது. இதே போல் பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம் 2150 கோடியும், மின்சார சபை 1560 கோடியும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் 830 கோடியும், தபால் திணைக்களம் 230 கோடியும், இலங்கைப் போக்குவரத்துச் சபை 210 கோடியும் நட்டமடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதைத் தெரிவித்த நிதி அமைச்சர் கே.என்.சொக்சி தனது பதவிப்பிரமாணத்தில் "சீர்திருத்தம் வருத்தம் மிகுந்தது" என்ற கூறி, தேசியச் சொத்துகளை அந்நியனுக்கு விற்பதற்கான ஒரு நியாயவாதத்தை முன்வைத்துள்ளார். அத்துடன் "மக்களைக் குறிப்பிட்ட காலம் எங்களுடன் தாங்கிக் கொள்ளுமாறு கேட்கவேண்டும். அதன்படி அவர்கள் குறைந்த பட்சம் ஒரு வித்தியாசமான சித்திரத்தைக் காண்பார்கள்" எனவும் கூறியுள்ளார். இப்படியாக அரசுப் போக்குவரத்துத் துறை முதல் பல துறைகள் தனியார்மயமாகின்றது.

அரசாங்கத்தின் மற்றொரு கொள்கை தனியார் தேசிய உற்பத்திகளை அன்னியருக்குத் தாரைவார்ப்பதாகும். இதற்கு முதல்படியாக அவர்களை மீளமுடியாத கடன்காரர் ஆக்குவதாகும். நவீன இயந்திரத்தை உற்பத்தியில் புகுத்துவது என்ற பெயரில், அன்னிய இயந்திரங்களைப் பெரியளவில் புகுத்த கடன் தாராளமாக வழங்கப்படுகின்றது. இதன் மூலம் அன்னிய இயந்திரத்துறை கொழுக்கும் அதே நேரம், இத்துறைகள் அன்னிய மூலதனத்துக்குப் படிப்படியாக அடிமைப்பட்டுச் சிதைந்து அழிவதை துரிதமாக்கின்றது. இதனடிப்படையில் சிறிய மற்றும் மத்திய உற்பத்திக்குக் கடன் வழங்க என அரசு 3500 கோடி ரூபாவை 2004-ம் ஆண்டுக்கு ஒதுக்கியுள்ளது. இதைவிட அன்னியக் கடன் கொடுப்பனவுகள் பல இதற்கு என சிறப்பாகப் பெரிய அளவில் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் சிறிய மற்றும் மத்திய தேசிய உற்பத்திகள் முடக்கப்படுவது எதார்த்தமாகின்றது. அன்னிய உற்பத்திகள் சந்தையைக் கைப்பற்றுவது இலகுவானதாகின்றது. இலங்கையில் படிப்படியாக அன்னிய



மூலதனம் பெருகி வருகின்றது. தேசிய மூலதனம் சிறுத்து சிதைந்து வருகின்றது.

கடனுக்கு வெளியில் நாட்டை விழுங்கும் வகையில் வெளிநாட்டு மூலதனம் இலங்கையில் பெருகி வருகின்றது. 2001 இல் 8.2 கோடி டொலராக (அண்ணளவாக 820 கோடி ரூபா) இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2002-இல் 23 கோடி டொலராக (2300 கோடி ரூபாவாக) அதிகரித்தது. 2003-இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 5000 கோடி ரூபாவாக அதிகரித்தது. இதை அரசாங்கம் தங்கள் மேலான வெளிநாடுகளின் நம்பிக்கையைக் காட்டுவதாக பீற்றியது. தாம் வெளிநாடுகளுக்கு கைக்கூலிகளாக இருப்பதை பாராட்டுகின்றன என்பதையே பெருமையாக பீற்றுகின்றனர்.

கடந்த சில வருடங்களில் அன்னியன் வருகை பொருளாதாரத் துறையில் என்றுமில்லாத வகையில் ஊடுருவுவதானது - நாடு அடிமையாகிச் செல்வதையேக் காட்டுகின்றது. நாட்டில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2003 இன் கடைசிப் பகுதியில் 290 கோடி அமெரிக்க டொலராக (அண்ணளவாக 29000 கோடி ரூபாவாக) அதிகரித்துள்ளது. இது ஆண்டு இறுதியில் 300 கோடி அமெரிக்க டொலராக (அண்ணளவாக 30,000 கோடி ரூபாவாக) உயரும் என்று பெருமையுடன் அரசு அறிவித்து இருந்தது. இது சுமார் ஐந்து மாதங்களுக்குக் கூடிய இறக்குமதிச் செலவை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும் என்று பீற்றியது. அன்னிய மூலதனத்தின் வருகை, 2002-ம் ஆண்டை விட பத்து சதவீதம் ஏற்றுமதியை அதிகரிக்க வைத்தது. கைத்தொழில் ஏற்றுமதி 2 சதவீதம் அதிகரிக்க இது காரணமாக இருந்தது. நாடு மறுகாலனி எல்லையில் தன்னை நிலைநிறுத்தி நிற்கின்றது. தேசிய வருவாய்க்கு நிகராக அன்னிய மூலதனம் நாட்டில் புகுந்துவிட்டது. கடன், தேசிய வருவாயை மிஞ்சி நிற்கின்றது. வருடாந்த கடன் கொடுப்பனவுக்கான வட்டி தேசிய வருவாயைத் தாண்டி நிற்கின்றது. தன்னை சுதந்திர நாடு என்று சொல்லக் கூடிய எந்தத் தகுதியும் இலங்கைக்கு கிடையாது. பொருளாதார ரீதியாக மறுகாலனிய அடிமை நிலையில் ஏற்கனவே இலங்கை கடந்து சென்றுவிட்டது.

2003-இன் முதல் பத்து மாதங்களில் நான்கு தடவைகள் வட்டி வீதங்களை மத்திய வங்கி குறைத்தது. இதன் மூலம் வியாபாரம் மற்றும் கைத்தொழில் மூலதனங்கள் கொழுத்தன. கடன் வழங்கலுக்கான வட்டி விகிதம் 2001 இல் 22.4 சதவீதமாக இருந்தது. இது 2003-இன் தொடக்கத்தில் 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 2003 செப்டெம்பரில் அது மேலும் குறைக்கப்பட்டு 9.3 சதவீதத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் வங்கித் தொழிலுக்கும், தனியார் துறையினருக்கும் லாபம் பெருகியது. வட்டி விகிதங்களின் குறைப்பு மூலதனத்துக்கு மற்றொரு கொடையாகும். வட்டி யாருக்கு குறைக்கப்பட்டது? அன்றாட மக்களின் சேமிப்பு பணத்துக்கே வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டது. இது நேரடியாகப் பெரு மூலதனத்துக்கு விசேட சலுகையாகியது. மக்களின் சேமிப்புகள், ஓய்வூதியப் பணங்கள் (ஓய்வூதிய பணச் சேமிப்பு 32000 கோடி ரூபா உள்ளது) என்று, பல பத்தாயிரம் கோடி ரூபா மீதான வட்டி வகிதங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைப்பு நேரடியாக மக்களுக்கு மேல் திணிக்கப் பெற்ற மேலதிக சுமையாகியது. மக்களின் வாழ்வு மேலும் கீழே தள்ளப்பட்டுள்ளது. அரசு, மக்களின் பணத்தை எடுத்துக் கொண்டு விட்ட நிலையில், வழங்கிய வட்டிக்கு தானே வட்டி விகிதங்களை குறைத்ததன் மூலம், மக்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தின் அளவைக் குறைத்துக் கொண்டது. அதை அன்னியனுக்குக் கொடுப்பதன் மூலம் சேவை செய்ய முடிகின்றது. மற்றொரு பக்கத்தில் பெரும் மூலதனங்களும், அன்னிய மூலதனங்களும் சொந்தப் பணத்தை வைத்துக் கொண்டு முதலீடுவதில்லை. மாறாக மக்களின் அன்றாட சேமிப்புகளை அபகரித்தே, அதைக் கொண்டே மூலதனத்தை பெருக்கி வந்தன. அதாவது மக்களைச் சூறையாடி வந்தன. அரசுத் துறைகளைக் கூட மக்களின் சேமிப்பு பணத்தைக் கொண்டு வாங்குகின்றன. வட்டி விகிதக் குறைப்பு என்பது மூலதனங்கள் மக்களின் பணத்துக்கு வழங்க வேண்டிய வட்டி விகிதத்தை மூன்று மடங்கு குறைத்துள்ளதேயாகும். இதனால் அவர்களின் லாபம் சில மடங்காகியுள்ளது. மக்களின் சேமிப்பைக் கொண்டு வங்கிகள் நடத்தும் பல்வேறு சூதாட்டத்தில் ஏற்பட்ட கொழுப்பு, வட்டி விகிதக் குறைப்பால் அதிர்ஷ்டம் தலைகால் தெரியாத அளவில் விசிறியடித்தது. குறைந்த வட்டி பணத்தின் விசிறல் தொடர் மாடிக் குடியிருப்புகளில் பெருமளவில் முதலீட்டப்படுகின்றது. வட்டி விகிதங்களை குறைக்கக் கோருவது உலகமயமாதலின் அடிப்படை நிபந்தனையாகும். இதன் மூலம் மக்களின் சேமிப்பை எடுத்து விரும்பியவாறு கொள்ளையிடவும், அதைக் கொண்டு அந்த நாட்டுக்கே கடன் கொடுக்கும் கொள்கையும் உலகளவில் வெற்றி பெற்று வருகின்றது. இந்த வகையில் இலங்கையிலும் இது உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.

அத்துடன் மக்களின் சேமிப்புப் பணத்தை மீளக்கொடுக்க முடியாத நிலையை இலங்கை அடைந்துவிட்டது. மீள் கொடுப்பனவை பின் தள்ளும் முயற்சியாகவும் இந்த வட்டி விகித குறைப்பைப் பயன்படுத்தினர். முன்பு 3 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தை உடைய 14.95 சதவீத வட்டி விகிதத்தில் திறைசேரி உண்டியல் விற்க முயன்றனர். அதாவது மூன்று வருடத்துக்குப் பணத்தை மீள எடுக்க முடியாது. அன்று அதை விற்க முடியவில்லை. பொதுவான உயர் வட்டி விகிதங்கள் இதை அனுமதிக்கவில்லை. ஆனால் வட்டிக் குறைப்பை கொள்கையாக்கி, அதிரடியாக 4 முறை 2003-இல் குறைத்ததன் மூலம், சேமிப்பாளர்களைத் தொடர் பீதிக்குள்ளாக்கினர். இதை மூலதனமாக்கி வங்கிகள் ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையான காலப் பகுதியில் 9.4 வீதம் என்ற வட்டி வீதத்தில் 10, 15, 20 ஆண்டுகால திறைசேரி உண்டியல்களை 3600 கோடி ரூபாவுக்கு பொதுமக்களின் தலையில் கட்டிவிட்டன. மக்களின் சேமிப்புப் பணமான 3600 கோடி ரூபாவை 10, 15, 20 வருடத்துக்கு மீளப் பெற முடியாத நிலையை ஏற்படுத்தினர். மக்கள் தமது சேமிப்புகளை ஒரேயடியாக மீளப் பெறுவதை தடுக்கும் வழியில், தொடர் பணப்பத்திரங்களை விற்க வட்டிக் குறைப்பு மேலும் உதவி வருகின்றது.

மக்கள் மேலான பல முனைத் தாக்குதலினால் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாத நிலையில் மக்கள் அல்லாடுகின்றனர்.



பல விலையேற்றங்கள் தொடராக அமுல் செய்யப்படுகின்றது. உதாரணமாக 2003 ஜுன் மாதம் முதல் போக்குவரத்து கட்டணத்தைத் தூர இடத்துக்கு 40 சதவீதமும், குறுகிய தூரத்துக்கு 60 சதவீத உயர்வை ஏற்படுத்தியது. இது போல் வீதிகளைப் பயன்படுத்தும் வாகனங்களுக்கு வரி அறவிடும் முறை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி, வாகனங்களை வருடந்தோறும் பதிவுசெய்யும் போதும், பெற்றோல், டீசல் விநியோகத்தின் போதும் இந்த வரியை அரசு மறைமுகமாக அறவிடத் தொடங்கியுள்ளது. மக்களின் வாழ்வியல் மேலான தொடர் தாக்குதலால் மக்கள் விழிப்புற்று மூலதன அமைப்புக்கே ஆபத்தை ஏற்படுத்தாத விதத்தில், தனியார் துறையில் உள்ள 62 லட்சம் பேருக்கும், 10 சதவீத சம்பள உயர்வையும் வழங்குமாறு தொழில் அமைச்சர் மஹிந்சமரசிங்க முதலாளிமார்களிடம் கெஞ்சிக் கேட்கின்றார். 10 சதவீத சம்பள உயர்வைக் கொடுக்க சட்டம் போடவில்லை. இரந்து கேட்பதே ஜனநாயகப் பண்பாகியுள்ளது. அரசு ஊழியர்களை வேலையில் இருந்து நீக்க உலகமயமாதல் கோருகின்றது. இதை ஆராய திஸ்ஸ தெய்வேந்திரா ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய 30 சதவீதமான அரசு ஊழியர்களை வேலையிலிருந்து ஓய்வு பெறச் செய்யும் வகையில் திட்டம் ஒன்றை சமர்ப்பித்தது. இதற்கென ஏகாதிபத்தியமும், உலக வங்கியும் சிறப்பு நிதிகளை கொடுக்கின்றது. பணத்தைக் கொடுத்தும், சில சலுகைகளைக் கொடுத்தும் அரசு ஊழியர்களை அகற்றுவதன் மூலம், அரசுத் துறையைத் தனியார்மயமாக்க உலக வங்கி கோருகின்றது.

## வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் யுத்த அவலங்களும் சமூகச் சிதைவும்

பொருளாதார ரீதியாக இலங்கை மக்கள் சந்திக்கும் நெருக்கடி ஒருபுறம் என்றால், இனவாத நடைமுறைகள் தமிழ் மக்களுக்கு மீள முடியாத பேரிடியாக உள்ளது. இதைவிட புலிகளின் வரி அறவிடும் முறையும், அவர்களின் தேசிய பொருளாதாரக் கொள்கையும் மறுபக்கம் பேரிடியாகி அவலமாகவே பெருக்கெடுக்கின்றது.

1983 முதல் 2001 வரையிலான காலப்பகுதியில் வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் அழிந்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதி சுமார் 40,300 கோடி ரூபா எனறு இலங்கை மத்திய வங்கியே 2003-இல் அறிவித்துள்ளது. அதாவது வருடாந்தர இலங்கையின் தேசிய வருமானத்தை விட இது அதிகமாகும். இது அழிந்த சொத்து இழப்பை மட்டும் குறிக்கின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்ப்போம். 1983-1987-க்கு இடைப்பட்ட காலத்தில் வடக்கு கிழக்கில் 56 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. 34 ஆயிரம் வீடுகள் சேதமாகின. 1987-1994-க்கு இடையில் புனருத்தாரணம், புனர்நிர்மானம், நிவாரணமாக 2,265 கோடி ரூபா செலவு செய்யப்பட்டது. போர்ச் செலவீனம் மற்றும் பல்துறை சார்ந்து 1987 முதல் 1998 வரையிலான காலத்தில் (செலவு, சொத்தழிவு, உற்பத்தி இழப்பு) மிக விரிவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.நேரடிச் செலவு

| | | |
|---|---|---|
| நேரடியாக போருக்கான அரசின் செலவு | 21,232 | கோடி ருபா |
| பொதுஜன பாதுகாப்பு மேலதிக செலவு | 4,000 | கோடி ருபா |
| புலிகளின் போர்ச் செலவு | 4,200 | கோடி ருபா |
| இடம்பெயர்வு சம்பந்தப்பட்ட செலவு | 3,800 | கோடி ருபா |
| *மொத்தம்* | *33,392* | *கோடி ருபா* |

2.சொத்திழப்பு, புனர்நிர்மாணச் செலவு

| | | |
|---|---|---|
| 1987 - வடகிழக்கு புனர்நிர்மாணச் செலவு | 1,040 | கோடி ருபா |
| 1995 - வடகிழக்கு புனர்நிர்மாணச் செலவு | 4,900 | கோடி ருபா |
| வீடுகள் புனர்நிர்மாணம் (வடக்குகிழக்கு) | 1,010 | கோடி ருபா |
| வடகிழக்கு வெளியே வீடமைப்பு | 450 | கோடி ருபா |
| வடகிழக்கு வெளியே அழிவுகள் (1998 பெறுமதி) | 11,230 | கோடி ருபா |
| 1995-க்கு பின் | 2,480 | கோடி ருபா |

3.உற்பத்தி இழப்பு

| | | |
|---|---|---|
| தொழில் நிபுணர்கள் காரணமான இழப்பு | 11,250 | கோடி ருபா |
| வடகிழக்கு உற்பத்தி இழப்பு | | |
| 1.1982 அடிப்படையில் | | |
| உற்பத்தி குறைவு மொத்தமாக | 27,300 | கோடி ருபா |
| 2.தேசிய வளர்ச்சி வீதத்தில் | | |
| வடக்குகிழக்கின் உற்பத்தி இழப்பு | 39,200 | கோடி ருபா |
| உல்லாச பயணத்துறை | 12,000 | கோடி ருபா |
| அந்நிய முதலீடு | 7,500 | கோடி ருபா |
| மொத்த போர்ச் செலவு | 1,51,752 | கோடி ருபா |
| அழிவுகளைத் தவிர்த்த மொத்த செலவீனம் | 130642 | கோடி ருபா |



இந்தச் சமூக அமைப்பில் இலங்கையின் இன யுத்தம் தொடங்கிய 15 வருடங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 3 லட்சம் கோடி ருபாவுக்கு மேல் அழிந்துள்ளது. இதில் பொருட்களின் அழிவுகள் உள்ளடக்கப்படவில்லை புலிகள் 2000மாவது ஆண்டு வரை அண்ணளவாக 4260 கோடி ருபாவை யுத்தத்துக்குச் செலவு செய்துள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. இதே காலத்தில் இராணுவம் 35118 கோடியை செலவு செய்துள்ளது. ஒட்டு மொத்தமாக தேசிய வருமானத்தில் 50 முதல் 60 ஆயிரம் கோடி இராணுவத்துறை சார்ந்து அழிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அவலம் இப்படி உள்ளது என்றால், மனித உறவுகளின் அவலம் இதை விட அகலமானது. சொந்த வாழ்விடத்தில் இருந்து அன்னியமாகும் உளவியல் இழப்பு பல்துறை சார்ந்தது.

2003ம் ஆண்டு மத்தியவங்கி தனது அறிக்கையில் யுத்தத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 60 ஆயிரத்துக்கும் 80 ஆயிரத்துக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 23 ஆயிரம் என அறிவித்த மத்தியவங்கி, அப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 1,05,500 எனக் குறிப்பிட்டுள்ளது. ஒரு சமூகமே குடிபெயர்ந்த நிகழ்வால் ஏற்பட்ட அதன் துயரம், யாழ் மேட்டுக்குடி போலி மனப்பான்மையின் வெளித் தோற்றத்தைவிட அடி ஆழத்தில் ஏற்படுத்திய சேதம் வெளிக்கு தெரியாத வடுக்களாகவே உள்ளது. வடக்கில் இருந்து புலிகளால் துரத்தப்பட்ட முஸ்லீம் மக்களின் நிலையோ இதைவிட சோகமானது. வடக்கு கிழக்கு மக்கள் சந்தித்த துயரங்கள் மலையளவானது. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரதான உழைப்பு விவசாயமாக இருந்தது. இதன் அழிவு எல்லையற்றது. இதைப் போல் தமிழ் மக்களின் இரண்டாவது பிரதான உழைப்பாக மீன்பிடிப்பு அமைந்து இருந்தது. இந்த உழைப்புக்கு நேர்ந்த அவலமான சேதம் பற்றிய புள்ளிவிபரங்கள் அண்மையில் வெளியாகியுள்ளது. யுத்தத்தின் இடைக்காலமான 1989 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி வடக்குகிழக்கில மொத்த மீனவர் தொகை 2,69,629 ஆக இருந்தது. 560 மீன்பிடி கிராமங்கள் இருந்தன. தமிழ் மக்கள் தொகையில் மிகப் பெரிய உழைப்பின் ஆற்றலை வழங்கிய இந்த உற்பத்தித்துறை, இன்று முற்றாக முடங்கிக் காணப்படுகின்றது. 1983-இல் யாழ்குடா மட்டும் 48 ஆயிரம் மெற்றிக் தொன் மீன் உற்பத்தி செய்தது. ஆனால் இது 2002 இல் 5 ஆயிரம் மெற்றிக் தொன்னே உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கொண்டதாக நலிவுற்றுவிட்டது. யாழ் குடாநாட்டில் 1989-இல் 1,01,177 மீனவர்கள் காணப்பட்டனர். 2000 ஆண்டில் இது 31159 பேராகக் குறைந்து போனது. 1995-க்கு முன் 7,466 மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் சேதமாக்கப்பட்டது. மொத்த மீன்பிடி படகு மற்றும் உபகரணங்களின் சேதம் 182.45 கோடி ருபாவாகும். இதைவிட 12 ஐஸ் தொழிற்சாலைகள், வள்ளம் கட்டும் இடங்கள் என அனைத்தும் அழிக்கப்பட்டன. ஒரு இனத்தின் உற்பத்தித்துறை முற்றாகவே ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டுவிட்டது. மீன்பிடி அறிவியல் மலடாக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. பரம்பரையான கல்விமுறை சேதமானதால், தேசியப் பொருளாதார அடிப்படை சிதைக்கப்பட்டுள்ளது. அந்த உழைப்பில் இருந்து மக்கள் முற்றாக அன்னியமாகிய நிகழ்வு, அந்த உழைப்பின் மீதான ஆற்றலையே இல்லாததாக்கிவிட்டது. சமாதானம், அமைதி என்ற நாடகத்தில் மீன்பிடி கொஞ்சம் அங்குமிங்குமாக மீள முற்பட்டுமுள்ள நிலையில், புலிகளின் வரி அதன் கழுத்தில் கைவைத்துள்ளது. பல மீனவக் கிராமங்களில் புலிகளின் வரிக் கொடுமைக்கு எதிராகப் போராடியதுடன், மீன் பிடிக்க மறுத்த நிகழ்வுகளும் அங்காங்கே கசிந்து வெளிவருகின்றது. இந்த நிலையிலும் இன்று 82 கிலோ மீற்றர் கடல் பாதுகாப்பு வலையமாகக் காணப்படுகின்றது. புலிகளின் கடல் பாதுகாப்பு வலையம் இதற்குள் உள்ளடக்கப்படவில்லை. 67 மீன்பிடி கிராமங்கள் இராணுவ சூனிய பிரதேசமாகக் கைவிடப்பட்டுள்ளது. ஒருபுறம் யுத்த பிரதேசமாகவும், மறுபுறம் அராஜகத்தை அடிப்படையாகக் கொண்ட சூறையாடலும் அமைதியாகி அதுவே சமாதனமாகியுள்ளது. சொந்த உழைப்பைக் கூட சுதந்திரமாகச் செய்ய முடியாத மக்கள் செய்வதறியாது கையைப் பிசைகின்றனர். ஒட்டு மொத்த வாழ்வின் அனைத்துத் துறைகளையும் இழந்து, எதுவுமற்ற தேசத்தின் பிச்சைக்காரார் ஆகின்றனர்.

விவசாயம், மீன்படி என்ற பிரதான உழைப்புத் துறைகள் யுத்தவெறியர்களின் சொந்த நலனுக்குள் சிக்கி அழிந்து வரும் நிலையில், வடக்கு கிழக்கில் 80 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் சென்று உள்ளதுடன், வறுமையில் சிக்கியுள்ளனர். இந்த வறுமையின் துயரம் கடுமையானது. கிளிநொச்சி மாவட்டத்தில் 60 சதவீதமான மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை. ஒரு சமூகமே கல்வியை இழந்து நிற்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று வாழ்வோரில் 85 சதவீதத்திற்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்து வாழ்பவர்களே. இந்த நிலைமை யாழ் குடாவைவிட கிழக்கில் அதிகமான அளவில் உள்ளது. இதற்கான புள்ளிவிபரங்கள் பெறமுடியவில்லை.

சமூக அவலம் பன்முகத் தன்மை வாய்ந்தவை. யுத்தம் ஆண்களைக் குறி வைத்து வேட்டையாடியதால், பெண்களின் விதவைக்கோலம் சமூகக் கோலமாகியுள்ளது. இவர்களின் வாழ்வை மேம்படுத்த தேசிய வீரர்களிடம் எந்தத் தேசிய வேலைத் திட்டமும் கிடையாது. ஆனால் ஏகாதிபத்தியம் இவற்றைக் கொண்டு நாட்டில் ஊடுருவுகின்றது. 2004 மார்ச் மாதம் தேசிய வீரர்களின் தலைமையகம் உள்ள கிளிநொச்சியில், 4000 விதவைகளுக்கு சுயவேலைவாய்ப்பை வழங்க உலக உணவு திட்டத்தின் கீழ் சுழற்சியான கடனை வழங்கத் தொடங்கியுள்ளது. எந்த சுயவேலைவாய்ப்பும் வாழ்வை ஓட்டக் கூடிய நிலையில் இலங்கை இன்று இல்லை என்ற உண்மை இதற்குள் ஒருபுறம் தொங்கி நிற்கின்றது. மறு தளத்தில் 2004 மார்ச் மாதம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புதிய மையக் கட்டிடத்தைக் கிளி நொச்சிக்குச் சென்றிருந்த ஏகாதிபத்தியப் பிரதிநிதியான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்பீபன் இவன்ஸ் திறந்து வைக்கின்றார். எந்த மாவீரர் குடும்பமும் இதைத் திறக்கவில்லை. சமூக அவலம் இந்தளவும் மலினமாக்கப்பட்ட நிலையில், கொள்ளைக்காரர்களிடம் மறுபடியும் சூறையாட தாரைவார்க்கப்பட இருப்பதை இவை சூளுரைத்து



நிற்கின்றது. காட்டிக் கொடுப்புகள் அன்றாட நிகழ்வாகி வருகின்றது. மனித அவலங்கள் மறுபக்கத்தில் எல்லையற்றதாக உள்ளது.

மனித அவலங்களின் பல்வேறு புள்ளி விபரங்கள் முழுமையாகக் கிடைக்காவிட்டாலும், சில புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன. மனிதனுக்கு விடிவைத் தராத யுத்தம் வடக்கு கிழக்கில் 30 ஆயிரம் பேரை அங்கவீனராக்கி உள்ளது. இவர்களுக்கு எந்தவிதமான சமூகப் பாதுகாப்பையும், வழிகாட்டுதலையும் தமிழ் தேசியத் தலைவர்கள் வழங்கியதில்லை. இது போன்று யாழ் மாவட்ட 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 25 ஆயிரத்து 773 பெண்கள் கணவனை இழந்துள்ளதாக செயலகப் பதிவுகளில் இருந்து தெரிய வருகிறது. கணவனை இழந்தவர்களில் 16 வயதிற்கு உட்பட்ட 9 பேரும், 17 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட 937 பேரும், 31 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்ட 7 ஆயிரத்து 989 பேரும், 50 வயதுக்கு மேற்பட்ட 16 ஆயிரத்து 838 பேரும் உள்ளனர். இந்த விதவைகளின் உற்பத்தி, கிழக்கிலேயே அதிகமானது. கிழக்கில் படுகொலை அரசியல் அன்றாட அரசியல் நிகழ்வாகக் காணப்பட்டது. பெண்களின் விதவைக் கோலத்துக்கு அப்பால், பெண்கள் கணவன் தந்தை மற்றும் மகனைப் பிரிந்து வாழ்தல் ஒரு விதியாகியுள்ளது. இதனால் பொருளாதார ரீதியான சமூகச் சிதைவும், புதிய தலைமுறையின் நலிவுற்ற வாழ்க்கைக்கு தீர்வுகான வக்கற்ற ஒரு சமூகமாகவும் பரிணமிக்கின்றது.

இலங்கை அரசின் உலகமயமாதல் கொள்கை, இன அழிப்புக் கொள்கை சாதாரணமாக தமிழ்க் குடும்பங்களில் காணப்பட்ட அடிப்படையான சில பொருளாதார ஆதாரங்களைக் கூட அழித்துள்ளது. யாழ்குடா நாட்டில் மட்டும் சுமார் 4509 ஹெக்ரேயர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பு, உவர் நிலமாக மாற்றமடைந்துள்ளது. யாழ்குடா நாட்டில் மட்டும் கடந்த கால யுத்ததினால் 5 லட்சம் தென்னை மரங்கள் அழிந்துள்ளன. இதன் மூலம் குறைந்தபட்ச பொருளாதார அடிப்படையைக் கூட குடும்பங்கள் இழந்து நிற்கின்றன. ஒரு தென்னை மரத்தை மீள நட்டுப் பராமரிப்பதற்கு சுமார் 5 ஆயிரம் ரூபா வரை தேவைப்படுகின்றது. இதை மீள புனரமைக்க முடியாத அரசியல் தலைமைகள், அனைத்துக்கும் அன்னியனிடம் கையேந்தும் தலைவர்களைக் கொண்ட அரசியல் பிச்சைக்காரர்கள் ஒருபுறமும் மறுதளத்தில் வக்கற்றுப் போன சமூகமாகத் தமிழ் இனம் மாறிவிட்டது. அன்றாடச் சுற்றுச்சூழல் வழங்கிய பொருளாதார வளங்களான பனை, மா, பலா என்று அனைத்தும் அழிந்து விட்ட நிலையில், ஒரு சமூகத்தின் இருத்தல் என்பது பன்முகத் தன்மையில் கேள்விக்குள்ளாகியுள்ளது.

வடக்கு கிழக்கு கல்வியை எடுத்தால் அதன் பாதிப்பு அகலமானது. யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் உள்ள 2008 பாடசாலைகளில் 156 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. யுத்த சிதைவால் சுமார் 144 பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்குகின்றன. மிகப் பின்தங்கிய பிரதேசங்கள் முற்றாக பாதிப்படைந்துள்ளது. தீவக வலையத்திலுள்ள 76 பாடசாலைகளில் 30 பாடசாலைகளும், வலிகாமம் வலையத்திலுள்ள 152 பாடசாலைகளில் 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளும், திருமலை வலையத்திலுள்ள 80 பாடசாலைகளில் 15 பாடசாலைகளும், மன்னார் வலையத்திலுள்ள 75 பாடசாலைகளில் 14 பாடசாலைகளும், யாழ் வலையத்திலுள்ள 119 பாடசாலைகளில் 11 பாடசாலைகளும், தென்மராட்சி வலையத்திலுள்ள 68 பாடசாலைகளில் 10 பாடசாலைகளும், வவுனியா வலையத்திலுள்ள 83 பாடசாலைகளில் 22 பாடசாலைகளும், மடு வலையத்திலுள்ள 41 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும், துணுக்காய் வலையத்திலுள்ள 54 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இதைவிட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஒருவரே ஆசிரியராகவும், அதிபராகவும் உள்ள 85 பாடசாலைகள் உள்ளன. இரு ஆசிரியர்களைக் கொண்ட 149 பாடசாலைகளும், மூன்று ஆசிரியர்களைக் கொண்ட 138 பாடசாலைகளும் உள்ளன. கல்வி என்பது வடக்கு கிழக்கில் நலிந்து சிதைந்து செல்லுகின்றது. இன்று வடக்கு கிழக்குப் பகுதியில் 8000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், 500 இற்கு மேற்பட்ட அதிபர்களும், 200-இற்கு மேற்பட்ட கல்விப் பணிப்பாளர்கள் இருந்த போதும் கல்விக்கான ஆசிரியர் பற்றாக்குறை மிகப் பெரியதாகி வருகின்றது.

மருத்துவத் துறையை எடுத்தால் என்றும் இல்லாத அவலத்தை யாழ் குடா சந்திக்கின்ற நிலையை ஒப்பிடும் போது, மற்றையப் பிரதேசங்களை நாம் கற்பனை பண்ணமுடியும். யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 7 ஆண்டுகளில் 6,480 பேர் உயிரிழந்துள்ளனர். மருந்துத் தடை, தமிழ் வைத்தியர்கள் மக்களின் வரிபணத்தில் படித்துவிட்டு மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு நாட்டை விட்டு ஓடுதல், புலிகளின் அதிகார அடக்குமுறைக்கு உள்ளாகி மருத்துவர்கள் வெளியேறுதல், பொதுவான கல்வி தர வீழ்ச்சி, சமூகப் பலவீனங்கள் என்பன உயிரிழப்புக்களை பலமடங்காக்கியுள்ளது. மலேரியா, புற்றுநோய், நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் மற்றும் வீதி விபத்துக்கள் என்பன என்றும் இல்லாத அளவில் மரண விகிதத்தை அதிகரிக்க வைத்துள்ளது. 1997-ஆம் ஆண்டு 820 பேரும், 1998-ஆம் ஆண்டு 883 பேரும், 1999-ஆம் ஆண்டு 875 பேரும், 2000-ஆம் ஆண்டு 770 பேரும், 2001-ஆம் ஆண்டு 932 பேரும், 2002-ஆம் ஆண்டு 1012 பேரும் 2003-ஆம் ஆண்டு 932 பேரும் உயிரிழந்துள்ளனர். உண்மையில் மருத்துவர் பற்றாக்குறையும், வசதி இன்மையும் மிக அவலமானதாக உள்ளது. உதாரணமாக யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் 2004 பெப்.1 முதல் 10நாள்களில் 6,605 சிகிச்சை பெற்றனர். ொருமளவில் சளி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றுக்கு நாள் ஒன்றுக்கு, யாழ் பிரதான மருத்துவமனைக்கு 1000 பேரளவில் சிகிச்சைபெற வருகின்றனர். இது 2003 ஜனவரி மாதத்தில் மட்டும் யாழ். போதனா மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் 24136 பேர் சிகிச்சைக்காக வந்தனர். நாளாந்தம் சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், நாள் கணக்காக ஏழை நோயாளிகளே வரிசையில் தூங்க வேண்டியுள்ளது.

இது இப்படி இருக்க, வடக்குகிழக்கில் 400 சுகாதார நிலையங்கள் சேதமடைந்துள்ளது. இதில் 49 முற்றாக இயங்க முடியாது போயுள்ளது. 15 ஆயிரம் கல்விக்கூடங்கள் முற்றாகத் தகர்ந்துள்ளது. 3,26,700 வீடுகள் முற்றாக அழிந்துள்ளது. 60 சதவீதமான வீதிகள், 10 புகையிரதப் பாலங்கள், 29



புகையிரத நிலையங்கள் முற்றாக அழிந்துள்ளது. இப்படி பற்பல. இந்நிலையில் வடக்கு கிழக்கு பகுதிகளை புனர்நிர்மானம் செய்ய 4593 கோடி ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில்

| | |
|---|---|
| **இடம் பெயர்ந்தவர் மீள் மிள்குடியேற்றம்** | **568 கோடி ரூபா** |
| சுகாதாரம் | 353 கோடி ரூபா |
| கல்வி | 205 கோடி ரூபா |
| வீடமைப்பு | 1005 கோடி ரூபா |
| உள்கட்டமைப்பு | 1651 கோடி ரூபா |
| விவசாயம் | 509 கோடி ரூபா |
| வீதி புனரமைப்பு | 191 கோடி ரூபா |
| நீர் மின்சக்தி | 111 கோடி ரூபா |

இந்தப் பணத்துக்காகப் புலிகளும் அரசும் ஏகாதிபத்தியங்களின் கால்களினை நக்கிப்பிழைக்க முனைகின்றனர். தேசம் தேசியம் என்பது வெறும் வேட்டாகவே உள்ளது. இதற்கு வெளியில் தமிழ் மக்கள் தமது சொந்த இருப்பிடத்தை, வாழ்வியல் சார்ந்த சுற்றுச்சூழலைக் கூட இழந்து நிற்கின்றனர். சுமார் 42260 ஏக்கர் விவசாய நிலம் அதிஉயர்பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் முடக்கப்பட்ட காரணத்தால் சுமார் 16 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 40 தொழிற்சாலைகள் இவ்வலையத்தினுள் முடக்கப்பட்டுள்ளமையினால் சுமார் 1700 தொழிலாளர் குடும்பங்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 82 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பயன்படுத்த முடியாத பாதுகாப்பு வலையமாகியுள்ளது. இதனால் 4,436 மீனவக் குடும்பங்கள் நேரடியாக பாதிப்படைந்துள்ளனர். பாதுகாப்புப் பிரதேசம் அல்லாத இடங்களில் பொதுமக்களின் 400 வீடுகளைப் படையினர் இன்னமும் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். மேலும் 290 பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் இருந்தும் படையினர் வெளியேறவில்லை என புள்ளி விபரங்களின் மூலம் அறியவருகிறது. யாழ் மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலையங்கள் காரணமாக 29,525 வீடுகள் பயன்படுத்த முடியாது போயுள்ளது. சுமார் 300 பாடசாலைகள் மற்றும் வழிபாட்டு இடங்களுக்குப் பொது மக்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. இருபத்தைந்திற்கும் அதிகமான முக்கிய வீதிகள் பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. பல ஆஸ்பத்திரிகள் முதல் மக்களின் வாழ்வோடு தொடர்புடைய பல கட்டிடங்கள் வரை பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் 3700 வீடுகளை இராணுவம் தனது பாவனைக்கு என ஆக்கிரமித்து வைத்துள்ளது. இதை ஆக்கிரமிப்பு இராணுவம் செய்கின்றது. என்றால், புலிகளோ தமிழ் மக்களின் பல ஆயிரம் வீடுகளை, சொத்துக்களை ஆக்கிரமித்துள்ளனர். இதைவிட முஸ்லீம் மக்களின் விவசாய நிலங்களை, குடியிருப்புகளைக் கூட புலிகள் ஆக்கிரமித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் இழந்த சொத்துகளின் பெறுமதி 11 கோடி டொலர் (1100 கோடி ரூபா) என மதிப்படப்படுகின்றது. வடக்கு கிழக்கில் புலிகள் முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்கள் என்று கூறியபடி நடத்திய, முஸ்லிம் விரோத நடவடிக்கையால் முஸ்லிம் மக்கள் 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தை புலிகளிடம் இழந்துள்ளனர். மொத்தம் 21614 குடும்பத்தைச் சேர்ந்த 1,02,867 நபர்களை வடக்கு கிழக்கில் இருந்து புலிகள் வெளியேற்றினர். அவர்கள் தமது சொந்த வீடு, நிலம், வியாபார நிலையங்கள் அனைத்தையும் புலிகளிடம் இழந்தனர். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் சொந்த 3,537 வீடுகளை முழுச் சொத்துடன் புலிகளிடம் இழந்தனர். அவர்கள் வசித்த 194 அரசாங்க வீடுகளையும், 6 பாடசாலைகளையும், 16 மத வழிபாட்டு இடங்களையும் கூட புலிகளிடம் இழந்தனர். இதைவிட வர்த்தகம், மீன்பிடி இழப்பும் பாரியது. இன்று 20 சதவீத வரியைப் புலிகள் முஸ்லிம் பகுதிகளில் தொடர்ந்து அறவிடுகின்றனர். இதில் இருந்து முஸ்லிம் பகுதிகளில் அடிக்கடி வன்முறைகள் நிகழ்கின்றன.

மக்களின் நலன்களில் சிறிதும் அக்கறையற்ற யுத்த வெறியர்களாலும், இராணுவ நலன் சார்ந்து அராஜக வழிகளைத் தமக்குச் சாதகமாக்கி சூறையாடுபவர்களாலும், அப்பாவி மக்கள் தமது பொருளாதார சமூக வாழ்வை இழப்பது அதிகரித்துச் செல்லுகின்றது. ஒரு போராட்டம் மக்களின் வாழ்வில் சுபீட்சத்தைக் கொடுக்கும் போது அடிப்படையில் அது முற்போக்கானது. மற்றைய நாட்டிடம் பிச்சை எடுத்தும், கடன் வாங்கியும் முன்னேற்றுவோம் என்பது ஏமாற்றுபவர்களின் அரசியல் வித்தையாகும். இதைத் தான் அரசாங்கம் செய்கின்றது என்றால், புலிகளும் தாமும் அவ்வழியே செய்வோம் என்று கொக்கரிக்கின்றனர். மக்களுக்கு சுபீட்சத்தைக் கொடுப்பதற்குப் பதில் அதுவே மக்களுக்கு எதிரானதாக மாறிவிடும் போது, அந்தப் போராட்டம் கேள்விக்குள்ளாகிவிடுகின்றது. சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களை ஒடுக்கி அவர்களை நலிவுற்றவர்களாக்கியது என்றால், அதற்கு எதிரான போராட்டம் அதில் இருந்து மீட்சியைக் கொடுக்க வேண்டும். ஆனால் எதார்த்தம் இரண்டும் தமிழ் மக்களை அக்கபக்கமாக ஒடுக்கி வருகின்றது. மக்கள் தமது சொந்த வாழ்வின் அனைத்து சமூக அடித்தளத்தையும் இழந்து விட்டனர்.

மக்களின் வாழ்வுடன் அன்னியமான போராட்டம் மக்களின் வாழ்வை நேரடியாகவே பல்வேறு துறைகளைச் சீரழிக்கின்றது. வறுமையை ஒரு போக்காக்கி உள்ளது. யுத்தமும், உலகமயமாதலும் மட்டகளப்பில் தாய்மையும், குழந்தை பிறப்பும் என்பதை, மரணத்தின் எல்லையில் ஊசலாடப் வைத்துள்ளது. இதன் அடிப்படையில் வெளியாகியுள்ள சில புள்ளி விபரங்களைப் பார்ப்போம்.

| வருடம் | 1987 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|
| சிசு மரணம் | 54 | 121 | 117 | 166 |
| தாயின் இறப்பு | 12 | 07 | 09 | 07 |
| இறந்த நிலையில் குழந்தை பிறப்பு | 71 | 138 | 167 | 145 |
| மொத்த இறப்பு | 137 | 266 | 293 | 318 |



மட்டகளப்பில் குழந்தையின் இறப்பு கடந்த 15 வருடங்களில் அண்ணளவாக மூன்று மடங்காகி உள்ளது. குழந்தைகளின் ஊட்டச்சத்து இன்மை பெருக்கெடுத்துள்ளது. குழந்தைகள் பாடசாலை செல்வது குறைந்து வருகின்றது. சிறுவர் உழைப்பு பெருகி வருகின்றது. சிறுமிகள் மேலான பாலியல் வன்முறை பெருகி வருகின்றது. குழந்தை உழைப்பு என்பது உயர் அந்தஸ்த்தில் உள்ளோரின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் ஊடகமாகியுள்ளது. பாடசாலைகளில் வன்முறை பெருகியுள்ளது. ஆசிரியர்கள் அதிபர்கள் இணைந்து பெண் குழந்தைகளைப் பாடசாலையில் பாலியல் ரீதியாக சுரண்டுவது அம்பலமாகியுள்ளது. வறுமை காரணமாக வேலைக்குச் சென்ற சிறுமியைப் பாலியல் ரீதியாகக் கற்பழித்த சொந்த கணவனை மன்னித்த மனைவி, சிறுமியின் பெண் உறுப்பில் சூடுபோட்ட சம்பவங்கள் கூட மட்டக்களப்பில் பதிவாகியுள்ளது. இவர்கள் சமூகத்தின் உயர் அந்தஸ்துடையவர்கள். இவர்கள் தமிழ் தேசிய வாதிகளின் தீவிர ஆதரவாளர்கள். இப்படிப் பல பாலியல் ரீதியான சம்பவங்கள் வெளியாகியுள்ளது. மேலும் ஆழமாகவே நலிந்து சிதைந்து வரும் ஏழைத் தமிழ் மக்களின் அவலம், கேட்பாரற்ற ஒரு சமூகப் போக்காக மாறிவிட்டது.

வடக்கு கிழக்கு சமூகமே அகதியாகி உள்ள நிலைமை என்பது, தனது சமூக இருத்தலின் மேலான கையாலாகாத் தன்மையை எதிரொலிக்கின்றது. அகதிகளுக்கான சர்வதேச அறிக்கை ஒன்றில் சொந்த வாழ்விடத்தை விட்டு 8 லட்சம் பேர் வெளியேறியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது. இந்தச் சமூகத்தின் சமூக இருப்பு என்பது, வரைமுறையற்ற வகையில் கேள்விக்குள்ளாகியுள்ளது. இவர்களின் நலன்களில் அரசும் சரி, புலிகளும் சரி அக்கறைப்படுவதில்லை. தத்தம் இராணுவ அரசியல் நலனுக்கு இசைவாக, இவர்கள் வெறும் கருவிகளாகவே பயன்படுத்தப்படுகின்றனர். அமைதி சமாதானம் என்ற பெயரில் யுத்த நிறுத்தம் தொடங்கியது முதல் இவர்களின் மீள்குடியேற்றம் என்பது வரை அனைத்தும் தேசியத் தலைவர்களின் வேண்டாவெறுப்பான ஒரு விடையமாகவே இருந்தது. மேலும் இது சர்வதேச நாடுகளின் விடையமாகியது. இதன் மூலம் சர்வதேச அமைப்புகள் மக்களுக்குள் ஆழமாக ஊடுருவும் ஒரு நெம்பு கோலாகியது. சர்வதேச அமைப்புகளின் தயவிலும் மற்றும் தன்னியல்பாகவும் மீள் குடியேற்றம் நடைபெற்றது. முதல் 18 மாதங்களில் 3,11,000 பேர் தமது பழைய இருப்பிடத்துக்குத் திரும்பியுள்ளனர். மீள்குடியேற்றம் ஒரு சுடுகாட்டின் மேலானதாகவே தொடங்கியது. இந்தச் சுடுகாடான வடக்கு கிழக்கில் 3,27,000 வீடுகள் சிதைந்துள்ள நிலையில் மீள் குடியிருப்பு என்பது வேதனையான ஒன்றாகவே தொடங்கியது. எந்த நிவாரணத்தையும், எந்தத் தேசிய வழிகாட்டுதலையும் தமிழ் தேசியத் தலைமைகள் வழங்கவில்லை. சிதைந்த தேசிய சுடுகாட்டில் அன்னிய நாட்டுப் பேய்களின் வழிகாட்டுதலுக்கே உட்பட்டுள்ளனர். நேரடியாக அன்னியனும், இனவாத அரசுக்கு ஊடாக அன்னியனும் வழங்கிய சில நிவாரணங்களான உணவு மற்றும் நிதியில் ஒரு பகுதியை கட்டாயமாகவே தமிழ்த் தேசியவாதிகள் சூறையாடி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தாண்டி மீள் குடியேற்றம் கூட ஆபத்தான ஒன்றாகவே உள்ளது. பலர் தொடர்ச்சியாக கண்ணிவெடி தாக்குதலுக்கு நாளாந்தம் உள்ளாகின்றனர். வடக்கு கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் உத்தியோக பூர்வமாக 10 லட்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது 20 லட்சத்தைத் தாண்டும் என்று மதிப்பிடப்படுகின்றது. உலகளவில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளில் இது கணிசமானது. 55 கண்ணிவெடிக்கு ஒன்று இலங்கையில் புதைக்கப்பட்டுள்ளது. உலகளவில் புதைக்கப்பட்ட மொத்த கண்ணிவெடிகள் 11 கோடிக்கும் மேலாகும். இதை அகற்ற 3300 கோடி டொலர் (330000 கோடி ரூபா) தேவை. ஒட்டு மொத்தமாகவே புதைக்கப்பட்டவற்றை அகற்ற 1100 வருடங்கள் தேவை. இலங்கையில் 2002 வரையான காலத்தில் 35,000 பேர் கண்ணிவெடிக்குப் பலியாகியுள்ளனர். 27,000 பேர் கால்களை அல்லது வேறு உறுப்புகளை இழந்துள்ளனர். காயம் அடைந்தவர்களில் 15 ஆயிரம் பேர் இராணுவ வீரர்களாவர். வடக்கு கிழக்கில் முழுமையாக கண்ணி வெடியை அகற்ற 20 வருடங்கள் தேவை. மொத்தமாக இவற்றை அகற்ற 6000 கோடி ரூபா தேவை. இந்த நிலையில் கண்ணிவெடியைத் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு அகற்ற 272 கோடி ரூபாவை பல்வேறு நாடுகள் வழங்கியுள்ளது. இந்த நிலையில் மக்கள் வாழ வழியற்ற நிலையில் இந்த கண்ணிவெடிகளின் மேல் குடியேறுகின்றனர். சமாதானம், அமைதி என்பது நாளந்தம் கண்ணிவெடி வெடிச் சிதறல்கள் மேல் தான் அரங்கேறுகின்றது. கண்ணிவெடியை அகற்ற சர்வதேச அமைப்புகள் கொடுக்கும் கூலியின் பெரும் பகுதியை புலிகள் பறித்து எடுக்கின்றனர். தர மறுத்தவர்களை கூட்டமாகவே வைத்து தாக்கப்பட்ட சம்பவங்களும் வெளிவந்துள்ளன. இந்த நிலையில் குறைந்த பட்சம் கண்ணிவெடி அகற்றலைக் கூட சுயமாகத் தேசியவாதிகளால் செய்ய முடியாது என்ற நிலையில், எப்படித் தான் தமிழ்த் தேசத்தை நிர்ணயம் செய்யப் போகிறார்கள்?

உண்மையில் இந்த வேதனைக்குரிய தமிழச் சமூகம், மத்தளம் போல் மோதப்படுவதன் ஊடாகவே இலங்கையின் ஒட்டுமொத்த அரசியல் ஜனநாயகத் தோற்றத்தில் பொம்மி நிற்கின்றது. சமூகமே புலம் பெயர்ந்து அகதியாகி மீள குடியேறத் துடிக்கும் தமிழ் மக்களின் வாழ்வோ என்றுமில்லாத வேதனைகளால் அல்லல் உறுகின்றது. சமாதானம், அமைதி மீண்டுவிடும் என்ற நம்பிக்கையில், அதை பலப்படுத்தும் எல்லாவிதமான மனித விரோதப் போக்கையும் கூட ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களின் தலைவிதி என்பது துயரமானது. யூனிசேவ் அறிக்கை ஒன்று வடக்கில் 69 சதவீதமான குழந்தைகள் அகதி முகாம்களில் வாழ்வதாக தெரிவித்துள்ளது. இந்த இளம் குழந்தைகளின் தலைமுறை வாழ்வு ஒரு சமூகப் போக்கின் வளர்ச்சிக்கே நேர் எதிராகவே தொடங்குகின்றது. அதுவும் யாழ் சமூகத்தின் நிலையே இது என்றால், மொத்த தமிழ் சமூகத்தின் வீழ்ச்சி என்பது பள்ளத்தில் உருண்டு ஓடுவதைத் தாண்டி எதுவும் இருக்கப் போவதில்லை.

இதன் துயரத்தைச் சில புள்ளிவிபரங்கள் மெய்ப்பிக்கத் தொடங்கிவிட்டது. 5வயது முதல் 18 வயதுக்குட்பட்ட 94 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலை செல்வதை இடைநடுவில் கைவிட்டுள்ளனர் என வடக்கு - கிழக்கு மாகாண



கல்வி அலுவலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வன்னி மாவட்டத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 20 சதவீதத்திற்கும் கூடுதலான புள்ளிகளைப் பெறுவதில்லை என யூனிசெவ் அறிவித்துள்ளது. வறுமை, இயலாமை, சமூக அடிப்படையற்ற அனாதை வாழ்க்கை, அரசியல் ரீதியான மிரட்டல் வாழ்வுமுறை என்பன, உயிர்த் துடிப்புள்ள எந்தக் கட்சியையும் நுனியிலேயே கிள்ளி எறிகின்றது. ஒரு சமூகத்தின் அடிப்படைக் கல்வியை இழப்பது, தமிழ் இனத்தின் அழிவை மேலும் துரிதமாக்கின்றது. யாழ்குடாவை எடுத்தால் மொத்த மக்களின் எண்ணிக்கையே மிகக் குறைவானது. இனப்பிரச்சனை தொடங்கும் முன் இருந்த மக்களின் எண்ணிக்கையை விடக் குறைவானது. யாழ்குடா நாட்டில் 2003-இல் 1,43,170 குடும்பங்களைச் சேர்ந்த 4லட்சத்து 99 ஆயிரத்து 195 பேர் வசித்து வருவதாக யாழ் செயலகப் பதிவுகளில் இருந்து தெரிய வருகின்றது. எண்ணற்ற தமிழ் மக்கள் காணாமல் போய் விட்டனர். இந்த மிகக் குறைந்த மக்கள் கூட வறுமையில் சிக்கிவிட்ட நிலையில், ஒரு பணக்காரக் கும்பல் மட்டும் திமிருடன் உருவாகி உள்ளது. அது எல்லாவிதமான மோசடியிலும் ஈடுபடுகின்றது. நலிவுற்ற சமூகத்திடமே பணம் கறப்பதை அடிப்படையாகக் கொண்ட கும்பல்தான் தமிழ்ச் சமூகத்தை வழிநடத்துகின்றது.

94 ஆயிரம் குழந்தைகள் வறுமை காரணமாகக் கல்வியை இழந்துள்ள நிலையில், யாழ் மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றில் பொறுக்கித் தின்னும் கும்பல் ஒன்று மாணவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு 15 ஆயிரம் ரூபா தரும்படி நிர்ப்பந்திக்கின்றனர். நிதி கோருவது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. இதை எதிர்த்து பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் கல்வித் திணைக்களத்துக்கே சென்று முறையிட்ட போது, தம்மையொன்றும் செய்யமுடியாது என்று கூறும் அளவுக்கு அதிகாரத் திமிர் நிறைந்த கும்பல் ஒன்று உருவாகியுள்ளது. ஆகக் குறைந்தது 3 ஆயிரம் ரூபா கட்டவேண்டும் என்று கோருவது அரசாங்கமல்ல. தமிழ் மக்களிடையே உருவாகியுள்ள திடீர் பணக்கார கும்பலே. இதில் தேசியம் பேசும் புலிகளும் இணங்கிப் போவது மட்டுமல்ல, தமிழ் மக்கள் என்று மூச்சிறைக்க கோஷம் போடும் பினாமிப் பல்கலைக்கழகம் கூட இந்த மனித விரோதக் கொள்ளைக்கு எதிராக மூச்சுவிடுவதில்லை.

## தமிழர் தாயகத்தின் பொருளாதாரம் என்ன?

உலகமயமாதல் என்ற கட்டமைப்பில் உள்ள பன்னாட்டு தேசங் கடந்த பொருளாதாரமே தமிழீழத் தேசியப் பொருளாதாரம் என்பதைப் புலிகள் நிறுவிவருகின்றனர். அண்மையில் புலிகளின் விழாக்கள் அனைத்தும், தேசங்கடந்த பன்னாட்டுப் பொருட்களின் விளம்பரங்களால் அலங்கரிக்கப்பட்டே நடத்தப்படுகின்றது. வன்னியில் அவர்கள் நடத்தும் பேச்சு வார்த்தை மேசைகள் கூட, பன்னாட்டுச் சந்தை பொருட்களின் விளம்பரப் பொருளால் அலங்கரிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக அண்மையில் மூன்றாவது தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவை புலிகள் 20.2.2004 அன்று கிளிநொச்சியில் நடத்தினர். அந்தத் தேசிய விழாவில் கொக்கோகோலா விளம்பரங்கள், புலிக் கொடியை விட பெரியளவில், புலிக் கொடியின் பின்னனியில் வடிவமைக்கப்பட்டிருந்தது. (பார்க்க 21.2.2004 தினக்குரல் பத்திரிகை) சாதாரண செய்திப் பத்திரிகையிலேயே இப்படங்கள் வெளியிடப்பட்டு இருந்தன. உத்தியோகபூர்வமற்ற வகையில் புலிகளின் ஆதரவுடன், தமிழீழத் தேசிய குடிபானம் கொக்கோகோலவாக மாறியுள்ளது. இதன் மூலம் தேசியக் குளிர்பானத்துக்கு, துரோகத் தண்டனையாக மரணதண்டனை வழங்கப்பட்டு விட்டது. இதை எதிர்த்து யாரும் உரிமை கோரவில்லை. இதற்காக வழமைபோல் யாரும் குரல் கொடுக்கவுமில்லை. புலிகள் பன்னாட்டுப் பொருட்களின் இடைத்தரகராக மாறிவரும் நிலையில், தேசியப் பொருளாதாரத்தின் எஞ்சிய மூச்சுகளும் சேடமிளுக்கத் தொடங்கியுள்ளது. புலிகளோ கொழும்புத் தரகர்களுக்குக் கீழ் இருப்பதை விட, நேரடித் தரகராக இருப்பதை உறுதி செய்யும் வகையில் தான் சிங்கள இனவாதிகளுடன் பேச்சு வார்த்தை என்று கூத்தை நடத்துகின்றனர்.

உலகத்தில் மிகத் தரமான ருசியான பழங்களை உற்பத்தி செய்யும் எம் மண்ணில், கிடைக்கும் பழங்களை தேசத்தின் மக்கள் உண்ணாது அவற்றை ஏற்றுமதி செய்யவும், அதில் உற்பத்தியாகும் குளிர்பானங்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. உலகத்திலேயே மிகக் கழிவான கொக்கோகோலாவை தமிழ் மக்கள் குடிக்க வைக்கும் புலிகளின் கொள்கை தேசிய கொள்கையாகியுள்ளது. இதனடிப்படையில் இயங்கும் பல்வேறு அமைப்புகள் வடக்கில் உற்பத்தியாகின்ற பலா, பப்பாளி, அன்னாசி மற்றும் கொடித்தோடை ஆகிய பழங்களை உற்பத்தியாளர்களிடம் இருந்து வாங்கி பதனிட்டு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென பழ உற்பத்தியாளர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்க, பழ உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட அமைப்புகளில் பதிவு செய்யக் கோரப்பட்டுள்ளது. இந்த மக்கள் விரோத நடவடிக்கையாக ஒருங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பிரதேச ரீதியாக வடமராட்சி - 'ஊற்று' நிறுவனமும், கோப்பாய் - இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள மக்கள் நலன்காக்கும் பிரிவும், நல்லூர் - சமூக அபிவிருத்தி மன்றமும், சங்கானை - சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும், தென்மராட்சி - அறவழிப் போராட்டக்குழு அலுவலகம் ஊடாக இந்த காட்டிக் கொடுப்பை ஏகாதிபத்தியத்துக்கு ஒழுங்கமைத்துத் தந்துள்ளனர். இப்படி பற்பல தேசிய உற்பத்திகள் சொந்த மக்களின் பாவனையில் இருந்து விலக்கப்பட்டு, வெள்ளையர்களின் நலனை உறுதி செய்கின்றனர். இதை இயற்கையான உணவு என்ற விளம்பரத்துடன் சந்தைப்படுத்திக் கொழுக்க ஏகாதிபத்திய மூலதனங்கள் இடைத் தரகர்கள் மூலம் களமிறங்கியுள்ளன. அதேநேரம் இயற்கை உணவு, குடிபானம் என்று விளம்பரம் செய்ய முடியாத வெள்ளை நாட்டு இரசாயனக் கழிவுகளை பளபளக்கப் பண்ணி, எமது தேச மக்களுக்கு தேசிய உணவாகத் தரப்படுகின்றது. தேசிய வீரர்கள் இதைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, கடை விரிக்கின்றனர்.



மறு பக்கத்தில் எம் மண்ணில் அன்னிய மூலதனம் கேட்பாரின்றி தாராளமாகப் புகுகின்றது. குடாநாட்டுக்கான மின்விநியோகத்தை 'அக்கிரிக்கோ' என்னும் பிரிட்டிஸ் நிறுவனம் அமெரிக்காவிடம் இருந்து அண்மையில் வாங்கியது. இதற்கு முன் ஒரு வருடமாக 'அல்ரெம்' என்ற அமெரிக்க நிறுவனமே மின்சாரத்தை வழங்கியது. வடக்குப் போக்குவரத்துத் துறையை அன்னியன் வாங்கியுள்ளான். இப்படிப் பற்பல. தேசிய வீரர்களின் சம்மதத்துடன், தியாகிகளின் பிணங்களின் மேலாக செங்கம்பளம் விரித்து அன்னியர்கள் வரவேற்க்கப்படுகின்றனர்.

## இனவாத சிங்கள இராணுவம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த முதல் ஒன்றரை வருட காலத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் படைகளை விட்டு ஓடியுள்ளனர். யுத்தத்தைச் செய்ய விரும்பாத ஒரு இராணுவம், எந்த தார்மிகப்பலமும் அற்ற நிலையில் ஆக்கிரமிப்பை விசித்திரமாகவே தக்கவைக்கின்றது. உண்மையில் இராணுவத்தை, புலிகள் திறந்தவெளிச் சிறையில் சிறை வகைப்பட்ட நிலையில் தான், இராணுவம் எதிர்ப்பு ஆற்றலைப் பெற்று, எதிர்த்து நிற்கின்றது. இலங்கை இராணுவத்தைச் சுற்றி இராணுவம் தப்பியோடாத வகையில் புலிகள் இருப்பதால், இராணுவம் கலைந்து செல்வதை தடுக்கின்றது. கலைந்து செல்லும் போதும் சரி, தப்பியோடும் போதும் சரி, புலிகள் அவர்களுக்கு மரணதண்டனை வழங்குவதால் இலங்கை இராணுவம் தற்காப்புக் கருதி எதிர்த்துப் போராடுகின்றதே ஒழிய, சிங்கள இனவாத உணர்வு பெற்றுப் போராடவில்லை. யுத்த நிறுத்தத்தின் பின்பு தப்பியோடக் கூடிய வழிகள் அனைத்திலும், இராணுவம் அன்றாடம் தப்பி ஓடுகின்றது. அமைதி, சமாதானம் பற்றிய பேச்சு வார்த்தை தொடங்கி பின்பு, நாள் ஒன்றுக்கு அண்ணளவாக 20 இராணுவத்தினர் படையை விட்டே ஒடுகின்றனர்.

இனவாத அரசு இராணுவத்தில் இருந்து இராணுவத்தினர் தப்பி ஓடுவதைத் தடுக்கவும், ஆள் பற்றாக்குறையைத் தவிர்க்கவும், சமாதானம் அமைதியின் பெயரில் முகாம்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளனர். வடக்கு கிழக்கில் இருந்த முப்படைகளினதும் பொலீஸாரினதும் முகாம்கள், பொலீஸ் நிலையங்கள், காவலரண்கள், வீதிச் சோதனைச் சாவடிகள், பதுங்குகுழிகள் என 1454 பாதுகாப்பு நிலைகள் இருந்தன. இவற்றில் 56 பாதுகாப்பு நிலைகளை உடன் அகற்றினர். இதன் மூலம் சொந்த நெருக்கடியை தவிர்த்துக் கொண்டனர். மேலும் இராணுவத்தில் சம்பளத்தை 30 சதவீதம் அதிகரித்ததன் மூலம், இராணுவத்தை விட்டு சிப்பாய்கள் ஓடுவதைத் தடுக்க முனைந்தனர். இராணுவத்தினரின் சம்பளத்தை 9,725 ரூபாவாக அதிகரித்தனர்.

ஆனால் இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பு நீண்ட நெடுங்காலமாகவே சிதைந்தே வந்தது. எதிரி பற்றிய புலிகளின் அரசியல் வக்கிரம்தான், இலங்கை இராணுவத்தைப் பாதுகாத்து வந்தது. இலங்கைப் படையில் இருந்து 60,000-க்கும் மேற்பட்டோர் கடந்த காலத்தில் தப்பியோடினர். தப்பியோடியவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

600 பேர் இராணுவ அதிகாரிகளாவர் இதன் மூலம் அரசுக்கு 390 கோடி ரூபா நேரடியான இழப்பாகியது. ஒரு இராணுவ சிப்பாயின் ஆரம்ப உடுப்புகள் மற்றும் அடிப்படையான செலவு மட்டும் 19,650 ரூபா. இராணுவப் பயிற்சிக்கு 15,000 முதல் 20,000 ரூபா செலவு செய்யப்பட்டது. அடிப்படையாக இராணுவ வீரனை உருவாக்க 69,903 ரூபா செலவு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு இராணுவ வீரனும் ஓடும் போது, இராணுவக் கட்டமைப்பு முழுமையாகவே சிதறுகின்றது. ஒப்பீட்டு அளவில் இதன் அழிவு எல்லையற்றது.

அரசின் அறிக்கையானது 1995-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரையான காலத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் உயிர் இழந்துள்ளனர். அத்துடன் இக்காலத்தில் சுமார் 3 ஆயிரம் படையினர் காணாமற் போயிருக்கின்றனர் எனவும், 28 ஆயிரத்து 500 படையினர் அங்கவீனர்களாகியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கின்றது. 1993-1996-க்கு இடைப்பட்ட காலத்தில் 1,800 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 1000 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகளிடம் இழந்தனர். ஒருபுறம் மரணம், தப்பியோடுதல், அங்கவீனமாதல் என்ற கட்டமைப்பு மிகப் பெரியது. அதாவது இலங்கை மொத்த இராணுவத்தின் பலத்தின் அளவுக்கு இணையான ஒரு இலங்கை இராணுவம் முற்றாக ஏதோ ஒரு விதத்தில் அழிந்துள்ளது. ஆனால் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது என்றால், அதற்கான அடிப்படை எதிர்த்தரப்பின் அரசியல், இராணுவ வழிகள் தான் காரணமாகும்.

## குளிர்காயும் சிங்கள இனவாதம்

அமைதி, சமாதானம் என்பது தொடரும் பட்சத்தில், இலங்கை இனவாத சக்திகளின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகிறது. இனவாதம் மூலம் அரசியல் பேசி பிழைத்த குழுக்களின், தலைவிதி தூக்கில் தொங்க வேண்டியதாகிறது. இது அரசு, எதிர்க் கட்சி என்ற இரு எதிர் தளங்களில் யார் இருந்தாலும், இதுவே அதன் சொந்தத் தலைவிதியாக இருக்கிறது. அமைதி, சமாதானம் என்பது உலகமயமாதல் திசையில் உறுதியாகி வருவதால், இனவாத சக்திகளின் கடைசி மூச்சுத் திணறல் புதிய அரசியல் நெருக்கடியாகியுள்ளது.

எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இனவாதத்தை புகையவிட்டு, அதில் குளிர்காயும் அரசியலானது உலகமயமாதலின் பல்வேறு நிர்பந்தங்களைக் கடந்து, அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. எதிர்க் கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி யும் எப்போதும் சிதைந்து செல்லும் கூட்டணியாக இணைந்து, இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தினர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய உடனேயே, இந்தியா உள்ளிட்ட அமெரிக்காவுடன் நேரடியாகவே பல பேரங்களை நடத்தினர். தாங்கள் நம்புவதாக கூறும் ஜனநாயகத்தை, கழுத்தில் வெட்டிச் சரித்தபடி இனவாதத்தை கிளறிவிட்டுள்ளனர். இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் ஒன்றினையும் நடத்துகின்றனர்.



இவற்றுக்குப் புலிகளின் மக்கள் விரோத அடிப்படைகளைத் தனக்குச் சாதகமாகக் கொண்டு குளிர்காயும் சிங்கள இனவாதம், சொந்த இராணுவ பலவீனங்களைக் கூட மேம்படுத்தப் புலிகளைச் சார்ந்தே உள்ளனர். புலிகளின் ஜனநாயக விரோதப் பண்பை, செயல்பாட்டை மூலதனமாக கொண்டே, சிங்கள இனவாதம் உலகைத் தனக்குப் பின்னால் திரட்ட முனைகின்றது. உண்மையில் இனவாதம் தனிமைப்பட்டு அழிந்து போக முடியாத வரலாற்றுப் போக்கை, புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கே ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் தனது சொந்த ஜனநாயக விரோதப் பாசிசப் போக்கை, இனவாத சக்திகள் மூடிமறைக்கின்றனர். அதைத் தேர்தல், ஜனநாயகம், பெரும்பான்மை என்ற வேடங்கள் மூலம் அலங்கரிக்கின்றனர். இனவாத யுத்தத்தைத் தொடர்வதன் மூலம், தமது அரசியலைத் தக்கவைக்கும் குறிக்கோளை முன்வைத்து களத்தில் இறங்கியுள்ளனர். இதே போன்று தமிழ் துரோகக் குழுக்களும் மற்றொரு தளத்தில் களத்தில் இறங்கியுள்ளனர்.

## தமிழ் துரோகக் குழுக்கள் அரங்கேற்றும் அரசியல் வக்கிரம்

தமிழ்க் குழுக்களின் துரோகம், பிழைப்பு அனைத்தும் புலிகளின் ஜனநாயக விரோத அரசியலில் இருந்து துளிர்க்கின்றது. இதன் மூலம் பலமான சர்வதேச அடித்தளத்துடன், இவை புனர்ஜென்மம் எடுக்கின்றது. தம்மைத் தாம் நியாயப்படுத்த, புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை அரசியலாக்கி முன்வைப்பது அதிகரிக்கின்றது. புலிகளுக்கும், துரோகக் குழுக்களுக்கும் இடையில் கொள்கை ரீதியான வேறுபாடுகளை அரசியல் ரீதியாக நுட்பமாக புரிந்து கொண்டால் மட்டும் இனம் காணமுடியம் என்ற நிலை உருவாகி வருகின்றன. சாதாரண மக்களுக்கு இரண்டுமே ஒன்றாகியுள்ளது.

அமைதி, சமாதானம் என்ற போர்வையில் புலிகள் கையாளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், வரிக் கொள்கைகள் இவற்றுக்கு எதிராக, பரந்த தளத்தில் உருவாகும் அபிப்பிராயத்தை துரோகக் குழுக்கள் தமதாக்கியுள்ளன. புலிகளுக்கு எதிரான அபிப்பிராயம் மற்றும் உணர்வு சார்ந்து துரோகக் குழுக்கள் என்றும் இல்லாத வகையில் பலமாகி நிற்கின்றது. மக்களின் உணர்வுகளை துரோகக் குழுக்கள் அறுவடை செய்கின்றன. இதைப் புலிகள் மக்கள் மேலான மிரட்டல் மூலம், அடக்கிவிட முனைகின்றனர். ஆனால் அமைதி, சமாதானம், உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் ஒரு அங்கமாகி விட்டதால், புலிகள் மேலும் மேலும் தனிமைப்படுவது அதிகரிக்கின்றது. புலிகளுக்கு எதிராக வெளிப்படையான செயல்தளம் யாழ் பல்கலைக்கழகத்தில் அன்றாடம் பிரதிபலிக்கின்றது. புலிகளுக்கு எதிரான அதிரடி பிரச்சார நடவடிக்கைகள் அன்றாட நிகழ்வாகியுள்ளது. மக்களின் சுயதீனமான (வரிக்கு எதிராக மின்பிடிக்க மறுத்தது, குழந்தைகளை கடத்துவதற்கு எதிரான போராட்டங்கள், வரி கொடுக்க மறுத்த போராட்டங்கள், பாலியல் குற்றங்களுக்கு எதிரான போராட்டங்கள் என பல புலிக்கு எதிராக சுயதீனமாக நடந்து வருகின்றது) சில நடவடிக்கைகளை விட, மற்றயவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப் பல்கலைக்கழகத் தொடர் போஸ்டர்கள் ஒட்டுதல், வன்னியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், வன்னியில் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் போன்றன) பின்னணி சக்திகள் பலமாக உள்ளது.

ஒட்டு மொத்தத்தில் துரோகக் குழுக்கள் புலிகளின் ஒவ்வொரு மக்கள் விரோதச் செயல்பாட்டையும் பயன்படுத்துகின்றனர். உண்மையில் டக்ளஸ் போன்ற பலரை, சமூகம் முழுக்கப் புலிகள் உருவாக்கி வருகின்றனர். மௌனமாகி நிற்கும் புலி விரோத உணர்வுடன், விதைக்கப்பட்டுள்ளவர்கள் பலர் சந்தர்ப்பம் கிடைத்தால், எதையும் புலிகளுக்கு எதிராகச் செய்யும் நிலையை அடைந்துள்ளனர். அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்புகள் நம் மண்ணில் நடந்தால், ஒரு பலம் வாய்ந்த பல நூறு டக்ளிஸ்டுகள் மண்ணில் புற்றீசலைப் போல் வெளிவருவார்கள். அது புலிகளின் பினாமியத்துக்குள் புளுத்துப் போய் கிடக்கின்றது. புலிப் பினாமியம் குத்துக் கரணம் அடிப்பதையே அரசியலாக கற்றுக் கொண்டுவிட்டது. அதற்கான சகல அடித்தளத்தையும் புலிகள் உருவாக்கிவிட்டனர். புலிகளின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடத்தைகள், அன்றாடம் இந்த உருவாக்கத்தை விரிவாக்கி வருகின்றது.

புலிகள் அல்லாத தரப்பு படிப்படியாக சிதைகின்றது. எல்லாம் டக்ளஸ் தரப்பு நிலைக்குச் சிதைந்து செல்லுகின்றது. புலிகளுக்கு எதிரான அனைத்தையும் ஆதரிக்கும் நிலைக்கு இது இட்டுச் சென்றுவிட்டது. பல பத்து எழுத்தாளர்கள், அறிவுத் துறையினர் என்று எங்கும் இந்தச் சிதைவு அவலமாகிவிட்டது. உண்மையில் புலிகள் அல்லாதவர்களுக்கு இடையில் ஒரு சுமுக உறவு காணப்படுகின்றது. புலி மற்றும் துரோகக் குழுவுக்கு எதிரான அணி மேலும் பலவீனமாகி வருகின்றது. புலிப் பினாமியமும், துரோகக் குழுவின் ஜனநாயக வேசமும் எல்லாவற்றையும் செரிக்கின்றது. அரசியல் மீட்சிக்கான பாதை துரோகம் அல்லது புலிகளின் பினாமியம் என்ற வழிக்குள் சிக்காது மீள்வது என்பது மிகக் கடினமாகிவிட்டது. இரு தரப்பும் தங்களைத் தக்க வைக்கும் அரசியல் விளக்கங்களை அரசியல் மயப்படுத்துகின்றது. இரண்டுக்கும் இடையில் தேசியப் பிரச்சனையில் தீர்வு ஒன்றாகி விட்டது. இவர்களுக்கிடையிலான முரண்பாடு என்பது புலிகள் அல்லாதவர்களை, தமக்கு சமமாக அங்கீகரிக்க மறுக்கும் உள்ளடக்கத்தில் இருந்து வெளிப்படுகின்றது.

துரோகக் குழுக்கள் அரசின் ஊடாக ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து நிற்கின்ற தீர்வை வைக்கின்றது. ஆனால் புலிகளோ அரசு அல்லாத ஏகாதிபத்தியத்தை நேரடியாகச் சார்ந்து நிற்றல் என்ற தளத்தில் நின்று, வரையறுக்கப்பட்ட வகையில் அரசுக்கு ஊடாகத் தீர்வை வந்தடைய விரும்புகின்றனர். இதன் மூலம் எதிர்த்தரப்பின் அரசியல் சங்கமம் ஒரே கொள்கையாகி வருகின்றது. ஈ.பி.டி.பி, ஆனந்த சங்கரியின் கூட்டணி, புளாட், ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி, ஈரோஸ் (சங்கர், ராஜி அணி) புலி எதிர்ப்பு அணி என்று ஆடு களத்தில் நிற்பவர்கள் அனைவரும், புலிகளின் அரசியல் தீர்வையே தமது தீர்வு என்கின்றனர். சிலர் அதைத் தமது தீர்வு என்று உரிமையும் கோருகின்றனர். இவர்கள் யாரும் மக்களின் உரிமை பற்றி பேசவில்லை. மக்களின் பெயரில் தமது உரிமை பற்றியே பேசுகின்றனர்.



தேர்தல் என்னும் அரசியல் களத்தில் இவர்கள் புலிகளுடன் முரண்பட்ட கோரிக்கையை வைக்கவில்லை. இதுவே சிங்கள இனவாதிகளும் செய்கின்றனர். எதிர்க்கட்சி, ஆளும் கட்சிக்கு இடையில் கொள்கை வேறுபாடுகள் இல்லை. எலும்பை யார் சுவைப்பது என்பதில், தமிழ், சிங்கள கட்சிகளுக்கிடையில் ஒரு போட்டி நடக்கின்றது. மக்களின் பெயரில் இவை அரங்கேறுகின்றது அவ்வளவே. மக்கள் நலனை முன்வைத்து யாரும் இன்று அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. மக்கள் நலனை உறுதி செய்யும், செயல் தளத்தில் இறங்கும் எந்த அரசியலும் இலங்கையில் இல்லை. மக்களை மந்தைகளாக மேய்க்கும் அரசியல், ஜனநாயகம் உரிமை போராட்டம் என்ற பெயர்களில் வேடமிட்டு ஆடுகின்றது. நாட்டை ஏகாதிபத்தியத்திடம் விற்றுவிடுவது என்பதில் யாருக்கும் கருத்து முரண்பாடில்லை. ஏகாதிபத்தியம் போடும் எலும்பை முழுமையாகக் கைப்பற்றுவதா அல்லது அதைப் பங்கிட்டுக் கொள்வதா? என்பதில், தமிழ், சிங்கள கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு இடையிலும், தமக்கிடையிலும் மோதிக் கொள்கின்றன. இதன் மூலம் மக்களை யார் அடக்கியாள்வது என்பதே தேசிய ஜனநாயக அரசியலாகிவிட்டது.

## புலிகளும் தமிழ் மக்களும்

புலிகளின் வரலாற்றில் அவர்களை முதன் முதலாகத் தமிழ் மக்கள் மிக நெருக்கமாகவே, சொந்த அனுபவவாயிலாகப் புரிந்து கொண்டுள்ளனர். மக்களை நேரடியாகப் பாதிக்கின்ற உடனடி நிகழ்ச்சி, பரந்துபட்ட மக்களை விழிப்படைய வைத்து விடுவதுண்டு. இது புரட்சிக்குரிய தயாரிப்பு காலங்களில் புரட்சியின் உந்து விசையாகின்றது. தமிழ் மக்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சியானது உடனடி நிகழ்வால் அல்ல, ஒரு குறுகிய கால நடவடிக்கையால் நடந்துள்ளது. அமைதி சமாதானம் என்பவை புலிகளுக்கு எதிரான மனஉணர்வை, தமிழ் மக்களின் உணர்வு மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 25 வருடப் போராட்டத்தில் அவர்களின் போலித்தனமான வேடங்கள் மக்கள் முன் அம்பலமானது, இந்த அமைதிக்குப் பின்னான காலகட்டத்தில் தான். மக்கள் ஒவ்வொருவரும், சுயமாக புலிகளை சொந்த அனுபவம் வயிலாக மிக நெருக்கமாகப் புரிந்து கொண்ட நிகழ்வு, முதன் முறையாக நிகழ்ந்துள்ளது. இந்த அனுபவம் துரதிருஷ்டவசமாகத் தவிர்க்க முடியாது, சொந்த இனத்தின் மொத்த நலனுக்கு எதிரானதாக உள்ளடக்கத்தில் பிரதிபலிக்கின்றது. எந்தப் பிரச்சார சமூக வடிவங்களையும் தாண்டிய மக்களின் சொந்த அனுபவமானது, புலிகளின் அரசியல் அழிவதற்குரிய சூழலை உருவாக்கியுள்ளது. தமது சொந்த அழிவுக்கே தாமே வித்திடும் மக்கள் விரோத நடவடிக்கைகளை, புலிகள் தமது சொந்த அரசியலாக வரித்து கொண்டுள்ளனர்.

ஆனால் இந்த அழிவு என்பது, புலிகளின் கொடூரமான நடைமுறைக்கு மாறாக, இருக்கின்ற மற்றொரு பிற்போக்கு அமைப்பைச் சார்ந்து வெளிப்படுவதை தமிழ் மக்கள் தெரிவுக்குள்ளாக்கி உள்ளனர். இந்த இடைவெளிதான், புலிகள் தப்பிப் பிழைக்கும் ஒரு இடைவழிப் பாதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கவைக்க முனைகின்றது. மக்களின் சமூக நலன் சார்ந்த மாற்றுத் தலைமைகள் அற்ற எமது சூனிய சுடுகாட்டுப் பிரதேசங்களில், சிங்கள இனவெறி அரசும் அவர்களின் கைக்கூலிகளாக இயங்கும் துரோகக் குழுக்களும் இதை அறுவடை செய்யத் துடிக்கின்றன.

மக்கள் இதை (புலிகளின் அரசியல் அறிவை) எப்படி எதனூடாகப் புரிந்து கொண்டனர்? இந்தப் புரிதலை துரிதமாக்கியது எது? அமைதி, சமாதானம் என்பது மக்களிடம் பணத்தை கொள்ளையிடுவதே. இதுவே புலிகளின் அரசியலாகியது. இதில் இருந்து இது (புலிகளைப் பற்றிய புரிதல்) தொடங்கியது. அத்துடன் தன்னியல்பாக தமது சமூகத் தேவைகளுடன் அன்றாடம் சமூகத்தில் இயங்கும் சமூக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி, அவற்றைப் பினாமியாக்கும் நடைமுறைகள் புலிகளை மேலும் தனிமைப்படுத்தியது. இவற்றுடன் கட்டாய ஆள்சேர்ப்பு; குழந்தைகளையும், இளம் தலைமுறையினரையும் பலக்காரமாக கடத்திய நிகழ்வு மக்களின் தெரிவுகளைத் துரிதமாக்கியுள்ளது. மக்களை ஏறிமிதிப்பதே அமைதியாகி, அதுவே சமாதானத்தின் அடிப்படைச் சின்னமாகியது. அச்சம், பீதியுடன் நடமாடும் மக்களின் நடைப் பிண வாழ்க்கை, தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் மனக் குமுறலைக் கொண்டே அமைதி சமாதானம் உறைந்து கிடக்கின்றது.

அமைதி சமாதானத்தின் பின்பாகப் புலிகளின் பிரதான நடத்தையாக எது முதன்மை பெற்றது? பணத்தை எப்படி மக்களிடம் இருந்து சூறையாடுவது என்பதே அது. இதன் மூலம் புலிகளின் பெரு மூலதனங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. நேரடி மற்றும் மறைமுகமான வழிகளில் வரியாகவும், புலிகளுக்கான கொடுப்பனவாகவும் கூட மாறியுள்ளது. இங்கு புலிகளுக்கான கொடுப்பனவு என்பது, பெரும்பாலும் மிரட்டலை ஆணையில் வைத்து கட்டாயப்படுத்தியே வசூலிக்கப்படுகின்றது. புலிகளின் வரிமுறை ஒரு பண்டத்தின் எல்லா செயல் தளத்திலும் கோரப்படுகின்றது. அதாவது மூலப் பொருளில் இருந்து விற்பனை வரை, இந்த உற்பத்தியின் சங்கிலித் தொடரின் எல்லாக் கண்ணியிலும் வரி கோரப்படுகின்றது, வசூலிக்கப்படுகின்றது. புலிகள் மற்றும் இராணுவத்தின் எல்லையோரங்களில் இராணுவக் கெடுபிடி சோதனைக்குப் பதில், புலிகளின் கெடுபிடி மக்களைக் கிலிகொள்ள வைத்துள்ளது. ஆட்கள் மேலான கண்காணிப்புக்கு வெளியில், பொருட்கள் மேலான கண்காணிப்பும், அதன் மீதான வரியும் இழுபறியான போராட்டத்தை எல்லையோரங்களில் அன்றாட நிகழ்வாக்கியுள்ளது. திட்டமிட்ட சீரான வரி முதல் விரும்பிய வகையில் வரி அறவிடல் என்பது அராஜக வழிகளில் அனைத்தும் எழுதப்படாத சட்டவிதியாக, ஆனால் அவர்களின் சொந்த நீதிமன்றச் சட்டத்துக்கே உட்படாத வகையில் திணிக்கப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளின் நடத்தைக்கு அவர்களின் சொந்தச் சட்டம் எப்படி செல்லுபடியாகதோ, அதே போல் புலிகளின் வரி அறவீட்டின் சரி பிழைகளையும் எதிர்த்து யாரும் வழக்காட முடியாது. இந்த அராஜக நிலை, எந்த சட்டம் ஒழுங்குக்கும் அப்பாற்பட்ட சூறையாடலாக, கொள்ளையாக உள்ளது. தமிழ் மக்கள் சிங்கள இனவாத



அரசுக்கு வரிகட்டிய பின்பு, புலிகளுக்கு மீளவும் வரிகட்டுவதன் மூலம் கடுமையான சமூகப் பொருளாதார பிரச்சனைக்குரிய வாழ்வை எதிர் கொள்கின்றனர். சிங்கள மக்களை விட இரட்டைச் சுமையை பொருட்களை வாங்கி நுகர்வதில் எதிர் கொள்கின்றனர். புலிகளின் வரி பல தளங்களில் பல கட்டங்களில் சூறையாடப்படுவதால், வாங்கும் திறனை மட்டும் இன்றி உற்பத்தி திறனையும் தமிழ் மக்கள் பாரிய அளவில் இழந்து விட்டனர். வாங்கி விற்கும் தரகு பொருட்களால் தேசிய உற்பத்தி அழிக்கப்படுவதுடன், தரகு பொருட்களுக்குப் பலகட்டங்களில் கொடுக்கும் வரியையும் தமிழ் மக்கள் மேல் சுமத்திவிடுகின்றனர். இதனால் வாங்கும் திறனை மக்கள் இழக்க, வாங்கும் திறனுள்ள சில கொழுத்த பணக்காரக் கும்பல் ஒன்று உருவாகியுள்ளது. இதனால் தமிழ் மக்களிடையே சமூக ஏற்றத் தாழ்வு அதிகரித்துள்ளது. வரிமுறையானது தரகுச் சந்தையை அடிப்படையாக கொண்டு இயங்குபவனை பாதிக்காது. அவன் எத்தனை வரி என்றாலும், அதை மக்களின் தலையில் சுமத்திவிடுவான். இது தரகு முதலாளித்துவச் சந்தைவிதி. தேசிய முதலாளி உற்பத்தி தளத்தில் அழிந்து விடுகின்றான். பரந்துபட்ட மக்கள் வாங்கும் திறனை இதனால் இழக்கின்றனர். வடக்கு கிழக்கில் என்றும் இல்லாத வறுமை தலைவிரித்தாடுகின்றது. இதற்கு சிங்கள இனவாதிகளின் இனவாத யுத்தம் ஒருபுறம் என்றால், மறுபுறத்தில் தமிழ்க் குறுந்தேசியவாதிகள் கொண்டுள்ள மக்களுக்கு எதிரான வக்கற்ற அரசியல் பொருளாதார கொள்கையும் ஒரு காரணமாகும்.

இந்த வக்கற்றப் பொருளாதார, அரசியல் கொள்கையை அவர்கள் வெட்கமின்றி மேடை ஏறிப் பேசுகின்றனர். பாலகுமார் யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையொன்றில் ".. எமது இராணுவச் சமநிலையைப் பேணுவதற்கும் போரில் அங்கவீனமான எமது போராளிகளைப் பராமரிப்பதற்கும் உங்களுக்காகத் தமது உயிரை ஈந்த மாவீரர்களின் குடும்பங்களின் எதிர்கால வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் நிதி முக்கியமானது. அதற்காகவே வரி அறவிடுகின்றோம். மேற்படி எமது தேவைகளை மேற்கொள்ள எமக்கு ஏற்படும் செலவு கணக்கிட்டுவிட முடியாது. எண்ணில் அடங்காதது. இதனை எமது மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். புலிகள் எதற்காக வரி அறவீடு செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" என கூறியுள்ளார். நல்ல வேடிக்கையான ஒரு உரை. தங்களைத் தாங்கள் நியாயப்படுத்த வேண்டுமானால் இந்த உரை உதவலாம்.

மக்களிடம் வரி அறவிடுவது அவசியம் என்றால், மக்கள் எங்கிருந்து எப்படி வரிக்கான பணத்தைப் பெற முடியும்? வரி பற்றி விளக்கும் தேசியத் தலைவர்களே, உங்கள் தீர்க்கத் தரிசனமிக்க தேசியத் தலைவரிடம் கேட்டுச் சொல்லுங்கள் ஐயா. மக்கள் வரிக்கான பணத்தை எங்கிருந்து எப்படி பெறுவது என்று? சிங்கள இனவாத அரசு தமிழ் மக்களை ஒடுக்குகின்றது என்பது நீங்களும் சொல்வது தான். அந்த ஒடுக்குமுறையில் வாழும் மக்கள் வரி கட்ட பணத்தை எங்கிருந்து எப்படித் திரட்டுவது? சிங்கள இனவாத அரசை விடுவோம், மக்கள் உங்களுக்கு வரி கட்டுவதற்கு, நீங்கள் இந்த மக்களுக்காக என்ன செய்தீர்கள்? "உங்களுக்காக தமது உயிரை ஈந்த மாவீரர்கள்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடம் குறிப்பிடும் நீங்கள், மக்களுக்காக என்ன செய்தீர்கள் என்று கூறுங்கள்? சிங்கள இராணுவத்திடம் இருந்து பாதுகாப்பைப் பெறுவது மட்டும் தான் உங்கள் பொறுப்பு என்றால், பொருளாதாரப் பண்பாட்டுக் கலாச்சாரத் துறையில் மக்களை நிர்வணமாக்குகிறது தேசியம். இதற்கு யார் பொறுப்பு? அதைத்தான் இன்று வடக்கு கிழக்கில் வீரமாக செய்து வருகிறீர்கள். இதைத் தான் சிங்கள இனவாதிகளும், ஏகாதிபத்தியமும் கைதட்டி வரவேற்கின்றனர்.

மனிதனிடம் பணம் எப்படி வருகின்றது? வெறும் பேப்பர் பணமாக வரும் ஒரேயொரு வழி உழைப்புதான். உழைப்பு தான் அனைத்தையும் படைக்கின்றது. இதை நீங்கள் எப்போதும் என்றும் ஏற்றுக் கொண்டது கிடையாது. மனித உழைப்பு இன்றி பணம் வராது. உழைப்புத் தான் பணமாகின்றது. மனித உழைப்பை வாங்கி விற்கவும், உழைப்பை விபச்சாரம் செய்யவும், உழைப்பைக் கற்பழிக்கவும், உழைப்பைத் தரகு பண்ணும் ஒரு இழிதொழிலைத் தேசியமாக்கி, புலிகளாகிய நீங்கள், அதைப் பல ஆயிரம் தியாகங்கள் மேல் வெட்கம் மானம் இன்றி அரங்கேற்றி வருகிறீர்கள். இதற்குள் தான் தமிழ்த் தேசிய அரசியலை விபச்சாரம் செய்கிறீர்கள். இப்படி மக்களின் உழைப்பை விபச்சாரம் செய்ய நிர்ப்பந்தித்த பின்பு, கிடைக்கும் அற்பக் கூலிப் பணத்தையும் வரியாக தா என்று கோரும் உரைகளும், நியாயப்படுத்தலும் தேசிய அரசியலாகிவிடுகின்றது. மக்களின் அற்பக் கூலி அவர்கள் வாழப் போதுமா என்று ஒரு கணம் கூட நீங்கள் சிந்தித்தது கிடையாது. உங்கள் மேதகு தேசியத் தலைவர் இதைப் பற்றி எப்போதாவது சிந்தித்து, அந்த மக்களின் விடுதலைக்குத் தலைமை தாங்கி வழிகாட்டிச் செல்லுகின்றாரா? இல்லை ஒரு நாளும் இல்லை. ஆனால் அந்த மக்களிடம் பணம் அறவிடுவது மட்டும் நடக்கின்றது. இது நேரடியாக முடியாவிட்டால், மறைமுக வரி மூலம் வரி அறவிடுவது மட்டும் தொடருகின்றது.

அதாவது உழைக்கும் மக்களிடம் பணத்தைப் பெறும் முன்பும் பின்பும், அவர்களின் நலனில் அக்கறைப்பட்டது கிடையாது. அவர்களின் மேலான அக்கறைக்கு வெளியில், அந்த மக்களின் உழைப்பு எந்த உற்பத்தி மீது இருந்ததோ, அதைப் பாதுகாத்தீர்களா என்றால் அதுவுமில்லை. மக்களின் உற்பத்தி மூலங்களையும், உற்பத்தித் திறனையும் உங்கள் கொள்கையால் அழித்து வந்தீர்கள், அழித்து வருகின்றீர்கள். வரி ஒருபுறம் என்றால், நடைமுறையில் தரகுப் புலிகளாகி மக்களின் கழுத்தில் கையை வைத்துவிட்டீர்கள். தமிழ் மக்களின் அடிப்படைத் தேவை மீதான மொத்த விநியோகஸ்தராகவே மாறி வருகின்றீர்கள். இதன் மூலம் சிறந்த கொள்ளைக்காரத் தரகராக இருக்கவும், சந்தை விலை தீர்மானிக்கவும் தொடங்கி விட்டீர்கள். இதைச் சொந்த உற்பத்தி சார்ந்து செய்வதை விடவும், வாங்கி விற்கும் தரகனாக இருப்பதன் மூலம் இருந்த இடத்திலேயே அதிக லாபம் பெறும் கொள்கை அமுலுக்கு வந்துள்ளது. சுயமான தேசிய உற்பத்தி, புலிகளின் தரகுச் சந்தை விலையை ஆட வைப்பதை சகித்துக் கொள்ள புலிகள் தயாராக இல்லை. தேசிய உற்பத்தியை முடமாக்க, சிறப்பு வரியை விதித்து அதை முடக்குவது அண்மையில் அதிகரித்துள்ளது. தமது சொந்த சந்தையை ஏகபோகமாக்க, போட்டியாளர் மீது மட்டுமின்றி, உற்பத்தியாளர் மீதும் கடும் வரிமுறை அமுல் செய்யப்படுகின்றது. இதன் மூலம் உற்பத்தித் துறையை முடக்கி, உற்பத்திதுறையைக் கூட கேட்பாரற்ற விலையில் அபகரிப்பது, இதன் முடிவில் சாத்தியமாகிவிட்டது. உற்பத்தி நடந்தாலும் நடக்காவிட்டாலும் வரி என்பது மற்றொரு கொள்கை. இதன் மூலம் உற்பத்தித்துறை மலிவாகக் கொள்ளை இடப்படுகின்றது.



கடும் வரியுடன், மக்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி சந்தையைக் கைப்பற்றும் வடிவிலும் கூட அமைதியும், சமாதானமும் ஒரு படி பாய்ச்சல் பெற்றுள்ளது. இயல்பான உற்பத்தியால் உருவாகும் மக்களின் சந்தை விலையைக் கட்டுப்படுத்த, சந்தையில் பொருட்களை குவிக்கின்றனர். அதேநேரம் சிங்களப் பகுதியில் இருந்த பொருட்களை வாங்கி வருவதுடன், சந்தை விலையைக் கட்டுப்படுத்தி விவசாயத்தை முடமாக்குவதும் தொடங்கியுள்ளது. ஒரு பொருளின் பொதுவான உற்பத்தி விலையை விடக் குறைவான உற்பத்தி விலையில் உற்பத்தி செய்யும் புலிகள், சந்தையைக் கட்டுப்படுத்தி மக்களின் உற்பத்தியை முடக்குகின்றனர். அதாவது புலிகளின் உற்பத்தி வரிக்கு அப்பாற்பட்டது மட்டுமின்றி, பல தொடர் சலுகைகளைக் கொண்டது. மறு தளத்தில் உற்பத்தி விலையானது வரிகளால் தமிழ் பகுதியை விட சிங்களப் பகுதியில் குறைவாக இருப்பதால், சிங்கள பகுதியில் இருந்து ஏகபோகமாக அவற்றை வாங்கி, அவைகள் தமிழ் விவசாயிகளுடன் போட்டியாகப் புலிகளால் விற்கப்படுகின்றது. தரகு வர்த்தகத்தை மேல் இருந்து பறிப்பதுடன், அதற்கு போட்டியான அனைத்தும் திட்டமிட்டே வரிமுறை மூலம் கட்டுப்படுத்தி முடக்கப்படுகின்றது. பொருட்களின் தேவையை நிறைவு செய்யும் சந்தைக் கொள்கை உடனடியான லாபத்தை திரட்டித் தருவதால், தேசிய உற்பத்திகள் முடமாக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக வடக்கு கிழக்கில் கொக்கோகோலாவை ஏகபோக விநியோகத்தை, அதிக வரி மூலம் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். இதன் மூலம் உள்ளூர் சோடா உற்பத்தியைப் புலிகள் ஊக்குவிப்பர் என்பது யாரும் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியுமா? சிறந்த பழப் பானங்களை ஏற்றுமதி செய்யும் கொள்கை அங்கீகரிக்கப்பட்டு, கழிவான கொக்கோகோலா சந்தையில் ஆதிக்கம் பெறுகின்றது. இப்படி புலிகளின் பொருளாதாரக் கொள்கை, மக்களின் உற்பத்தி மையங்களையும் உழைப்பின் திறனையும் இல்லாததாக்கின்றது. மக்களைக் கொள்ளையிடும் மறுதளத்தில் மீண்டும் மக்கள் தமக்கு வரி கட்டவேண்டும் என்பது புலிகளின் நவீன அரசியல் அகராதி.

சாவகச்சேரியில் கள் உற்பத்தி அமைதி சமாதானத்தின் பின் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. 1999-ஆம் ஆண்டில் 1,847 அங்கத்தவர்கள் கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். இது 2003-இல் 300-க்கும் குறைவானதாக மாறிவிட்டது. கள் உற்பத்தி குறைந்துடன், 23 கள்ளுத் தவணைகளில் 17 தவணைகளே இயங்கும் நிலைக்கு இன்று மாறிவிட்டது. தேசிய உற்பத்தியின் அழிவு, அமைதி சமாதானத்தின் பின் வேகம் கண்டு வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 1997-இல் யுத்த நெருக்கடிகளைக் கடந்து 3,101 சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள் இருந்தன. இதில் சுமார் 10,000 பேர் தொழில் வாய்ப்புகள் பெற்று இருந்தனர். ஆனால் தற்போது இந்தத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளில் பெரும்பாலானவை அமைதி சமாதானத்தின் பின்பு முடங்கி அழிந்து வருகின்றது. அமைதி சமாதானம் என்பவை சிறு தொழில்துறையைப் பெருக்கவில்லை. அதை முடக்கி அழித்துள்ளது. இதற்கு புலிகளின் வரி அறவீட்டுக் கொள்கை பிரதானமானது என்றால், தரகு வர்த்தகமோ அதற்கு இணையாக அழித்து வருகின்றது. 10,000 பேரின் வாழ்க்கை நரகமாகி வருகின்றது. இவர்களிடம் வரியை நேரடியாக அறவிடுவது நெருக்கடிக்குள்ளாகவே, மறைமுக வரிகளோ பொருட்கள் மேலானதாக மாறிவருகின்றது. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் 22-12-2003 முதல், பாணின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. இந்த ஒரு ரூபா வரி புதிதாகப் புலிகளுக்காக மக்கள் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதில் மாவுக்கு முன் கூட்டிய வரி, மாவை ஏற்றிவரும் வாகனத்துக்கு வரி, அதை ஏற்றி இறக்கும் தொழிலாளிக்கு வரி, பாணை உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு வரி என எல்லா சங்கிலி இணைப்பிலும் வரி முறை காணப்படுகின்றது. தற்போது ஒவ்வொரு பாணுக்கும் ஒரு ரூபா வரி. முன்னைய மன்னர் சமுதாயங்களில் இருந்து, இன்னும் வரிவிதிக்கப்படாமல் எஞ்சி இருப்பது ஆள்வரியும், முலை வரியும் தான்.

புலிகள் இயக்கத்துக்கு மாதாந்தம் 1,5 கோடி ரூபா வரி கிடைப்பதாகக் கூறுகின்றனர். இது மிகக் குறைவானத் தொகையாகும். வரி எப்படி அறவிடப்படுகின்றது என்பதற்கு, வெளிவரும் சில உதாரணங்களைப் பார்ப்போம். மீளக்குடியமர்வு ஊக்குவிப்புக்காக ஏகாதிபத்தியத் துணையுடன் அரசினால் வழங்கப்பட்ட 25,000 ரூபா நிதியில், 5,000 ரூபாவை புலிகள் பறித்தெடுக்கின்றனர். கடின உழைப்பாக மரமேறி கிடைக்கும் ஒரு போத்தல் கள்ளுக்கு, இரண்டு ரூபா வீதம் வரி அறவிடப்படுகின்றது. இதனால் இந்த உற்பத்தி முடங்கி வருகின்றது. மரத்தில் இருந்து விழுந்தவனை, மாடு ஏறி மிதித்த கதையே இங்கு நடக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் ஒவ்வொரு டி.வி.எஸ். மோட்டார் சைக்கிள்களுக்கும் 1000 ரூபா வீதம் விற்பனையகத்தில் புலிகள் வரி அறவிடுகின்றனர். இதைவிட இந்த மோட்டார் சைக்கிள்களுக்கு கொழும்பு முகவரிடமிருந்து, 1000 ரூபா வீதம் வரி அறவிடப்படுகின்றது. மொத்தத்தில் 2000 ரூபா வரி. இதை விட ஏற்றி இறக்கும் லொறிக்கு வரி, கூலிக்கு வரி என்று பல உண்டு. யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்படும் ஹீரோ ஹொண்டா ரக மோட்டார் சைக்கிள்களுக்கு 7.5 சதவீத வரி. 40,000 பக்கற் சீமெந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வரும் போது, சுமார் 2 லட்சம் ரூபா வரி வசூலிக்கப்படுகின்றது.. யாழ்ப்பாணத்திற்கு விறகு எடுத்துச் செல்லும் லொறிக்கு 36,000 ரூபா முதல் 40,000 ரூபா வரை வரி. இது கடந்த ஐப்பசிக்கு முன் 33,000 ரூபா முதல் 35,000 ரூபாவாக இருந்தது. கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் உள்ள வர்த்தக சந்தையில், வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் ஒவ்வொருவரிடம் இருந்தும் தினமும் புலிகள் 60 ரூபா அறவிட்ட புலிகள், தீபாவளி அன்று 250 ரூபா அறவிட்டனர்.. இதற்கு எதிராக வியாபாரிகள் சங்கம் போராட்டம் ஒன்றை நடத்தியது.

நல்லூரில் இருக்கும் ஆர்.வி.ஜீ. பீடித் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், புலிகள் சுமார் 50 லட்சம் ரூபாவை வரியாக அறவிடுகின்றனர்.



2 பவுசர்களில் தினமும் வடக்குக்கு எண்ணை விநியோகம் செய்யும் ஏ.என்.ரி நிறுவனத்துக்குக் கூட புலிகள் வரி அறவிடுகின்றனர். ஒவ்வொன்றும் சுமார் 33,000 லீற்றர் கொள்ளளவுடைய இந்த பவுசர்கள் லீற்றருக்கு ரூபா 9.50 சதப்படி புலிகள் வரி அறவிடுகின்றனர். ஒரு பவுசரின் மூலமாக மட்டும் தினசரி 3,13லட்சம் ரூபா புலிகளுக்கு வரியாகக் கிடைக்கின்றது. யாழ்ப்பாணம் கொழும்பு விமானச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு விமான நிறுவனத் திடமும் கூட வரி அறவிடப்படுகின்றது. இவ்வகையில் 2002 டிசம்பர் முதல் 2003 மே மாதம் வரை எக்ஸ்போ நிறுவனம் 91 லட்சம் ரூபாவையும், செரண்டிப் நிறுவனம் 29 லட்சம் ரூபாவையும், லயன் எயார் நிறுவனம் 3,5 லட்சம் ரூபாவும் புலிகளுக்கு வரியாகச் செலுத்தினர். இப்படி பற்பல வரி அறவிடப்படுகின்றது.

யாழ் நடை பாதையோரங்களில் உள்ள கடைகளிடமிருந்து புலிகள் பெற்று வந்த வரியான 2500 ரூபாவை அண்மையில் 3500 ரூபாவாக உயர்த்தினர். இதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகியது. கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர் குழுக்கள் காதலர்களின் ஒழுக்கம் பற்றிக் கேட்பதுடன், அவர்களின் நடத்தையில் சந்தேகத்தை தெரிவித்து அதற்கு 1000 ரூபா அபராதம் விதிக்க முனைகின்றனர். புலிகளின் சோதனைச் சாவடிகளில் பொருட்களைப் பரிசோதனைக்காக இறக்கி ஏற்றும் தொழிலாளர்களின் கூலியில் நாற்பது ரூபா வீதம் புலிகள் வரி அறவிடுகின்றனர். அதே நேரம் சோதனை என்ற பெயரில் ஹன்டருக்கு 300 ரூபாவும், லொறிக்கு 200 ரூபாவும், எல்ப் ரக லொறிக்கு 100 ரூபா வீதம் புலிகள் வாகன உரிமையாளர்களிடமிருந்தும் அறவிடுகின்றனர். வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா கூட்டுறவுச் சங்கம், செட்டிக்குளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் ஊடாக சமுர்த்தி நிவாரணமாக வழங்கப்படும் அரிசியை கிலோ 26 ரூபாவிலிருந்து 28 ரூபாவாக உயர்த்தி விற்பனை செய்கின்றனர். இரண்டு ரூபாவை புலிகளின் வரியாக அறவிடுகின்றனர். மட்டக்களப்பு மாநகரச் சபை மக்களிடமிருந்து அறவிடப்படும் சோலைவரியைப் புலிகள் உயர்த்தியுள்ளனர். உதாரணமாக 20பேர்ச்சஸ் நிலப்பரப்பில் அமைந்த வீட்டிற்கு 320ரூபா மட்டும் அறவிட்ட நிலையில், புதிய ஆண்டில் 2,250 ரூபாவாக அறிவிக்கப்படவுள்ளது. மிகுதிப் பணம் புலிகளுக்கு வழங்கப்படுகின்றது. சண்டெல் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளும் புதிய தொலைபேசி இணைப்புகளுக்கு 24,900 ரூபாவை அறவிடுகின்றது. இதே நிறுவனம் கொழும்பில் புதிய இணைப்புகளுக்கு 15,900 ரூபாவே அறவிடுகின்றது. இதில் ஒரு பகுதி புலிகளுக்குச் செல்லுகின்றது. யாழ்குடா நோக்கி பறக்கும் விமானத்தில் பயணம் செய்யும் ஒவ்வொரு பயணியிடமும், முன் கூட்டியே ரிக்கற் (Ticket) மூலம் வரி அறவிடப்படுகின்றது. வரி எல்லாக் கட்டமைப்பிலும், ஏன் கொழும்பில் வைத்துக் கூட முன் கூட்டியே அறவிடப்படுகின்றது. இவைகள் எல்லாம் கசிந்து வரும் ஒரு சில உதாரணங்கள். வரியை மறைமுகமாக அறவிடுவா புலிகள் நிறுவனப்படுத்தி வருகின்றனர். இதைவிட எல்லா அபிவிருத்திக் கட்டுமானங்களிலும், யுத்த நிவாரணங்களிலும் கூட புலிகளுக்கு ஒரு தொகையை அறவிடுகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் நிரந்தரமான கட்டுமானப் பணிகளில் கூட ஒரு பகுதியை அறவிடுவது என்பது, கட்டுமானத்தின் உறுதியை கேள்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளாக்கி உள்ளது. மருத்துவமனை, வீதி, பாலங்கள், குளங்கள் போன்ற கட்டுமானத்தில் ஒரு பகுதி நிதியைப் புலிகள் அறவிடும் போது, அவற்றின் ஆயுள் எண்ணப்படும் ஒரு நிலைக்குச் சென்று விடுகின்றது. இதைவிட கட்டுமான முதலாளி முதல் தொழிலாளி வரை தனி வரி உண்டு. புலிகளின் கட்டுமானம் மற்றும் நிர்மாணங்கள் பற்றிய அரசியல் கொள்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அமைதி சமாதானம் வரியாகியதால் கடுமையான எதிர்ப்பு பரந்தளவில் புகையத் தொடங்கியுள்ளது.

எந்தச் சட்டத் திட்டத்துக்கும், அவர்களின் சொந்தச் சட்டத் திட்டத்துக்கே வரிபற்றி தீர்ப்புக் கூற முடியாத நிலையில், தாம் விரும்பியபடி நிர்ணயம் செய்யும் வரியே இறுதியானது என்ற நிலையில் ஒரு மோசடியைச் செய்தனர். சில பொருட்களுக்கு சில சலுகைகளை வழங்கவும், வரியைக் கூட்டவும் செய்தனர். இதன் மூலம் வரியை இல்லாததாக்கி விட்டதாகப் பினாமிகள் மூலம் ஒப்பாரி வைத்தனர். வரிக் குறைப்பு என்ற ஒன்றைச் சில பொருட்களாக்குச் செய்து விட்டு, உலகறிய அதைப் பிரகடனம் செய்தனர். இதனால் தமக்குக் கடும் நட்டம் ஏற்படுவதாக வேறு கூறினர். புலிகளின் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி இந்த வரிக் குறைப்பு மூலம் தமக்கு மாதாந்தம் 80 லட்சம் ரூபா வீதம், வருடாந்தம் சுமார் 10 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்படுவதாக கூறியதுடன், மக்களுக்காக இந்த இழப்பை தாம் ஏற்றுக்கொள்வதாக கூறி ஒரு மோசடியை அரங்கேற்றினார். ஏதோ புலிகள் தாங்கள் உழைத்து அதை மக்களுக்குத் தியாகம் செய்தது போல் ஒரு மோசடியை அரங்கேற்றினர். மக்களின் பணத்தை அவர்களிடம் (மக்களிடம்) இழப்பது தமக்கு (புலிகளுக்கு) நட்டமாம். இது தான் தேசியம். "நம்புங்கள் தமிழீழ மக்கள் சுபிட்சத்தை புலிகளின் தலைமையில் காண்பார்கள் என்று"!

இராணுவ எல்லையைத் தாண்டிய ஒவ்வொரு கிராமப்புறத்திலும் ஒவ்வொரு வீட்டிலும், எங்கு, எதை, எப்படி, புடுங்குவது? என்பதில் ஒரு புதிய சமூக கண்காணிப்பு முறை வடக்கு கிழக்கில் உருவாகியுள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உணவு பார்சல் விற்றுப் பிழைக்கும் ஏழைகளிடம் கூட, சோற்றுப் பார்சலுக்கு கூட வரி அறவிட புலிகள் முனைகின்றனர். ஆனால் அந்த அரிசிக்கும், கறிக்கும், ஏன், அதன் உற்பத்திக்கே கூட முன் கூட்டிய பல வரிகள் கட்டப்பட்ட நிலையில், அதை சமைத்து உண்பதற்கும் கூட வரி. இது புலிகளின் சமூக நியதியாகியுள்ளது. எங்கும் எதிலும் வரி. தூணிலும் துரும்பிலும் கடவுள் இருக்கின்றான் என்றது போன்று, எங்கும் எதிலும் வரி அறவிடுவது என்பது புலிகளின் புதிய போராட்டமாகியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்கை என்பது, புலிகளுக்கு வரி கட்டுவதைத் தாண்டி இது வரை எதார்த்தத்தில் விளக்கம் பெறவில்லை. சிறிலங்கா இனவெறி இராணுவமும், குறுந்தேசியத் தமிழ் இராணுவமும் சண்டை செய்யாது இருக்கவும், மக்களை வேட்டையாடிக் கொல்லாது இருக்கவும், மக்கள் தமது உழைப்பில் ஒரு பகுதியை லஞ்சமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. அமைதி, சமாதானத்தின் இயல்புத் தன்மை இதைத் தாண்டி, எந்த விளக்கமும் அற்றுப் போயுள்ளது. மறுதளத்தில் தேசிய வளங்களை உலகமயமாக்குவதை அனுசரிக்கக் கோருகின்றது.



உழைக்கும் மக்கள் தமது சொந்தக் கோரிக்கைக்காக போராடிய போது, அதையும் மிரட்டி பணிய வைத்த சம்பவம் ஒன்று அண்மையில் சந்திக்கு வந்தது. இலங்கை சுகாதாரத்துறை ஊழியர்கள் இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தை, கிழக்கில் இருந்து வடக்கு வரை புலிகள் மிரட்டி பணியவைத்தனர். இதுதான் சிங்கள இனவெறியை எதிர்ப்பதாக நாடகமாடும் புலிகளின் தேசியம். உழைக்கும் மக்கள் பற்றிய புலிகளின் வக்கிரமான புத்தி அடக்கியாள்வதும், கொள்ளை அடிப்பதும் தான். மக்களின் இயல்பான வாழ்வில் மூச்சு விடுவது என்பது கூட சாத்தியமற்றதாகியுள்ளது. அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத 80 ஆயிரம் யாழ் குடாநாட்டு குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ்ச் சென்று வறுமையில் சிக்கிவிட்டனர். இது யாழ்குடாநாட்டுக் குடும்ப எண்ணிக்கையில் 60 சதவீதமாகும். வறுமை அதிகரிக்க அதிகரிக்க புலிகள் தமிழ் மக்களிடம் கோருவதும் அதிகரிக்கின்றது. வடக்கு கிழக்கில் 80,000 ஆயிரம் குழந்தைகள் பாடசாலை செல்வதற்குக் கூட வசதியற்ற ஏழைகளாகிவிட்டனர். 65,000 குழந்தைகள் வறுமைக் காரணமாக கல்வியை இடையில் நிறுத்தி விட்டனர். வறுமையானது வடக்கு கிழக்கில் பெருக்கெடுக்கின்றது. மக்கள் உழைப்பின் ஆற்றலை இழக்கின்றனர். சிறு தொழில்கள் அன்றாடம் முடங்கிச் செல்லுகின்றது. உலகமயமாதல் ஒரு பக்கம், புலிகளின் வரியும் அவர்களின் பொருளாதாரக் கொள்கையும் மறுபக்கமாக இணைந்து, எல்லாவற்றையும் சூறையாடுகின்றது. தேசிய முதலாளித்துவச் சொத்துகள், அதன் தேசிய வளங்கள் என அனைத்தும் அழிகின்றது. மீன்பிடி, விவசாயம் வரியின் கெடுபிடிகளால் மூச்சு விடமுடியாது அழிகின்றது. இது வறுமையை மேலும் துல்லியமாக்குகின்றது. இந்த வரிமுறைதான் கிழக்கில் தொடர்ச்சியாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்களை திட்டமிட்டு உருவாக்கின்றது.

வரிக்கு எதிரான உணர்வும், வரியை எதிர்க்கின்ற போது தொடர்ச்சியான கடத்தல்கள், வன்முறைகள் வரைமுறையின்றி நடக்கின்றது. நபர்களைக் கடத்துவது முதல் பொருட்களைக் கடத்துவது வரை அன்றாடம் முஸ்லிம் பகுதிகளில் நடக்கின்றது. இது முஸ்லிம் மக்களுக்கு எதிரான சமூக வன்முறையாக எழுகின்றது. இதன் மேல் எதிர் வன்முறை முஸ்லிம் தமிழ் இனக்கலவரங்களை உருவாக்குகின்றது. புலிகளின் நடவடிக்கைகள் திட்டமிட்டே இதை விரிவாக்கி, அதில் பேரம் பேசி வரியால் குளிர்காய்கின்றனர். முஸ்லீம் மக்களுக்கு எதிரான தொடர் வன்முறை, பேரம் பேசும் ஆற்றலை ஏற்படுத்தி வரி அறவீடு ஏற்க வைக்கப்படுகின்றது.

## முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையும், அதற்கு அடிப்படை புலிகளின் வரி விதிப்பும்!

கிழக்கில் அன்றாடம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான புலிகளின் வரி விதிப்பு பதற்றத்தை உருவாக்கின்றது. புலிகள் கேட்பதைக் கொடுக்கத் தயாரற்றவர்கள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்படுகின்றனர். இனம் காணப்படும் நபர்கள் மேலான குண்டு வீச்சுகள், பொருட்கள் மீதான குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுகள், தீர்த்துக் கட்டுதல், இனம் காணப்பட்ட நபர்களை கடத்திச் செல்லல், பொருட்களைக் கடத்துதல் என்று புலிகளின் அன்றாட நிகழ்வுகள் மேலான பதற்றத்தின் முடிவும், சமூகம் மேலான வன்முறையாகின்றது. வழமை போல் புலிகள் இதற்கும் தமக்கும் எந்தத் தொடர்பு இல்லை என்று வெள்ளையாகவே அறிக்கை விட்டபோதும் உண்மை இதற்கு நேர்மாறானது.

முஸ்லீம் மக்கள் மேலான வன்முறை, புலிகளுக்கு வரி பற்றி பேரம் பேசும் ஆற்றலை வழங்குகின்றது. முஸ்லீம் மக்கள் மேல் வரி அறவிடும் உரிமைகள் மீது தான் வன்முறைகள் தொடர்ச்சியாகத் தலைதூக்குகின்றது. மறுப்புகள் எதிர் வன்முறையாகின்றது. ஒவ்வொரு வன்முறையின் முடிவில் பேச்சுகளும், பேரங்களும் நடக்கின்றன. பீதி விதைக்கப்படுகின்றது. இதன் மூலம் வரியை வசூலிப்பது இலகுவாகின்றது. முஸ்லீம் மக்கள் மேலான வரி விதிப்பு எப்படி உள்ளது? சில உதாரணங்களைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| ஒரு போகம் நெல் உற்பத்திக்கு ஏக்கருக்கு | 1,500 | ரூபா |
| ரைக்ரருக்கு போகத்துக்கு | 15,000 | ரூபா |
| ஆடு மாடுக்கு தலா ஒன்றுக்கு | 300 | ரூபா |
| சாதாரன மீன்பிடி படகுக்கு மாதம் | 300 | ரூபா |
| இயந்திர மீன்பிடி படகுக்கு மாதம் | 1,000 | ரூபா |
| மாட்டு வண்டிக்கு வருடம் | 1,500 | ரூபா |
| எரிக்கும் விறகுக்கு மாதம் | 1,500 | ரூபா |

இப்படி வரி அனைத்துத் துறையிலும் காணப்படுகின்றது. புலிகளின் எல்லைகளைத் தாண்டி வரும் ஒவ்வொரு பொருளுக்கும் வரி அறவிடப்படுகின்றது. மறைமுக வரி பரந்த தளத்தில் காணப்படுகின்றது. வர்த்தக ரீதியாக முஸ்லீம் மக்களின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற சிறப்பு பிரச்சாரத்தைக் கூட புலிகள் செய்கின்றனர். புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள முதலாளிகளை இதனடிப்படையில் வடக்கு கிழக்கில் முதலீடக் கோருகின்றனர்.

முஸ்லீம் மக்கள் மேலான வன்முறையானது வரி அறவீட்டில் ஏற்படும் இழுபறிகளில் இருந்தே தோற்றம் பெறுகின்றது. ஆனால் புலிகளும் புலிகளின் பினாமியான கூட்டணியும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான உணர்வையே, அன்றாடம் நடைமுறைக் கொள்கையாக கொள்கின்றனர். முதுகெலும்பற்ற பினாமி எழுத்தாளர்களும் முஸ்லிம் விரோதப் போக்கை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் மீடியாவை கறைப்படுத்தி முஸ்லீம் விரோத உணர்வை வளர்க்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் குளிர் காய்வதாகக் கூறி, அவர்களின் அடிப்படை உரிமையை மறுக்கின்றனர். ஆனால் உண்மை என்ன?

முஸ்லிம் மக்களின் உயிர் இழப்பு, பொருள் இழப்பு தமிழ் மக்களுக்கு நிகரானது. இந்த விடுதலைப் போராட்டத்தில் அவர்களையும் தமிழ் மக்கள்



என்று கூறி, அவர்கள் மேல் இனப்படுகொலைகளை நடத்தியது மட்டுமின்றி பொருட்களைச் சூறையாடியதை யாரும் கண்டு கொள்வதில்லை. வரியாக அவர்களின் வாழ்வில் அத்துமீறி சூறையாடுவதை இட்டும் யாரும் மூச்சுக் கூட விடுவதில்லை. அவர்கள் தமது சொந்த விவசாய நிலங்களை புலிகளிடம் இழந்து நிற்பதுடன், அன்றாடம் வரியாக பல பத்து லட்சம் பெறுமதியான சொத்தை இழந்து வருகின்றனர். என்பதே எதார்த்த உண்மை. புலிகளின் வரி அறவீடுகள் தொடர்பாகக் கிண்ணியா பிரதேசத்தில் செயற்பட்டு வரும் அகில இலங்கை ஜயத்துல் உலமா சபை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் எழுத்து மூலமான முறைப்பாடு செய்தது. அதில் நெற்செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபா வீதமும், உழவு இயந்திரத்துக்கு மாதம் ஒன்றுக்கு 15,000 ரூபாவும், மாடு ஒன்றுக்கு 300 ரூபாவும், பெரிய மீன்பிடிப் படகுக்கு மாதம் 1000 ரூபாவும், விறகு வியாபாரிகளிடம் 1000 ரூபாவும் புலிகள் அறவிடுவதாக முறையிட்டுள்ளது. முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களின் போராட்டத்தில் குளிர் காயவில்லை. மாறாக முஸ்லீம் மக்களைச் சூறையாடிய பணத்தில், போராட்டம் என்ற பெயரில் முஸ்லீம் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர்.

முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களின் தியாகத்தில் குளிர் காயவில்லை. அவர்கள் இங்கு போராடுவது தமக்கு எதிரானவற்றை நிறுத்தும் உரிமையைத் தான். முஸ்லீம் மக்களின் மேலான உரிமை மீறல் மிகப் பெரியது. வடக்கில் இருந்து பலாத்காரமாக உடுத்த உடுப்புத் தவிர மற்றவை அனைத்தையும் உருவிய பின்பு, துரத்தப்பட்ட 21,614 குடும்பங்களைச் சேர்ந்த 1,02,867 முஸ்லிம் மக்கள் புலிகளிடம் எதை இழந்தனர். விபரீதம் கீழே!

| | |
|---|---|
| வீடுகள் | 22,000 |
| கடைகள் மற்றும் தொழில் நிலையங்கள் | 24,002 |
| கோயில் மற்றும் கலாச்சார நிலையங்கள் | 340 |
| விவசாய நிலம் | 39400 ஏக்கர் |
| தங்கம் | 475000 கிராம் (475 கிலோகிராம் அல்லது 59,375 பவுன்) |
| ஆடு, மாடு | 2,11,000 |
| மோட்டார் சைக்கிள் | 800 |
| மோட்டார் வாகனம் | 320 |
| கார் | 750 |
| சைக்கிள் | 4,000 |
| மீன்பிடி படகு | 850 |
| இயந்திரப் படகு | 400 |
| மீன் வலைகள் | 1,200 |
| குளிர்சாதனப் பெட்டி | 200 |
| தொலைக்காட்சி பெட்டி | 2,000 |
| ரேடியோ | 600 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் புலிகளால் துரத்தப்பட்ட முஸ்லீம் மக்கள் இழந்தவை. இதை அன்று புலிகள் தமிழ் மக்களுக்கு விற்பனை செய்தனர். இதன் பெறுமானம் 1026 கோடி ரூபாவாகும். வாழ்விடங்களில் இருந்து துரத்தப்பட்டது உள்ளடங்க, 30,000 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தை, இன்றும் புலிகள் தமது சொந்த சொத்தாக வைத்துள்ளனர். வடக்கில் வாழ்ந்த ஐந்தில் ஒரு மக்களின் வாழ்வு இப்படித் தான் பறிக்கப்பட்டது. எந்தத் தமிழன் இதற்கு எதிராகப் போராடினான்? இன்று கூட அதைப் பற்றிப் பேசவும் போராடவும் யார் தயாராக உள்ளனர்? ஆங்காங்கே ஒரு கண்டனத்துடன் தூற்றுவது தொடருகின்றது. தமிழ் மக்கள் பிரச்சனையில் முஸ்லீம் மக்கள் குளிர் காய்வதாக எழுதுகின்ற வக்கிரம் மட்டும் உரக்க அரங்கேறுகின்றது. இதைக் கண்டிக்கக் கூட வக்கற்ற தமிழ் சமூகம், முஸ்லீம் மக்கள் மேல் தொடரும் கொடுமைகளை இட்டு மூச்சுக் கூட விடுவதில்லை. இதுதான் தமிழ் தேசியம். முஸ்லீம் மக்களின் இழப்போ ஆழமானவை. வரி வன்முறையாக 2002 ஜுன் மாதம் வாழைச்சேனையில் 13 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். 15 கோடி ரூபா பெறுமானமான சொத்துக்கு அழிவு ஏற்பட்டது. திருகோணமலையில் கின்னியா பிரதேசத்தில் 2003 இறுதியில் 11 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லீம் மக்கள் மேல் இப்படி பத்துக்கு மேற்பட்ட திட்டமிட்ட வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதன் பதிலடியாக லும்பன் குழுக்கள் அப்பாவி தமிழ் மக்கள் மேலான எதிர் வன்முறைகளை நடத்தினர். உண்மையில் அப்பாவித் தமிழ் முஸ்லீம் மக்களே பாதிக்கப்பட்டனர். மக்களின் நலனில் அக்கறை அற்ற, அவர்களைத் தமது எடுபிடிகளாக நடத்தும் அரசியலானது தமிழ் - முஸ்லீம் இனங்களின் தலைவிதிகளை பந்தாடுகின்றது.

புலிகளின் தலைவர்களில் ஒருவரான தமிழ்ச் செலவன் "தமிழீழ விடுதலைப்புலிகள் தமது உரிமைகளைப் பெற்றபின் முஸ்லிம்கள் தங்களுக்கான உரிமைகளைக் கேட்கலாம்." என்று கூறுகிறார். ஆக, மற்றொரு இனம் தனது உரிமையை ஒத்திப்போடக் கோரும் அதிகாரத்தை எப்படித் தமிழ்ச்செல்வனுக்கு யார் வழங்கியது. முஸ்லீம் மக்கள் மேல் புலிகள் அனுபவிக்கும் சூறையாடலையும் முஸ்லீம் மக்களின் உரிமைகள் நசுக்கப்படுவதையும் எதிர்த்து கேள்விக்குள்ளாக்குவதைப் புலிகள் விரும்பவில்லை. சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களை சூறையாடுவதை எதிர்த்து உரிமையைக் கோரும் புலிகள், முஸ்லீம் மக்களை புலிகள் சூறையாடுவதை கேட்க முடியாது என்று கூறுகின்றனர். இதன் பிரதிபலிப்பாகவே பினாமிகள் தமிழ் மீடியா எங்கும் முஸ்லீம் விரோத உணர்வையும், அவர்களின் உரிமைக்கான சமூகக் கோரிக்கைகளையும் கொச்சைப்படுத்து கின்றனர். இதற்கு எதிரான வன்முறைகளை ஊதிப் பெருக்குகின்றனர்.

இவை ஒரு கடுமையான மனித உரிமை மீறலாக மாறுகின்ற போதும், சர்வதேச நெருக்கடியாக மாறுகின்ற போதும், முஸ்லீம் மக்களிடமும், தலைவர்களிடமும் பேரங்களையே முன்வைக்கின்றனர். தமிழ்ச்செல்வன் கோருவது போல முஸ்லீம்கள் தமது உரிமைகளை புலிகளிடம் விற்கக் கோருவதே அரங்கேறுகின்றது. அவர் அதை "வட - கிழக்கை வாழ்விடமாக கொண்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரது உரிமைகளும் சம முறையில் உறுதிப்படுத்தப்படும். இது பற்றி யாரும் அஞ்சத் தேவையில்லை." என்று கூறுவது, எந்தவகையிலும் ஜனநாயகப் பூர்வமானது அல்ல. இது அவர்களின் உரிமையைத் தரமறுப்பதற்குச் சமமானது. முஸ்லீம் மக்கள் தனியான ஒரு சிறுபான்மை இனமாக இருப்பதைக் கருத்தில் கொள்ளாத ஒன்றாகும். புலிகள் முன்பு பலமுறை ஏற்றுக் கொண்ட முஸ்லீம் மக்கள் மதம் கடந்த அதே நேரம், தமிழ் மக்களில் இருந்து வேறுபட்ட தனித்துவமான ஒரு இனமாக இருப்பதை அப்பட்டமாகவே மறுப்பதாகும். யாரும் அஞ்சத் தேவையில்லை என்று யாரிடம் கூறமுனைகின்றனர். முஸ்லீம் மக்கள் இதைப்பற்றி என்ன நினைக்கின்றனர் என்பதைப் பற்றி அலட்டிக் கொள்ளாத, புலிகளின் ஜனநாயக விரோத மனப்பான்மையில் இருந்தே முன்வைக்கப்படுகின்றது. தமிழர் தரப்பில் புலிகள் பற்றி உள்ள அதிருப்தியை வென்று, பினாமியாக்க இந்த ஒப்புவித்தல் ரப்பர் ஸ்டாம்பாகின்றது. உண்மையில் அச்சம் நீக்கப்பட வேண்டும் என்றால், முஸ்லீம் மக்கள் மத்தியில் நடைமுறையில் புலிகளின் அரசியல் செயல்பாடுகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இப்படி அறிக்கைவிடும் மோசடியான ஏமாற்றுச் செயற்பாடுகள் கூட மாற்றப்பட்டாக வேண்டும்.

இந்த மோசடி என்பது தமிழச்செல்வனின் வார்த்தையலங்காரங்களாகி விடுகின்றது. 2002 நடுபகுதியில் வழங்கிய பேட்டி ஒன்றில் முஸ்லிம் மக்கள் பற்றி "... ஆள்பவன் ஆளப்படுபவன் என்ற பேதம் மலரும் வடகிழக்கு ஆட்சியில் இருக்காது" நம்புங்கள் என்கிறார். இது எப்படி ஒழிக்கப்படும் என்று யாராவது தெரிந்தால் சொல்லுங்கள். சுரண்டுபவன் இருக்கும் வரை, ஆள்பவன் ஆளப்படுபவன் என்ற கட்டமைப்பு இருக்கும். தமிழ் மக்கள் மூச்சு விடுவதற்கு கூட சுதந்திரம் இல்லாத அமைப்பில், முதலில் அதை அனுமதியுங்கள். புலிகளின் வார்த்தை ஜாலங்கள் வழமை போல் அர்த்தமற்ற வக்கிரமாகும். நடைமுறைக்கும் சொல்லுக்கும் இடையில் எந்த உறவுமற்றவை. அர்த்தமற்ற புலிகளின் இந்த வார்த்தை, உண்மையை பளிச்சென்று தெளிவாக்கின்றது. வார்த்தைகளின் நம்பகத் தன்மை புலிகளின் நேர்மைக்கு விடப்பட்ட மற்றொரு எடுத்துக்காட்டு.

இப்படி வார்த்தை ஜாலங்கள் மூலம் முஸ்லீம் மக்களைப் பந்தாடிய தமிழ்ச்செல்வன், சொந்த சுயரூபத்தைப் பளிச்சென்று நிர்வாணமாக்கும் போது வக்கிரமாகவே வெளிவருகின்றது. "கடந்த 25 வருடங்களாக முஸ்லிம்கள் அரசாங்கத்துடன் இணைந்து உள்ளனர். அவர்கள் தமது உரிமைகளை அரசிடம் கேட்டு என்றோ பெற்றிருக்கலாம்." என்ன வக்கிரமான வாதம்! தமிழ்த் தலைமைகளும் கூடத் தானே சிங்கள இனவாத அரசுடன் கூடித் திரிந்தனர். தற்போது உங்கள் பினாமியாகி வெட்கம் மானம் இன்றி நக்கித் திரிகின்றனர். சரி இதை விடுவோம்.

முஸ்லீம் மக்கள் உரிமையாக எதைக் கேட்கின்றனர்? அதிலும் உங்களிடம் எதைக் கேட்கின்றனர். அதில் உங்களுக்கு என்ன பிரச்சனை? முஸ்லீம் மக்களுக்கு எதிராக இப்படிக் கூறுவது ஏன்? உங்களின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை அவர்கள் எந்த விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை. அவர்கள் உரிமைகள் எதையும் யாரிடமும் கோரவில்லை. உங்கள் உரிமைகளுக்குத் தடையாக அவர்கள் இருக்கவில்லை. உண்மையில் தமிழ் மக்களின் போராட்டத்தை, அவர்களின் உரிமைகளை மனதார ஆதரித்து நிற்கின்றனர்.

அவர்கள் தமது பிரச்சனையைத் தாமே பார்த்துக் கொள்ள விட்டுவிடுங்கள் என்கின்றனர். ஆனால் நீங்கள் தான் இல்லை இல்லை என்கின்றீர்கள். அவர்களின் உரிமையில் தலையிடுவோம் என்கின்றீர்கள். அவர்களை தொடர் வன்முறை மூலம் பந்தாடுகின்றீர்கள். இதனால் அவர்கள் தமது பிரச்சைனை பற்றி பேச நிர்ப்பந்திக்கிறீர்கள். நீங்கள் அம்பலப்படும் போது தூற்றுகிறீர்கள். முதலில் முஸ்லீம் மக்களை அவர்கள் பாட்டில் விடுங்கள். அவர்களின் வாழ்வில் தலையிடுவதைக் கைவிடுங்கள். அவர்கள் தமது தனித்துவமான வாழ்வை வாழும் உரிமையை அங்கீகரியுங்கள். இது அல்லவா புலிகள் முதலில் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு இப்போது உரிமையைக் கோர வேண்டாம் என்று சொல்ல என்ன தார்மீகப் பலம் உண்டு உங்களுக்கு? என்னை வேண்டும் என்றால், உங்கள் வக்கிரத்தை தோலுரித்துக் காட்டியதற்காக தமிழ்த் துரோகி என்று சொல்லுங்கள். அதன் பெயரில் உங்கள் ஜனநாயக விரோதத் தொடர் படுகொலைக்கு வேண்டுமென்றால் பலியிடுங்கள். ஆனால் உண்மை எப்போதும் வெட்டவெளிச்சமானது.

முஸ்லீம் மக்களின் வாழ்வில் அன்றாடம் தலையிடும் நீங்கள், ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் புடுங்குகின்றீர்கள். இதற்கு எதிராக அவர்கள் போராடும் போது, உரிமைகளைக் கோரும் போது இதை எதிர்கின்றீர்கள். புலிகளாகிய நாங்கள் எங்கள் பிரச்சனைகளை தீர்த்த பின்பு உங்கள் பிரச்சனையை தீர்க்கின்றோம் எனப் பலவாக பேசுவதும், ஏமாற்றுவதும், மிரட்டுவதும் தொடருகின்றது. முஸ்லீம் மக்கள் அன்றாடம் எதிர் கொள்வது, ஏதோ ஒரு விதத்தில் உங்கள் அடக்கு முறைகளையே. அதனால் அவர்கள் இதற்கு எதிராகப் போராடும் போது, முஸ்லீம்கள் தமிழர் பிரச்சனையில் குளிர் காய்வதாக குற்றம் சாட்டுவது ஜனநாயகத்தில் வற்றிப் போன வக்கிரமே.

இந்த ஜனநாயக விரோத வக்கிரங்களை மூடிமறைக்க தமிழ்ச் செல்வன் கூறுகின்றார் "முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியிலான விரிசலை போக்க நீண்ட செயற்திட்டம் தேவை. பொருளாதார விடயங்களில் ஏற்றத்தாழ்வு உள்ளது." என்கிறார். என்ன அரசியல்! ஏற்றத் தாழ்வானப் பொருளாதாரக் கட்டுமானம் தான் வன்முறைக்கு காரணம் என்ற புலிகளின் கண்டுபிடிப்பு உலக அதிசயமாகிவிடுகின்றது. இதனால் முஸ்லீம் மக்கள் மேல் வன்முறையிலும், வரி அறவீட்டிலும் ஈடுபடும் உரிமையை உங்களுக்கு எப்படி இது வழங்குகின்றது? அதாவது பொருளாதாரத்தை சமப்படுத்த முஸ்லீம் மக்களை கொள்ளையிடும் உரிமையை நீங்கள் கோருகின்றிர்களோ! இலங்கை வர்த்தகத்தில் முஸ்லீம் சமுகம் கொண்டுள்ள பலத்தை உடைக்க வேண்டும் என்கிறீர்களா? அதனால் அவர்கள் மேல் தாக்குதல்கள் அவசியம் என்கிறீர்களா! முஸ்லீம் மக்களின் தனித்துவமான அவர்களின் பிரச்சனையில் தலையிடும் உரிமையும், அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் உரிமையும் புலிகளுக்கு



கிடையாது. இதுவே அடிப்படையான ஜனநாயகக் கொள்கையாகும். இதை ஏற்றுக் கொள்ளாத யாரும், முஸ்லீம் மக்கள் பற்றிய எதிர்ப்புணர்வுடன் அரசியல் விபசாரம் செய்பவர்கள் தான். ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதற்கு, வெளியில் வேறு எந்த விளக்கமும் அவசியமில்லை. இதுவே போதுமானது. இதை யாரும் கொச்சைப்படுத்தவும், கற்பழிக்கவும் முடியாது. வக்கிரமாகி நக்கிப் பிழைக்கும் பினாமிய அரசியலால் இதை மூடிமறைக்க முடியாது.

இந்த நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் 2002ம் ஆண்டு ஆரம்பத்தில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு எப்போதோ முறிந்து விட்டது என்று தமிழ்ச் செல்வன் புலிகள் சார்பாக அறிவித்தார். முஸ்லீம் மக்கள் பற்றி செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை புலிகள் முறிந்து விட்டது என்பது, சொந்த (புலிகளது) மனிதவிரோத நடவடிக்கைகளை ஒப்பந்தம் அம்பலப்படுத்துவதில் இருந்து தப்பிவிடத் தான். முஸ்லீம் மக்களின் உரிமைகளையும், கோரிக்கைகளையும் புலிகள் தொடர்ச்சியாக மீறி வந்த நிலையில், அதை ஒப்பந்த அடிப்படையில் விமர்சிக்க முற்பட்ட போது புலிகள் ஒப்பந்தம் முறிந்து போனது என்கின்றனர். அதாவது தமிழர்களுக்குச் சிங்கள இனவாதிகள் எதைச் செய்தனரோ, அதையே முஸ்லீம் மக்களுக்குத் தமிழ்க் குறுந் தேசியவாதிகள் செய்துள்ளனர். இது மேலும் முஸ்லீம் மக்களுடன் கையாள வேண்டிய நல்லெண்ண உணர்வுகளுக்கு வைத்த மற்றொரு வேட்டாகும். முஸ்லீம் மக்கள் மத்தியில் அத்துமீறித் தலையிடவும், அவர்களை அடக்கி ஒடுக்கும் புலிகளின் அரசியல், முஸ்லீம் மக்கள் மேலான வன்முறையையும், வரி என்ற பெயரில் கொள்ளையடிப்பதையும் தனது உரிமையாக வைக்கின்றது. இதற்கு எதிரான போராட்டம் என்பது, முஸ்லீம் மக்களின் தவிர்க்க முடியாத அடிப்படை ஜனநாயக உரிமையாக உள்ளது. இதை யாரும் கொச்சைப்படுத்தவோ, கேவலப்படுத்தவோ முடியாது.

## புரிந்துணர்வில் நேர்மை என்பது வக்கிரமாகவே அரங்கேறுகின்றது

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புலிகள் கையெழுத்திட்ட நிலையில், அதை அவர்கள் கடைப்பிடிப்பதில் உள்ள நேர்மை வழமை போல் சந்திக்கு வருகின்றது. இதன் மூலம் சர்வதேச அழுத்தத்தை வலிய உருவாக்கியதுடன், அதை சொந்தக் கழுத்தில் கைவைக்கும் அளவுக்கு பலதடவை உலக ஏகாதிபத்தியங்களை இலங்கைப் பிரச்சினையில் தலையிட வைத்தன. வழமை போல் மக்களின் பெயரால், இனம் தெரியாத நபர்களின் பெயரால், முகவரியற்ற அமைப்புகளின் பெயரால், மூன்றாவது குழுவின் பெயரால் பல நூறு சம்பவங்கள் நடத்தினர். மோதல்கள், படுகொலைகள் என்று தொடரும் ஒவ்வொரு முரண்பாடும், புலிகளால் யுத்தத்திலிருந்து மீண்டு விட விரும்பும் முடிவுக்கு சென்று விட முடியவில்லை. மாறாக யுத்தத்துக்குள், மீண்டு விட முடியாத புதைகுழியில் புதைந்து செல்வதையே ஆழமாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உடன்பாட்டின் மேல் கையெழுத்திடல் என்பது சொந்த முடிவுக்கு அமைய இருப்பதால், அதை உயர்ந்தபட்சம் பாதுகாப்பது அவசியமானது. அதை நேர்மையாக கையாள்வது அதைவிட முக்கியமானது. எப்போதும் வெளிப்படையானதாகவும், மக்களை ஒவ்வொரு நிலைப்பாட்டின் மீதும் அணிதிரட்டுவதும் அவசியமானது. ஆனால் புலிகள் முஸ்லிம் சமூகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் சரி, தமிழ் மக்கள் சார்பாக தங்கள் செய்த ஒப்பந்தத்தையும் சரி, நேர்மையாகக் கடைப்பிடிப்பதில் இருந்து விலகியே சென்றுள்ளனர். எப்போதும் சொந்தக் கையெழுத்துகளை முதலில் மீறிச் செல்வது புலிகளின் அகராதியாகியுள்ளது. சிங்கள இனவாதிகள் கடந்த 55 வருடங்களில் தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட பல ஒப்பந்தங்களை கிழித்து எறிந்தார்கள். தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டி வருகின்றனர். மக்களின் நலனில் இருந்து செய்து கொள்ளப்படாத எந்த ஒப்பந்தத்தினதும் கதி, இப்படித் தான் இருக்கும் என்பதை வரலாறுகள் மீண்டும் பளிச்சென்று நிறுவுகின்றன.

பொதுவாகவே இந்த ஒப்பந்தத்தை மக்களின் நடைமுறை வாழ்வுடன், அவர்களின் பிரச்சனைகளை உள்ளடக்கிய வகையில் புலிகள் செய்யவில்லை. தாம், தமது குழு என்ற அடிப்படை கண்ணோட்டத்தில் இருந்தே இந்த ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் தன்னைச் சுற்றி மக்களின் சில கோரிக்கைகளையும் இணைத்துக் கொண்டது. தனது நலன் சார்ந்து எதிர் தரப்பினரை எதிர்கொள்ள, மக்களைப் பற்றிய ஆங்காங்கே குறிப்புகளை உள்ளடக்கினர். இந்த ஒப்பந்தம் புலிகளை விலங்கிட ஏகாதிபத்தியத்துக்கு வாய்ப்பான ஒன்றாகியது. ஒப்பந்தம் மக்கள் நலன் சார்ந்து இருக்காத எல்லா நிலையிலும், ஒப்பந்தம் குறுகிய நலன் சார்ந்ததாக இருக்கும் போதும், ஒப்பந்த மீறல் என்பது அடிப்படையான செய்தியாகின்றது. சிங்கள இனவாத அரசும், முஸ்லீம் மக்களும் புலிகள் அளவுக்கு ஒப்பந்த மீறல்களைச் செய்யவில்லை. அப்படிச் செய்த ஒவ்வொன்றும் உதிரியான நிறுவனமயப்படாதவையாகவே இருந்தன. ஆனால் புலிகளின் மீறல்கள் அனைத்தும் திட்டமிட்ட நிறுவனமயமானவையாகவே இருந்தது.

இந்த நிறுவன ரீதியான மீறல் முதலில் சொந்த மக்களுக்கு எதிரான மீறலாகவே தொடங்குகின்றது. தமது குறுகிய நலனைச் சுற்றி செய்து கொண்ட ஒப்பந்தம் மக்களின் வாழ்வியலைப் பகடைக்காயாக்கி, அதை இலகுவாகவே தூக்கியெறிவதை சாத்தியமாகின்றது. மக்களை வெறும் எடுபிடிகளாக, அவர்கள் உணர்வுகளை மிதிப்பதாக அமைகின்றது. சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்கு எதை மறுக்கின்றனரோ அதையே, புலிகளும் தமிழ் மக்களுக்கு மறுக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் அமைதி சமாதானத்தின் பெயரில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள், அன்றாட நிகழ்வாகி உள்ளது. இது அவர்களாகவே செய்து கொண்ட உடன்பாடுகளை மீறுகின்றது. இது ஆள் கடத்தல்கள், படுகொலைகள், பொருட்களை கொள்ளையிடுதல், வரி அறவிடுதல், கட்டாய ஆள் சேர்ப்பு, சிறுவர்களை கட்டாயப்படுத்தி கடத்துவதும்



அவர்களை ஏமாற்றி இணைப்பது, ஜனநாயக செயல்பாடுகள் அனைத்தையும் முடமாக்குவது, மக்களின் வாழ்வியல் மீதான கடுமையான பீதியையும் மிரட்டலையும் ஆணையில் வைத்திருப்பது, ஆயுதங்களைக் கடத்திச் செல்வது, இராணுவ நலன் சார்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துவது என்ற விரிந்த தளத்தில் இந்த மீறல்கள் தொடருகின்றது. இவை பெரும்பாலும் எதிரிக்கு எதிராக அல்லாது, மக்களுக்கு எதிராகவே அமைந்துள்ளது.

தொடர்ச்சியாக யுத்தநிறுத்த மீறல் பல முன்னிலைக்கு வருகின்றது. இவை அனைத்தும் பெரும்பாலும் மக்களின் வாழ்வியல் மீதானதாக இருக்கின்றது. மக்களைத் தமது குறுகியத் தேவைக்கு பயன்படுத்தும் கண்ணோட்டமே கையாளப்படுகின்றது. உணர்வற்ற மந்தைகளாக தலையாட்டக் கோருகின்றனர். புலிகளின் தலைவர்களில் ஒருவரான பாலசிங்கம் வடக்கில் நிகழ்த்திய உரை ஒன்றில் "..யாழ்ப்பாண புத்திஜீவிகளான நடுத்தர வர்க்கத்தவரான நீங்கள் தான் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அங்கிருந்துதான் அதிக விமர்சனம் வருகின்றது" என்று கூறி தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கை மீதான விமர்சனங்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும், தமது அடிப்படையற்ற விதண்டாவாத விளக்கங்களையும் ஏற்றுக் கொள்ளக் கோருகின்றார். அதிக விமர்சனங்கள் வருவதைப் புலிகள் விரும்பாதத் தன்மையை நேரடியாகவே வெளிப்படுத்திவிடுகின்றார். விமர்சனம் செய்யாத ஒரு அடிமை மந்தைச் சமூகமாகத் தமிழ் மக்கள் இருப்பதையே விரும்புகின்றனர். இதையே புலிகள் வடக்கு கிழக்கில் மட்டும் இன்றி, கொழும்பிலும் புலம்பெயர் நாடுகளிலும் தொடர்ச்சியாக ஆணையில் வைக்கின்றனர். இதை மீறுகின்ற போது உயர்ந்தபட்ச நடவடிக்கை படுகொலையாக உள்ளது. எங்கும் எதிலும் மிரட்டி அடிபணிய வைக்கப்படுகின்றனர். உண்மையில் புலிகள் வடக்கு கிழக்கில் பெரும் நிதிகளுடன் நிறுவி கட்டமைத்துள்ள நீதிமன்றங்களும், பொலிஸ் நிலையங்களும் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அடக்குமுறைக் கருவிகளாகவே உள்ளது. புலிகள் கட்டமைக்கும் அதிகார கட்டமைப்பில், இது மட்டும்தான் அவர்களின் ஒரே குறிக்கோளாகி இலட்சியமாகின்றது.

இதைப் பெருமைபட பீற்றிய புலிகளின் தலைவர்களில் ஒருவர், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அதாவது ஆறு மாவட்டங்களில் நீதிமன்றங்கள் உள்ளன என்கின்றார். இரண்டு மேல் நீதிமன்றங்களும் உண்டு என்கிறார். ஒரு சிறப்பு மேல் முறையீட்டு நீதி மன்றமும் உண்டு என்றார். மொத்தமாக 24 ஆயிரம் வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றார். அவற்றில் 19 ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்பட்டுவிட்டன என்றார். இவற்றில் 750 வழக்குகள் மேன்முறையீடு செய்யப்பட்டன என்றார். அவற்றில் 500 தீர்க்கப்பட்டுவிட்டன என்றார். சிறப்பு நீதிமன்றத்தில் 50 வரையான வழக்குகள் இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றார். இவையாவற்றிலும் திருப்தி இல்லாவிட்டால் இறுதியாகத் தலைவருக்கு மனுச் செய்ய முடியும் என்றார். இப்படித் தமது கட்டுப்பாட்டு பிரதேச நீதி பற்றி கூறும் இவர்கள், தமிழ்ப் பகுதியில் நீதிமன்றங்களை நிறுவும் உரிமையைக் கோருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் நிலையங்களை அமைக்கும் உரிமையைக் கோருகின்றான். மக்களின் வாழ்வியல் மற்றும் சமூக நலத்திட்டங்கள் எதையும் பெருமையுடன் முன்வைக்க முடியாத புலிகள், அடக்குமுறை நிறுவனங்களை பெரும் செலவுகளில் அமைக்கின்றனர். புலிகளின் நீதி நிர்வாகம் உள்ள வன்னியே இன்று, இலங்கையில் ஆகக் கூடுதலாக சிகரட்டை புகைக்கும் ஒரு பிரதேசமாகியுள்ளது. அதிக வறுமையை அனுபவிக்கும் ஒரு பிரதேசத்தில், தினசரியாக சராசரி இரண்டு லட்சம் சிகரட்டுகள் இப்பகுதியில் விற்பனையாவதை வர்த்தகப் புள்ளிவிபரங்கள் அம்பலமாக்கியுள்ளது. மிகக் குறைந்த சனத்தொகை கொண்ட ஒரு பிரதேசத்தில் இந்த நிலைமை என்பது, புலிகளின் அரசியல் கண்ணோட்டத்தினால் ஏற்படுகின்றது. உண்மையில் இளைஞர் சமூகம் என்பது, புலிகளின் ஒட்டு மொத்த வக்கிரத்தில் சீரழிகின்றது.

புலிகளின் நீதி மற்றும் நிர்வாகங்களின் நேர்மைக்கு வெளியில், புலிகளின் அன்றாட மனித உரிமை மீறலுக்கு எதிராக வழக்காட முடியாது. புலிகளால் கையாளப்படும் அன்றாட மக்கள் விரோத நடவடிக்கையை இந்த நீதி மன்றங்கள் விசாரிக்க முடியாது. புலிகள் அன்றாடம் செய்யும் படுகொலைகள், சித்திரவதைகள் எதற்கும் நீதியைப் பெறமுடியாது. புலிகளின் ஆள்கடத்தல், வரிஅறவிடல் என்று பல நூறு விடயங்களுக்கு நீதி கேட்டு நாம் சென்று விட முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. நீதி பற்றி, சட்ட ஒழுங்கு பற்றி இவர்கள் கொக்கரிப்பதில் எந்தவிதமான, அர்த்தமும் இருப்பதில்லை. புலிகளுக்குச் சார்பான வழக்குகள் மேல் இருந்து ஒரு தலைப்பட்சமாகவே எப்போதும் கையாளப்படுகின்றது. மாவீரர் குடும்பம், புலிக் குடும்பங்கள், உறவினர்கள் ஆகியோர் நீதியை வளைக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர். வடக்கு கிழக்கில் இந்த நீதியைப் பற்றியே பேச முடியாது. ஏன் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்ததுக்கு அமைய, நீதி மன்றத்தில் முறையிட்டு நீதியைக் கூடப் பெற முடியாது. மனிதனின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தைப் பற்றி பேசாத நீதிமன்றங்கள், உண்மையில் பாசிச கட்டமைப்பாலானவை.

பாலசிங்கம் தனது கூற்று ஒன்றில் ".. தமிழர் தாயகத்தில் அரசியல் பணியில் ஈடுபடும் உரிமை உண்டு என்பதை நாம் ஏற்கனவே சொல்லியுள்ளோம்" என்று கூறிய போது, இதன் உண்மைத்தன்மை என்ன என்பது யாவரும் அறிந்ததே. இந்த வார்த்தைகள் அரசியல் அர்த்தம் அற்றவை என்பதை, யாவரும் எதார்த்தத்தில் காணமுடியும். மனிதனின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை அரசியல் அமைப்பில் உள்ளடக்காத ஒரு பூமியில், இவை எல்லாம் பாசிசத்தின் வக்கிரமாகவே வெளிப்படுகின்றது. புலிகள் அல்லாத யாரும், புலிகளின் பினாமிகள் அல்லாத யாரும் சட்டபூர்வமாக அரசியலில் ஈடுபட முடியாது. ஏன் வாயே திறக்க முடியாது. இந்த உரிமையை அவர்களின் சட்டக்கோர்வை அங்கீகரிக்கவில்லை. இதன் அடிப்படையில் முறையிடக் கூட இடமில்லாத சூழலில், உலகை ஏமாற்ற ஒரு அறிக்கை அவசியமாகின்றது. 2004 தேர்தலில் மற்றயை கட்சிகள் தேர்தலில் நிற்கவும், தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடமுடியும் என்ற புலிகளின் விளக்கம் அர்த்தமற்றவை,



போலியானவை. ஆனால் எல்லாவிதமான சமூக எதார்த்தமும் இதற்கு நேரிடையாகவும் வக்கிரமாகவும் உள்ளது. ஜனநாயகம் பற்றி புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு அரசியல் வழிப்பட்டவை அல்ல. மாறாக சொந்தக் குழு மற்றும் தலைவர் பிரபாகரனின் குறுகிய நலன் சார்ந்தது. இதனால் அரசியலில் ஈடுபடும் உரிமையை மட்டுமல்ல, சாதாரண மனிதனின் சிந்தனை உரிமையைக் கூட அங்கீகரிக்க மறுக்கின்றது. இது அவர்களின் தலைவர் கையெழுத்திட்ட புரிந்துணர்வைக் கூட ஏற்க மறுக்கின்றது என்பதே உண்மை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பாக 31.12.2002 வரையிலான காலத்தில் மட்டக்களப்பில் மட்டும் 47 பேர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். இதற்காக தமிழ் மக்களின் நலன் தொடர்பாக புலம்பும் எந்தத் தலைவரும் இதற்குக் குரல் கொடுக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்த நிறுத்த மீறலாக, புலிகள் கூட இதை அடையாளம் காணக் கூடவில்லை. உண்மையில் இந்தக் கடத்தலை தமிழ்த் தேசியவாதிகளும், பினாமிகளும், ஜனநாயகத்தின் தூண்களும் அங்கீகரித்தனர். தமிழ் மீடியாவில் பக்கம் பக்கமாக ஆய்வுக்கட்டுரைகள் எழுதும் செம்மல்கள் இதை அறியாது இருந்த படிதான் எப்போதும் ஆய்வு செய்தனர்.

கடத்தப்பட்டவர்களில் எட்டுப் பேர் துரோகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் தமிழ்த் தேசியவாதிகளுடன் கருத்து ரீதியாக முரண்பட்டவர்கள். இவை குறைந்தபட்சப் பதிவுக்கு வந்தவை மட்டுமே. 2003 இல் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 அரசியல் ரீதியான கொலைகள் நடந்தன. கொல்லப்பட்டவர்களில் 5 முஸ்லீம்கள் அடங்குவர். 38 பேர் வெட்டு காயங்கள் மற்றும் சூட்டுக்காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 18 முஸ்லீம்கள் அடங்குவர். 139 ஆள் கடத்தல்கள் நடத்தன. இதில் 16 பேர் முஸ்லீம்களாவர். அரசியல் கொலை, கடத்தல் மற்றும் காணாமல் போதலுக்கும் புலிகள் தமக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்ற அறிக்கையை வெளியிடுகின்றனர். பொருட்கள் மேலான அரசியல் வன்முறை தனியாக உண்டு. தொடரும் இந்த மக்கள் விரோத நடவடிக்கையை எதிர்த்துப் புலிகள் எதுவுமே செய்யவில்லை. இதையே கிளிப்பிள்ளை போல் பினாமிகளும், பினாமிக் கட்சிகளும் கடைப்பிடிக்கின்றன.

ஒரு சில தவிர, இவை அனைத்தும், இந்த மனிதவிரோத நடவடிக்கைக்கும் புலிகளுக்கும் உள்ள தொடர்பை எதார்த்தமாகவே நிர்வணமாக்கின்றது. தமிழ்த் தேசிய போராட்ட வரலாற்றில் இது போன்ற கடத்தல்கள், கொலைகள் பல ஆயிரமாகும். ஆனால் முடிவேயற்ற இந்த சமூக விரோதத் தன்மையானது அரசியல் ரீதியாக புலிகளின் வங்குரோதம் மேலும் அம்பலப்படும் போது, மேலும் அதிகரித்துச் செல்வது எதார்த்தமாகின்றது. கடுமையான சர்வதேச அழுத்தங்களை கடந்து, இவ் வன்முறை அரங்கேறுகின்றது என்றால், அழுத்தங்களும் நெருக்கடிகளுமற்ற நிலையில் இது எல்லையற்றதாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வன்முறைகள் அவசியமானவையா? அரசியல் ரீதியாக முரண்பாடுகளை கையாளத் தவறுகின்ற போது, படுகொலை அரசியல் தமிழ் தேசிய அரசியலாகி விடுகின்றது. புலிகளின் ஒவ்வொரு உறுப்பினரும் இராணுவ ரீதியாக மட்டும் சிந்திக்கத் தொடங்குவதில் இருந்து, இப்படுகொலை அரசியல் வக்கிரமாகின்றது. அரசியல் ரீதியாக அடிப்படை அறிவு கூட அற்ற ஒரு நிலையில், துப்பாக்கி முனையில் அனைத்தையும் அடக்கியொடுக்கு கின்றனர். இதனால் உண்மையில் புலிகள் அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களை வென்று விடுவதில்லை. மேலும் ஆழமாக அன்னியமாகின்றனர். இந்தப் படுகொலை அரசியலில் உண்மையில் லாபம் அடைவது யார்? மறைமுகமாக ஏகாதிபத்தியம் மட்டும் தான். அன்னியனின் நேரடித் தலையீட்டுக்கான அடிப்படையை இது வழங்கிவிடும் நிலைக்கு, படுகொலை அரசியல் வளம் சேர்த்து விடுகின்றது. உண்மையில் துரோகக் குழுக்களின் உறுப்பினர்களைக் கூட வென்று எடுக்கும் அரசியல் வழிமுறை அவசியமானது, நிபந்தனையானது. இந்த அவல நிலைக்கு அவர்களை தள்ளிச் சென்ற பொறுப்பு புலிகளுடையதே ஒழிய அவர்களுடையது அல்ல. அன்றாடம் தொடரும் மக்கள் விரோத நடத்தைகளே புலிகளின் அரசியலாகி, அதை தொடரும் வரை, புலிகளுக்கு எதிரான அணி பெருகிச் செல்வது தவிர்க்க முடியாது. இதற்குப் படுகொலைகளால் தீர்வு காணமுடியாது. இது உள்ளடக்கத்தில் புலிகளின் அழிவுக்கே, ஏதோ ஒரு விதத்தில் துணைபுரிவதாக மாறிவிடுகின்றது.

உண்மையில் இந்த மனித விரோத நடவடிக்கைகள் பன்மையானதாக உள்ளது. 2002 ம் ஆண்டு தைமாதம் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு தனது அறிக்கையை ஒன்றை வெளியிட்டது. புலிகளுக்கு எதிராகக் கிடைத்த யுத்த நிறுத்த மீறல் சார்ந்த 600 முறைப்பாட்டில், 300-க்கும் மேற்பட்டவை யுத்த நிறுத்த மீறலாக குறிப்பிட்டுள்ளது. உண்மையில் இது மிகக் குறைந்த தொகையே. பல சந்தர்ப்பங்களில் இவை முறைப்பாட்டுக்கே வருவதில்லை. முறைப்பாட்டு நிலையங்களில் செயல்படுபவர்கள், கணிசமான பகுதி புலிகளின் கைக்கூலிகளாகி அவர்களின் கையாட்களாக மாறிவிட்ட நிலையில், எழுத்து மூலமான பல குற்றச்சாட்டுகள் அப்படியே புலிகளிடம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் கூட உண்டு. அன்று இரவே புலிகள் அக்கையெழுத்து முறைப் பாட்டுடன் நேரடியாக முறைப்பாடு கொடுத்தவர் வீட்டுக்கு வந்து, மிரட்டிய சம்பவங்களும் உண்டு. யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகள் உண்மையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சென்று அடைவதில்லை. பல தடைகளைத் தாண்டி இது சென்று அடைகின்றது என்றால், அதை உறுதி செய்ய முடியாத அவலநிலை தொடருகின்றது. அப்படி உறுதி செய்யப்பட்ட எண்ணிக்கையே, மிகப் பிரமாண்டமானதாக இருப்பது அம்பலமாகின்றது. உண்மையில் ஒரு பயங்கரமான நிலைமையே வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது. பீதியும், அச்சமும் கலந்த உணர்வு மொத்தச் சமூகத்தையே அதிரவைத்துள்ளது. இயல்பு வாழ்வு என்பது சிறிலங்கா இனவாத அரசால் மட்டுமல்ல, புலிகளாலும் கூட அனுமதிக்கப்படவில்லை. இரத்தத்தை உறைய வைக்கும் வக்கிரமான படுகொலைகள், திட்டமிட்டே ஒரு சமூக மிரட்டலாகவே அரங்கேற்றப் படுகின்றது. புலிகளுடன் முரண்படும் சிறிய அற்ப காரணங்களுக்குக் கூட, ஈவிரக்கமற்ற அணுகுமுறையே புலிப்பண்பாடாக உள்ளது.



மட்டக்களப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுத் தலைவர் தனது அறிக்கை ஒன்றில் யுத்த நிறுத்தத்தின் பின்பாக மட்டக்களப்பில் 1.2.2003 வரையிலான காலத்தில் 276 சிறுவர்கள் புலிகளால் கடத்தப்பட்ட முறைப்பாட்டை உறுதி செய்தார். யுனிசெவ் நிறுவனத்தின் புள்ளிவிபரப்படி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தாங்களே முன்வந்த செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறிய புலிகள், 1722 சிறுவர்களை இணைத்துள்ளனர் என்று தெரிவிக்கின்றது. இவர்களில் 470 பேர் மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மிகுதியான 1252 சிறுவர்களும் சிறுமிகளும் விடுவிக்கப்படவில்லை. இவை அனைத்தும் முறைப்பாடு செய்யப்பட்டவை மட்டும்தான். மறு தளத்தில் முறைப்பாட்டைத் தடுக்க மிரட்டல் முதல் மீள ஒப்படைப்பு பற்றிப் பல வர்ண வார்த்தை ஜாலங்கள் மூலம் கட்டுப்படுத்துகின்றனர். கிடைக்கும் முறைப்பாடுகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்தே கிடைக்கின்றன.

இதில் இருந்து தப்பிக்க, பாலசிங்கம் "வறுமை மற்றும் பல்வேறு கஷ்டங்கள் காரணமாக எமது அலுவலகத்தை நாடிவரும் இளைஞர்களில் அவர்கள் வயது குறைந்தவர்களாயின் அவர்களை பெற்றோரிடம் மீள ஒப்படைத்து வருகின்றோம். ஆனால், சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளது என்பது உண்மை. அதற்காக சில பிரதேசப் பொறுப்பாளர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளோம். 18 வயதிலும் குறைந்த சிறுவர்களை இயக்கத்தில் சேர்க்கக் கூடாது என தலைவர் பிரபாகரன் அனைத்துத் தளபதிகளுக்கும் இறுக்கமான உத்தரவொன்றை விடுத்துள்ளார்." எனக் கூறுகிறார். இப்படி நேர்மையற்ற ஒரு கூற்றின் மூலம் இதை மூடி மறைக்கும் சித்து விளையாட்டில் இறங்கினார். தமது இயக்கம் மிக உறுதியான கட்டமைப்பைக் கொண்டது எனவும், தலைவர் பிரபாகரனின் உத்தரவுகளைப் பிசகாது கடை பிடிப்பதாக பீற்றும் புலிகளின் நடத்தை பற்றிய முரணான கூற்று, புலிகளின் நேர்மையைச் சந்திக்குக் கொண்டு வந்து நிறுத்தியது.

இதைவிடக் கேவலமாக குழந்தைகளின் வயதை உயர்த்திக் காட்டும் பொய்யான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை புலிகளே தயாரித்து சமர்ப்பிக்கத் தொடங்கியுள்ளனர். பெற்றோர் அவற்றைக் (உண்மையான சான்றிதழை) கொடுப்பதை மிரட்டித் தடுக்கின்றனர். ஒரு மோசடியான அரசியல் அணுகுமுறை ஊடாகவே, உலகை ஏமாற்றிவிட முடியும் என நம்புகின்றனர். ஆனால் ஏகாதிபத்தியங்கள் புலிகளை தனிமைப்படுத்தும் வகையில், குற்றச்சாட்டின் தன்மையில் எந்த மாற்றத்தையும் எற்படுத்த வகையில் தெளிவான கொள்கையைக் கையாளுகின்றனர். புலிகள் தமக்குத் தாமே வலையை விரித்துவிட்டு சித்து விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் பூனை விளையாட்டை நடத்திவிட முடியும் என்ற புலிகளின் அரசியல் நிலைப்பாடு, அவர்களின் இருப்புக்கே ஆட்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. வலிந்து இழுத்த அன்னியத் தலையீடுகள் மற்றும் தொடர்ச்சியான மக்கள் விரோத நடவடிக்கையால் தமக்கு மேலாக ஒரு கத்தியைத் தொங்கவிட்டுள்ளனர். இந்த நிலையில் இருந்து மீள நேர்மையான அணுகுமுறையே புலிகளின் உடனடித் தேவையாகும். ஆனால் இதற்கு மாறாக மேலும் ஆழமாக சேற்றில் புதைந்து வருகின்றனர் புலிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கத்தில் புலிகளின் கட்டாய ஆள்சேர்ப்பு மற்றும் மக்கள் விரோத நடவடிக்கையால் அதிருப்தியுற்ற புலி உறுப்பினர்கள் தப்பி வருவது அதிகரிக்கின்றது. 30.10.2003 வரையிலான காலத்தில் கடத்திச் செல்லப்பட்டு இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டவர்களில், சுமார் 121 பேர் சிங்கள படையினரிடம் வந்து சரணடைந்துள்ளனர். இவர்களில் 98 பேர் ஆண்கள், 23 பேர் பெண்கள் ஆவர். ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் கதி இப்படிதான் இருக்க முடியுமா? தப்பியோடுவதைத் தடுக்க ஆண்களையும், பெண்களையும் பயிற்சி முகாம்களில் நிர்வாணமாகவே அடைத்து வைத்திருக்கின்றனர். இதனால் கூட தப்பி ஓடுவதைத் தடுத்து விடமுடியவில்லை என்ற உண்மையைத் தப்பித்து வருதல் பறை சாற்றுகின்றது. தப்பித்து ஒடி சிங்களப் படையிடம் சரணடைதல் என்ற போக்குக்கு வெளியில், தப்பித்தல் பல வழிகளிலும் நடக்கின்றது. தப்பியோடுவது, படையிடம் சரணடைவது அன்றாட நிகழ்ச்சியாகியுள்ளது. கடுமையான கண்காணிப்பு, தப்பியோடியவர்களை மீளப்பிடித்து பகிரங்கமாகச் சுட்டு பீதியை ஏற்படுத்துவது என்று பல வழிகளில் இதைத் தடுக்க முனைகின்றனர். இப்படித் தப்பி ஓடியவர்கள் பிடிபடும் நிலையேற்பட்ட போது, சயனைடு குப்பியை கடித்து தற்கொலை செய்த சம்பவங்கள், தற்கொலை செய்ய முயன்ற சம்வங்கள் நடந்துள்ளன. இயக்கத்தின் உள்ளான ஜனநாயகம் அச்சம் மூட்டுவனவாக உள்ளது. இயக்கத்தை விட்டுவிலக விரும்பின் சில நிபந்தனைகள் உண்டு. அதை நேரடியாகவே உறுப்பினருக்கு மறுக்கின்றனர். மேலும் நிபந்தனைகளை கடுமை யாக்கியுள்ளனர். அதில் உள்ள தண்டனைக் காலத்தை நீடித்ததன் மூலம், வெளியேறுவதைத் தடுக்க முனைகின்றனர். இருந்த போதும் இந்தப் பிரச்சனை ஒரு பூதமாகி நிற்கின்றது. பல சந்தர்ப்பத்தில் இதை யாழ் மக்களிடம் காணப்படும் உயர்வர்க்க மனப்பான்மையுடன் தொடர்புபடுத்தி கொச்சைப் படுத்திவிடுகின்றனர். உறவினர்கள், வெளிநாட்டில் வாழ்பவர்கள் ஆசை காட்டியே, புலி உறுப்பினர்களை இயக்கத்தை விட்டு ஓட வைப்பதாக மேடைகளில் குற்றம் சாட்டுகின்றனர். தமது நேரடி கண்காணிப்புக்கு வெளியில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினரையும், சிறப்புக் கண்காணிப்புக்கு உள்ளாக்கின்றனர். அந்தச் சிறப்புக் கண்காணிப்பாளர்களை கண்காணிக்க என்று ஒரு தொடர் கண்காணிப்பு முறை மூலம் உறுப்பினர்கள் தப்பி ஓடுவதை தடுக்க முனைகின்றனர்.

உண்மையில் இவைகள் மூலம் இதைத் தடுத்து நிறுத்த முடியாது. போராட்டத்தின் நியாயத் தன்மையை முன்வைப்பதும், அதை நேர்மையாக ஜனநாயகப் பூர்வமாகக் கடைப்பிடிப்பதும் அவசியமானது. மொத்தச் சமூகத்தையும் ஜனநாயக பூர்வமாக அணுகுவதும், ஜனநாயகத்தை உறுப்பினர் உறவில் கையாள்வதன் மூலம் மட்டும் தான் இதைத் தடுக்க முடியும். இப்படி இல்லாத பட்சத்தில் யுத்தத்தை ஆணையில் வைத்து, இராணுவப்பாணியில் யுத்த முனையை உருவாக்கி துப்பாக்கியை முதுகுக்குப் பின்னால் நீட்டி உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டும். உண்மையில் உறுப்பினர் உறவுகளில் கூட ஜனநாயகத்தைக் கையாள முடியாதவர்கள், மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்குவார்கள் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். இந்த நிலையில் பல நெருக்கடிக்குரிய நிலைப்பாடுகளை



கையாளும் போது, தர்க்க ரீதியாகக் கூட நியாயப்படுத்த முடியாத ஒன்றாகி விடுகின்றது.

## வக்கற்ற அரசியல் புதைகுழியில் புலிகள்

புலிகளின் சர்வதேசக் கப்பல் போக்குவரத்து கடுமையான தொடர்ச்சியான சில நெருக்கடிகளை, சமாதானம் மற்றும் அமைதி மீது ஏற்படுத்தியது. இந்தக் கப்பல்கள் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி இறக்குவது தெரிந்ததே. ஆனால் பிரபாகரன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இதைத் தடுக்கின்ற போதும், இதை அடிக்கடி அவர்களே மீறினர்.

புலிகளின் சர்வதேசக் கப்பல் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், தெளிவாகவே இலங்கைக்கு உதவி வருகின்றன. கப்பல் இலங்கைக் கடலில் புகும் முன்பே தெளிவான செய்திகளை அரசு பெற்று விடுகின்றது. இதில் இருந்து தப்பிச் செல்லுதல் அல்லது அழிதல் என்ற நெருக்கடி, அமைதி, சமாதானம் மீதான இழுபறியான நிலையை உருவாக்கின்றது. ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மீற முயலும் புலிகள், தகவலை ஒட்டுக் கேட்கும் முறை ஊடாகக் கப்பலை நகர்த்திச் செல்ல முனைகின்றனர். நெருக்கடிக்கு உள்ளாகும் போது, ஐயோ அது சரக்கு கப்பல் என்றும் அதைத் தாக்கி விட்டதாகக் கூறி ஒரு உப்புச்சப்பற்ற பிரச்சாரமும் செய்கின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மீடியாக்கள் பக்கம் பக்கமாக கட்டுரைகள் எழுதுகின்றனர். முதலில் இது பிரபாகரன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக இருப்பதை இட்டு அலட்டிக் கொள்ளாது, தர்க்கமற்ற வகையில் நியாயப்படுத்துகின்றனர்.

புலிகளின் நேர்மை தொடர்பாக இவை பலதரம் நெருக்கடியை உருவாக்கியது. முதலில் இது ஒப்பந்தத்தை மீறுகின்றது. கட்டாயம் ஆயுதமல்லாத பொருட்களைக் கொண்டு வர வேண்டியிருந்தால், ஒரு கப்பலின் வருகையை நேர்மையாக அறிவித்துவிட்டு வருவதைத் தெரிவு செய்து இருக்க வேண்டும். இது ஒரு சரக்கு கப்பல் எனின், வருகையைக் கண்காணிப்பு குழுவுக்கு அறிவித்து, அவர்களின் கண்காணிப்பின் கீழ் சரக்கை இறக்க முனையலாம். ஆனால் இதை எதையும் புலிகள் செய்யவில்லை. பின் விதண்டாவாதமாகவே வாதாடுகின்றனர். இது தொடர்பாகப் பாலசிங்கம் கிளிநொச்சியில் ஆற்றிய உரையில் "விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வர்த்தகக் கப்பல் சேவையை நடத்தி வருவது உங்களுக்குத் தெரிந்ததுதானே. கடந்த 15 ஆண்டுகளாக தென்னாசியாவில், தென்கிழக்காசியாவில் எமது கப்பல் போக்குவரத்துகள், வர்த்தகச் சேவைகள் நடைபெற்று வருகின்றன என்பது ஒரு இரகசியமான விடயம் அல்ல.... அந்தக் கப்பல் எந்த விதத்திலும் சட்டவிரோதமான வர்த்தகத்தில் ஈடுபடவில்லை. அது எமது வர்த்தகக் கப்பல். அதாவது சட்டபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட கப்பல." என்று விளக்கினார். இப்படியெல்லாம் கூட வாதம் செய்வது எப்படி தான் முடிகின்றது. ஐயா உங்களால்? சட்டப்பூர்வமான கப்பலாக இருக்கலாம். ஆனால் சட்டப்பூர்வமாக எங்கே சரக்கை ஏற்றி, இலங்கைக்குள் சட்டபூர்வமாக எங்கே புக முனைந்தனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது எங்கே கொண்டு செல்ல முனைந்தனர்? இதை இலங்கைக் கடலுக்குள் அல்லது அதற்கு அருகில் எதற்காகக் கொண்டு வந்தனர்? சட்டப்பூர்வமாக அதை எங்கே ஏற்றி இறக்க முனைந்தனர்? சட்டபூர்வமான விடயங்கள் இரகசியமானவை அல்ல. சர்வதேசச் சட்டத்தையே மீறுகின்ற இந்த நடவடிக்கையை முதலில் சுயவிமர்சனம் செய்ய வேண்டும். அது அரசியல் நேர்மை.

ஆயுதங்களைக் கொண்டு வருவது, போராடுவது என்பதெல்லாம் போரில் இயல்புதான். எதிரி அதை சட்டவிரோதமானது என்று சொல்லலாம். ஆனால் அமைதி, சமாதானம் என்ற அடிப்படையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ள நிலையில் அதை மீறுவது, ஒட்டு மொத்த மக்களையே ஏமாற்றுவதுடன், போராட்டத்துக்கே துரோகம் இழைப்பதாகும். இது போலவே அரசும் இராணுவ உபகரணங்களையும், ஆயுதங்களையும் வாங்கும் பட்சத்தில், அமைதி சமாதானத்தின் பெயரில் நிறுத்தக் கோரி போராடலாம். அதை நிறுத்த மறுக்கும் பட்சத்தில், ஆயுதத்தை நீங்களும் கொண்டு வரும் உரிமையைக் கோரியிருக்கலாம். இதனடிப்படையில் மக்களை மந்தைகள் அல்லாத ஒரு நிலையில் அணிதிரட்டியிருக்க வேண்டும். இதனடிப்படையில் இதை மக்களின் உணர்வுபூர்வமான கோரிக்கையாக்கி, இலங்கையின் ஆயுத இறக்குமதியைக் கட்டுப்படுத்த நிர்ப்பந்தித்திருக்க வேண்டும். இலங்கை சட்டப் பாதுகாப்பு என்ற சட்டப்பூர்வமானத் தேவைக்கு, கனரக மற்றும் தேவைக்கு மிஞ்சிய ஆயுதங்கள் வாங்குவதை நிறுத்தக் கோரியிருக்கலாம். அதைப் புலிகள் நேரடியாகக் கண்காணிக்கும் உரிமையைக் கோரியிருக்கலாம். ஆனால் அதைப் புலிகள் செய்யவில்லை. ஆனால் எப்போதும் போல் இது போன்ற நடவடிக்கைகள் மூலம் சட்டப்பூர்வமான சர்வதேசக் கண்கணிப்பை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டனர். இது உண்மையில் மக்களின் மேலான அடிமை விலங்கை இறுக்கி வருகின்றன.

புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் புறம்பாக, ஆயுதங்களைத் தமது கட்டுப்பாடு அல்லாத பிரதேசத்துக்கு கடத்திச் சென்ற பல சம்பவங்கள் பிடிபட்டுள்ளன. ஒவ்வொன்றின் போதும் அமைதியையும், சமாதானத்தையும் தூக்கில் தொங்கவிடவே முயன்றனர். இந்த வகையில் ஆயுதங்களுடன் நெடுந்தீவுக் கடலில் கைப்பற்றப்பட்ட வள்ளம் (ஒருவகை சரக்கு கப்பலை போன்றது) கடும் நெருக்கடியை உருவாக்கியது. கவனமாகப் பராமரிக்கப்பட்ட நிலையில், வள்ளத்தின் விளிம்புகளின் இடையில் புதைக்கப்பட்ட நிலையில் கொண்டு சென்ற ஆயுதங்களை, நெடுந்தீவில் இறக்க முனைந்த சம்பவம் இலங்கை கடற்படையால் இனம் காணப்பட்டது. கண்காணிப்புக் குழு நேரடியாகவே வள்ளத்தில் இருந்த ஆயுதங்களைக் கண்டறிந்தனர். இந்த நிலையில் கண்காணிப்புக் குழுவுடன் வள்ளத்தைப் புலிகள் தகத்தனர். இதில் எச்சரிக்கை அடைந்த கண்காணிப்புக் குழு தப்பித்துக் கொண்டது. வள்ளம் புலிகளின் உறுப்பினர்களுடன் வெடித்துச் சிதறியது.

புலிகளின் தலைவர்கள் அதை மீன்பிடி படகுகள் என்றனர். ஆயுதங்கள் எதுவும் இல்லை என்றனர். ஆயுதங்கள் கண்டுபிடித்த போது,



கண்டுபிடித்தவர்களுடன் வெடிவைத்து தகர்த்து விடுவதன் மூலம், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறவில்லை என்று காட்ட முனைந்தனர். வெடிப்பை அரசின் மேலான குற்றச்சாட்டாக்கவே முனைந்தனர். இதன் மூலம் புலிகளின் இழிவான நடத்தைகள், உலகுக்கு மீள ஒருமுறை அம்பலமானது. அரசியல் செயல்பாடுகளை விட, புலிகளின் இராணுவச் செயல்பாடுகள்தான் ஒப்பந்தத்தையே கேள்விக்குள்ளாக்கியது. அமைதியை, சமாதானத்தின் போலித் தனத்தை சிலுவையில் அறைந்துவிடவே விரும்பினர் புலிகள்.

அடுத்து நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பி யை அரசியல் ரீதியாக அல்ல, இராணுவ ரீதியாக வெளியேற்ற முனைந்த வழிமுறை மீண்டும் சர்வதேச தலையீட்டை ஆழப்படுத்தியது. ஈ.பி.டி.பி. உண்மையில் இலங்கை அரசுடன் இணைந்து இயங்கும் துரோகக் குழு தான். புலிகள் வரையறுக்கும் அடிப்படையில் இதை நாம் வரையறுக்கவில்லை. இந்தத் துரோகக் குழுவை பலாத்காரமாக வெளியேற்ற எடுத்த முயற்சி, புலிகளின் அரசியல் வங்குரோதத்தையே மீண்டும் எடுத்துக் காட்டியது. தமிழ் மக்களின் தேசிய நலனுக்கு எதிராக இலங்கை அரசுடன் கைகோர்த்துள்ள ஈ.பி.டி.பி யை, அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தி அதை தனிமைப்படுத்தியே அழிக்க வேண்டும். இதைச் செய்ய முடியாத புலிகளின் அரசியல், ஜனநாயக விரோதத் தன்மையால் புழுத்துக் கிடக்கின்றது.

புலிகளின் மக்கள் விரோத நடத்தைகளால், ஈ.பி.டி.பி போன்ற குழுக்கள் அரசியல் பலம் பெறுகின்றன. புலிகளுடன் முரண்படுகின்ற மாற்று அரசியலை வைக்க முடியாத வக்கற்றவர்கள் அனைவரையும் படிப்படியாக தன் பின்னால் அணிதிரட்டுகின்றது. இந்த நிலைமையை ஊக்குவிக்கும் புலிகளின் மக்கள் விரோத அரசியல், அதை இராணுவ ரீதியான வன்முறை மூலம் அழித்துவிட முனைகின்றனர். அதுவும் சமாதானம், அமைதி என்ற கோஷத்தின் கீழ், இன்றைய உலக ஒழுங்கில் (உலகமயமாக்கத்துக்கு Globalisation) விசுவாசமாக இருக்க ஏகாதிபத்தியங்களுடன் கொஞ்சிக் குலாவும் ஒரு நிலையில், மக்களைக் காப்பாற்றுவது எனும் பெயரில் புலிகளால் இராணுவ ரீதியான வன்முறைகள் புலிகள் மேலான ஏகாதிபத்திய அச்சுறுத்தலை சட்டப்பூர்வமாக்கி விடுகின்றது. இதை விட ஆங்காங்கே சுட்டுக் கொல்லப்படும் மாற்றுக் குழு உறுப்பினர்களின் கொலைகள், மேலும் புலிகளைத் தனிமைப்படுத்தி வருகின்றது.

தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் தான், ஈபிடிபி போன்ற துரோகக் குழுக்களுக்கான அரசியல் அடிப்படையைத் தொடர்ந்து கொடுக்கின்றது. இன்று கணிசமான அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டுள்ள இக் குழு, புலிகளின் ஜனநாயக விரோத கட்டமைப்புக்குள் தான் உயிர் வாழ்கின்றது. மக்கள் பிரிவுகளின் அடிக் கட்டமைப்பில் இருந்து மேல் கட்டமைப்பு வரை, புலிகளின் ஒவ்வொரு மனித விரோத நடவடிக்கையையும் பயன்படுத்தி திட்டமிட்ட வகையில் தன்னை ஒழுங்குபடுத்தி வருகின்றது. புலிகளின் ஒவ்வொரு மனித விரோதச் செயலையும் தனக்கு மூலதனமாக்குகின்றது. இலங்கை அரசுடன் இணைந்து நிற்கும் இக் குழு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அறுவடையை இலங்கை அரசுக்குச் சற்று எட்ட நின்றே செய்கின்றது. அதாவது பெரியளவில் மக்கள் மத்தியில் அம்பலப்படாத வகையில், மக்களின் நாளாந்த பொருளாதாரக் கட்டுமானங்கள் மேல் அதிக நுட்பத்துடன் இணைந்து இயங்குகின்றது. உதாரணமாக தன்னார்வக் குழுக்களின் நிலையில் செயல்படுவதன் மூலம், தனது சமூக அடித்தளத்தை மக்கள் மத்தியில் நிறுவுகின்றது. அதேநேரம் புலிகளின் அனைத்து மனிதஉரிமை மீறலையும் கண்டிப்பதன் மூலம், பாதிப்புக்குள்ளாகும் மக்களையும் கவர்ந்து இழுக்கின்றது.

புலிகள் இக் குழுவைப் பலாத்காரமாக வெளியேற்ற எடுத்த முயற்சி ஒவ்வொன்றிலும் ஏகாதிபத்தியங்கள் தலையிட்டன. ஒவ்வொரு கொலையிலும் புலிகள் மேல் அழுத்தங்களை அதிகப்படுத்தினர். அரசுடன் சேர்ந்து இயங்கும் குழுக்களை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தி அவர்களை இல்லாது ஒழிக்கவேண்டும். இதற்கு முதலில், மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை அவர்களுக்கு வழங்கி, மக்களைச் சார்ந்து நிற்க வேண்டும். அமைதி சமாதானம் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடந்து நின்ற வன்முறை மூலம் ஒழிக்க முடியாது. அமைதி, சமாதானம் என்பது ஏகாதிபத்தியத்தின் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட நிலையில், இது போன்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொச்சைப்படுத்தவே செய்கின்றது. புலிகள் வழமை போல் கையாளும் குண்டர் வழிமுறைகளால், சர்வதேசக் கண்காணிப்பைத் தகர்க்க நினைத்த முட்டாள்தனம் மீண்டும் நிர்வாணமாகியது அவ்வளவே.

இடுப்புப்பட்டி அணியும் போராட்டம் - உண்மையில் புலிகள் தாங்கள் விரித்த வலையில் தாமே சிக்கி கொண்டு வெளியேற துடிக்கும் போது, இந்தப் போராட்டம் அர்த்தமற்ற மோதலாக வெடிக்கின்றது. ஒப்பந்ததுக்கு முரணாக இடுப்புப் பட்டியை அணிந்து செல்லக் கூடாது என்பது இராணுவத்தின் வாதமாக இருந்தது. இதை அடுத்து மக்களின் பெயரில் புலிகள் ஒரு வன்முறையை நடத்தினர். தமிழ்ப் பெண்கள் சாதாரணமாக அணியும் இடுப்புப் பட்டி அணிவதை ஒட்டி இந்த மோதல் நடக்கவில்லை. விடுதலைப் புலிகளின் பெண்கள் அணி அணியும் இராணுவ இடுப்புப் பட்டியே மோதலுக்குரியதாகியது. இப்படிப் பல பத்து மோதல்கள் மூலம் யுத்தத்துக்கு மீண்டும் திரும்பி விடுவதை அடிப்படையாகக் கொண்டு புலிகள் செயல்பட்டனர். ஆனால் இவை எல்லாம் சர்வதேச அழுத்தம், புலிகளின் கழுத்தில் மேலும் இறுகுவதற்கு அப்பால் எதையும் சாதிக்கவில்லை. அமைதி, சமாதானத்தை கத்தி விளிம்பில் நிறுத்திய புலிகளின், முரண்பட்ட சர்ச்சைக்குரிய போராட்டங்கள் அனைத்தும் புலிகளின் இராணுவ நலன் சார்ந்தே இருந்ததே ஒழிய, மக்களின் நலன் சார்ந்து எந்தப் போராட்டமும் நடக்கவில்லை. மீண்டுவிட முடியாத புதைகுழியில் சிக்கிவிட்ட புலிகள் தடுமாறுவதின் விளைவுகளே இவை. புலிகளின் அரசியல் மலட்டுத்தனத்தில் உயிர்ப்பின் ஆற்றல் என்பது சாத்திமற்றதாகியதை, மீண்டும் வரலாறு போதிக்கின்றது. உண்மையில் மக்களின் பிரச்சனைகள் பல இருக்கின்றன. அவற்றைக் கையெடுக்கவும், அதை முன்நிறுத்தி போராடவும் முடியாத போராட்டங்கள் அனைத்தும், விதிவிலக்கின்றி தோல்வியில் முடிகின்றது.



இது போன்ற மற்றொரு சம்பவம், காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாமுக்குள், புகுந்து நடத்திய தாக்குதல். ஒரு முரண்பாட்டை எடுத்துக் கொண்டு, முகாமைச் சுற்றியுள்ள மக்களையும் கூட்டிச் சென்ற புலிகள் ஒரு வன்முறையைத் திட்டமிட்டே நடத்தினர். முகாமுக்குள் குண்டுகளை வீசியதுடன் சில பகுதிகளையும் எரித்தனர். இவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் இடையில் சிக்கி கொண்டதுடன், சிலர் எதற்கு செல்கிறோம் என்று தெரியாத நிலையிலேயே அநாதையாகக் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலை இராணுவம் தற்காப்பு கருதி நடத்தியதாக வாதிட்டது. கண்காணிப்பு குழு வழமை போல் முழுமையான அறிக்கை தருவதை தவிர்த்துக் கொண்டதுடன், இராணுவத் தாக்குதல் தற்காப்பு கருதியே நடந்தது என்ற நிலைப்பாட்டுடன் உடன்பட்டது. இந்த விவகாரத்தில் இருந்து படிப்படியாக புலிகள் பின்வாங்கி, எதுவும் நடக்காதது போல் நடந்து கொண்டனர். பலர் காயமடையவும், சிலர் கொல்லப்படவும் காரணமான இச் சம்பவம், புலிகளின் இராணுவ நலன் சார்ந்ததாக இருந்ததே ஒழிய, மக்களின் எந்த நலனையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படவில்லை. இந்த ஒரே காரணத்தினால் இதுவும் தோல்வி பெற்றது.

சீனாவின் மீன் பிடிக் கப்பல் மேலானத் தாக்குதல் ஒன்றின் மூலம், பலர் படுகொலை செய்யப்பட்டனர். புலிகள் இக் கொலைக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்றதுடன், அதை மூன்றாம் தரப்பின் மேல் குற்றம் சாட்டினர் கண்காணிப்புக் குழுவும் இதை மூன்றாம் தரப்பு என்ற பாணியில் கதை ஒன்றைக் கூறியது. அந்த மூன்றாம் தரப்பு யார் என்று மட்டும் கூறவில்லை. இந்தியா இதைத் தன் மீதான குற்றச்சாட்டாக வலிந்து எடுத்ததுடன், கண்காணிப்புக் குழுவின் அறிக்கையையும் கண்டித்தது. கண்காணிப்புக் குழு இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரத்தையும் முன்வைக்காது வழமை போல் சித்து விளையாட்டில் ஈடுபட்டது.

ஆனால் சர்வதேசச் சமூகமும், உலகமும் இதை புலிகள் மேலான குற்றச்சாட்டாகவே முன்வைத்தன. நாம் இதை ஆராய்ந்து பார்த்தால், இந்தப் பிரச்சனை மீதான புலிகளின் அரசியல், இராணுவ ரீதியான வன்முறையைத் தாண்டி வேறு விதத்தில் இதைக் கையாண்டு இருக்க முடியாது என்பது எதார்த்தம். அத்துமீறி மீன்பிடிப்பவர்கள் மீது, தொடர்ச்சியான தாக்குதல்கள் பல நடத்தப்பட்ட நிலையில், கடத்தல்கள் பல நடந்து வந்தது. இந்திய மீனவர்கள் ஆயுதம் ஏந்திய தமிழ்த் தரப்பால் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வந்தனர். இந்த வன்முறை நிகழ்வுகள் சர்வதேசக் கடற்படைகளை இலங்கையின் எல்லைக்குள் வலிந்து இழுத்துக் கொண்டு வருவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தமிழ்மக்களின் மேலான சர்வதேச அழுத்தத்தைப் புலிகள் வலிந்து திணிப்பதற்கு அப்பால், புலிகளின் இராணுவ அரசியலானது மக்களுக்கு எதையும் சாதித்துக் கொடுக்கவில்லை.

இது போன்று சிங்கள ராணுவத்தின் ஒரு வாகன விபத்தை அரசியலாக்கி அதை வன்முறையாக்கிய சம்பவம் கூட விதிவிலக்கற்றது. அன்றாடம் எத்தனையோ கோர விபத்துகள் தமிழ் தரப்பாலும், புலிகளாலும் நடத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிலையில், இராணுவம் நடத்திய விபத்தை அரசியலாக்கிய விதம் கேவலமானது. விபத்துகளின் மீதான பொதுவான சமூக நலன் சாராத தனிமனிதக் கண்ணோட்டத்தை எதிர்த்து அரசியலாக்க வேண்டுமே ஒழிய, அதை வெறும் சிங்கள இனவாத இராணுவத்துக்கு எதிரானதாக மாற்றி அமைத்தது என்பது, விபத்துக்கான அடிப்டைக் கண்ணோட்டத்தை மூடிமறைப்பதாகவே அமைந்தது. இதற்கு முன்பும், பின்பும் இதைவிடக் கோரமான எத்தனையோ விபத்துகளைப் புலிகளும் மற்றத் தமிழ்த் தரப்பும் செய்த போது, எந்த அரசியலும் கொதித்தெழவில்லை. உண்மையில் அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களின் நலனை முன்நிறுத்திப் போராட முடியாத, புலிகளின் வக்கற்ற அரசியலின், குறுகிய நலன் சார்ந்து கட்டமைக்கப்பட்ட போது அமைதியும் சமாதானமும் அர்த்தமற்ற வகையில் கேள்விக்குள்ளாகியது.

இது போன்று பல பத்துச் சம்பவங்கள் அமைதி, சமாதானத்தை யுத்த விளிம்புக்கு நகர்த்தியது. புலிகளின் இராணுவவாதம் சார்ந்து கையாளப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வி பெற்றன. மக்களின் வாழ்வுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மேல் அக்கறை அற்ற நிலையில், தமக்குத் தாமே ஏற்படுத்திய புதைகுழியில் இருந்து மீளமுடியாத நிலையில் தத்தளிக்கும் ஒரு போராட்டமே தொடர்ச்சியாக அரங்கேறுகின்றது.

## வக்கரித்த அரசியலும், ஏகப்பிரதிநிதிக் கோட்பாடும்

புலிகள் தம்மைத் தாம் ஏகப்பிரதிநிதியாக்க, இயக்கம் தொடங்கியது முதலே தணியாத தாகமாகக் கொண்டே அலைகின்றனர். படுகொலை அரசியல் மூலம் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக இருக்க, கடந்த 25 வருடமாக எடுத்த எந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை. அவை அனைத்தும் தோல்வி மேல் தோல்வியாகவே முடிந்தது. சில ஆயிரம் பேரைப் படுகொலை செய்த இரத்த வேள்வியால் கூட, ஏகப்பிரதிநிதித்துவக் கோட்பாட்டு அரசியல் தோல்வியேபெற்றது. மாறாக இதற்கு எதிரான குழுக்கள், கட்சிகள் இரத்த வேள்வியின் தொடர்ச்சியிலும் பிறப்பெடுத்தது. எதிரி இதைத் தனக்குச் சாதகமாக்கி தனக்கான குழுக்களை உருவாக்கும் கொள்கைக்கு, புலிகளது ஏகப்பிரநிதித்துவ அழித்தொழிப்புக் கொள்கை உதவத் தொடங்கியது. தொடர் படுகொலைகள் மூலம் ஒழித்துக்கட்டும் இராணுவ அரசியல், படுதோல்வி அடைந்ததைத் தவிர எதையும் சாதிக்கவில்லை. இதை உலகளவில் உள்ள மக்களின் அனைத்து எதிரிகளும் பயன்படுத்திக் கொண்டனர், கொள்கின்றனர். தமிழ் மக்களை அடக்கியொடுக்கக் கூடிய எந்த ஒரு நிலையிலும், ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுக் குழுக்களைப் புலிகள் ஏகாதிபத்திய நலனுக்கு இசைவாக உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் அமைதி, சமாதானம் என்று வேடம் கட்டி, மேடையில் அமைதி வழி ஏகப்பிரதிநிதித்துவக் கோட்பாடு ஆட்டம் போடும் அரசியலைத் தவிர, வேறு எதுவுமற்ற வெற்றுவேட்டுத்தனம் அரங்கேறுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சனையை வெறும் ஏகப்பிரதிநித்துவம் என்ற எல்லைக்குள் மலினப்படுத்தியதையே தேசிய அரசியலாக அரங்கேற்றுகின்றனர். இதை



அடிப்படையாகக் கொண்ட குழு மோதல் அரசியலை கோட்பாடாக்கி, தமிழ் மக்களை வம்பளக்க வைத்துள்ளனர். உண்மையில் இராணுவ ரீதியாக முன்பு பலதரம் சுட்டுப் படுகொலை செய்து அழித்த போதும் அழியாது தளைத்த குழுக்களை, புதிய பாணியில் அழிக்கும் முயற்சி ஒன்றை தொடங்கியதைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. புலிகள் தமது ஏகப்பிரதிநிதித்துவக் கோட்பாட்டுக்கு இசைவாக, ஒட்டுமொத்தக் குழுக்களையே பம்பரமாக்க எடுத்த முயற்சிகள் மீண்டும் படுதோல்விகளை சந்தித்து வருகின்றது. துரோகக் குழுக்களின் தலைமையை சமாதானமாகப் பேச அழைத்து, மிரட்டுவதன் மூலம் பினாமியாக்கியப் புலிகள், அவர்களைப் படிப்படியாக வெறும் பம்பரமாக்கினார்கள். அப்படி பினாமியான கும்பல் கூட சொந்தமாக எதையும் சொல்லவும், செய்யவும் வக்கற்று புலிகள் உருட்டி விளையாடும் பொம்மை பம்பரமான நிலையில், அவர்களது சொந்தக் குழுக்களுக்கு இடையில் மோதல்கள் உதித்து எழுந்தன.

இந்த மோதலானது, புலிகளால் நிகழ்த்தப்படும் தமக்கு எதிரான அனைத்தையும் கூட அப்பட்டமாகவே நியாயப்படுத்தும் அளவுக்குக் கூடச் சென்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும், புலிகளின் பம்பரப் பொம்மையாகிய ரவிராஜ் தினமுரசு பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் "நாங்கள் புலிகளால் ஆட்டுவிக்கும் பொம்மைகள் அல்ல" என்றார். அவர் மேலும் தனது பேட்டியில் "தமிழர் விடுதலைக் கூட்டணியில் சிலர் கொல்லப்பட்டது தேவையின் நிமித்தம் நடந்தது" என்றார். இப்படி தன்னிலை விளக்கம் அளித்தது. புலிகளுக்கு ஏற்றத் தோலாகினார். இவை பல முரண்பாடுகளை உருவாக்கியது. இதே போல் ரெலோவின் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் இனம் காணப்பட்டு சுடப்பட்டனர். இப்படி ஒரு சில கொலைகள் இந்த கூட்டமைப்புக்குள் நிறைவேற்றப்பட்டது. அடிமைப்படுத்திய சிறுமைப்படுத்திய நிகழ்ச்சி முன்னிலைக்கு வராவிட்டாலும், இவை புகைந்து வருவதைத் தடுக்க முடியவில்லை. இக் குழுக்கள் பம்பரப் பொம்மையாகிய நிலையில், புலிகளை ஏகப்பிரதிநிதிகள் என்று கிளிப்பிள்ளை போல் சொல்லும் நிலை உருவாகியது. இப்படிச் சொல்ல வைப்பதன் மூலம் உண்மையில் இவர்கள் (புலிகள்) ஏகப்பிரதிநிதிகள் அல்ல என்ற விடையத்தை, ஒப்புக் கொள்வதை அங்கீகரிக்கின்றது. அதாவது உண்மையிலேயே ஏகப்பிரதிநிதியாக இருக்கும் போது அதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. மாறாக அதைச் சொல்லும் போது எதார்த்தம் அதற்கு எதிராக இருப்பதை பட்டவர்த்தனமாக மெய்ப்பிக்கின்றது. இதன் மூலம் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல என்ற கருத்தும் பிரிவும் (அமைப்பு) மேலும் ஆழமாகப் பலமாகி வருகின்றது.

உண்மையில் புலிகளின் எதிரிகளைப் பலமாக்கும் கட்சி சுத்திகரிப்பையே புலிகளின் அரசியல் வெளியில் இருந்து இலகுவாக செய்துள்ளது. புலிகளுடன் சோரம் போகக் கூடிய பிரிவு தனிமைப்பட்டுச் சிதையும் அதே தளத்தில், உறுதியான பிரிவு மேலும் தன்னைப் பலப்படுத்தியதற்கு அப்பால், இந்த ஏகப்பிரதிநிதித்துவம் என்ற வாதம் மேலும் புலிகளை பலவீனமாக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலைக்கு வந்த ஆனந்தசங்கரியின் போராட்டம் இந்த வகையிலானதே. ஆனந்தசங்கரிக்கு எதிராக நேரடியாக ஆதாரமாக எந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாத நிலையில், ஒரு ஜனநாயக விரோத ஆடுகளம் உருவாக்கப்பட்டது. புலிகளை ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்ற வகையில், ஆனந்தசங்கரிக்கு எதிரான நடவடிக்கைகள் மிரட்டல்கள் ஜனநாயகத்தின் எல்லாவிதமான கபடங்களையும் கடந்ததாக அமைந்தது. மிரட்டல் ஆணையில் வைக்கப்பட்டு சரணடையக் கோரும் எல்லையில்லாத புலிகளின் முயற்சி, உண்மையில் கூட்டணியில் இருந்த புலிகளுக்கு எதிரானக் குழுவைப் பலப்படுத்தியுள்ளது. இதன் மூலம் புலிகள் எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக தனக்கு சவால் விடக்கூடிய குழுவைப் பலப்படுத்தினர். இந்த அரசியல் நிகழ்ச்சியைக் கடந்து எதையும் புலிகள் சாதிக்கவில்லை.

இந்தளவுக்கு ஆனந்தசங்கரி புலிகளுடன் வரையறுக்கப்பட்ட எவ்லைக்குள் இணங்கிப் போகத் தயாராகவே இருந்தவர். புலிகளின் அனைத்து மனித விரோத தன்மையையும் அங்கீகரித்து சென்றவர். அதை இன்றும் தொடர்ந்தும் பாதுகாப்பவர். ஆனால் புலிகளுடன் கரைந்து செல்ல மறுத்தார். வெறும் பொம்மையாக, புலிகள் விளையாடும் பம்பரமாக இருக்க மறுத்தார். இந்த முரண்பாடு மேலும் ஆழமாக, அதற்குள் இருந்த பிழைப்புவாதக் கும்பல் ஆனந்தசங்கரியை ஓரங்கட்டி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தனர். ஆனால் நிலைமை தலைகீழாகி உள்ளது. வரலாற்றில் இந்தப் பொம்மைகள் விலாசமற்று போகும் நிலைக்குத் தம்மைத் தாம் தரம் தாழ்த்தினர். பொம்மை பம்பரங்கள் எப்போதும் குப்பையில் தூக்கி வீசப்படும் ஒரு எல்லையில் தான் உயிர்வாழ்கின்றன என்ற உண்மை, இலங்கை அரசியலில் களம் கண்டுள்ளது.

ஆனந்தசங்கரியைத் தனிமைப்படுத்தி, ஒழித்துக்கட்டும் ஒரு முயற்சியை உள்ளிருந்தே எடுத்துக் கொண்டிருந்த ஒரு நிலையில், யாழ் பொதுசன நூல் நிலையத் திறப்புவிழா பற்றிய அரங்கேற்றம் ஒன்று நடைபெற்றது. ஆனந்தசங்கரியின் குழுவைத் தனிமைப்படுத்தி இல்லாது ஒழிக்கவும், சாதிய ஆதிக்கத்தைத் தக்கவைக்கவும், ஒருங்கே ஒருங்கிணைந்து இந்தத் திறப்பு விழாவுக்கு எதிராகப் பினாமிப் பெயர்களில் பலரைப் புலிகள் களத்தில் இறக்கினர். கூட்டணியில் இருந்த சாதி வெறியர்களை உசுப்பி அவர்களைப் பிரித்து தம் பக்கம் சேர்த்த புலிகள், ஆனந்தசங்கரியை ஒழித்துக்கட்ட எடுத்த முயற்சிக்கு மக்களின் ஆதரவைத் திரட்ட முடியவில்லை. பினாமிப் பெயரில் உருவான குழுக்களின் முயற்சிகள் தோற்றுப் போன நிலையில், புலிகளே நேரடியாகவே வந்து அறைக்குள் வைத்து மிரட்டியதன் மூலம், இந்த திறப்புவிழா முடிவுக்கு வந்தது.

உண்மையில் ஆனந்தசங்கரியும் அவர் குழுவும் அரசியல் லாபத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தத் திறப்புவிழாவில் ஈடுபட்டன. அதைத் தடுத்த புலிகளும் அதையே செய்தனர். மக்களின் நலன் என்பது எந்த விதத்திலும் இருதரப்பிலும் இருக்கவில்லை. இழுபறியான நிலையில் முடிந்து போன நிலையில், நூல் நிலையம் ஒரு வருடமாக திறக்கப்படவில்லை. அதை



உத்தியோகபூர்வமாகத் திறக்காமல், மக்கள் பாவனைக்கு திறந்து விட முடிவெடுத்துள்ளதாக அறியவருகின்றது. உண்மையில் அறிவியல் பூர்வமாக கையாளத் தவறிய போது, குழு நலனும் சாதி அரசியலும் மீண்டும் யாழ் போராட்டமாகியது. வக்கரித்துப் போன அரசியல் மலட்டுத்தனமானது, ஜனநாயக விரோத நடைமுறைகள் மூலம் மீண்டும் அரங்கேறியது. புலிகளுக்கு எதிரான பிரிவு இந்த வக்கற்ற ஜனநாயக விரோதப் போக்கை மிகத் திறமையாக பயன்படுத்தி, தம்மை மேலும் ஒரு தனித்துவமான அணியாகப் பலப்படுத்திக் கொண்டது. உண்மையில் புலிகள் இதன் மூலம் எதைச் சாதித்தனர் என்றால் எதுவுமில்லை. ஆனால் உலகளவில் தனிமைப்படுவது அதிகரித்துள்ளது. தமிழ் மக்களின் எதிரிகளுக்குப் புதிய ஒரு பலமான குழுவை உருவாக்கி கொடுத்துள்ளனர். தமிழ் மக்களின் இழப்பு ஆழமானதாகச் சிதைந்து செல்வதைத் தாண்டி, எதுவும் தமிழ் மக்கள் பெறவில்லை.

## ஏகாதிபத்தியங்களும் புலிகளும்

புலிகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான அரசியல் பொருளாதார உறவு என்பது, இனவாத அரசு கையாளும் உறவுக்கு முரணானது அல்ல. உலகமயமாதல் நிகழ்ச்சியில் அக்கம்பக்கமாக, வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் ஒருவரையொருவர் தூக்கிவிடும் கொள்கையையே புலிகளும், இனவாதச் சிங்கள அரசும் கைக்கொள்கின்றன. இவர்களுக்கு இடையில் அடிப்படையில் என்ன முரண்பாடு உண்டு? தமிழனை அடக்கியாண்டு உலகமயமாக்கத்துக்கு மேலும் விசுவாசமாக யார் இருப்பது என்பதே. இந்த இடத்தில் ஏகாதிபத்தியம் தனக்கு விசுவசமான இந்த இரண்டு நாய்களையும் எப்படி சமாதானப்படுத்தி, ஒரேவீட்டில் காவல் காக்க வைக்கலாம் என்ற தனது நரித்தனத்தற்காக சமாதானம் அமைதி என்று கூறி ஒற்றுமைப்படுத்தும் களத்தில் இறங்கியுள்ளன. கடந்த இரண்டு வருடத்துக்கும் அதிகமாக நடக்கும் இழுபறியான நீடித்த நிகழ்ச்சி நிரலில், ஏகாதிபத்திய நலனைக் கடந்து வெளியில் எதுவும் நடக்கவில்லை.

புலிகள் என்ற குழுவின் நலன் இங்கு கூர்மையாக வெளிப்படுகின்றது. தனித்து தமிழர் தரப்பில் தாம் மட்டும் ஏகாதிபத்திய நாயாக இருக்கக் கோரும் கோரிக்கையில் இருந்தே முரண்பாடுகள் புலிகளுக்கும் - சிங்கள அரசுக்கும் இடையில் நீடிக்கின்றன. இதன் அடிப்படையில் முரண்பாடுகள் அரங்குக்கு வரும் போது, புலிகள் வழமை போல் ஏகாதிபத்திய நலன்களையும், அவர்களின் நோக்கத்தையும் ஒப்புக் கொள்கின்றனர். அதைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான பாலசிங்கம் வழங்கிய பேட்டியில் “இந்த மாநாட்டுக்கு முன்னரே இந்த மாநாட்டுப் பிரகடனங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன என்பது எங்களுக்குத் தெரியும். இலங்கை, நோர்வே அரசுகளும் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளும் இந்தத் தீர்மானங்களை நெறிப்படுத்தும் என்பதும் முன்னரே நாம் அறிந்த ஒன்றுதான். இந்த மாநாட்டில் பங்குபற்றும் நாடுகளும் அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புகளும் இந்தத் தீர்மானங்களில் ஒப்பமிடவேண்டும் என்ற நோக்கத்தோடு அவை தயாரிக்கப்பட்டன. ஆனால், நாம் இந்த மாநாட்டில் பங்கு பற்றமாட்டோம் என்பது உறுதியானதால் அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாற்றங்கள் செய்யப்பட்டன எனவும் பின்னர் அறிந்தோம். இப்படியான சர்வதேச பொறி ஒன்று தயாராகி இருக்கின்றது, காத்திருக்கின்றது என்பதை மாநாட்டின் முன்கூட்டியே நீங்கள் உங்கள் பத்திரிக்கையில் வெளிப்படுத்தியிருந்தீர்கள். நீங்கள் எங்கு அத்தகவலைப் பெற்றுக்கொண்டீர்களோ தெரியவில்லை. ஆனால், அது முற்றிலும் சரியான தகவல்தான். உலகத்தில் உள்ள பெரிய வல்லரசுகள் சில, இதில் தலையிட்டு ஒரு பொருளாதார 'பிளாக் மெயில்' ஆக நிதியைப் பணயமாக வைத்து அச்சுறுத்தி சில காரியங்களைச் சாதிக்க முயற்சிக்கின்றன. அது தவறு. சர்வதேச நியமங்களுக்கு மாறானது நீதியானதல்ல,

எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு முரணாக வழிகாட்டும் வரைபடத்தைத் தயாரித்து, அதை எமது மக்கள் மீது திணிக்கும், நிர்ப்பந்திக்கும் ஓர் எத்தனமாகவே இது உள்ளது. டோக்கியோ மாநாட்டில் அறிவிக்கப்பட்ட வழிகாட்டு வரைபடம் ஒரு நிரந்தரத் தீர்வைக் காணும் ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும் திட்டத்துடன் முன் வைக்கப்படவில்லை. ஓர் உப்புச் சப்பற்ற மாகாண அதிகாரப் பரவலாக்கலுடன் அரசமைப்பில் ஏதோ சில திருத்தங்களைச் செய்யும் முயற்சியாகவும் அது இருக்கலாம். அதை நாம் ஒரு போதும் ஏற்கப்போவதில்லை. ஆனால், திடீரென கடந்த ஒரு வருடகாலமாக ரணிலின் அரசு தனது சுயநலத்துக்காக தனது அரசுக்குக் கடன்பெறும் நோக்கத்துக்காக, தனது அரசின் இறைமைக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறி, பல வெளிநாடுகளை இந்த விடயத்துக்குள் தலையிடவைக்கும் புறநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. தனது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் புலிகளை அச்சுறுத்தி அடக்கவுமே இந்த சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னலை, சதிவலைப்பின்னலை, ரணிலின் அரசு உருவாக்குகின்றது.... எந்தச் சக்தியினாலும் எங்களை மிரட்டி, பணியவைத்து, எமது மக்களின் சுதந்திரத்தை விலைபேசி விற்கச்செய்து, ஒரு தீர்வை நோக்கி நகரச்செய்ய வைக்க முடியாது என்பதை டோக்கியோ மாநாட்டுப் பகிஸ்கரிப்பு மூலம் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம்." என்ற பேட்டி, அமெரிக்காவில் கடன் வழங்குவதற்காக நடத்திய கூட்டத்துக்குப் புலிகள் அழைக்கப்படாத நிலையில், தொடர்ச்சியான கூட்டங்களைப் புலிகள் பகிஸ்கரிக்கத் தொடங்கிய போது கூறப்பட்டது.

இது இங்கு புலிகளை, அவர்களது அதிகாரத்தை ஏகாதிபத்தியங்கள் அனைத்துத் தளத்திலும் அங்கீகரிக்க மறுத்த நிலையில் வெளிவந்த கருத்தாகும். நோர்வை தலையிடத் தொடங்கியது முதல், அன்னியத் தலையிடுகள் இலங்கையில் அனுமதிக்கப்பட்ட போதும் கூட புலிகள் இதைச் சொல்லவில்லை. புலிகள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் மட்டுமே நாம் பேசுவோம் என்று முன்வைத்துக் கோரிய போது, மூன்றாம் தரப்பினரின் தலையீட்டுக்கான உரிமையை அங்கீகரித்த போது இதைக் கூறவில்லை. (உண்மையில் இந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், என்பதைப் புலிகளுக்கு எதிராக 1992-இல் குமார்பொன்னம்பலமே வைத்தவர். (பார்க்க: தமிழோசை பத்திரிகையை) அதில் அவர் புலிகளுக்கும் அரசுக்கும் எதிராக இந்தியத் தலையீட்டை அல்லது வேறு வெளிநாட்டின் தலையீட்டைக் கோரினார்.)



இரகசியமாக அங்கும் இங்குமாக பேசித் திரிந்த போது, இந்த சதியைச் சொல்லவில்லை. சொந்தக் குழுவின் நலன்கள் கேள்விக்கு உள்ளாகிய போது, இதைப் புலிகள் தங்களின் புதிய கண்டுபிடிப்பாகத் தற்காலிகமாகவே முன்வைத்தனர். குழு நலன் கேள்விக்குள்ளாகிய போது, தமிழ் மக்களின் சுயநிர்ணயம் பற்றி மூக்காலும் வாயாலும் அழுகின்றனர்.

ஆனால் இரகசிய பேரங்கள் தொடர்ந்த போது, சிரித்து மகிழ்கின்றனர். தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை தமது சொந்தக் குழுவுக்கு இசைவாக விளக்கம் கொடுத்து காட்டிக் கொடுக்கின்றனர். இதை விரிவாகப் பார்ப்போம் இந்த சமாதானம், அமைதி என்ற நாடகத்தில், புலிகள் தமது கொள்கைள் உலகமயமாதல் தான் என்பதை வலியுறுத்தி ஏகாதிபத்தியத்திடம் வாலாட்டத் தயங்கவில்லை. இதற்கு சொந்த மக்களையும், தேசிய நலன்களையும் விற்றுவிடவும் தயாராக இருக்கின்றனர். உங்கள் பொருளாதாரக் கொள்கை என்ன என புலிகளிடம் அமெரிக்கா கேட்ட போது, பாலசிங்கம் அசகு பிசகாது "தாராள ஜனநாயகப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கைக்கே நாம் ஆதரவானவர்கள் என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்" என்றார். உண்மையில் இதைத் தேசியம் என்றும், மக்களுக்குச் சார்பான கொள்கை என்றும் உலகில் யாராலும் நிறுவமுடியாது. கோட்பாட்டளவில், நடைமுறையில் இதன் விளைவு நாட்டை மறு காலனியாக்குவதே ஒழிய வேறு எதுவும் அல்ல. இங்கு இதை முன்வைக்கும் புலிகளின் பாத்திரம் என்னவாக இருக்கும். இந்த ஏகாதிபத்தியக் கொள்கையை நாட்டில் அமுல்படுத்தும் தரகராக மாறி, மக்களை அடக்கியொடுக்குவதைத் தாண்டி எதையும் மக்களுக்காகச் செய்ய இடமிருப்பதில்லை.

தாராளப் பெறுமானங்களை கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கை என்பது, புலிகள் தமிழீழத் தாயகம் என்று இயக்கம் தொடங்கிய போது இருந்த கோரிக்கை அல்ல. இது ஏகாதிபத்தியம் உலகளாவில் அமுல் செய்துள்ள உலகமயமாதல் கொள்கையே ஆகும். இதுவே இன்று புலிகளின் கொள்கையாகியது. இதற்கு வெளியில் புலிகளிடம் ஒரு தனியான பொருளாதாரக் கொள்கை என்பது கிடையாது. புலிகள் என்ற குழு, ஆளும் ஒரு பாசிசக் கட்டமைப்பில், தாராள பெறுமானங்களைக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல் செய்யக் கோரும் உரிமையே சுயநிர்ணயம் என்று கோருகின்றனரே ஒழிய, வேறு ஒன்றையும் அல்ல. மக்கள் என்றும், தியாகம் என்றும் போடும் எல்லாவிதமான அரசியல் கூத்துகளின் இறுதி விளைவு, உலகமயமாதல் கொள்கையை அமுல் செய்யும் அதிகாரத்தை புலிகள் தம்மிடம் தரக் கோருகின்றனர். இதைவிட வேறு எதுவுமே அல்ல.

இந்த நிலையிலும் ஏகாதிபத்தியம் புலிகளிடம் அங்கீகரிக்க மறுப்பது எதை? புலிகள் தாராள பெறுமானங்களைக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல் செய்யும் பாசிசக் கட்டமைப்பை, தனது சொந்தத் தலைமையில் பிரித்துத் தரக் கோருவதையே ஏகாதிபத்தியங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இது ஏகாதிபத்தியத்துக்கு முரண்பாடான விடயம் அல்ல. ஆனால் இலங்கையில் இதைக் கையாள்வது, உலகமயமாதல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நலனுக்கு எதிரானதாக இருப்பதால், புலிகளின் கோரிக்கையை மறுக்கின்றனர் அவ்வளவே. இந்தப் பொருளாதாரக் கொள்கையை இலங்கைக்கு உட்பட்ட ரீதியில், இதை அமுல் செய்யக் கூடிய எதிர் போட்டிக் குழுக்களையும் அனுமதித்த எல்லையில் புலிகளை இணங்கி வரக் கோருகின்றனர். இதுவே சமாதானமாகி அமைதியாகி நிற்கின்றது. இங்கு அமைதி, சமாதானம் என்பது மக்களின் நலனில் இருந்து உருவாகவில்லை.

இதைப் பிசகு இன்றி பிரதிபலித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஆஷ்லி வில்ஸ் "இலங்கையின் நண்பர்கள் அதிகளவு தாராள சிந்தனையுடன் செயல்படும் நோக்கத்துடன் இருக்கிறார்கள் என்பதே எனது அபிப்பிராயமாகும். வட கிழக்கின் அபிவிருத்தியடையாத பகுதிகளுக்கே தமது பணம் சென்றடைய வேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றார்கள்" என்று கூறியதன் மூலம், தேசத்தின் அனைத்து விதமான உரிமைகளையும் எள்ளி நகையாடிய படி தமது சொந்த நாய்களைப் பாராட்டுகின்றார். அமைதி, சமாதனத்தின் உள்ளடக்கம் இதை தாண்டியவை அல்ல என்பதை தெளிவுபடுத்தி விடுகின்றார். அமைதி சமாதானம் எதுவும் இதற்குள்தான் சங்கமிக்கின்றது. முரண்பாடுகளும் இதற்குள் தான். இதற்கான விளக்கங்கள் எதுவும் இதைத் தாண்டி இருப்பதில்லை. வார்த்தை ஜாலங்களைத் தாண்டி முடிவுகள் பிசகு இன்றி தொடருகின்றது.

இந்த நிலையில் இதற்குள் புலிகளை இணங்கி வரக் கோரும் அமெரிக்கா அதை நேரடியாகவே வெளிப்படுத்திவிடுகின்றது. அமெரிக்கத் தூதர் ஆஷ்லி வில்ஸ் "..புலிகளின் பொருளாதாரக் கொள்கை என்ன? சகலவற்றையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சிக்கிறார்களா? இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து வட, கிழக்கை தனிமைப்படுத்தி அங்கு சர்வாதிகாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது என்று அவர்கள் கருதுகிறார்களா? இதற்கு உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகள் இணங்க மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்" என்று மிகத் தெளிவாகவே அமெரிக்கா புலிகளுடான அடிப்படை முரண்பாட்டைத் தெளிவுபடுத்தி விடுகின்றனர். இந்தக் கட்டமைப்பை தாண்டி, எந்த சமாதானத்தையும் புலிகள் ஏற்படுத்திவிட முடியாது. உலகமயமாதல் அமைப்புக்குள், அதற்குள் இணங்கிச் செல்லும் எல்லைக்குள், இது தான் உயர்ந்தபட்ச எல்லையாகும். இது அமெரிக்காவின் கொள்கை மட்டுமல்ல, அனைத்து நாடுகளின் கொள்கையும் கூட. புலிகளின் அரசியலை இதைத் தாண்டி நகர்த்த முடியாது. அப்படி நகர்த்த வேண்டும் என்றால், மொத்த அமைப்பையும் சுயவிமர்சனம் செய்து மீளவேண்டும். இதற்கு புலிகள் சார்பாகப் பதிலளித்த பாலசிங்கம் "தாராள ஜனநாயகப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கைக்கே நாம் ஆதரவானவர்கள் என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்" என்றார்.

இப்படிக் கூறுவதன் மூலம் ஏகாதிபத்தியத்தை திருப்தி செய்துவிட முடியாது. "தாராள ஜனநாயகப் பெறுமானங்களைக் கொண்ட திறந்த பொருளாதார" நலன்களை அடையும் சமூகக் கட்டமைப்பையே ஏகாதிபத்தியம் எதிர்பார்க்கின்றது. ஏகாதிபத்தியம் சார்பாக அமெரிக்கா உடனடியாக எதிர்பார்ப்பது என்ன? நடைமுறை ரீதியாக இலங்கைக்கு உட்பட்ட, உலகமயமாதலை ஆதரிக்கின்ற எதிர் கட்சிகளைக் கொண்ட, உலகமயமாதல் கொள்கையை நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறை ரீதியான மாற்றத்தையே கோருகின்றனர். இதை நடைமுறை ரீதியில் புலிகள் அமுல் செய்யும் பட்சத்தில், புலிகளை அங்கீகரிக்கத் தயாராகவே உள்ளனர். இதில் புலிகள் முரண்படுகின்றனரா எனின் இல்லை, ஆனால் இதை மறுசீரமைக்கக் கோருகின்றனர். தனிச் சர்வாதிகார அமைப்பை ஏகாதிபத்தியம் சம்மதிக்கும் பட்சத்தில், புலிகள் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யத் தயாராக இருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றனர். இது சாத்தியம் இல்லை என்றால், நீண்ட ஒரு காலத்திற்கு தமது ஆட்சியைத் தக்கவைப்பதன் மூலம் ஏகாதிபத்தியம் முன்வைக்கும் உட்கட்டமைப்புச் சீர்திருத்தத்தைச் செய்ய விரும்புகின்றனர். புலிகளின் அரசியல் இதைத் தாண்டி எந்த விதத்திலும் மீள முடியாது. யுத்தம் மூலம் கூட இந்த வரையறையைத் தாண்ட முடியாது. அமைதி சமாதானம் என்ற எல்லாவிதமான கூத்தும், இதற்குள் தான் கட்டமைக்கப்படுகின்றது.

ஏகாதிபத்தியங்கள் புலிகளின் நடைமுறையான, தெளிவான அணுகுமுறையை புலிகளிடம் கோருகின்றனர். இதை அமெரிக்கத் தூதர் ஆஷ்லி வில்ஸ் "இறுதித் தீர்வு ஏற்படும் வரை ஒருவரின் உரிமைகளும் கூட துஷ்பிரயோகம் செய்யக் கூடாதென்பதை சர்வதேச சமூகம் நெருக்கமாக அவதானிக்கும். புலிகள் கௌரவத்தை விரும்பினால் இதை ஏற்றுக் கொண்டு சிறீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து புதிய இலங்கையை" அமைப்பதே அவர்களுக்கு நல்லது என புலிகளை மிரட்டுகின்றார். நடைமுறை ரீதியாக புலிகளின் அணுகுமுறை எந்தளவுக்கு உலகமயமாதல் கொள்கையுடன் இணங்கிப் போகின்றதோ, அதுவே புலிகளுக்கான அரசியல் பாதை என்பதை அமெரிக்கா தெளிவுபடுத்தி விடுகின்றது. இதை அமுல் செய்ய மறுத்தால், புலிகளின் கௌரவம் என்று என்றைக்கும் இருக்கப் போவதில்லை என்பதை எச்சரிக்கையாகவே விடுக்கின்றார். புலிகளின் தலைவிதியை சர்வதேச சமூகத்தின் முன்பு, தெளிவாக வரையறுத்து விடுகின்றார். புலிகள் மக்களை எதிரியாக நடத்தி, மந்தைகளாக மாற்றியுள்ள நிலையில், அமெரிக்காவின் எச்சரிக்கையை எதிர்கொள்ளும் தார்மீகப் பலத்தைக் கூட புலிகள் பெற்று இருக்கவில்லை. அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக உலகமயமாதலுக்கு எதிராக வழிகாட்டி முன்னெடுத்துச் செல்லும் தார்மீகப் பலம் எதையும் புலிகள் கொண்டிருக்கவில்லை.

அடிப்படையில் இங்கு புலிகள் எதிர்கொள்வது ஏகாதிபத்தியத்துடன் இணங்கி போகும் கொள்கையையே. இந்தக் கொள்கை என்பது புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பு, மற்றும் அவரைச் சுற்றியுள்ள புலிக் குழுவின் பாதுகாப்புடன் தொடர்புடையதாகி நிற்கின்றது. முழுப் பேரத்தின் சாரம் இதற்குள் முடங்கி கிடக்கின்றது. இதை மக்களின் பெயரில் அல்லாது, நடக்கும் தனிப்பட்ட இரகசியப் பேரங்கள் அனைத்தும் இந்த எல்லையைத் தாண்டி நடக்கவில்லை. புலிகளுக்குச் சாதகமாக உள்ள இந்த பேரத்தையும் ஏதோ ஒரு விதத்தில் ஏற்க மறுத்தால், யுத்தம் தவிர்க்க முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியத்துடன் மோதும் ஒரு நிலைவரை விரிவடைந்தால், இந்த யுத்தத்தை புலிகளால் சிறிது காலத்துக்கு நடத்தமுடியும். தற்கொலை தாக்குதல் வடிவம் மூலம் இது தொடரலாம். ஆனால் புலிகள் மீட்சி பெற முடியாது. தலைமை திட்டவட்டமாக தெரிவு செய்யப்பட்டு அழிக்கப்படும். உண்மையில் தமிழ் மக்களுடன் ஒட்டோ உறவோ அற்ற புலிகளின் தலைவிதி இலகுவாகவே அழிக்கப்பட்டுவிடுவது தவிர்க்க முடியாது. இது ஈராக் அல்ல. ஆப்கான் மேலான ஆக்கிரமிப்பில் மிகப் பலமான தலிபான், மக்களிடம் அன்னியமாகிய நிலையில் எப்படிச் சிதைந்ததோ, அதுவே இங்கும் நடக்கும். மோதல் நடக்கும் எல்லாத் தளத்திலும் சர்வதேசப் படைகளை இறக்கும் தயாரிப்புகள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்கா தனது அலுவலகங்களை வடக்கு கிழக்கில் பரவலாகவே திறக்கின்றது. அவர்களின் பாதுகாப்பு என்ற பெயரில், அமெரிக்கப் படை இறக்கம் இலகுவாக நடக்கும்.

புலிகள் சமாதானம் அமைதியின் பெயரில் தமது அபிவிருத்திக்கு இலங்கை அரசானது உதவவில்லை என்ற சொல்லி செய்யும் பிரச்சாரத்துக்கு இலங்கை அரசு பதிலளிக்கவில்லை. பணம் கொடுப்பவர்களின் சார்பாக அமெரிக்காவே பதிலளித்தது. அமெரிக்கத் தூதர் ஆஷ்லி வில்ஸ் "இலங்கையிலுள்ள சிலர் இப்போதே பொருளாதார அற்புதம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்ற எண்ணப்பாடு எனக்கு ஏற்படுகின்றது. ரோமாபுரி ஒரே நாளில் கட்டியெழுப்பப்பட்ட நகரமல்ல. அது போல் கிளிநொச்சியையோ, திருகோணமலையையோ, அம்பாந்தோட்டையையோ நாம் விரும்பியவாறு துரிதமாக அபிவிருத்தி செய்ய முடியாது" என்று கூறியதானது ஒரு தேசத்தின் தலைவிதி அமெரிக்காவின் கட்டை விரலில் இருப்பதை தெளிவுபடுத்திவிடுகின்றது. ஒரு தேசத்தின் நிர்மாணத்தை தமிழ் சிங்கள இனத்தின் பிரச்சனையை அமைதி - சமாதானம் எனும் பெயரால் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் விற்ற பின்பு, கையேந்தி பிச்சை எடுககும் போது அதற்கு அமெரிக்கா பதிலளிப்பது அவசியமாகி விடுகின்றது. மக்களுக்கான எந்த அபிவிருத்தியையும் செய்ய, இலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சிக்கும் அருகதை கிடையாது என்பதையே இது காட்டுகின்றது. இவர்கள் ஒரு கக்கூசைக் கூட நிர்மாணிக்க முடியாத வக்கற்றவர்களாகிவிட்டனர். சமாதானம், அமைதி என்று களமிறங்கிய இலங்கை இனவாத அரசும் சரி, தமிழ் குறுந் தேசியப் புலிகளும் சரி ஏகாதிபத்தியத்தின் காலில் விழுந்து பிச்சை கேட்டு மண்டியிடுகின்றனர். மக்களை வரியின் பெயரிலும், பலவிதத்திலும் கொள்ளையிடும் பணத்தை, ஏதோ ஒரு விதத்தில் ஏகாதிபத்தியத்துக்குக் கையளித்து விடுகின்றனர். மக்கள் நலனில் ஈடுபடக் கூடிய எந்தக் கட்சியும் அற்றுப் போன நிலையில், மக்களின் நலன் என்பது அரசியலற்றதாகிவிட்டது. மக்கள் தமது சொந்த அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டம் மூலம் மட்டும் தான், இனி மக்களுக்கான ஒரு அரசை நிறுவமுடியும்.

மக்களை வெறும் மந்தைக் கூட்டங்களாக்கிய நிலையில், ஏகாதிபத்தியத்துக்கு இடைத் தரகராக நின்று மேய்க்கும் தரகுத் தொழிலைச் செய்யும் இவர்கள், மக்களின் கோரிக்கையில் இருந்து அரசியல் பேசும் தார்மீகப்பலத்தையே இழந்துவிட்டனர். தனிநபர்களை மையப்படுத்தியும், குழுவை மையப்படுத்தி நடக்கும் அரசியல் விபச்சாரத்தையே அரசியலாக்கி விட்டனர். தன்னைத் தானே மாாக்சியவாதியாகக் கூறிக் கொள்ளும் புதுவை இரத்தினதுரை மார்க்சியம் என்ற பெயரில் "ஒரு அற்புதமான தலைவனை எங்கள் தேசம் அடைந்திருக்கின்றது. அந்த தலைவனின் காலத்தில் எமது விடிவை காணுவதுடன் மட்டுமின்றி, எமது தேசத்தையும் நாம் நிர்மாணிக்க வேண்டும்" என்றார். புலிகளின் அரசியல் இந்தளவுக்குக் கேவலமானது. தேசிய விடுதலையை இப்படி சிறுமைப்படுத்த புலிகளால் மட்டும் தான் முடியும். தனிநபர்களின் பெயரால் தமிழ்த் தேசிய அரசியல் மலினப்படுவது, உண்மையில் தமது அழிவை தாமே உருவாக்கி விட்டதைக் காட்டுகின்றது. தமிழ் மக்களுக்கு எத்தனையோ தேசியப் பிரச்சனைகள் இருக்க, அதை முன்னிறுத்திப் போராட முடியாது போன புலிகள், அவற்றை எல்லாம் ஏகாதிபத்தியத்திடம் தாரைவார்த்துவிட்டனர். புலிகளின் தலைவரின் பெயரில் போராடக் கோருவது என்பது, புலிகளின் அரசியல் பழைய நிலப்பிரபுத்துவ மன்னர் பரம்பரையின் எச்சமாகிவிட்டது என்பதையே காட்டுகிறது. ஏன் புலிகளின் தலைவருக்காகப் போராட வேண்டும்? என்ற கேள்விக்கு பதிலளிப்பது சாத்தியமற்றதாகி விடுகின்றது. உண்மையில் பிரபாகரன் தலைமையும், அதைச் சுற்றியுள்ள குழுவின் பாதுகாப்பும், அவர்களின் வர்க்க நலன்களும் ஏகாதிபத்தியத்தால் கேள்விக்குள்ளாகி இருப்பதை இது பிரதிபலிக்கின்றது.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனை உயிருடன் இருக்க, அதற்குள் எத்தனையோ சமுதாயக் கோரிக்கைகள் இருக்கும் நிலையில் அவை அரசு மற்றும் புலிகளால் படிப்படியாக கைவிடப்பட்டதையே இரத்தினத்துறையின் வாதம் காட்டுகின்றது. இதில் அரசின் தமிழர் விரோதப் போக்கை மட்டும் பல புலித் தலைவர்கள் குறிப்பான பிரச்சாரமாக்கி வருகின்றனர். மறு தளத்தில் உண்மையில் தேசம் சிங்கள இனவாதிகளால் கூவி விற்கப்படுகின்றது. இதன் போது புலிகள் எங்களையும் கேட்டு விற்பனை செய்யுங்கள் என்று மட்டுமே கோருகின்றனர்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை இலங்கை அரசு இந்தியாவுக்கு கொடுத்தது பற்றி புலிகளின் சார்பாகத் தமிழ்ச்செல்வன் "அவசரப்பட்டு செய்யப்பட்டிருக்கிறது என்றே நினைக்கின்றோம். திருமலை எமது தாயகக் கோட்பாட்டுக்குள் உட்பட்ட பகுதி. எனவே இனி வரும் காலங்களில் இது போன்ற ஏதாவது முயற்சிகள் முன்னெடுக்கப்படும் பொழுது எங்களையும் கலந்தாலோசிப்பதையே நாங்கள் விரும்புகின்றோம்" என்று கூறினார். இது தான் புலிகள். இது தான் புலிகளின் தமிழ்த் தேசியம். மக்களுக்காக, உலகமயமாதலை எதிர்த்துப் புலிகள் சுண்டுவிரலைக் கூட ஆட்டமாட்டர்கள். இங்கு குழு நலன் சாாந்து மட்டும் தான் மோதல் நடக்கின்றது. இது அமைதி சமாதானம் யுத்தம் என்ற எல்லைக்குள் கூத்து நடத்தப்படுவதை காட்டுகிறது. இலங்கையில் சிங்கள தமிழ் பகுதி உலகமயமாதல் என்ற கொள்கைகளாக விற்கப்பட்டு, மறு காலனியாதிக்கம் வேகம் பெற்று வரும் நிலையில் புலிகள் அதை பற்றி மூடிமறைப்பதற்கே உதவுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நடக்கிறதே எனக் கேட்டபோது ஆம் நடக்கின்றது என்று புலிகள் ஒத்துக் கொள்கின்றனர். இதைத் தமிழ்ச் செல்வன் "இலங்கையின் இன விவகாரத்தில் சர்வதேசத்தின் ஈடுபாடு பாரியளவில் விரிவாக்கம் பெற்றுள்ளது உண்மை" என்றார். அதைத் தடுக்க என்ன செய்கின்றீர்கள் என்றால் எதுவுமில்லை. மாறாகத் தமது குழு நலன் சார்ந்து, நம்பிக்கையுடன் பேரங்கள் பேசி உதவுகின்றார்கள். இந்தக் குழு நலன் சார்ந்த மோதல் ஒன்று ஏற்படும் பட்சத்தில், சோரம் போகும் நிகழ்வு மூலம் தமது விலங்கைத் தாமே தயார் செய்கின்றனர் என்ற உண்மையைக் கண்டு கொள்வதில்லை. மாறாக சர்வதேசத் தலையீட்டை அதிகரிக்க உதவுகின்றனர். அதன் விசுவாசிகளாகத் தாம் இருப்பதை, வாலாட்டியபடி பிரகடனம் செய்கின்றனர். தமது பிரச்சனை என்ன என்று சொந்த மக்களிடம் எதுவும் சொல்ல முடியாது போயுள்ள புலிகள், உலகத் தலைவர்களிடம் மண்டியிட்டுச் சொல்லுகின்றனர்.

புலிகளுக்காக மண்டியிடும் தமிழ்ச்செல்வன் இதை ஒப்புக் கொள்கின்றார். "... நாங்கள் பல்வேறு உலக நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளோம். பல்வேறு நாடுகளில் அரசியல் உயர் மட்டங்களை, அதிகாரிகளைச் சந்தித்துள்ளோம். அவர்களுக்கு எமது நிலைப்பாட்டை எமது போராட்டத்தின் நியாயப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளோம். பல்வேறு நாடுகளின் இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்கு வருகின்றனர்.... நாங்கள் முடிந்தளவு சர்வதேச சமூகத்துக்கு எமது நியாயத்தை எடுத்துச் செல்லும் அனைத்து வழிமுறைகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம் தற்போது இலங்கையை நோக்கிய சர்வதேச தலையீடுகளுக்கு அப்பால் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற ஈடுபாடு அதிகரித்துள்ளது. ஐரோப்பிய யூனியன், ஜப்பான், அமெரிக்கா இந்தியா போன்ற பல சர்வதேசச் சமூகங்கள் ஆர்வம் கொண்டுள்ளன" என்றார். ஏகாதிபத்தியத்தின் ஆர்வங்களுடன் புலிகளின் ஆர்வங்களும் சந்தித்துக் கொண்டதைப் பெருமையாகப் பீற்றுகின்றார். அட தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை? என்று புலிகளிடம் கேட்டால் யாருக்கும் பதில் தெரியாது தள்ளாடுகின்றனர். ஆனந்தசங்கரியின் அரசியல் விபச்சாரத்தைப் பற்றியும், டக்களஸ் தேவானந்தனின் துரோகத்தைப் பற்றியும், ஜே.வி.பியின் இனவாதத்தைப் பற்றியும் பேச முடிகின்றதே ஒழிய, உங்களைப் பற்றியும் மக்களைப் பற்றியும் பேச முடிவதில்லை. தியாகங்கள் பற்றி கூற முடிகின்றதே ஒழிய, மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டி ஒரு அரசியல் வழியை முன்வைக்க முடியவில்லை. சொந்தக் காலில் நின்று எதையும் மக்களுக்காகச் செய்ய முடியவில்லை. நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த ஒவ்வொருவரின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்தத் தான் முடிகின்றது. அதைக் கூட நியாயப்படுத்த முடியவில்லை.

புலிகளின் பிரதிநிதியாக அவர்களின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பாலகுமார் யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரையொன்றின் போது "எமது போராளிகளுள் அநேகமானவர்கள் வயதில் கூடியவர்களாக உள்ளனர். அவர்கள் தமது மன உளைச்சல்களை ஆசைகளைக் கட்டுப்படுத்தியுள்ளனர். இங்குள்ளவர்கள் என்றால் சுதந்திரமாக விசிலடிக்க, பீடிபிடிக்க, கள்குடிக்க முடியும். ஆனால், எமதுப் போராளிகள் அப்படிச் செய்ய



முடியாது." என்று கூறினார். சொந்தத் தியாகத்தையே இப்படி புலித் தலைவர்களால் மட்டும் தான் கொச்சைப்படுத்த முடியும். மகிழ்ச்சி என்பது போராட்டமே ஒழிய வேறு ஒன்றுமல்ல என்றார் மார்க்ஸ். லெனின் சிரித்ததை தனது திருமணத்தின் பின் தான் கண்டது இல்லை என்கிறார் அவர் மனைவி. அந்தளவுக்கு லெனின் மக்களின் அவல வாழ்வுடன் ஒன்றிப் போய், அவர்களுக்காகப் போராடுவதையே மகிழ்ச்சியாக்கியவர்.

மக்களுக்காகப் போராடுவது மகிழ்ச்சிக்குரியது. இப்படிப் போராடுவதை விட "சுதந்திரமாக விசிலடிப்பதும், பீடி பிடிப்பதும், கள் குடிப்பதும்" மகிழ்ச்சியானது என்று கூறும் புலித் தலைவர்களை விட, வேறு யாராலும் போராளிகளின் உயர்ந்த இலட்சியங்களை இவ்வளவு கேவலமாகக் கொச்சைப்படுத்த முடியாது. கேவலமான அற்பமான உணர்வுகளையும் நுகர்வுகளையுமே சுதந்திரமானதாகவும், சந்தோசமானதாகவும் கருதும் புலிகள், அதைச் சொல்லி அரசியல் பேசும் வக்கிரத்தையே மேலே பார்க்கின்றோம். இப்படியான கண்ணோட்டம் கொண்டவர்கள், மக்களுக்கு எப்படி அரசியலைப் போதிக்க முடியும்? சொந்தப் போராளிகளுக்கு எதைத்தான் அரசியலாகப் புகட்டமுடியும்? நாம் விடுதலை பெற்றால் "தமது மன உளைச்சல்களை" தீர்க்க "சுதந்திரமாக விசிலடிப்பதும், பீடிபிடிப்பதும், கள் குடிப்பதும்" சாத்தியம் என்று சொல்வதைத் தாண்டி, எதைத்தான் வழிகாட்ட முடியும்? புலிகள் சொல்லாது தவிர்த்து விட்ட காதல் செய்யவும், பாலியல் ரீதியாக நுகரவும் உள்ள சுதந்திரம், இவை தான் சந்தோசங்களா? இவை தான் இலட்சியமா? களவு ஒழுக்கங்கள் உலகமயமாதலில் இலட்சிய வேட்கையாகின்றன. அதைப் புலிகளின் தலைவர்கள் பிரதிபலிக்கின்றனர். போராளிகளின் உயர்ந்த இலட்சியம் என்பது, எப்போதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு செயல்தான். இது மக்களிடம் இருந்து அன்னியமாகும் போது, இந்தப் போராட்டம் நரகலாகின்றது. மகிழ்ச்சி என்பது புலிகளின் போராட்ட அரசியலில் கிடையாது. அதனால்தான் புலிகள் தம்மைத் தாமே கேவலப்படுத்தி ஒப்பிட முடிகின்றது.

இப்படி தமிழ் மக்களினதும், போராளிகளினதும் அரசியலை நலம் அடித்த (சீரழித்த) பின்பு, ஏகாதிபத்தியம் எல்லாவற்றையும் புரிந்து வைத்துள்ளனர் என்று கூற புலிகளால் முடிகின்றது. அதாவது ஏகாதிபத்தியம் தனது கொள்கையைப் புலிகளின் கொள்கையாக்கும் போது, என்ன நடக்கும் என்பதைப் புலிகளே சொல்லிவிடுகின்றனர். "சர்வதேச நாடுகள் இலங்கைப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்பதில் அக்கறையாக இருக்கின்றன. அதன் வெளிப்பாடாகத் தான் இந்த அக்கறை ஆர்வம் அனைத்தும் என்று புலிகள் கதைக்கின்றன." என்ன அரசியல் ஞானம் புலிகளுக்கு? இவர்கள் புல்லரிக்க வைக்கும் துரோகத்தை தவிர, வேறு எதையும் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரப் போவதில்லை. ஏகாதிபத்தியங்களின் ஆர்வங்கள், விருப்பங்கள், அக்கறைகள் எல்லாம் தமது சொந்த நலன் தான். அதாவது தமிழ் மக்களை எப்படி அடிமைப்படுத்தி கொள்ளையடிப்பது என்பது தான். இதையே புலிகளும் தீர்வு எனக் கூறிய பின்பு, புலிகள் இனியும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அல்ல. மாறாக ஏகாதிபத்தியத்தின் தரகுத் தலைவராகவே இருக்கின்றனர் என்ற உண்மை பளிச்சென்று நிர்வாணமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏகாதிபத்தியத்துக்குத் துணைபோகும் துரோகத்தைப் புலிகள் சார்பாகத் தமிழ்ச்செல்வன் உலகறிய நியாயப்படுத்தும் விதமோ கேவலமானது. "இன்று இலங்கை விவகாரம் சர்வதேசமயமாகியுள்ளது. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் போரினால், பயத்தினால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இது அந்த நாடுகளுக்குப் பிரச்சனையாக உள்ளது. அவர்களுக்கென தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை அந்த நாடுகளுக்கு உள்ளது. இதற்கு அப்பால் அந்தந்த நாடுகளின் நலன்களும் உள்ளன. எனவே தான் அமைதி திரும்புவதை இந்நாடுகள் விரும்புகின்றன" என்று கூறுகிறார். இதற்காகத் தமிழ் மக்களின் நலன்களைத் தாம் தியாகம் செய்ய உள்ளதாகக் கூற விரும்புகிறார்கள். இப்படி அப்பட்டமாகவே சோரம் போகக் கூடிய அனைத்துத் தர்க்க விளக்கங்களும், ஏகாதிபத்தியங்களின் சார்பாக அவர்களின் நலன்களில் இருந்து வைக்கப்படுகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களைத் திருப்பி அனுப்பவும், ஏகாதிபத்திய உலகமயமாதல் நலன்களை அடைய மக்களை அடிமைப்படுத்தவும் விரும்பும் ஏகாதிபத்திய நலன்களை, புலிகள் ஏற்றுக் கொண்டு சோரம் போகத் தயாராக இருப்பதை புலிகள் ஒத்துக் கொள்கின்றனர். இதை நாகரிகமாக மூடிமறைத்தபடி களமாடுகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நேரடியாகவே எதிராக இருக்கும் இந்தியா பற்றி, புலிகளின் சார்பாகத் தமிழ்ச்செல்வனின் கூற்று அனைத்தையும் மறந்துவிடவும், மக்களை அடிமைப்படுத்தும் ஒரு நிலைக்குத் தாம் தயாராக இருப்பதைப் புலிகள் வலிந்து முன்வைக்கின்றனர். முன்னைய இந்தியா ஆக்கிரமிப்பையும், ராஜீவ் கொலையையும் பற்றி பேசிக் கொள்ளாத வகையில் உலகமயமாதல் நிகழ்ச்சியில் இணங்கிப் போகத் தயாராக இருப்பதைப் புலிகள் கோடிட்டுக் கட்டுகின்றனர். "நாம் இந்திய தேசத்துக்கோ, இந்திய மக்களுக்கோ எதிரானவர்கள் அல்ல" என்று கூறி, இந்திய மக்களையும், அரசையும் ஒன்றாக காட்டி விடுகின்றனர். இதன் மூலம் இந்திய அரசுடன் கூடிக் குலாவத் தங்கள் விருப்பத்தை புலிகள் மீண்டும் வெளிப்படுத்திவிடுகின்றனர். எந்த அமைதியும் சமாதானமும் இந்திய அரசின் அடிப்படையான கொள்கையுடன் தொடர்புடையவை? ராஜுவ் கொலைத் தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட முக்கிய நபர்கள் பற்றிய பிரச்சனையில், பிரபாகரனின் பாதுகாப்பு உறுதிப்படும் பட்சத்தில் தான், அமைதி மற்றும் சமாதானத்தின் ஆயுள் தங்கிக் கிடக்கின்றது. இங்கு தமிழ் மக்களின் பிரச்சனைகள் அல்ல. அவை இரண்டாம் பட்சமானவை. முதலாம் பட்சமாக இருப்பவை புலித் தலைவர்களினதும், அவர்களின் குழுவினது நலன்கள் தான். இந்தக் குழுக்களின் நலன்கள் பூர்த்தி செய்யப்படும் போது, அமைதி என்பது தமிழ் மக்கள் மேலான துரோகத்தில் பூத்துக் குலுங்கும்.

தமது அமைப்பை பயங்காரவாதப் பட்டியலில் இருந்து நீக்குவதன் மூலம் நிறைவு செய்ய முடியும் என்கின்றார் தமிழ்ச்செல்வன். "சர்வதேச பயங்கரவாத நிகழ்ச்சி நிரல்களுக்குள் விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் இணைத்துக் கொண்டு செல்வது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்று தெரியவில்லை" என்பதை தெளிவாகச் சொல்லி விடுகின்றார்.



சமாதானம், அமைதி எதுவாக இருந்தாலும், புலிகள் என்ற குழுவின் அடிப்படை நலன் சார்ந்ததாக இருப்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறிவிடுகின்றார். விடுதலைப் புலிகளின் பாதுகாப்புக்கான உத்தரவாதம் தான், தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதற்கான அடிப்படையான நிபந்தனை. நீடித்த இழுபறியாக நடக்கும் பேரங்கள் அனைத்தும், புலிகளின் எதிர்காலம் என்ன என்பதில் இருந்து, தமிழ் மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கை அனைத்தையும் காட்டிக் கொடுக்க தயாராக இருப்பதைப் புலிகள் எப்போதும் பிரகடனம் செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் எந்த ஜனநாயகக் கோரிக்கையையும் மக்கள் மத்தியில் புலிகள் முன்வைப்பதில்லை. குழுநலனை அடிப்படையாகக் கொண்டு, அதை தமிழ் மக்களின் பிரச்சனையாகக் காட்டுவதே அண்மைய குறிப்பான அரசியலாகியுள்ளது.

சர்வதேச ரீதியாக அமெரிக்காவின் அத்துமீறிய ஆக்கிரமிப்புகள் உலகளவில் வேகம் பெற்றுள்ள நிலையில், புலிகள் மேலான அமெரிக்காவின் அச்சுறுத்தல் ஒரு இராணுவத் தாக்குதலாகும் எல்லையைத் தொட்டு நிற்கின்றது. அமெரிக்கா புலிகளுக்கு கொடுக்கும் நிர்ப்பந்தம், புலிகளை அமைதியாகச் சரணடையக் கோருகின்றது. இந்த நிலையில் புலிகள் சார்பாகத் தமிழ்ச்செல்வன் "ஒரு சுதந்திர இயக்கமான விடுதலை அமைப்பாகச் செயற்படும் விடுதலைப் புலிகள் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை" என்று கூறியதன் மூலம், தம் மீதான அங்கீகாரத்தை கோருகின்றார். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனை எக்கேடுகெட்டாலும் அதைப்பற்றி புலிகள் பேசமுன்வரவில்லை. ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்குப் புலிகள் அச்சுறுத்தலாக இருக்க மாட்டோம் என்பதைச் சொல்லிவிடுகின்றனர். உலகமயமாதலையே தமது கொள்கையாக்கிக் கொள்வதை உறுதி அளிக்கின்றனர். அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியத்துக்கு அச்சுறுத்தலாக இருக்க மாட்டோம் என்பது, சாராம்சத்தில் இலங்கையில் ஏகாதிபத்தியத் தலையீட்டை அனுமதிப்போம் என்பதை ஒத்துக் கொள்கின்றது. உலகளவில் உலகமயமாதல் என்பது, ஏகாதிபத்திய அத்துமீறலைத் தேசிய எல்லைக்குள் அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. இதை வெளிப்படையாகப் புலிகள் ஆதரித்து நிற்பதும், அதற்குத் துணை போகத் தயாராக இருப்பதாகப் பிரகடனம் செய்யும் போது, தம்மை அங்கீகரித்து அதை முன்னெடுக்க அனுமதிக்கக் கோருகின்றனர். இவைத் தான் தமிழ் மக்கள் சார்பாக புலிகள் வைக்கும் உயாந்தபட்ச கோரிக்கையாகும்.

இதனடிப்படையில் புலிகள் தமது சொந்தக் குழு எதை அடைய விரும்புகின்றது என்பதைத் தெளிவுபடுத்தி விடுகின்றனர். "தமது சொந்த மக்களின் அபிலாஷைகளுக்கெதிராகச் செயற்படும் குழுக்களை, இந்திய ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த குழுக்கள் என்றும், அவர்களை இடைக்கால நிர்வாகச் சபையில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. மக்களும் இதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எமது மக்களைப் பொறுத்த வரையில் வடக்குக் கிழக்கில் நடந்த தேர்தலில் தமிழ் மக்கள் அதனை வெளிப்படுத்தியுள்ளனர். " என்று புலிகள் சார்பாகத் தமிழ்ச்செல்வன் முன் வைக்கின்றார். உண்மையில் நீடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுபறியான பேச்சு வார்த்தைகள் இதற்குள் தான் நடக்கின்றது. இதில் தமிழ் மக்களின் நலன்கள் என எதுவும் அல்ல. உலக நாடுகளிடம் பிச்சை கேட்கவும், கடன் வாங்கவும், தமிழ் மக்களை அடக்கியொடுக்கவும், அதன் மேல் தனி சர்வாதிகார அமைப்பை நிறுவுவதுமே புலிகளின் தணியாத தாகமாகியுள்ளது. பிச்சை எடுக்கும் பாத்திரத்தையும், அடிமையாக இருக்க கையெழுத்திடும் உரிமையையும், இதை நடைமுறைப்படுத்தத் துப்பாக்கிகளையும் நீதிமன்றங்களையும் தம்மிடம் ஒப்படைக்கக் கோருகின்றனர். துரோகக் குழுக்கள் இதில் புலிகளுடன் முரண்படுவது, தமது பங்கையும் இணைக்கக் கோரித்தான். அதாவது இதை நடைமுறைப்படுத்த தனிச் சர்வாதிகார புலிகளின் அதிகாரத்துக்குப் பதிலாக, பன்மையான அதிகார அமைப்பைக் கோருகின்றனர்.. மற்றபடி தமிழ் மக்களின் பிரச்சனையில் அவர்களும் புலிகளும் ஒன்றுபட்ட ஒத்தக் கருத்தையே கொண்டுள்ளனர். இந்த உண்மையை மறுக்க புலிகள் ஒரு துப்பாக்கி குண்டினால் மரணதண்டனையை நிறைவேற்றுவதைத் தவிர, வேறு எதையும் சொல்ல வக்கற்றவர்களாக உள்ளனர். உலகமயமாதலின் கீழ் தமிழீழத் தாகம் என்பதை சொந்தக் குழு அங்கிகரிக்கும் பட்சத்தில், தமிழ் மக்களை கைவிடத் தயாராக இருப்பதைத் தொடர்ச்சியாகப் புலிகள் பிரகடனங்கள் செய்து வருகின்றனர்.

புலிகள் தமது துரோகத்தை ஒன்றுக்கு பின் ஒன்றாக, முரண்பாடாக, புலம்பவும் செய்கின்றனர். இதோ, பாலசிங்கம் "இந்த அரசு அமெரிக்காவுடன் உடன்பாடு செய்கின்றது. இந்தியாவுடன் உடன்பாடு செய்கின்றது. இந்த அரசு சர்வதேச நாடுகளுடன் உடன்பாடுகள், ஒப்பந்தங்களை செய்கின்றது. ஒருபுறம் வர்த்தக ஒப்பந்தங்கள், பொருளாதார ஒப்பந்தங்கள், இராணுவ ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றது. எதற்கு? புலிகள் இயக்கத்தைச் சுற்றி, ஒரு பாதுகாப்பு சிலந்திவலை ஒன்று போடப்படுகின்றது. இது எங்களுக்குத் தெரியும்...." இப்படிக் கூறிக் கொண்டே புலிகள் ஏகாதிபத்தியத்திடம் சரணடைய விரும்புகின்றனர். புலிகள் தலைவர்களில் ஒருவரான பாலகுமார் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் "பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் உட்பட பல நாடுகள் புலிகளோடு உறவு வைப்பது தான் சரியானதென்று இப்போது தீர்மானித்துள்ளன. புலிகளோடு உறவு வைப்பதுதான் தெற்காசியச் சமநிலையைப் பேணுவதற்கான சரியான வழி என்பதனையும் பல நாடுகள் இப்போது நன்கு உணர்ந்துள்ளன." என்றுக் கூறியுள்ளார். இங்கு புலிகள் ஏகாதிபத்தியக் கொள்கையுடன் இணங்கிப் போவதையே, அவர்கள் இணங்கி வருவதாகக் கூறுகின்றனர். புலிகளின் சோரத்தை அவர்களின் (ஏகாதிபத்தியங்களின்) சோராமாகத் திரித்துக் காட்டுகின்றனர். இங்கு புலிகள் எதிர்பார்ப்பது என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுகின்றனர். இந்த அடிப்படையான கண்ணோட்டம் தான் புலிகளின் அனைத்துத் தீர்மானத்தையும் தீர்மானிக்கின்றது. புலிகள் பற்றிய அடிப்படையான கொள்கையில் ஏகாதிபத்தியம் எடுக்கும் கொள்கை தமக்குச் சாதகமாக இருக்கும் பட்சத்தில், சரணடைந்து விடத் தயார் என்பதையே புலிகள் சொல்லி வருகின்றனர். இதை நியாயப்படுத்திய பாலகுமார் "...ஈராக் மீதான அமெரிக்கா யுத்தம் எமக்கு ஒரு பாடம். எனவே, மக்களாகிய நீங்கள் எமது தவறுகளைச் சுட்டிக்காட்டினால்



அதைத் திருத்துவதற்கான சகல நடவடிக்கையையும் நாம் மேற்கொள்வோம்" என்று கூறினார். இப்படிக் கூறுவதன் மூலம், துரோகத்தை இணைந்து எடுக்க மக்களையும் அழைக்கின்றனர். மக்கள் பற்றி இவ்வளவு காலமும் கொண்டிருந்த எதிர்மனப்பான்மையான கண்ணோட்டத்தை மறைத்து துரோகத்தினை இணைந்து செய்யக் கோரும் எதிர்நிலைக் கண்ணோட்டம் முன்வைக்கப்படுகின்றது. ஏகாதிபத்தியத்துடன் இணைந்து செல்ல, மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்கின்றனர். இதனடிப்படையில் தவறுகளைச் சுட்டிக்காட்ட கோருகின்றனர். புலிகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் எதிர்ப்பை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சியின் ஒரு அங்கமாக புலிகள் முன்வைத்த கருத்து, நடைமுறையில் எதிர்நிலையில் இயங்குகின்றது.

சமூகத்தின் மேல், தேசத்தின் மேல் அக்கறை உள்ள ஒவ்வொருவரின் அடிப்படைக் கேள்வி என்ன செய்வது என்பதே? ஒழிய மௌனமாக இதை அங்கீகரிப்பது அல்ல.

## புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள்

1. தினக்குரல் பத்திரிக்கை
2. வீரகேசரி பத்திரிக்கை
3 இணையம் ColomboPage News
4. இணையதளம் உதயன்
5. ஈழமுரசு
6. ஈ.பி.டி.பி இணையதளம்
7. புதிய பூமி
8. இலங்கை முஸ்லீம்களின் இணைதளம்
9. ஈழநாடு, 10. புலிகளின் இணையதளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் - 2

# இனம் கடந்த அரசியல் விபச்சாரம், மக்களின் முதுகில் சவாரி செய்கின்றது.

சிங்கள மக்களின் சார்பாக இனவாதிகள் கட்டமைத்து உருவாக்கிய இன ஒடுக்குமுறை, தமிழ் மக்களுக்கு எதிரான இனத் தேசியமாகியது. அதே இனவாதிகளால் இன்று திட்டமிடப்பட்டுக் கட்டமைக்கும் சமாதானம், அமைதி பற்றி, ஆளுக்கொரு அறிக்கைகள் மற்றும் பேரங்களையும் முன்வைக்கின்றனர். இந்தச் சமாதான நாடகத்தை சிறுபான்மைத் தமிழ் மக்கள் சார்பாக, புலிகள் தமது தரப்பில் நின்று முன் வைத்ததாக உரிமை கோரினார்கள். சமாதானம் - அமைதியின் பிறப்பு ஏகாதிபத்திய நாடுகளால் சிங்கள இனவாதிகளின் ஆசியுடன் திட்டமிடப்பட்டது. இவை அனைத்தும் ஏகாதிபத்திய நலன்களில் இருந்தே திணிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இனவாதிகள் தமக்கு இடையிலான ஆளும் வர்க்க நலன்களைத் தக்கவைக்கவும், கொள்ளை இடவுமே அமைதி மற்றும் சமாதானத்தை இழிவாகவும் கேவலமாகவும் பயன்படுத்துகின்றனர். தமிழ்த் தேசிய அரசியல் குறுந்தேசியமாகி, அதுவே குழு நலனாகிப் போன நிலையில், அதன் சொந்த பலவீனங்களையும் கையாலாத்தனத்தையும் மிகக் கேடாகவே சிங்கள இனவாதிகள் பயன்படுத்துகின்றனர். குழந்தைகளின் நலன் பற்றியும், மனித உரிமை பற்றியும், பயங்கரவாதம் பற்றியும் கிளிப்பிள்ளை போல் பசப்புகின்றனர். இரண்டு வருடமாக நீடிக்கும் நேரடி யுத்தமற்ற மயான அமைதியை, தமிழ் மக்களுக்கு எதிராக மிகவும் நுட்பமாகவே சிங்கள இனவாதிகள் நகர்த்தியுள்ளனர். இதை அவர்கள் நேரடியாகவும், தமிழ்க் குறுந்தேசியவாதிகள் மூலமும், தமிழ் மக்களைப் பேச்சு மூச்சு அற்ற கோமா நிலைக்குள் அடித்துப் போடுகின்றனர். தமிழ் மண்ணில் என்றும் இல்லாத அளவுக்குப் புலிக்கு எதிரான உணர்வை, அவர்களின் சொந்த அனுபவங்கள்



மூலம் உணர வைப்பதில் அரசு வெற்றி பெற்றுள்ளது. ஆயிரக்கணக்கான குண்டுகளை மேல் இருந்து மக்களின் தலைக்குப் போடுவதை விட, குண்டுகள் இன்றி யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உயர்ந்தபட்சம் கடைப்பிடிப்பதன் மூலம் இதைச் சாதிக்கின்றனர்.

மறுதளத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆளுக்கொரு விளக்கத்துடன், உரிமை பறிப்பை அரசியல் ரீதியான அங்கீகாரத்துக்குள்ளாக்கி அதில் வெற்றியும் பெற்று வருகின்றனர். இந்த நலன்களை அடைவதில் ஆளும் பெருந் தேசிய சிங்கள வெறியர்களிடையே இழுபறிகளும் கவிழ்ப்புகளும் களம் கண்டுள்ளது. எப்படி தமிழனை அடக்கி ஒடுக்கி, இலங்கையையே சுரண்டிக் கொழுப்பது என்பதில் பிரதான பெரும் சிங்கள கட்சிகளும், சிறு கட்சிகளும் இரு அணியாகப் பிளவுண்டு நிற்கின்றன. அதேநேரம் இந்த முரண்பட்ட நிலையிலும் என்றும் இல்லாத ஐக்கியத்தை தமிழ் மக்களுக்கு எதிராகப் பேணுகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையை ஒன்றாக ஒருமித்த முடிவில் கையாள்வதில், ஒத்த கருத்தையும் ஐக்கியத்தையும் இந்த சமாதான அமைதி ஏற்படுத்தியுள்ளது. இதை பயன்படுத்துவதில் நடக்கும் பேரங்கள், போராட்டங்கள், முரண்பாடுகளைக் காட்டி, இதுவே சமாதானத்துக்கு தடையாக இருப்பதாக கூறப்படுவது எதார்த்தத்தில் உண்மையானதல்ல. மாறாக பெருந்தேசிய இனவாதிகள் ஒன்றுபட்ட முடிவை தமிழ் மக்களுக்குத் திணிப்பதன் மூலம், தமிழன் நிமிர்ந்து வாழ முடியாத, உலக அங்கீகாரம் கொண்ட முடிவை (அமைதி - சமாதானம்) திணிப்பதில் ஐக்கியப்படடே நிற்கின்றனர்.

ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு விசுவாசமாக சேவை செய்யவும், இலங்கை மக்களைக் கொள்ளையிடவும் உள்ள உரிமையை யார் செய்வது என்பதில் போட்டியிடும் ஆளும் இனவாதக் கட்சிகள் ஒருவரையொருவர் அதிகாரப் போட்டியில் காலைப்பிடித்து இழுக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களின் தலைவிதியை நிலைநாட்ட, ஏகாதிபத்திய ஒழுங்கு முறையைப் பற்றி ஒரேவிதமாக ஒப்புவிக்கின்றனர். இதற்குப் பல்லவி பாடும் புலிகளும் கூட தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகள் பற்றி வாய்திறப்பதில்லை. உண்மையில் பார்த்தால் இலங்கையும் சரி, இந்த சமாதானத்தை நிலைநாட்டத் தலையிடும் எந்த நாடும் சரி, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி அக்கறைப்படவில்லை. மாறாக ஒரு தமிழன், தமிழ் மக்களை அடக்கி ஆளும் ஒரு ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதின் மூலம் ஏகாதிபத்திய நலன்களைத் தக்கவைக்க முனைகின்றனர். தமிழனின் உரிமைகளை அடக்கி ஒடுக்குவதில், சிங்களவனுக்கு பதில் தமிழனே அதைச் செய்யும் உரிமையைத் தான் அமைதி சமாதானம் உடாக அடைய முனைகின்றனர். இந்த நோக்கத்தில்தான் ஏகப்பிரதிநிதிகள் என்ற பெயரில் புலிகளும் அடைய நினைக்கின்றனர். இதற்கு வெளியில் தமிழ் மக்களின் உரிமை பற்றி, சமாதானம் அமைதியின் பின்னால் யாரும் பேசவுமில்லை, பேசப் போவதுமில்லை. தமிழ் மக்களை அடக்கி ஆளும் உரிமையை, எப்படி எதன் மூலம் வந்தடைவது என்பதில் இழுபறிகள் எதார்த்தமாகியுள்ளது. இது தமிழ்த் தரப்பு, முஸ்லீம் தரப்பு மற்றும் சிங்களத் தரப்பு இடையிலும், அவர்களுக்குள்ளும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளது. புலிகள் ஆயுதங்களைக் கைவிடும் பட்சத்தில், தமிழனை அடக்கியாளும் ஒரு உரிமையை தங்கத் தட்டில் வைத்து வழங்கும் ஒரு வடிவத்தை இரண்டு பிரதான கட்சிகளும், ஏகாதிபத்திய ஆசியுடன் நிபந்தனை இன்றி வழங்கத் தயாராகவே உள்ளனர் என்பதே உண்மை.

நம்பிக்கையும், நம்பகத் தன்மையும் அந்தரத்தில் தொங்கும் ஒரு கத்தியாக உள்ளதால், இழுபறிகளும் பேரங்களும் தமிழ் சிங்கள ஆளும் வர்க்கங்களிடையேயான வாதப் பிரதிவாதமாக மாறியுள்ளது. இதனால் ஒன்றை ஒன்று கவிழ்ப்பதும், அதிகாரங்களைக் கைப்பற்றுவதும் குறுகிய அரசியலாகியுள்ளது. யூ.என்.பி அரசின் சில மந்திரிப் பதவிகளை பறித்த பொ.ச.ஐ. முன்னணி சரி, தமிழர் விடுதலைக் கூட்டணியை வெறும் ரப்பர் முத்திரையாக்கி கூட்டணியின் தலைமை முதல் அதன் அடிப்படை அமைப்பை சிதைக்கும் புலிகளும் சரி, முஸ்லீம் காங்கிரஸ் கட்சியில் நடக்கும் குத்து வெட்டுகளும் சரி, இவை அனைத்தும் அமைதி சமாதானம் பற்றிய பொழிப்புரைகளில் இருந்து நடத்தும் அரசியல் கவிழ்ப்புகளே. யாரும் மக்களின் அடிப்படை நலன்களில் இருந்து இதை பேசவுமில்லை, செய்யவுமில்லை. மக்கள் பற்றிய வெற்று பொழிப்புரைகள் உச்சரித்தாலும், மக்களின் நலன்கள் என்ன என்பதைப் பற்றி இவர்கள் யாரும் வாய் திறப்பதில்லை. சிங்களவனோ, தமிழனோ, முஸ்லீமோ, மலையக மக்களோ யாராக அவர்கள் இருந்தாலும், எதையும் இந்த ஆளும் வர்க்கத்திடம் இருந்து பெற்றுவிடவில்லை. எதையும் பெற்றுவிடப் போவதில்லை. மக்கள் தமது அற்ப வாழ்க்கையையும் பறிகொடுத்ததற்கு அப்பால், வாழ்க்கை முன்னேறிவிடவில்லை. இது ஜே.வி.பி முதல் புலிகள் வரை விதிவிலக்கற்ற ஒரே அரசியலாக, மக்களை ஏய்த்து ஏமாற்றி மோசடி செய்கின்றனர். இனங்களைப் பிளப்பதும் சரி, ஐக்கியத்தைப் பற்றி பேசுவதும் சரி, தத்தம் குறுகிய சொந்த நலன்களைத் தாண்டி, எதையும் எந்த மக்களுக்காகவும் இவர்கள் தியாகம் செய்துவிடவில்லை.

ஆனால் இரண்டு வருடமாக சமாதானம் பற்றி பேசப்படுகின்றது. யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது. ஒரு மயான அமைதி மிரண்டு கிடக்கின்றது. உலகம் காணாத வரிக் கொடுமைகளுக்குள், தமிழ்ச் சமூகம் சிக்கிவிட்டது. எங்கும் எதிலும் வரி. மூத்திரம் பெய்தாலும், மூச்சு விட்டாலும் வரிதான். சமுதாயத்தின் உயர் வர்க்கத்தில் இருந்து நலிந்து போய் கையேந்தி பிச்சை எடுப்பவர்கள் என விதிவிலக்கற்ற வகையில், நேரடி மற்றும் மறைமுக வரி தமிழ்த் தேசியத்தின் தலை விதியாகியுள்ளது. வசதியாக மேலே இருந்து தேசிய வீரர்களுக்கு வரிச் சலுகை கொடுப்பதை, கீழ் உள்ளவனிடம் இருந்து மீளவும் மறைமுக வரியாக விலை மூலம் அறவிடுகின்றனர். இதனால் மேல் உள்ள வர்க்கம் திடீர் பணக்காரக் கொள்ளைக் கூட்டமாக மாறியுள்ள நிலையில், சமூகம் ஏற்றத்தாழ்வாகவே பிளந்து விட்டது. சமாதானம், அமைதி தலைவிரித்தாடும் எமது மண்ணில், வரிகளால் எமது மக்களின் தலைவிதி இப்படி தலைவிரிகோலமாகியுள்ளது. இந்த நிலையில் எம் மண்ணில் எதைப் பற்றியும் வாய் விட்டு சொல்லவோ, புலம்பவோ முடியாத துயரம், தமிழ் மக்களின் தலைவிதியாகத் தொடர்ந்து நீடிக்கின்றது.



வெளிநாட்டு ராஜதந்திரிகள், மூலதனத்தின் சொந்தக்காரர்கள் அனைவரும் இலங்கைத் தீவில் சமாதானத்தின் நலன்களை அடைய அங்கும் இங்குமாக ஆலாய்ப் பறக்கின்றனர். ஆயிரக்கணக்கான விமானப் பறப்புகளை அங்கும் இங்குமாக நடத்துகின்றனர். நளினமாகவும், பண்பாகவும் அறிக்கைகளை விடுகின்றனர். இந்தச் சுரண்டும் அமைதியைப் பாதுகாக்கத் தேவைப்படும் போது, நேரடியாகவும் மறைமுகமாகவும் பண்பான வார்த்தைகளில் மிரட்டுகின்றனர். ஜனநாயகம் பற்றியும், பயங்காரவாதம் பற்றியும், மனித உரிமைபற்றியும் கூட நீண்ட நெடிய கருத்துகளை அடிக்கடி உரைக்கின்றனர்.

உலகம் எப்படி இயங்குகிறது என்பதைப் பார்வையிடவும், அதைப்பற்றி கலந்துரையாடவும், ஏகாதிபத்திய விரிவுரைகளைக் கேட்கவும், பேச்சு வார்த்தை மற்றும் அமைதி - சமாதானம் என்ற பெயரில் வெளிநாட்டு சுற்றுலாக்களை ஏகாதிபத்தியம் சொந்த நிதியை செலவு செய்து புலிகளின் தலைமை மட்டங்களுக்கு உலகைச் சுற்றிக் காட்டுகின்றனர். இந்தச் சுற்றுலாவுக்கான செலவை, மக்களின் வரிப்பணத்தில் இருந்து புலிகள் செலவு செய்வதை ஏகாதிபத்தியம் பண்போடு அனுமதிக்கவில்லை. புலிகள் தமது பண்பு கருதிய நன்றியையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்த, ஒருபடி அவர்களுக்கு மேலே சென்றனர். காட்டில் அணிந்திருந்த வரி உடுப்புகளை களைந்தெறிந்து கோட்டும், சூட்டும், டையுமாக மாறி நவீன தேசியப் பொம்மையாகி உலகெங்கும் பவனி வருகின்றனர். பெண்கள் அதே போல் பக்குவமாக ஏகாதிபத்திய எல்லைக்குள் தம்மை மாற்றி, ஆண்களின் பின்னால் வீர நடைபோடுகின்றனர். தேசியம், தேசியப் பண்பாடு அதில் ஒரு அங்கமான உடுப்புகளைக் கூட துறந்து, நவீன தேசிய வீரர்களாகி உலங்கெங்கும் பறக்கின்றனர். சில நாடுகளில் அவர்கள் பறக்க தடை இருந்த போதும், அங்கும் பறந்து விடுவோம் என்ற நம்பிக்கை மிளிர வீரநடை போடுகின்றனர்.

இந்த அமைதியுடன் கூடிய சமாதானத்தைப் புலம் பெயர்ந்த நாட்டில் இருந்து, சென்று மீளத் திரும்பும் தேசப்பற்றுள்ள தமிழர்கள்(!) சொகுசான வக்கிரமாக அனுபவிக்கின்றனர். தனி மனிதர்களே பல லட்சம் ரூபாவை, இந்த சொகுசு மற்றும் நுகர்வுக்காக வாரி இறைக்கின்றனர். இலங்கையில் பணத் திமிர் பிடித்த வக்கிரமே, சமாதானத்தின் பெயரில் கரைபுரண்டோடுகின்றது. போலியான வரட்டு கௌரவங்கள் கட்டமைக்கப்பட்டு, பண நோட்டுகள் டொலரிலும் ஈரோவிலும் இருந்து 100 மடங்காகி, அதே வேகத்தில் தமிழ் இனத்தையே அழிக்கின்றது. தமிழினம் மேலும் ஆழமாகப் பண்பாடு ரீதியாக, கலாச்சார ரீதியாகச் சீரழிந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் சமூகத்தில் பொருளாதார ரீதியான பிளவு ஆழமான வெடிப்பாகி, ஏற்றத்தாழ்வு, தமிழினத்தை நிரந்தரமாகவே பிளந்துவிட்டது. தொடருகின்ற சொகுசு வாழ்வும், மறுதளத்தில் ஏழைகளின் உருவாக்கமும் அமைதி சமாதானம் என்ற பெயரில் உலகமயமாகின்றது. இது யாழ்குடாவில் வாழும் மக்களின் பெரும்பான்மையானோர் வறுமைக்குள் சிக்கியுள்ளதைக் காட்டுகின்றது. மேற்கில் அடிமட்டக் கூலிகளாக வாழும் புலம்பெயர் சமூகம், மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் பகட்டான ஆடம்பரமான திமிர் கொண்ட வாழ்க்கையும், அதை அண்டித் திமிரெடுக்கும் ஒரு பிரிவும், யுத்தத்தை பயன்படுத்தி கொள்ளையடிக்கும் கும்பலையும் தவிர, அங்கு வாழும் மக்களோ உழைப்பு ஆதாரங்களை இழந்து வறுமைக்குள் சிக்கியுள்ளனர். சமூகப் பிளவுடன் கூடிய சீரழிவும், வன்முறையும் வக்கிரமும் தமிழ்த் தேசியமாகிவிட்டது.

அண்ணளவாக தியாகத்தின் பெயரில் 20 ஆயிரம் உயிர்களைப் பலி கொண்டு உருவான தேசியம், துரோகத்தின் பெயரில் 10 ஆயிரம் பேரை பலியெடுத்தது. இந்தப் போராட்டம் ஒரு லட்சம் அப்பாவி மக்களை இடையில் நிறுத்தி கொன்று ஒழித்தது. பல ஆயிரம் கோடி சொத்துகளை தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம அழித்துள்ளது. எதிரியாக 25 ஆயிரம் பேரின் உயிரை வைத்து பலியெடுத்த எமது போராட்டம், சிங்கள அப்பாவி முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலில் 10 ஆயிரம் பேரைப் படுகொலை செய்ததன் மூலமே தமிழ்த் தேசிய உணர்வு பெற்றனர். இப்படித் தான் தமிழ்த் தேசியம் இன்று தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இப்படி தொடரும் அவலத்தின் முடிவில், எதைத் தான் தமிழ் சமூகத்துக்குப் பெற்றுத் தரப் போகின்றார்கள் எனின், யாருக்கும் எதுவும் தெரியாது. ஒரு குழுவின் ஆட்சி, அந்த குழுத் தலைவரின் ஆட்சி என்ற எல்லையைத் தாண்டி எந்த அரசியல் விளக்கமும் அற்றுப் போய்விட்டது.

அன்னிய ஏகாதிபத்தியத்தின் தயவில் பொருளாதார முன்னேற்றத்தைச் சாதிக்க முடியும் என்று பகட்டாக நம்ப வைக்கப்படுகின்றது. ஏகாதிபத்தியம் வட்டிக்குத் தரும் பணத்தைக் கொண்டு, மக்களை முன்னேற்ற முடியும் என்று புலிகள் ஒப்பாரி வைக்கின்றனர். இதன் மூலம் உலகமயமாதல் உள்ளடகத்தை தேசியமயமாக்குகின்றனர். ஏகாதிபத்தியக் கைக்கூலிகளாக இருப்பது எப்படி என்பதை, தமது சொந்த நடைமுறை அனுபவங்கள் மற்றும் நடத்தைகள் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றனர். உலகமயமாதல் ஒழுங்கை மீறாத, தேசியம் பற்றி பாடம் எடுக்கின்றனர். அதை மக்களின் முதுகில் சுமக்கவேண்டிய அவசியம் பற்றி அறிக்கைகளையும், சொந்த நடைமுறை எடுத்துக் காட்டுகள் மூலமும் உணர்த்தி வருகின்றனர். அண்மையில் சுகாதாரத்துறை ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்ததை, தமிழ்ப் பகுதிகளில் புலிகள் பலாத்காரமாக முறியடித்து, சிங்கள அரசுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் விசுவாசமாக செயல்பட்ட போது, சுரண்டல் உலகம் அவர்களைப் பாராட்டியது. தேசியம் என்பது சிங்கள ஆட்சியாளனுக்கு பதில் தமிழ் ஆட்சியாளன் என்றாகி, அதுவே தேசிய சுயநிர்ணயமாக நவீன விளக்கம் பெற்றுள்ளது. சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் எதை எதையெல்லாம் செய்கின்றனரோ, சட்டப்பூர்வமானத் தமது ஆட்சி அதிகாரத்தில் அதை எல்லாம் தாம் செய்யும் உரிமையை, செய்யும் அங்கீகாரத்தைப் பெறுவதே தமிழ் தேசியமாகியுள்ளது. தமிழ்ச் சமூகத்தின் அனைத்துத் தியாகமும் இதற்காகவே என்ற எல்லையைத் தாண்டி, இன்றைய தமிழ் தேசிய விளக்கம் ஒரு அடி கூட முன்னேறி விடவில்லை. இதுவே புலிகளின் தேசியத் தாகமாகி, அதைத் தமிழ் மக்களின் முதுகிலும் அறைகின்றனர்.



## சந்திரிகா - ரணில் அரசுக்கிடையிலான அதிகாரப் போட்டி

கடந்த 50 வருடங்களாக யூ.என்.பி. மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிகளுக்கு இடையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டம், இனவாத அரசியலாகவே எப்போதும் நடைபெற்றது. தமக்கு இடையில் உள்ள அரசியல் வேறுபாடுகளை எப்போதும், சிறுபான்மை மக்களை ஒடுக்குவதன் மூலம் வெளிப்படுத்தினர். ஒன்றை மாறி ஒன்று தொடர்ச்சியாக, அதி தீவிரமான சிங்கள இனவாத தேசியத்தைக் கட்டமைத்து, சிறுபான்மை இனங்களை ஒடுக்கவே ஆட்சிக்கு வந்தன. இதன் தொடர்ச்சியில் சந்திரிகா - ரணில் என்ற இரண்டு அதிகார மையங்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டி மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது.

மக்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்காக தாம் கடினமாக உழைப்பதாகவும் கூறிக் கொண்டு, அதை எதிர்த்தரப்பு செய்யவில்லை என்று தூற்றிக் கொண்டு அதிகாரக் கழுத்தறுப்புகளை நடத்துகின்றனர். இதில் சந்திரிகா அம்மையார் ஒரு படி மேலே போய், அவர்கள் நியாயப்படுத்தும் ஜனநாயகத்தைக் கேலி செய்யும் வகையில், ஒரு சர்வாதிகாரியாகச் செயல்பட்டார். ஜனநாயகத்தின் பெயரில் சட்டங்களை அவர்களே உருவாக்கி, அதைக் கொண்டு ஜனநாயகத்தையே ஒடுக்கும் வரலாற்றில் மற்றொரு எடுத்துக்காட்டாக இச் சம்பவம் அமைந்தது. சந்திரிக்கா அதிகாரங்களைக் கைப்பற்றி தனது கையில் குவித்துவிடுவதன் மூலம், மக்களுக்கு அளப்பரிய சேவை செய்ய உள்ளதாகக் கூறிக் களம் இறங்கி உள்ளார்.

ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாக வாலாட்டி குலைக்கும் இந்த இரு கும்பலும், ஏகாதிபத்தியம் வீசும் எலும்புகளைச் சுவைக்க நடத்திய அதிரடி ஆட்சி கவிழ்ப்புகளே இவை. இந்த நாய்களுக்கு இடையிலான சண்டையில், வழமை போல் தேசிய இனச் சிக்கலைத் தீர்க்க முன்வைத்த சமாதானம் - அமைதி என்ற பந்தையே விளையாட்டுப் பொருளாக்கியுள்ளனர். இதனடிப்படையில் தலையிட்ட ஏகாதிபத்தியங்கள், மேலும் ஆழமாக இலங்கை மறுகாலனியாதிக்கத்துக்கு உட்படுத்துகின்றது.

அமைதி சமாதானத்தை அடுத்து, கொள்ளையடிப்போர் களமிறங்க, இலங்கையின் பங்குச் சந்தை 80 சதவீதத்தால் உயர்ந்தது. 1300 வெளிநாட்டுக் கொம்பனிகள் இலங்கையோடு வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்தது. 2003-இல் வெளிநாட்டுக் கொம்பனிகளின் நேரடி முதலீடு 500 மில்லியன் டாலராகியது. இதைப் பெருமையாகப் பீற்றிய இலங்கை மத்திய வங்கி இயக்குனர் அமரானந்த ஜெயவார்டனா, “இலங்கையைப் போன்று சுதந்திர வர்த்தகத்திற்குச் சாதகமான சொர்க்கம் உலகில் வேறெங்கும் இல்லை”யென்றான். 1998 இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கையின் பொருளாதாரம் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் வீங்கப் போவதாக மார்பு தட்டினர். 2003 இறுதி எட்டு மாதங்களிலும் இலங்கைக்கு வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 3,01,998 என்று கூறும் இவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தலா ஒரு நாளைக்கு இலங்கையில் ஏறத்தாழ 100 டாலர் செலவு செய்து வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருவதாக மார்புதட்டினர். சென்னையிலே தமிழ்நாட்டு அரசாங்கத்தின் பூரண ஆசீர்வாதத்தோடு, இலங்கை ஏற்றுமதியாளர் ஆலோசனை நிறுவனம் ஏற்படுத்தப் பட்டுள்ளதென்றும் அரசாங்கம் தனது விபச்சாரத் தரகைப் பட்டியலிட்டு பெருமையாக அடுக்கிவைத்து.

இப்படி நாட்டைக் கொள்ளையடித்து கூறுபோட்டு விற்கும் நிலையில் தான், சந்திரிக்க ஜே.வி.பி ஆட்சிக் கவிழ்ப்பு ஒப்பந்தம் அமலுக்கு வந்தது. ஒப்பந்தத்தை அடுத்த நாள் 8000 கோடி ரூபாவால் இலங்கைப் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு மூலதனங்கள் பங்குச் சந்தையில் நடத்திய சூதாட்டம் கடுமையான நெருக்கடிக்குள்ளாகியது. இலங்கை வர்த்தகம் உடனடியாகவே 930 கோடி ரூபாவை இழந்தது. வெளிநாட்டு மூலதனம் கடுமையான நெருக்கடிக்கு கோபத்துக்கு முள்ளாகியது. உடனடியாக வளர்ப்பு நாய்களுக்கு எலும்புகளை உணவாக வீச முடியாது (கடன் மற்றும் உதவியை நிறுத்திவிடுவோம்) என்று மிரட்டி சமாதானம் அமைதியின் பெயரில் கிடைக்கு சொந்த நலன்களை அடைய ஏகாதிபத்தியங்கள் கடுமையான நிர்ப்பந்தத்தையும் கொடுக்கின்றன. வாலாட்டிய படி குரைப்பதைக் குறைத்துக் கொண்டு, எலும்புகளைப் பகிர்ந்துண்ணுமாறு மிரட்டலுடன் கூடிய பாசத்துடன் கோருகின்றனர். தமிழ் மக்களுக்குத் தீர்வு என்ற பெயரில், ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு உட்பட்ட ஒரு தீர்வை வழங்க நிர்ப்பந்திக்கின்றனர். இதை நோக்கிய எல்லாத் தரப்பு நிர்ப்பந்தமும், இலங்கையை மறுகாலனியாதிக்க எல்லைக்குள் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஒழித்துக் கட்டக்கோருகின்றது.

இந்த எல்லைக்குள் சந்திரிக்கா - ரணில் மோதல் படிப்படியாக ஒரு புள்ளியை நோக்கி குவிகின்றது. இதைச் சுற்றியுள்ள அனைத்து சிறு கட்சிகளும் இதை நோக்கி கவரப்பட்டு செரிக்கப்படுகின்றது. இது மிகவும் பலம் கொண்ட ஒரு புள்ளியாகி, வேகமாகவே தமிழ் மக்களை ஒடுக்கும் ஒரு குரலாக மாறி வருகின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக, ஏகாதிபத்தியத்தின் நோக்கமும், சிங்கள இனவாதக் கட்சிகளின் ஒருமித்த நோக்கமும் ஒரு புள்ளியை நோக்கி நகர்ந்து வருகின்றது. இதன் அக்கம்பக்கமாக நெருங்கி வரும் புலிகள், இலங்கையின் ஒட்டு மொத்தத் தேசியத்தை அழிப்பதில் கரம் கொடுத்து வருகின்றனர். இதற்குள் தான் சந்திரிக்கா - ரணில் இடையிலான அதிகாரப் போட்டி சுடர் விட்டு எரிகின்றது.

## கூட்டணிக்குள் புலிகள் நடத்தும் அதிகாரப் போட்டி

இந்த அதிகாரப் போட்டிக்கான அடிப்படை என்ன? எதிர்காலத்தில் இலங்கையில் ஏகாதிபத்தியம் உருவாக்கும் அமைதித் தீர்வில் அல்லது யுத்தத்தில் தம்முடன் முரண்பட்ட பிரிவுகளை ஒழித்துக்கட்டும் ஒரு வடிவமாகவே இந்த நாடகம் அரங்கேறுகின்றது. புலிகள் துப்பாக்கி முனையில் நடத்திய அழித்தொழிப்பு அரசியல், கொஞ்சம் மாறுபட்ட நிலையில்



ஜனநாயகத்துக்குப் புறம்பான வழிகளில் அடாத்தாகவே நடத்தப்படுகின்றது. சந்திரிக்கா அம்மையார் வழியில் இது அரங்கேறுகின்றது. எச்சரிக்கையுடன் கூடிய மிரட்டல் மூலம், ஆயுதங்களின் துணையுடன், குண்டர் பலத்துடன் மற்றும் நக்கிப் பிழைக்கும் பினாமியத்தின் துணையுடன் அனைத்தையும் ஒருங்கிணைத்த வகையில் இந்த அதிகாரப் போட்டியை முடிவுக்குக் கொண்டு வருகின்றனர். கூட்டணிக்குள் நக்கி பிழைக்கும் புலியின் பினாமியத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களை, அகற்றும் முயற்சியில் புலிகள் நடத்தும் போராட்டம் தான் கூட்டணிக்குள்ளான அதிகாரப் போட்டி. அதாவது புலிகளுடன் கூடி நக்கிப் பிழைக்கும் பினாமிகளுக்கும், அதை மறுக்கும் குழுவுக்கும் இடையில் இந்த அதிகாரப் போட்டி நடக்கின்றது. ஆனந்தசங்கரியின் தலைமையிலான ஒவ்வொரு எதிர்வினைவையும், எப்படி ஒழித்துக் கட்டுவது என்பது ஈறாக புலிகளே அனைத்தையும் வழிநடத்துகின்றனர்.

புலிகளின் பினாமிகளுடன் உடன்பட மறுக்கும் ஆனந்தசங்கரியின் தலைமையிலான குழுவும், புலிகளின் பினாமிகளைப் போல் மக்களுக்கு எதிரானவர்கள் தான். மக்களை இட்டு அன்றைய கூட்டணிக்கும் சரி, இன்றைய பினாமிய மற்றும் அதற்கு எதிரான குழுவுக்கும் எந்த சமூக அக்கறையும் கிடையாது. மக்களை ஒடுக்கவும், அவர்களை ஏமாற்றி அரசியலில் நக்கிப் பிழைக்கும் கும்பலாகவே எப்போதும் இருந்துள்ளது. தமிழ் தேசியத்தைக் குறுந்தேசிய உணர்வாக மாற்றி, அதில் குளிர் காய்ந்தவர்களின் நீட்சியில் தான் இந்த இயக்கங்கள் உருவானது. புலிகள் இதற்கு விதிவிலக்கற்ற சிறந்த அரசியல் வாரிசாக உருவானவர்கள்.

தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றி புலிகளும் சரி, கூட்டணியும் சரி என்றும் அக்கறை கொண்டது கிடையாது. மக்களின் தேசிய உணர்ச்சி வேறு, இவர்களிடம் இருப்பது வேறு ஒன்றாக இருக்கின்றது. மக்களின் தேசிய உணர்வை மிகக் குறுகிய நலன் சார்ந்த அரசியலுக்குள் கட்டமைத்ததன் மூலம், மக்களுக்கு எதிரான ஒரு வர்க்க நலன் சார்ந்து நின்று மக்களை ஒடுக்கும் வகையில், அரசியல் ரீதியாக மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல் லும்பனாக நீடிக்கின்றனர்.

ஆனந்தசங்கரி கும்பலை மக்களுக்கு எதிரானதாகக் காட்டுவதன் மூலம், புலிகள் உள்ளிட்ட பினாமிகள் தம்மைத் தாம் தூய்மையானவர்களாக காட்டிக் கொள்கின்றனர். இதன் மூலம் தமது சொந்தத் துரோகத்தை மூடிமறைப்பதன் மூலம், தமிழ் மக்களை அன்னிய ஏகாதிபத்தியத்துக்குத் தாரை வார்க்கின்றனர். ஆனந்தசங்கரியின் தலைமையிலான கும்பலை இந்தியக் கைக் கூலியாகவும், ஏகாதிபத்திய எடுபிடியாகவும் காட்டித் தம்மைத் தாம் மூடிமறைக்கின்றனர். ஆனந்தசங்கரி தமிழ் மக்களின் உரிமைக்கு எதிராக செயல்படுவதாகக் காட்டி அரசியல் செய்ய புறப்பட்டுள்ள புலிகள் உட்பட்ட பினாமிய கும்பல், அவர்களிடம் இருந்து வேறுபட்ட ரீதியில் மக்களுக்காக எதைத்தான் மாற்றாக வைக்கின்றனர்? இந்தியா முதல் ஏகாதிபத்தியம் வரை பாய் விரித்து தேசியம் பேசும் இவர்கள், உலகமயமாதல் கொள்கைக்கு இரு கரம் கொடுத்து வரவேற்கின்றனர். மக்களின் தேசிய அடிப்படையிலான தேசியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தை அழித்து ஒழிக்கின்றனர். தேசிய மக்களின் வாழ்வும் அது சார்ந்த உழைப்பை இட்டு அலட்டிக் கொள்ளாத, உழைக்கும் மக்களை ஒடுக்குகின்ற இந்தக் கும்பல் தான் ஆனந்தசங்கரியின் தலைமையிலான கும்பலைத் துரோகி என்கின்றது.

ஆனந்தசங்கரிக்கு எதிரான கும்பல் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசினதும், இந்திய அரசினதும் கைக்கூலிகளாக செயல்பட்டவர்கள் தான். இன்று நக்கிப்பிழைக்கும் பிழைப்புவாதப் பினாமியத்தில், புலிகளின் கைக்கூலியாகி தேசியவாதியானார்கள். இதற்காகத் தம்முடன் இருந்த ஒரு பகுதியினரைத் துரோகியாக்கி, தம்மைத் தாம் தூய்மையாக்கும் பினாமிய அரசியல் பாதுகாப்பில், ஜனநாயகத்தை மீண்டும் ஆழமாகக் குழி தோண்டி புதைக்கும் பாதையில் முன்னேறுகின்றனர். கடந்த காலத்தில் துப்பாக்கி முனையில் கொன்று போட்டுச் சாதித்தவைகளை, இன்று அதன் துணையுடன் அரசியல் வடிவங்கள் மூலம் சாதிக்க முனைகின்றனர். மிரட்டும் சமூக அமைப்பில், ஒரு தலைபட்சமான விவாதத் தளத்தில் இதை நடத்துகின்றனர். இதன் கதி சர்வதேசத் தலையீட்டுடன், அங்கும் இங்கும் அலை பாயும் தன்மை கொண்டதாக உயிருள்ளதாகவே நீடிக்கின்றது.

## முஸ்லிம் கங்கிரசுக்குள் நடந்த அதிகாரப் போட்டி

அமைதி சமாதானம் என்ற பெயரில் மக்களின் உரிமைகளை ஏலம் விட்டபோது, முஸ்லீம் காங்கிரசையும் அது விட்டுவிடவில்லை. இந்த யுத்தம் மற்றும் அமைதி வழிமுறையில் சிக்கிய அனைத்துத் தமிழ் முஸ்லிம் சிங்களக் கட்சிகளையும் குழுக்களையும் கூட, அதிகாரப் போட்டியின் எல்லைக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் இட்டுச்சென்றுள்ளது. மக்களின் அடிப்படையான தேசிய நலன்களை ஏகாதிபத்தியத்துக்குத் தாரைவார்க்கின்ற நிலையில், இதனுடன் சம்மந்தப்பட்ட குழுக்கள் தம்மை மூடிமறைத்த போது, அதிகாரப் போட்டியை முன்நிறுத்தி அதற்குத் துரோகம் அல்லது தியாகம் என்ற முத்திரையைப் பதிக்கின்றனர். எதார்த்த சமூக உண்மைகள் இதன் மூலம் மறைக்கப்பட்டு, தமது அற்ப அரசியல் கோஷ்டி சண்டைகளுக்குள் மக்களின் உரிமைகளைப் புதைத்துவிடுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ், ஏகாதிபத்தியம் முதல் இந்திய ஆளும் வர்க்கங்களின் கால்களை சுற்றிப் படர்ந்த படிதான், முஸ்லிம் மக்களின் நலன் பற்றி மூக்கால் சிந்தி வருகின்றது. இந்த நிலையில் பிரபா- அஸ்ரப் கையெழுத்திட்ட தேன்நிலவு ஒப்பந்தம் ஒன்று, யுத்த நிறுத்தம் தொடங்கிய சூட்டுடன் சூடாக உருவாக்கப்பட்டது. சிங்கள இனவெறி அரசுகள் போல் புலிகளும் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் எதையும், கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி மதித்தது கிடையாது. ஒப்பந்த மை காயும் முன்பே அதை மீறுவதே புலிகளின் அகராதி.

இநத தேனிலவு ஒப்பந்தம், முஸ்லீம் மக்கள் மேலான தாக்குதலை மூடிமறைப்பதை அடிப்படையாகக் கொண்டு புலிகளால் உருவாக்கப்பட்டது.



முஸ்லிம் மக்கள் மேலான எந்த மீறலையும், பேசித் தீர்க்க முடியும் என்ற போர்வையில், அதை வெளியில் கொண்டு வருவதற்குப் பதில் அதை பேசித் தீர்க்கும் எல்லைக்குள் முடக்கிவிட புலிகள் முயன்றனர். தொடர்ந்தும் பாரிய ஒடுக்குமுறையையும், வரிக் கொடுமையையும் முஸ்லிம் மக்கள் மேல் தொடர்வதை இந்த ஒப்பந்தம் மறைமுகமாக அங்கீகரித்தது. எந்தப் புலித் தலைவர்களும் முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்வை இப்போதும் கைவிட்டுவிடவில்லை. மாறாக வன்மமான எதிர்ப்புணர்வை விதைத்தபடி, பொருளாதார ரீதியாக முஸ்லிம் மக்களின் முதலீட்டை எதிர்க்கக் கோரி, தமிழ் முதலாளிகளுக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களை வடக்கு கிழக்கு தொடங்கி புலம்பெயர் நாடுகள் வரை பிரயோகிக்கின்றனர். தொடர் தாக்குதல்கள் பலவற்றைத் திட்டமிட்டு நடத்தினர். முஸ்லிம் மக்கள் மத்தியில் அமைதி சமாதானமானது கடுமையான ஒடுக்குமுறைக்கு சட்டப்பூர்வமான வழியை உருவாக்கிக் கொடுத்தது. அமைதி சமாதனம் என்று கோஷமிட்டுக் கொண்டு இலங்கையை ஏலம் விட்டபடி ஏகாதிபத்திய கால்களில் வீழ்ந்து கிடந்த அஸ்ரப் தலைமைக்கு எதிரான மக்களின் உணர்வை வடிகாலாக்கி கொள்ள, அஸ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ்சில் போட்டிக் குழு ஒன்று உருவானது. கோஷ்டி மோதல் பிளவாகியது. அஸ்ரப், 'அரசு பலம் மற்றும் நீதிமன்ற துணையுடன்' போட்டிக் குழுவுடனான அதிகாரப் போட்டியில் தன்னை தற்காத்துக் கொண்டார்.

போட்டிக் குழு அஸ்ரப்புக்கு நிகராக மந்திரிப் பதவியைக் குறிவைத்து, அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள சிங்கள கட்சிகளின் துணையுடன் களமிறங்கினர். இலங்கையை ஆளும் சிங்கள கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்ற ஒரு காரணத்தைப் பயன்படுத்தி உருவான கோஷ்டி மோதல் மூலம் முஸ்லிம் மக்களை காட்டிக் கொடுக்கவே அதிகாரப் போட்டியில் குதித்தனர். முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமை, அவர்களின் உழைப்பு, அவர்களின் தேசியப் பண்புகள் அனைத்தும் அழிக்கப்படுகின்றது. இதற்கு இந்த இரு கும்பலும், அக்கம் பக்கமாகத் துணை நின்று ஆசி வழங்குகின்றனர்.

மறுதளத்தில் புலிகள் முஸ்லிம் மக்கள் வாழும் இடங்களில் தொடர்ச்சியான பதட்ட நிலையையும், தாக்குதலையும் நடத்துவதுடன், வரி மற்றும் கப்பத்தை அறவிடுவதை ஆணையில் வைத்துள்ளனர். உண்மையில் புலிகளின் தொடர்ச்சியான திட்டமிட்ட வகையில், முஸ்லிம் மக்கள் மீது நடத்தும் பயங்கரவாதத் தாக்குதலால், முஸ்லிம் பிரதேசம் அமைதி - சமாதான காலத்தில் பாரிய இழப்பைச் சந்திக்கின்றது. முன்பு போலவே இனம் தெரியாத தாக்குதல்கள் மூலம், பல தொடர்சியான படுகொலைகளை நடத்துகின்றனர். விரிவான வரி அறவிடல் நடத்தப்படுகின்றது. பணம் கொடுக்க மறுத்தால், கடத்தல் பற்றிய விவகாரம் ஒரு அரசியல் வடிவமாகியுள்ளது. இது கண்காணிப்பு என்பதும் குழுவரை சென்றால், இனம் தெரியாத கடத்தல் நாடகத்தை தாம் செய்யவில்லை என்று கூறுவதன் மூலம், அவர்களை கொன்றுவிடுவது நடக்கின்றது. இதனால் தமிழ் மக்கள் மேலான தன்னெழுச்சியான எதிர்த் தாக்குதல்கள், முஸ்லிம் அடிப்படைவாதக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களிடம் இருந்து பிரதிபலிப்பாகக் கிடைக்கின்றது. உண்மையில் புலிகளின் திட்டமிட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான தன்னெழுச்சியான பதிலடியான பயங்கரவாதமாக இது உருவாகின்றது. மறுதளத்தில் கோஷ்டி மோதலுக்குள் இந்த விடயம், கோஷ்டி நலனாகி மூடிமறைக்கப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் முஸ்லிம் மக்களின் அடிப்படையான சமூக நலன் என்பது புலிகள் மற்றும் முஸ்லிம் கோஷ்டி தலைவர்களால் அழிக்கப்படுகின்றது.

## ஏகாதிபத்திய நலன்களுக்கு செங்கம்பளம் விரிக்கும் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"க்கான புலிகளின் தீர்வுத் திட்டம்

பேச்சு வார்த்தையின் ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாகச்சபை என்பதைப் புலிகள் கோரவில்லை. அதை எள்ளி நகையாடினர். அமைதி சமாதானப் பேச்சின் ஊடாக நிதி, தமக்கே கிடைக்கும் என்ற அடிப்படையில் இடைக்கால நிர்வாகச் சபையை நிராகரித்தனர். ஆனால் நிதி கிடைப்பது என்பது ஒரு நிர்வாக அலகின் ஊடாகவே சாத்தியம் என்ற நிலையில் தான், இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுவார்த்தையை முன்வைத்தனர். பாலசிங்கம் இதை "வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் அவசியமென புலிகளின் தலைவர் பிரபாகரன் பிரேரிப்பதற்குக் காரணமாக அமைந்த விடயங்கள் அல்லது அத்தகைய விரக்தியை ஏற்படுத்திய சூழ்நிலைகள்' குறித்து ஹெல் கிஸன் மூலமாக நான் அனுப்பிய கடிதத்தில்" காணக் கோரும் அடிப்படையில் தான், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"க்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தனர் என்று கூறியுள்ளார்.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"க்கான புலிகளின் தீர்வுத் திட்டம், தமிழ் தேசியத்துக்கு எதிராக ஏகாதிபத்திய உலகமயமாதலை முன்னிறுத்துகின்றது. இது இலங்கை என்ற அமைப்புக்குள்ளாகவோ அல்லது தனியாகவோ புலிகள் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதை அடிப்படையாகக் கொண்டது. இதைத் தெளிவாகவே தீர்வுத் திட்டம் வரையறுக்கின்றது. தமிழ் மக்களின் அதிகாரத்தை நிராகரித்து, புலிகள் தமது அதிகாரத்தைத் தக்கவைக்கும் உள்ளடக்கத்தை கூட்டி அள்ளி, தீர்வுத் திட்டமாக முன்மொழிந்துள்ளனர். எந்த விதத்திலும் தமிழ் மக்களின் சமூக அதிகாரம், அவர்களின் வாழ்க்கை நலன்கள் என எதையும் இந்தத் தீர்வுத் திட்டம் முன்வைக்கவில்லை. மாறாக அதை நிராகரிக்கின்றது. அரைகுறையாக எஞ்சி இருப்பதையும் ஏகாதிபத்திய நலனுக்குத் தாரைவார்க்க தயாராக இருப்பதையேக் கொள்கைப் பிரகடனமாக "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" ஊடாக புலிகள் செய்கின்றனர். தமிழ் மக்களின் அடிப்படையான தேசிய நலன்களை மறுத்து, தமது சொந்த குழு மற்றும் வர்க்க நலனை முன்நிறுத்தியதன் மூலம், ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்ய காத்திருப்பதை "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" பிரகடனம் செய்கின்றது. இதில் எந்த சந்தேகத்தையும் அவர்கள் விட்டுவிடவில்லை. இதையே தமிழ் மக்களின் தேசிய நலனாகக் கட்டமைக்கின்றனர். தமது சொந்த நலனை



முதன்மைப்படுத்தியதன் மூலம், உலகமயமாதலுக்கு இசைவாக மக்களின் அனைத்துச் சமூக வாழ்க்கையையும் தியாகம் செய்ய "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" கோருகின்றது.

தேசியம், தேசிய நலன் என்பது தமிழன் ஆள்வது என்பதில் இருந்து தீர்மானமாவதில்லை. தேசியம், தேசிய நலன்கள் என்பது, மக்கள் தமது சொந்த உழைப்பை எப்படி எந்த வகையில் அனுபவிக்கின்றனர் என்பதில் இருந்தே தீர்மானமாகின்றது. இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் மக்களைப் பொறுத்த வரையில், அவர்களின் வாழ்க்கை நிலையைப் பொறுத்த வரையில் ஒன்றுதான். தேசத்தில் வாழும் மக்களின் நலன்கள் என்ன என்பதில் இருந்தே, அனைத்தும் தீர்மானமாகின்றது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் எந்த வகையான சமூக உழைப்பில், எந்த வகையான உறவை உழைப்பில் கொண்டு இருக்கின்றனர் என்பதைக் கொண்டு, எப்படியான வாழ்வை வாழ்கின்றனர் என்பதைக் கொண்டே தேசிய நலன்கள் தீர்மானமாகின்றது. இந்தத் தேசிய நலன் தான் மக்களின் வாழ்வை மேம்படுத்தவும், அவர்களின் சமூகத் துயரங்களைப் போக்குவதை இலட்சியமாகக் கொண்டதாகும். மாறாக மக்களுக்கும், உழைக்கும் மக்களின் நலனுக்கும் வெளியில் தேசியம், தீர்வு என்பதெல்லாம் கெடுகெட்ட மோசடியாகும். இது குறுகிய தீய நோக்கம் கொண்டவை. மேலும் இது சொந்தக் குழு மனப்பான்மையைத் தாண்டி எதையும் மக்களுக்கு முன்வைப்பதில்லை. மக்களை மேலும் அடிமைப்படுத்தவும், ஒடுக்கவும் முன்வைக்கும் தீர்வாகவும், முன்மொழிவாகவும் தான் எஞ்சி நிற்கின்றது. "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" இதையே செய்கின்றது.

சிறிலங்கா அரசுக்கு எதிராகப் போராடும் ஒரு இயக்கம், தனது தீர்வுத் திட்டத்தில் எதை முன்னிறுத்தி இருக்கவேண்டும்? தேசிய அழித்தொழிப்புக்கு எதிராகச் சகல இராணுவ மற்றும் சமூகப் பொருளாதாரக் கூறுகளையும முதன்மைப்படுத்தியிருக்க வேண்டும். இலங்கை என்ற தேசத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் ஒன்றுபட்டு வாழ, சில அடிப்படையான மக்களின் நலன் சார்ந்த, ஜனநாயகக் கோரிக்கையை அமுல்படுத்தக் கோரியிருக்க வேண்டும். இதை தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் அமுல்படுத்தக் கோரியிருக்க வேண்டும். பேச்சு வார்த்தையின் சாரம், இங்கு தான் கட்டமைக்கப்பட்டு இருக்க வேண்டும். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" இதன் அடிப்படையிலான முன்வரைவை முன்வைத்திருக்க வேண்டும். சுரண்டப்படும் தமிழனின் சமூகப் பொருளாதாரச் சுரண்டல் உறவை நீக்கக் கோரியிருக்க வேண்டும். தேசியப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க, அன்னியப் பொருட்களின் வருகையை இலங்கை முழுக்க தடை விதிக்கக் கோரியிருக்க வேண்டும். அன்னிய இராணுவப் பொருளாதார ஒப்பந்தங்களை இரத்து செய்யக் கோரியிருக்க வேண்டும். சகல உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களுக்கான மீள் கொடுப்பு மற்றும் வட்டி கொடுப்பனவை நிறுத்தக் கோரியிருக்க வேண்டும். அந்த சுமையை தமிழ் மக்கள் முதுகில் ஏற்றுவதை எதிர்த்து இருக்க வேண்டும், இராணுவம் சார்ந்த வரவு செலவை நிறுத்தக் கோரியிருக்க வேண்டும். மாறாக அவற்றைத் தேசிய உற்பத்தி மீதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவம், கல்வி, குடியிருப்பு மற்றும் சமூகப் பணபாட்டுக் கலாச்சார துறைகளுக்கு பயன்படுத்தக் கோரியிருக்க வேண்டும். இதன் எல்லையில் குழுக்களின் ஆயுதக் களைவை உறுதி செய்ய வாக்குறுதியை அளித்து இருக்கவேண்டும். மக்கள் ஆயுதம் ஏந்துவதைக் கோரியிருக்க வேண்டும். தமிழ்ப் பெண்கள் மேலான ஆணாதிக்க ஒடுக்குமுறையையும், இலங்கை முழுக்க இந்த சமூக ஒடுக்குமுறையையும் நீக்கக் கோரியிருக்க வேண்டும். இனரீதியான ஒடுக்கு முறைகளை இலங்கை முழுக்க இனம் காட்டி அவற்றை நீக்கக் கோரியிருக்க வேண்டும். இப்படிப் பல நீண்ட கோரிக்கைகளை முன்நிறுத்தியிருக்க வேண்டும். இதைத்தான் ஒரே இலங்கையில் ஒன்றுபட்டு வாழ விருப்பமான நிபந்தனையாக வைத்திருக்க வேண்டும். உண்மையில் தமிழ் மக்களின் கோரிக்கையுடன் அக்கபக்கமாக இணைந்து இருக்கும், சிங்கள மக்களின் ஜனநாயகக் கோரிக்கையையும் இணைத்து இருக்க வேண்டும். ஜனநாயகக் கோரிக்கையை யாரும் கொச்சைப்படுத்த முடியாது. அதைப் பயங்கரவாதமாக சித்தரிக்கவும் முடியாது. ஒன்றுபட்ட இலங்கையில் வாழ உடன்படும் போது, தமிழ் மக்களுக்கு எந்த எந்த உரிமைகள் அடிப்படையானதும் அவசியமானதோ, அதை சிங்கள மக்களுக்கும் அமுல்படுத்தக் கோரியிருக்க வேண்டும். மாறாகப் புலிகள் தமது சொந்தக் குழுவின் அதிகாரத்தை நிறுவும் நோக்கில், தமிழ் மக்களின் அடிப்படையான ஜனநாயகக் கோரிக்கைகளின் முதுகெலும்பை முறிக்க வைக்கபட்டதே, புலிகளின் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"கான தீர்வுத் திட்டம்.

புலிகள் பேச்சு வார்த்தையை முதலில் நிறுத்தி அமைதி சமாதானத்தைக் கேள்விக்குள்ளாக்கி முடக்கிய போது, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் ஆஷ்லி வில்ஸ் நீண்ட கருத்துரை ஒன்றை வழங்கினார். அதில் "..புலிகளின் பொருளாதாரக் கொள்கை என்ன? சகலவற்றையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கிறார்களா? இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து வட, கிழக்கைத் தனிமைப்படுத்தி அங்கு சர்வாதிகாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது என்று அவர்கள் கருதுகிறார்களா? இதற்கு உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகள் இணங்க மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்." எனக் கூறினார். இதற்கான புலிகளின் பதிலில், மக்களின் முதுகில் குத்துவதே தமது பொருளாதாரக் கொள்கை என்று பிரகடனம் செய்தனர். ஏகாதிபத்திய (அமெரிக்காவின்) பொருளாதார நலன்களே, புலிகளின் தேசிய நலன் என்றனர்.

இதைப் பாலசிங்கம் தெளிவாகவும் தடுமாற்றம் இன்றியும் கூறும் போது "தாராள ஜனநாயகப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட திறந்த பொருளாதாரக் கொள்கைக்கே நாம் ஆதாரவானவர்கள் என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்." என்று பிரகடனம் செய்தார். இதன் மூலம் உலகமயமாதலுக்கு விசுவாசமிக்க தமது பங்களிப்பை, பகிரங்கமாகப் புலிகள் பிரகடனம் செய்கின்றனர். மக்களின் தியாகங்கள் அனைத்தும் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தச் செய்யப்பட்டது என்று கூறுவதன் மூலம், சில தமிழர்கள் எலும்புக்காக வாலாட்டத் தயாராக இருப்பதைத் தாண்டி



இதற்கு வேறு விளக்கம் கிடையாது. உலகம் முழுக்க தாராளமயமாக்கலும், திறந்த பொருளாதார கொள்கையும், மக்களின் அப்பட்டமான விரோதி என்பது நிறுவப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தான், புலிகள் பிரகடனங்கள், விளக்கங்கள் தேசியத்தின் பெயரில் வெளிவருகின்றது. உண்மையில் புலிகள் அரசுக்குச் சமர்ப்பித்தத் திட்டம் கூட இதையே மீளவும் சொல்ல முனைகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரானதாக "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" இருப்பது, அதன் தேசிய உள்ளடக்கமாகியுள்ளது. அதைப் பார்ப்போம்.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"க்கான திட்டத்தில் சரத்து 11.1 இல் "... அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் ...", சரத்து 11.1.B "...ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்குக் கிழக்கிற்கென சிறிலங்கா அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்" சரத்து 11.3 இல் "மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே வரும் கடன்களும் கொடுப்பனவுகளும்.." சரத்து 12-இல் "உள்ளூரிலும் வெளியூரிலும் கடன் பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல்..." இவை அனைத்தையும் புலிகள் நிராகரிக்கவில்லை. வரவேற்று, அதன் மேல் தமது உரிமையை நிலைநாட்டக் கோருகின்றனர். இதன் சாரம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்த, உலகமயமாதல் கொள்கைக்கு இணங்க செயல்படும் அதிகாரத்தைத் தம்மிடம் தாரைவார்க்கக் கோருகின்றனர். தமிழ் தேசத்தையும், தேசியத்தையும் அன்னியக் கடனில் கட்டமைப்பது பற்றி புலிகள் பேசுகின்றனர். கடன் வாங்கி நாட்டைக் கட்டமைப்பது என்பதே தமது தேசியக் கொள்கை என்கின்றனர். இதுவே உலகமயமாக்கலின் அடிப்படையான நிபந்தனையாகும். புலிகளின் இந்தத் தேசியம், தேசிய அழிப்பை அடிப்படையாகக் கொண்டது. தேசத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம், தேசிய ஆதாரங்களை ஏகாதிபத்தியம் விரும்பியவாறு ஆட்டிப்படைக்கும் உரிமையை அங்கீகரிக்கின்றது. இதற்குக் கடன் வாங்குவதன் மூலம், நாட்டை அடகு வைக்க போதுமானத் தேவை நிறைவு பெறுகிறது. இதில் சகுனி வேலையைப் புலிகள் செய்ய, நாட்டை அடகு வைக்கும் சூதாட்டம் தொடருகின்றது.

கடன், உதவி என்ற பெயரில் தரும் பணம் அனைத்தும் நிபந்தனைக்கு உட்பட்டவை. இந்த நிபந்தனைகள் கடன் மீள கொடுக்கப்படவும், அதற்கான வட்டி வழங்கப்படுவதையும் உறுதி செய்கின்றது. கடன் மற்றும் உதவியை எந்தத் துறையில், எப்படி, எந்த நிபந்தனையின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும், எந்தத் துறையைப் புறக்கணிக்க வேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. அரசுத்துறையை முற்றாக அகற்ற வேண்டும் என்ற திட்டவட்டமான நிபந்தனைக்கு உட்பட்டதே கடன்கள் மற்றும் உதவிகள். உதாரணமாக இலவசக் கல்வி, இலவச மருத்துவம் போன்ற அனைத்து அரசுத்துறைகளையும் நிறுத்தி, அதைத் தனியார்மயமாக்க வேண்டும் என்பது திறந்த பொருளாதாரக் கொள்கையின் சித்தாந்தம் மற்றும் நிபந்தனையாகவே உள்ளது. தாராள ஜனநாயகக் கொள்கைக்கு இதைத் தாண்டிய அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் வழங்கும் அகராதி உலகில் எங்கும் கிடையாது. அனைத்தும் எதார்த்தமானதாகவே உலகில் நீடிக்கின்றது. இதைப் புலிகள் அங்கீகரித்து "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டத்தில் முன்வைப்பதுடன், அதை அமுல் செய்யும் உரிமையே தமக்கு வேண்டும் என்கின்றனர். இதை யாரும் மறுத்து மறுவிளக்கம் சொல்லமுடியாது என்பதே உண்மை.

உலகளவில் ஏகாதிபத்தியத்திடம் கடன் பெற்ற எந்த நாடும் கடனை மீளக் கொடுக்க முடியாமல் போனதுடன், கடன் பெருகிச் செல்வதே உலக நியதியாகியுள்ளது. கடனுக்கான வட்டியைப் பல மடங்காகக் கட்டுவதே நிகழ்கின்றது. வட்டி கட்ட முடியாத நிலையில், உள்நாட்டு நெருக்கடிகளைத் தணிக்கவும், வாங்கிய கடனுக்கு வட்டியைத் தொடர்ச்சியாகப் பெறவும் மானியங்கள், உதவிகள் என்ற பெயரில் வட்டியின் ஒரு பகுதியைக் கழிப்பதே எப்போதும் நிகழ்கின்றது. இந்தக் கழிப்பும், மானியமும் மேலும் நாட்டை அடகு வைப்பதை நிபந்தனையாக்கி உறுதியைப் பெறுகின்றது. கடன் கட்டுவது என்ற பெயரில் உள்நாட்டுப் பொருளாதாரத்தையே கடன் கொடுத்தவனின் நிபந்தனைக்கு ஏற்ப மாற்றி அமைப்பதை, கடன் கொடுத்தவன் உறுதி செய்கின்றான். கடனை மீளக்கட்ட ஏற்றுமதிக்கான உற்பத்தி ஆணையில் வைக்கப்படுகின்றது. கடன் கொடுத்தவன் ஏற்றுமதியாகும் பொருளின் சந்தையைக் கைப்பற்றி வைத்திருப்பதன் மூலம், ஏற்றுமதியாகும் பொருளின் விலையைக் கட்டுப்படுத்தி நாட்டை மேலும் அடிமையாக்கின்றனர். இதற்கு உலகில் பல உதாரணங்கள் உண்டு.

கடன் ஒட்டு மொத்தத்தில் மக்களின் வாழ்க்கை ஆதாரத்தை அழிக்கின்றது. மக்கள் தமது அடிப்படைத் தேவைக்கான உற்பத்தியை இழப்பதுடன், வாழவழியற்ற சமூகமாக மாறிவிடுகின்றது. இந்தப் பாதையில் புலிகள் தாமும் நாலுகால் பாய்ச்சலில் செல்ல "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"கான தீர்வில் பிரகடனம் செய்கின்றனர். அதில் தேசத்தையும், தேச மக்களையும், தேச மக்களின் தேசிய உற்பத்திகளையும் அடக்கியொடுக்க சபதம் ஏற்கின்றனர். "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" முன்வைக்கப்பட்ட போது, தேசம் தேசியம் என்ற பெயரில், புலிகள் பல பத்தாயிரம் தியாகங்கள் அனைத்தும் நாட்டை அடகுவைக்க செய்யப்பட்ட தியாகமாகப் பிரகடனம் செய்துவிடுகின்றனர். "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டம் மூலம் இலங்கை அரசங்கத்துடன் கூட்டாகவும், தனியாகவும் கடன் வாங்கி குவிக்கவும், அடகு வைக்கவும் உள்ள உரிமையை அங்கீகரிக்கக் கோருவதே, புலிகளின் தேசிய இடைக்காலத் திட்டமாகும். இதன் மூலம் இதையே நிரந்தரத் திட்டமாக மாற்றுவது தான் தேசிய இலட்சியமாகும்.

மக்களின் அடிப்படையான தேசியப் பொருளாதார நலன்களில் இருந்து, புலிகள் தமது தீர்வுத் திட்டத்தைப் பற்றிப் பேசவில்லை. கடன் வாங்காமல் தேசத்தை நிர்மாணம் செய்ய முடியாதா? ஏகாதிபத்திய வழிகாட்டல் மற்றும் பணம் இன்றி நாட்டை முன்னேற்ற முடியாதா? தேச மக்களால் நிச்சயமாக முடியும். தேச மக்களின் மனித உழைப்பு தான் அனைத்தையும் நிர்மாணம்



செய்கின்றது. அதுவே பணத்தை உற்பத்தி செய்கின்றது. மனித உழைப்பு தான் பணமாக வருகின்றது. இதைக் கொள்ளை அடிக்கத்தான் ஏகாதிபத்தியங்கள் மானியம், உதவி, கடன் என்ற பெயரில் பணத்தைக் கொடுக்கின்றனர். பணம் மனித உழைப்பை உற்பத்திச் செய்யவில்லை. உழைப்பு தான் பணத்தை உற்பத்திச் செய்கின்றது. உழைப்பின் பின் தான் பணம் வருகின்றது. வெற்றுப் பணப் பேப்பர்கள் எதையும் தன்னிச்சையாக உற்பத்தி செய்யாது. ஒருவனிடம் பணம் குவிகின்றது என்றால், பல மனித உழைப்புகள் கொள்ளையிடப்பட்டது என்பதைத் தாண்டி பொருளாதாரத் துறையில் வேறு விளக்கம் கிடையாது.

உழைக்கும் மக்களின் வாழ்வுகளில் உழைப்பு தான் பணத்தை உற்பத்தி செய்கின்றது என்பதுதான் நிர்ணயமாக, எதார்த்தமாக பிரதிபலிக்கின்றது. உழையாது இருப்பவன் மட்டுமே இதை எதிர் நிலையில், பணம் தான் அனைத்தையும் உற்பத்தி செய்வதாக முன்வைக்கின்றான். ஒரு உழைப்பாளி உழைத்த பின் தான் பணத்தைப் பெறுகின்றான். இங்கு உழைப்பு முதன்மையானதாக உள்ளது. பணம் உழைப்பில் இருந்தே உருவாகின்றது. உழையாதவன் பணத்தைக் கொண்டு உழைப்பைப் பல மடங்காகச் சுரண்டுகின்றான். பணம் குவிகின்றது. இதையே கடன் கொடுத்தவன் செய்கின்றான். புலிகள் மக்களின் உழைப்பில் இருந்து, அதன் சாரத்தைப் பெறவில்லை. மக்களுக்கு எதிரான கண்ணோட்டத்தில் இருந்துக் கொண்டு, பணத்தைக் கொண்டு உழைப்பைச் சுரண்டி ஏகாதிபத்தியத்துக்குக் கொடுக்க விரும்புகின்றனர்.

பண நோட்டுகள் எப்போதும் எங்கும் வெறும் வெற்றுப் பேப்பர்களே. அதில் குறிக்கப்படும் பெறுமானத்தை அது உண்மையில் கொண்டிருப்பதில்லை. கட்டநோட்டுகள் மற்றும் விளம்பரக் காசுகள் இதை எப்போதும் உறுதி செய்கின்றன. அதாவது ஒரு பேப்பரை உற்பத்தி செய்யும் போது உண்டாகும் செலவை, அந்தப் பணப் பேப்பர் கொண்டிருப்பதில்லை. பணத்தில் குறிக்கப்படும் பெறுமானம், மனித உழைப்பின் அளவைக் குறிக்கின்றது. எவ்வளவு உழைப்புக்கு சமமான பெறுமானம் என்பது குறித்து முடிவு செய்து அச்சடிக்கப்பட்ட பின்பே, பணத்தாள் பணமாகின்றது. தமிழ்ப் பிரதேசத்துக்குள் ஒரு பண நோட்டும் ஊடுருவும் போது, தமிழ் மக்களின் உழைப்பின் அளவே பணத்தின் பெறுமானத்தைத் தீர்மானிக்கின்றது. உலகில் ஒரேயளவு உழைப்பும் கூட, அந்தப் பண நோட்டின் பெறுமானங்களை பிரதிபலிப்பதில்லை. நேரடியாக எப்போதும் எங்கும் உழைப்பு தான் பணத்தை உற்பத்தி செய்கின்றது. உழைப்பு இன்றி பணத்தை வாங்கவும் முடியாது கொடுக்கவும் முடியாது. பணம் வரவுக்கு முன்பு பண்டைய சமுதாயத்தில் பண்டப் பரிமாற்ற முறை இருந்த போது, உழைப்பின் முக்கியத்துவத்தைத் தெளிவாக யாரும் யாருக்கும் விளக்க வேண்டிய அவசியமற்றதாக இருந்தது.

மக்களின் உழைப்பின் மதிப்பு புலித் தேசியவாதிகளுக்கு புரியாதவரை, உழைப்பை இழிவுபடுத்தும் வரை, அதைச் சுரண்டிக் கொழுக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகமாக கருதி சூறையாடும் வரை, நாட்டை அடகு வைப்பதன் மூலம், கடன் வாங்கி, நாட்டை முன்னேற்றுவது பற்றி பீற்றுவதையே புலிகள் தேசியமாக பிதற்றுவர். பிதற்றுகின்றனர். மனித உழைப்பே அனைத்தையும் தீர்மானிக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டால், அன்னியனிடம் ஏன்? சிறிலங்கா இனவாத அரசிடம் கூட கையேந்திப் பிச்சை கேட்க வேண்டிய அவசியமில்லை. சிறிலங்கா அரசை எதிர்த்துப் போராடிக் கொண்டு, அவர்களிடம் கையேந்தி நிற்பது ஒரு முரணாக இருப்பது தேசியவாதிகளுக்கு தெரியாமல் போனது வேடிக்கையான மோசடியாகும்.

மக்களின் உழைப்பு ஆதாரம் இருக்கும் வரை, அந்த மக்களின் நலன்களை முன்வைத்து தேசத்தை, தேசியத்தை நிர்மாணம் செய்தால், உலகில் எந்த நாட்டிடமும் அடிமைப்பட வேண்டிய அவசியம் கிடையாது, மற்றவனிடம் பிச்சைக் கேட்டு பல் இளித்து கடன் வாங்க வேண்டிய அவசியம் கிடையாது, உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி முறை மீது, எமது தேசம் கட்டமைக்கப்பட வேண்டும். இந்தத் தேச நிர்மாணத்துக்கு உழைப்பை முதலிடுவதற்கு பதில், அன்னியக் கடன் மூலம் பிச்சை எடுத்து நிர்மாணிக்க வேண்டிய அவசியம் கிடையாது, நாட்டையே ஏன் தேசியத்தையே அடகு வைக்க வேண்டிய அவசியம் கிடையாது, மாறாக தேச மக்களின் உழைப்பின் மதிப்பை புரிந்து, மக்களுடன் மக்களாக மாறுவதன் மூலம் தனித்து தலை நிமிர்ந்து நிற்கமுடியும். உலகின் எந்த சூப்பர் ஏகாதிபத்தியத்தாலும் எம்மை அடக்கியாள முடியாது. இதற்கு மக்களைச் சார்ந்து நின்றுப் போராடுவதா அல்லது கடன் வாங்கி நாட்டை அடகு வைத்து அடிமையாக இருப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டும். புலிகளின் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டமோ தேசத்தையும், தேசியத்தையும் அடகு வைத்து, மக்களை அடிமைப்படுத்தவே அழைக்கின்றது. இதை இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாகவும், தனியாகவும் செய்யும் உரிமையையே "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" மூலம் கோருகின்றனர்.

இந்த "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டம் சரத்து 4, 5, 6 மனித உரிமை பற்றியும், சமுதாயப் பாகுபாடுகளை நீக்குவது பற்றியும் முன்வைக்கின்றது. இதை சிறிலங்கா அரசிடம் முன்வைப்பதுதான், ஏன் என்ற கேள்வி எழுகின்றது. இதை சிறிலங்கா அரசிடம் முன்வைத்து நிற்பதன் மூலம், அதை தாம் சொந்த மக்களுக்கு மறுப்பதாக சொல்லி விடுகின்றனர். இடைக்கால அரசு நிர்வாகம் தரப்படின், இதைத் தாம் கடைப்பிடிக்க உள்ளதாகக் கூறுவதன் மூலம், உண்மையில் அதைக் கடைப்பிடிக்க மறுப்பதைப் பிரகடனம் செய்கின்றனர்.

மனித உரிமையைப் பேணவும், மதச் சார்பின்மையை நிலைநாட்டவும் இடைக்கால நிர்வாக சபையான "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தரவேண்டும் என்கின்றனர். இனம், சாதி, மதம், தேசியம், பிராந்தியம், பால், வேறுபாடுகளை ஒழிக்கவும் தம்மிடம் இடைக்கால நிர்வாகமான "இடைக்காலத்



தன்னாட்சி அதிகாரசபை"யை தம்மிடம் தரப்பட வேண்டும் என்கின்றனர். இதை மக்களை ஒடுக்கும் அரசிடம் கோருவது விசித்திரமான முரணான மனித உரிமை மீறலாகும். இதை சொந்த மக்களின் வாழ்வியல் நடைமுறை மீது, நடைமுறைப்படுத்த, சிறீலங்கா அரசு எந்தவிதத்திலும் உங்களை கட்டுப்படுத்தவில்லை, தடுக்கவுமில்லை. உண்மையில் இதைக் கொடுக்க மறுப்பது புலிகளின் அரசியல் சித்தாந்தமாகும். தமிழ் மண்ணில் தமிழ் மக்களுக்கு மனித உரிமையைப் புலிகள் மறுக்கின்றனர். புலிகள் மத வேறுபாடுகளைக் கட்டிப் பாதுகாத்து, மக்களைப் பிளக்கின்றனர். சாதிய, பிராந்திய, இன, பால் வேறுபாட்டை பாதுகாப்புடன், இதன் பிளவை புலிகள் அகலமாக்குகின்றனர். இதை நீக்க சிறீலங்கா அரசு உங்களை அமைப்பு ரீதியாக, சித்தாந்த ரீதியாக கட்டுப்படுத்தவில்லை.

சிறிலங்கா அரசு தனது சொந்த மக்களுக்கு இதை கொடுக்கவில்லை என்பது உண்மை தான். அதேபோல் அதை நீங்களும் கொடுக்கவில்லை என்பதே உண்மை. உலகையும் மக்களையும் ஏமாற்ற, இதை "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" என்ற தீர்வுத் திட்டத்தில் முன்வைத்து, இடைக்கால நிர்வாக அலகை கைப்பற்ற நினைப்பது என்பது ஒரு கடைந்தெடுத்த மோசடியாகும். சொந்த மக்களுக்கு இதை நீங்கள் வழங்க, என்ன தடை உங்களுக்கு உள்ளது? இதற்கு எந்த வகையில் சிறிலங்கா அரசு உங்களைத் தடுக்கின்றது? உங்களை நீங்களே தடுத்துக் கொண்டு, அதை சிறிலங்கா அரசிடம் வைப்பது மோசடியாகும். மக்களிடையேயான சமத்துவத்தையும், மக்களின் ஜனநாயக உரிமையையும் நாங்கள் வழங்குவோம் என்பதும், அதை அரசிடம் முன்வைப்பதும் கோமாளிக் கூத்தாகும். சொந்த மக்களிடையே சமத்துவத்தை நிலைநாட்டுவது, ஒரு தேச விடுதலை இயக்கத்தின் அடிப்படையான தேசியக் கடமை. மக்களின் ஜனநாயக உரிமையை நிலை நாட்டுவது, தேசிய இயக்கத்தின் ஆன்மாவாகும். இதை வழங்க மறுத்து, "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டம் மூலம் வழங்குவதாக அறிவிப்பது என்பது, விடுதலைப் புலிகள் இயக்கம் மக்களுக்கு எதிராக இருந்து வந்ததை ஒத்துக் கொள்வதாகும். அதை சிறிலங்கா அரசிடம் சமர்பிப்பது என்பது, தமிழக மக்களின் அடிப்படை உரிமைகளையும், அவர்களின் தேவைகளையும் சிங்கள இனவாதிகளிடம் தாரைவார்ப்பது தான். புலிகளின் வேலை வரி அறவிடுவதும், அடக்கி ஆள்வதும் என்பதைத் தாண்டி எதுவும் இல்லை என்ற நிலைக்கு, புலிகளின் "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை" தீர்வுத் திட்டம் தன்னைத் தானே பிரகடனம் செய்கின்றது.

அடுத்து சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பித்த உப்புச் சப்பில்லாத் முன்மொழிவுகளைப் போல், புலிகள் பினாமிகளுடன் கூடித் தயாரித்து சமர்ப்பித்த உள்ளடக்கமும் அதைத் தாண்டி விடவில்லை. சிறிலங்கா இனவாத அரசு தமிழ் மக்களுக்கு செய்தது போல், புலிகளும் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமையை நிராகரித்தே இடைக்காலத் தீர்வை வைத்துள்ளனர். முஸ்லிம் மக்களின் அடிப்படையான உரிமையை முன்னின்று அங்கீகரிக்க வேண்டியது புலிகளின் அடிப்படையான தேசியக் கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குமாகாணம் என்று எடுத்தால், பெரும்பான்மை இனமாக முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். இதைவிட முஸ்லிம் மக்கள் செறிவாக கிழக்கில் பல இடங்களில் வாழ்கின்ற நிலையில், அவர்கள் மேலான தொடர்ச்சியான ஒடுக்குமுறை தொடருகின்ற நிலையில் புலிகளின் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"யும் அவர்களை அங்கீகரிக்க மறுக்கின்றது. இதையே தமிழ் மக்களுக்கு சிறிலங்கா அரசு செய்கின்றது. ஒரு விடுதலை இயக்கம் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பதன் மூலம், சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களை அடக்கியொடுக்கவே வழிவிட்டுள்ளனர். சரத்து 1. முஸ்லிம் பிரதி நிதித்துவத்தை உறுதி செய்த போதும், அவர்களின் தனியான அலகை அங்கீகரிக்க மறுக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனமாக இருப்பது மறுக்கப்படுகின்றது.

சரத்து 1, 2-இல் பெரும்பான்மையைப் புலிகள் தமக்குச் சார்பாகத் தக்க வைப்பதன் மூலம் அதன் தலைவரின் அதிகாரத்தை ஆணையில் வைக்கின்றனர். உண்மையில் ஜனநாயக விரோதப் பிரதிநிதித்துவத்தைச் சட்டமூலமாக்கக் கோருகின்றனர். பல்வேறு இன மற்றும் சமூக பிரதிநிதித்துவம் மூலம் ஜனநாயகத்தைப் பன்மைப்படுத்தி, உரிமைகளை நிலைநாட்டுவதற்குப் பதில், சர்வாதிகார வடிவங்களில் சொந்தக் குழுவின் ஆட்சியமைப்பைத் தக்கவைக்க முனைகின்றனர். அத்துடன் அதிகார அலகின் பிரதிநிதித்துவம் தொடர்பாக மக்களின் சமூகப் பங்களிப்பை மறுக்கின்றனர். உழைக்கும் மக்களின் வெவ்வேறு பிரதிநித்துவம் மறுக்கப்படுகின்றது. தேசத்தை, தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகள் போன்றோரின் பிரதிநிதித்துவத்தை "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" மறுக்கின்றது. சாதிய ஒழிப்பு, ஆணாதிக்க ஒழிப்பு, மதச்சார்பின்மையை அடிப்படையாக கொண்ட பிரநிதித்துவம் இவையெல்லாம் "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை"யால் மறுக்கப்பட்டள்ளது. வெறும் நிர்வாக இயந்திரமாக எண்ணிக்கை அடிப்படையில் ஆட்சியைப் பெறவும், அதைத் தக்க வைக்கவும், அதிகாரத்தை சர்வாதிகார வழிகளில் நிறுவவும் இந்த "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" தீர்வு திட்டம் முனைப்பு கொள்கின்றது. அரசியல் ரீதியான சமூக வெற்றிகளைச் சார்ந்து இருப்பதை மறுக்கின்றது. மக்களின் அடிப்படையான தேச நலன்களில் இருந்து இந்த தீர்வு முன்வைக்கப்படவில்லை. மாறாகப் புலிகள் என்ற சொந்தக் குழுவின் நலன்களில் இருந்து, போலியாக இனத்தின் பெயரால் முன்வைக்கபட்டத் தீர்வே "இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை" என்ற இந்தத் தீர்வுத் திட்டம். இந்த உள்ளடக்கம் தான் "இடைக்காலத் தன்னாட்சி - அதிகாரசபை" தீர்வுத்திட்டம் முழுக்க மண்டிக் கிடக்கின்றது. எப்படி சிறிலங்கா இனவாத அரசு தனது தீர்வுத் திட்டம் மூலம் இனவாதத்தைப் பாதுகாக்க முனைகின்றதோ, அதே போன்று தமிழ்க் குறுந்தேசிய அடிப்படையில் புலிகள் முன்வைத்தத் திட்டமே "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை"யாகும். சிறிலங்கா அரசுக்கும் சரி, புலிகளுக்கும் சரி மக்களை இட்டு எந்த விதமான சமூக அக்கறையும் கிடையாது என்பதை, கடந்த இரண்டு வருடமாக அமைதி சமாதானம் என்ற பெயரில் மீண்டும் மீண்டும் நிறுவி வருகின்றனர்



## சந்தர்ப்பவாதத்துடன் கூடிய பிழைப்புவாதம் பித்தலாட்டத்தை பிரகடனம் செய்கின்றது

**"நான் இன்றும் மார்க்ஸீயவாதியே"** - தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசானக் கவிஞர் புதுவை இரத்தினதுரை சிங்களப் பத்திரிக்கை ஒன்றுக்கு அளித்தப் பேட்டி இது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முதலாவது கொள்கை அறிக்கையில் சோசலிசத் தமிழீழமே எமது இலட்சியத் தாகம் எனப் பிரகடனம் செய்தனர். பிறகு அதையே புலிகள் தமது சொந்தக் கைகளால் புதைகுழிக்குள் அனுப்பிய வரலாற்றை தெரிந்து கொள்ள விரும்பாத மந்தைக் குணம் கொண்ட தமிழ் சமுதாயத்தில் இருந்து தான், புதுவை இரத்தினதுரை கதை சொல்லுகின்றார். தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களின் காதுக்கும் பூ வைக்க முனையும் ஒரு மோசடிதான் இது. அன்று அன்ரன் பாலசிங்கம் ரொக்சிய கட்சியில் இருந்து பெற்ற திரிபுவாத அரசியலை அடிப்படையாகக் கொண்டு, புலிகளுக்கு இடதுசாயம் பூச முயன்றவர். புலிகளின் கொள்கை வகுப்பாளராக தன்னைத் தான் பாராட்டிக் கொண்டவர்கள். தளத்தில் புலிகளின் கொள்கை வகுப்பாளராக இருந்த மு.நித்தியானந்தன், புலிகளின் பத்திரிகையில் சொந்த நடைமுறைக்குப் புறம்பாகவே மாவோவின் மேற்கோள்களை அச்சிட்டு இடது சாயம் தெளித்து மக்களை ஏமாற்ற முயன்றவர். புலிகளுக்கு ஒரேயொரு ஆயுள் தலைவர் இருப்பது போன்று, கொள்கை வகுப்பாளரும் ஒரேயொருவர் மட்டுமே இருக்க முடியும் என்ற அடிப்படையில், மு.நித்தியானந்தன் கழித்து விடப்பட்டார். இதனால் புலி எதிர்ப்பாளராக வெளிவந்த மு.நித்தியானந்தன், காலத்துக்கு காலம் புலிகளின் நிலைக்கு ஏற்பத் தாளம் போட்டு தனது பிழைப்புக்கு ஏற்ற நிலைப்பாட்டை நடத்தி வருகின்றார்.

இந்த வரிசையில் புதுவை இரத்தினதுரை "நான் இன்றும் மார்க்சியவாதியே" என்று கூறுவதன் மூலம், நக்கிப் பிழைக்கும் தனது நிலைப்பாடு சார்ந்து, தான் இருக்கும் அமைப்பை மார்க்சிய இயக்கமாக சித்தரித்துக் காட்ட முனைகின்றார். பிழைப்புத் தனத்தின் கடைக் கோடியில் நின்றே இப்படி புலம்புவது நிகழ்கின்றது. 1960-களில் நடந்த சாதியப் போராட்ட வரலாற்றில் அதற்கு ஆதரவாக இருந்த இவர், அதையே மார்க்சிய போராட்டமாக சித்தரிப்பது ஒரு விசித்திரமான விடையம். சண் தலைமையிலான கட்சி முன்னெடுத்த சாதிப் போராட்டமே, தவிர அது ஒரு வர்க்கப் போராட்டம் அல்ல. வர்க்கப் போராட்டத்தின் உள்ளார்ந்த ஒரு அம்சம் மட்டும் தான். அடிப்படையில் ஒரு ஜனநாயகக் கோரிக்கை மட்டும் தான். சண் தலைமையில் நடந்த போராட்டம், வர்க்க அடிப்படையிலான கட்சியைக் கட்டுவதிலும் சரி, வர்க்கப் போராட்டத்தையும் சரி முன்னெடுக்கவில்லை. மாறாகப் பொருளாதாரப் போராட்டங்களை வர்க்கப் போராட்டமாக காட்டி, வர்க்கப் போராட்டத்தை திசை திருப்பி சீரழித்தனர்.

அன்றைய ஜனநாயக போராட்டத்தில் கலந்து கொண்ட புதுவை இரத்தினதுரை, ஒடுக்கப்பட்ட சாதியின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் இந்த நிலைப்பட்டை எடுத்து இருந்தார். அதை மார்க்சியமாக நம்பியதும், அதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சியமாக விளக்குவதும், இதுவே அவரின் சித்தாந்தமான போது இயல்பில் புலிகளில் இணைவதை நியாயப்படுத்தியது. ஜனநாயகக் கோரிக்கையில் நிற்கும் ஒருவன் நிலைமைக்கு ஏற்ப ஊசாலாடுவது, புதுவை இரத்தினதுரைக்கும் விதிவிலக்கல்ல. இந்த நிலையில் தான் புதுவை இரத்தினதுரை, ஜனநாயகக் கோரிக்கையை கைவிட்டு வலதுசாரிகளான புலிகளுடன் இணைந்தார். வலதுசாரிக் கருத்துக்காகத் தன்னையும் தனது தோலின் நிறத்தையும் மாற்றிக் கொண்டதுடன், அவர்களின் கருத்துகளையும் அச்சடித்தது போல் பிரச்சாரம் செய்தவர். அன்றாட நிலைமை சார்ந்து வலதுசாரிய கருத்தின் அடிப்படையில் பல கவிதைகளைப் புனைந்தவர். இந்தக் கவிதைகளில் அவர் முன்னர் போராடிய சாதிய அம்சத்தை மருந்துக்குக் கூட இணைக்கத் தவறியவர். பிழைப்புக்கும் அந்தஸ்துக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு, மக்களின் தியாகங்களை கேவலப்படுத்திய ஒருவரே புதுவை இரத்தினதுரை.

பிழைப்புக்குச் சோரம் போன புதுவை இரத்தினதுரை நேரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப கவிதை பாடியவர். புலிகளின் தாளத்துக்கு ஏற்ப அதற்கு இசைந்து பாடியவர். சொந்த உணர்வில் இருந்து கவிதை படிக்கவில்லை. புலியின் உணர்வுக்கு ஏற்ப கவிதை படித்தவர். மக்களின் அடிப்படை உணர்வு சார்ந்த ஜனநாயகத்தை ஏறி மிதிப்பதில், தன்னைத் தான் இசைவாக்கியவர். புலம்பெயர் சமூகம் பற்றி பாடிய கவிதை ஒன்றை உதாரணத்துக்கு எடுப்போம்.

“.. பெற்ற தாயினை எட்டி உதைப்பது போல
தாயகம் தீயல் எரிகையில் விட்டு
விமானத்தில் ஏறி பறந்தவர்
வீரம் இல்லாதவர் நாயிலும் கீழானவர்
சுற்றி வளைத்தனர் சிங்களப் படையினர்
சுட்டுத் தள்ளுவர் என்ற பயத்தினால்
விட்டுப் பறந்த கோழைகள் நாளையே
வீடு திரும்பினால் காறியே துப்புவோம்
கப்பல் ஏறி ஜெர்மன், பிரான்ஸ் உடன்
கனடா நாட்டிலும் தஞ்சம் புகுந்தனர்
அப்பு ஆச்சியை கவனம் கவனம் என்று
அங்கேயிருந்து கடிதம் எழுதினர்
தப்பிப் பறந்தவர் தம்பியையும் வாவென
தம்பிமாரையும் அங்கு அழைத்தனர்
துப்புக் கெட்டவர் அகதி லேபிலில்
தூசு தட்டியே காசு பிழைத்தனர்
ஓடியவர் ஓடட்டும் ஊழைச் சதையர்
எல்லாம் பேடியர்கள் ஓடட்டும் போனவர்
போகட்டும் பாய்விரித்தால் போதும்



படுத்துறங்கும் இவர்கள் எல்லாம் நாய்சாதி!
நாய்சாதி ஓடி நக்கிப் பிழைக்கட்டும்!
தப்பிப்பிறந்தவன் தமிழன் என்று சொல்ல வெட்கி
கப்பலிலே ஏறி கனடாவில் நக்கட்டும்..”

என்று அன்று பாடியவர். இன்று அதுபற்றி வழங்கிய பேட்டியில் என்ன சொல்லி தாக்குகின்றார் எனப் பார்ப்போம். “கவிதை எழுதுவதற்காக அந்த நேரத்தில் நான் பெற்றுக் கொண்ட மன உணர்வின் வெளிப்பாடு ... அப்போது போராளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த சமயத்தில் பெருவாரியான இளைஞர்களின் இடம்பெயர்வு எனக்குக் கோபத்தைத் தந்தது. அதே புலம்பெயர்ந்த தமிழர்கள் இப்போது புகலிட நாடுகளிலிருந்து உணர்வு குன்றிவிடாமல், எமது போராட்டத்தைத் தாக்குவதில் பெரும் பலமாக இருக்கின்றார்கள்” என்று இன்று நக்கிப் பிழைத்தபடி பினாத்துகின்றார். இன்று வெளி நாட்டில் உழைத்து வாழும் மக்களின் பணத்தில் நக்கிப் பிழைக்கின்ற நிலைக்குப் புலிகள் தங்கி இருப்பதால் தான் இந்தக் குட்டிக்கரணம். பணம் தருவதைத் தான் கவிஞர் உணர்வு குன்றாதவர் என்கின்றார். பணத்துக்காக தன் நிலைப்பாட்டையே மாற்றிவிடும் இந்தக் கவிஞர், பணத்தை பாயாக விரித்தால் அதையே புணரக் கூடியவர் தான் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இது கவிஞரின் இன்றைய உணர்வு.

அன்று எண்ணிக்கைக் குறைந்த நிலையில் தான், இப்படி தூற்றியதாக ஒப்புக்கொள்ளும் இவர் அதை அன்றைய உணர்வு என்கின்றார். அந்த உணர்வு சார்ந்து வெளிநாடு சென்றவர்களைப் பயந்து, பறந்தோடிய கோழைகள் என்ற காரணத்தைக் கற்பிக்கின்றார். உண்மையைப் புதைகுழிக்கு அனுப்பிவிட்டு அதை துப்பாக்கி முனையில் பாதுகாத்தபடிதான் தூற்றமுடிகின்றது. நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்தவர்கள் பயந்து ஓடும் கோழைகள் என்பதாலா, நாட்டை விட்டு வெளியேறினர். இல்லை ஒரு நாளும் இல்லை. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் கொண்டிருந்த மக்கள் விரோத அரசியலே, புலம் பெயர வைத்தது. பிரதானமானது தேசியப் பொருளாதாரக் கொள்கை தொடர்பானது. இரண்டாவது மக்களின் ஜனநாயக உரிமை தொடர்பானது. இந்த இரு பிரதான காரணத்தினாலும் தான் புலம் பெயர்வு ஒரு விதியாகியது. இன்று வன்னியை விட்டே வெளியேற முடியாத பாஸ் நடைமுறை மூலமே, வன்னியில் இருந்து மக்கள் வெளியேறுவதைப் புலிகள் கட்டுப்படுத்துகின்றனர். சொந்த தேசிய அரசியலால் அல்ல.

வெளிநாட்டை நோக்கிய புலம் பெயர்வில் பொருளாதார ரீதியான தனிமனித முன்னேற்றம் சார்ந்த அன்னிய மோகம், தேசத்தின் தேசியத்தின் அடிப்படைப் பண்பாக கொள்கையாக இருக்கும் வரை, யாரையும் தூற்ற புலிகளுக்கு எந்தத் தார்மீக உரிமையும், அருகதையும் கிடையாது. புலிகள் இயக்கமானது மக்களிடம் இருந்து அன்னியப்பட்ட இளைஞர் குழுவாக, மக்களின் அடிப்படை வாழ்வியலுடன் ஒன்றிணையாத நிலையில், அதற்கு எதிராகச் செயல்பட்டபடி உருவான ஒரு இயக்கமே. இந்த இயக்கம் இராணுவத் தாக்குதலை நடத்திவிட்டு கோழையைப் போல் ஓடி ஒழிந்துவிடும் நிலையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் உள்ள கிராமங்களை சிங்கள இராணுவத்தின் சூறையாடலுக்கு உள்ளாக்குவதே ஒரு போராட்டமாகியது. தாக்கியவன் கோழையைப் போல் பயந்து ஓடி ஒழிந்துவிடும் போது, தாக்குதலுக்கு உள்ளாகும் மக்கள் அங்கிருந்தும் அந்த மண்ணில் இருந்தும் தப்பியோடுவது ஒரு இயங்கியல் விதி.

இதில் பொருளாதார ரீதியாக ஒரு சாண் வயிற்றுக்கு வழி காட்ட முடியாத தேசிய பொருளாதாரக் கொள்கையை பிரகடனம் செய்யும் (இன்று தேசியத்தை அழிக்கும் உரிமைக்காக ஏகாதிபத்தியத்திடம் கையேந்தி நிற்கின்றனர்) புலிகளின் அதிகாரத்தில், சொந்த மண்ணை விட்டு சிங்கள தேசம் நோக்கிய புலம் பெயர்வையும், பிறகு இலங்கையிலிருந்து புலம் பெயர்வையும் புலிகள் தான் ஊக்குவித்தனர். இது மட்டுமா நடந்தது? இல்லை. புலிகள் ஜனநாயகத்தை மக்களுக்கு மறுத்து அதன் தொடர்ச்சியில் அனைத்து அரசியல் அமைப்புகளையும் வேட்டையாடிய போது, ஈவிரக்கமற்ற படுகொலைகளே தேசிய அரசியலாகியது. இந்த நிலையில் மற்றைய அரசியல் பிரிவுகளும், இயக்க ஆதரவாளர்களும் அவர்கள் குடும்பத்தினர் முதல் கொண்டு அனைவரும் படுகொலைகளில் இருந்து தப்ப புலம் பெயர்வை ஒரு நிபந்தனையாக்கினர். எப்படி வாய் மூடி மக்கள் செம்மறிகளாக வாழ வேண்டும் என்பதை புலிகள் அதிகாரப்பூர்வமாக அன்று வெளியிட்ட கருத்தில் நாம் காணமுடியும். “40 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விமர்சனங்களை நிப்பாட்டிவிட்டு உங்களுடைய வாய்களை மூடி வைத்துக் கொள்ள வேண்டும்.” என்று புலிகளின் மத்திய குழு உறுப்பினர் யோகி கூறியதில் இருந்தே புதுவை இரத்தினதுறை கவிதையின் கருவைத் தேடினார். இதை அவர் தாண்டவில்லை. சாமி (புலிகள்) சரணம் போட்டபடி, வாய் உண்பதற்கு மட்டும் திறக்க கோரியவர்களுக்கு, (புலிகளுக்கு) அவற்றை இசையாக்கியவர். மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரம் வழங்கினால், புலிகள் அரசியல் அனாதைகள் ஆகிவிடுவார்கள் என்று தலைவரின் பெயரில் துண்டுப் பிரசுரம் போட்டு, அந்த தாளத்துக்கு ஏற்ற மெட்டில் தான் இன்று புதுவை இரத்தினதுரையின் சொல் அலங்காரங்களும், அவரின் பிழைப்புச் சார்ந்த செழிப்பும் உயிர் வாழ்கின்றது. மக்கள், மக்கள் என்ற ஒப்பாரிகளும் தொடருகின்றது. எல்லாம் புலிமயமாகி அதுவே துப்பாக்கியின் ஒரேயொரு மொழியான நிலையில், வாய் மூடிய சமுதாயத்தில், பலவீனமான சமூக அறிவியலில் பின் தங்கிய பெண்களை, இளம் குழந்தைகளை புலிகளின் ஆதார சக்தியாக்கினர். இப்படித் தான் புலிகள் மீண்டும் ஆள் திரட்ட முடிந்தது. தற்போது கட்டாய இராணுவச் சேவை மறைமுகமாக அமுலுக்கு வந்துள்ளது.

அன்றும் சரி இன்றும் சரி, தேசிய முதலாளிகள் மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் சொத்துகளைப் பலாத்கரமாக அபகரித்தும், மிரட்டியும் கறக்கின்ற நிலையில், அவர்களும் கூட நாட்டைவிட்டே வெளியேறினர், வெளியேறுகின்றனர். இப்படி பற்பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டே புலம் பெயாந்தனர், புலம் பெயர்கின்றனர். 1983 க்கு பிந்திய இரண்டு வருட காலமே இயக்கத்தின் இணைவு மிக உச்சத்தில் இருந்த காலம். இந்த



நிலையை பின்னால் ஒருக்காலும் அடையவில்லை. புதுவை இரத்தினதுரை காட்டும் காரணம் போலியானது. ஆயிரம் ஆயிரமாக 1983 - 1985 க்கு இடையில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இயக்கங்களில் இணைந்தனர். ஜனநாயகத்தைத் துப்பாக்கி முனையில் புதைகுழியில் புதைத்த போது இது தலைகீழானது. புலம் பெயாந்தவனை திட்டித் தீர்ப்பதால் உண்மை பொய்யாகாது.

புலம் பெயர்ந்தவனின் உழைப்பைப் பற்றி கொச்சைப்படுத்தும் போது “தூசு தட்டியே காசு பிழைப்பவாகள்” என்று உழைப்பின் மீதான வெறுப்பை பாடத் தயங்கவில்லை. ஆனால் அவர்கள் வேர்வை சிந்தி சொந்த உழைப்பில் வாழ்ந்தார்கள். ஆனால் உழைப்பில் ஈடுபடாதவர்கள் (புலிகள்தான்) தூசு தட்டிய காசை இன்று பல்வேறு வழிகளில் வசூலிப்பவர்களாக மாறியுள்ளனர். அன்று கிண்டல் அடித்த அதே புலிகள் தான், இன்று அதில் தங்கி நிற்கின்றனர். ஆனால் அந்த மக்களுக்காக, அந்த மக்களின் வாழ்வுக்காக அவர்களின் நியாயமான போராட்டம் எதையும் புலிகள் முன்னெடுப்பதில்லை. அதற்கு எதிராக இருந்தபடி மூலதனத்துக்குச் சேவை செய்வதில், தம்மைத் தாம் தலைசிறந்தவராகக் காட்டிக் கொள்கின்றனர். புதுவை இரத்தினதுரை காலத்துக்கும் இடத்துக்கும் எற்ப பாடிப் பிழைப்பவர் தானே தவிர மக்களின் அடிப்படையான பிரச்சனைகளில் இருந்து பாடியவர் அல்ல.

தமது சொந்த நடத்தையை நியாயப்படுத்த மக்களுக்கு எதிராக பற்பல கதைகள் சொன்ன போதும், ஒன்றை மட்டும் தற்போதைக்கு எடுத்துக் கொள்வோம். இவர் வழங்கிய மற்றொரு பேட்டியில் “இனங்களுக்கிடையிலான சமத்துவம் எமது கனவுகளில் ஒன்றுதான். கணிசமான அளவு அது நனவாகி வருகின்றது. இனத்தின் அடையாளத்தின் மீதான அழிப்புக்கு எதிராக ஆரம்பித்த தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இப்போது இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பற்றி சிங்களச் சமூகத்தை சிந்திக்க வைத்திருக்கிறது. இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தினுள்ளே சாதி அமைப்பு அப்படியே உறைந்து போய் இருப்பதாக கள நிலை அறியாமல் பரப்புரை செய்யும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். (உறைந்து போகும் அடக்கு முறையை மீறியும், படுகொலையில் இருந்து தப்பியும் என்பதை சொல்லாமல் சொல்லி விடுகின்றார்.) நான் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சோந்தவன். இந்த வெற்றுப்பிரச்சாரம், வேக்காடுகள் எல்லாம் எனக்கு புரியாதவையல்ல. சாதி ஒழிப்புக்கு எதிராக கவிதைகளையே ஆயுதங்களாக்கி ஊர் ஊராகச் சென்று கவியரங்குகள் நடத்தி இருக்கிறேன். தீண்டாமை ஒழிப்பு - வெகுசனப் போராட்டம் நடத்தி, ஒழிக்கவேண்டிய நிலையில் இருந்த அதே சாதி அமைப்பு இப்போதும் இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதே சமயம் வேருடன் கிள்ளியெறியப்பட்டு விட்டது என்று சொல்வதற்கும் நான் தயாராக இல்லை” என்று புலம்பி புலம்பி உள்ளடக்கத்தை மழுங்கடிக்க முனைகின்றார்.

பல்வேறு அடிப்படையான கருத்துகள் மீது உண்மையைக் குழி தோண்டி புதைக்கின்றார். இனங்களுக்கிடையே ஐக்கியம் பற்றி சிந்திப்பதாகக் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர், என்ன செய்தார்? இந்த ஐக்கியத்துக்குப் புலிகள் குண்டு வைக்கவில்லையா? ஏன், நீர் சிங்களவன் என்று ஒருமையில் அழைத்து கவிதை பல பாடி, ஐக்கியத்தை வேட்டு வைக்கவில்லையா? இன அய்க்கியம் பேசும் புதுவை இரத்தினத்துரையின் யோக்கியதை இதுதான்! அப்பாவி சிங்கள மக்களையும், இனவாதிகளையும் பிரித்தறியும் அரசியலை புலிகள் எப்போது எங்கே எந்த விடையத்தில் கையாண்டார்கள் என்பதை உங்கள் கவிதையில் எங்கே எப்படி சொல்லியிருக்கின்றீர்கள்? அப்பாவி சிங்கள மக்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைளை ஏற்ற சிங்கள மக்களையும் கூட இனம் காண மறுத்த தமிழ் குறுந்தேசிய வாதிகள் அல்லவா நீங்கள். எல்லைகளை கடந்ததுமே நரைவேட்டையாடியும், குண்டு வைத்த போது ஐக்கியம் தூளாகியது. அதைக் கூட்டி அள்ளி இன்றைக்கு சிங்களவனை ஒருமையில் அழைத்தபடி, ஒட்டவைப்பதாகக் கூறுவது நகைப்புக்குரியது. இங்கு ஐக்கியத்தை புலிகள் நாடவில்லை. மாறாக ஏகாதிபத்தியங்கள் தமது தேவைக்கு இசைவாக நடத்துவிக்கும் பேச்சு வார்த்தை மேடையை அலங்கரிக்கும் சொற்தொடர்கள் தான், "சிங்கள மக்களுடன் ஐக்கியம்'' பற்றிக் கூறும் வார்த்தை ஜாலங்கள். உண்மையான ஐக்கியத்தை தமிழ் தேசியப் போராட்டம் கையாண்டு இருந்திருந்தால், ஓடிப் போன 60,000 சிங்களப் படை வீரர்கள் புலிகளுடன் எப்போதோ இணைந்து இந்த இனவாத அரசையேத் தூக்கி எறிந்து இருப்பார்கள்.

"சாதி அமைப்பு அப்படியே உறைந்து போய் இருப்பதாக கள நிலை அறியாமல் பரப்புரை செய்யும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். நான் ஒடுக்கபட்ட சமூகத்தைச் சோந்தவன். இந்த வெற்றுப்பிரச்சாரம் வேக்காடுகள் எல்லாம் எனக்குப் புரியாதவையல்ல. சாதி ஒழிப்புக்கு எதிராகக் கவிதைகளையே ஆயுதங்களாக்கி ஊர் ஊராகச் சென்று கவியரங்குகள் நடத்தி இருக்கிறேன். தீண்டாமை ஒழிப்பு வெகுசனப் போராட்டம் நடத்தி ஒழிக்கவேண்டிய நிலையில் இருந்த அதே சாதி அமைப்பு இப்போதும் இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதே சமயம் வேருடன் கிள்ளியெறியப்பட்டு விட்டது என்று சொல்வதற்கும் நான் தயாராக இல்லை'' என்ன வக்கிரமான கூற்று. சாதியம் உறைந்து காணப்படுகின்றது என்பதை மறுக்கும் இவர், அதற்காக போராடத் தேவையில்லை என்கின்றார். அதே நேரம் வேருடன் கிள்ளியெறியப்பட்டு விட்டது என்று சொல்வதற்கும் நான் தயாராக இல்லை என்று கூறுகின்ற போது பிழைப்புவாதத்தின் முரண்பாடு தொங்கி நிற்பதையும், சாதியைப் பாதுகாக்கும் புலிகளின் அரசியல் நிலையை வக்காளத்து வாங்குவது தொங்கி நிற்பதையும் மறைக்க முடியவில்லை. சாதி அமைப்புக்கு எதிராகப் போராட வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, புலிகளின் மேல் சாதிய யாழ் ஆதிக்க நிலைக்காக வக்காளத்து வாங்குகின்றார். ஆனால் வேருடன் கிள்ளியெறியப்பட்டு விட்டது என்று சொல்வதற்கும் நான் தயாராக இல்லை என்று குசு விடும் போது, தன்னையும் மீறி விடுகின்றது. ஆனால் இந்தப் பேட்டியை துணிச்சாலாக முரண்பாட்டுடன் வழங்க பின்பலம் உண்டு. இதைப் புரிந்து கொள்ள சரிநிகருக்கு 1990 களில்



வந்த ஒரு வாசகர் கடிதமானது நடைமுறை சார்ந்த எதார்த்த உண்மை இது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. "தயவு செய்த புலிகள் பற்றித் தப்பாக எழுதுவதை இன்றுடன் நிறுத்தும்படி மிக மன்னிப்பாக கேட்கிறேன். நீர் எங்கிருந்தாலும் உமது காதுச்சவ்வு விரைவில் துப்பாக்கிக்குண்டு பட்டு வெடித்து நீர் அமெரிக்காவை விட்டு உமது பிள்ளைகளையும் பிரிந்து மேலே போகும் நிலைக்கு ஆளாகிவிடாதீர்கள்'' என்று "சரிநிகரா''னது மிரட்டலுடன் பாசத்தோடு எச்சரித்துள்ளது. சரிநிகர் பத்திரிகைக்கு இந்துமதி எழுதிய வாசகர் கடிதத்தின் உள்ளடக்கமே, இன்றும் விமர்சனம் மீதான எதார்த்தமாகும். இந்த பலத்தில் இருந்தே அனைத்தையும் தலைகீழாகப் புரட்டி கருத்துரைக்கின்றனர். நாங்கள் விமர்சிக்கும் போது எமது காதுச் சவ்வுகளை நோக்கிய துப்பாக்கி ரவைகளின் ஊடுருவல் முதல் இரைப்பையை நோக்கி நஞ்சூட்டல் வரையிலான எல்லாவிதமான எதார்த்தமான நிலைமைகளைக் கடந்து கருத்துரைக்கவில்லை. எமது மரணத்தை முகத்துக்கு முன்னால் எதார்த்தத்தில் நாள் தோறும் எதிர்கொண்டே, புலிகளின் தமிழ் தேசியம் படைத்த ஜனநாயகத்தில் வாழ்கின்றோம். கருத்துரைக்க வேண்டிய உன்னதமான உணர்வுகளை மற்றவனுக்கு மறுத்தபடி தான், புதுவை இரத்தினதுரை சாதியைப் பற்றி பிதற்றுகின்றார். புலிகள் உயர்சாதிய யாழ் இயக்கம் தான் என்பதும், வலதுசாரி அரசியலால் தன்னை உலகமயமாக்கின்ற ஒரு அமைப்புதான் என்பதற்கும் யாரும் மாறுப்பு கூற முடியாது. இந்த இயக்கம் சாதியத்தை ஒரு நாளும் ஒழிக்காது. சாதியத்தை பாதுகாத்து, அதன் அடித்தளத்தில் உருவான படிமுறையான அடுக்குகளின் உதவியுடன் தான் மக்களைச் சுரண்டி ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யும் இயக்கம் தான். புதுவை இரத்தினதுரை தனது இயக்க அரசியல் சார்ந்த சாதிய ஒடுக்குமுறையை நியாயப்படுத்த, தனது ஒடுக்கப்பட்ட சொந்த சாதியின் பெயரால் கூறி நியாயப்படுத்தவும் பின்நிற்கவில்லை. "ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் (சாதி) சோந்தவர்'' என்பதால் தலித்துகள் விரும்பின் குண்டியைக் கழுவி விடலாம். ஆனால் சாதியத்துக்கு எதிரான போராட்டம் என்பது, இந்து மதமும் அதனுடன் ஒட்டிப் பிறந்த சாதியமும் உள்ள வரை (மூளை ஒன்றாகவும் உடல் இரண்டாகவும், அதாவது மதமும் சாதியுமாக உள்ளது) தொடர்வதை, எந்தத் தலித்தும் எந்த இயக்கமும் தடுத்து விடமுடியாது.

சாதியம் உள்ளிட்ட ஜனநாயகப் போராட்டங்களை நடத்த முற்பட்ட, நடத்திய சில நூறு பேர், புலிகளால் கொல்லப்பட்ட போது புதுவை இரத்தினதுரை அதற்கு வெண்சாமரை வீசி அரசனையும் சபையையும் வாழ்த்தி வாழ்த்துபா பாடிக் கொண்டிருந்த பெட்டைக் கோழியாவார். இதற்குப் பரிசாக அவரை உயர்சாதி நிலைக்கு, கவிதையின் அந்தஸ்து சார்ந்து உயர்த்தப்பட்டார். இதனால் சாதியம் ஒழிந்த விட்டதாகவும், அதற்கு எதிராக போராட வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறும் இவர், சாதிய வேர் இருந்த போதும் பயப்பட வேண்டிய தேவையில்லை என்ற கூவ முயலுகின்றார். இதை அவர் **"நான் இன்றும் மார்க்ஸீயவாதியே''** என்று கூறி அதன் மூலம் கொக்கரிக்க முயலுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டுச் சிதைவுகள் ஒரு இனத்தையே அழிக்கின்றது.

இலங்கையில் யுத்தத்தின் பின்னான அமைதியும் சமாதானமும், பண்பாட்டுச் சிதைவைத் தமிழ்ப் பிரதேசங்களில தேசிய மயமாக்கியுள்ளது. எங்கும் பணமும், பணப் பண்பாடுகளுமே அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாகியுள்ளது. இந்தப் பணம் உருவாக்கிய ஆடம்பரம், அந்தஸ்த்து, திமிருடன் கூடிய வக்கிரம், சிறுபான்மையினரின் பண்பாக இருந்த போதும், அவர்களே சமூகத்தின் முழுமையையும் தீர்மானிக்கும் சக்தியாகியுள்ளனர்.

இந்தப் பண்பாட்டுக் கலச்சாரச் சிதைவு தமிழ் பிரதேசங்கள் எங்கும், இலங்கைத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களில் பொதுவாக நடக்கின்றது. இந்தச் சிதைவு பொருளாதார ரீதியான சமூக ஏற்றத்தாழ்வின் இடைவெளி அதிகரிப்பால் தேசியமயமாகின்றது. இந்த சமூக ஏற்றத் தாழ்வு பொதுவாகவே இரண்டு தளங்களில் பிரதானமாக நடக்கின்றது.

1. புலம் பெயர்ந்த மேற்கு நாடுகளில் இருந்து, சொந்த மண்ணுக்கு சென்று வரும் ஒரு பிரிவால் நடக்கின்றது.

2. யுத்தப் பொருளாதரத்தை அடிப்படையாகக் கொண்டு உருவான திடீர் பணக்கார கும்பலால் நடக்கின்றது.

இதுவும் மூன்று வகையைக் கொண்டது. இது தமிழ் மக்களை எல்லை இல்லாது வகையில் சுரண்டியதால் உருவானது. மற்றையது புலம் பெயர்ந்த நாட்டில் வாழ்வோரிடம் உறவை முன்நிறுத்தி சுரண்டுவதன் மூலம் உருவானது. இறுதியாக புலம் பெயர் சமூகத்துக்கு சேவை செய்வதன் மூலம், உயர் நுகர்வைப் பூர்த்தி செய்யும் வக்கிரமான நடைமுறை மூலம் உருவாகின்றது.

ஒட்டுமொத்தத்தில் உலகமயமாதல் பண்பாடு இதற்கு அக்கம்பக்கமாகச் செயல்படுகின்றது. இலங்கையில் இனவாத யுத்தம் தொடங்கும் முன் இருந்த சமூகமும், யுத்தம் தொடங்கியவுடன் இருந்த சமூகமும் இன்று இல்லை. சமூகம் மேலும் கீழுமாக பிளந்ததனால், வக்கிரம் பிடித்து வெம்பிக் கிடக்கின்றது.

இந்தச் சமூகப் பிளவில் போராடிய இயக்கங்களின் பங்கும் பணியும் குறிப்பாக இருந்துள்ளது. இந்த பணப் பண்பாடு போராட்ட அடிப்படையையும், போராட்டத்தில் பங்கு கொள்வோரையும் கூடத் தகர்க்கின்றது. அவர்களும் இயல்பாகவே அதுவாக மாறிவிடுகின்றனர். பல போராட்ட உணர்வுகள், பணப் பண்பாட்டுக்குள் தேசியமயமாகின்றது. அவற்றை இக் கட்டுரை இதற்குள் ஆராயவில்லை. சமூக அமைப்புக்குள் நடக்கும் பணப் பண்பாட்டு மாற்றத்தையும், அதன் சமூகச் சிதைவையும் பார்ப்போம்.

அமைதி சமாதானம் என்பது மேற்கு நோக்கிய புலம்பெயர் சமூகத்தின் குசியான உல்லாசப் பயணங்களை உருவாக்கியுள்ளது. சொந்த மண்ணை நோக்கி நகர்ந்துள்ள இந்த உல்லாசம், பணப் பண்பாடாகி தேசிய வக்கிரமாகின்றது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்து, இலங்கைக்கான விமானச் சேவையை இலங்கை விமானங்களே நாள்தோறும் நடத்தும் அளவுக்கு, புலம் பெயர் சமூகத்தின் உல்லாச பயணங்கள் விரிவடைந்துள்ளது.

இப்படி இலங்கை விமானம் மூலமும், அன்னிய விமானம் மூலமும் உல்லாசம் செல்லும் தமிழர்கள், ஈரோ நாணயங்களையும், டொலர் நோட்டுகளையும் கொண்டு செல்லுகின்றனர். இந்த பணம் அங்கு 100 மடங்கு பெறுமானமுடையதாக மாறுகின்றது. இதன் மூலம் அங்குள்ள வாழ்க்கைத் தரத்தை விட, 100 முதல் 200 மடங்கு நுகரும் ஆற்றலை இயல்பாகவே இவர்கள் அடைகின்றனர். அத்துடன் உல்லாசப் பயணமாக இருப்பதால், நுகரும் ஆற்றல் 1000 மடங்கு மேலானதாக மாறுகின்றது. இந்த நுகரும் ஆற்றல் ஒரு சமூக அதிர்வை ஏற்படுத்துகின்றது. பணத் திமிரை ஏற்படுத்துகின்றது. ஒரு வக்கிரத்தை உருவாக்குகின்றது. ஒரு அலட்சியத்தை உருவாக்கின்றது. எடுத்தெறியும் போக்கை உருவாக்கின்றது. சமூகத்தை ஏறி மிதிப்பதை சமூக அந்தஸ்தாக கருதுகின்றது. உயர்மட்டக் கனவுகள் இயல்பாக நனவாக, பண்பாட்டுக் கலாச்சார சிதைவுகள் சர்வ சாதாரணமாக்கியுள்ளது. நுகர்வு சார்ந்த சமூக வாழ்வியல் இருப்பை, தீர்க்க முடியாத மனநோய்க்குள் வடிகாலக்கியுள்ளது. பண்பாட்டு கலாச்சார உறவுகள் லும்பன் குணாம்சமடைந்துள்ளது.

பணம் மூலம் கிடைத்த திடீர் சமூகத் தகுதி, அந்தஸ்த்து மிகவும் தவறான சமூக உறவாக்கங்களை வழிநடத்த தூண்டுகின்றது. அலட்சியம், எடுத்தெறிதல், வேண்டாவெறுப்பாக அணுகுதல், திமிராக விதாண்டாவாதம் செய்தல், சமூக இருப்பையும் அதன் அறிவையும் கேலி செய்தல் என நீளும் பணப்பண்பாடு, எங்கும் சிதைவையும், அவலத்தையும் நிரந்தரமாக்கியுள்ளது. பணத்தின் மூலம் கிடைத்த சமூகத் தகுதியை கையாளும் போது, அடிப்படையான சமூகப் புரிதல் இன்றி தமிழ் சமூகத்தையே சிதைக்கின்றனர். மேற்கத்தைய பண்பாட்டில் காணப்படும் ஜனநாயக விழுமியங்களை கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்ளாத புலம்பெயர் தமிழ்ச் சமூகம், நடைமுறையில் அதன் ஒரு பகுதியை அனுபவிக்கின்றது. இப்படி உணர்வுக்கும் நடைமுறைக்கும் உள்ள இடைவெளியை சமூகப் பொருளாதார அடிப்படையில் புரிந்து கொள்வதில்லை. அதை இழிவாகவும் கேவலமானதாகவும் காட்டி வெறுக்கின்றனர். ஆனால் பணம் மூலம் கிடைத்த திடீர் சமூகத் தகுதியின் மேல், மேற்கத்தைய சமூக உறவுகளை கண் மூடித்தனமாக திணிப்பதன் மூலம், பல நிரந்தர மனநோயாளர்களையும், நிரந்தர சமூகப் பிளவுகளையும் ஏற்படுத்துகின்றனர்.

உழைப்பை 100 முதல் 200 மடங்காகி விடும் நுகரும் ஆற்றலுடன் கூடிய பணவெறி, அனைத்தையும் இழிவாகக் கருதத் தொடங்குகின்றது. தமிழ் மண்ணில் நிகழும் மனித உழைப்பை எள்ளி நகையாடுகின்றது. கடந்த காலத்தில் உழைத்து வாழ்ந்த சொந்தப் பண்பாட்டை எள்ளி நகையாடுகின்றனர். அதைத் தமது பகட்டு வாழ்க்கையால் மூடி மறைக்கின்றனர். மேற்கத்தைய நவீன நகரங்களில் எப்படி ஒரு பணக்கார




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பல் சொகுசாக வாழ்கின்றதோ, அதே போன்று ஒரு சொகுசு வாழ்வை ஒரு மாதத்துக்குள்ளாகவே வாழ்ந்து வக்கரிக்கின்றனர். இந்த நிலையில் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதி இது போன்று ஆர்ப்பாட்டமாக ஆடம்பரமாக வாழ்கின்றது. பல பத்து லட்சங்களை செலவு செய்யும் மனநிலையுடன் கூடிய ஆர்ப்பாட்டங்கள், அட்டகாசங்கள் புலம்பெயர் நாட்டில் இருந்து உல்லாசம் சென்றவனின் உணர்வாக, அதை வெளியில் இருந்து மக்கள் கூட்டம் அண்ணாந்து பார்க்கின்றது.

மக்கள் இந்த பணக்காரக் கும்பலை அண்ணாந்து பார்க்கின்றார்கள் என்பதை, இந்தப் பணக்காரக் கும்பலும் அதன் செல்வாக்குக்கு உட்பட்ட பிரிவும் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி அங்கு வறுமையில் மக்களா? என்று விதாண்டவாதம் செய்கின்றனர். ஆனால் உண்மை என்ன? 2003 இல் மார்கழி மாதம் வெளியாகிய புள்ளிவிபரம் ஒன்றில் யாழ் குடாவில் 80 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பம் 5 உறுப்பினரைக் கொண்டது என்றால், 4 லட்சம் பேர் வாழ வழியற்ற வறுமைக்குள் சிக்கியுள்ளனர். இது யாழ்குடா நாட்டு மக்கள் தொகையில் பெரும்பான்மையை இந்த கதிக்குள்ளாக்கியுள்ளது. மற்றொரு புள்ளிவிபரம் இதை மேலும் உறுதி செய்கின்றது. 80 ஆயிரம் குழந்தைகள் வறுமை காரணமாக வடக்கு கிழக்கில் பாடசாலைக்கு செல்லவில்லை. 65 ஆயிரம் குழந்தைகள் வறுமை காரணமாக கல்வியை இடையில் கைவிட்டுள்ளனர். இப்படி சமூகத்தின் பெரும் பகுதி வறுமைக்குள் சென்றுள்ளது. இதை எள்ளி நகையாடும் வகையில் மறுபக்கத்தில் அட்டகாசமான வாழ்க்கை ஒன்று அரங்கேறுகின்றது. நிலத்தில் கால் பதிக்காது, வாகனங்களில் பவனி வருகின்றனர். சமூக உறவுகளையும் பண்பாடுகளையும் எடுத்து எறியும் வகையில் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. உதாரணமாக உறவினரைப் பார்க்க ஆட்டோவில் வந்து, ஆட்டோவை வாசலில் நிறுத்தி விட்டு உறவு கொண்டாடி விட்டு மீளும் திமிர் பண்பாடாக அரங்கேறுகின்றது. ஆடம்பரமே வாழ்கையாகிப் போன யாழ்குடா நாட்டில் 35,000 வாகனங்கள் இன்று ஓடுகின்றன. மிக நெருங்கிய குடும்ப உறவுகளின் பண்பாடுகளைத் தூக்கி எறிந்து விட்டு, பணத்திமிருடன் ஆடம்பரமாக சுற்றி வருவதும், தேவைப்பட்டால் உயர் தரமான ஓட்டல்களில் கூட தங்கி நின்று தமது பெருமையைப் பீற்றுகின்றனர். இதை மையமாக வைத்து பல நவீன உல்லாச விடுதிகள், ஓட்டல்கள், சூப்பர் மக்கற்றுகள், வெளி நாட்டவருக்கு மேற்கத்தையப் பொருட்களை கொண்ட நவீன மக்கற்றுகள், சுற்றுலா மையங்கள், விசேட குளிரூட்டப்பட்ட வாகனங்கள் என்று விரிந்த அடிப்படையில் ஒரு புல்லுருவி வர்க்கத்துக்காக உருவாகியுள்ளது. விரைவில வடக்கு கிழக்கில் பெண்களைக் கொண்ட மசாஜ் மையங்கள், முதல் பாலியல்த் தேவையை பூர்த்தி செய்யும் எல்லைவரை சூழல் விரைவில் மாறிவிடும். இன்று வெளிநாட்டுத் தமிழனின் பணத்தை ஆதாரமாகக் கொண்ட கொழும்பு வாழ் தமிழர்களுக்கு, இது ஒரு சேவைத் தொழிலாகிவிட்டது. மேற்கத்தைய தமிழனின் தேவையை பூர்த்தி செய்யும் சேவைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு, வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கையும், அவனின் பொருளாதாரக் கட்டமைப்புக்களும் உருவாகின்றது.



உற்பத்தியை எடுத்தால் மேற்குத் தமிழனின் தேவையை பூர்த்தி செய்யும், ஏற்றுமதி உற்பத்தியாக தேசிய உற்பத்தி மாறிவிட்டது. இது ஏகாதிபத்திய உலகமயமாதல் தேவையை பூர்த்தி செய்யும் எல்லைவரை விரிவடைகின்றது.

பணப் பண்பாடடை அடிப்படையாகக் கொண்டு சமூக அந்தஸ்து பெற்ற புலம்பெயர் தமிழர்கள், தமது செல்வாக்குக்கு உட்பட்ட குடும்பங்களுக்குள்ளான சாதாரணப் பிரச்சனைகளை வெட்டொன்று துண்டு இரண்டாகக் கையாண்டு வக்கிரமாகவே பிளக்கின்றனர். சொத்துகளை உரிமை கோரவும், விற்றுத் தின்னவும் நுகர்வு வெறியுடன் சொத்துச் சண்டைகளை குடும்பங்களிடையே தொடங்கி வைக்கின்றனர். அடங்கி கிடந்த சாதி ஆதிக்கத்தைக் கூட கிண்டி கிளறிவிடுகின்றனர். எங்கும் எதிலும் தலையிடும் புலம்பெயர் சுற்றுலாத் தமிழ்ப் பயணிகள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை எட்டாத உயரத்துக்கு மாற்றிவிட்டனர். சந்தையின் விலையை எது தீர்மனிக்கின்றது என்று ஆராய்ந்தால், புலம்பெயர் தமிழனின் வாங்கு திறனுக்கு ஏற்ப சந்தை விலை மாறிவிடுகின்றது. ஏழைகளின் நுகர்வு என்பது முற்றாக அலட்சியமாகியுள்ளது. உதாரணமாக, கௌனவத்தை வேள்வியின் போது 800 ஆட்டுக் கிடாய் வெட்டப்பட்ட போது, கிடாய் ஒன்றின் குறைந்த விலையாக 20,000 ரூபாவுக்கு விற்பனையானது. புலம்பெயர் தமிழர்கள் தனது பணப் பலம் மூலம் ஒவ்வொரு கிடாயாக தமக்குள் போட்டியிட்டு வாங்கினர். இறைச்சிப் பங்கின் விலை 1000 ரூபாவாக இருந்தது. இது ஐரோப்பிய சந்தை விலையை விட அதிகமானதாக இருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது. மீன் சந்தையில் மீன்கள் ஏலம் கூறும் போது, புலம்பெயர் தமிழன் சாதாரண சந்தை விலையை விட அதிகமாக ஒரே கேள்வியில் வாங்கிவிடுகின்றான். அங்கு வாழும் மக்களை எரிச்சல் ஊட்டக் கூடிய வகையில், பண வக்கிரம் தலைவிரித்தாடுகின்றது. இதற்கு எதிரான வெறுப்பு பல தளத்தில் வெளிப்படுகின்றது. உதாரணமாக வீதிகளில் செல்லும் இளைஞர்கள் அக்கபக்கமாக சென்று வாகனங்களுக்கு வழி விட மறுக்கும் போது, அவர்கள் கூறும் காரணம் காரில் வருவோர் வெளிநாட்டவர்கள்.

ஒருபுறம் புலம்பெயர் சமூகம் உருவாக்கிய இந்தப் பகட்டு வாழ்க்கையை மிஞ்சும் வகையில், யுத்தப் பொருளாதாரத்தை பயன்படுத்தி உருவான திடீர் பணக்கார கோடிஸ்வரர்கள் பல நூறு பேர் வடக்கு கிழக்கில் உருவாகியுள்ளனர். இவர்களின் வாழ்கைத் தரத்துடன் கூடிய ஆடம்பரங்களும் பகட்டுத்தனங்களும் புலம்பெயர் தமிழ் சுற்றுலாப் பயணிகளால் கூட வாழ முடியாத வகையில் உள்ளது. புலம்பெயர் தமிழன் மூக்கில் கை வைக்கும் அளவுக்கு வெம்பிக் கிடக்கின்றது. அங்கே உள்ளவர்கள் எப்படி வாழ்கின்றனர்? நாங்கள் எங்கேயோ ஒரு மூலைக்குள்! என்று சொல்லி புலம்பும் அளவுக்கு இந்த வெப்பிராயம் வெடிக்கின்றது. அவர்களின் நுகர்வின் அளவு லட்சங்கள், கோடிகளாக மாறிவிட்ட நிலையில், எங்கும் அதை நோக்கிய கனவுடன் தமிழ்ச் சமூகம் எல்லாவிதமான சமூகச் சீரழிவிலும் ஈடுபடுகின்றது. சமூகத்தின் தற்கொலை எதார்த்தமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த திடீர் பணக்காரக் கும்பல் யுத்த நெருக்கடியை தனக்குச் சாதகமாக்கி, பல பத்து கோடிகளை தன்னகத்தே குவித்துள்ளது. இராணுவம் மற்றும் புலிகளுக்கு பணத்தை லஞ்சமாகக் கொடுத்து பொருட்களைக் கடத்தி வருவதன் மூலம், அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் மேலான தட்டுப்பாட்டை பணமாக்கினர். லஞ்சங்கள், வரிகள் எதுவாக இருந்த போதும், அவற்றை மக்களின் தலையில் சுமத்தியதன் மூலம், இலகுவாக லாபங்களைப் பல மடங்காக்கினர். புலம்பெயர் சுற்றுலாப் பயணிகளின் அற்ப நுகர்வு வக்கிரங்களை பூர்த்தி செய்யும், பணப் பண்பாட்டுக்கு இசைவான சந்தைப் பொருளாதாரத்தை இந்தத் திடீர் பணக்காரக் கும்பல் உருவாக்கி அதையும் கட்டுப்படுத்துகின்றது. பணத்தைக் குவிப்பதில் வெற்றிபெற்றுள்ள இந்தக் கும்பல், தமிழ்ப் பிரதேசங்களின் புதிய சுரண்டும் வர்க்கமாக உருவாகியுள்ளது.

மனித சமூக உறவுகள் சிதைந்து, அதற்கு பதில் பண உறவுகள் முதன்மை அடைந்துள்ளது. அறிவு, முதுமை, சமூக ஆற்றல், அனுபவம், பெரியவர்கள் என்ற வடிவில் நீடித்த சமூக அந்தஸ்தும், சமூக பண்பும் மறுக்கப்படுகின்றது. மாறாக பணம் சார்ந்த அந்தஸ்தும் பண்பும் திணிக்கப்படுகின்றது. சமூகக் கண்ணோட்டம் சிதைந்து சுயநலம் முதன்மை பெறுகின்றது. லும்பன் வாழ்க்கை முறையுடன் கூடிய பண்பை, இந்தப் பணப் பண்பாடு சமூகப்பண்பாடாக்கின்றது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவுகளில் இதுவும் ஒன்றாகியுள்ளது.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் பல பத்தாயிரம் உயிர்த் தியாகங்களுடன் நடக்கின்ற அதே மண்ணில், நடந்து வரும் பண்பாட்டு கலாச்சார சிதைவு ஒரு இனத்தின் அடிப்படையையே அழிக்கின்றது. பாரிய உளவியல் சிக்கலை இது உருவாக்கின்றது. தற்கொலைகளையும், மன நோய்களையும், குடும்பச் சிதைவுகளையும், சமூகப் பிளவுகளையும் நிரந்தரமாக்கின்றது. அமைதி சமாதானம் என்று தொடர்கின்ற சூழல் நிலையில், இது அவலமாக பிரதிபலிக்கின்றது.

## வடக்கு-கிழக்கு என்ற பிரதேசவாதப் பிளவு, ஏன் புலிகளுக்குள் நடந்தது?

**சமாதானம் அமைதி என்ற உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில், புலிகள் ஏகாதிபத்திய கைகூலியாகி சோரம் போயுள்ளனர். இந்தநிலையில் ஏகாதிபத்தியம் போடும் எலும்புகளை சுவைக்கும் யாழ் மையவாதத்துக்கு எதிரான நாய்ச் சண்டையில், பங்காளிகள் தமது பங்கைக் கோருகின்றனர். இது யாழ்-கிழக்கு என்று புலித் தலைமைகளுக்கு இடையிலான பிளவாகி, அதுவே ஒருபுறம் தூற்றலாகி மோதலை நோக்கி நகருகின்றது.**



தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கமல்ல என்பதை, வரலாறு மீண்டும் ஒருமுறை நிதர்சனமாக்கியுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் பார்ப்பனிய சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு உயர்சாதி இயக்கமே. யாழ்ப்பிரதேச மையவாதத்தை அடிப்படைச் சித்தாந்தமாகக் கொண்ட, ஒரு பிதேசவாத இயக்கமே. ஆணாதிக்கத்தை சித்தாந்தமாகக் கொண்ட ஒரு ஆண்கள் இயக்கமே. இவற்றை எல்லாம் அடிப்படையான சித்தாந்தமாகக் கொண்ட, ஒரு குறுந்தேசிய இனவாதஇயக்கமே. இதன் தலைமை தனிமனித அதிகாரத்தை முன்னிலைப்படுத்தும், ஒரு பாசிசஇயக்கமே.

அண்மையில் பிரபாகரனின் யாழ்மையவாதத் தலைமைக்கு எதிராக, கிழக்கை முன்னிலைப்படுத்தி கருணா ஏற்படுத்தியப் பிளவு, வரலாற்றில் மீள ஒருமுறை புலிகள் யார் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி பறைசாற்றி நிற்கின்றது. புலிகளுக்கு சாதாரண குறைந்தபட்ச ஜனநாயகபூர்வமான அரசியலே தெரியாது என்பதை அம்பலம் செய்து நிற்கின்றனர். துப்பாக்கி மூலம் பேசும் பாசிசத்தை சார்ந்து, தனிமனித பிரபாகரனின் சர்வாதிகார முடிவுகளையே தேசியமாகவும் துரோகமாகவும் வரையறை செய்கின்ற கைக்கூலித்தனத்தை அரங்கேற்றுவதையே மீண்டும் அம்பலப்படுத்தி நிற்கின்றது.

சமாதானம் அமைதி என்று நீடித்த இழுபறியான தீர்வுகள் அற்ற பேச்சுவார்த்தை, நிரந்தரமானத் தீர்வை இரண்டையும் இரு தரப்பினரும் எதிர்த்து வந்தனர். மாறாக மீண்டும் யுத்தத்தை நோக்கிச் செல்லவும், இடையில் பொருளாதார நலன்களை அடையவுமே விரும்பினர். இது இருதரப்பு கொள்ளைகாரருக்கும் லாபம்தரும் ஒரு தொழிலாக இருந்தது. இந்த இழுபறியான பேச்சுவார்த்தையில், ஏகாதிபத்தியத்தின் தலையீடும், அவர்களின் நலனும் ஒன்றாகவே இருந்தது. இது மீண்டும் யுத்தத்துக்கு செல்வதைத் தடுத்து நிறுத்தியுள்ளது. ஏகாதிபத்தியம் வீசிய எலும்புக்கான பேரங்களில் அங்கும் இங்குமாக பேச்சுவார்த்தை அலைபாய்ந்தது. கிடைத்த எலும்புகளை சுவைப்பதில் ஏற்பட்ட மோதல்கள், அதை சுவைக்கும் கனவுகள் இலங்கையின் எல்லா அமைப்புகளையும், அரசியல் இயக்கங்களையும் பிளந்து நிற்கின்றது, பிளவை நோக்கி நகர்கின்றது. ஸ்திரமான அரசியல் நிலைமை, எலும்புக்கான சண்டையால், சிதைந்து நிற்கின்றது. புலிகளும் இதில் இருந்து தப்பிவிடவில்லை.

கருணா-பிரபா மோதல் என்பது குழு மோதலாகி பிரதேச மோதலாகிவிட்டது. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது. புலிகளுக்கு இடையில் மோதல் தணிந்தாலும் சமூகத்துக்கிடையேயான மோதல் முதன்மையாகியுள்ளது. யாழ் புலித்தலைமை (கருணா கூறுவது போல், இது ஒன்றும் வன்னித் தலைமையல்ல), தமது பிரதேசரீதியான சமூக ஒடுக்குமுறையைத் தொடர சபதம் எற்றதன் விளைவு, ஆயுதம் ஏந்திய மோதலை நோக்கி நகர்த்தியுள்ளது. தனிப்பட்ட காழ்ப்புகளை குறுகியப் பிரதேச உணர்வுடன் விதைக்கின்றனர். கருணா என்ற தனிமனிதன் சார்ந்த பிரச்சனையாக இதை தூற்றுவதன் மூலம், கடந்த வரலாற்றில் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மற்றும் வன்னிக்கு இழைத்த அநீதிகளை நியாயப்படுத்துகின்றனர். அதைத் தொடரவும் தயாராக இருப்பதை, தமது சொந்த நடத்தைகள் மூலம் காட்டிவருகின்றனர்.

யாழ் புலித்தலைமை எடுத்த பிரதேசவாத தொடர்முடிவுகள், பிரதேசவாத உணர்வை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்தப் பிளவு இரண்டு பிரதேசத்துக்கிடையேயான நிரந்தரமான பிளவாகிவிட்டது. காலங்காலமாக இருந்த பிரதேசவாத உணர்வு, சமூகத்தின் மேல் மட்டத்துக்கு வந்துள்ளது. இங்கு பொதுவாகவே கருணா குழு மீதே பிரதேசவாத முத்திரையைக் குத்தி, கண்மூடித்தனமான பிரதேசவாதத் தூற்றலைச் செய்கின்றனர். யாழ்குடாவில் இருந்து புலம்பெயர் சமூகம் வரை வடக்குக்கு ஆதரவான வகையில், கிழக்கைத் தூற்றுவது அரங்கேறுகின்றது. தமிழ் மீடியாவும் அதைச் சுற்றிய சமூகமும் கிழக்கு தமிழ்மக்கள் பற்றி, யாழ் சாதியமொழியால் தூற்றுவது அரங்கேறுகின்றது., ஒரு தலைப்பட்சமாக கிழக்குக்கு எதிராக விதைக்கும் விதைகள், பிரதேசவாத பிளவை அகலமாக்கி, அந்தப் பிளவை நிரந்தரமாக்கி வருகின்றது. கருணாவும் அவர் தலைமையிலான புலித் தலைமை இருந்தாலும் சரி இல்லாமல் போனாலும் சரி, வடக்கு கிழக்கு பிளவு நிரந்தரமாகிவிட்டது. அதை வடக்கு சார்ந்த யாழ் புலித்தலைமை, தன்னாலான அளவில் மேலும் அகலமாக்கி வருகின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கம் யாழ் மையவாதக் கண்ணோட்டம் கொண்ட ஒரு பிரதேசவாத தேசிய இயக்கமாக இருந்ததால், கருணா தனது சொந்தக்குழு நலன் சார்ந்து பிரதேசவாதத்தைத் தனக்கு சாதகமாக்கி கொண்டான். உண்மையில் பிரபா குழுவுக்கும் சரி, கருணா குழுவுக்கும் சரி மக்களின் நலன்கள் பற்றிய எந்தவிதமான சமூக அக்கறையும் கிடையாது. இவர்கள் ஒன்றாக இருந்தபோது என்ன அரசியலை வைத்து இருந்தனரோ, அதையே இப்போதும் இருவரும் பிரிந்த பிறகும் ஆணையில் வைத்துள்ளனர்.

இந்த நிலைமையில் தலைமைக்குள் ஏற்பட்ட அதிருப்தி, நிர்வாக அலகுகளின் அதிகாரத்துக்கு எதிரானதாகவே உருவாகியது. நிதி முதல் அனைத்தும் முப்பது விசேட யாழ்மையவாத அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டு யாழ் தலைமையை நோக்கிச்சென்றது. பிரதேச தளபதிகள் வெறும் பொம்மை இராணுவ அதிகாரிகளாக இருந்தனர். வன்னியில் யாழ் தலைமையின் ஆடம்பரமான வாழ்வை கண்ணுற்ற கிழக்குத் தலைமையின் அதிருப்தி, போராட்டம் இப்படிச் சீரழிகின்றது என்ற உணர்வில் இருந்து ஏற்பட்டதல்ல, மாறாக இதில் தமது பங்கு என்ன என்ற கேள்வியை உருவாக்கிவிடுகின்றது. கிழக்கின் நீதி மற்றும் பொலிஸ், உளவு, நிதி, புனர்வாழ்வு என்ற எண்ணற அமைப்புகள் அனைத்தும் நேரடியாக யாழ் தலைமையின் கீழ் இருந்தன. உயர் அதிகாரிகள் முதல் கீழ் அதிகாரிகள் வரை வடக்கு பிரதிநிதிகளால் கட்டுப்படுத்தப்பட்டனர். 30 அதிகார அமைப்பையும், கிழக்குப் படையணிகள் பாதுகாக்கும் கடமையைத் தவிர, வேறு எதையும் செய்யமுடியாத கூலிப்படைகளாகவே இருந்தன. இதன் தளபதியாக கருணா இருந்தான். அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் சிறப்புத்



தளபதிகள் உருவாக்கப்பட்டனர். இந்த முப்பது அதிகார மையங்களை பாதுகாக்க யாழ்தலைமையானது, கருணாவின் தலைமையிலான படையை அங்குமிங்கும் விசிறியடிப்பதும் அவர்களை பலியிடுவதும் அன்றாட நிகழ்வாக இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவு, ஜனநாயகம் பற்றிய பிரச்சனையை மீண்டும் முன்னிலைக்குக் கொண்டு வந்ததுள்ளது. எல்லாவற்றையும் இராணுவவாதம் மூலமும், படுகொலை அரசியல் மூலமும் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பின் அரசியல் என்பது, மக்களை யார் அடக்கியாள்வது என்ற எல்லைக்குள் நின்று கொண்டு தான் தம்மையும், இதில் பிரபா - கருணாவின் தலைமைகள் தமது ஜனநாயகத்தையும் பற்றி நியாயப்படுத்துகின்றது. ஒன்றையொன்று மிஞ்ச முடியாத நிலையை அடைந்துள்ளது. புலிகளுக்குள்ளான பல பத்துப் பிளவுகளை எப்போதும் அரசியல் படுகொலை மூலம், நியாயப்படுத்தி நடத்திய (அதாவது பாசிச வழிகளில்) அரசியல், இன்று தலைவிரிக்கோலமாகி நிற்கின்றது. தமிழ் பேசும் மக்களின் அடிப்படையான தேசியக் கோரிக்கைகள் அனைத்தும் பந்தாடப்படுகின்றது.

உண்மையில் இந்தப் பிளவின் அடிப்படை என்ன? அமைதி சமாதானம் என்ற பெயரில் நடத்திய அரங்கேற்றங்களின் போது, வடக்கு–கிழக்கு தலைமை கூட்டாகவே ஏகாதிபத்திய கால்களில் வீழ்ந்தனர். ஏகாதிபத்தியப் பொருளாதார நலனுக்கு இசைந்து செல்வதன் மூலம், தேசியத்தை கட்டமைப்பது பற்றி நனவுபூர்வமாகவே சிந்தித்தனர். இவ்வாறாக புலிகள், ஏகாதிபத்தியப் பொருளாதார ஊடுருவலின் தரகராகி, கைக்கூலியாகி தேசத்தின் அனைத்து சமூகப் பண்பியலையும் அழித்து செரித்து நிற்கின்றனர். உதாரணமாக புலிகள் தனித்தரப்பாக தமிழ்ப் பகுதிகளில் கொக்கோகோலா ஏக விற்பனைப் பிரதிநிதியாகியுள்ளனர். அதையடுத்து மாசிமாதம் வன்னியில் புலிகள் நடத்திய தேசிய விளையாட்டுப் போட்டியில், தமது தேசிய கொடிக்குப் பின்னால் பிரம்மாண்டமான கொக்கோகோலா விளம்பரத்தை அமைத்தனர். பார்க்க 21.2.2004 தினக்குரல் பத்திரிகையில்) இதன் மூலம் புலிகள் தேசிய பானம் கொக்கோகோலாவாகியது. உண்மையில் யார் துரோகி, யார் கைக்கூலி, யாரிடம் கைக்கூலி பெற்றார்கள் என்ற விடையத்தை ஏகாதிபத்தியப் பன்னாட்டு முதலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளமுடியும். எப்படி ஏகாதிபத்தியத்துக்கு சோரம் போயுள்ளனர் என்பதற்கு ஆதாரப்பூர்வமான ஒரு நீண்டப் பட்டியலேயுண்டு.

இதற்கும், இந்த பிளவுக்கும் இடையில் என்ன உறவு? பன்னாட்டு மூலதனமும், அதை பாதுகாக்கும் ஏகாதிபத்திய அமைப்பும் தமது கைக்கூலிகளுக்கும் தரகர்களுக்கும் எறியும் எச்சில் பணத்தை எப்படிப் பகிர்வது என்பதில் ஏற்பட்ட நாய்ச்சண்டையே, புலிக்குள்ளான பிளவாகியது. தேசிய மக்களின் வாழ்வையும், தேசியப் பொருளாதாரத்தையும் பாதுக்காக்கும் அடிப்படையில் இந்தப் பிளவு ஏற்படவில்லை. ஏகாதிபத்தியம் கொள்ளையடிக்கவும், சூறையாடவும் அனுமதிக்கும் கைக்கூலிகளுக்கு, போடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சில் காசுக்கான ஒரு ரவுடிச் சண்டையே அரசியலாகியுள்ளது. இதை நியாயப்படுத்த சமூகத்தில் நிலவிய யாழ்பிரதேசவாத உணர்வுக்கு எதிரான உணர்வை, முன்னிலைக்கு கொண்டுவந்துள்ளது. பிரதேசவாதம் சார்ந்து ஏகாதிபத்தியம் எறியும் எலும்புகளை சுவைக்கவும், அது சார்ந்து சமூக அதிகாரத்தை நுகரும் வேட்கையில் இருந்தும் பிளவு ஆழமாகிவிட்டது. பிளவுக்கான மூலம் (அடிப்படை) இந்த ஏகாதிபத்திய பணம் தான். புலிகளின் யாழ்பிரதேசவாதக் கண்ணோட்டத்தை எதிர்த்து, கிழக்கு மக்களின் நியாயமான கோரிக்கையை முன்னிலைப்படுத்தவில்லை. மாறாக சொந்தக் குழுவின் நலனை கருணா குழு முன்னிலைக்குக் கொண்டுவந்தது.

காலங்காலமாகவே யாழ்பிரதேச ஆதிக்க நலன்கள், கிழக்கு மற்றும் வன்னி மக்கள் மீதான அதிகாரத்தைக் கொண்டது. அரசு பதவிகள் முதல் ஆசிரியர்கள் வரை யாழ் மேட்டுக்குடிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. அந்த மக்களை இழிவான, தாழ்ந்த சாதிக்கு நிகரான அடிப்படையில், கொண்ட பொருளாதாரப் பண்பாட்டு, கலாச்சார உறவு கட்டமைக்கப்பட்டு இருந்தது. இந்த விடையத்தை தேசிய விடுதலைப் போராட்டம் களைந்துவிடவில்லை. மாறாக அதை ஆணையில் வைத்து, தமிழ்மக்களின் ஒற்றுமை என்ற பெயரில் அந்த மக்கள் மேலான அதிகாரத்தை தொடர்ந்து பாதுகாத்தனர். தமிழ்அரசியல் கட்சிகள் முதல் ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் வரை எவரும், இந்தப் பிரதேசவாத ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடவில்லை. கடந்த விடுதலைப் போராட்டங்களின் போதும் சரி, துரோகியாக்கி அழித்த போதும் சரி, கிழக்கு மக்களின் உயிரிழப்பு ஒப்பிட்டு அளவில் அதிகமானதாகும். இதைவிட பொதுவாக மக்களின் உயிரிழப்பு என்பது மிக அதிகமானதாகும். நிரந்தரமான எல்லை மோதல்களை உருவாக்கியதன் மூலம், இந்த மக்கள் சந்தித்த கொடுமை சொல்லிமாளாது. எல்லையோர மக்களின் மேலான புலிகளின் குறுந்தேசியப் படுகொலைகள், கிழக்குத் தமிழ் மக்கள் மேலான மற்றொரு சமூக வேலியாகியது.

இப்படி கிழக்குமக்களின் வாழ்வியல் துயரங்கள் மேல், அவர்களின் சமூக பொருளாதார நலன்களைச் சாராத வகையில், புலிகளின் குறுந்தேசியப் போராட்டம் கட்டமைக்கப்பட்டது. யாழ் குடாநாட்டில் இருந்து திட்டமிட்டு நடத்தப்பட்ட போராட்டம், மண்ணின் இயல்புத் தன்மைக்கு விரோதமானதாக இருந்தது. இவற்றின் அடிப்படையில் கருணாகுழு இதை எதிர்த்துப் போராடவில்லை. மாறாக எலும்பைப் பங்கிடுவதில் ஏற்பட்ட தகராறே, இந்தப் பிரதேச ஒடுக்குமுறையைத் தனதாக்கிக்கொண்டது. இந்த நிலையில் கிழக்கை மையமாக வைத்து பிரிந்த குழு, முன்வைத்த கோரிக்கைக்குப் பிரதேசவாத இயக்கமான புலிகளால் இன்றுவரை பதிளிக்க முடியாது போயுள்ளது. யாழ் பிரதேசவாத புலியின் தலைமைக்கு எதிரான, கிழக்கு பிரதேசவாதம் சார்ந்த குழு, சொந்த, குறுகிய பிரதேசவாதம் சார்ந்து தம்மைத்தாம் தற்காத்துக் கொள்கின்றனர்.

ஒரு சமூக இயக்கம் என்பது அரசியலானது. இது இராணுவ ரீதியானதும், தனிமனித நலன் சார்ந்தவையல்ல. பிரபாகரன் என்ற தனிமனிதனை



முன்னிறுத்தி புலிகள் கட்டமைக்கும் தேசியம், அடிப்படையில் குறுந்தேசிய உணர்வைக் கடந்து தனிமனித சர்வாதிகார வக்கிரத்தைப் பாசிசமாக்கி அதையே அரசியலாக்கின்றது. இது சமூகப் பிரச்சனைகளை, குறுகிய எல்லைக்குள் தனிமனிதனுக்கு எதிரானதாகக் காட்டி, ஒட்டுமொத்த சமூகம் மீதான அடக்குமுறையை பாசிச வழிகளில் கட்டமைக்கின்றது. மோதல்கள் பிரதேசவாதம் சார்ந்து வெடித்துள்ள நிலையில், புலியின் யாழ் (பிரபா) தலைமைக்கு எதிரான எதிர்கோஷ்டி அரசியலும் தனிமனிதன் என்ற எல்லைக்குள் சிதைந்து நிற்கின்றது.

கருணா என்ற தனிமனிதனை முன்னிலைப்படுத்தியே குறுகியப் பிரதேசவாதம் வக்கரிக்கின்றது. ஜனநாயகக் கோரிக்கைகளை மக்கள் நலனில் இருந்து முன்வைத்த போராட்டங்கள் என்பது கிழக்கில் நடக்கவில்லை. மாறாக கருணா என்ற தனிமனித சர்வாதிகாரியை முதன்மைப்படுத்திய, குறுகிய குழுநலன் சார்ந்த கோரிக்கைகைகுள் கிழக்குமக்கள் மீண்டும் ஏமாற்றப்படுகின்றனர். புலிகள் என்ற இயக்கத்தின் அதிகாரத்தில் பங்கு கேட்கும் கிழக்குப்புலிகள், புலிகளின் வாலாக இருந்து எலும்புகளைப் பார்த்து வாலாட்டவே விரும்புகின்றனர். இதற்கு மாவீரர் குடும்பங்களின் வாழ்க்கை நிலையைச் சொல்லி, மாவீராக காத்திருக்கும் ஆயுதம் ஏந்தியோரை தம்பக்கம் அணி திரட்டுகின்றனர். மாவீரர் பற்றிய அக்கறை ஒட்டு மொத்த புலித்தலைமைக்கும் கிடையாது. 2003-இல் மாவீரர் குடும்பத்துக்கு பெருமையாக பிரபாகரன் ஒதுக்கிய மொத்த தொகை, வெறுமனே 50 லட்சம் ரூபாதான். தலா 300 ரூபா வீதமே ஒதுக்க முடிந்தது. இது இலங்கையில் ஒரு விவசாயக் கூலியின் ஒரு நாள் கூலி. கோடி கோடியாக பணத்தைச் சூறையாடும் புலிகள், அதை மாவீரர் குடும்பத்துக்கு என வீணாக்க விரும்பவில்லை.

மாவீரர் குடும்பங்கள் என்பவை பெருமளவில் ஒருநேர உணவைக் கூட உண்ண வழியற்ற ஏழை விவசாயிகள். புலிகளின் அரசியல், ஏழை விவசாயிகளை பட்டினிப் போட்டுச் சுரண்டும் ஏகாதிபத்தியப் பொருளாதார நலனுடன் இணங்கிப் போவதாகும். “கொக்கோகோலாவை ஒருகையிலும், கைத்தொலைபேசியை மறுகையிலும்” கொண்ட ஆடம்பரமும் சொகுசும் நிறைந்த வாழ்க்கையை காணமுடியும். மாவீரர் குடும்பத்துக்கு கஞ்சித் தண்ணீர் கூடக் கிடையாது. இது தான் புலிகளின் சந்தேகமற்ற தமிழ் தேசியம். மாவீரர் மீதான அக்கறை அனைத்தும் போலியானது. இந்த நிலையில் கிழக்கு விவசாய மக்களின் அடிப்படை பிரச்சனையை இட்டு, எந்தவிதமான சமூக அக்கறையும் கிழக்கு புலிகளுக்கு கிடையாது. அதாவது கிழக்கு ஏழை விவசாயிகளின் சமூகப் பொருளாதார ரீதியான முன்னேற்றம் சார்ந்த, எந்தவிதமான தேசிய உணர்வுகளையும் கிழக்குத் தலைமை முன்னெடுக்கவில்லை. அவற்றை ஒடுக்குவது தொடருகின்றது. ஏகாதிபத்தியத்திடம் கையேந்தி பிச்சையெடுக்கவும், அவர்களின் கூலிப்படையாக செயல்படவும் தயாரான எல்லைக்குள், கிழக்கைச் சூறையாடும் உரிமையைத் தனியாக யாழ் புலித்தலைமையிடம் கோருகின்றனர் அவ்வளவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தரமுடியாது என்பது, யாழ் புலித்தலைமையின் தெளிவான முடிவாகிவிட்டது.

யாழ் புலித்தலமை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்மக்களை அடக்கியாள்வதில் வரலாற்று ரீதியான உரிமையைத் தக்கவைக்க முனைகின்றது. சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்கம், உயர்சாதிய ஆதிக்கம், பிரதேசரீதியான ஆதிக்கம், பிரதேசத்துக்குள்ளும் உள்ளான ஆதிக்கம் இவைகளைத் தக்க வைப்பதில் ஏகப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்துகின்றனர். இது மக்களின் ஜனநாயக உரிமைகளை சிதைக்கின்றது. தமது சொந்த வர்க்க நலன்களை தக்கவைக்க உற்பத்தி முதல் விற்பனை வரை, எல்லாச் சங்கிலித்தொடரிலும் வரி என்ற பெயரில் சூறையாடலைச் செய்கின்றனர். அண்மைக்காலமாக தாமே ஒரேயொரு ஏகபோகத் தரகு முதலாளியாக மாறி வருகின்றனர். கொக்கோகோலா முதல் கோதுமை மாவு வரை அனைத்திற்கும் ஏகபோக விநியோகஸ்தராகியுள்ளனர். பெரும் நிதித்திரட்டல் மூலம் சொத்துக் குவிப்பூடாக பெரும் தரகுமுதலாளிகளாக தனிப்பட்ட நபர்கள் உருவாகிவருகின்றனர். ஆடம்பரமாகவும் ஆர்ப்பாட்டமாகவும் தலைமை தன்னைத்தான் நிலைநிறுத்தி வருகின்றது. தம்மைச் சுற்றி உள்ள ஆயுதம் ஏந்திய விசுவாசிகளுக்கு, சில சலுகைகளை வழங்குவதன் மூலம், தம்மைத்தாம் பாதுகாக்க முனைகின்றனர்.

நாட்டில் வாழும் மக்களின், உழைப்பு, அறிவு, அனுபவம் புறக்கணிக்கப்பட்டு, வெளிநாட்டவனின் தேவைக்கும் நோக்கத்துக்கும் இசைவாகத் திட்டங்கள் போடப்படுகின்றன. இனடிப்படையில் சொந்த அமைப்புகளையே பிளக்கின்றனர். வெளிநாட்டுப் பொருட்கள் மீதான மோகம் வெம்பி வெதும்புகின்றது. மக்களின் அடிப்படைத் தேவை புறக்கணிக்கப்பட்டு, ஆடம்பரமான கவர்ச்சிகரமான நவீனங்களால் தேசம் கற்பழிக்கப்படுகின்றது. புலிகளின் தமிழ் தேசியமோ, வெளிநாட்டு மோகம் அதிகரிக்க, வெளிநாட்டவனின் கால்களை நக்குவதும் துரோகம் செய்வதும் தேசியமாக நவீன விளக்கம் பெறுகின்றது. உண்மையில் தமிழ்தேசியம் மட்டுமல்ல தேசியப் பொருளாதாரமும் அழிந்து சிதைகின்றது. இதனால் யார் லாபம் அடைகின்றனர்? மக்களா!? அல்லது ஏகாதிபத்தியமா!? ஏகாதிபத்திய எலும்பை நக்கும் புல்லுருவிக் கூட்டமா!?

பி.இரயாகரன்
14.3.2004



## பின் இணைப்பு

சில முக்கியமான விடையங்கள் பற்றிய அடிப்படையான குறிப்புகள் அவசிமாகிவிடுகின்றது. கருணாகுழு பிரிந்து சென்றதை வெறும் தனிப்பட்ட பிரச்சனையாக பிரபாகுழு கூறி, பிரச்சனையின் அடிப்படைச் சாரத்தையே மறுக்கின்றனர். மறுபுறத்தில் ஆதாரமற்ற வதந்திகளையே சமூக கருத்தாக்குகின்றனர். எந்தவிதமான அடிப்படையுமற்ற வகையில் பரப்பும் வக்கிரங்கள், தனிப்பட்ட நபர்களின் கற்பனைத் திறனுடன் இசைந்து செல்லுகின்றது. தமிழ் மீடியாக்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகள், கட்டுரைகள் என்று பலவற்றை வண்ணவண்ணமாக வெளியிடுகின்றனர். புலியின் பாசிசக் கோட்பாட்டுக்கு இசைவான பினாமியத்தை அடிப்படையாகக் கொண்ட வானொலிகள், கற்பனைகளை விதைத்து, விவாதம் என்ற பெயரில் வக்கரிக்கின்றது. உண்மையில் பாசிசக் கட்டமைப்பில், தமிழ் மீடியாவும் வக்கரித்து நிற்கின்றது அவ்வளவே.

கருணா குழுவை உண்மையில் துல்லியமாக நுணுகி ஆராய்ந்தால், அவர் பிரதேசவாத நலன்களைக் கூட முன்னெடுக்கவில்லை. மாறாக குறுகிய பிரதேசவாத நலனையே முன்னிறுத்துகின்றார். அதாவது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் எப்படி குறுந்தேசிய போராட்டமாக சீரழிந்து பாசிசமாகி கிடக்கின்றதோ, அதை ஒத்த தன்மையில் தான் கருணாவின் பிரதேசவாதமும் பிரபலிக்கின்றது. இதனால் கருணா தன்னையே முழுமையாக நியாயப்படுத்த முடியாத ஒரு நிலையில் சிக்கி நிற்கின்றார். மறுபக்கத்தில் பிரபாகுழு அதை விட மோசமான நிலையில், பாசிச வழிகளில் நின்று கருத்துரைக்கின்றனர். கருணாகுழு அரசியல் ரீதியாக தப்பிப் பிழைக்கும் சாத்தியப்பாடானது, பிரபாகுழு பாசிச் வழிகளில் கையாளும் யாழ் பிரதேசவாத அடிப்படைகளில் சார்ந்து கிடக்கின்றது. பிரபாகுழு அரசியல் ரீதியாக கருணாகுழுவை தனிமைப்படுத்த முடியாது, போன நிலையில் அடிப்படையும், ஆதாரமுமற்ற ஒரு அவதூறை நம்பிச் செயல்படுகின்றனர். அவதூறு சார்ந்த படுகொலை மூலம், பழைய நிலையை வந்தடையவே விரும்புகின்றனர். அடிப்படையும் ஆதாரமும் அற்ற வாய்வழி வதந்திகளை மேற்கோள் காட்டும் தமிழ் பாசிசப் பத்திரிகைகள், செய்தி மீடியாக்கள் வக்கிரமாகவே கருத்துரைக்கின்றனர். புத்தி ஜீவிகளாக தம்மைக்காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பவாத பினாமிகள், முன்னைய தமது சொந்த முகங்களை இதற்குள் மூடிக்கொண்டு பொய்களும் அவதூறுமாக வக்கரிக்கின்றர். புலிகள் இயக்கத்தில் பதவி நீக்கப்பட்ட அல்லது ஏதோ ஒரு வகையில் ஒதுக்கப்பட்ட பிரிவுகள் கருணாவை வாயாறத் தூற்றுவதன் மூலம், முன்னுக்கு வருகின்றனர். யார் எல்லாம் உரத்து கருணாவைத் தூற்றமுடியுமோ, அவர்கள் எல்லாம் முன்னணி தேசியவாதிகளாகின்றனர். உண்மையில் சந்தர்ப்பவாதிகளும், பிழைப்புவாதிகளும் இயக்கத்தின் கருத்துரைப்பவராக மாறிவருகின்றனர். ஒட்டு மொத்தத்தில் அரசியல் சீரழிவு என்பது உச்சத்தில் போயுள்ளது.

கருணா பிரச்சனை என்பது, ஜனநாயகம் தொடர்பான பிரச்சனை என்பதை யாரும் மூடிமறைக்க முடியாது. இங்கிருந்துதான் பிரதேசவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்தள்ளப்படுகின்றது. புலிகள் இயக்கத்தில் ஜனநாயகம் பற்றிய எந்த உணர்வும், மரணதண்டனைக்குரிய குற்றமாகும். கருணா பற்றிய புலிகளின் யாழ் தலைமை எடுக்கும் எந்த முடிவும் மரணதண்டனைக்கு நிகரானதாக இருப்பதால், அதில் இருந்து தப்பவே கருணா பிரதேசவாதத்தை முன்னிலைக்கு கொண்டு வந்து சவால் விடும் நிலைக்குச் சென்றுள்ளார் என்பது மிகையல்ல. புலிகள் அமைப்பு என்பது பரஸ்பரம் சந்தேகத்தை அடிப்படையாக கொண்டது. ஒருவரை ஒருவர் கண்காணிக்கின்ற அடிப்படையில் நம்பிக்கையினத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம். பரஸ்பரம் உளவு பார்த்தலை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம். அரசியல் ரீதியான ஒருமைப்பாட்டால் இயக்க ஒற்றுமை கட்டமைக்கப்படவில்லை. இங்கு விசாரணை, நீதி என்ற ஜனநாயக எல்லைக்குள் எதையும் செய்வதில்லை. மாறாக மரணதண்டனை என்ற எல்லை வரை கையாளப்படும் பாசிச சர்வாதிகார அணுகுமுறையே, புலிகளின் அன்றாட இயக்க நடைமுறையாக இருந்து வருகின்றது.

மருந்துக்குக் கூட ஜனநாயக உரிமையற்ற புலிகளின் பாசிச அமைப்பில், உடைவு என்பது அதிரடியான ஒன்றாக இருப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. புலிகளின் இயக்கம் அழிவதும், அப்படித்தான் அமையும். மற்றைய இயக்கங்களில் ஜனநாயகம் பற்றிய போராட்டம், சமரசவாதத்துடன் இழுபட்டபோக்குடன் இசைந்து அந்த அமைப்புகளின் உயிர் வாழ்வை நீடித்ததாக்கியது. புலிகளிடம் அது சாத்தியமில்லை. ஒன்றை முற்றாக அழிக்கும் எல்லைவரை இரத்தப் பசி கொண்டதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது.

எடுத்தயெடுப்பில் துரோகி முத்திரை குத்துவது இதன் பொதுசாரமாகும். சகோதரப் படுகொலைகள் முதல், சொந்த இயக்கத்தின் முன்னணி தலைவர்கள் வரை ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்ட போதும், துரோக முத்திரையைக் குத்துவது சர்வசாதாரணமான விடையமாகவே இருந்தது. அரசியல் ரீதியாக துரோகம் என்னவென்று விளக்க முடியாத எல்லையில், அவதூறுகள் கொலைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டன. கருணாவுக்கு எதிராகத் திட்டமிட்டுப் பரப்பப்படும் அவதூற்றில் பொம்பளைப் பொறுக்கி, நிதி மோசடி, அன்னிய சக்தியுடன் தொடர்பு, இயக்க உட்படுகொலைகளைச் செய்தவர் என்ற ஒரு நீண்ட பட்டியல் தரப்படுகின்றது. ஆனால் இதற்கு அடிப்படையான எந்த ஆதாரத்தையும் எங்கும் யாரும் வைக்கவில்லை. கண்மூடித்தனமான விசுவாசத்தின் மீது, பொதுவான சமூக முட்டாள் தனத்தின் மீது ஒரு படுகொலை அரசியல் வரலாறே தொடருகின்றது. திட்டமிட்ட உள்நோக்கம் கொண்ட அவதூறுகளின் உண்மைத் தன்மை பற்றிய ஆய்வுக்கு அப்பால், கருணா மீது திடீரென வைக்கும் அபத்தங்கள் எமக்கு சில உண்மைகளை சொல்லிவிடுகின்றன.

இவை எல்லாம் உண்மை என்று எடுத்தால், புலித் தலைமைக்குள் இப்படி எத்தனையோ பேர் தலைமைகளில் உள்ளனர் என்பதை நாம் நிராகரித்துவிடமுடியாது அல்லவா. கருணா புலிகளால் போற்றப்பட்ட போது, இதை கூறுபவர்களை துரோகி என்று கூறி "மண்டையில் போட்டு" (இந்த



மண்டையில் போடுதல் என்பது மண்டையில் சுட்டு படுகொலை செய்தல். இது இயக்கத்தின் தேசிய மொழி) இருப்பார்கள். உண்மையில் அரசியல் ரீதியாகவே துரோகியாகிய ஈ.பி.டி.பி என்ற துரோகக்குழு, கடந்த ஒரு வருடத்துக்கு முன் தனது இணையச் செய்தி ஒன்றில், கருணாவுக்கு எதிராக மட்டக்களப்பில் ஒட்டப்பட்ட போஸ்டர் பற்றிய ஒரு செய்தியை வெளியிட்டது. அதில் கருணா பற்றிய இன்றைய சில அவதூறுகளை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. ஆனால் அப்போது எல்லாம் இன்றைய புலானாய்வுக் கட்டுரையாளர்கள், ஆய்வாளர்கள் எங்கே போனார்கள். மலடுபட்டு ஆண்மை இழந்து கிடந்தவர்கள், திடீர் ஆண்மையை பெற்றது போல் விழித்தெழுந்து களத்தில் சந்தர்ப்பவாதிகளாக நக்கிப் பிழைக்கின்றனர். இதுதான் எதார்த்த உண்மை. தமிழ் மக்களை ஏமாற்றி அண்டிப் பிழைக்கும் ஒரு கும்பல், புலிக்கு பின்னால் அணிதிரண்டு வருகின்றது என்பதே உண்மை. புலிக்குள் இந்தக் கும்பல் புளுத்துக் கிடக்கின்றது. கருணா போன்ற பல கருணாக்களும், அவரை விட மோசமானவர்களும் புலிக்குள் உள்ளனர் என்பதே எதார்த்த உண்மை. சந்தர்ப்பவாதத்தை பயன்படுத்தி பிழைப்பவர்களாலும், தேவை ஏற்பட்டால் கவிழ்ப்பவர்களாலும் புலிகள் இயக்கம் புழுத்துக் கிடக்கின்றது என்பதே உண்மை.

இங்கு மற்றொரு அடிப்படையான கேள்வி ஒன்று மிக முக்கியமானது. புலிகளால் துரோகியாக்கி பின் கொல்லப்பட்ட புலிகளின் முன்னாள் தலைவர்களும், துரோகியாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளவர்களும், கடந்த காலத்தில் அவர்கள் இயக்கத்தின் பெயரில் செய்த நடவடிக்கைகளை புலிகள் தமதானதாக உரிமை கோருகின்றனரா? இல்லையா என்பதே? புலிகள் இயக்கத்தினுள் முன்னாள் துரோகிகளும் இன்னாள் துரோகிகளும், மற்றவர்களை துரோகியாக அறிவித்தவர்களின் கதி என்ன? இப்படி அறிவிக்கபட்டு கொல்லப்பட்டவர்கள் பற்றி, துரோகியல்லாத புலிகளின் இன்றைய நிலைப்பாடு என்ன? மாத்தையா செய்த கொலைகள் எத்தனை? இப்படி ஒரு தேசியப் பட்டியலே உண்டு. அவர்கள் எல்லாம் தியாகிகளா! அல்லது துரோகிகளா! உண்மையில் இந்த விடையம் பேசப்பாடத ஜனநாயகமாக உள்ளது. வெட்டிப் புரட்டி கருத்துரைக்கும் பாசிச சந்தர்ப்பவாத பிழைப்புவாத பன்றிகளின் ஜனநாயகம் என்பது, நக்கிப் பிழைப்பத் தான்.

அடுத்து கருணா எழுப்பிய அடிப்படையான கேள்விக்குப் பதிலளிக்காது அனைவரும் விடையத்தை சூக்குமமாக்கின்றனர். மதியுரையர் பாலசிங்கம் இதைப்பற்றி கூறும் போது "இங்கு மரபு ரீதியாக தமிழ்ச் சமுதாயத்தில் நூற்றாண்டுகளாக ஊறிப்போயிருந்த சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை விஞ்சி, ஐக்கியப்பட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கட்டியெழுப்பியதற்காகத் தமது மக்களால் பெரிதும் விரும்பி ஏற்று போற்றப்படுபவர் பிரபாகரன். பிரபாகரனுடன் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்தவன், இணைந்து தொழிற்பட்டவன் என்ற வகையில் அவரின் எண்ணத்திலோ, செயலிலோ பிரதேசவாதத்திற்கான சாயலைக்கூட நான் கண்டதில்லை. புலிகளின் தலைமைத்துவத்தின் மீது கருணா சுமத்தும் பிரதேசவாதக் குற்றச்சாட்டு இல்லாததொன்று, அபாண்டமானது" என்றார். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண் என்னவென்றால் பிரதேசவாதம், சாதியம், வர்க்கப் பிளவுகள் சமூகத்தில் உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதாகும். சமூகத்தில் சாதி, சமய, வர்க்க வேறுபாடுகள் உள்ளது என்றால், அந்த சமூகத்தால் பிரபாகரன் போற்றப்படுகின்றார் என்றால், அந்த இயக்கம் சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டதே. இதுதான் எதார்த்த உண்மை. தனிப்பட்ட பிரபாகரன் என்ன நினைக்கின்றார் என்பதல்ல. இதற்கு வெளியிலும் கூட தனிப்பட்ட பிரபாகரன் எப்படிப்பட்டவர் என்பதை மக்கள் அறியார். பாலசிங்கம் கூறுவது போல் "இங்கு மரபு ரீதியாக தமிழ்ச் சமுதாயத்தில் நூற்றாண்டுகளாக ஊறிப்போயிருந்த சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை விஞ்சி, ஐக்கியப்பட்ட" போராட்டம் என்பது இவற்றைக் களையாது தமிழ் தேசியம் கட்டமைக்கப்பட்டது என்பதை ஒத்துக் கொள்கின்றது. அதாவது இவற்றை அடிப்படையாகக் கொண்ட தேசிய இயக்கம் என்பது, பிரதேச, சாதிய, ஆணாதிக்க, வர்க்க அடிப்படையைக் கொண்டது. காலம்காலமாக யாழ் மையவாதத்தால் இவை கட்டிப் பாதுகாக்கப்படுகின்றது. இது வெறும் பிரபாகரன் என்ற தனிநபர் சார்ந்த பிரச்சனையல்ல. இது ஒரு சமூகப் பிரச்சனை. இதன் பிரதிநிதியாக புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் உள்ளனர் அவ்வளவே.

பாலசிங்கம் மேலும் ஒருபடி மேலே போய் சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளை தலைவர் பிரபாகரன் தீர்த்துள்ளார் அல்லது தீர்த்து வைப்பார் என்பது மற்றொரு வேடிக்கையான வாதம். பிரதேசவாதம், சாதியம், வர்க்கம் போன்ற சமூகப் பிரச்சனைகளை, எப்படி புலிகளின் தனிப்பட்ட தலைவர் பிரபாகரன் தீர்ப்பார் அல்லது தீர்த்துள்ளார் என்றால், அதை மட்டும் சொல்லமாட்டார்கள். இதற்கு எதிரான குரல்களை துப்பாக்கி குண்டுகளால் மட்டுமே தீர்க்க முடியும் என்பது புலிகளின் அரசியல் அகாரதி. மறு தளத்தில் கருணா சுட்டிக் காட்டிய யாழ்பிரதேசவாத உணர்வை, புலிகள் ஒத்துக் கொள்ள மறுப்பதே, இதன் மற்றொரு முக்கியமான சாரமாகவும் உள்ளது. சிவத்தம்பி பி.பி.சி க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் சாதியம், பிரதேசவாதம் போன்ற சமூகப் பிரச்சனைகள் உள்ளது என்று மென்று விழுங்கி ஒத்துக்கொண்ட போது, இதை இப்போது எழுப்பியது தவறு என்று கூறியதன் மூலம், யாழ் பிரதேசவாத பாசிசத்தையே நியாயப்படுத்தினார். இதையே பிரபலமான புலிகளின் இராணுவ ஆய்வளராகவும், பத்திரிகையாளருமாக உள்ள சிவராமும் (தராக்கி) கூற முனைகின்றார். இந்தப் பிளவில் இவரின் பெயர் சம்பந்தப்படுத்தி வந்த அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் மற்றும் கருத்துகளை அடுத்து, கட்டுரை ஒன்றை வீரகேசரியில் மூச்சு இழுக்க எழுதியுள்ளார். இப்ப ஏன் தான் கருணா இதை எழுப்பினார் என்று கூறி, தனது அபிப்ராயத்தை வைக்கின்றார். ஆனால் இங்கு யாழ் பிரதேசவாத பிரச்சனை உண்டு என்பதை ஒத்துக் கொள்ளும் சிவராம், சிவத்தம்பி போன்றோர், புலிகளின் தலைமை அதை ஏற்க மறுத்ததை சுட்டிக்காட்டி போராட முன்வரவில்லை. பாலசிங்கம் எதை சொன்னாரோ, அதை இவர்கள் கௌரவமாக மூடிமறைத்துச் சொல்லுகின்றனர் அவ்வளவே. பிரதேசவாதம் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு, அதைத் தீர்க்க முனையும் போது இந்தப் பிரச்சனை இலகுவாக தீர்க்கமுடியும் என்பதை, யாரும்



மூச்சுக்குக் கூட புலிகளின் தலைமைக்கு சுட்டி விமர்சிக்கவில்லை. உண்மையில் நிலவும் யாழ் பிரதேசவாத இயக்கச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசவாதத்தை களையும், முனைப்பில் இறங்கியிருக்க வேண்டும். இதன் மூலம் கருணா என்ற நபரின் பின்னுள்ள தனிப்பட்ட பிரச்சனைகளை இலகுவாக கையாண்டு இருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யாத புலிகளின் நிலை என்பதும், தனிப்பட்ட பிரச்சனை என்பதும், யாழ் தலைமைக்கு எதிரான உணர்வை அடிப்படையாகக் கொண்டது என்பதை தெளிவாக்கின்றது.

யாழ் பிரதேசவாத உணர்வைக் களைய மறுத்த புலித்தலைமை, கருணாவுக்கு பின்னால் ஒரு சர்வதேச உளவு அமைப்பு உள்ளது என்பது, அடிப்படையான புலித் தலைமையின் நேர்மையைத் தகர்க்கின்றது. மறுபக்கத்தில் சர்வதேச உளவு அமைப்பே பிளவுக்கான அடிப்படை என்ற தூற்றலுக்கு ஆதாரம் எதையும் இதுவரை இவர்கள் முன் வைக்கவில்லை. பிரபா கருணா பிளவை, சர்வதேச சக்தி ஏற்படுத்தியது என்றால், அந்தப் பிளவு அரசியலே புலியின் அரசியலுமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பிளந்தது, பல்கலைக்கழக மாணவர் அமைப்பை பிளந்தது, முஸ்லீம் கங்கிரசை பிளந்தது என்று பட்டியல் நீண்டது. அண்மையில் புலிகள் பிளந்த பல பிளவுகளை எல்லாம் பாசிசம் நியாயப்படுத்தியது. இது கடந்த அரசியல் வரலாற்றை ஆராய்ந்தால் ஈரோஸ்சை பிளந்தது முதல் பல இயக்கத்தை பிளக்கும் சதியின் பின்னணியில் புலிகள் இருந்தனர் என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. புலம் பெயர்ந்த நாடுகளில் சிறுவர் பாடசாலைகள், கோயில்கள், தொலைக்கட்சி நிறுவனங்கள் முதல் பல நூறு சுயாதீனமான சமூக அமைப்புகளை புலிகள் பிளந்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அரசியல் அடிப்படையைக் கொண்டு, கருணா பிளவை நிராகரிக்க முடியாது. இந்தப் புலிகளின் அரசியல் அடிப்படையில் புலிகளை ஒரு ஏகாதிபத்தியம் பிளந்து இருந்தால், எந்த மூஞ்சியினால் இதை விமர்சிக்கவும் எதிர்க்கவும் உங்களால் முடிகின்றது.

கருணாவுக்குப் பதிலளித்த பாலசிங்கம் மற்றொரு உண்மையை போட்டு உடைத்து விடுகின்றார். நாங்களும் ஏகாதிபத்திய கைக்கூலிகள் தான் என்பதை அவர் சொல்லிவிடுகின்றார். அவர் அதை அழகாகவே "சர்வதேச உதவியோடு சிங்களவர்கள், முஸ்லீம்கள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மக்களுக்குமான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனருத்தாரணம் தொடர்பான பாரிய திட்டங்களை மேற்கொள்ளமுடியும்." என்று வருணித்துள்ளார். சர்வதேச உதவியுடன் தான், தேசியத் தலைவர் தேசத்தை முன்னேற்றுவார் என்பதை மதியுரையர் தெளிவாக்கி விடுகின்றார். என் மனைவியை காப்பாற்ற எனக்கு வக்கில்லை. அதனால் வசதிபடைத்த நீ என் மனைவியை வைத்துக் கொள் என்பதே புலிகளின் அரசியலாகித் தொக்கி நிற்கின்றது. நாங்கள் முன்பு கூறியவற்றை இது மறுபடியும் மெய்ப்பித்துவிடுகின்றது. சர்வதேச உதவி என்பது என்ன? உதவி, கடன், முதலீடு என்ற பெயரில் நாடுகளை அடிமைப்படுத்துவதற்கு எதிராக, உலகெங்கும் நடக்கும் போராட்டங்கள் இவற்றைத் தெளிவாக விளக்கி நிற்கின்றது. ஏகாதிபத்தியத்துக்கு ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் மீது ஏன் இந்த அக்கறை? சொந்த மக்களின் இரத்தத்தை சுவைத்தது போதாது என்ற நிலையில் ஏழை நாடுகளின் மக்களின் இரத்தத்தை சுவைக்கவே 'உதவி' எனும் பெயரில் வருகிறது அதன் அக்கறை. சொந்த தேசத்தை முன்னேற்ற (கற்பழிக்க) ஏகாதிபத்தியத்தின் உதவியை நாடுவதாகக் கூறுவது கையாலாகாத்தனமான புலிகளின் கைக் கூலித்தனமாகும். முன்பு சொன்ன சோசலிசத் தமிழீழம் எல்லாம், இன்று உலகமயமாதலாகும். ஒரு தேசத்தை சொந்தமாக நிர்மாணம் செய்ய முடியாத உங்களுக்கு எல்லாம், எதற்காக தேசவிடுதலைப் போராட்டம் தேவைப்படுகின்றது? ஏகாதிபத்தியக் கைக் கூலிகளாக மக்களை அடக்கியொடுக்கி வாலாட்டி நக்கிப் பிழைப்பதை தாண்டி இந்த 'உதவி' என்பது எதையும் விளக்காது. இந்த இடத்தில் கருணா அதைச் செய்தால், அதை தூற்ற என்ன தார்மீகப்பலம் என்ன அருகதை உங்களுக்கு உண்டு? சர்வதேசம் என்னும் ஏகாதிபத்தியத்திடம் கடன் வாங்கியே தேசத்தைக் காட்டிக் கொடுக்கவும், கற்பழிக்கவும் முனையும் நீங்கள், கருணாவைக் குற்றம்சாட்ட எந்த தார்மீகப்பலமும் கிடையாது.

மறுபக்கத்தில் துடித்துப் பதைத்த பாலசிங்கம் "அங்கீகாரத்தையும் சலுகைகளையும் பெறுவதற்காக சிங்கள இராணுவத் தலைமையோடும், பேரினவாத அரசியல் சக்திகளோடும் ஒளிவுமறைவானத் தொடர்புகளை அவர் இப்போது ஏற்படுத்தியுள்ளார்" என்கிறார். உண்மையில் நீங்கள் செய்ய முனையாததையா அவர் செய்ய முனைந்தார். நீங்கள் அவருடன் சேர்ந்து செய்யாததையா, அவர் தனியாக செய்ய முனைகின்றார்? நீங்கள் முன்பு சேர்ந்து செய்ததை, இப்போது அவர் தனியாக செய்ய முனைகின்றார் அவ்வளவே. இதை எப்படி பாலசிங்கம், எதிர்த்தரப்பு மீதான ஒரு குற்றமாக முன்வைக்க முடியும். அவர் உங்களுடன் இருந்த போது, சர்வதேச சமூகத்துடன் உங்களுக்காக எதை எல்லாம் பேசினாரோ, அதையே இன்று தனக்காகச் செய்ய முனைகின்றார். இதை எதிர்தரப்பின் மீதான குற்றமாக முன்வைக்கும் புலிகள், மாற்றாக என்ன தீர்வை வைத்துள்ளனர்? உண்மையில் நாட்டை ஏலம் விட்டுள்ள இரண்டு பிரிவும், ஏகாதிபத்திய கைக்கூலிகளாக இருக்கவே தனித்தனியாக முனைகின்றனர். இந்த உண்மையைத் தாண்டி, கருணாவுக்கு எதிரான அவதூறுகள் எதுவும், எதார்த்தத்தில் மாற்றாக எதையும் முன்வைக்கவில்லை.



## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| தேசியம் எப்பொழுதும் எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய பாட்டாளிவர்க்க கோரிக்கையல்ல | ரூ. | 20.00 |
| ஆணாதிக்கமும் பெண்ணியமும் | ரூ. | 90.00 |
| ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும் | ரூ. | 135.00 |
| ஆணாதிக்கமும் மார்க்சியமும் | ரூ. | 150.00 |
| இலங்கை: யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கத்தின் படையெடுப்பும் | ரூ. | 40.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு விசுவாசமாக சேவை செய்யவும், இலங்கை மக்களைக் கொள்ளையிடவும் உள்ள உரிமையை யார் செய்வது என்பதில் போட்டியிடும் ஆளும் இனவாதக் கட்சிகள் ஒருவரையொருவர் அதிகாரப் போட்டியில் காலைப்பிடித்து இழுக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களின் தலைவிதியை நிலைநாட்ட, ஏகாதிபத்திய ஒழுங்கு முறையைப் பற்றி ஒரேவிதமாக ஒப்புவிக்கின்றனர். இதற்குப் பல்லவி பாடும் புலிகளும்கூட தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகள் பற்றி வாய் திறப்பதில்லை. உண்மையில் பார்த்தால் இலங்கையும் சரி, இந்த சமாதானத்தை நிலைநாட்டத் தலையிடும் எந்த நாடும் சரி, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி அக்கறைப்படவில்லை. மாறாக ஒரு தமிழன், தமிழ் மக்களை அடக்கி ஆளும் ஒரு ஆட்சி அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதின் மூலம் ஏகாதிபத்திய நலன்களைத் தக்கவைக்க முனைகின்றனர். தமிழனின் உரிமைகளை அடக்கி ஒடுக்குவதில், சிங்களவனுக்கு பதில் தமிழனே அதைச் செய்யும் உரிமையைத்தான் அமைதி - சமாதானம் உடாக அடைய முனைகின்றனர். இந்த நோக்கத்தில்தான் ஏகப்பிரதிநிதிகள் என்ற பெயரில் புலிகளும் அடைய நினைக்கின்றனர். இதற்கு வெளியில் தமிழ் மக்களின் உரிமை பற்றி, சமாதானம் - அமைதியின் பின்னால் யாரும் பேசவுமில்லை; பேசப் போவதுமில்லை. தமிழ் மக்களை அடக்கி ஆளும் உரிமையை, எப்படி, எதன் மூலம் வந்தடைவது என்பதில் இழுபறிகள் எதார்த்தமாகியுள்ளது. இது தமிழ்த் தரப்பு, முஸ்லீம் தரப்பு மற்றும் சிங்களத் தரப்பு இடையிலும், அவர்களுக்குள்ளும் கூட ஏற்பட்டுள்ளது.

"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் கற்பனை செய்ய முடியாத, ஒரு பாரிய மாற்றம் ஒன்று நடந்து முடிந்து விட்டது. உண்மையில் ஏகாதிபத்தியத்தின் தலையீட்டையும், அதன் விளைவுகளையும் யாரும் இதுவரை கண்டுகொள்ளவில்லை. இலங்கை அரசியல் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் எந்த சக்தியாலும், மீண்டும் வரமுடியாத ஒரு மாற்றம் நடந்துவிட்டது. உதாரணமாக நாட்டில் பொது கக்கூஸ் கட்டக் கூட ஏகாதிபத்தியங்களின் உதவி அவசியமாகிவிட்டது. யுத்த சிதைவில் இருந்து மீள உலகவங்கியின் அனுமதி ஒவ்வொருத் துறைக்கும் கெஞ்சிக் கேட்க வேண்டிய நிலையுள்ளது. ஒரு நாடு எப்படி மறுகாலனியாக்கத்தின் உள் சென்று விட்டது என்பதை, மறுக்க முடியாத ஆதாரத்துடன் உங்களுக்கு முன்வைக்கின்றது, இந்த நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org